பாரதி நூல்கள்.

(வசனங்கள்)

ஞானரதம், பதஞ்சலி யோகஸூத்ரம், வேதரிஷிகளின்
கவிதை, கீதை முன்னுரை, சந்திரிகையின் கதை,
நவதந்திரக் கதைகள், கதைக் கொத்து,
தராசு, சித்தக்கடல்,
Stray Thoughts.

[ஸ்ரீ. சி. சுப்பிரமணிய பாரதி]

பாரதி பிரசுராலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை.
(காபிரைட் ரிஜிஸ்டர் செய்தது.)
4-வது பதிப்பு] 1940 [விலை ரூ. 2—8

சென்னை, தியாகராயநகர்,
ஹிந்தி பிரசார அச்சுக்கூடத்தில்
அச்சிடப்பட்டது.



பொருளடக்கம்.

அத்தியாயம்	பொருள்	பக்கம்
ஞானரதம்	1440	1—96
	பீடிகை	1
1.	உபசாந்திலோகம்	
	கவலையற்ற பூமி	3
2.	கந்தர்வலோகம்	
	இன்பவுலகம்	11
	பந்தாட்டம்	22
	மதனன் விழா ...	26
	பறவைக் கூத்து	33
	கடற்கரை	34
	அருவி	38
3.	ஸத்தியலோகம்	54
4.	மண்ணுலகம்	63
5.	தர்மலோகம்	72
பதஞ்சலி யோக ஸூத்ரம்		97—153
வேதரிஷிகளின் கவிதை		155—209
1.	முகவுரை	155
2.	இந்திரன்	
	முன்னுரை	159
	இந்திரனை ஹிரண்யஸ்தூபர் பாடியது	161

பொருளடக்கம்.

அத்தியாயம்	பொருள்		பக்கம்
	ஞானரதம்	1440	1—96
	பீடிகை	....	1
1.	உபசாந்திலோகம்		
	கவலையற்ற பூமி	....	3
2.	கந்தர்வலோகம்		
	இன்பவுலகம்	....	11
	பந்தாட்டம்	....	22
	மதனன் விழா	...	26
	பறவைக் கூத்து	....	33
	கடற்கரை	....	34
	அருவி	....	38
3.	ஸத்தியலோகம்	....	54
4.	மண்ணுலகம்	....	63
5.	தர்மலோகம்	....	72
	பதஞ்சலி யோக ஸூத்ரம்		97—153
	வேதரிஷிகளின் கவிதை		155—209
1.	முகவுரை	....	155
2.	இந்திரன்		
	முன்னுரை	....	159
	இந்திரனை ஹிரண்யஸ்தூபர் பாடியது	....	161
	இந்திரனை மதுச்சந்தர் பாடியது	....	165

அத்தியாயம் பொருள் பக்கம்

3. தீ (அக்னிதேவன்)

முன்னுரை 167

தீயைப் பாடிய பாடல்கள் 168

தீயை மதுச்சந்தர் பாடியது 173

விளக்கம் 174

4. மித்திரன்

மித்திரனை விசுவாமித்திரர் பாடியது 177

விளக்கம் 178

5. உயிர் (வாயுதேவன்)

மதுச்சந்தர் பாடியது ; உயிர் 180

கை உயிரும் அறிவுச் சுடரும் 180

கை அன்பும் விரிவும் (மித்திரவருணர்).... 181

6. அசுவினௌ தேவர்

முன்னுரை 182

அசுவினௌ தேவரையும் இந்திரனையும்
வானவர் கூட்டத்தையும் ஸரஸ்வதி
தேவியையும் மதுச்சந்தர் பாடியது 182

7. இந்திரன்

மதுச்சந்தர் பாடியது 184

கை 186

விளக்கம் 187

8. இந்திரனும் மருத்துக்களும்

இவர்களை மதுச்சந்தர் பாடியது 188

விளக்கம் 190

9. அதிதி 191

அத்தியாயம்	பொருள்	பக்கம்
10.	வாக்கு	 194
	ஸரஸ்வதி பூஜை—உண்மை வழி	 195
	தேவவாக்கு அவதாரம்—ஸரஸ்வதி	 196
	ஸரஸ்வதியும் இலக்கியமும்	 197
11.	மருத்து (புயற்காற்று)	
	முகவுரை	 198
	மருக்ஷைக் கண்வர் பாடியது	 198
	விளக்கம்	 200
	மருத்துக்களை கோதமர் பாடியது	 201
	விளக்கம்	 202
12.	முடிவுரை	 204
பகவத்கீதை முன்னுரை		211—266
சந்திரிகையின் கதை		267—410
1.	பூகம்பம்	 267
2.	விசாலாக்ஷிக்கு ஜீ. சுப்பிரமணிய அய்யர் செய்த உதவி	 275
3.	விசாலாக்ஷியின் ஏமாற்றம்	 283
4.	வீரேசலிங்கம் பந்துலு வீட்டில் விருந்து	 295
5.	கோபாலய்யங்காருக்கு விவாகம்	 322
6.	விசாலாக்ஷிக்கு கேர்க்க ஸங்கடங்கள்	 332
7.	விடுகலை	 348
8.	ஸோமநாதய்யர் ஞானம் பெற்ற வரலாறு	 374
9.	பெண்டாட்டிக்கு ஜயம்	 408

அத்தியாயம் பொருள் பக்கம்

நவதந்திரக் கதைகள் 411—521

முன்னுரை 411

முதற் பகுதி (பயனறிதல்)

ஸங்கீதம் படிக்கப் போன கழுதையின் கதை 413

மாணிக்கஞ் செட்டி மானி அய்யனை நகைத்தது 415

ரோஜாப்பூ என்ற பாம்பின் கதை 430

கர்த்தபஸ்வாமிகள் என்ற ஆண்டி கதை.... 435

கர்த்தபஸ்வாமியைப் பாம்புப் பெண் வசப்படுத்தியது 440

த. கொ. செட்டி கதை 446

இரண்டாம் பகுதி (நம்பிக்கை)

காட்டுக் கோயிலின் கதை 462

திண்ணன் என்ற மறவன் கதை 472

உபாயவஜ்ரன் என்ற நரியின் திறமை 479

கோவிந்த நாம ஸங்கீர்த்தனக் கூட்டம்.... 481

சூனியக்குகையில் மந்திராலோசனை 482

உபாயவஜ்ரன் என்ற நரியின் திறமைகள் 484

பிராமணப்பிள்ளை நாலு சாஸ்திரம் படித்துக்கொண்டு வந்த கதை 504

கதம்ப வனத்தில் நடந்த செய்திகள் 519

கதைக் கொத்து 523—691

1. வைசாக்தன் என்ற பண்டாரத்தின் கதை 523

அத்தியாயம்	பொருள்		பக்கம்
2.	சிறு கதை	....	524
3.	சில வேடிக்கைக் கதைகள் :—		
	(1) ஆனைக்கால் உதை	....	525
	(2) கவிராயனும் கொல்லனும்	....	527
	(3) அமெரிக்காவுக்குப் போன சீன ராஜகுமாரன்	....	528
	(4) சாஸ்திரியார் மகன்	....	528
	(5) ஓர் வியாதிக்கு ஓர் புதிய காரணம்	....	529
4.	அந்தாடிச்சான் ஸாஹிப் கதை	....	530
5.	கிளிக் கதை	....	534
6.	இருள்	....	538
7.	குதிரைக் கொம்பு	....	542
8.	அர்ஜூன சந்தேகம்	....	553
9.	தேவ விகடம்	....	556
10.	அபயம்	....	564
11.	மழை	....	567
12.	பிங்கள வருஷம்	....	573
13.	காக்காய்ப் பார்லிமெண்ட்	....	579
14.	பிழைத்தோஷம்	....	584
15.	புதிய கோணங்கி	....	588
16.	கடல்	....	592
17.	கடற்கரை யாண்டி	....	598
18.	செய்கை	....	602
19.	சும்மா—முதற் பாகம்	....	608
	இரண்டாம் பாகம்	....	615

அத்தியாயம்	பொருள்	பக்கம்
20.	காற்று—முதற் பாகம்	 621
	இரண்டாம் பாகம்	 625
21.	வண்ணான் தொழில்	 630
22.	கலியுக கடோற்கசன்	 634
23.	கத்திச் சண்டை	 644
24.	'வளர்பிறை' குழந்தைக் கதை	 655
25.	குழந்தைக் கதை	 657
26.	உஜ்ஜயினீ	 671
27.	மிளகாய்ப்பழச் சாமியார்	 673
28.	பேய்க் கூட்டம்—முதற் பாகம்	 676
	இரண்டாம் பாகம்	 684
தராசு		693—763
சித்தக்கடல்—யோகம்		764—772
STRAY THOUGHTS		773—778

ஓம்.

ஸ்ரீமதி நிவேதிதா தேவிக்கு

ஸமர்ப்பணம்.

ஸ்ரீ. சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரியார்

முன்னுரை.

இப் புஸ்தகத்தில் பாரதியார் எடுத்த விஷயங்கள் மிகப் பெரியவை. விஷயங்களின் கவுரவம் ஒரு புறமிருக்க, தற் காலத்தில் தமிழ் வாசகருடை எவ்வாறிருக்க வேண்டு மென் பதை, பாரதியார் எழுதிய இச்சிறு புஸ்தகத்தில் கண்டு கற்கலாம். அர்த்த புஷ்டியில்லாத அரற்றலின்றி, சொன்ன தையே சொல்லி பக்கங்கள் நிறைப்பது மின்றி, ஸ்படிகம் போன்ற தெளிவும் வைரம் போன்ற உறுதியும் பெற்று இலக்கணப் பிழைகள் ஒழிந்த பேச்சுத் தமிழையே எவ்வாறு ஆழ்ந்த கருத்துகளை எழுதவும் சித்தரிக்கவும் உபயோகப் படுத்தலாம் என்பதை பாரதியார் வசன நடையில் நாம் பார்க்க லாம். தமிழுக்குள் கிடக்கும் எல்லையற்ற சக்தியையும் லாகவத் தையும் பாரதியார் எழுத்துகளில் தமிழ் மக்கள் பார்த்து அறிந்துகொள்ள வேண்டும். பயன் கொண்ட கற்பனை சக்தி யும், கொழுந்துவிட்டெரியும் நாட்டன்பும், விசாலமான கருண ஞானமும், சோவாத ஹாஸ்யரஸமும், தமிழ்த்தாயின் செல்வக் குழந்தை, வரப்பிரஸாதர், பாரதியார் எழுதிய இந்நூலில் ஜ்வலிப்பதை அனுபவிக்கலாம்.

8—3—36.

ச. இரா.

முதல் பதிப்பின் முகவுரை.

புஸ்தகமெழுதினால் அதற்கு முகவுரை யெழுதித் தீரவேண்டு மென்ற ஸம்பிரதாயம் ஒன்றிருக்கிறது. உலகத்தில் எந்த வேலை செய்யப்போனாலும் 'ஸம்பிரதாயம்' என்ற தொல்லை யொன்று வந்து முன்னே நிற்கிறது. ஆனால், நான் இதை அதிகமாக நீட்டிப் படிப்பவர்களை ஆயாஸப் படுத்த உத்தேசமில்லை. ஒரே வார்த்தைமட்டிலும் இங்கு சொல்ல விரும்புகிறேன்.

அதாவது: இந்நூல் நானாக எழுதினதில்லை, எல்லாம் நடத்தும் பரமாத்மா ஞானதீர மில்லாத எளியேனைக் கொண்டு ஞானாதத்தில் ஏற்றினான். எத்தனையோ வினைதங்களில் இதுவு மொன்று. எனவே, இதிலுள்ள குற்றங் குறைகளுக்கு நான் பொறுப்பாளியில்லை.

இன்னுமொரு சிறிய செய்தி. இதில் ஒரு பகுதி பத்திரிகையில் வெளிப்பட்டபோது, எனக்கு மிகுந்த உற்சாக மூண்டாகும்படி தூண்டிக் கடிதமெழுதிய எனது நண்பர் மஹேசகுமார சர்மாவுக்கு பகிரங்கமாக எனது நன்றியும் மதிப்பும் தெரிவிக்க விரும்புகிறேன். இவருடைய கல்வியையும் அறிவுத்தெளிவையும் ரஸிகத்தன்மையையும் தமிழ் நாட்டாருக்குப் பலமுறை நன்கு திருஷ்டாந்தப்படுத்திக் காட்டியிருக்கிறார். ஆதலின், அதையெல்லாம் பற்றி விரிக்க எனக்கு விருப்பமில்லை. ஆனாலும், இப்படிப்பட்ட பண்டிதர்களைத் தமிழ்நாட்டார் போதியபடி ஆதரவு செய்து அவர்களை வேறு ஸாதாரணப் பிரயோஜனங்களில் மனம் செலுத்தாதபடி காத்துக்கொள்ளவில்லை யென்ற குறை என் மனதிலிருக்கிறது. இந்த ஸந்தர்ப்பத்தை யொட்டி அதனையும் வெளிப்படையாகச் சொல்லித் தீர்த்துவிட்டேன். வந்தே மாதரம்.

ஸௌம்யவரு
ஷம் தை மீ 15உ
புதுச்சேரி.

சி. ஸுப்பிரமணிய பாரதி.

ஞானாதம்

பீடிகை

பின்மாலைப் பொழுது. திருவல்லிக்கேணி, வீர ராகவ முதலி தெருவில் கடற்பாரிசத்தை நோக்கி யிருக் கும் ஓர் வீட்டு மேடையின்மீது சிரமபரிகாரத்தின் பொருட்டு ஓர் மஞ்சத்தின் மீது படுத்துக் கொண்டிருந் தேன். ஆனந்தகரமான கடற்காற்று, நான் படுத் திருந்த முன்னறையிலே நான்கு பக்கங்களிலிருந்தும், கண்ணழிச் சாளரங்களின் மூலமாகவும், புறக்கதவு நிலை களின் மூலமாகவும், வந்து நிரம்பிய வண்ணமாக இருந் தது. அந்தக் காற்றும் பின்மாலை யொளியும் கலந்தி னல் உண்டாகிய தெளிவும் இன்பமும் என்னல் கூற முடியாது. "ஆஹா! இப்போது போய் ஸ்நானம் செய்துவிட்டு, நேர்த்தியான ஒரு குதிரை வண்டியில் ஏறிக்கொண்டு, கடற்கரை யோரமாகத் தெற்கே அடையாற்றுக்குப் போய்,—வழியெல்லாம் காளிதாஸ னுடைய சாகுந்தலத்தையேனும், அல்லது ஓர் உப நிஷத்தையேனுங் கொண்டுபோய்ப் படித்து இன்ப மடைந்துகொண்டே திருப்பிஞல் கல்லது" என்ற சிந்தனை உண்டாயிற்று. ஆனல், என்னிடம் குதிரை வண்டி கிடையாது என்ற விஷயம் அப்பொழுதான் ஞாபகத்திற்கு வந்தது.

"அடடா! மிகுந்த செல்வம் இல்லாததனல்—உல கத்தில் பல விதமாகிய இழிவான இன்பங்கள் மட்டு மல்ல,—உயர்ந்த இன்பங்கள்கூடப் பெறுவதற்குத் தடை

ளற்படுகிறதே!" என்று எண்ணினேன். அப்பொழுது, என் மனம்–"மூடா, ஸகல மனிதர்களிடத்திலும், ஈசன் ஞானம் என்பதோர் தெய்வீக ரதத்தைக் கொடுத்திருக்கின்றார். அது விரும்பிய திசைகளுக்கெல்லாம் போய் விரும்பிய காட்சிகளை யெல்லாம் பார்த்து வாக்கூடிய வல்லமை உடையது; அதைப் பயன்படுத்தி இன்பமடையாமல் எந்த நிமிஷத்திலும் உன்னைக் கீழே தள்ளித் திங்கு செய்யக்கூடியதாகிய இழிய மர வண்டியிலே என் விருப்பம் கொள்கிறாய்?" என்றது. உடனே ஞான மாகிய ரதத்தைக் கொண்டு தயார் செய்து வைக்கும்படி எனது சேவகனாகிய "சங்கற்ப" னிடம் கட்டளை யிட்டேன். ரதம் வந்து நின்றது. அதில் ஏறிக் கொண்டேன், ஆனால் எனது ஞானரதம் மற்றவர்களுடையதைப் போல் அத்தனை தீவிரம் உடையதன்று. எளிதாக நெடுந்தூரங் கொண்டுபோகத் தக்கதும் அன்று. கொஞ்சம் நொண்டி. என்ன செய்யலாம்? இருப்பதை வைத்துக்கொண்டு தானே காரியங் கழிக்கவேண்டும்? ஆகவே, அந்த ரதத்தின் மீது ஏறிக்கொண்டேன். அதிலேறி நான் கண்டுவந்த காட்சிகளும் அவற்றின் அற்புதங்களுமே இந்தப் புஸ்தகத்தில் எழுதப்படுகின்றன.

முதல் அத்தியாயம்

உபசாந்திலோகம்

(கவலையற்ற பூமி.)

எனது ஞானத்தேரை நோக்கி "இந்த க்ஷணமே என்னை, துக்கமில்லாத பூமி எங்கேனும் உளதாயின், அங்கு கொண்டுபோ" என்று ஏவினேன். ஆகா! இந்த ரதத்தை வைத்துக் கொண்டிருந்தும், இத்தனை நாள் எனக்குக் கவலையும், மன உளைச்சலும் இல்லாதிருக்க வழி தெரியாமல் போய்விட்டதே! எத்தனை நாள் எனது மனம் தாண்டிற்புழுவைப் போலத் துடித்துக் கொண்டிருக்க, அதை நிவிருத்தி செய்வதற்கு யாதொரு உபாயமும் அறியாமல் பரிதபித்திருக்கின்றேன். அம்மம்மா! இந்த உலகத்துக் கவலைகளை நினைக்கும்போதே நெஞ்சம் பகீ ரென்கிறது. அவற்றுக்குள்ள விஷ சக்தியை என்னென்பேன்? ஒருவனது முகத்திலுள்ள அழகையும், குளிர்ச்சியையும், இளமையையும் இந்தக் கவலைகளே அழித்து விடுகின்றன. கண்களின் ஒளியை மாற்றிப் பசலையும், உடல் நிறம் மங்குதலும் உண்டாக்கி விடுகின்றன. நெற்றியிலே வரிகளும், கன்னங்களிலே சுருங்கல்களும், இந்த நீசக் கவலைகளினாலேயே ஏற்படுகின்றன. எனது தொண்டையின் இனிய குரல் போய், கடோமான காகரப்புச் சத்தம் உண்டாகிறது. மார்பிலும், தோளிலும் இருந்த வலிமை நீங்கிப்போய்

விடுகிறது. இரத்தம் விரைவாக ஓடுதலின்றி, மாசு நீரோடை போல மந்தம் அடைகின்றது. கால்களில் திராவமில்லாமற் போய்விடுகிறது. கவலைகள் என்ற விஷ ஜந்துக்கள் ஒருவனுடைய சரீரத்தை உள்ளுர அரித்து விடுகின்றன. சரீரத்தை மட்டுமா? அறிவையும் பாழாக்குகின்றன. மறதியை அதிகப்படுத்தி விடுகின்றன. முக்கியமான செய்திகளெல்லாம் நல்ல சந்தர்ப்பத்திலே நினைவிற்கு வராமல் போய்விடுகின்றன. படித்த படிப்பெல்லாம் பாலைவனத்திலே பெய்த மழைபோலே நிஷ்பலனுய் விடுகின்றது. அறிவிலே பிரகாசமில்லாமல், எப்போதும் மேகம் படர்ந்தது போலாய்விடுகிறது. யோசனை தட்டுகிறது. ஐயோ! இந்தக் கவலைகளாகிய சிறிய சிறிய விஷப் பூச்சிகளைக் குள்ள திறமை வைத்திய சாஸ்திர நிபுணர்கள் கூறும் மஹா கொடூரமான—கண்ணுக்குத் தெரியாத—நோய்ப் பூசசிகளுக்குக் கூடக் கிடையாது.

"ஞானரதமே, நீ நம்மை இப்போது கவலையென் பதே இல்லாத உலகத்திற்குக் கொண்டு போய்ச் சேர்" என்று கட்டளையிட்டேன். அப்போது மனம் வந்து ரதத்தைத் தடுத்துக்கொண்டது. "அது அத்தனை சுகமான உலகமன்று. கவலை இல்லாமலிருந்தால் மட்டும் போதுமா? வேறு, இன்பங்கள் அனுபவிக்கக்கூடிய இடம் ஏதேனும் தமக்குத் தோன்றவில்லையா? கவலையே இல்லாத இடத்தில் சுகமும் இராது என்று எனக்குத் தோன்றுகிறது. மேலும்,—மேலும்,—என்னவோ;

இன்ன காரணமென்று சொல்ல முடியாது. ஆனால் அங்கு போவதில் எனக்குப் பிரியமில்லை" என்று மனம் கூறிற்று.

நான் கோபத்துடன், "சீச்சீ! பேதை மனமே, உனக்கு ஓயாமல் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் வேதனைகளையும் உளைச்சல்களையும் கண்டு இரங்கி, நான் உன்னைச் சிறிது நேரமேனும் அமைதியுலகத்திற்குக் கொண்டு போய் வைத்துத் திரும்பலாம் என்று உத்தேசித்தேன். இதற்கு நீயே ஆக்ஷேபம் சொல்லவருகிறாயா?" என்று கண்டித்தேன். மனம் பிணங்குதல் மாறுமல் மறுபடியும் எதிர்த்து நின்றது.

எனக்கு இந்த மனம் என்ற மோஹினியிடத்தில் காதல் அதிகமுண்டு. ஆதியில் எவ்வாறு இந்த மோகம் உண்டாயிற்று என்பதை இங்கே விஸ்தரிக்க முடியாது. அது ரஹஸ்யம். ஆனால், நாளை நாளை நான் வேறு இந்த மனம் வேறு என்ற த்வைத சிந்தனையே பெரும் பாலும் மறந்துபோகும் வண்ணமாக எனக்கு இம் மோஹினியிடத்தில் ப்ரேமை மிகுந்து போய்விட்டது. இந்த மனம் படும் பாடுகளைக் கண்டு பொறுக்காமலே தான் நான் சாந்திலோக தரிசனத்திலே விருப்பம் கொண்டேன். இப்போது மனம் அந்த யோசனையில் நிஷ்காரணமாக வெறுப்புக் கொள்வதைக் கண்டு எனக்குத் திகைப்பும், இரக்கமும், கோபமும் கலந்து பிறந்தன. எவ்வளவோ விதங்களில் மனத்தைச் சமாதானம் செய்ய முயன்றேன். மனம் பின்னும் கன்னை மூடிக்கொண்டு ஒரே யடியாக மூடச் சாதனை சாதிக்

கத் தொடங்கிற்று. எனக்கு இன்ன செய்வதென்று தெரியவில்லை. பிறகு, ஒரே நிச்சயத்துடன், "மனமே, நான் இந்த விஷயத்தில் உன் பேச்சைக் கேட்கவேமாட்டேன். உன்னுடைய நன்மையைக் கருதியே நான் செய்கிறேன்.—ஞான ரதமே, உடனே புறப்படு" என்றேன்.

அடுத்த நிமிஷத்தில் உபசாந்தி பூமிக்கு வந்து சேர்ந்தோம்.

நெடுதோங்கி வளர்ந்த கோட்டைச் சுவர் வாயிலிலே போய் ரதம் நின்றுவிட்டது. நான் தூரத்திலிருந்தே அந்தக் கோட்டையைப் பார்க்க முடிந்ததாயினும், எனது ஞானத்தேர் போனவுடன் அந்த வாயிற்கதவுகள் தாமே திறந்து விடும் என்று எண்ணினேன். அவ்வாறு திறக்கவில்லை. என்ன ஆச்சரியம்! ஞானத்தேர்கூட நுழைய முடியாதபடி அத்தனை பரிசுத்தமானதா இந்த லோகம் என்று வியப்புற்றேன். எனது மனமோ முன்னைக்காட்டிலும் ஆயிர மடங்கு அதிகமாக நடுங்கத் தொடங்கிற்று. அதற்கு என்னிடம் பேசக்கூட நாவெழவில்லை. கோட்டை வாயிலுக்கு வெளியே ஒரு வாயில்காப்பான் உருவினகத்தியுடன் நின்று கொண்டிருந்தான். நெருப்பு நிறங் கொண்டதும், இமயமலையைக்கூட ஒரே வெட்டில் பொடிப் பொடியாகச் செய்து விடுமென்று தோன்றியதுமாகிய அந்த வாளின்மீது "விவேகம்" என்று கண்ணைப் பறிக்கக்கூடிய ஜோதி யெழுத்திலே எழுதப் பட்டி

ருந்தது. வாயில் காப்பான்:—"யார் அது? எங்கு வந்தாய்?" என்றான்.

நான் அவனுக்கு வந்தனம் கூறிவிட்டு, "உபசாந்தி லோகத்தைப் பார்த்துவிட்டுத் திருப்பலா மென்ற எண்ணத்துடன் வந்தேன்" என்று சொன்னேன். அதைக் கேட்டு அவன் கடகடவென்று குலுங்கக் குலுங்க நகைக்க லாயினன்.

"எனையா சிரிக்கிறீர்?" என்று கேட்டேன். அவன் மறுமொழி கூறுமல் சிரித்துக்கொண்டிருந்தான்.

எழு மனமோ நிமிஷத்துக்கு நிமிஷம் அதிக திகிலுறுவ தாயிற்று. எனக்கு மிகவும் திகைப்புண்டாய் விட்டது. எனவே, கோபத்துடன் வாயில் காப்பானை நோக்கி "எனப்பா, உள்ளே போகலாமா, கூடாதா? ஒரே வார்த்தையில் சொல்லிவிடு. கலகலவென்று சிரித்துக் கொண்டிருக்கிறாயே?" என்று கேட்டேன்.

அதற்கு வாயில் காப்பான், "உனக்கும் உபசாந்திக்கும் வெகுதூரம்" என்று தனது வாய்க்குள்ளேயே (ஆனல் எனது செவியிலே படும்படி) முணுமுணுத்து விட்டுப் பிறகு "கோபங்கொள்ளாதே அப்பா; நீ உபசாந்தி லோகத்தை ஏதோ காடகசாலை போலக் கருதிப் பார்த்துவிட்டதிருப்ப உத்தேச மிருப்பதாகக் கூறியது எனக்கு நகைப்பை உண்டாக்கிற்று. சாதாரணமாக, இவ்வுலகத்துக்கு வருபவர்கள் திரும்ப வெளியே போகும் வழக்கம் கிடையாது" என்று இரைந்து கூறினன்.

"அது சரி, உள்ளே நாங்கள் பிரவேசிக்கலாமா, கூடாதா? தயவு செய்து சொல்லும்."

"நீ சாதாரணமாகப் பிரவேசிக்கலாம். இது ஸகல ஜீவர்களுக்கும் காய்வீடு. இங்கு வரக்கூடாது என்று எந்த ஜீவனையும் தடுக்க எனக்கு அதிகாரமில்லை. ஆனால் வைராக்கியக் கோட்டைபைக் கடந்து உள்ளே செல்லும் உரிமை உன்னுடன் வந்திருக்கும் மனம் என்ற பொய்ப் பொருளுக்குக் கிடையாது. அது உள்ளே போகுமானால், அக்கினி லோகத்திலே பிரவேசித்த பஞ்சுப்பொம்மைபோல நாசமடைந்துவிடும்" என்றான்.

மனம் ஆரம்பத்திலேயே உபசாந்தி லோகம் என்ற பெயரைக் கேட்டவுடன் நடுங்கத் தொடங்கியதற்கும், அது என்னை அங்கு போகவேண்டாமென்று பிரார்த்தனைகள் செய்ததற்கும், கோட்டையருகே வந்தவுடன் தர்ம தேவதையின் முன் வந்து நிற்கும் கொடுங்கோலரசரைப் போல் நிலைமயங்கி அதற்கு அளவுகடந்த திகிலுண்டானதற்கும் காரணம் இன்னது என்பதை இப்போதுதான் அறிந்தேன். அப்பால் அந்த உலகத்திற் பிரவேசிக்கவேண்டும் என்ற விருப்பம் எனக்கு நீங்கிப் போய்விட்டது. மனத்தினிடம் வைத்திருந்த மோஹத்தால், அதைக் கொன்றுவிட்டு நான் இன்பமடைவதில் பிரியங் கொள்ளவில்லை.

"என்னை இப்போது என்ன செய்யச் சொல்லுகிறீர்?" என்று வாயில்காப்பானிடம் கேட்டேன்.

அதற்கு அவன் "மாலுடா, மனம் இறந்தபிறகுதான் உப சாந்தியுண்டு; அது இருக்கும் வரையில், கவலைகள் நீங்கி இருக்கலாம் என்ற எண்ணம் வீண். கவலைகளாகிய அசுரர்களை இடைவிடாது பெற்றுத் தள்ளிக்கொண்டே இருக்கும் தாய் மனமேயாகும். உனக்கு அந்தப் பொய் யரக்கியிடம் இன்னும் ப்ரேமை தீரவில்லை. பக்குவம் வந்தபிறகு, நீ தானே இங்கு வந்து சேரலாம். இப் போது போய் வா" என்று சொன்னான். திடீரென்று அந்தக்கோட்டை, வாயில்காப்பான், எல்லாம் மறைந்து போய்விட்டது. அரை க்ஷணம் கண்ணிருட்சி உண்டா யிற்று. பிறகு கண்ணை விழித்துப் பார்த்தேன். மறுபடி, வீராகவ முதலி தெருவில், முன்னைகூறப் பட்ட வீட்டு மாடியில், தனியே கட்டிலில் நான் படுத் துக்கொண்டிருப்பதையும், கடற் பாரிசத்தினின்றும் இனிய காற்று வீசிக்கொண்டிருப்பதையும் கண்டேன்.

"சரி, போனது போகட்டும். இந்த உபசாந்திப் பேறு நமக்கு இப்போது கிடைக்கவில்லை. ஆயினும், பாதக மில்லை. ஏழை மனத்தைக் கொன்றுவிட்டு நாம் மட்டும் தனியே இன்பமுற விரும்புவதுதான் நன்றி கெட்ட செய்கையாகுமல்லவா? அதன் கவலைகளையும், உளைச்சல்களையும் பற்றி யோசித்தேனே யொழிய அதன் மூலமாக எனக்குக் கிடைத்திருக்கும் பெரிய பெரிய நன்மைகளைச் சிந்தித்தேனில்லை. எனக்கு உலக வாழ்க்கையே இந்த மனத்தினால் தானே எய் திற்று. இதை ஈசனென்றே சொல்லத்தகும். மேலும், எனக்கு அதையும், அதற்கு என்னையும் காட்

லும் உயிர்த்துணைவர் யார் இருக்கிறார்கள்? அதற்குத் துரோகம் செய்யலாமா? எத்தனை கோடி கவலைகள் இருப்பினும் பொறுதில்லை. மனம் செத்து நான் தனியே வாழ்வதாகிய உபசாந்தி லோகம் எத்தனை அரிதாயிருப்பினும், அது எனக்கு வேண்டாம்" என்று தீர்மானம் செய்துக்கொண்டேன். "உபசாந்தி என்றும் கத்தும் மனிதர்களை உலகத்தார் பிரமஞானிகளென்றும், மஹர்ஷிகளென்றும் புகழ்கிறார்களே! அந்த மனிதர்களெல்லாம் மூடர்களும், துரோகிகளும் மாவார்களென்று எனக்குத் தோன்றுகிறது" என்று சொல்லிக் கொண்டேன்.

நான் இவ்வாறு ஆலோசிப்பதை அறிந்துகொண்ட மனம், "அப்பாடா!" என்று பெருமூச்சுவிட்டு, தன் கடுக்கமெல்லாம் தீர்ந்து ஆறுதலுடனிருந்தது. எனக்கும் ஸந்தோஷம் உண்டாயிற்று. எனது மன மோஹினிக்கு ஓர் முத்தங் கொடுத்தேன்.

இரண்டாம் அத்தியாயம்

கந்தர்வலோகம்

(இன்ப வுலகம்)

மறுநாள் மனத்தினிடம், "இப்போது, எங்கே போகலாம்?" என்று கேட்டேன்.

"துன்பக் கலப்பற்ற இன்பங்கள் நிறைந்திருக்கும் உலகத்திற்குப் போய் வருவோமே" என்றது.

"நன்று கூறினை" என நான் மகிழ்ச்சி பாராட்டி, அப்பால் முன்போலவே எனது ஞானத்தேரில் ஏறிக் கந்தர்வ லோகத்திற்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கே கண்ட காட்சிகளையும், அனுபவித்த போகங்களையும் என்னால் கூடியவரையும் உள்ளது உள்ளவாறு கீழே எழுதுகிறேன். அந்தப் போகங்களிற் சில, தற்காலத்தில் நமது தேசத்து ஜனங்களால் மதிக்கப்பெறும் ஆசார தர்மங்களுக்கு விரோதம் என்று நம்மவர் கருதுவார்களாயின், அதன் பொருட்டு, என்மீது பழிகூறலாகாது. இந்த பாரத தேசத்தில் தற்காலத்திலே வாழும் அடிமை ஜனங்கள் "இந்த இன்பம் அதர்மமானது, அந்தச் செய்கை அகாரியமானது" என்று தர்மப் பிரசங்கங்கள் செய்யும்போது, உண்மையாகவே எனக்கு நகைப்புண்டாகிறது. மஹர்ஷிகளுக்கும் தேவதைகளுக்கும் சந்ததியாராகத் தோன்றியவர்க

ளாயினும், தற்காலத்தில் இந்நாட்டு ஜனங்கள் உலகத்தி லுள்ள எல்லா அநாகரிக ஜனங்களைக் காட்டிலும் கடைப்பட்டவர்களா யிருக்கிறார்கள். மிருகப் பிராய மாகக் காடுகளிலும் தீவுகளிலும் ஆடை யில்லாமல், காதுகளிலும் உதட்டிலும் மூக்கிலும் துவாரங்கள் செய்து, சங்குகளையும் வளையங்களையும் தொங்க விட்டுக் கொண்டு, மேலெல்லாம் பச்சை குத்தியவர்களாகத் திரியும் ஜனங்களுக்குக்கூட ஸ்வதந்திரம் உண்டு. இந்தத் தேசத்தார் அப்பெரும் பாக்கியத்தை இழந்து விட்டார் கள். இந் நாட்டில் கல்வி மங்கிப் போய்விட்டது. நூற்றிலே தொண்ணூறு ஜனங்கள் "அ" (ஆ) எழுதச்சொன்னால் தும்பிக்கை யொன்று வரைந்து ஆனை எழுதக் கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். நமது சாஸ்திரங்களெல்லாம் செல்லரித்துப் போய்விட்டன. தேசத்து ஞானக் களஞ்சியத்திற்குக் காப்பாளிகளாக இருந்த பிராமணர் மடைத் தவளைகளைப் போலச் சிற் சில மந்திரங்களைச சம்பந்தமில்லாமல் யாதொரு பொருளு மறியாமற் கத்துகிறார்களே யல்லாது, உண்மையான ஞானப் பெருமை இவர்களுக்கு லவ லேசமும் இல்லாமல் போய்விட்டது. மஹர்ஷிகளின் வழியில் தோன்றிய பிராமணர் மடைத்தொழில் செய் வதும், நீசர்களிடம் போய்த் தொண்டு புரிந்து பணம் வாங்கிப் பிழைப்பதும், இதைக்காட்டிலும் இழியன வாகிய எண்ணற்ற பிரவிருத்திகளிலே காலங்கழிப் பதும் ஸர்வஜனங்களும் அறிந்த விஷயங்களேயாம். இந்நாட்டின் கலைகள் அனைத்தும் மறைந்து போய்விட்

டன. வீரியம் போய்விட்டது. பலம், லாகம், செல்வம் முதலிய நற் பொருள்களெல்லாம் அகன்று விட்டன. மனங்குன்றி உடல் சோர்ந்து உண்ணை உணவின்றிக் கண்குழிந்துபோயிருக்கும் அடிமை ஜாதியார் இந்நாட்டில் மஹா பரிதாபகரமான வாழ்க்கை நிகழ்த்துகின்றார்கள்.

இன்ப நாடாகிய கந்தர்வ லோகத்தைதப் பற்றிப் பேசி வருமிடத்தே, இத் துன்ப நாடாகிய பாரத தேசத்தைப் பற்றிச் சில வசனங்கள் எழுதிய பிழையை இந்நூல் படிக்கும் நண்பர்கள் பொறுத்தருள்செய்யுமாறு வேண்டுகிறேன். தர்மமே சூனியமாகப் போயிருக்கும் இத் தேசத்திலே சிலர் கந்தர்வலோக செய்திகளைப் பற்றி நான் எழுதப்போகும் விஷயங்கள் எழுதத் தகாதவை என்று கருதக்கூடும் என்ற சந்தேகம் எனக்குண்டாயிற்று. தர்மாதர்ம நிச்சயம் புரியும் அதிகாரமே இந்த அடிமை ஜனங்களுக்குக் கிடையாது என்பதை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளும் பொருட்டாகவே மேலே கண்ட வசனங்கள் எழுதப்பட்டவை யாகும். இது நிற்க.

கந்தர்வ லோகத்திற்குப் போய்ச் சேர்ந்தவுடனே என்னை யறியாமல் ஓர் ஆனந்தம் உண்டாயிற்று. அதி ரமணீயமான ஸங்கீதத்தொனி கேட்டது. அவ்வொலி பொன்னாற் செய்யப்பட்ட தொண்டையினையுடைய பெண் வண்டுகளின் ரீங்காரம் போலிருந்தது. அன்று; அது சரியான உவமை யாகமாட்டாது. உயிருக்குள்ளே இன்னிசை மழையை வீசிக்கொண்டே யிருக்

தது போலத் தோன்றிய அவ்வொலிக்கு இன்ன உவமை சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. 'இது என்ன ஒலி! எங்கிருந்து வருகிறது?" என்று யோசித்தேன். எனது அறிவிற்குப் புலப்படவில்லை. கண்களோ பரவச மடைந்து போயின. அங்குள்ள மாடங்களும், மாளிகைகளும், கோயில்களும், கோபுரங்களும், காடக சாலைகளும்—எல்லா வீடுகளும சந்திர கிரணங்களைப் போன்ற, குளிர்ந்த, இனிய பொன் னொளி வீசிக் கொண்டிருந்தன. இவற்றிலும், மற்ற மண், கல், தரை முதலிய எல்லாப் பொருள்களிலுமே அவ்வொளி அநேக விதமான வர்ண வேறுபாடு களுடன் கலந்திருக்கக் கண்டேன்.

இதை வாசிப்பவர்களே, நீங்கள் எப்போதாயி னும் மாரிக்காலத்தில் மழையில்லாத மாலைப்பொழு திலே கடற்கரை மணல்மீது இருந்து கொண்டு, வானத் தில் மேற்புறத்தில் சூரியன் அஸ்தமிக்கும்போது, ரவி கிரணங்கள் கீழ்த்திசையிலுள்ள மெல்லிய மேகங்களின் மீதும் இடையிடையே தெரியும் வான வெளிகளின் மீதும் வீச, அதனின்றும் ஆயிரவிதமான மெல்லிய அற்புதகாமான வர்ண வேறுபாடுகள் தோன்றுவ தைப் பார்த்திருக்கிறீர்களா? இந்த அடிமை நாட்டிலே உங்களுக்குப் பிரகிருதி தேவியின் லௌகர்யங்களைப் பார்த்துப் பரவசமடைய லாவகாசம் அடிக்கடி ஏற்பட் டிராது. ஆனால், மேற்கூறப்பட்ட வர்ணக்காட்சியை ஒரு முறையேனும் கண்டிருக்க மாட்டீர்களா? அவ் வாறு கண்டிருப்பீர்களானால், நான் பார்த்த கந்தர்வ

லோகத்தின் இயற்கை ஒரு சிறிது உங்களுக்குத் தெரி யும்படி சொல்லக்கூடும். அங்கும் அநேக விதமான மேன்மை பொருந்திய திரவத்தன்மை கொண்ட வர்ண பேதங்களே காணப்பட்டன. ஆனல் அவற்றுடன் சந்திர கிரணங்களின் மோஹினித்தன்மை கலப்புற் றிருந்தது.

இந்த ஒளியிலும், இன்னிசையிலும் களிப்புற்று நான் ஒரு க்ஷணம் இருக்கு முன்னுகவே, ஒரு கந்தர்வ யுவதி என் முன் வந்து, "வாராய், மானுட வாலிப, உனக்கு எங்கள் உலகத்தின் புதுமைகளை யெல்லாம் காட்டுகின்றேன்" என்று கைகோத்து அழைத்துச் சென்றுள். நான் அந்த யுவதியின் வடிவைக் கண்டு மயங்கி மூர்ச்சித்து விடுவேன் என்ற எண்ணம் உண்டா யிற்று. ஆயினும், அறிவைச் சிறிது ஸ்திரப்படுத்திக் கொண்டு, அவளை நோக்கி, "இங்கிருந்து நகர்வதற்கு முன்பு முதலாவது ஒரு கேள்வி கேட்கிறேன், அதற்கு விடை கூறவேண்டும்." என்றேன்.

"கேள்" என்று அவள் பொன் வீணை யொன்று மனிதர் பாஷையிலே பேசுவதுபோலச் சொல்லினள்.

"இந்த இனிய ஒலி என்னைப் பாவசப் படுத்து கிறதே! அது எங்கிருந்து வருகிறது?" என்றேன்.

"மேலே பார்" என்றனள். நீல வானத்தில் சந் திரன் தாரைகளினிடையே, கொலு வீற்றிருக்கக் கண்டேன்.

"அவருடைய கிரணங்கள்" என்றுள்.

"சந்திர கிரணங்களா! சந்திர கிரணங்களுக்கும் இந்த மனோகரமான தொனிக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டேன்.

"சந்திர கிரணங்களுக்கு இந்த இனிய ஓசை இயற்கை. அது இந்த உலகத்தில் நன்முகக் காதில் விழுகிறது. உங்கள் மண்ணுலகத்திலே ஜனங்களுடைய செவியில் விழுவது கிடையாது. ஆனால் அங்கே கூட அருமையான கவிகளின் செவியில் இந்த ஓசை படும்" என்றாள். இதைக் கேட்டு வியப்படைந்து, பிறகு அந்த யுவதியுடனே நடந்து சென்றேன்.

"பற" என்றாள்.

நான் கலீரென்று நகைத்துப் "பறக்கவா சொல்லுகிறாய்!" என்று விபரீதற்றேன்.

பால் போல வெண்மை கொண்ட வானத்தாற் செய்த இரண்டு சிறகுகள் அவளுக் கிருப்பதை நான் கண்டேன். முன்பு நோக்கியபோதே எனக்கு மூர்ச்சையுண்டாகத் தக்கதாக விருந்த அந்த யுவதியைச் சிறிது வருணித்துப் பார்க்கலாமா? ஏதோ முயற்சி செய்கின்றேன்.

சந்திரகலை வீசும் முகம். அதன்மீது சிறியதும் மூன்று விரல் உயரமுடையதுமாய், மலர்களாற் செய்யப்பட்ட ஓர் கிரீடம். உயிரென்ற வண்டு வீழ்ந்து, சிறகிழந்து தள்ளாடும் கள்ளூற்றுக்களாகிய இரண்டு கனிய விழிகள். தின்பதற் கல்லாது, தின்னப் படுவதற் கமைந்தன போன்ற பற்கள்.

தனது பாலிறகுகளால் விகாரஞ் செய்யப்படாத திவ்விய உருவம். நீண்டுவான் உடற்குள்ளே இன்ப மயமான மின்சாரம் ஏற்றுகின்ற கைகள். மண்ணுலகத்துப் பெண்களைப் பேசுமிடத்து கந்தர்வச் சாயல் என்கிறார்கள். இவளது இயலையும், சாயலையும் என் னென்பேன்? தெய்வ இயல், தெய்வச் சாயல்.

"மண்ணுலகத்தவரைக இருந்தபோதிலும் கல்ல பார்வைகள் பார்க்கிறாய்" என்று நாண முணர்த்தி, "யோசித்துக்கொண்டு நில்லாதே, பற" என்றாள்.

"உன் பெயரென்ன?" என்று கேட்டேன்.

"வெகு நேர்த்தி! நானென்று சொன்னால் நீ யொன்று பேசுகிறாய், என் பெயர் எதற்கு?"

"சொல்லு, பார்ப்போம்"

"என் பெயர்—பர்வதகுமாரி. என்னை, ஸாதாரண மாக, குமாரி என்று அழைப்பார்கள்."

"நல்லது, நான் உன்னைப் பெயர் சொல்லிக் கூப் பிடலாமா?"

"ஓ"

"சரி, பர்வதகுமாரி, நான் பறப்ப தெப்படி? உன் னைப்போல் எனக்கு இறகுகள் இருக்கின்றனவா?" என்று கேட்டேன்.

"நான் வந்தபொழுது என்மீது இறகுகள் இருக் கக் கண்டாயா?" என்றாள்.

"உன் முகத்தைக் கண்டு பாவசமடைந்ததில்

இறகுகளைக் குறிப்பிட முடியவில்லை. நீ பறக்குப் பிரஸ் தாபம் தொடங்கியபோதுதான் பார்த்தேன்."

"ஸ்துதி பிறகு பேசலாம். ஆரம்பத்திலே இறகுகள் கண்ணுக்குத் தெரிந்ததா? சொல்."

"தெரியவில்லை."

"இந்த உலகத்தில், பறக்கவேண்டுமென்ற நினைவுண்டான வுடனே, இந்த வெண்மை நிறங்கொண்ட வானிறகுகள் தோன்றுகின்றன. நீ பறக்க வேண்டுமென்று உள்ளத்திலே சங்கற்பஞ் செய்துகொள்."

"சரி."

"இப்போது என் கண்ணுக்குள்ளே உன் வடிவத்தைப் பார்."

பட்டப் பகற்போல் வீசிய நிலா வொளியிலே, அவளுடைய அழகிய கண்களுக்குள் உற்றுப் பார்த்தேன். அங்கே, எனது வடிவம் கந்தர்வ ரூபமாகத் தோன்றியது கண்டு வியப்படைந்தேன். ஆஹா! நான் கனவுகளிலே என்னைக் கண்டபோது தோன்றிய வடிவம்! நோயற்றது; சுருங்கலற்றது; மண் தன்மையில்லாதது; ஸௌந்தரியமானது. எனக்கும் இரண்டு வான இறகுகள் திடீரென்று முளைத்திருக்கக் கண்டேன். எனது ரூபம் இத்தனை மாறுபாடு அடைந்திருப்பதைக் கண்டு களிப்புற்று உடனே அவள் முகத்தையும் பார்த்தேன். எனது கண்குறிப்பை நோக்கி என் மனதிடையே அப்போது நிகழ்ந்த எண்ணத்தை அவள் அறிந்துகொண்டுவிட்டாள்.

"அடா! உன்னைக் கண்ணுக்குள் பார்க்கச் சொல்லிய தன்றோ பிழையாய்விட்டது" என்றாள்.

"ஏன்?" என்று கூறிச் சிரித்தேன்.

"இதுவரை நீ உன்னை மனித சரீர முடையவளாகவும், என்னைக் காந்தர்வ சரீர முடையவளாகவும் எண்ணி நடத்தி வந்தாய். இனி என்னை 'இணை' யென்று கருதி விடுவாய்."

"ப்ரிய ரூபிணி! நான் ஈசனைப் விட்டபோதிலும் உன்னைக் கண்டு வியப்படைவதை நீக்கமாட்டேன். எனினும், நான் உன்னை இணையாகக் கருதுவதில் உனக்கு ஸந்தோஷந் தானே?"

"ஓ"

பிறகு கண்களைக் கலந்தோம். 'கண்ணோடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனுமில.'

"பற" என்றாள்.

புதிதாக உள்ளத்திலே எழுந்த காதற் கிளர்ச்சி கொண்டோ, அல்லது இறகுகளின் உதவி கொண்டோ, அல்லது காந்தத்தின் பின்னே செல்லும் ஊசி யென அவள் பறந்து செல்வதை இயற்கை முறையாற பின் பற்றியோ, அவளோடு நானும் பறந்து செல்வேனையினேன். இறகுகளின் உதவிகொண்டு பறந்தனாக எனக்குத் தோன்றவில்லை. ஏனெனில், பறத்தல் அத்தனை சுலபமாகவும், ஸஹஜமாகவும் தோன்றிற்று.

"எங்கே போகிறாய்? உனது மாளிகைக்கா?" என்று கேட்டேன்.

"என் வீடு, உன் வீடு என்று பேதக் கதை யெல்லாம் இங்கே கிடையாது. இது ஸ்வேச்சாலோகம்; முற்றிய ஞானத்திலே எவ்வாறு அபேத நிலை எற்படுகிறதோ, அதுபோல பரிபூர்ணமான போகத்திலேயும் அபேத நிலை தோன்றுகிறது. இங்கே எல்லோருக்கும் எல்லா மாளிகைகளும் உரிமைதான். யார் எங்கு வேண்டு மென்றாலும் யதேச்சையாக வாழலாம். நான் உன்னைக் கடலோரத்தில் ஸுகந்த மாளிகைக்கு அழைத்துப் போகிறேன்"

"அபேதம், பேதம் என்று மிகப் பெரிய பேசசுகள் பேசுகிறாயே? வேதாந்தம் எங்கே படித்தாய்?"

"போக நிலை கன்றுக உணர்ந்தவர்களுக்கு அத்வைக ஞானம் இயற்கையிலேயே உண்டாகும். போக மறியாதவர்கள் பேசும் அத்வைதம் பொய். உங்கள் மண்ணுலகத்திலே அந்த ஞான நடிப்பு மிகுதியாக உண்டு. எங்களுக்கு அபோகஷ ஞானம் ஸுலபம். பரோகஷமும் எளிதுதான். இங்கிருந்து உபசாந்தி லோகம் வெகு ஸமீபம். போக மூர்த்தியாகிய விஷ்ணுவும், யோகநாதனுகிய சிவனும் ஒன்றே யென்பதை அறியாயா? இதெல்லாம் போகட்டும். இப்போது ஞானம் பேசத் தருண மன்று. கீழெல்லாம் பார்" என்றாள்.

நகரத்திலே இரண்டு பன யுயரத்தில் பறந்து போய்க்கொண்டு கந்தர்வ நாட்டு மாளிகைகள், சங்கீத

சாலைகள், லீலா மண்டபங்கள், என்பவற்றின் அற் புதங்களை யெல்லாம் நோக்கிச் சென்றேன்.

பறப்பதிலே உண்டான இன்பம் கொஞ்சமன்று. மண்ணுலகத்திலுள்ள ஸகல ஜந்துக்களிலும் பக்ஷிகளே அதிக ஸுகம் அனுபவிப்பதாகக் கருதவேண்டும். ஓடும் தண்ணீரிலே நீந்துவது சிறிது நேரம் இன்பமா யிருக்கும். ஆனால், வானத்தில் நீந்திச செல்வது ஸதா இன்பம். அதிலும் பார்வதகுமாரியைப் போல் ஓர் வழித்துணை கிடைக்குமாயின், வாழ்நாள் முழுதும் பறந்துகொண்டே யிருக்கலாம். ஐரோப்பியர்கள் கந் தர்வ போகங்களையே ஆதர்சமாகக் கொண்ட ஜாதியார். வான ரதங்கள் செய்து கடத்துகிறார்கள். ஆனால், அவர் களிடம் தமோகுணம் அதிகமாதலால், அந்தப் புது மையை இன்ப வழிகளிலேயே விருத்தி செய்து கொண்டுபோகத் தெரியவில்லை. வான ரதங்கள் ஏற் பட்டு இன்னும் சரியாக நடத்தத் தெரிவதற்கு முன்னு கவே, 'எதிர்காலத்துப் போர்கள் வானத்திலேயே நடக் கக் கூடுமல்லவா?' என்ற விஷயத்தைப் பற்றிப் பலவாறு ஆலோசனைகள் செய்யத் தலைப்பட்டு விட்டார்கள். அவர்களுக்கு நாபகமெல்லாம் யுத்தத்திலேயும், கொலை யிலேயும் இருக்கிறபடியால், அவற்றை அனுசரிக்கத் தகுதி யில்லாதவர்களாகிறார்கள். இது நிற்க.

யக்ஷர் நாட்டிற்கு வந்த ஆரம்பத்திலே எனக்குப் பொறுக்க முடியாத மயக்கமும் திகைப்பும் விளைந்திருந் தனவென்று மேலே கூறியிருக்கிறேன். அவை சிறிது

சிறிதாக நீங்கி இன்பவுணர்ச்சி மட்டும் மிஞ்சி நின்றது. அறிவிலே தெளிவுண்டாயிற்று. காலையில் விழித்தெழுந்து, முகந் துடைத்துக் கடலருகே சென்று பார்ப்பவனது கண்ணுக்குப் புலப்படுவது போல, வானத்திலே பறந்து செல்லும் எனக்குக் கீழே யிருந்த விஷயங்களெல்லாம் மிகத் தெளிவோடு விளங்கலாயின. அப்பொழுது நான் கண்டு சென்ற செய்திகளையெல்லாம் விஸ்தரிக்க வேண்டுமாலல் ஆயிரம் அத்தியாயங்கள் போதா. ஒரு சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன்.

பந்தாட்டம்.

ஓர் மேடையின் மீது கந்தர்வக் குழந்தைகள் பூப் பந்தாடிக் கொண்டிருந்தன. ரோஜாப் பூப் பந்துகள்.

ஒரு சிறுவன் "அடி ரஸிகே! நீ பந்தை எறியும் போதெல்லாம் என் கைக்கோலுக்கு அகப்படாமல், வேண்டுமென்று, கோணலாக, என் முகத்தைப் பார்த்து எறிகிறாய். இனி நான் உன்னோடு விளையாட மாட்டேன்" என்றான். இது கேட்டு மற்றக் குழந்தைகளெல்லாம் கலீரென்று நகைத்தார்கள். எல்லாக் குழந்தைகளும் இவ்வாறு ஒன்று சேர்ந்து பல வார்த்தைகள் பேசியும், ஒருவர்மேல் ஒருவர் மோதியும், ஆடியும், பாடியும், சிரித்தும் விளையாடிக்கொண்டிருக்க, அவன் மட்டும் ஓர் ரோஜா நிறங்கொண்ட பளிங்காசனத்தின் மீது தனியே சாய்ந்திருந்துகொண்டு, பாதி குவிந்த விழிகளோடு ஆட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

நான் பர்வதகுமாரியை நோக்கி, "அதோ, விலகி உட்கார்ந்திருக்கிறானே, அந்தப் பையன் யார்?" என்று கேட்டேன்.

"அவன் எனது தம்பி. அவன் பெயர் சித்தரஞ்ஜனன். அவன் குழந்தைப் பருவமாயிருந்த போதிலும், எங்கள் குலதெய்வ மாகிய காமதேவனுடைய அருள் பெற்றவனுதலால், குழந்தைகளோடு சேர்ந்து விளையாடுவதிலே விரும்ப மில்லாமல், கவிதைகள் புனை வதிலேயும், மோஹனமாகிய பகற்கனவுகள் காண்பதி லேயும் பொழுது கழிக்கின்றான். சோஜாப் பந்தை இந்தக் கிரீடாமன் மீது எறிந்த ரஸிகா என்ற அந்தக் கன்னிகையின் மீது சித்தரஞ்ஜனன் தெய்விகமான காதல் செலுத்துகின்றான். இப்பொழுது அவன் ஏதோ கவிதை புனைகிறான் என்று தெரிகிறது. அவனை இங்கே அழைக்கிறேன். அவன் கவிதை கேட்பதில் உனக்குப் பிரியந் தானே?" என்றாள்.

நான் விபரீதமடைந்து, "எனக்கு அளவில்லாத பிரியம்" என்று சொன்னேன்.

பர்வதகுமாரி அவனிருக்குந் திசையை நோக்கிக் கையால் சைகை காட்டினாள். அவன் உடனே வான இறகுகள் விரித்துக் கண்ணிமைக்குமுன் நாங்களிருந்த உயர் வெளிக்கு வந்துவிட்டான்.

பர்வதகுமாரி அவனைத் தழுவி முத்தமிட்டு, "இவர் நம் நாட்டிற்குத் தரிசனத்தின் பொருட்டு வந்திருக்கிறார். நமது விருந்தாளி" என்று என்னைக் காட்டினாள். பாலகன் என்னை நோக்கி "வந்தே"

என்று வணங்கினன். நானும் அவனைத் தழுவி உச்சி மோந்து வாழ்த்துக் கூறினேன். பிறகு பார்வதகுமாரியைக் கடைக்கண்ணால் நோக்கிக் கவிதை விஷயத்தை நினைப்புறுத்தினேன்.

அவள் தம்பியைப் பார்த்து "ரஞ்சனை, இப்போது உன் மனதிற்குள்ளே ஒரு பாடல் புனைந்துகொண்டிருந்தாயே, அதைச் சொல். இவர் கேட்கவேண்டுமென்கிறார்" என்றாள்.

சிறுவன் சிறிது நாணமடைந்தான்.

நான் "குழந்தாய், லஜ்ஜைப்படாதே! சும்மா சொல்" என்றேன்.

அவன், மண்ணுலகத்துப் பிராகிருத பாஷையைப் போலிருக்கும் இன்சொல் நிரம்பிய கந்தர்வ பாஷையிலே, ரஸிகா டம்பெதறிந்ததன் பொருட்டுக் கிரீடாமன் சினமுற்றதைக் குறித்து ஓர் பாட்டுப் பாடினன். பார்வதகுமாரியின் தம்பியின் குரல் இன்பமாயிருந்ததென்று நான் எழுதவா வேண்டும்?

அவன் சொல்லிய பாடலை, எனது திறனற்ற தமிழ்ச் சொற்களிலே, சூரியனைச் சித்திரித்துக் காட்டுவதுபோல், ஒருவாறு மொழிபெயர்த்துக் காட்டுகிறேன்.

இடியேறு சார்பிலுற உடல் வெந்தோன்
ஒன்றுரையா திருப்ப ஆலி
முடியேறி மோதியதென் றருள் முகிலைக்
கடுஞ்சொற்கள் மொழிவான் போலக்

கடியேறு மலர்ப்பந்து மோதியதென்
றினியாளைக் காய்கின்றுளை
வடியேறு வேலெனவெவ் விழியேறி
யென்றுவி வருந்தல் காணை.

[இதன் பொருள் :—மேகத்திலிருந்து வெய்ய இடி தன் பக்கத்திலே விழ உடல் வெந்து போனவன் ஒன்றும் சொல்லாது சும்மா இருக்க, ஆலங்கட்டி தலையிலே விழப்பெற்ற மற்றொருவன் மேகத்தின்மீது சினங்கொண்டு நிந்தை வார்த்தைகள் பேசுவதுபோல, வாசனைபொருந்திய ரோஜாப் பந்தைக்கொண்டு தன் மேலெறிந்து விட்டாளென்று இன்ப வடிவத்தாளாகிய ஸ்ரீகையைக் கோபிக்கின்ற இந்தக் கிரீடராமன் அவள் வடியுற்ற வேல்களை எறிவதுபோல, விழிகளை என்மீது மோதிக்கொண்டே யிருப்பதால், என்னுயிர் வருந்துவதைக் காண்கிறு னில்லை.]

---

* ஆரம்பத்தில் இக்கதை பத்திரிகையில் துண்டு துண்டாக வெளிப்பட்டபோது இடையே இரண்டு வாரம் தாமதம் நேரிட்டது குறித்து இவ்வுரை எழுதப்பட்டது :—

"ஆசிரியன் உரை.— ஆரம்பத்திலேயே, எனது ஞானரதம் சிறிது செப்பனிட வேண்டிய நிலைமையிலிருக்கிறதென்று தெரிவித்துக் கொண்டிருக்கிறேன். எனது ரதத்திலே பயிற்சி, தெளிவு என்ற சக்கரத்திலும், அச்சாணியிலும் சில பிழைபாடுகள் இருக்கின்றன. ஊக்கம் என்னும் குதிரைக்கு முன்னங் கால்கள் கொஞ்சம் முடம். திடசங்கற்பமாகிய சாரதி நோயாளி. இவ்வளவுக்கும் மேலாக இந்த ரதத்திற்கு வேறொரு இடையூறு இருக்கின்றது. பாலவனம்போலா

மதனன் விழா.

சிறிது நேரத்திற்குப் பிறகு சித்தாரஞ்ஜனன் எங்களிடம் விடைபெற்றுக் கொண்டு போய்விட்டான். நாங்கள் அப்பால் பறந்து செல்லலாயினோம். போகும் வழியெல்லாம் நிலவுக்கதிர் செய்யும் மெல்லிய இசையும், மாடங்கள் தோறும் கந்தர்வ யுவதிகளும், வாலிபர்களும், குழந்தைகளும், பெரியோரும் ஆயிரவிதமான போகங்களிலே பொழுது கழிக்கும் காட்சியும் அற்புதமாயிருந்தன. பூலோகத்திலிருக்கும்போது நான் போகங்களில் இத்தனை விதமுண்டென்பதைப் பிரதிபாசக்தியினல் கூடக் கண்டிருந்ததில்லை. கொஞ்சதூரம் போனவுடனே, பர்வதகுமாரி "அதோ, பார்!" என்று காட்டினள்.

யிருக்கும் 'பாரத ஜன நிலை' என்ற பிரதேசத்தை ஆறும், ஓடையும், குளிர் பொழிலுமுள்ள ஓர் நகரமாக நிர்மிக்க வேண்டுமென்று பூலோகத்தில் ஓர் பெரிய முயற்சி நடந்து வருகிறது. அங்கே அநேக நல்லோர்கள் பெரிய பெரிய வயிரத் தேர்களை நிறுத்திக் கொண்டு இரவும் பகலும் இடைவிடாமல் பாடுபடுகிறார்கள். அந்த இடத்திற்கு நமது மூடத் தேர் ஆசை மிகுதியால் போய் ஏதோ கொஞ்சம் வேலை செய்து அடிக்கடி ஆயாசமடைந்து போய்விடுகிறது. ஆகவே, நமது கதாநாயகனையும் கந்தர்வ யுவதியையும் கந்தர்வ லோகத்தில் அந்தரத்திலே கொண்டு நிறுத்திவிட்டு இரண்டு வாரம் அவர்களைக் கவனியாமல் இருந்து விட்டது. இப்போது மீண்டும் அதனை அங்கே செல்ல விடுகின்றேன்.]

"அஹஹா! அஹஹா! அங்கே என்ன விசேஷம்?" என்று கேட்டேன்.

அதிவிசாலமான மாடம் காணப்பட்டது. அதில் ஐம்பதினாயிரம் பேருக்குமேல் இருப்பார்கள் என்று தோன்றிற்று. பெரிய கூட்டம். ஆனால், பூலோகத்திலுள்ள கூட்டங்களைப் போல, ஒருவருக்கொருவர் நெருக்கி மேலே விழுந்து தள்ளி, கையால் ஒதுக்கிக் காலால் மிதித்து முகங்களைச் சுழித்துக்கொண்டு வெயர்த்து வெந்து போயிருக்கவில்லை. அந்த கந்தர்வக் கூட்டத்தார் வளைய வளைய அங்குமிங்கும் சலித்துக்கொண்டிருந்த போதிலும் ஒருவருக்கொருவர் சிறிதேனும் தொந்தரை செய்யாமல் விஸ்தாரமான இடம் விட்டு முகமலர்ச்சியுடன் ஸஞ்சரித்தனர். எதிரே ஸ்திரீகள் வந்து விலக இடமில்லாமற்போனால் உடனே இறகு விரித்து மேலே எழும்பி அந்த ஸ்திரீகள் போனபிறகு இறங்கிக் கொள்வார்கள். இத்தனை பெரிய கூட்டம் இத்தனை மநோஹரமாயிருந்ததைப் பார்த்து எனக்குண்டான வியப்பு கொஞ்சமில்லை. அவர்கள் ஒருவரையொருவர் தழுவிக்கொள்வதும், முத்தமிட்டுக்கொள்வதும், சில ஸமயங்கள் மிக வணக்கத்துடன் நமஸ்கரித்துச் செல்வதும், சிரித்துச் சிரித்துப் பேசுவதும்— என்ன அன்பு! என்ன மரியாதை! என்றல் வருணிக்குந்தரமன்று.

"பார்வதகுமாரி, அங்கே என்ன விசேஷம்?" என்று கேட்டேன்.

"மாட நிலத்தினிடையே ஒரு மண்டபந் தெரிகிறது பார்."

"ஆம்."

"அங்கே கிளிவாஹனத்தின்மீது என்ன வைத்திருக்கிறது?"

"மன்மத விக்கிரஹம்."

"அவருடைய திருவிழா" என்றாள்.

அந்த மன்மத விக்கிரஹத்தைக் கண்டவுடனே நான் ஸ்தம்பிதனுப் விட்டேன். "குமாரி, இது யாரால் செய்யப்பட்ட பிரதிமை?" என்றேன்.

"எங்கள் நாட்டு சிற்பிகளால்" என்றனள். எனக்குத் திடீரென்று பாரத நாட்டிலே சிலத்தொழில் இப்போது சீர்குன்றி நாசமடைந்து போயிருக்கும் விஷயம் ஞாபகத்திற்கு வந்தது.

"அடடா! கந்தர்வ நாட்டிற்கு வந்தும் அந்தக் கஷ்டதேசத்தினுடைய ஞாபகம் மறக்கவில்லை" என்று வாய்விட்டுக் கூறினேன்.

"உனது ரூபம் சிறிது காலத்திற்கு கந்தர்வ ரூபமாக மாறியிருந்த போதிலும், ஜன்மம் மாறவில்லை என்பதை அறி" என்றனள் குமாரி.

"அது போகட்டும், இப்படிப் பிரதிமைகள் உங்கள் நாட்டிலே அதிகமாக உண்டோ?" என்றேன்.

"நாளைக்கு உன்னை அமிருத அருவிக்கு அருகே

யுள்ள சித்திரசாலைக்கு அழைத்துச் செல்லுகிறேன். அப்போது எல்லாம் பார்க்கலாம்" என்றனள்.

இப்படிக் குமாரியுடன் பேசிக்கொண்டிருந்த நேரமெல்லாம் எனது விழிகள் கீழே தோன்றிய மன்மத விக்கிரஹத்தினின்றும் அகலவில்லை.

உங்கள் நாட்டுச் சிற்பிகளுக்கு இத்தனை சிற்பத் திறமை இருந்தபோதிலும் அநங்கனுக்கு உருவம் எற்படுத்தலாகாது என்பது தெரியவில்லை. இஃதோர் விந்தையே" என்றேன்.

"சபாஷ்! மனித நாட்டிலிருந்து வந்து, கந்தர்வத் தொழிலுக்குப் பிழை கூறத் தொடங்கிவிட்டாய்! எங்கள் நாட்டுக்குள்ளே இதைப் போன்ற பெருமை கொண்ட பிரதிமை வேறே கிடையாது. கொஞ்சம் உற்றுப் பார். எவ்வளவு உற்றுப் பார்த்த போதிலும் உனக்கு அப் பிரதிமையைப் பற்றிய உண்மை சொன்னலொழியத் தெரியாது.

அந்தப் பிரதிமை மண்ணாலேனும் பளிங்காலேனும் செய்யப்பட்ட தன்று. மேனமய மாகிய நுண் வான் (ஸூக்ஷ்ம ஆகாசம்) கொண்டு செய்யப்பட்டது. மனதிலே பிறந்த காமதேவனுடைய உண்மை உருவம் இதுவே. இதைச் செய்த மயனை நாங்கள் த்விதீயப் பிரம்மா (இரண்டாம் பிரம்மா) என்று சொல்வதுண்டு. பிரம்மாவால் செய்யப்பட்ட காமதேவன் ஜீவஸஹிதனாக இருக்கிறான். இப்பதுமைக்கு உண்மையுயிர் இல்லாவிடினும் கலையுயிர் (சைத்திரிக ஜீவன்) கொடுக்கப்பட்டிருக்கின்றது" என்றனள்.

ஒவ்வொரு காட்சியைப்பற்றி எழுதும் பொழுதும், "வியப்புற்றேன்', 'வியப்புற்றேன்' என்று ஒரேவண்ண மாக மீட்டும் மீட்டும் சொல்லி எனக்கு அலுத்துப் போய் விட்டது. கந்தர்வ நாடே வியப்பு நாடு.

"மன்மதனுடைய பிம்பத்துக் கருகே ரதி பிம் பத்தைக் காணேமே?" என்று கேட்டேன்.

"அது கந்தர்வலோக ரஹஸ்யம். உன்னிடத்தில் சொல்லக்கூடாது" என்றாள்.

"நானும் தற்காலத்திற்கு கந்தர்வ னென்பதை நீ மறந்து விடுகிறாய்!"

"அப்படியானால், நீ யோசனை செய்யும் விஷயத் தில் உனக்கே விளங்கும். அது போகட்டும். சற்றுக் கீழே யிறங்கி நன்றாக எல்லாவற்றையும் பார்ப்போம், வா. இங்கிருந்து பேசிக்கொண்டிருப்பதை விட அங்கே போய்ப் பார்ப்பது கலம்" என்றாள். சற்றுக் கீழேயிறங்கி அத்திருவிழாவின் விநோதங்களை யெல் லாம் பார்த்தோம். இப்புறம், மன்மத விக்கிரஹத்து குப் பூஜைகள் நடந்துகொண்டிருந்தன; அப்புறத்திலே மன்மதன் தகன கதை, அவன் திரும்பவும் உயிர்த் தெழுந்த பருவம் வரை, பிரதிமைக் காட்சிகளாலும், சித்திரக் காட்சிகளாலும் நன்கு விளங்கப்பட்டிருந்தது.

வஸந்த காலம் சித்திரிக்கப் பட்டிருப்பதைக் கண் டேன். யதார்த்தத்திலேயே கந்தர்வ நாட்டில் அப் போது வஸந்த காலம். அது பற்றியே காமன் திரு விழாக் கொண்டாடினர்கள். எனவே, கந்தர்வச் சிற்

பர்களின் அற்புதத் தொழிலுக்குப் பிரகிருதி தேவியும் துணைபுரிவா ளாயினள்.

பாடுகின்ற குயில்கள், மலர் புனைந்த மரங்கள், வாவி, கூடி விளையாடும் மான்கள், வண்டுகள் முதலா கத் தென்றல் கொண்டுவரும் மெல்லிய மகரந்தத்தூள் வரை, வஸந்த காலத்தின் காட்சிகளெல்லாம் உண்மை யினும் உண்மையாகத் தோன்றின. அங்கு, தேவ தாரு மாங்களால் அமைக்கப்பட்ட ஒரு பெரிய மண்ட பத்தில் சூரிய காந்தக் கல் மேடையில் உட்கார்ந்து, சித்தத்தை யடக்கி நிலையில் நிறுத்தி, மூக்கண்களின் பார்வைகளையும் மூக்கின் நுனியிலே செலுத்தி அலை யோய்ந்த ஸமுத்திரம் போல அசைவற்றிருந்த சிவ பெருமானின் உருவப் பதுமை நிறுத்தி வைக்கப்பட் டிருந்தது.

எதிரே, தவத்தால் மெலிந்த ஸௌந்தரிய தேவதை வந்து நிற்பது போல, தவவேடங்கொண்ட பார்வதி தேவி நின்று அர்ச்சனை செய்து கொண்டிருந்தாள். அவளுக்குப் பின் பக்கத்திலே மதனன் தனது கரும்பு வில்லில் நாணேற்றிப் புஷ்ப பாணந் தொடுத்துக் காத்து நிற்பதுபோல ஓர் உருவம் நின்றது.

மற்றொரு பாரிசத்திலே, மன்மத தகனம் சித் திரித்துக் காட்டப்பட்டிருந்தது. பின்புறமாகத் திரும்பி, ஸத்திய தேவதை கொடுங்கோபத்தில் நிற்பது போலப் பரமசிவன் முகத்திலே கோபத்தழல் பொங்க நிற் பதும், அவனது நெற்றியிலுள்ள 'ஞான' விழியினின்

றும் தீ வெள்ளமாகப் பாய்ந்து மன்மதனுடைய உரு வில் நெருப்புப் பற்றி எரியும் காட்சியும் எழுதியிருந்த தைப் பார்த்து என் மனதிலே நடுக்க முண்டாயிற்று. பார்வத குமாரியின் கையோடு கோத்திருந்த எனது கையைப் படீரென்று பிடுங்கிக் கொண்டேன்.

பார்வத குமாரி கடகட வென்று நகைத்து, 'சித்தி ரத்துக்கு அஞ்சுகிறாய்!" என்றாள். அது வெறுஞ் சித்திரந்தான் என்று என் மனதில் உறுதி செய்து கொள்ள முடியவில்லை. கோயிலிடையில் மதன வடி வத்தின் அருகே ரதி யுருவம் காணவிடினும், இங்கே அவனது எரியும் உடலருகே ரதிதேவி, ஆ! ஆ! என்று கதறி நிற்பதுபோல எழுதியிருந்தது. அவள் முகத் தில்—உடல் முற்றிலும்—காணப்பட்ட சோகத்தை யும் பரிதாபத்தையும் என்னால் வருணிக்க முடியாது. கந்தர்வச் சிற்பனுடைய சித்திர சலாகை எங்கே? எனது பேதை யெழுதுகோ லெங்கே? எத்தனைக் கெத்தனை!

மற்றொரு பாரிசத்தில், சிவனுக்கு விவாஹம் முடிந்து பார்வதிபாகனாக விளங்குகின்றார். ரதி தேவி வந்து வணங்கி நிற்கின்றாள். சிவன் புன்னகை பூத்து அருள் புரிய, மதனன் சாம்பலிலிருந்து மீண்டும் உயிருடன் எழுந்து சிவனையும் பார்வதியையும் முடி யால் வணங்கிக்கொண்டு கையினால் அவ்விவருரின் மீதும் அம்புகள் தொடுக்கின்றான். பார்வதி ஐயனைத் தழுவிக் கொள்ளுகின்றாள். இவ்வாறு மதனன் கோயி லிலே இருக்கும் ஒவ்வொரு காட்சியின் முன்னேயும் கந்தர்வ ஜனங்கள் வந்து பலவாறுகத் தொழுது கொண்

டிருந்தனர். சில ஸ்திரீகள் கையில் யாழ் வைத்துக் கொண்டு பாடினர். ஒரு பக்கத்தில் வாலிபரும் மாதர் களும் இணையிணையாகப் பல விதக் கூத்துக்களாடி ஓர் வனையமாகச் சுற்றிக் கொண்டிருந்தனர்.

பறவைக் கூத்து.

ஒரு திசையிலே ஒரு வாலிபனும் யுவதியும் ஒரு வரை ஒருவர் நோக்கி அப்படியே மயங்கிப் பதுமை களைப்போல நின்று கொண்டிருந்தார்கள். இம்தன்றிப் பல பல காட்சிகள். இன்னுமோர் புறத்திலே 'பறவைக் கூத்து' நடை பெற்றது. அவர்கள் அந்தரத்திலே ஆயிர விதமாக ஒருவரை யொருவர் சுழற்றிக்கொண்டு, அத்தனையிலும் இசை நெறி தவறாமல் கூத்திட்ட விந்தை சிறிதன்று, அக்கூத்துகளிலே ஒன்று மிகவும் நயமா யிருந்தது. இடையில் ஓர் யுவதி. அவளி னின்று நான்கு முழத் தொலை இடையிட்டு இரண்டு வாலிபர்கள் வண்டிச் சக்கரம் தனது குடத்தைச் சுற்று வதுபோல மேலுங் கீழுமாய் வட்டமிடுவார்கள். ஒருவன் உச்சிமீது நிற்கும்போது மற்றொருவன் தாளின் கீழ் நிற்பான். இவளது கைப்பாரிசங்களில் அவ்வளவே தொலையிட்டு இரண்டு சுந்தரிகள் முன்ன யைச் சுற்றித் திரிகை சுழல்வது போலச் சுழன்று கொண்டிருப்பார்கள். ஒருத்தி இடக்கைக்கு நேரே வரும்போது மற்றொருத்தி வலக்கைக்கு நேரே இருப் பாள். இங்ஙனம் சுற்றும்போது ஒவ்வொரு சுழற்சி யிலும் இவ்விரண்டு சுந்தி ஸ்தானங்கள் ஏற்படுமல்லவா? அப்பொழுது அவர்கள் முத்தமிடுவதுபோல இதழ்க்

தொனி செய்வது, இடையில் நிற்பவள் வாசிக்கும் புள்ளாங்குழல் கீதங்களுக்குத் தாள மாகும். இப்படி ஆயிரம் சேர்ந்து ஒரு பெரிய வலயம்! அரைநாழிகை கழிந்தவுடனே, இந்தப் பாணி கழிந்து மற்றோர் பாணி.

"நேரமாய் விட்டது, நாம் கடற்கரைக்கு போக லாம்" என்றாள் பர்வத குமாரி. எனக்கு அந்தத் திருவிழாவை விட்டுப் பிரிந்து செல்ல மனமே யில்லை. ஆனால் பர்வத குமாரியின் சொல்லைத் தட்ட யாருக்கே னும் மனம் வருமா?

கடற்கரை.

பறந்து பறந்து கடலுக்கருகே வந்து சேர்ந்தோம். நெருங்கி வாவே, உள்ளுயிரிலே புகுந்து இனிய சலனங் கள் தருவதும், காரமில்லாத தழுதழுத்த இயற்கையுடை யதுமான மனோஹரத்தன்மை கொண்டதோர் ஸுகந் தம் புலப்பட்டது. குமாரி சொல்லியிருந்த ஸுகந்த மாலிகை ஸமீபித்து விட்டதென்பதை அறிந்து கொண் டேன். "இம்மாலிகைக்கு இத்தனை இனிய கந்தம் எப்படி ஏற்பட்டது?" என்று நான் கேட்க வாயெடுக்கு முன்பாகவே அவள் எனது உள்ளக்கருத்தைத் தெரிந்து கொண்டு பின்வருமாறு கூறலாயினள்:—

"கஸ்தூரிக் கற்களாலும், தேவ சந்தன மரத்தா லும் இம்மாலிகை ஆக்கப்பட்டிருக்கின்றது. அன்றி யும், இதைச் சூழ்ந்துள்ள பூங்காவனத்திலே உங்கள் உலகத்தில் கண்டறியாத அதிஸுகந்த முடைய பலவித மலர்ச்செடிகள் இருக்கின்றன" என்றாள்.

இங்ஙனம் பேசிக்கொண்டே, ஸுகந்த மாளிகை யின் உச்சிமேடையில் போயிறங்கினோம். எங்களைப் போலவே இணையிணையாகப் பலர் அங்கே வந்திருந்து கடற்காட்சியை நோக்கிக் களித்துக் கொண்டிருப்பது கண்டோம். ஓர் ஓரத்திலே போடப்பட்டிருந்த இரண்டு ஆஸனங்களில் போய் சிரம பரிஹாரமாகச் சாய்ந்து கொண்டோம். அவ் வாஸனங்கள் இலவம்பஞ்சுபோன்ற யாதோ ஒரு பொருள் பொதிந்தனவாய், வெண் பட்டால் மறைக்கப்பட்டிருந்தன. அவற்றில் சாய்ந்தவுடனே, தாயின் மடியிலே சாய்ந்ததுபோல உள்ளத்திற்கு ஆறுதல் உண்டாயிற்று.

எதிரே கடல். சந்திரகிரணங்களால் ஜோதியுயிர் கொடுக்கப்பெற்ற அலைகள். வெள்ளை மலர்கள் பூனைந்து, புஷ்பக் குன்றுகள் கிடப்பது போலத் தோன்றிய கப்பல்கள். தூரத்திலே, அன்னங்கள் மிதப்பதுபோல மிதந்த இன்பப்படகுகள். மேலே, சந்திரன், வெள்ளிமேகங்கள்; இம்மேகங்களிலே சில வலைகள் பாப்பி யிருப்பதுபோலத் தோன்றும்; சில அலைகளடிப்பது போலிருக்கும்; ஒன்று பூச் சிதறியது போலத் தோன்றும்; கீழே மிதக்கும் படகுகளுக்கு வானக்கண்ணாடியிலே தோன்றும் சாயைகள் போலச் சில மிதந்து செல்லும். இனி, நக்ஷத்திரங்கள்! வானக்கடலிலே வெடித்தெழுந்த வயிரங்கள்! சிதறுண்ட இன்பங்கள்! வானப் பொய்கையிலே மனமெனும் சிறிய வண்டு போய் ஒளித் தேன் குடிப்பதற்கமைந்த எண்ணில்லாத மலர்கள்! திசையென்ற அநந்தவஸ்துவுடன், ஈச னறிவு என்ற அநந்தவஸ்து தாக்கியபோது பொறித்தெழுந்த சுடர்ப் பொறிகள்!

படகுகளிலே இணையிணையாக கந்தர்வ இளைஞர் களும் பெண்களும், சிலர் பாட்டிலும், சிலர் ஆட்டத்தி லும், சிலர் வாத்தியங்கள் வாசிப்பதிலும், களிப்பவராகி, அலை முழக்கமாகிய பிராகிருத பேரிகைக்கு இவர்கள் பலவிதங்களிலே அனுமோதனஞ் செய்வாராயினர். சந்தி ரகிரணங்களும் இவற்றிடையே மாறுப் புதுமைகொண்ட பொன்வண்டொலி யிசைத்துக் கொண்டிருந்தன. கடற் காற்றே, பர்வத குமாரியின் நெற்றி மீதுள்ள குழற் சுருள்களுடன் விளையாடிக் கொண்டிருந்தது.

ஆ! உருவம் காந்தர்வமாக மாறிவிட்ட போதிலும், எனது ஜீவன் மானிட ஜீவனுதலால் இத்தன இன்ப மிகுதியை என்னுல் பொறுக்க முடியவில்லை. புலன்கள் திகைத்துப் போய்விட்டன. அறிவு மயங்கிவிட்டது. இன்பமாகிய கடலின் அலைகளிலே எனதுயிர் சிறிய நுரைபோல எற்றுண்ப தாயிற்று. இன்பமாகிய புயற் காற்றிலே எனதுயிர் சிறு துரும்புபோலச் சுழல்வதா யிற்று. என்ன ஸுகந்தம்! என்ன இசை! என்ன காட்சி! பர்வதகுமாரியுடன் நான் எதேதோ, தொடர் பற்ற மொழிகள் பேசுவேனுயினேன். இன்பக் கள் அறிவினை அமிழ்த்தி விடவே, நா, கடிவாள மிழந்த காட்டுக் குதிரை போல, கண்ட கண்ட இடங்களில் ஸஞ்சரிப்பதாயிற்று. இன்பம் தெவிட்டிப் போய் விட்ட தென்று நான் சொல்லவில்லை. நான் போக்தா (அனுபவிப்பவன்) ஆக இருந்தது போய், அது போக்தாவாகி என்னை விழுங்கித் தீர்த்துவிட்டது. பேசிக் கொண்டிருந்தபடியே கண்ணயர்ந்து விட்டேன்.

சில பொழுது கழிந்ததின் பிறகு, விழிப்படைந் தேன். சூரியோதய காலம். கடலும் வானும் கூடித் தழுவிய இடத்தில், அவற்றின் கூட்டத்திலே தோன் றிய ஜோதிக்குழந்தை போலப் பரிதிவட்டம் பிறந்தது; கிழக்குத் திசையில் வானமெங்கும் நெருப்புக் குழம்பு பறந்திருந்தது. தீப்பட்டெரியும் தீவுகள்போல மேகங் கள் காணப்பட்டன. மேகங்களுக்கு மனிதபுத்தியுண் டென்று நினைக்கிறேன். தமது இருளியற்கையை மாற் றித் தமமை ஒளியுடையனவாகச் செய்யும் சூரியனை இவைகள் அழுக்கிக் கொன்றுவிடப் போகின்றன.

"பரஸ்பரம் அன்போடு வாழுங்கள்"—"அன்பே சிவம்"—என்ற பெருந் தர்மத்தைக் கூறி யூதஜாதி யாரை ஒளிபெறச் செய்ய வேண்டுமென்று நாடிய கிறிஸ்து முனியை—தான் பிறந்ததால் யூதஜாதிக்கே ஓர் புகழும் மாண்புங் கொடுத்த கிறிஸ்து முனியை—யூத ஜாதியார் பகைத்துக் கொல்லவில்லையா? அதாவது, கொல்ல முயன்றார்கள்; அவர்களால் கொல்ல முடிய வில்லை. கிறிஸ்து முனி இன்றுவரை உயிரோடிருக்கி ன்றார். தர்மத்தின் பொருட்டாகவும், மக்கள்மீதுள்ள அன்பின் பொருட்டாகவும், உலகத்தாரின் தூற்றுதல், உலகத்தார் செய்யும் நிஷ்டூரம் என்ற சிலுவையில் எற் றுண்டு வருந்தும் ஒவ்வொரு மனிதனிடத்தேயும் கிறிஸ்துவே விளங்குகின்றார்.

எனக்கு அந்த மேகங்களைப் பார்க்கும் போது பாரிசேயர்கள் முதலிய யூதக் குருக்களின் நினைப்பு வந்தது. சகோணப்பொழுது. பின்பு அந்த ஜோதிக்

கோளம் மேலெழுவ தாயிற்று. வஜ்ராயுதங்கள் போலத் தோன்றிய தனது கிரணங்களால் அம்மேகங்களை உடைத்துச் சிதறி, எற்றி, அசைத்துக் குழப்பிப் புரட்டி ஓட்டித் தொலைத்துவிட்டு, பால சூரியன், மிகுந்த வெற்றிக் கோலத்துடன் கிரணங்களை உலக முழுவதிலும் பரப்பி, விடுதலைபெற்ற ஓர் பேருண்மை போல ஒளி வீசுவானாயினன். உலகம் மகிழ்ச்சி பெற்றது. கந்தர்வ மாதர்களெல்லாம் பூபாள ராகத்தில் காயத்ரி பாடித் துதித்தார்கள்.

அருவி.

"அருவிக்கு வா. எழுந்திரு, நீராடப்போவோம்" என்றனள், எனது உயிர்ப் படகிற்கு மீகாணுக வந்து ழுளைத்த இளையவள்.

அருவிக் கரைக்கு வந்துசேர்ந்தோம். அருவி உயர்ந்த குன்றுத் தலையிலிருந்து இரண்டு படிகளாக இடை நிலத்திலுள்ள பொய்கையில் வீழ்ந்து, அங்கிருந்து மறுபடி தரையில் விழுகின்றது. நீரருவிக்குப் பல புலவர்கள் மாலை முதலியவற்றை உவமையாகச் சொல்லி யிருக்கிறார்கள். அது எனக்கு ஸம்மதமில்லை. வானும், கடலும், இராமாயணமும் தமக்குத் தாமே நிகர் என்று பெரியோர் சொல்லி யிருப்பதும்போலவே, அருவியையும் உவமையற்றதாகக் கொள்ளவேண்டும். நாங்கள் வருவதற்கு முன்னுகவே அங்கு பலர் வந்து ஸ்நானம் செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் ஸ்நானம் செய்த விதைகளைப் பார்க்கும்போது அற்புதமா யிருந்தது. இப்பொழுது, மண்ணுலகத்தி

விருந்து திரும்ப எழுதும்போது, உள்ளபடி யெழுதச் சிறிது கூசுகின்றது. மண்ணுலகத்திலே சிலர் எழுதத்திலும் பேச்சிலும் மஹா சுத்தர்கள். நினைப்பிலும், நடையிலும்—? கீழே விழுந்த அருவி சிறிய ஆறாக ஓடுகின்றது. அந்த ஆற்றில் வழியெங்கும் சிறு சிறு பாறைகள். ஒவ்வொரு பாறையிலும் ஒவ்வோர் சிலை பார்க்கலாம். பாறை மீதிருந்து சிவ்வென்று பறந்து வந்து அருவியை வலம் செய்து இடையே நின்று கொண்டிருந்து விட்டு மறுபடி தத் தம் பாறைக்குப் போய் விடுவார்கள். தூய நெஞ்சுடையவர்களுக்கு எல்லா விஷயங்களும் தூய்மை கொண்டனவாகவே தோன்றும். கந்தர்வ நாட்டில் எவர் மனதிலும் விகற்பம் கிடையாது. ஆகையால் ஆடை முதலிய விஷயங்களில் அவர்கள் அதிக நாணம் பாராட்டுவதில்லை. ஆ! என்ன ஸௌந்தர்யம்!

அருவியில் ஸ்நானம் செய்து முடிந்தபிறகு பக்கத்திலுள்ள ஓர் ஆலயத்திற் சென்று அநேகர் தத் தம் இஷ்டதெய்வதங்களுக்குப்பல வகைகளிலே பூஜை புரிந்தார்கள். சித்திர வித்தையிலே, ஒப்பற்று விளங்கும் கந்தர்வ நாட்டார் தமது கோயில்களிலே யாதொரு பிரதிமைகளும் இல்லாதனவாகச் சில கோயில்கள் வைத்திருக்கிறார்கள். அக் கோயில்களின் சிகரத்திலே 'ஓம்' என்று ஒளியெழுத்தில் எழுதப்பட்டிருக்கிறது. உற்சாகக் கொண்டாட்டங்களும் வேடிக்கைகளும் பிதானமாகக் கொண்ட ஆலயங்களிலேதான் பிரதிமைகள் வைத்திருக்கிறார்கள். மனப்பூர்வமாக ஆத்ம சுத்தி தேட விரும்பும் இடங்களில் பிரதிமைகள் வைப்

பதில்லை ; அவரவர்கள் தத் தம் இஷ்ட தெய்வங் களைத் தியானரூபமாக வணங்குகின்றார்கள். "போ கத்திற்கும் யோகத்திற்கும் ஸம்பந்த முண்டு. கந்தர்வ லோகத்திலிருந்து சாந்தி லோகம் வெகு ஸமீபம்" என்று குமாரி சொல்லியதின் பொருள் எனக்குச் சிறிது சிறிதாக விளங்குவதாயிற்று. லௌந்தரியத்தை தாகத்துடன் தேடுவோர்களுக்கு ஸத்தியமும் அகப் பட்டுவிடும். "உண்மையே வனப்பு, வனப்பே உண்மை" என்று ஓர் ஞானி சொல்லி யிருக்கிறார். ஆலயத்துக்குள்ளே நானும் குமாரியும் பிரவேசித்தோம். "குமாரி ! இஷ்டதேவதா பூஜைக்குரியது இவ்வாலயம் என்கிறாய். உனக்கு இஷ்ட தெய்வம் எது? நீ எதை வணங்கப் போகிறாய்?" என்று கேட்டேன். குமாரி—"எனக்கு இஷ்ட தெய்வம் மதனன். நான் அவனைத் தியானம் செய்வேன். நீ உனக்கு விருப்ப மான தெய்வத்தை வரித்துக்கொள்" என்றாள்.

"எனக்கு இஷ்ட தெய்வம் நீயே. நான் உன் னையே தியானம் செய்யப்போகிறேன்" என்று நான் சொன்னேன்.

"நன்று! நன்று!" என்று கூறிச் சிரித்தாள். பிறகு "தோழா, மனங்கொண்டது தெய்வம். நீ எந்த வடிவத்திலே தெய்வத்தை வணங்குகிறாயோ, தெய்வம் உனக்கு அந்த வடிவமாக வந்து அருள் செய்கின்றது. தெய்வமென்பது யாது? தெய்வமென்பது ஆதர்சம்; தெய்வமென்பது சித்த லக்ஷ்யம். தெய்வமென்பது உண்மை. தெய்வ மென்பது வனப்பு" என்றாள்.

ஆம். "உலகத்திலே மனிதனைகப் பிறந்தால் இராமனைப்போல ஒழுகவேண்டும். அதிற் சிறந்தது வேறெது மில்லை" என்று சொல்பவனுக்கு இராமன் தெய்வம். தன்னை மறந்து, தன தின்பம் கருதாமல், ளைளந்தரிய வெள்ளத்திலே தனது உயிரை யிழந்து பார்வதகுமாரியை நான் தெய்வமாகக் கொள்ளும் பக்தித் தில் எனக்கு அதுவே மோக்ஷஸாதனம். காளிதாஸன் தாஸி வீட்டில் செய்த பூஜையைப் பற்றி நம்மவர் சொல் லும் பொய்க் கதையிலே கூட உண்மை யிருக்கின்றது.

பார்வதகுமாரி, ஆலயத்துள்ளே ஓர் தனியிடத்தில், கீழ்த்திசை நோக்கிப் பத்மாஸனமிட்டு உட்கார்ந்து கொண்டு கண்ணிலே பாவசவெறி மிதக்க, "ஓம் நம: ப்ரம்மணே" என்று சொல்லிச் சொல்லி ஜபித்தாள். காலும்—விளையாட்டன்று, யதார்த்தமாகவே—அவளை திரில் பத்மாஸனத்திலிருந்துகொண்டு, திரிகாணங்களை யும் அவள் மீது செலுத்தி "ஓம் நம: குமார்யை" என்று யோகத்திலே அமர்ந்து விட்டேன். யோகந் தெளிந்து எழுந்து நின்றேனும். பார்வதகுமாரி 'புறப்படு' என்று சைகை காட்டினாள். காலை ஞாயிற்றின் பால கிரணங்களை தாகந் தீரக் குடித்துக் கொண்டு பறக்கலா யினேம். பறந்து, சித்திரசாலைக்கு வந்து சேர்ந்தோம்.

ஆஹா! எத்தனை பெரிய முயற்சியிலே தலையிட்டு விட்டேன்! சாதாரணமாகக் கல்கத்தாவிலுள்ள காட்சிச் சாலையை வர்ணிக்க வேண்டுமென்றால், அதற்கென்று ஓர் நூல் எழுத வேண்டும். கந்தர்வ லோகத்துச் சித்திரசாலையிலுள்ள காட்சிகளை நான் எப்படி எழுதிக் காட்டுவது?

"சித்திரசாலைக்குப் போவோம், வா. நேற்றெல்லாம் இயற்கை நலம் பார்த்தாய் விட்டது. இன்று காலை அருஷி பார்த்தோம். இனி உங்கள் நாட்டுச் செயற்கை நலங்களைக் காணவேண்டும் என்ற விருப்பம் எனக்கு உண்டாகிறது. இந்த வானமோ மிகப்பெரியது, அதி ஸுந்தரமானது. அதோ தூரத்திலே தெரியும் குன்றும் அதன் முடியிலே வானமும் சேர்ந்து நிற்கு மிடத்தில், எத்தனை அழகாயிருக்கிறது பார்? ஓகோ! —இதை யெல்லாம் நின்று பார்த்துக் கொண்டே யிருந்தால், இப்படியே பொழுது போய்விடும். சித்திரசாலைக்குப் போகலாம்" என்றேன். பார்வதகுமாரி கல்லென்று நகைத்தாள். அவள் விழிக்கடைகளிலே குறும்புக் குணம் தோன்றியது.

"குமாரி! இப்படி யெல்லாம் சிரித்தால் பிறகு நீ எனக்கு இஷ்டதேவதை யில்லை. உன்னை முத்தமிடுவேன், பார்த்துக்கொள்" என்றேன்.

பார்வதகுமாரி முன்னிலும் இரு மடங்கு நகைத்தாள். நானும் அவளைப் பயமுறுத்தியபடியே தண்டனை செய்தேன். அவள் சினந்தோன்றிய விழிகளோடு பார்த்தாள். "நான் தான் முதலிலேயே எச்சரித்தேனே. நீ என் இரண்டாம் முறை சிரித்தாய்?" என்று வணக்கத்தோடு சொன்னேன்.

"நான் அதன் பொருட்டுக் கோபிக்கவில்லை. கந்தர்வ நாட்டு யுவதிகளை உண்மையான பக்தர்கள் இவ்விதத் தண்டனை செய்யும்போது கன்னத்தை தீண்டுவதில்லை. நீ...க...க" என்று குழறிவிட்டாள்.

நான் கந்தர்வ விதிப் படியே அந்த அற்புதக் குற்ற வாளியின் இதழிலே தண்டனை நிறைவேற்றினேன்.

கலீரென்று நகைத்து, "மூடத்தோழா! இதுதான் சித்திரசாலை" என்றாள்.

ஸ்தம்பித னாகிவிட்டேன்.

"குமாரி, பரிஹாஸம் செய்கிறாய். இதுவா சித்திரசாலை!"

"ஆம், இது எங்கள் சித்திரசாலையிலே பூர்வத்தில் ரமாநாதர் என்பவரால் அமைக்கப்பட்ட வனக்காட்சி. இதை வனமென்று நீ நினைத்தது பெரியதில்லை. எங்கள் உலகத்தார்களே இது இயற்கை வனமென்றும், செயற்கை வனமென்றும் தெரியாமல் அடிக்கடி ஏமாந்து போவதுண்டு" என்றாள்.

அப்பால் பிரதிமைகள் வைத்திருக்கும் மண்டபத்திற்குப் போனேம். ஒரு பக்கத்தில் ஜீவராசிகளின் வடிவங்கள் காணப்பட்டன. கண்ணுக்குத் தெரியாமல் பூதக்கண்ணாடியால் பார்ப்பதற் குரிய சிற்றுயிர்களைத் தவிர மற்றப்படி அனேகமாக எல்லா ஜந்துக்களின் உருவங்களும் அங்கே யிருப்பது கண்டேன். எனக்கு ஜந்துநூலில் தக்க பயிற்சியும், அபிருசியும் இல்லை யாதலால், அக் காட்சியின் பலங்களைப் போதிய படி அனுபவிக்க முடியவில்லை. மற்றொரு புறத்திலே, கந்தர்வப் பிரதிமைகள் வகுப்புற்றிருந்தன. அங்கு, மிகுந்த ஆவலுடன் போனேன். பெண்ணிடத்தேனும், ஆணிடத்தேனும் ஸௌந்தர்யமான வடிவம் காணப்படுமாயின், அதைப் போன்ற இனிய காட்சிகள் உலகத்திலே பல இல்லை.

அசேதனப் பொருள்களிலே கூடச் சிறந்த அழகு தோன்றுமிடத்துக் கையெடுத்துக் கும்பிடத் தக்கதாக இருக்கின்றது. அவ்வாறிருக்க, ஓர் ஸ்திரீ அல்லது புருஷனுடைய முகத்திலே சைதன்ய ஒளியுடன் கலந்த அழகு தோன்றுமாயின், அது மிகவும் கவர்ச்சியுடைய தாகு மென்பது சொல்லி யாகவேண்டுமோ? மனுஷ்ய வடிவம் ஸௌந்தரியமா யிருப்பதைக் காண்பதில் எனக் கெப்போதுமே அளவிறந்த தாக மூண்டு. ஆனால், பூலோகத்தில் பரிபூரண ஸௌந்தரியமுடைய ஸ்திரீ புருஷர்கள் இல்லை. மனதினிடத்தே சுத்தமும், சாந் தியும் இல்லாதபடியால் பூமண்டலத்து மனிதர்கள் பொதுவாகப் பார்ப்பதற்கு விகாரமா யிருக்கிறார்கள், உள்ள நிலை உடலிலே தோன்றி விடுகிற தாதலின். அதிலும் நான் பிறந்த நாட்டிலே பஞ்சத்தாலும், நோயி னாலும், அவற்றின் மூலமாகிய அடிமை நிலையாலும் ஆண்களும் பெண்களும் கண்ணால் பார்ப்பதற்குக் கூசும் படி அத்தனை குரூபிகளா யிருக்கிறார்கள். [இது பாரத நாட்டிலே தற்காலத்தில் விதியாயிருக்கின்றது. இதற்கு விலக்குகள் உண்டென்பது சொல்லாதே அமையும்]. வல்லோர் தீட்டிய சித்திரங்களும், வல்லோர் செய்த பதுமைகளுமே பாரதவாஸிகள் ஸௌந்தரியக் காட்சியை இழந்துவிடாமல் காக்கின்றன. நமது புராதனக் கவிஞர் முதலாயினோரும் நமக்கு இவ் விஷயத்தில் துணை செய் கிறார்கள். இத் தருணத்தில் நமது நாட்டுச் சித்திரத் தொழிலை நாம் பாதுகாக்காமலிருப்போமானால், இன் னும் இரண்டு மூன்று தலைமுறைகளுக்கப்பால் பாரத

நாட்டில் எவருக்கும் கண் தெரியாமலே போய்விடும். நிற்க. சித்திரசாலையிலே கந்தர்வ வடிவங்களைப் பார்த்த போது எனக்கு முன்பு மதன விக்கிரஹத்தைக் கண்ட வுடன் பிறந்த பரவசநிலை பிறக்கவில்லை. ஏனென்றால், கந்தர்வ நாட்டில் தெய்வப் பிரதிமைகளைத் தவிர, மற்றப் பிரதிமைகள், அந்நாட்டுச் சிற்பிகளின் தொழில் வன் மையைக் காட்டுகின்றனவே யல்லாது, அவர்களுடைய உள்ளத்தேட்டத்தை விளக்குந் தகைமை யுடையன வல்ல. எப்படியெனில், பூலோகத்திலே யவன (கிரீஸ்) தேசத்துப் பிரதிமைகள் மிகக் கீர்த்தி கொண் டனவு. இப்பிரதிமைகளைச் செய்த சிற்பிகள் குறைவு பட்ட மனிதவடிவங்களையே பார்த்தவர்களாயினும், தமது உள்ளத்தேட்டத்தால் பரிபூர்ண ஸௌந்தரியத் தைக் கண்டுபிடித்து அதைக் கல்லிலே ஸ்தாபித்திருக் கிறார்கள். இத் தன்மை கொண்ட மேலோரை நாம் நல்ல தொழிலாளிகளென்பது மட்டுமேயன்றி வர புமான்களென்றும், அருட்காட்சி பெற்றோரென்றும் சொல்லுகிறோம். கந்தர்வ லோகத்திலோ ஒவ்வொரு வரும் ஒவ்வொரு விதத்திலே பரிபூர்ண ஸௌந்தரிய முடையவர்களா யிருப்பதால், சிற்பிகளுக்குப் பிரதிபா சக்தியை உபயோகப்படுத்த இடமில்லாமற் போய் விடு கின்றது. நான் அங்கே கண்ட பிரதிமைகள் அள வற்ற வனப்பொடு விளங்கினவென்பது மெய்யே யாகும். ஆனால் அவற்றை யொத்த வனப்புடையவர் களாகவே அந்நாட்டு ஸ்திரீ புமான்களும் விளங்கு கின்றார்கள். என் பக்கத்திலே யிருந்த ஜீவப் பிரதிமை யாகிய பிரிய குமாரியைவிட அழகான பிரதிமை ஒன்று

அகப்படுமா என்று தேடித் தேடிப் பார்த்தேன், கிடைக்க வில்லை.

உணவுக்குப் புறப்பட்டோம். ஐம்புலன்களுக்கும் தெவிட்டாத நல்லின்பம் கொடுக்கும் உலக மாதலால் அங்கு நாப்புலனுக்குச் சிறந்தோர் விருந்து கிடைக்கு மென்றெண்ணி நான் மகிழ்ச்சியோடு சென்றேன். ஓர் பூஞ்சோலைக்கு வந்து சேர்ந்தோம். அங்கு ஓர் குளிர்ந்த லதா மண்டபத்தில் இருந்துகொண்டு குமாரி "ரஞ்ஜன, ரஞ்ஜன" என்று கூவினள். சிறிது தூரத்தி லிருந்து குமாரியின் தம்பியாகிய சித்தாஞ்ஜனன் வந்தான். "எனக்கும் நமது விருந்தாளியாகிய இவருக்கும் உணவு கொண்டுவந்து கொடு" என்றாள். ஒரு விதமாக நகைத்துக்கொண்டு இளைஞன் சென்றான். சில நிமி ஷங்களுக் கப்பால் அவனும் அவனுடைய நண்பன் ஒருவனும் கையில் பொற்றட்டுகள் ஏந்திகொண்டு வந்து அவற்றை எங்கள் பீடங்களுக்கு முன்னே போடப் பட்டிருந்த பளிங்கு மேஜையின் மீது வைத்தார்கள். அவ்வுணவு யாதாயிருக்கலாமென்று ஆவலுடன் பார்த் தேன். கனிகள், கனிகள், கனிகள். கனிகளைத் தவிர வேறொன்றுமில்லை. எனது உள்ளக்குறிப்பை எப் போதும் அறிய வல்லவளாயிருந்த குமாரி பின்வரு மாறு கூற லாயினள் :—

"தோழா, உங்கள் உலகத்தாரைப்போல நாங்கள் உணவிலே மிகுந்த நாட்டம் வைத்துப் பல்வகை கொண்ட சுவைகளைத் தேடுவதில்லை. ஐம்புலன்களிலே நாப்புலன் மற்ற நான்கிற்கும் விரோதி. உணவின்பத்திலே பிரிய

மூடையவர்கள் செவி, கண் என்ற தெய்வப்புலன்களின் பாம ஸுகங்களை நன்கு தேர்ந்து உண்பதற்கு வலி யிழந்து போய்விடுவார்கள். வெறுமே உயிர் நிற்பதற்கு மட்டிலும் நாங்கள் உண்ப தல்லாமல், உணவிலே இன் பம் தேடுவதில்லை. ஆயினும், இக்கனிகளின் சுவை ஸாமான்யமான தன்று. தின்று பார். பிறகு தெரியும்" என்றாள். சுவையிலும் பயனிலும் மிகுந்த அக்கனி களைத் தின்று பசிதீர்த்துக் கொண்டோம். பிறகு மதுக் கிண்ணங்களை சித்தரஞ்ஜனன் எங்கள் முன்பு கொண்டு வைத்தான்.

சித்தரஞ்ஜனன் கொண்டு வைத்த கிண்ணங்களை நான் கையால் தொடவில்லை.

பார்வதிகுமாரி திரும்பிப் பார்த்தாள்.

"எனக்கு வழக்க மில்லை" என்றேன்.

"இது மண்ணுலக மில்லை" என்றாள்.

"உங்கள் நாட்டுக் காற்றும், ஒளியும், குளிர்ச்சி யும், காட்சிகளும் துணைக்கு நீயும்—இத்தனை வகைகள் போதாதா? இத்துடன் மது வேறு குடித்தா அறிவு மயங்க வேண்டும்?" என்று பலவாறு பேசிக் குமாரி யின் வற்புறுத்தலினால் மதுக்கிண்ண மொன்றை வெறுங் கிண்ண மாக்கினேன். இன்பக் களி நிலை பிறந்தது.

இன்பம் ஒரு ஜ்வரம். ஜ்வரத்திலே உஷ்ணம் ஓர் வரை கடந்துவிட்டால் பிறகு குளிர்ச்சி தோன்றி ஜ்வரம் பிறந்து விடுவதுபோலவே, இன்பத்தின் முடிமீது துன்ப மிருக்கின்றது. மேலே பலவாறாக வகுக்கப்பட்ட இன் பங்களும், பிறவும் கண்டேன். நாட்கள் பல கழிந்தன. இப்பொழுது அந்த நாட்களை நினைத்துப் பார்க்கும்

போது ஒருவாறு அத்தின நாட்களும் ஒரு கணம் போலவும், மற்றொரு வகையிலே அந்நாட்களின் ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு இன்ப யுகம் போலவும் புலப்படுகின்றது.

நாட்கள் பல கழிந்தன. குமாரியும் எனது உயிர்த்தோழியாய் விட்டாள். நான் எக்காலத்தும் கனவிலே கூடக் கண்டிராத உள்ளக் கிளர்ச்சியும், சோர்வு, நோய், மனத்தளர்ச்சி, மனத்துயர் என்பவற்றின் முழுமறதியும் ஏற்பட்டன. எனினும், மனது திருப்தி பெறவில்லை. ஏதோ ஒன்று குறைவா யிருப்பது போலவே தோன்றியது. நாளடைவில் கந்தர்வ நாட்டின்பங்கள் கூட, கைத்துப் போகவில்லை, ஆனால் ஸாதாரணமாய்ப் போய்விட்டன. ஆரம்பத்திலிருந்த பாவச நிலைக்கிடமில்லை. கடல், நிலா முதலிய இயற்கை யழகுகளிலே எப்போது லயித்தாலும் பாவசந் தோன்றுமெனினும், கள்ள மனம் அவற்றில் நிலைத்திருக்க வன்மை யிலதாகி நின்றது. ஆ! குமாரியி னிடத்திலே கூட மனம் தொடக்கத்திலே கொண்ட பற்றை நெகிழ்த்து விட்டது.

ஒரு நாட்காலையில் நான் தனியே உட்கார்ந்து கொண்டு பின்வருமாறு யோசிக்கலாயினேன்: "ஆஹா! இன்பக் களஞ்சியமாகிய இந்நாட்டிற்கு வந்தும் கூட நமது மனதிற்குத் திருப்தி விளையவில்லையே. இந்த கந்தர்வ நாட்டிலுள்ளவர்கள் ஒரு நாளைப் போலவே அனுதினம் செய்ததைச் செய்ததைத் திரும்பச் செய்து கொண்டு மகிழ்ந்த முகத்துடனே ஸுகத்தில் வாழ்கிறார்கள். இவர்களுக்கு இதில் அதிருப்தி ஏற்பட்டதாகத் தோன்றவில்லை. நமக்கு மட்டிலுந்தான் எம்

மருந்துக்குந் தீராத மனநோய் பிறந்திருக்கிறது. இதென்ன ஆச்சரியம்!"

நான் இங்ஙனம் சிந்தனை செய்து கொண்டிருக்கையில் குமாரி எங்கிருந்தோ பறந்து வந்து என்னருகே தழுவி வீற்றிருந்தாள். பின், வழக்கம் போலவே எனது உள்ளக்கருத்தை எளிதில் தெரிந்துகொண்டவளாகி எனக்குச் சில அரிய உண்மைகள் கூறுவாளாயினள்.

"தோழா! எங்கள் உலகத்தார் செய்கைகளிலே புதுமை யில்லையென்று நீ வியப்படைகிறாய். மண்ணுலகத்தார் வாழ்க்கையை மறந்துவிட்டாயா? அதில் ஏதேனும் புதுமை யுண்டா? மனித மிருகங்களிலே பாக்கியம் பெற்ற சில மிருகங்கள் வாலிபத்திலேயே இறந்து விடுகின்றன. சில எண்பது தொண்ணூறு நூறு வருஷங்கள் வரை வாழ்கின்றன. எட்டா மாதத் திலே தின்னத் தொடங்கிய சோற்றை எண்பதாம் ஆண்டிற்கூட ஸாதாரணமாகக் கருதுகிறதில்லை. மானுடா, உங்கள் உலகத்திலே வாழ்வோர் சோற்றுக் கும் ஆடைக்குமாகப் பொய் பேசுகிறார்கள்; வஞ்சனை செய்கிறார்கள்; கடிக்கிறார்கள்; எமாற்றுகிறார்கள்; திருடுகிறார்கள்; ஹிம்ஸைகள் செய்கிறார்கள்; கொலை புரிகிறார்கள்; உடலை விற்கிறார்கள்; அறிவை விற்கி றார்கள்; அடிமைகளாகி ஆத்மாவை விற்கிறார்கள்; மானுடா, உங்கள் உலகத்திலே எழைகளா யிருப்போர் பெரும்பாலும் மானமற்ற அடிமைகள். அவர்கள் அற்ப ஸுகத்தின் பொருட்டு எது வேண்டுமாயினும் செய்வார்கள். செல்வரா யிருப்போரில் பெரும்பாலார்

திருடர்கள். உங்கள் உலகத்திலே எளியோரா யிருப் போர் வெறுத்தற் குரிய நீச குணமுடையார். வலியோ ராயிருப்போர் காலால் மிதித்து நசுக்குதற்குரிய தீக் குணமுடையார். அவர்களெல்லாம் செய்ததைத் செய்ததைத் திரும்பிச் செய்யாமல் வேறென்ன செய் கிறார்கள்? உண்டும், உறங்கியும், கடிக்தும் சாகிறார்கள். எங்கள் உலகத்திலே மரணமில்லை, பொய்யில்லை. மேலும், தீய கடிப்பு, நீசப் பாசாங்கு, வேஷம் போடு தல், ஒன்று நினைத்து வேறொன்று பேசுதல்—இந்த மஹா பாதகக் குணமில்லை. இவற்றால் விளையக்கூடிய துன்பங்கள் அனைத்துமில்லை. ஆயினும், உனக்கு எங் கள் வாழ்க்கையிலே திருப்தியுண்டாகாம லிருப்பது ஓர் குற்றமன்று. . எனென்றால், மானுட ஜன்மம் எவ்வ ளவு இழிவுகளுடையதாயினும் ஒரு முக்கியமான விஷ யத்திலே எங்கள் பிறப்பைக் காட்டிலும் சிறந்தது. ஆத் மத் தேட்டத்திற்கு மனிதப் பிறவி மிகவும் ஸௌகரிய மானதாக நிருமைக்கப் பட்டிருக்கின்றது. 'திருப்தி எதிலும் எற்படாதிருத்தல்'—இந்த ஒரு குணமே மனி தப் பிறவிக்குக் காப்பாகவும், அதன் பெருஞ் சிறப்பாக வும் விளங்குகின்றது. மாயா ஸம்பந்தமான எந்த நிலை யிலும் மனிதன் ஸ்திரமின்மை கண்டு அதிருப்தி யடை கின்றான். உங்களிலே பெரும்பான்மையோர் அறி வைப் பலவாறு குழப்பிக்கொண்டு உண்மை நினைப்பே யின்றிப் புழுக்கள் போல மடிவது மெய்யே யாயினும், ஒரு சிலர் பாம நிலை கண்டுவிடுகிறார்கள். தேவர்கள் கூட மோக்ஷ மடைய வேண்டுமாயின் மனித ஜன்ம மெடுத்துத் தீர வேண்டுமென்று நீ கேள்விப் பட்டிருக்

கலாம், அது மெய்ய்ய. உங்கள உலகத்துச சங்கான, சுகன், ஜனகன், கிருஷ்ணன், புத்தன், இயேசு முதலிய வர்களைப் போன்ற அற்புதப் பெரியோர் எங்கள் நாட்டிலே தோன்றுவது ஸாத்திய மில்லை. மாயை விலங்கு ; அதில், எங்களுக்குப் பொன் விலங்கு பூட்டியிருப்பதால் வெறுப்புண்டாவது எளிதன்று. உங்களுக்குக் கோரமான தளைகள் போட்டிருப்பதால் மேலோர் எளிதாக வெறுப்படைந்து விடுகிறார்கள். ஓரிரண்டு மஹான்கள் அத்தளைகளை அறுத்தே தொலைத்து விடுகிறார்கள். ஸ்த்ரீயாகிய நான் முத்தமிடுவதற்கும், பாட்டு கேட்பதற்குமே தகுதியென்று உனக்கு அடிக்கடி தோன்றவும், இப்படி ஓர் பெருந் துறவிபோல வார்த்தைகள் சொல்வ்தைக் கேட்டு நீ இப்பொழுது உன் மனத்திலுள்ளே பெருவியப்பு அடைகின்றாய். எங்கள் நாட்டினருக்கு அறிவுத் தெளிவு ஸஹஜ மாகையால் இந்த விஷயங்கள் எங்களுக்கு ஸுலபமாகப் புத்தியில் பட்டுவிடும். ஆனால், அனுபவத்திற்கு வருவது கஷ்டம். அதற்கு மானுட ஜன்மம் வேண்டும்" என்றாள். எனக்கு இவள் இப்படியெல்லாம் பேசுவதுகூட வியப்பாகத் தோன்றவில்லை. இவ்வளவு பேசுவதுடன் என் மனமாறுபாடுகளையெல்லாம் நிமிஷத்தோறும் அறிந்துவிடும் இந்தக் காதகி, பேச்சு முடிந்தவுடன் ஒன்றும் அறியாத மான்கன்றுபோல விழிப்பதுதான் வியப்பாயிருந்தது.

"கள்ளி, கள்ளி" என்று முன்னுமுன்னுத்தேன். "ஒரு தரம் சிரிக்கஷ விதித்துவிடு" என்று கெஞ்சினள் ; அதாவது பழைய இதழ்ச்சிரிக்ஷை. "நீ என் காதலியன்று,

பெரிய ரிஷிக் கிழவர்" என்றேன். "எல்லாம் ஒன்று
ாலதேவதான்; போ" என்ருள்.

அப்பால் இதழோடு இதழ் பொருந்திப் பல நிமி
ங்கள் உயிர் கலந்திருந்தோம்.

மூன்றும் அத்தியாயம்.

ஸத்ய லோகம்.

அடுத்த நாள் ஸத்திய லோகம் சென்றேன். அங் கே மாசற்ற சூரியப் பிரகாசம்போன்ற ஒளியொன்று பிரகாசித்துக் கொண்டிருப்பதைக் கண்டேன். ஆனால் வானத்தில் சூரியனில்லை. அவ்வுலகத்தின்கண் மத்திய பாகத்தில் ஓர் திவ்ய வடிவம் உட்கார்ந்து கொண்டிருந் தது. அதின் முகத்திலிருந்தே கிரணங்கள் பொங்கி வெளிப்பட்டன. அக்கிரணங்களின் ஒளியே வானத் திலுஞ் சென்று மோதுவது கண்டேன். பல பல திசைகளிலே என் ரதத்தைத் திருப்பிவிட்டேன். அந் நாட்டு ஜனங்களெல்லாம் அவரவர்கள்பாட்டில் மிகு ந்த முயற்சி யுடையவர்கள் போலப் போகிறார்கள். சிற்சில ஜனங்கள் வெயர்க்க வெயர்க்கக் கஷ்டத்துடன் நடந்து செல்லுகிறார்கள். சிலர் என்போல ரதங்களில் ஊர்ந்து செல்லுகிறார்கள். வேறு சிலர் சிறகு புடைத் துக்கொண்டு அதி வேகமாய்ப் பறக்கிறார்கள். சிலர் மலர்ந்த முகத்துடன் போகிறார்கள். சிலர் மிகக் களைப் படைந்தவர் போலக் காணப்படுகிறார்கள். சிலர் திடீர் திடீரென்று வந்து தோன்றி அவ்வொளி பொறுக்க மாட்டாமல் கண்ணைக் கையால் மூடிக்கொண்டு அவ் வப்பொழுதே மறைந்து விடுகிறார்கள். இங்ஙனம் மறைந்து செல்வோர் என்னைப்போலப் புதிதாகப் பார்க்க வந்தவர்களென்றும், இங்கிருக்க முடியாமல்

ஓடி வேறு வேறு உலகங்களுக்குப் போகின்றார்களென்றும் தெரிந்துகொண்டேன்.

சிலர் தேவர்களைப் போலிருந்தனர். அவர்களே மலர்ந்த முகத்துடன் உல்லாஸமாகவும் வேகமாகவும் சுற்றித் திரியும் கூட்டத்தார். என் போன்ற மனித உருவ மூடையோர்களிலேதான் பலர் களைப்புக் காட்டினர். கந்தர்வ லோகத்திற்கு வந்தவுடன் எனக்கு உருவ மாறுபாடு தோன்றியது போல இங்கே உண்டாகவில்லை. ஓடிப்போனவர்களும் மனித வர்க்கத்தினரே யாம். பருத்த தொந்தியுடன் கையில் பொற் காப்புப் போட்டுக்கொண்டு ஒருவன் வந்தான். அவன் ஓவென்றலறிக்கொண்டு ஓடிப்போய் விட்டான். ஒருவன் மனைவி மக்களுடன் வந்து சேர்ந்தான். "இங்கேன் காணும் கூட்டிக்கொண்டு வந்தீர்? இங்கே, கடைத்தெருவா, கிடைத்தெருவா, கோயிலா, குளமா, வேடிக்கையா, விளையாட்டா? ஒரு மண்ணையுங் காணவில்லை. அவனவன் பைத்தியம் பிடித்ததுபோல ஓடிக்கொண்டு திரிகிறான். நான், குழந்தைகளையுங் கொண்டு இங்கே ஒரு கூலாங்கூட இருக்கமாட்டேன். ஊருக்குப் போகலாம் வாரும்" என்று பொதிமாட்டைப் போலிருந்த அந்த ஸ்த்ரீ கத்தினாள். அந்த மனிதன்— "இடி, இரு. இந்த ஒரு காணத்தை மட்டிலும் பார்த்துவிட்டு வருகிறேன், அவஸரப்படாதே" என்றான். "காணமுமாச்சு, மாணமுமாச்சு, புறப்படும்" என்று அவள் ஏதோ கூச்சலிட்டாள். அவன் மனமில்லாவிடினும் அவள் செய்யும் தொல்

லையை எதிர்க்கத் திறனற்றவனைப் மறைந்து விட்டான். இன்னு மொருவன் ஏட்டு மூட்டைகளை ஒரு வண்டியில் சுமத்திக்கொண்டு அங்கு வந்து சேர்ந்தான். மற்றவர் களெல்லாம் என்னிடம் பேசாமலிருக்க, இவன் மட்டி லும் என்னருகே வந்து, "ஏனையா, எடுகளெல்லாம் மிக விசேஷமானவை. ஏதேனும் உமக்கு வேண்டிய தைப் பரிசோதனை செய்து பார்த்து விலைக்கு எடுத்துக் கொள்ளுகிறீரா?" என்று கேட்டான். அவன் பேசிக் கொண்டிருக்கும் போதே, பின்னே நின்ற வண்டியில் நெருப்புப் பிடித்து எடுகள் சாம்பராவது கண்டு, நான், "அதோ, பாரையா?" என்றேன். அந்த மனிதன் வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு ஸத்ய லோகத்தை நிந்தனை செய்து கொண்டே போய்விட் டான்.

இன்னும் எத்தனையோ ஜனங்கள்—மனவுறுதி யில்லாதோர், சித்தத்தைப் புலன் வழியிலே சிதறவிட் டோர், ஸத்யத்தில் மெய்யன்பில்லாது போலி யன்பு பாராட்டும் வேஷதாரிகள், இவர்களனைவரும் வந்து வந்து மறைந்து விட்டார்கள். இது நிற்க. மேற் கூறப்பட்ட ஒரு மனிதனைத் தவிர வேறெவருமே என் னிடம் வார்த்தையாட விலலை யென்று சொல்லி யிருக்கிறேன். கல்விப் பயிற்சிக்குத் துணைவேண்டு மென்று பெரியார் சொல்லுகிறார்கள். அது மெய்யே. ஆனால் உண்மைத் தேட்டத்திற்குத் தனித் தனியே போக வேண்டுமென்று இப்பொழுது தான் கண்டேன். உண்மை தேடப்போகும்பொழுது

துணை கூட்டிக்கொண்டு போகலாகாது. உண்மையைக் கண்டு மீண்ட பின்பு அதைப் பிறருக்குக் கூறலாம். கூறுதல் கடமை. ஆனல், ஆரம்பத்தில் தன்னந்தனி யாகச் செல்லவேண்டும். இன்னொருவனைத் துணையாக அழைத்துச் செல்வாயாயின், அவனுக்கும் உனக்கும் விவாதங்கள் உண்டாகும். 'மாறுபடு தர்க்கம் தொடுப்' பதனல் அறிவிலே கலக்க முண்டாகு மல்லாது, தெளிவு ஏற்படாது. அறிவுத் தெளிவிலேதான் உண்மை தோன்றும். மேலும் இன்னொருவனேடு சேர்ந்து உண்மை தேடப் போவாயானல், அவன் ஒரு பாதையில் இழுப்பான், நீ மற்றொரு பாதையிலே இழுப் பாய். இரண்டி லொன்று யதார்த்தவழியாக இருக் கும். ஆனல் உங்களுக்குள் விவாதம் தீரும் பொருட்டு, நீங்கள் பெரும்பாலும் என்ன செய்வீர்களென்றல், "அப்பா நீ சொல்லியதும் வேண்டாம். நான் சொல் லியதும் வேண்டாம். இரண்டுக்கும் நடுவாக ஒரு வழி யிலே போவோம்" என்று பொது உடன்பாடு செய்து கொள்வீர்கள்.

இந்தப் பொது உடன்பாடு செய்தாலொழிய இரு வருக்கும் திருப்தி யேற்படாது. இந்தப் பொது உடன் பாட்டுப் பாதை உங்களைக் கழுத்து வரை சேறுள்ள குழிகளிலும், எரிகளிலும், மடுக்களிலும், முள்ளிலும், கல்லிலும் பொதி மணலிலுங்கொண்டு இறங்கச் செய் யும். ஆரம்பத்திலே உங்களுக்கு இயற்கையாகக் காணப் படும் இரண்டு பாதைகளில், யதார்த்தப் பாதையை நீக்கிப் பொய்ப் பாதையிலே போனபோதிலும், ஒரு வேளை நல்லது. இறுதி வரையில் போய், அங்கே

தகடிய உண்மையில்லா திருத்தல் கண்டு, மறுபடி மீண்டு நல்ல மார்க்கத்திலே புகலாம். நீங்கள் அப்படிச் செய்யமாட்டீர்கள். உடன்பாட்டுப் பாதை யொன்று கொண்டு அதிலேதான் போவீர்கள். அந்த வழி சூனியத்திலேதான் கொண்டுவிடும். ஞானிகளுடைய "ஸமரஸம்" பிழையென்று நான் கூறியதாகக் கொள்ளவேண்டாம். ஸாமானியர்கள் செய்துகொள்ளும் 'ஒப்பு' அதாவது உடன்பாடு எப்போதும் பிழை என்பதையே வற்புறுத்திச் சொல்லுகிறேன். எனவே, ஸத்ய லோக யாத்திரை செய்வோர் யாரும் வீண் ஸம்பாஷணையிலே காலங் கழிப்பதில்லையென்பதை அறிந்து கொண்டேன். ஆதலால், நானும் பிறர்களைத் தொந்தரவு செய்யலாகாதென்று சும்மா இருந்துவிட்டேன்.

கிரண பரிசோதனையிலே எனக்குப் புத்தி செல்லவில்லை. மத்ய பாகத்திலே யிருந்த திவ்ய வடிவத்தினருகே நேராகப்போய் விடவேண்டுமென்று எனக்குத் தோன்றியது. அப்போது உயர ஓர் தொனி பிறந்தது. அதிலே கவனம் செலுத்தினேன். அது சொல்லிற்று:—

"நடுவே யிருக்கும் உருவமே பிரமன். அது ஸத்ய ஸ்வரூபம். நெடுநேரம் அதனருகே பாய்ந்துவிடுதல் யாராலும் முடியாது. ஒரு கிரணத்தைப் பற்றிக்கொண்டு, அதன் வழியே அணுவணுவாக நகர்ந்து செல்லவேண்டும். ஒரே பாய்ச்சலாகப் பாய முயற்சிசெய்து நீ வீணாசத்தை உடைத்துக் கொள்ள வேண்டாம்" என்று.

எனக்குச் சோம்பர் அதிகம். கிரணங்களோ நெடியவை. இவற்றின் வழியாய் மெல்ல மெல்லப் புழு ஊர்வது போல ஊர்ந்து செல்ல எனக்கு மனம் இணங்கவில்லை.

"நன்று. இப்பிரமன் விஷயத்தைப் பின்பு பார்த்துக் கொள்ளுகிறேன். இப்போது இந்நாட்டைச் சுற்றி ஓமமாக ஓர் வளையமிட்டு வருகின்றேன்" என்றெண்ணித் தேரைப் பிரதக்ஷிணமாகச் செலுத்தினேன்.

சிறிது தொலை கடந்தவுடனே வேறு வர்ணங் கொண்ட ஒளி கண்டேன். அவ்விடத்தினின்று எங்கே பார்த்தாலும் அந்தப் புதிய வர்ணமே காணப்பட்டது. "இதென்ன வித்தை!" என்று பிரமிப்பு அடைந்து அப்பால் சென்றேன். போகப் போக, புதிய புதிய வர்ணங்கள் தோன்றிக் கொண்டிருந்தன.

உண்மை பல வர்ணங்களுடையது என்று தெளிந்து கொண்டேன். நெடுதூரத்தின் பிறகு வடக்குக் கோட்டை வாயிலருகே வந்து சேர்ந்தேன். அங்கிருந்து பார்க்கும்போது மறுபடியும் பிரமனுடைய தெய்விக வடிவம் என் கண்ணுக்கு நேரே எதிர்க்கெதிராக விளங்கிற்று. இதென்ன செய்தி யென்று யோசனை செய்தேன். முகம் முன்பு தோன்றியது போலவேதானிருக்கிறதா என்று கூர்ந்து பார்த்தேன். அப்போது ஒரு புதிய அற்புதங் கண்டேன். நான் எவ்வளவுக்குக் கூர்மையாகப் பார்க்கிறேனே அவ்வளவு அத்திருமுகத்தின் ஒளி அதிகரித்து வரலாயிற்று. சிறிது பொழுதுக் கப்பால் என் கண்கள் கூசத் தொடங்கிவிட்டன. அதினின்றும் கண்களை மீட்டுக்கொண்டேன்.

மறுபடியும் முன் கேட்டது போன்ற ஓர் தொனி பிறந்தது :—

"மானிடா! உண்மை தொடக்கத்தில் தெளிவாகத் தெரிவதுபோலத் தோன்றும். கொஞ்சம் கவனம் செலுத்துவாயானால் கண் கூசத் தொடங்கிவிடும். நீ தளர்ச்சி பெறுமல் ஓர் கிரணத்தைப் பற்றிக்கொண்டு நெருங்கி நெருங்கிப் போவாயாயின், பிறகு கண் வருத்தம் தீர்ந்துவிடும். இறுதியில் நீ அருகே வந்த பிறகு உண்மை உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெற்றெனத் தெளிந்து புலப்படும்."

இதைக் கேட்டவுடனே, எனக்கு ஓர் கிரணத்தைத் தான் பற்றிச் செல்லலாமா என்ற விருப்பம் நிகழ்ந்தது. மறுபடியும் எனது சோம்பர்க்குணம் மனதிலே பிரகாசமாய் விட்டது. "ஐயோ! இந்தச் சோம்பர் என்ற பாவி! மண்ணுலகத்துப் பெருமையையும், பொருளையும் நான் விரும்பிய காலத்தில் இதுதான் வந்து குறுக்கிட்டது. இப்பொழுது விதிவசத்தால், அவ்வித விருப்பங்களெல்லாம் அகன்றுவிட்டன. எனவே, சத்திய லோகத்திற்கு உண்மைத் தேட்டத்தால் வந்து நிற்கும் போதும் அத்தீய சோம்பர் வந்து தொடர்கின்றதே" என்று பலவாறு வருத்த மடைந்தேன்.

அழுதாற் பயனென்ன, தொந்தாற் பயனென்ன? ஒன்றும் ஆவதில்லை. முன்னைச் செய்தது பின்னை விளையும். அவரவர் செய்கைகளின் பயனையே அவரவர் நுகர்தற் குரியர். கர்மதேவதையின் ஆட்சிக்குட்பட்ட இஜ் ஜகத்தில் தத் தம் செய்கைப் பயனுக்கு மேல் ஓரணுக்கூடவேனும் அன்று அதற்கு ஓரணுக் குறையவேனும் உயிர்கள் பெறவொண்ணுது. எனது இயற்

கையிலே சோம்பரை வளர்த்துவிட்டேன். இப்போது அதன் பயனை நுகர்கின்றேன். மண்ணுலகத்துப் பொருளும் பெருமையும் மிக இழிவுடையன வாயினும், அவற்றைக்கூடச் சோம்பால் துறந்திருப்பவன் நற்கதியடையமாட்டான். உழைத்துத் தேடி அவற்றின் இயற்கையை அனுபவித்துப் பார்த்துப் பின்பு துறக்க வேண்டும். பாடுபட்டுத் தேடிப் பணத்தை அடைபவனைக் கவி நிந்தனை செய்யவில்லை! அதைப் போற்றுதற் குரியதோர் பெருமை யுடைய தென்றெண்ணிப் புதைத்து வைப்பவனையே நிந்தை செய்கின்றார். அதை நன்கு செலவிடுகிறான் அல்லது தர்மினியோகம் செய்கிறான் என்பதைப் பற்றி இங்கு விவகார மில்லை. அது வேறு விஷயம். அதைத் தேடிக் கண்டு அனுபவித்துணர்ந்த பிறகுங்கூட அதன் சிறுமையை அறிந்து வெறுத்துத் தள்ளிவிடாமல், அதில் மேன்மேலும் ஆசைகொண்டு ஆதரிப்பவனே, கேடுகெட்ட பாவியாவானென்று கவி சொல்லுகிறார்.

ஆம். மண்ணுலகத்துப் புலப்பொருளைக் கூடச் சோம்பால் பிரிந்திருப்பவன் புகழ்ச்சிக் குரியவனாகமாட்டான். இடைவிடாத உழைப்பினாலேதான் அண்டபஹிரண்டங்கள் இயங்குகின்றன. சோம்பு காசத்துக்கு முற்குறி. சோம்பர் அழிவுக்குக் காரணம். யமபடர்கள் மூதேவியின் மக்கள்.

சிறிது நேரம் ஆலோசனை செய்துகொண்டிருந்துவிட்டு, "இந்த மூடத் திகைப்புக்கும், சித்த சலனத்திற்கும், சோம்பருக்கும் இடங் காலாகாது. இனி நமது

வாழ்நாளை ஸத்ய நாட்டத்திலேதான் செலவிடவேண்டும்" என்று நிச்சயம் செய்து கொண்டேன். அப்போது மனம் சொல்வதாயிற்று :—"கந்தர்வ லோகத்திலே யிருந்த ஸுகம் இங்கே யுண்டா? ஆஹா! அதிலே நாம் சலிப்படைந்தது பிசகென்று இப்பொழுதுதான் தெரிகிறது. மீண்டும் அங்கே போகலாம் வா. உனக்கு அந்நாட்டு இசையும், வாஸனும், நீரும், ஒளியும், மலரும், மாதரும் தந்த இன்பங்களைக் காட்டிலும் அதிகமாகவா இந்தக் கிராமூர்க்கன்ற ஆமைத்தொழிலிலே கிடைக்கப் போகின்றது?" இது கேட்டு, ஒரு க்ஷணம் மறுபடி சலன மடைந்தேன். பின் பூர்வ கர்மப் பயனால் எனக்கு என்று மறியாத தைரியம் பிறந்தது.

"மனமே! உன்னை அறிந்து விட்டேன். எனது நன்மைக்கெல்லாம் நீ கேடு சூழ்வாய். எனக்கு வருந்தீமைகளுக்கெல்லாம் நீ உபகாரம் செய்வாய். இதோ உன்னைக் கொன்று விடுகிறேன் பார்" என்று, அதன் கழுத்திலே கைபோட்டு விட்டேன். மனம் கோ கோ வென் றலறிற்று. அப்போது மறுபடியும் ஆகாசத்திலிருந்து பின்வரும் வாக்குப் பிறந்தது :—"மானிடா, வீண் முயற்சி செய்யாதே. மனதை உன்னால் கொல்ல முடியாது. மனங்கடந்த நிலையிலே நீ தாகத்துடன் பாயும்போது அது தானாகவே மடிந்து சூனியமாகி விடும். அதற்கு உனக்குப் பக்குவம் வரவில்லை. அது வரை நீ எது செய்தாலும் மனம் சாகாது. மேலும் நீ உனது யாத்திரையை விரைதார்த்தமாகத் தொடங்கினாய். வேடிக்கை பார்க்கவந்தவனைக்கு ஸக்தியம் பிறப்

படாது. கந்தர்வ நாட்டிலே போய் இன்பங் கண்டது போல இங்கும் உண்மையை எளிதில் கண்டுவிடலா மென்ற பேதைமை யெண்ணத்தை விட்டுவிடு. நீ பாக்கியவானாதலால், உனது தேர் நீ முன் கண்ட வேறு பலரின் தேர்களைப்போல, இங்கிருந்து தூரத்துண்ணு மல், இங்கே நிற்பதற்கும், ஸஞ்சரிப்பதற்கும் வசிமை யுடையதா யிருக்கிறது.

மேலும், பூ, புவ, ஸ்வ, மஹ, ஜன, தப என்ற ஆறுலகமும் கடந்துவந்த ஜீவர்களை ஸத்யலோகத்தில் தரித்து நிற்கமுடியும். நீ வாபுருஷ ஞதலால் உனக்கு அத்தனை கஷ்டம் வேண்டுவதில்லை. நீ ஒருமுறை தர்ம லோகத்திற்குப் போய், அங்கே உள்ள அனுபவங்களை அறிந்து வா. அப்பால் உனக்கு இப்போது நேர்ந் துள்ள உண்மை நாட்டம் பயன்பெறும். தர்மலோகத் திலே மனம் இறந்து போகாவிடினும், நீ விதிக்கும் கட்டுப்பாடுகளுக் கெல்லாம் அடங்கி உனக்குத் தொண்டுபுரியும். பின் இங்கு வந்தாயானால், மேல் நடக் கும் செய்திகளை நீயே அனுபவத்தில் தெரிந்து கொள் வாய். போய் வா'' என்றது.

கண்கள் சுழன்றன. சிறிது நேரம் மயக்கமுண்டா யிற்று. பின் மயக்கம் தெளிந்தது. கண்ணை விழித்துப் பார்த்தேன். மறுபடி மண்ணுலகத்திலே, திருவல்லிக் கேணி வீராகவ முதலி தெருவில், கிழக்கு முகமுள்ள வீட்டு மேன்மாடத்தில்,—நானும் என் பக்கத்திலே சில வர்த்தமானப் பத்திரிகைகள், எழுது கோல், வெற்றிலை, பாக்கு முதலிய என்னுடைய பரிவாரங்களும் இருப் பது கண்டேன்!

நாலாம் அத்தியாயம்

மண்ணுலகம்.

எனக்குத் தலைநோவு பலமா யிருந்தது. படுக் கையை விட்டுறங்கிக் கிழக்கே இரண்டு மூன்று சந்து களுக்கப்பால், ஏதோ பெயர் மறந்துபோன தெருவில், நான் கூலி கொடுத்து வாஸம் செய்து கொண்டிருந்த வீட்டிற்கு வந்து சேர்ந்தேன். அந்த வீட்டைக் கொஞ் சம் வர்ணிக்கலாமா? கந்தர்வ நாட்டைப் பற்றிக் கேட் டீர்களே! இந்த மண்ணுலகத்தில் நமக்குள்ள வஸதி யங்களைப் பற்றிச் சிறிது கேளுங்கள்.

நானிருந்த வீட்டிற்கு முன்பக்கத்திலே ஓர் கூட மும் அதைச் சுற்றி இரண்டு மூன்று அறைகளும் உண்டு. மேற்கே பார்த்த வீடு. அந்தக் கூடத்திற்குத் தென் புறத்திலே ஒரு முற்றம். இது முன் பகுதி. பின் பகுதி யிலே சில அறைகள். ஒரு முற்றம். மேல்மெத்தை. அதில் இரண்டறைகள். இவ்விரண்டு பகுதிகளுக்குப் பொதுவாகத் தென்பாரிசத்திலே கொல்லைப் புறத்தில் ஓர் கிணறும் தண்ணீர்க் குழாயும் உண்டு. பின் பகுதி யில் நான், என் சிறிய தாயார், மனைவி, மைத்துனிப் பெண், தம்பி, எனது குழந்தை ஆகிய அறுவரும் வசிப்பது. முன் பகுதியில் ஒரு ராயர் பெரிய குடும்பத் தோடிருந்தார். அவருக்குப் பகல் முழுதும் உழைத் துக் கொண்டிருக்கும்படியாகத் தபால் கச்சேரியிலோ, எங்கேயோ, ஓர் உத்தியோகம். உடம்பிலே கோபி

மண் முத்திரைகள் எத்தனையோ, அத்தனை குழந்தைகள். அவர் மனைவி மறுபடியும் கர்ப்பம். அந்த முற்றத்திலேயே ஒரு பசுமாடு. இத்துடன் ஒட்டுக்குடியாக அவருடைய பந்துக்கள் சிலர் வஸித்தார்கள்.

நான் இருந்த பகுதியிலேனும் மேன்மாட மென்று ஒன்றிருந்தபடியால், கொஞ்சம் காற்று வரும். ராயர் கூட்டத்தாருக்கு அது கூடக் கிடையாது. இரவிலே கொசுக்களின் தொல்லை பொறுக்கமுடியாது. எனக்குத் தூக்கமே வராது. ராயருக்குக் காச நோயாதலால் அவர் இருமிக்கொண்டே யிருக்கிற சப்தம் ஓயாமல் கேட்கும். அவருடைய குழந்தைகள் ஒன்றுமாற்றி மற்றொன்று அழுதுகொண்டே யிருக்கும். கர்ப்பிணி யாகிய அவர் மனைவி இடையிடையே விழித்துக் குழந்தைகளையோ, அல்லது கடவுளையோ அல்லது ராயரைத் தானே, யாரையோ கன்னட பாஷையிலே திட்டிவிட்டு மறுபடியும் உறங்கி விடுவாள்.

ராயர் வீட்டு விஷயங்கள் இவ்வாறிருக்க, நமது வீட்டுச் சம்பிரமங்கள் இதைக் காட்டிலும் விசேஷம்.

கதையை இடையிலே விட்டு விட்டேனே. வீராகவ முதலி தெருவிலிருந்து வீட்டிற்கு வந்தேனே? வரும் வழியிலே "ஜட்கா" வண்டிகள், "துரை" கள் போகும் "கோச்சு" கள், புழுதி, இரைச்சல், துர்நாற்றம், இவற்றை யெல்லாம் கடந்து, மூன் பகுதியிலே பசுமாடு, ராயர் வீட்டம்மாள், குழந்தைக் கூட்டங்கள் முதலிய விபத்துக்களுக்கெல்லாம் தப்பிப் பின் புறத்திலே "மெத்தை" க்கு வந்து சேர்ந்தேன். அங்கே,

எனது படுக்கை, படிப்பு, எழுத்து, பகலில் ஸ்நேஹிதர்கள் வந்தால் அவர்களுடன் ஸல்லாபம் முதலிய காலாயிர விஷயங்களுக்கு உபயோகப் படுத்தப்பட்ட அறையின் வெளிப்புறத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு என் மனைவியைக் கூப்பிட்டேன். அவள் வந்து எனென்றாள். "தலைநோவு பொறுக்க முடியவில்லை. கொஞ்சம் மிளகு அரைத்துக்கொண்டு வா" என்றேன். "ஆமாம்; இரண்டு காளைக்கொரு முறை இதொரு பொய்த் தலைவலி வந்துவிடும், என்னை வேலை யேவுகிறதற்காக. அதெல்லாம் சரிதான். பால்காரி வந்து மத்யானம் பணம் கேட்டுவிட்டுப் போனாள். ராயர்வீட்டு அம்மாள் குழிக்கூலிக்கு ஞாபகப்படுத்தச் சொன்னாள். ராயர் நேற்றே சொன்னாராம். இந்த மாதம் குழந்தைக்குக் காப்பு வாங்க ரூபாய் தருவதாகச் சொல்லி யிருந்தீர்கள். என்னைத்தான் எமாற்றுகிறது வழக்கமாகவே போய்விட்டது"; இன்னும், அது இது என்று ஆயிரங் கணக்கு சொன்னாள். அன்று மாலை அவள் சொல்லிய கணக்குகளை எல்லாம் தீர்க்கவேண் மானால் குறைந்தபக்ஷம் மூன்று லக்ஷம் ரூபாய் வேண்டும் என்று என் புத்திக்குப் புலப்பட்டது. கடைசியாக "தெருவிலே போகிற நாய்களுக்கெல்லாம் பணத்தை வாரி யிறைக்கிறது; வீட்டுச் செலவைப்பற்றிக் கேட்டால் முகத்தைச் சுளிக்கிறது; இப்படிச் செய்து கொண்டே வந்தால், அப்புறம் என்ன கிடைக்கும்? மண் தான் கிடைக்கும்" என்று ஆசீர்வாதம் பண்ணிப் பிரசங்கத்தை முடித்தாள்.

"தலைநோவு தீர்ந்துபோய்விட்டது. நீ தயவு செய்து கீழே போகலாம்" என்று வணக்கத்துடன் தெரியப்படுத்திக் கொண்டேன்.

"ஆமாம்! ஊர்க்காரர் கூட வெல்லாம் ஓயாமல் பேசித் தொண்டைத் தண்ணீரை வற்ற வைத்துக் கொண்டிருக்கலாம். நான் ஒரு வார்த்தை பேசவந்தால் உடனே கோபம் வந்துவிடும்" என்றாள். அவள் மனதில் என்னை ஸமாதானப் படுத்துவதாக எண்ணம். அப்பால், பல தினங்கள் கழிந்த பின்புதான், நான் தர்மலோக யாத்திரை செய்வதாகத் தீர்மானம் செய்து வைத்திருந்தேன். இடையே நிகழ்ந்த சிற்சில ஸம்பவங்களும், காலதேச வர்ணனைகளுமே இங்கே எழுதப் படும். மண்ணுலகம் மிகப் பெரிது. அதில் என் அனுபவ முழுவதையும் எழுத வேண்டுமானால் மஹாபாரதத்தைப் போலப் பதினெட்டு மடங்கு புஸ்தகமாகும். இங்கு ஓரிரண்டு 'மாதிரி ஸீன்'களே குறிப்பிடப்படும்.

உ0-ம் தேதி.—குழந்தைக்குக் காய்ச்சல். மனவிக்குக் காதுவலி. எனக்குப் பித்தக் கிறுகிறுப்பு.

உக-ம் தேதி—தம்பிக்குப் பாடசாலைச் சம்பளம் கொடுக்கவேண்டிய கடைசி நாள். நான் காரியஸ்தலத்திலிருந்து பணம் கொண்டுவந்து வைக்க மறந்து விட்டேன். அவன் அதுபற்றிப் பாடசாலைக்குப் போவதையே நிறுத்தி விட்டான். நான் சுதேசிய விஷயத்தில் ஊக்கத்துடன் பாடுபடுவதன் பொருட்டாக,

என்னை எப்போதும் கவனித்து வரும்படியாக ராஜாங் கத்தாரால் அனுப்பப்பட்ட ஒற்றர்கள் எனது தம்பி யிடம் செய்த ஸம்பாஷணையில் " உம்முடைய அண்ண னது சினேகிதரான இன்னாரை ராஜாங்கத்தார் பிடிக் கப் போகிறார்கள் " என்ற மங்கள ஸமாசாரம் சொல்லி விட்டுப் போனதாகத் தம்பி வந்து சொன்னான்.

உ உ-ம் தேதி.—மனவிக்கும் சிறிய தாயாருக்கும் மனஸ்தாபம் வந்துவிட்டது. ஒருவரை யொருவர் மாற்றி என்னிடம் பிழைகூறத் தலைப்பட்டார்கள். என் ஜீவதர்மமாகிய 'சுதேசியம்' தப்பு முயற்சியென் றும், வீணென்றும், அதில் நான் தலையிட்டதிலிருந்து குடும்பத்துக்குப் பற்பல கேடுகளுண்டாகு மென்றும் சிறுதாயார் ஸன்மார்க்க போதனை செய்தாள். என் மூக்கில் அடிக்கடி ஒரு வித ஊறுதல் உண்டாவது போலத் தோன்றிற்று. அது ஓர் பொல்லாத நோயா யிருக்குமோ வென்ற மூடத்தனமான கவலை கொண் டேன். அக் கவலையிலிருந்து மனதை அடிக்கடி திருப் பியும், மனம் மீட்டும் மீட்டும் அதில் போய் விழுந்தது.

உஉ-ம் தேதி—வெற்றிலையில் சுண்ணாம்பு அதிக மாகச் சேர்ந்து விட்டபடியால், வாயெல்லாம் புண் ணாய்ப் போய்விட்டது. வாய்க்குள் ஜலம் விடுவதற்குக் கூடத் தகுதியில்லை. எனக்கு ஸாதாரணமாகவே உழைப்பு அதிகமாதலால், அத்துடன் சோறும் விழுங்க முடியாமற் போகவே, சோர்வும் முகக் கடுகடுப்பும் அதிகப்பட்டன. இத்யாதி, இத்யாதி.

நாள் தவறினாலும், இந்தக் கணக்குத் தவறுவதில்லை. சீச்சீ! இந்த மண்ணுலகம் ஓரிடமா? இதில் மனிதன் வசிக்கலாமா? ஆமைகளும் நாய்களும் வாழலாம். இது துன்பக் களம். இது சிறுமைக் களஞ்சியம். இது நரகம். இதில் வெறுப்படையாத மனிதர்களின் முகத்திலேகூட விழிக்கலாகாது.

வீட்டு வியாபாரங்களையும் எனது சொந்த வர்த்தமானங்களையும் குறித்துச் சில திருஷ்டாந்தங்கள் காண்பித்தேன். இனி, வெளி வியாபாரங்கள். எனது மித்திரர், அயலார் முதலியவர்களின் செய்திகள் ஸம்பந்தமாகச் சில திருஷ்டாந்தங்கள் காண்பிக்கிறேன். திருவல்லிக்கேணியிலே "செ.....ஸங்கம்" என்பதாக ஓர் தேசபக்தர் ஸபை உண்டு. அதில் தேசபக்தர்கள் தான் கிடையாது. நானும் சிற்சில ஐயங்கார்களுமே சேர்ந்து, "காரியங்கள்"—ஒரு காரியமும் நடக்கவில்லை—நடத்திவேம். நாங்கள் தேசபக்தர்கள் இல்லையென்று, அந்தச் சபை ஒன்றுமில்லாமற்போனதிலிருந்தே நன்கு விளங்கும்.

நான் சோம்பருக்குத் தொண்டன். எனது நண்பர்களெல்லாம் புளியஞ்சோற்றுக்குத் தொண்டர்கள். சிலர் மட்டிலும் பணத்தொண்டர்; 'காலணா'வின் அடியார்க்கும் அடியார்.

ஆனால், எங்களிலே ஒவ்வொருவனும் பேசுவதைக் கேட்டால் கைகால் நடுங்கும்படியாக இருக்கும். பணத்தொண்ட ரடிப்பொடி யாழ்வார் எங்களெல்லோரைக்

காட்டிலும் வாய்ப்பேச்சில் வீரர். ஒருவன் வானத்தை வில்லாக வளைக்கலா மென்பான். மற்றொருவன் மனிலாக் கயிறுகத் திரிக்கலா மென்பான். ஒருவன் "காம் இந்த 'ரேட்'டில்—இந்த விதமாகவே—வேலை செய்து கொண்டு வந்தால் ஆங்கிலேயரின் வர்த்தகப்பெருமை ஆறுமாதத்தில் காற்றாய்ப் போய் விடும்" என்பான். மற்றொருவன் "சியாம்ஜி கிருஷ்ணவர்மா ஸ்வராஜ்யம் கிடைக்கப் பத்து வருஷமாகுமென்று கணக்குப் போட்டிருக்கிறார். ஆறு வருஷத்தில் கிடைத்து விடுமென்று எனக்குத் தோன்றுகிறது" என்பான். தவிர யுருவங் கொண்ட மூன்றாமொருவன்:—"ஆறு மாதமென்று சொல்லடா" என்று திருத்திக் கொடுப்பான்.

ப..... ஆழ்வார் எங்களிலே முக்கியஸ்தர். அவர் இதை எல்லாம் கேட்டுப் பரமானந்தமடைந்து கொண்டிருப்பார். ஆனால், ஒரு தேவதை அவரிடம் வந்து, "உங்களுக்கு நான் ஸ்வாராஜ்யம் நாளை ஸூர்யோதயத்திற்கு முன்பு ஸம்பாதித்துக் கொடுக்கிறேன். நீ உன் வீட்டிலிருந்து அதற்காக ஒரு வாகன் எடுத்துக் கொண்டுவா" என்று சொல்லுமாயின், அந்த ஆழ்வார், "தேவதையே, உனக்கு வந்தனம் செய்கிறேன், ஓம் சக்த்யை நம:, ஓம் பாயை நம:, இத்யாதி; அம்பிகே, இந்த உபகாரத்திற்கு நாங்கள் உனக்கு எவ்வாறு நன்றி செலுத்தப் போகிறோம்? எங்கள் உடல், பொருள், ஆவி மூன்றும் உன்னுடையதே யாகும். ஆனால், ஒரு வாகன் கேட்ட விஷயத்தைப்பற்றி நான் ஒரு வார்த்தை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதைக் கேள். நீ சொல்லுகிற காரியமோ பொதுக் காரியம். அதற்குப் பெதுஜனங்கள் பணம் சேர்த்துக் கொடுப்பதே பொருத்த முடையதாகும். நான் ஒருவன் மட்டிலும் கையிலிருந்து பணம் செலவிடுதல் பொருத்த மன்று. இவ்விஷயத்தைப்பற்றி நாங்கள் அடுத்த வாரம் கூடப் போகிற 'மீட்டிங்'கில் பேசித் தீர்மானம் செய் கிறோம். அதன் பிறகு நீ பெருங் கருணையுடன் எழுந் தருள வேண்டும். இப்போது போய் வருக. வந்தே மாதரம் என்று மறுமொழி சொல்லி யனுப்பிவிடுவார்.

ஐயோ! என்ன உலகமடா, இந்த மண்ணுலகம்! ஒழியாத ஏமாற்று, ஒழியாத வஞ்சனை, ஒழியாத கவலை. ஸார மில்லை, ஸத்துக் கிடையாது; உள்ளூரப் பூச்சி யரித்துக் குழலாயிருக்கும் வாழ்க்கை. ஒவ்வொரு வனும் மற்றவன் மீது பழி கூறுகின்றான். ஒவ்வொரு வனும் தன்னிஷ்டப்படி விட்டுவிட்டால் எல்லாம் நேராக நடக்குமென்ற நம்பிக்கையுடனே தான் இருக் கிறான். ஆனால் "நான் ஒருவன் சரியாக இருந்தால் போதுமா? மற்றவர்களை நம்புவதற் கிடமில்லையே" என்று நினைக்கிறான். பிறரை நம்புவதற் கிடமில்லை யென்றெண்ணி ஏமாற்றுகிறான். ஐயோ, மூடா! நீ ஏமாற்றுவதனால், முன்னைக்காட்டிலும் பரஸ்பர நம்பிக் கை அதிகரித்து விடுமென்று நினைக்கிறாய்? மனித ஜாதிக் குத் தீராத நோய் ஒன்று பிடித்திருக்கிறது. மாறாத சாபம். இறங்காத விஷம். இதன் பெயர் பணம்.

இப் பேய்க்கு வணங்கும்படி அவனைத் தூண்டி விடுவது விருப்பம். அதாவது ருசி நீங்கிய விருப்பம்;

அறிவற்ற விருப்பம். ருசி ஸஹிதமான விருப்பமுடை யோர் கந்தர்வர்கள். அறிவு ஸத்யலோகக் கருவி.

இன்னும் எத்தனையோ காட்சிகள் மண்ணுலகத்தி லிருந்து எடுத்துக் காட்ட வேண்டுமென்ற எண்ணம் எனக்கு இருந்தது. ஆனல், பயனற்ற இவ்வுலகத்தைப் பற்றி அதிகமாக விஸ்தரிப்பது பயனுடைய காரியமாகாது என்பது கருதி இத்துடன் நிறுத்தி விடுகின்றேன்.

ஐந்தாம் அத்தியாயம்

தர்மலோகம்.

சில தினங்களின் பிறகு, ஒரு நாள் ஞானரதத்தில் ஊர்ந்து தர்மலோகத்திற்குப் போனேன். கந்தர்வலோகத்திற்குப் போனவுடன் தேரிலிருந்து இறங்கியதேச்சையாகத் திரிந்ததுபோல, இங்கும் ஸஞ்சரிக்கலாமென்று கருதித் தேரை விட்டு இறங்கினேன். அப்போது, தெளிந்த வதனமும், அகன்ற அடங்கிய விழிகளும், கருமையாகச் சுருள்கள் அமைந்த தாடியும், வலக்கையிலே ஒரு சுவடியும் கொண்ட ஒரு வாலிபன் என் முன்னே வந்து, "தேரை விட்டிறங்க வேண்டாம். அதிலேயே இரு; நானும் ஏறிக் கொள்ளுகிறேன். உன்னுடன் வந்து உனக்கு இந் நாட்டின் விஷயங்களைக் காண்பிக்க வேண்டும் என்று எனக்குத் தர்மதேவதையின் கட்டளை" என்றான்.

நான் அவனைக் கண்டவுடனே, அவனிடம் எனக்கு ஒருவிதமான அச்சமும் மதிப்பும் ஜனித்தன. அவனைப் போன்ற துணைவன் இருந்தால் பல அரிய விஷயங்கள் தெரிவதுடன், நற்கதியும் பெறலாம் என்று எனக்கு எக் காரணத்தாலோ மிக நிச்சயமாகத் தோன்றியது. அந்த வாலிபன் தேர்மீது வந்து ஏறிக்கொண்டான். பாதபடியும் அவனை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தேன். ஆஹா! என்ன அற்புத வடிவம்! அவன் தேகத்திலே ஒரு சுருங்கல் கிடையாது. ஒரு கோணல் இல்லை.

அவனது அங்கங்களெல்லாம் தத் தம் இயற்கைய வுக்குச் சிறிதும் மாறுபடாமல் கனித தேவதையால் அமைக்கப்பட்டன போன்று விளங்கின. உடல் முழு தும் ஒரு பிரகாசம் காணப்பட்டது. அது கந்தர்வ லோகத்தவரிடம் காணப்பெற்ற மயக்குந் தன்மை கொண்ட 'லாஹிரி'ப் பளபளப்பு அன்று; இயற்கை யின் திகழ்ச்சி. பிரகிருதியிலே, மலர், செடி முதலிய தத் தம் கடமைகளை நோ்மையுறச் செலுத்தும் பொருள் களிலே, ஓர் விதமான திகழ்ச்சி தெரிய வில்லையா? அவ்வகைப் பட்டது. சாஷ்டாங்கமாக அவன் பாதத் தில் விழுந்து வணங்கினேன். அவன் "தர்மம் சர," (அறத்தை ஒழுகு) என்று ஆசீர்வாதம் செய்தான்.

பின்பு, "மகனே, என் பெயர் தபஸ். நான் இந் நாட்டில் வழி காட்டும் தொழில் உடையவன். அவரவர் கள் எவ் வெத் தருமங்களைக் காண விரும்புகிறார்களோ அவ்வவற்றைக் காட்டுவேன். திமிங்கில முதல் புழு வரை ஒவ்வோருயிர்க்கும் அததற் குரிய தருமங்கள் உண்டு. நட்சத்திரங்கள் சூரிய சந்திரன் முதலாக அணுக் கள் வரை ஒவ்வொரு வஸ்துவுக்கும் உரிய தர்மங்க ளுண்டு. மேலும், ஒன்றிற்கே காலதேச வர்த்தமானங் களுக்குத் தக்கபடி தருமங்கள் மாறுபடுகின்றன. அவற்றையெல்லாம் ஒவ்வொன்முகப் பார்த்துக் கொண்டு வரவேண்டுமானால், பதினாயிரம் வருஷங்கள் போதா. ஆதலால், நீ எந்த தர்மங்களை முக்கியமாக அறிய விருப்பமுள்ளது என்று குறிப்பிடுவாயோ, நான் அவற்றைமட்டும் உனக்குக் கொண்டு காட்டுவேன்.

வேறு பல விஷயங்களையும் நீ பொதுப்படையாகப் பார்த்துக்கொண்டு போகலாம்" என்று கூறினன். அதற்கு நான், "முனிவரே, நான் பிராமண தருமத்தையும், க்ஷத்திரிய தருமத்தையும் அறிய விரும்புகிறேன்" என்றேன்.

"நல்லது, என்னுடன் வா; பிரதமத்திலே அறக்கடவுளின் ஆலயத்தில் போய் வழிபாடு செய்துவிட்டு வாலாம்" என்றான். இருவரும் உடன் சென்றோம்.

இடைவழியில் என்ன பொருள்கள் உள்ளதென்பதைப் பார்க்கக்கூட முடியாதபடி கண் மூடித் திறக்கு முன்பாகத் தூய்ய வெண்மை நிறங்கொண்ட ஸ்படிகத்தால் மிக விசாலமாகக் கட்டப்பட்ட ஓர் ஆலயத்தினருகே வந்து சேர்ந்தோம். பின்புறத்திலிருந்திறங்கித் தபோமுனி முன் செல்ல, நான் அவரைத் தொடர்ந்து, அவ்வாலயத்துக்குள்ளே இருவரும் புகுந்தோம். "ஜய தர்மராஜாய, ஜய யமாய, ஜய வைவஸ்வதாய, ஜய ஸூர்யதேஜஸ்வினே, ஜய மஹோக்ராய, ஜய மஹாசாந்தாய," என்ற ஒலிகள் கேட்டன. என் மனம் திடுக்கிட்டது. கை கால்கள் நடுங்கின. உடம்பெல்லாம் வெயர்த்து விட்டது. பதறிப்போய், "முனிவரே, எங்கே அழைத்துச் செல்லுகிறீர்?" என்று கேட்டேன். "யம ஸன்னிதானத்துக்கு" என்றார். "என்? ஐயா? எதற்கு" என்று அலறினேன். முனிவர் என் பக்கமாகத் திரும்பி என் மெய்யைத்தடவித் தமது விசாலமான அருள்

விழிகளின் பார்வையை எனது கண்களிலே செலுத்தி, "அஞ்சாதே, அறத்துக்கு அஞ்சலாமா?" என்றனர். எனது பொறுத்தலரிய பயம் தெளிந்துவிடும்போல் இருந்தது. அதற்குள் மூர்ச்சை போய் விழுந்துவிட் டேன். அப்போது சில கனவுகள் கண்டேன்.

ஆ! என்ன தீய கனவுகள்! பெரிய பெரிய "புழுக்கள் வந்து என்னை விழுங்குவதுபோலிருந்தது. ஐயோ! என்ன பாதகம் செய்தோ நரகத்தில் வந்து விழுந்து விட்டேன். நரகத்தில் நெருப்பால் சுடுவார் கள், அங்கத்தை யெல்லாம் வெட்டி வெட்டிச் சித்திர வதை செய்வார்கள் என்று சொன்னார்களே! அப்படி யெல்லாம் செய்தாலுங்கூட நான் பொறுத்திருப் பேனே, பொறுக்கமுடியாத அசுசி கொண்ட உயிர் களுக்கும் பொருள்களுக்குமிடையே என்னைப் போட்டு இம்சை செய்கிறார்களே! ஈசா, அசுத்தமான எண்ணங் கள் எண்ணியதற்கும், அசுத்தமான வஸ்துக்களை விரும் பியதற்கும் இதுவா தண்டனை! ஐயோ! அந்த நாளில் தெரியாமற் போய்விட்டதே. உற்றார், நண்பர்கள், அயலார், எல்லோரும் அசுத்த சிந்தைகளில் ஆழ்ந்திருந்த படியால், அவர்களுடைய ஸஹவாஸத்தாலல்லவோ, நானும் கெட்டுப்போய் விட்டேன். எனக்குத் தெரி யாதே," என்று கூவினேன்.

"அதோ, அதோ, அதோ பார்! எனக்குத் தெரிந் தவர்களாக எத்தனையோ பேர் வந்து நான் படும்பாடு களையே அனுபவித்துக் கொண்டு கிடக்கிறார்கள். சிலர் என்னைக் கண்டு வெட்கமடைகிறார்கள். ஓர் பிரமாண்ட

மான சங்குப் பூச்சியின் கொப்புகளின்கீழ் முகத்தை மறைத்துக் கொள்கிறார்கள். சிலர் என்னைக் கண்டு அழுகிறார்கள். அப்பப்பா! நத்தை, நண்டு, பாச்சை, பல்லி—எல்லாம் பெரிய பெரிய ஆகிருதி—இவற்றினிடையேயும், இவற்றைக் காட்டிலும் அசுத்த வஸ்துக்களினிடையேயும், நான் கண்ட அனுபவங்களை இங்கே எழுதவும் கூச்சமுண்டாகிறது. மானிடர்களே! அசுத்த எண்ணங்களை நீக்குங்கள். அன்பிலால் சொல்லுகிறேன். அசுசியான சிந்தனைகள் வேண்டாம். ஈசா, அனலிலே போடும், என்னை அனலிலே போடும். எனக்கு இந்த நிலை போதும், போதும். இனிப் பாவம் செய்யமாட்டேன்" என்று கூறி விம்மி விம்மி அழுதேன்.

"பின் பார்க்கிறேன். என்னை மற்றோரிடத்தில் போட்டிருந்தார்கள். என்மேலெல்லாம் நோய்கள் தோன்றி இருந்தன. கரிய குஷ்டம், யானைக்கால், பகூ வாதம், சூலையம், குன்மம்; ஒன்று, இரண்டா? உடலிலே பிரியங்கொண்டு, அதன் போஷணைக்காக அதர்மங்கள் செய்யும் மூடர்களே, உங்களை எச்சரிக்கின்றேன். ஐயோ! என் கெடுகிறீர்கள்?"

சிறிது நேரம் கழிந்தது. நெருப்புக்குள்ளே என்னைச் சில பிசாசுகள் கொண்டு தள்ளின. ஆரம்பத்தில் அனல் வந்தாலும் பெரிதில்லை என்று எண்ணிய நான் அனற்குழியைக் கண்டவுடன், கால்களால் உதைத்தும், பல்லாற் கடித்தும், கையால் மோதியும் அந்தப் பிசாசுகளிடமிருந்து திமிறிக்கொள்ள முயன்றேன். "ஐயோ! அவைகளுக்குத்தான் என்ன பலமடா?

என்னை ஒவ்வொரு நெருப்புக் குழியாக முறையே போட்டுப் போட்டு எடுத்தன. மேல் தபிக்கிறதே, அங்கங்களெல்லாம் வேகின்றனவே. ஐயோ, வெட்டி வெட்டி ஆட்டிறைச்சையைத் தொங்கவிடுவதுபோல் எனது கைகளையும், கால்களையும் தொங்கவிடுகிறார்களே, என் முண்டத்தைத் தீப்பாறைகளில் மோதுகிறார்களே, என்னை எவரும் காப்பவர்களில்லையா? காப்பவர்களில்லையா? தபோமுனியே, வந்து ரக்ஷிக்கமாட்டாயா?" என்று கதறினேன். மூர்ச்சை தெளிந்து கண்களை விழித்துப் பார்த்தேன்.

தபோமுனி என் முகத்தை நீரால் துடைத்து, என்னைத் தூக்கி நிறுத்திக் கொண்டு தனது அருள் விழி களிலே நீர் பொழிய, "மகனே, இனி நீ சுகம் பெறுவாய். பிராரப்த கருமங்கள் அனுபவித்தா லொழியத் தீரமாட்டா. நீ கண்ட கனவுகளை எல்லாம் மறந்துவிடு. முன்சென்ற துன்பத்திற்கு இப்போது நினைத்து வருந்துதல் பேதைமை. இனி, நல்லறவழியிலே நான் உன்னைக் கொண்டு சேர்க்கின்றேன். 'ஜய தர்மராஜாய' என்று சொல்" என்றார்.

"ஜய தர்மராஜாய" என்று வாழ்த்தினேன்.

பின்பு பல வீணவுப்பாதைகளின் வழியே சுற்றிச் சுற்றி என்னைக் கொண்டு போய், முனிவன் தர்மராஜாவின் சபையிலே கொண்டு சேர்த்தான். பளிங்குத் தளம், பளிங்குச் சுவர்கள், பளிங்குத் தூண்கள், வயிரச் சிங்காதனம். அதன் கீழே பொன்னால் செய்யப்பட்ட பாம்பு, புலி இவற்றின் உருவங்கள் நசுங்கிக் கிடந்தன.

ஸபா மண்டபத்திற்கு மேல்விதானம் கிடையாது. ஆகாயமே கூரை. சூரிய கிரணங்கள் நேரே தர்ம ராஜாவின் முடிமீது வந்து விழுகின்றன; அவருடைய ரத்தின மகுடத்தை ஜாஜ்வல்யமாகச் செய்கின்றன. ஸூர்யகுமாரனுதலால், அவனையும், அவன் ஸபையி லுள்ளோரையும் ஸூர்ய கிரணங்கள் சுடவில்லையென்று தெரிந்து கொண்டேன். நெருப்பை நெருப்பு சுடுமா? தர்மராஜாவின் மகுடத்துக்கு நேரே உயர ஓர் அக்கினி வாள் இடைவானிலே பொறிகள் பறக்குமாறு தக தக வென்று ஒளி வீசி நிற்கின்றது. இது தர்மத் துக்கு ரக்ஷணை. தர்மத்தைப் பிறர் துன்பப் படுத்த வந்தால் அவர் தலையிலும், தர்மம் தானே சிறிது தவறு மாயின் அதன் தலையிலும் இவ்வாள் விழுந்து நாசப் படுத்திவிடும் என்பது அறிந்தேன்.

தர்மராஜாவின் முகத்தைப் பார்த்தேன். பால கங்காதர திலகரின் முகத்துச் சாயல் கொஞ்சம் தென் பட்டது. இலேசான சாயல். ஆனால், தர்மராஜா தாமே காலமாதலால், காலத்தினால் மனிதர் முகத்தில் ஏற்படுத் தப்படும் சிதைவுகள் அவருடைய திவ்விய வதனத்தில் காணப்படவில்லை. பொன் வர்ணமுடையதும் வயிர மாரங்கொண்டதும் ஆகிய ஒரு அற்புத உலோகத்திலே வார்த்து, அதனுள்ளே மகா சக்தி கொண்ட உயிர்த் திகழ்ச்சி செலுத்தப் பட்டிருக்கிறது போல விளங்கிற்று. இத்தனைக்கும் மேலே, அருட்ஜோதி கூத்தாடுகின்றது. தர்மம் இறக்கவில்லாதது என்று நான் பல ஸமயங்களில் நினைத்திருக்கிறேன். சிங்காதனத்தைப்போலவே நெஞ்ச

ழும் வயிரத்தால் செய்யப்பட்டதாக இருக்கலாமென்று நினைத்தேன். அது பிழை. தர்மம் பக்ஷபாத மற்றது. குருட்டன்பு இல்லாதது. ஆனல், அருளும் விவேகமும் கலந்து வார்க்கப்பட்ட விக்கிரகம் தர்மம்.

கபோமுனி என்னைக்கொண்டு தர்மராஜாவின் திரு முன்னே நிறுத்தினர். தருமன் முகமலர்ந்து "வருக" என்று சொல்லி, "ஓம்" என்று ஆசீர்வதித்தான். அவன் வாய்திறக்கு முன்பாகவே நான் அவன் தாளில் வீழ்ந்து ஸாஷ்டாங்கமாக வணங்கி அவன் பாத விரல் களைக் கண்ணீரால் நனைத்துவிட்டு எழுந்து நின்றேன்.

தர்மன் என்னை நோக்கி "உனது பாவங்களெல் லாம் நீங்கிப்போயின. உன் குறைகளெல்லாம் தீர்ந்து நீ பரிபூர்ணம் பெறும் மார்க்கத்திலே செல்வதற்குத் தகுதியுடையவனுய் விட்டாய். இனி இந்திரிய விருத்தி களிலே உன் மனம் செல்லமாட்டாது. அற்பப்பொருள் களிலே ஆசை வைக்கமாட்டாய் ஆனவத்திலே அடங்கி நிற்க மாட்டாய். மனம் உன் வசப்பட்டு நீ சொன்னபடி யெல்லாம் கேட்கும். கபோமுனி நீ விரும்பியதை யெல்லாம் காட்டுவான். உனக்கு மங்கள முண்டாகுக!" என்றுன். அவனை மறுபடியும் வணங்கி விடை பெற்றுக்கொண்டேன்.

அடுத்ததோர் காட்டிற்கு என்னை முனி அழைத் துச்சென்றுன். அதனருகே ஏறக்குறைய இருபது சிறிய கூரை வீடுகளுள்ள ஒரு கிராமம். ஒவ்வொரு கூரை வீட்டையும் சூழ்ந்து ஒரு தோட்டம். வீடுகள் நெருக்கமாகச் சேர்ந்திருக்க வில்லை. விஸ்தாரமான

இடைகள் விட்டுக் கட்டப்பட்டிருந்தன. வனப்பு, சுத்தம், வண்ங்குதற்குரிய எளிமை என்னும் இம்மூன்று குணங்களுக்கும் ஒவ்வொரு வீடும் இலக்கியமாக விளங்கிற்று. அசுசியான தோற்றமேனும், நாற்றமேனும் அங்கு தேடித் தேடிப் பார்த்தாலும் கிடையாது. அவ்வனத்திலும் அதி சுத்தமாயிருந்த வீட்டிற்குள் நானும் முனிவனும் சென்றோம். அங்கே ஒரு பிராமணன் விசாலமான தோள்களும், ஞானச் சுடர் விடும் முகமும், பரந்த கண்களும், வெளுத்து நீண்ட தாடியும் உடையவனாக வீற்றிருந்தான்.

அவனுக் கெதிரே ஐந்தாறு சிஷ்யர்கள் சுவடிகள் கையிலே வைத்துக்கொண்டு பாடங் கேட்டுக் கொண்டிருந்தார்கள். நானும் தபோமுனியும் போனவுடன் எங்களுக்கு வழக்கப்படி உபசாரங்கள் கூறி உட்கார வைத்து விட்டு, மாணாக்கர்களை நோக்கி :—

"மக்களே, இன்றைக்குப் பாடம் போதும். போய் வாருங்கள்" என்றான்.

நான் "பாடம் நடத்துங்கள். நாங்கள் இடையூறாக வந்ததைக் கருதவேண்டாம்" என்றேன். அதற்குப் பிராமணர் "அதனால் பாதகமில்லை. ஏற்கனவே பாடத்தை முடிக்கும் நேரமாய்விட்டது. அதற்கேற்ப நீங்களும் வந்து சேர்ந்தீர்கள். உங்கள் வரவினால் பாடத்திற்கு விக்கினமில்லை. இந்த உலகத்தில் அவரவர் கர்மவினைக்கு விக்கினங்கள் ஏற்படுமாட்டா" என்று கூறினான்.

தபோமுனி அந்த உபாத்தியாயரை நோக்கி, "கண்வாசாரியாரே, இவர்கள் என்ன பாடம் படித்துக்கொண்ருந்தார்கள்?" என்று கேட்டான். அதற்குக் கண்வர் "இவர்கள் கணித சாஸ்திரம் படிக்கிறார்கள்" என்றான்.

தபோமுனி:—"முன் நான் வரும்போது சிற்ப சாஸ்திரம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தீர்களே?"

கணவர்:—"ஆம், அவர்கள் தொழிலாளிகள். இப்போது இருந்தவர்கள் பிரம, க்ஷத்திரிய என்னும் இரண்டு வகுப்புகளைச் சேர்ந்தவர்கள்"

"ஸர்வ சாஸ்திரங்களின் கடல்" என்று நான் வாய்க்குள்ளே சொல்லிக் கொண்டேன்.

அதுகேட்ட கண்வர்:—"அப்படியொன்றுமில்லை. எனக்கு வேதாந்த சாஸ்திரம், தர்ம சாஸ்திரம் இவற்றைத் தவிரச் சிற்பம், கணிதம் என்ற இரண்டுதான் தெரியும். வந்துகேட்கும் மாணாக்கர்களுக்குத் தெரிந்ததைச சொல்லிக் கொடுக்கிறேன். அது எனது தர்மம்" என்றார்.

இவ்வளவு நேரத்தின் பிறகு, தபோமுனி கண்வாசாரியாரிடம் என்னைச் சுட்டிக்காட்டி, "இவருக்குப் பிராமண தர்மத்தைக் காட்டவேண்டுமென்பதாகத் தங்களிடம் அழைத்து வந்திருக்கிறேன்" என்றார்.

கண்வர் புன்னகைசெய்து, "ஆஹா! ஸர்வ தர்மங்களுக்கும் தாமே மூலஸ்தானமாயிருக்கும்போது.

என்னை ஒரு பொருளாகக் கருதி வந்தது வியப்பே. தமது கட்டளைக்கிணக்கி அவர் கேட்பதெல்லாம் கூறும் கடமையைச் சிரமேற்கொண்டிருக்கிறேன்" என்றனர். எனக்குத் தொடக்க முதலாகவே இருந்த ஆவலை எவ்வாறே அடக்கி வைத்துக்கொண்டிருந்தேன். இப்போது அவர் சொல்லக்கேட்டு மகிழ்ச்சியடைந்தவுனய், அவ்வாசாரியனிடம் நியாயஸ்தலத்திலே சாகூஷியிடம் கேட்பதுபோல—ஆனல், வணக்கம், பக்தி, சிரத்தை, இவற்றுடன்—கேள்விகள் சோணமாரியாகப் பொழிந்தேன். அவரும் சலிப்பில்லாமல், ஐயந் திரிபற மறுமொழிகள் சுருங்கச்சொல்லி விளங்க வைத்துக் கொண்டு வந்தார்.

சில கேள்விகளையும் உத்தாங்களையும் இங்கே குறிப்பிடுகின்றேன் :—

கேள்வி :—"ஸ்வாமி, ஒருவன் பிறக்கும் போதே பிராமணனுகப் பிறக்கிறனு? அல்லது பயிற்சியால் பிராமணனுகிறனு!"

உத்தரம் :—"பிறக்கும்போது மனிதர்களெல்லாம் மிருகங்களாகப் பிறக்கிறார்கள். பயிற்சியினுலும் குண கர்மங்களினுலும் வெவ்வேறு வர்ணத்தின ராகின்றார் கள். "சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குணகர்ம விபாகச:" என்று பகவான் சொல்லியிருக்கிறார்."

கேள்வி :—"ஸ்வாமி, இந்த விதி அனுபவத்தில் இருக்கிறதா?"

உத்தரம் :—" ஆம், எனது பிதா க்ஷத்திரியர் ; நான் பிராமணன் ; என் மக்கள் பன்னிரண்டு பேரில் ஒருவனை மட்டுமே பிராமண காரியங்களுக்குத் தெரிந் தெடுத்திருக்கிறேன். மற்றவர்களையெல்லாம் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய என்ற மூன்று வர்ணங்களின் காரி யங்களுக்கு அவரவர்களின் தகுதி, ஸ்வபாவம் முதலிய வற்றைக் கருதி உரியவாறு பயிலும்படி செய்திருக்கி றேன்."

கேள்வி :—"மண்ணுலகத்திலே பாரததேசத்தில் நான் வர்ணாசிரம தர்மங்கள் இருக்கின்றன. அங்கே நாம் சொல்வதுபோல நடக்கவில்லையே ?"

உத்தரம் :—" பாரத தேசத்தில்தான் வர்ணாசிரம தர்மங்களிருப்பதாகச் சொல்வது பிழை. ஸகல தேசங் களிலும் உண்டு. ஆனால் பாரததேசத்தில் தான் வர்ணா சிரம நெறி சீர்கெட்டுப் போயிருக்கின்றது. பூர்வத் திலே பாரத தேசத்தில் வர்ணாசிரம நெறி நான் சொல் வது போலத் தான் இருந்தது. அதற்கு அங்காட்டி லுள்ள வேதங்கள், உபநிஷத்துக்கள், புராணங்கள், இதிஹாஸங்கள் முதலிய ஸகல நூல்களும் ஸாக்ஷி. இப் போது பாரத நாட்டைத் தவிர மற்றெல்லா நாடுகளி லும் பகவான் சொல்லிய முறைதான் நடைபெற்று வருகிறது. பாரத நாட்டில் அம்முறை தவறிவிட்டது. அதுபற்றியே, அந்நாட்டினர், வறுமை, நோய், அடிமைத் தனம் என்ற இழிவுகளிலே வீழ்ந்திருக் கிறார்கள்."

கேள்வி:—" பிராமண தர்மங்களை எனக்குப் போதனை செய்யவேண்டும்."

உத்தரம்:—" ஸங்கிரஹமாகச் சொல்லுகிறேன். பிராமண வர்ணத்தார் ஒரு ஜன ஸமூஹத்தின் அறிவுச் செல்வத்திற்குக் காவலாளிகள்; அறிவுப் பயிருக்கு உழுவர்கள். அவரவர் தத்தம்மால் இயன்ற சாஸ்திரங்களைப் படித்து வைத்துக்கொண்டு அவற்றை வெவ்வேறு வர்ணத்தாருக்கு உரிமை நோக்கிக் கற்பிக்க வேண்டும். அவ்வாறு கற்பிப்பதற்கு, தமது உணவு மட்டிற்கு மேற்பட்ட எவ்விதமான கிரயமும் வாங்கலாகாது. 'எவன் வீட்டில் மறுநாள் ஆஹாரத்திற்கு இன்றே நெல் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறதோ அவன் பிராமணன் ஆகமாட்டான்' என்று யாக்ஞவல்கியர் சொல்கிறார்.

" ஜனங்களுக்கு ஏற்படக்கூடிய துன்பங்களுக்கெல்லாம் அறிவின்மையே காரண மாதலாலும், அந்த அறிவின்மை ஏற்படாமற் பாதுகாப்பதே பிராமணன் கடமை யாதலாலும், பிராமணர்களே பொறுப்பாளிகளாவார்கள். ஜனங்களுக்குள் சூத்திர தர்மம் குறைந்து போனால், அப்போது பிராமணர் சூத்திர தர்ம போதனையே முதல் தொழிலாகக்கொண்டு நாட்டில் உண்மையான சூத்திரர்களை அதிகப்படுத்த வேண்டும். வைசிய தர்மம் குறைந்தால், அறிவு வகுப்பினர் தாம் வைசிய நூல் கற்பதும் கற்பிப்பதுமே முதற் கடமையாகக் கொண்டு, கையில் அகப்பட்டவர்களை யெல்லாம் மெய்

யான வைகியாக்கி விடுவார்கள். சூத்திரிய தர்மத்திற்கும், பிராமண தர்மத்திற்கும் ஊனம் வர இடங்கொடுக்கவே கூடாது. சூத்திரிய பிராமண தர்மங்களுக்கு ஊனம் நேரிடுமாயின், ஜன ஸமூஹம் முழுவதுமே கூனமடைந்து போய்விடும்.

"அப்படி ஏதேனும் மஹாவிபத்து நேரிடக்கூடிய தருணத்தில், 'அவரவர் தத்தம் தர்மங்களைமட்டுமே கருதி நிற்போம், மற்றவர் தர்மங்களை நாமேன் கருதவேண்டும்' என்று சும்மா இருத்தல் கூடாது. விடுதிப்பற்றி யெரியும்போது, தகப்பன் தனது காரியஸ்தலத்திற்கும், மகன் பள்ளிக்கூடத்திற்கும், பெண்கள் பூஞ்சோலைக்கும், தாய் கோயிலுக்கும், வேஷ்டிக்காரன் காய்கிழங்குகள் வாங்கும் பொருட்டுக் கடைக்கும், பரிசாரகன் சமையலுக்காகத் தண்ணீருக்கும், உல்லாஸமாகப் புறப்பட்டுக்கொண்டிருக்கலாமா? நெருப்பை அவிக்க முயலவேண்டியது எல்லோருக்கும் கடமை. காரியஸ்தலத்திற்குப் போவதைப் பற்றிப் பிறகு பார்த்துக்கொள்ளலாம்; கோயில்களையும், பள்ளிக்கூடங்களையும் கள்வன் கொண்டுபோய் விடமாட்டான்; மறுநாள் கவனித்துக்கொள்ளலாம். விளையாட்டுக்குப்போய்வருதல் பரிதன்று; காய்கிழங்குகள் பரிதில்லை; சமையல் பரிதில்லை. வீட்டிலே பற்றியிருக்கும் நெருப்பை அவிப்பதுதான் பரிது. அதற்குத்தான் எல்லோரும் பாடுபடவேண்டும். கலியிலே வர்ண வேறுபாடுகள் பொய்; வெறும் ஏமாற்று. பாரத நாட்டைப்பற்றி நீர் கேட்டீர், பாரத நாட்டில் இப்போது கலி யுகம்.

ஆனல், இன்னும் இரண்டு மூன்று தலைமுறைகளில் கலி யுகம் நீங்கிக் கிருதயுகம் பிறக்கப் போகின்றது. அப் போது அந்த நாட்டிலே உண்மையான வர்ணாசிரம பேதங்கள் எற்பட்டு விளங்கும். இப்போதிருக்கும் வஞ்சனைப் பேதங்கள் நீங்கிவிடும்.

"பாரமார்த்திகத்திலே பிரம்மஞான மூடையவனே பிராமணன் என்ற பெயருக்குத் தகுதியுடையவனு வான். 'வஜ்ரஸூசிகை' என்ற உபநிஷத்திலே இதை நேர்த்தியாக எடுத்து விளக்கியிருக்கின்றார். ஆனலும், வியவஹாரத்திலே, உலகத்தாருக்கு அறிவுப்பயிற்சி கொடுக்கும் வகுப்பினர் பிராமண ராவார்கள். ஸகல விதமான நூல்களிலும் பயிற்சி கொண்டிருத்தல், அதனை உலகத்தாருக்குப் போதனை செய்து, உலகத் துத் தொழில்களெல்லாம் இனிது நடப்பதற்கு ஆதர வாயிருத்தல், லௌகிகப் பெருமைகளிலே ஆசை யில்லாமை—இவையே சுருங்கச்சொல்லு மிடத்து பிராமண தர்மத்தின் ஸாராம்சங்க ளாகும்" என்று முடித்தார்.

பேசி முடிந்தவுடன் திடீரென்று எழுந்து வெளியே போனர். உடனே திரும்பி எங்களிடம் வந்து ஸந்தியா தியானத்திற்கு நேரமாய் விட்டதென்று தெரிவித்தார். மூவரும் எழுந்து, கிராமத்திற்கு வெளியே சிறிது தூரத்துக்கு அப்பால் மருஞ்சோலையை யடுத்துள்ள ஆற் றங்கரைக்குச் சென்றோம். ஸூர்ய கோளம் மேற்றிசை வானத்திலே பாதி மறைந்திருந்தது. மேகங்கள் எல் லாம் நெருப்புத் தீவுகள் போலத் தோன்றின. பிரகிருதி

தேவி அற்புதமான அழகுடன் விளங்கினள். அத்தருணத்தில் ஸ்நாகம் முடித்துத் தனித்தனியாகத் தாரத்தில் உட்கார்ந்துகொண்டு முனிவர்கள் இருவரும் பிரம்மதியானத்திலே அமர்ந்திருந்தார். நான் "ஓம்" என்று ஜபித்து சாந்தி தேவியை வரிக்க லாயினேன்.

ஜபதபங்கள் முடித்துக்கொண்டு மறுபடியும் கண்வ முனிவரின் வீட்டிற்கு வந்தோம். அங்கு நானும் தபோமுனிவரும் அவரிடம் விடைபெற்றுக் கொள்ள விரும்பிச் சில வார்த்தைகள் சொன்னோம். அதற்குக் கண்வர், "இராப்பொழுதாய் விட்டது. தாம் இருவரும் இன்றிரவை எனது சிறு குடிலிலே யே கழித்துக்கொண்டு போகவேண்டும்" என்றார்.

எனக்கு உடனே, "மறுநாள் காலை ஆஹாரத்திற்கு வீட்டிலே நெல் லவத்திருப்பவன் பிராமணனாக மாட்டான்" என்று சொல்லிய வசனம் ஞாபகத்திற்கு வந்தது. ஆதலால், அவர் மிகவும் எளியவராயிருப்பாரென்பது கருதி "வேண்டியதில்லை. நாங்கள் சென்று வருகிறோம், தயவுசெய்து மன்னிக்கவேண்டும்" என்றேன்.

கண்வ முனிக்கு எனது ஹிருதயம் தெரிந்து விட்டது.

"ஸஹோதரா, தர்மமுள்ள இடத்தில் வறுமை கிடையாது. நீர் அதைப்பற்றி யோசிக்க வேண்டாம்.

தயவுசெய்து இவ்விரவு தங்கியே போகவேண்டும்" என்றார்.

எனக்கு வெட்கம் பொறுக்க முடியவில்லை. தலை குனிந்துவிட்டேன். முனிவர்கள் இருவரும் புன்னகை செய்தார்கள். பின்பு, இராப்பொழுதை அங்கேயே கழிப்பதாகத் தீர்மானம் செய்துகொண்டோம்.

கண்வர் வீட்டு நடையிலே ஓர் பாயின்மீது உட் கார்ந்திருந்தபோது, கந்தர்வ லோகத்தில் ஸுகந்த மாலினியின் மாடத்திலே பர்வத குமாரியுடன் பஞ் சணைமீது உட்கார்ந்திருந்த பொழுதைக் காட்டிலும், என் மனதில் அதிக சாந்தி ஏற்பட்டு விளங்கிற்று. கண்வரும் தபோ முனிவரும் வேதாந்த விசாரணை செய் யத் தொடங்கினார்கள். தபோ முனிவர் விவஹாரத்தின் நடுவிலே சில அநுமானமான விஷயங்கள் சொல்லினார். அப்போது கண்வருடைய பத்னியும் வந்து உட்கார்ந்து கொண்டு சிரவணம் செய்தாள்.

கண்வருடைய பத்தினியை நோக்கும்போது, வேதங்களிலே படித்திருக்கும் மைத்ரேயி முதலிய ஸ்திரீகளின் சித்திரம் மனவிழியிலே எழுந்தது. கற்பு, தெளிவு, அடக்கம், அறிவு, தயை என்ற குணங்கள் அனைத்தும் அந்த தேவியைச் சூழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தன. முனிவர்களின் ஜீவகளை ஸம்பாஷணை ரஸத்தால் இயக்கத்தில் விளங்குவதும், தேவியின் ஜீவ களை அடக்கத்தில் ஒளிர்வதும், ஒப்புநோக்கும்போது மிக நன்றாயிருந்தது. சிறிது நேரத்திற்கு அப்பால் கண்

வரின் குமாரன் வந்து தாயின் பக்கத்திலே உட்கார்ந் தான். ஆ! இந்த வாலிபனைத் தவசிவடத்திலே கண்ட போது என் மனம் பொறுக்கவில்லை. இவனை ராஜ குமாரனை அழுத விழிகொண்ட மாதர்களோடு கொஞ்ச சிக் கொண்டிருக்கப் பார்க்கவேண்டும். இவனைச் சேனை பதியாக வாலிப வீரர்கள் சேர்ந்திருக்கும் ஸைன்ய முகத்திலே பார்க்கவேண்டும். கிரக கணங்களை அழைத் துக்கொண்டு பால சூரியன் முன்வருவதைப்போலிருக் கும். இவனுக்கா மரவுரி? இவனுக்கா வெறும் தானிய மும், காய் கனிகளும் சேர்ந்த உணவு? இவனுக்கா சுனை நீர்ப்பானம்? இவனுக்கா இடைவிடாத எட்டுக்கவலை, கடபட விவஹாரம்? முனிவர் பன்னிரண்டு குமார் களிலே தவத்திற்கென்று இவனைத் தெரிந்தெடுத்தது பிழை யென்று என் சிந்தைக்குப் புலப்பட்டது. நான் இப்படி யோசனை செய்து கொண்டிருக்கும் போதே முனிவர்களின் வேதாந்த தர்க்கம் முடிந்துவிட்டது. தபோமுனி என் சிந்தையை விழியால் நோக்குநோக் கப் பார்த்தவர் போன்று, இத்தன ராஜலக்ஷணம் வாய்ந்த குமாரனைத் தாம் பிராமண தர்மத்திற்கு எடுத்துக் கொண்டு, மற்றப் பிள்ளைகளை யெல்லாம் வெளியே அனுப்பிவிட்டமைக்கு முகாந்தரம் தெரிவிக்கவேண் டும்" என்று கண்வரிடம் கேட்டார்.

கண்வர் மகனை நோக்கிக் "குழந்தாய், இன்றைக்கு ஜ்யோதிஷத்திலே—அதாவது, வானத்து கிரக நக்ஷத் திரங்களை அளக்கும் கணித நூல். எருமை மாடு கெட் டுப்போனால், வழிசொல்லப் படிக்கும் பல நூலன்று—

தரிசனப்பியாஸம் (பார்த்துப் பழகல்) செய்ய வேண்டிய தின மாயிற்றே. நீ தனியே போயிருந்து ரக்ஷஸ்தானங்களை சரியாகத் தெரிந்துகொண்டு வா'' என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

மகனைப்பற்றிப் புகழ்ச்சியாகச் சில வார்த்தைகள் சொல்ல நேரிடுமாதலால், அவற்றை அவன் காதில் விழும்படி சொல்ல முனிவருக்கு விருப்பமில்லை. குமாரன் வெளியே சென்றான். பின்பு முனிவர் பின்வருமாறு சொல்ல லாயினர் :—

'' அதர்மத்தைக் கொல்வதைக் காட்டிலும், அஞ்ஞானத்தைக் கொல்வதற்கு அதிக வீரத்தன்மை வேண்டும். ஜனங்களுக்கு சரீர ஸம்பந்தமான இன்னல்களைத் தவிர்த்து ரக்ஷிப்பது க்ஷத்திர, வைசியர்கள் கடமை. தர்மத்தை க்ஷத்திரியன் ரக்ஷிக்கிறான். நான் முன்பு சொல்லியபடி, ஞானத்தைப் பிராமணன் ஸம்ரக்ஷணை செய்கிறான். பிராமணனுக்கு அளவற்ற வீர்யம் வேண்டும். அளவற்ற தேஜஸ் வேண்டும். அளவற்ற திடமும் பராக்கிரமும் வேண்டும். அஞ்ஞானத்தின் படைகள் எண்ணற்றன. அஞ்ஞான ஊற்று வற்ற வற்றத் தொலையாது. அஞ்ஞான விருக்ஷத்தின் வேர் ஆதிசேஷன் முடிவரையிலே உண்டு. அப்படைகளை வெல்வதும், அவ்வூற்றை வற்றடிப்பதும், அந்த விஷ மரத்தை வேரறுப்பதும், ஸாமான்யமான காரியமன்று.

''மஹாபாரதப் போரிலே, பார்த்தனைவிடக் கிருஷ்ணனுக்கு வேலை அதிகம். கிருஷ்ணனுக்கு எவ்வளவு

வேலையுண்டோ, அவ்வளவு வேலை வேதவியாஸருக்கு முண்டு."

நாணுவிதமான விஷயங்களைப்பற்றி ஸம்பாஷணை செய்துவிட்டு, இலேசான ஆஹாரமுண்டு, பின் நித்திரைக்குப் போய்விட்டோம். மறுநாள் காலையில் எழுந்து தபோமுனிவரும் நானும் நித்யானுஷ்டானங்கள் முடித்துக்கொண்டு, ஸத்யராமன் என்ற க்ஷத்ரிய வீரனுடைய மாளிகைக்குச் சென்றோம். தபோமுனிவர் வரவைக் கேட்டவுடனே, ஸத்தியராமன் எதிர்கொண்டு வந்து, உபசாரங்கள் பேசி ஓர் மண்டபத்திற்கு அழைத்துப் போய், எங்களை ஆஸனங்களிலே அமர்வித்துக் கானும் விற்றிருந்தான். முனிவர் மெல்ல என் கதையைத் தொடங்கினர்.

ஸத்யராமன் தனது வீரத்தோள்கள் குலுங்க நகைத்துப் பின், "நான் காவலாளி, எனக்குச் சாதுரியமாகவும், தெளிவாகவும் ஒரு விஷயத்தை யெடுத்து உபதேசிக்கும் திறமை கிடையாது. மேலும் தருமராஜனுடைய ஸைனத்தலைவர்களில் என்னிலும் க்ஷத்திரிய குணங்களிலே சிறந்தோர் பலர் இருக்கின்றார்கள். அவர்களை யெல்லாம் விட்டுத் தரும திருஷ்டாந்தமாக அடியேனைத் தெரிந்து கொண்டதை, நான் பாக்கியமாகக் கருதுகின்றேனையினும், எனது தகுதியின்மையைப் பற்றிய உணர்ச்சி என் மனதிலிருந்து மாறவில்லை" என்றான்.

பின்பு, என்னை நோக்கி, "தாம் கேள்விகள் கேட்டால் என்னால் இயன்றமட்டும் மறுமொழிகள் சொல்லி

சந்தேக நிவர்த்தி செய்யக் காத்திருக்கிறேன்' என்று கூறினான்.

"கூத்தியனுக்குரிய கடமைகளிலே, மூதற் பட்டதும், மற்றக் கடமைகளுக்கெல்லாம் ஆதாரமு மாகிய மூலதர்மம் யாது? அதை எனக்குத் தெளிவுறக் கூறவேண்டும்" என்றேன்.

முன்னே வீற்றிருந்த வீரனுடைய சிங்க முகத் திலே ஒளி வீசிற்று. கண்கள் அறிவுப் பொருளை உமிழ் வன போலத் தோன்றின. உடல் முழுவதிலும் ஒரு புதிய திகழ்ச்சியும், பூரிப்பும் கண்டேன்.

பரவசமடைந்து குரு சொல்லும் வசனங்களை அநுபவ நிலையிலிருக்கும் சீடன் கேட்பதுபோல அடங்காத தாகத்துடன் கேட்கலாயினேன்.

"மித்திரா, கூத்தியனுடைய கடமைகள் பலவற் றிற்கும் எது தாய் என்று கேட்டாய். கூத்தியனுடைய முயற்சிகளுக்கெல்லாம் அடியிலுள்ள ஊற் றெது வென்று வினவினாய். அதனைச் சொல்லுகிறேன், கேள். அது போர்! போர்தான் கூத்தியனுடைய மூதல் தருமம். போர்தான் உண்மையான கூத்தி யனுக்கு மூச்சு. போரே அவனுடைய உயிர். எந்த கூத்தினிலே போரை நிறுத்துகின்றானே, அந்தக் கணத்திலே கூத்தியன் பேடியாய் விடுகின்றான். பின்பு அவன் மரம், அவன் பிரேதம், அவன் பொய், அவன் பேசுதற்கரிய இகழ்ச்சியாக முடிக்கின்றான். மித்திரா, நான் உனக்கு வேதாந்த சாஸ்திரம் சொல்லக்கூடிய

வனன்று. அதர்மம் ஆதியிலே எப்படி உண்டாயிற்
றென்பதை நமது மூனிவர்போன்ற ஞானிகளிடம்
கேட்டுத் தெரிந்துகொள். ஆனல், ஒரு செய்திமட்டும்
நான் அறிவேன். அதர்மம் எப்போதும் நமது
முன்னே நிற்கின்றது. எதன் பொருட்டு நிற்கின்றது?
உன் கையால் கொலையுண்டு சாகும் பொருட்டாக. அது
என்ன சொல்லுகிறது? 'அப்பா, உன் கையிலேயுள்ள
கோடரியை என் தலையிலே அடித்து என் தலையை
இரண்டு கூருகப் பிளந்து விடு' என்று சொல்லுகிறது.

"அதர்மங்கள் ரக்த பீஜ முடையவை. கொல்லக்
கொல்ல மேன்மேலும் பிறந்துகொண்டே யிருக்கும்.
க்ஷத்திரியனுடைய கடமை யாதென்றால் அவற்றைத்
தன் உயிருள்ளவரை வெட்டித் தள்ளிக் கொண்டே
யிருக்க வேண்டும். நாள்தோறும் ஸூர்யன் இருளைச்
சுற்றிச் சுற்றித் துரத்திக் கொலை செய்துகொண்டு வரு
கிறான். சூரியனே முதலாவது க்ஷத்திரியன். எங்கள்
குலத்துக்குப் பிதாமஹன்.

"அதர்ம நாசத்திற்காகப் போர் செய்து கொண்
டேயிருப்பது தான் க்ஷத்திரிய தருமமென்று சொன்
னேன். அத்தொழிலுக்கு உரிய பயிற்சியும் ஸாதனங்
களும் கைக்கொள்ளுதல் அவசியமென்று கூறுதல்
மிகையாம்" என்று முடித்தான்.

நித்தியமாக இருக்கும் அதர்மங்களை நாம் அடிக்கடி
கொல்வதில் தான் என்ன பிரயோஜனம் என்றெண்ணித்
திகைக்கலானேன். அந்தக் கேள்வியை ஸக்யாரா

னிடம் கேட்டதற்கு அவன் சிறிதேனும் மயங்குதலின்றிப் பின் வருமாறு உத்தாமளிக்தான்.

" தமோகுணம் கேட்கின்ற கேள்வி! மித்திரா, கர்மம் (தொழில்) செய்யாமல் மனிதன் அரை கூணமேனும் இருக்க முடியாது. நீ விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் தொழில் செய்துகொண்டே யிருக்கவேண்டும் என்பது விதி. அந்தக் கர்மத்தைக் கடலளப்பட்ட தருப்புபோலச் செய்யாமல், ஸ்ரீர்யனைப் போலச் செய்வது பெருமையல்லவா? ஸாதாரண சரீர ஸுகங்களைப்பற்றிய காரியங்களிலே கூட மனிதன் இவ்விதமோசனை செய்வதில்லை. ஓயாமல் அழுக்காகும் உடலை நித்தியம் என் தண்ணீரால் கழுவ வேண்டும்? கழுவக் கழுவ அதுதான் மேன்மேலும் அசுத்தப்பட்டுக்கொண்டு வருகிறதே, என்று யோசித்து எவனேனும் ஸ்நானம் இல்லாமல் இருக்கிறானா? கணத்திலே தோன்றி யழியும் உடலுக்குச் செய்யும் உபசாரம் நிரந்தாமாகிய தர்மத்துக்குச் செய்யலாகாதா?

" மேலும், அதர்மம் தர்மத்திற்கு உணவு. ஆதலால் தர்மம் இருக்கும்வரை அதுவும் இருந்தே தீரும். இது நியாயமே. அதர்மம் முற்றிலும் இறந்து சூன்யமாய்ப் போய்விடுமானால், பின்பு தர்மம் உண்ண உணவில்லாமல் தானும் மடிந்துவிடும்" என்றான்.

* * * * * * * * *

தர்ம லோகத்தில் எனக்கு நெடுங்காலம் வசிக்கும் யோக்கியமில்லை. கூடத்திரிய வீரனுடைய வீட்டைவிட்டு

வெளியேறிய பிறகு பல விடங்களுக்கு என்னைத் தபோ முனிவர் கொண்டு சென்றார். அதன் பிறகு ஜீரண மாகாத ஓர் உணவு நெடுநேரத்திற்கப்பால் வயிற்று வலி யுண்டாக்குவது போல, எனது புண்ணியத்தால் எரிக்கப்படாத ஓர் கர்மம் ஏதோ ஓர் மூலையினின்று வெளிப்பட்டு என் உள்ளத்திலே தர்ம ஸாதனைக்கு விரோதமாகிய ஓர் விருப்பத்தைக்கொண்டு நுழைத்தது. தபோ முனிவர் எனக்குப் பல தார்மிகப் புதுமைகளைக் காட்டிக்கொண்டிருக்கும்போதே அவ்விருப்பம் மீட்டுமீட்டும் எனது ஹிருதயத்தில் கிளைத்துக் கொண்டிருந்தது.

சில தினங்களுக்கப்பால், ஒரு சமயம் என்னைத் தனியே விட்டுவிட்டுத் தபோமுனி ஏதோ வேலையாகப் போயிருந்தார். பிராரப்த கர்மப் பயன்! நான் தனியேயிருக்கும்போது நீசமனம் இலேசாகப் பார்வதகுமாரியின் உருவத்தைக்கொண்டு எதிரே நிறுத்தியது. 'ஆ! என்ன இன்பமாயிருந்தது அந்தக் காலம்!' என்று நினைத்தேன். எதிரே நின்ற மோஹன விக்கிரஹம் இன்னும் சிறிது நெருங்கிற்று. நான் அதைத் தழுவும் பொருட்டாக எழுந்தேன். எனது கைகளுக்கிடையே மின் வெட்டு முன் பார்வதகுமாரி வந்து நின்றாள். இதழ்களோடு இதழ் பொருத்தி ஒரு க்ஷணம் மோஹ பரவசத்திலே இருந்தேன். இரண்டு மூன்று பூமிகள் இடிந்து விழுந்ததுபோலப் "படோர்" என்று ஒரு சப்தம் கேட்டது. "கோ" என்றலறி மூர்ச்சை போட்டு விழுந்தேன்.

கண்ணை விழித்துப் பார்க்கும்போது பழைய திருவல்லிக்கேணியில் பழைய இடத்திலே என்னைச் சுற்றிச் சிலர் விசிறிக்கொண்டு நிற்பதைக் கண்டேன். "என்ன செய்கிறீர்கள்" என்று கேட்டதற்கு, "நீ பேய்கண்டவன்போல அலறினாய். நாங்கள் வந்து பார்க்கும்போது மூச்சில்லாமலிருந்தது. பலவிதமான சைத்யோபசாரங்கள் செய்தபிறகு இப்போது மூச்சு விடுகிறாய்" என்றார்கள்.

"ஐயோ, மூச்சுப் போயிருந்தாலும் பெரிய காரியமில்லையே, தர்மத்தைத் தவற விட்டேனே!" என்று கூறிக் கண்ணீர் சிந்தினேன்.

முற்றிற்று.

ஓம் சக்தி.

பதஞ்சலி யோக லக்ஷத்ரங்கள்.

முதலாவது

லமாதி பாதம்.

ஸூத்ரம் க. இனி யோகம் சொல்லப்படும்.

ஸூ. உ. யோகம் என்பது சித்த வ்ருத்திகளை அடக்குதல்.

வ்யாக்யானம்: சித்த வ்ருத்திகள் என்பன சித்தத்தின் இயக்கங்கள். மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் என்ற நான்கினையும் சேர்த்து மனிதனுக்குள்ளே அந்தக் கரணம் (உட்கருவி) என்று சொல்லுதல் வேதாந்த சாஸ்த்ர முறை. அவையனைத்தையும் ஒன்றுக்கிச் சித்தம் என்று சொல்வது யோகசாஸ்த்ர வழக்கு. பார்வை யென்னும் தொழிலுக்கு, வெளிக்கருவி கண் ணென்றால், உட்கருவி சித்தம். கேள்விக்குப் புறக் கருவி செவி; உட்கருவி சித்தம். இப்படியே அனைத்

நிற்குங் கொள்க. எனவே, எனது சித்தத்தைத் தவிர எனக்கு உலகம் வேறு இல்லை. நான் ஒரு யானையைப் பார்க்கும்போது, புறத்தே நிற்கும் யானையை நான் பார்க்கவில்லை. அது காரணமாக என் சித்தத்துள் விழும் யானைச் சித்திரத்தையே நான் அறிவேன். எனக்கு உலகம் எனது சித்தமேயாதலால் என் சித்தம் எனக்கு வசப்படும்போது உலகம் எனக்கு வசமாய் விடும்.

ஸூ. ங. அப்போது காண்பவன் தன் வடிவத்தில் நிற்கிறான்.

வ்யா: காண்பவன் ஆத்மா. சித்தச் செயல் கள் அடக்கியபோது, ஆத்மா தன் நிஜரூபத்தில் இருப்பான் என்பது ஸூத்ரத்தின் பொருள்.

ஸூ. ச. மற்றப் பொழுது வ்ருத்திகளின் வடிவை ஏற்பான்.

வ்யா: 'மற்றப் பொழுது' என்றால் சித்த வ்ருத்தி கள் அடக்காத போது. ஒருவன் முதலியைப் பற்றி எண்ணுகையில், அவனுடைய ஆத்மா முதலி வடிவம் பெற்று நிற்கும். "நீ எண்ணுகிறபடியே ஆகிறாய்"— "யத் பாவயஸி தத் பவஸி" என்றும், "மனம் போல் வாழ்வு" என்றும் முன்னோர் சொல்லியிருப்பது எதிர் காலத்தை மாத்திரம் சுட்டுவதன்று. நிகழ் காலத்திலும் உண்மை. எப்போது உன் மனம் எதை

ஸூ. ரு. சித்த வ்ருத்திகள் ஐந்து வகைப்படும். அவற்றுள் சில துன்படுமுடையன, சில துன்படமில்லாதன.

வ்யா : *அவ் வைந்து வகைகள் எவை யென்பது கீழே கூறப்படும்.*

ஸூ. சூ. அவை:—ப்ரமாணம்; விபர்யயம்; விகற்படம்; நித்திரை; ஸ்மரணை என்பன.

வ்யா : *ப்ரமாணம் என்பதற்குத் தமிழில் அளவை என்று பெயர். விபர்யயம் என்பது விபரீத ஞானம்.*

ஸூ. எ. ப்ரத்யக்ஷம், அனுமானம், ஆகமம் என்பவை ப்ரமாணங்களாம்.

வ்யா : *ஐம்புலன்களால் நேரே அறிதல் ப்ரத்யக்ஷ ப்ரமாணம் அல்லது காட்சியளவை எனப்படும். ஊஹத்தால் அறிவது அனுமானம். அநுபவத்தில் உண்மையென்று காட்டத் தக்கனவாகிய மேலோர் வாய்ச் சொல் ஆகமம் எனப்படும்.*

ஸூ. ஏ. விபர்யயம் என்பது பொய்யறிவு; ஒரு பொருளின் மெய்யான வடிவத்தில் நிலை பெறாதது.

வ்யா : *சிப்பியை வெள்ளியாகக் காண்பது போன்ற உணர்வு விபர்யயம் எனப்படும். ஸந்தேஹமும் இதனுள் அடங்கும். தூணை மனிதனை என்றாற்போல் என்பர்.*

ஸூ. கூ. விகற்பம் என்பது பொருளில்லாமல்

வ்யா : இந்த ஸூத்ரத்துக்கு போஜ தேவர் தமது ராஜ மார்த்தண்டம் என்னும் உரையில் வ்யாக்யானம் எழுதுமிடத்தே, பின் வருமாறு சொல்லுகிறார் :—

‘ மனிதனுக்கு அறிவே ஸ்வரூபம் என்ற வசனத்தை (விகற்ப ஞானத்துக்கு) த்ருஷ்டாந்தமாகக் காட்டலாம். “மனிதனுக்குக் கம்பளம் உடை” என்பது போல அவ் வாக்கியத்தில் வேற்றுமையுணர்ச்சி தோன்றும்படி இருக்கிறது. ஆனால் உண்மையில், புருஷனுடைய “ரூபம்” அறிவன்று, புருஷன் தானே அறிவு.’

முயற் கொம்பு; ஆகாயத் தாமரை என்றாற் போலச் சொல்லளவில் நின்று பொருளற்ற உணர்வுகள் விகற்பங்களெனப் படும்.

ஸூ. கo. அபாவம் (இன்மை) என்ற உணர்வைச் சார்ந்த வ்ருத்தியே நித்திரையாம்.

வ்யா : அபாவம் என்பது பௌதிக லோகத்தை விட்ட நிலை. ஒன்றுமில்லாத சூன்யத்தை அபாவம் என்பாருமுளர். நித்திரையில் சித்தம் ஒரு பொருளையுஞ் சாராமல் நிற்கிறது என்பது பொருள்.

ஸூ. கக. அனுபவித்த விஷயத்தை நழுவி விடாதிருத்தல் நினைப்பு.

வ்யா : போஜ தேவர் தமது வ்யாக்யானத்தில் சொல்லுகிறார் :—‘ ப்ரமாணம், விபர்யயம், விகல்ப

இம் மூன்றும் விழிப்பிற்குரிய நிலைகள். இவை அறுபவத்தால் கணிலும் புலப்படுகின்றன. உறக்கம் உணரப் படாத விஷயத்தைப் பற்றியது. ப்ரமாணம், விபர்யயம், விகற்பம், நித்திரை என்ற நான்கையும் நிமித்தங்களாக உடையது நினைப்பு.'

இனி, சித்த வ்ருத்திகளை அடக்கியாளும் தெரி சொல்லுகிறார்.

ஸூ. கஉ. பழக்கத்தாலும் பற்றில்லாமையாலும் அவற்றை அடக்கலாம்.

வ்யா : பழக்கத்துக்கு முதலாவில் "அப்பாஸம்" என்ற சொல்லும், பற்றின்மைக்கு "வைராக்யம்" என்ற சொல்லும் வழங்கப் படுகின்றன. இவற்றின் இலக்கணம் கீழே சொல்லப் படுகிறது.

ஸூ. கஊ. அவற்றுள், ஒரே நிலையில் நிற்க முயலுதல் பழக்கம் எனப்படும்.

ஸூ. கச. அம் முயற்சியை நெடுங்காலம் இடையின்றி ஆதரித்தால் அது திடம் பெறும்.

ஸூ. கடு. பார்த்தனவும் கேட்டனவும் ஆகிய விஷயங்களில் ஆவலற்றோன் அவற்றின் மீது பெறும் வசீகரணத் தன்மைக்கு வைராக்கியம் (பற்றின்மை) என்று பெயர்.

வ்யா : வைராக்யம் என்ற சொல்லுக்கு விருப்பமில்லாமை என்பது பொருள். உலகத்துப் பொருள்களினிடத்தே நாம் ஆவலைத் துறந்து விட்டால், அவை

றுக்கு நாம் வசப் பட்டிருக்கிறோம். "வசிகரணம்" என்றால் வசப்படுத்துதல்.

ஸூ. கசு. அப்பால், புருஷனை அறிவதால் குணங் களினிடத்திலும் பற்றின்மை உண்டாகிறது.

வ்யா : குணங்களாவன : ஸத்வம், ரஜஸ், தமஸ் என்பனவை. இவையே ஜகத்தின் மூலங்கள். இவற் றிலே பற்று விடுவது தான் வைராக்யத்தின் சிகரம். வெளிப் பொருள்களிலே பற்று நீங்கிய போது, பர மாத்ம ஞானம் கிடைக்கிறது. அதினின்றும் குணப் பற்றுதல் விடுகிறது.

இனி ஸமாதி லக்ஷணம் சொல்லுகிறார்.

ஸூ. கள. விதர்க்கம், விசாரம், ஆனந்தம், அஸ் மிதை என்ற நிகழ்ச்சிகளுடையது "ஸம்ப்ரக்ஞாதம்" என்ற ஸமாதி.

வ்யா : விதர்க்கம் என்பது பொது ஆராய்ச்சி; விசாரம் ஸூக்ஷ்ம வஸ்துக்களைப் பற்றிய ஆராய்ச்சி. அஸ்மிதை என்பது வெறுமே "நான் இருக்கிறேன்" என்ற உணர்ச்சி மாத்திரம் மிஞ்சி நிற்கும் நிலைமை.

ஸமாதியே யோகியின் லக்ஷ்யம். சித்தத்தை அசைவின்றி ஒரே பொருளில் நிறுத்தி விடுதல் ஸமாதி எனப்படும். இந்த ஸமாதி இரண்டு வகைப் படும் :—ஸம்ப்ரக்ஞாதம், அஸம்ப்ரக்ஞாதம் என. 'ஸம்ப்ரக்ஞாதம்' உணர்வுட் பட்டது; 'அஸம்ப்ரக்ஞா தம்' உணர்வைக் கடந்தது

ஒரு பதார்த்தத்தை மற்றெல்லாப் பொருள்களி னின்றும் பிரித்து, மீட்டுமீட்டும் அதிலேயே தியானம் செலுத்துவது விகர்க்க ஸமாதியின் லக்ஷணம்.

தியானம் செலுத்துவதற்குரிய விஷயங்கள் இரண்டு வகைப்படும். பிரகிருதியின் தத்துவங்கள் ஒரு வகை. மற்றொன்று புருஷன் (ஆத்மா). பிர க்ருதியின் தத்துவங்களெல்லாம் ஜடம்—உணர்வற்றன. புருஷன் (ஆத்மா) சேதனன்—அறிவுடையவன். இவ்விடத்தில், ஸ்வாமி விவேகாநந்தர் பின்வருமாறு எழுதுகிறார்:—

'யோக சாஸ்த்ரத்தில் இந்த அம்சம் ஸாங்க்ய சாஸ்த்ரத்தை ஆதாரமாகவுடையது. அஹங்காரம், புத்தி, மனம் இவற்றுக் கெல்லாம் சித்தமே ஆதார். சித்த வஸ்துவிலிருந்தே இவையெல்லாம் பிறக்கின் றன. ப்ரக்ருதியின் சக்திகள் சித்தத்திலுள்ளே புகும் போது, அவை எண்ணங்களாக மாறுகின்றன. பி ரகிருதி (இயற்கை) ஜடப்பொருள்களாகவும் ஜடசக் ஷணங்களாகவும் காணப்படுகிறது. பொருள் வே று சக்ஷணம் வேறுகப் பிரிவுபட்டுத் தெரியாமல் கலந்து நிற்கும் பூர்வ நிலைக்கு அவ்யக்தம் (வ்யக்த மாகாதது) என்று பெயர். படைப்புக்கு முன்பு, ஜகத்தெல்லாம் அவ்யக்த நிலையிலிருந்தது. இந்த ஜகத்தைக் கடந்து நிற்பது புருஷன்; இதுவே சைதன்யத்தின் ஸாரம்.

'பதார்த்தங்களின் மீது தியானம் செலுத்துவ தால் யோகசித்திகள் பிறக்கின்றன. அறிவே சக்தி.

அறிவே சித்தி. ஒரு பொருளை நாம் முழுதும் அறிந்து விடுவோமாயின் அது நமக்கு வசப்பட்டுப் போம். பஞ்ச பூதங்களைப் பற்றி தியானம் செய்யும் போது, அவற்றின் மீது அதிகாரம் ஏற்படுகிறது. வெளிப்படையான ஸ்தூல பூதங்களை தியானத்துக் குரிய பதார்த்தங்களாக வைத்துக்கொண்டு செய்யப் படும் ஸமாதிக்கு ஸவிதர்க்க ஸமாதி என்று பெயர். தர்க்கம் என்பதற்கு சங்கித்தல் என்பது பொருள். சங்கை செய்து ஆராய்ந்து பார்க்குமிடத்தே, பூதங் கள் தம்மிடத்திலுள்ள உண்மைகளை யெல்லாம் யோகிக்குத் தெளிவாகக் காட்டுகின்றன, அவன் வசத் திலே ஒப்புவித்து விடுகின்றன. இதே தியானத்தில் பூதங்களைக் கால தேசங்களினின்றும் பிரித்து அவற் றின் சுயவடிவில் தியானிக்கும்போது அது நிர்விதர்க்க ஸமாதி யெனப்படும். அப்பால் தியானம் மேற்கூறப் பட்ட நிலையைக் கடந்து தன்மாத்திரைகள் என்று சொல்லப்படும் ஸூக்ஷ்ம அணுக்களை விஷயமாகக் கொண்டு நிகழுமிடத்தே அதற்கு ஸவிசார ஸமாதி என்று பெயர். இதுவும் கால தேசங் கடந்தால் நிர் விசார ஸமாதியாகும்.

'இனி, அடுத்த படி : ஸூக்ஷ்மம், ஸ்தூலம் என்ற இருவகையான பூதங்களையும் விட்டுச் சித்தத் தையே விஷயமாகக் கொண்டு தியானம் செய்யும் போது, ஸானந்த (ஆனந்த ஸஹிதமான) ஸமாதி ஏற் படுகிறது. சித்தத்தின் குணங்களைக் கூடப் பிரித்துத் தள்ளிவிட்டு, அதன் சுத்த வடிவத்தில் தியானம்

செலுத்தி, மற்றெல்லா வ்ருத்திகளைத் மடிந்து, ஸத்வ குண ஸம்பந்தமான அந்தஃகரணம் மட்டிலும் மிஞ்சி நிற்குமபோது, அதை அஸ்மிதா ஸமாதி யெனப்படும். இந்நிலை அடைந்தவர்களை முன்னிலை “விதேஹர்” என்று கூறுவர். அதாவது, ஸ்தூல தேஹத்துடன் தம்மைச் சேர்த்துக் கொள்ளாதவர். ஆனால், இவர் களும் தம்மை ஸூக்ஷ்ம தேஹத்துடன் சேர்த்துப் பாவனை செய்து கொள்வர். இந்நிலையில் இயற்கை யுடன் கலந்து நிற்போர் “ப்ரக்ருதிலயர்” என்று கூறப்படுவர். ப்ரகிருதியைக் கடந்து செல்வோர் முக்தி யடைகிறார்கள்.’

ஸூ. கபி. எல்லாவகைச் சித்த வ்ருத்திகளையும் அழித்துப் பழகுவதனால் மற்றொரு ஸமாதி உண்டா கிறது. இதில், ஸம்ஸ்காரங்கள் மாத்திரமே மிஞ்சி நிற் கின்றன.

வ்யா : இதுவே உணர்வைக் கடந்த நிற்ப தாகிய ‘அஸம்ப்ரக்ஞாத ஸமாதி.’ இது விருந்து தான் முக்தி விளைகிறது. மேலே கூறப்பட்ட ஸம் ப்ரக்ஞாத ஸமாதி முக்திக்கு வழி காட்டுவதன்று; அதிலிருந்து சித்திகள் ஜனிக்கும். ஒருவன் எல்லா சித்திகளும் பெற்ற பிறகு கூட, மறுபடி தழுவி வீழ்ச்சி பெறக் கூடு மென்று பெரியோர் சொல்லு கிறார்கள். ஆத்மா (புருஷன்) ப்ரக்ருதியைக் கடந்து செல்லவேண்டும். இந்த நிலை பெறுதல் மிகவும் துர்லபம். இதனைப் பெறும் உபாயம் பின் வரு

மாறு : சித்தத்தை விஷயமாக நிறுத்திக் கொள். எதேனும் எண்ணம் உள்ளே புகும்போது அதை உடனே வெட்டிவிடு. சித்தத்தில் யாதொரு எண்ணமும் நிகழாமல் அதைப் பாழாக்கிவிடு. 'இது செய்யும் நிறமை ஒருவனுக்கு வருமாயின் உடனே முக்தி உண்டாய்விடும்' என்று விவேகானந்தர் சொல்லுகிறார்.

இந்த ஸமாதியில் ஸம்ஸ்காரங்கள் மிஞ்சி நிற்கும் என்று பதஞ்ஜலி முனிவர் சொல்லுகிறார். ஆனால் இந்த ஸமாதி முதிர்ச்சி பெறும்போது, ஸம்ஸ்காரங்கள் தாமாகவே நசித்து விடும் என்று விவேகானந்தர் கருதுகிறார். அது பற்றியே, விவேகானந்தர் இதனை முக்தியில் உடனே கொண்டு சேர்க்கும்படி யென்று பேசி யிருக்கிறார்.

"ஸம்ஸ்காரங்கள் என்பன, சித்த வ்ருத்திகளின் விதைகள். நம்முடைய சித்தத்தில் தோன்றி மறையும் எண்ணங்கள் அப்படியே அழிந்து போகவில்லை. தம் தம் விதைகளை மிச்சம் வைத்து விட்டுப் போகின்றன. இந்த விதைகளையும் அழித்தாலன்றிப், பரிபூர்ண விடுதலை தோன்றாது. கெட்ட விதைகளை மாத்திரமே யன்றி நல்ல விதைகளையும் அழித்து விடவேண்டும்; அப்போது, ஆத்மா தனது ஸ்வரூபத்தை அறிவான். தான் நித்ய ஒளி யுடையவன் என்றும், எல்லாம் அறிபவன் என்றும், ஸர்வ சக்தி யுடையவனென்றும் தெரிந்து கொள்வான். தன்னைத் தானே தளைகளால் கட்டி யிருந்த தெல்லாம் ஒருவித

மாயத் தோற்றமே யல்லாமல், பதார்த்தத்தில் தனக்கு எக்காலத்திலும் எவ்விதமான தேவையேனும் தான்பமேனும் இருந்த திவ்லை யென்று நிகரித்து கொள்வான். அப்போது அவன் கட்டளை யிட்ட செய்கைகளெல்லாம் நிறைவேறும். அவன் விரும்புவதில்லை; ப்ரார்த்தனை செய்வதில்லை. அவனுக்கு நிகழும் ஸங்கல்பங்கள் தாமே நிறைவேறும்' என்கிறார்.

ஸூ. ககக:—விதேஹ யோகிகளுக்குப் ப்ரக்ருதி லயர்களுக்கும் இந்த யோகம் உலகத் தோற்றத்தை விளைவிக்கும்.

வ்யா: உடம்பிலே தாம் கட்டிப் பட்டிருக்கிறோம் என்ற அற்ப சிந்தையைக் கடந்தவர்கள் விதேஹ யோகிகள். இயற்கையுடன் ஒன்று பட்டவர்கள் ப்ரக்ருதிலயர்.

இவ்விருவரும் ஸமாதி யாகிய சனை டற்ற நிலையில் உணர்வற்ற பதவி யடைந்த ஸமயத்திலும் அவர்களுக்கு உலகத் தோற்றம் தென்படாதிராது; தென்படத் தான் செய்யும். இந்திர ஜாலம் கண் டிருப்போன் தன்னை அதில் உடம்படுத்தாதவாறு போல, அவர்கள் தம்மை உலகத்தின் மாறு படு தோற்றங்களுடன் உடம்படுத்திக் கொள்ள மாட்டார்கள்.

ஸூ. உ0:—(சுத்த மோனம் வேண்டுகிற) மற்றவர்களுக்கு, அந்த யோகம் சிரத்தை, வீர்யம், ஸ்ம்ருதி (நினை

வ்யா : ஸ்ம்ருதி என்பது சித்தத்தை தியானத்தினின்றும் நழுவவிடாதிருத்தல். "உணர்" வென்றது மெய்யறிவு. ஸமாதி யென்பது ஸம்பூர்ணவமைதி. சிரத்தை யென்பது விடாத நம்பிக்கை. அதினின்றும் ஊக்க முண்டாகிறது. ஊக்கத்திலிருந்து நழுவுதலற்ற சிந்தை பிறக்கிறது. அதிலிருந்து சித்தத் தெளிவு பிறக்கிறது. அது மெய்யறிவைத் தருகிறது. இவற்றை ஸாதிப்போர் உலகத் தோற்றத்தைக் கடந்து மஹா மோன நிலை பெற வல்லோராவர்.

ஸூ. உக:— தீவ்ர வேக முடையவர்களுக்கு ஸமாதி மிகவும் விரைவாகக் கை கூடுகிறது.

மதுரை நாராயணய்யர் மொழி பெயர்ப்பில் இந்த ஸூத்ரத்துக்குப் பின் குறிப்புச் சேர்க்கப் பட்டிருக்கிறது:— 'யோகிகள் ஒன்பது விதப் படிகளில் உள்ளவர்கள். உபாயங்கள். வைராக்கியங்கள் காரணங்களினால் அப் படிகள் ஏற்படுகின்றன. உபாயம் மூன்று விதம்:—ம்ருது, மத்யமம், அதிமாத்ரை. வைராக்கியமும் மூன்று விதம். அதிமாத்ரையான உபாயம், அதிமாத்ரையான வைராக்கியம் இவை யிரண்டும் கூடிய யோகிக்கு, இந்த ஸூத்ரத்தில் சொல்லிய ப்ரகாரம், ஸமாதி ஸமீபத்திலுள்ளது.'

ஸூ. உஉ:—அதிலும், மெதுவாகவேனும், மத்ய வேகமாகவேனும், அதி தீவ்ர வேகமாகவேனும் செல்

வதற்குத் தக்கபடி (பயன்களிலும்) பேதங்களுண்டா கின்றன.

இதன் பொருள் அந்த ஸூத்ரத்தின் கீழே காட்டப்பட்டது.

ஸூ. உக:—அன்றிக் கடவுளை வழிபடுதலாலும்.

வழிபடுதலாவது பரிபூர்ண பக்தி செலுத்துதல். இஃதே அந்த ஸமாதி எய்துவதற்குச் சிறந்த வழி. பக்தியே பரம ஸாதனம். "அகண்ட ஜ்ஞத்து"க் கும் ஆத்மா தெய்வம் என்று வேதம் சொல்லுகிறது.

அகண்ட ஜ்ஞத்து ரூபமே பரப்ரஹ்மம்.

'அண்ட பதார்த்தமுமடங்க வொரு நிறை வாகி யானந்தமான பரமே' என்று தாயுமானவர் சொல்லுகிறார்.

இந்த உலகம் உடம்பு; ஈசன் இதனுயிர்.

இந்த உலகமே தெய்வம்.

இந்த உலகம் எல்லை யில்லாதது.

திக்கும், காலமும் எல்லையில்லாதன. வஸ்து அநந்தம். ஸ்தூலம், ஸூக்ஷ்மம் என்பன வஸ்து பேதங்களல்ல, ரூப பேதங்கள்.

புராதன யோகிகள் ஈசனைப் புருஷோத்தமராக வணங்கி வந்தனர். ஸர்வத்திலும் ஈசனைப் பூஜித்தல் வேதாந்த யோகம்.

"ஈசனை வணங்கி வழி படுவதனாலும்" அந்த அஸம்ப்ரக்ஞாத ஸமாதி என்று கைவல்ய நிலை

ஈசன் என்பது எவ்விதப் பொருள்? சொல்லுக்
குகாதது. வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாதது.

எங்ஙனம் உபாஸனை செய்யத் தக்கது? அதன்
குணங்களால்.

அதன் குணங்களில் முக்யமானவை எவை?
எல்லையில்லாமை; ஸர்வ ரூபியாதல்; ரூபமில்லாமை;
காலமில்லாமை; காலமாதல்; முதலியன.

"ஸர்வ சக்தி" என்பது ஈச்வர சக்தியின் "ஸித்
தாந்த" நாமம். (அதாவது) 'சக்தி' என்பது கடவு
ளுக்கு ஸரியான ["ஸயன்டிபிக்" ஆன] நாமம்.

பக்தியினல் அஸம்ப்ரக்ஞாத ஸமாதி ஸித்தி
யாகு மென்று மூலம் சொல்லுகிறது.

பூர்வீக பக்திமான்கள் பெரும்பாலும் சில
களுக்கே பக்தி செலுத்தி வந்தனர்.

எந்த ரூபமாக பகவானை உபாஸனை செய்கிறே
மோ அவன் அந்த ரூபமாக நமக்குக் கருணை செய்
கிறான் என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

எனினும், உபாஸனையில் ரூபம் ப்ரதானமன்று,
பக்தியின் உறுதி ப்ரதானம்.

இந்த உலகத்தைக் காப்பது தெய்வம்.
இந்த உலகம் இருக்கிறது.
எனவே, இம்மாதரு சக்தியால் காக்கப்படுகிறது.
இவ்வுலகம் அசைகிறது.
ஆகலால், ஒரு சக்தி இதை அசைக்கிறது.
அந்த சக்திக்குக் கடவுளென்று பெயர்
சொல்லுகிறோம்.

அதனை வழிபடுதலாவது நம்புதல், எப்போதும் நம்பியிருத்தல்.

எப்போதும், எப்போதும், எப்போதிலும், எதிலும், எங்கும் நம்மைக் கடவுள் காக்கும் என்ற நம்பிக்கை கொண்டிருத்தல் பக்தி என்று சொல்லப்படும்.

அந்த பக்தியால் பெரிய விடுதலை அடையப்படும். அப்போது மனதின் வஞ்சனைகளெல்லாம் தீர்ந்து போய்விடும். நமக்குத் தீங்கு நேரக்கூடுமென்று கற்பனை செய்கிறது,—அல்லது ஸூசனை செய்கிறது, அல்லது சொல்கிறது,—பொருள் நமக்கு வெளியே நிற்பதாயினும் நம் உள்ளே நிற்பதாயினும் அதன் பெயரே மாயை.

அதை எரித்துத் தீரவேண்டும்.

பிதாவாகிய ஸூர்யன் அவனுடைய மக்களாகிய ஜீவர்களுக்கு இந்த லோகத்தில் மாயையைச் சுடுவதையே தொழிலாக வைத்துக் கொடுத்திருக்கிறான்.

பரமசிவன் த்ரிபுரத்தை எரித்தான்.
இன்னுமொரு த்ரிபுரம் தோன்றிற்று.
அதை மறுபடி எரித்தான்.
வேறொரு த்ரிபுரம் ஜனித்தது.
பரமசிவன் அதைச் சுட்டான்.
மற்றொரு த்ரிபுரம் உண்டாயிற்று.

அப்படியே இன்று வரையும் நடந்துகொண்டு வருகிறது.

மாயையாவது யாதெனில் :—

ஸர்வ மங்களமாகிய ஜகத்தில் ஜீவன் தன் கற்பனை

இது பூர்வத்தில் சங்கராசார்யர் சொன்ன லக்ஷணத்துக்கு பேதப்பட்டது. மாயையைத் தவிர ஜகத்தேயில்லை யென்று சங்கராசார்யர் சொன்னார். ஸர்வ மங்களாகாரமான ஜகத்தில் ஜீவன் கற்பனையால் செய்து கொள்ளும் தீமையே மாயையென்று நாம் சொல்லுகிறோம்.

இந்த மாயை என்ற ராக்ஷஸியின் வயிற்றில் கவலை, துன்பம், பயம், கஷ்டம், நோய், மரணம் முதலிய அஸுர ஜாதிகள் தோன்றி ஜீவகுலம் என்கிற பயிரை அழிக்கின்றன.

இந்த மாயை ஸர்வ ஜீவகோடிகளுக்கும் பொது.

இந்த மாயையைத் தொலைப்பதற்கு பக்தியே உபாயம்.

மதுரை நாராயணய்யர் எழுதிய யோகஸூத்ர உரையில் பின்வருமாறு சொல்லப்படுகிறது:—'வேறு வ்யாபாரமின்றி பக்தியினல் மாத்திரம் இச் சமாதி லாபம் ஸித்திக்கும். பக்தி என்பது மனம், மொழி, மெய்களால் நிகழ்வது. பக்தியினல் மாத்திரம் என்பதற்கு, பகவத்கீதை கூ-ஆம் அத்யாயம், உஉ-ஆம் சுலோகம் பார்க்க.'

வே பகவத்கீதை—கூ—உஉ, பின்வருமாறு :—

அநந்யா: சிந்தயந்தோ மாம் யே ஜநா: பர்யுபாஸதே
தேஷாம் நித்யாபியுக்தாநாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம்.

अनन्याश्चिन्तयन्तो मां ये जनाः पर्युपासते ।
तेषां नित्याभियुक्तानां योगक्षेमं वहाम्यहम् ॥

இதன் பொருள் யாதெனில் :—

"மாறுதலின்றி யெனை மனத்திடைக் கொண்டு
போற்றுவார் யாரே, அம் மக்கள்
தீரா யோகக் திருப்பார்; அவர் கம்
நன்மையும் போகமும் நானே வகுப்பேன்"
என்று பகவான் சொல்லுகிறார்.

இனிப் பின்வரும் குறிப்புக்கள் ஸ்வாமி விவேகா நந்தரின் இங்கிலீஷ் டீகையை ஆதாரமாக உடையன:—

பல அம்சங்களில் யோக சாஸ்த்ரமும் ஸாங்கிய மும் அபிப்பிராயக் கலப்புடையனவாக இருப்பினும், ஈசன் ஒருவன் உளனு என்ற விஷயத்தில் அவ்விரண்டு சாஸ்த்ரங்களும் தம்முள்ளே மூரண்படுகின்றன. ஸாங்க்ய சாஸ்த்ரப்படி ஈசனென்ற வஸ்துவேயில்லை. ஸாங்க்யர்களுடைய வாதம் பின்வருமாறு:—

இந்த ஜகத்துக்கு ஈசனொருவனிருப்பது ஸாத்ய மில்லை. ஏனென்றால், ஈசனொருவன் இருந்தால் அவன் ஓர் ஆத்மாவாக இருக்க வேண்டும். ஆத்மாவானவ் அது கட்டுப் பட்டேனும் விடுதலை பெற்றேனும் இரண்டிலொன்றாக இருத்தல் வேண்டும்.

கட்டுப் பட்டதாயின் அதற்குப் படைத்தல் முதலிய திறமைகள் இரா. ஜகத்திலே கட்டுண்ட அடிமையால், அதனை ஆக்கவும் ஆளவும் அழிக்கவும் இயலுமோ?

அங்ஙனமின்றி, ஈசன் விடுதலை பெற்ற ஆத்மாவாக இருக்கக் கூடுமெனில் அதுவும் ஸாத்ய மில்லை. ஏன்? விடுதலை பெற்ற ஆத்மா எதையுமே விரும்பாது. அதனுள்ளத்தில் ஸங்கற்பங்கள் எழமாட்டா.

ஆகவே, அவ்வித ஆத்மாவுக்கும் சிருஷ்டி முதலிய தொழில்களுக்கும் ஸம்பந்தம் ஸாத்ய மில்லை.

மேலும், ஸாங்க்ய சாஸ்த்ரத்தின் கொள்கைப் படி, ஈசனொருவன் இருக்க வேண்டிய அவசியமே யில்லை. பிரக்ருதியே போதும். ப்ரக்ருதியின் சக்திகளா லேயே சிருஷ்டி முதலிய தொழில்கள் நடைபெறுகின் றன. 'வீணாக ஒரு கடவுளைதற்கு?' என்கிறார்கள்.

ஆனால், பரிபூர்ண ஸித்தி பெறப் போகுந் தரு ணத்தில் முழுத் துறவில்லாமையால் பின்னடைந்து போய் பிரகிருதியிலே லயித்திருந்து அப் பிரகிருதிக் குத் தலைவர்களாக வெளிப்படும் ஜீவர்கள் பலரிருப்ப தாக ஸாங்க்ய சாஸ்த்ரம் சொல்லுகிறது. நாம் அனைவரும் அவ்விதமான தேவர்கள் ஆகலாமென்றும் வேதங்களிலே சொல்லப் பட்ட ஈசன் இந்த இனத் தைச் சேர்ந்தவனே யென்றும் ஸாங்க்யர்கள் சொல்லு கிறார்கள்.

இந்த ப்ரக்ருதிலயர்களுக்கு மேலே ஒருவன் நித்யனாகவும் ஆநந்தமயனாகவும் இருந்து சிருஷ்டி முதலிய தொழில்கள் செய்வதாக ஸாங்க்யர்கள் அங் கீகாரம் செய்வதில்லை.

இனி, யோக சாஸ்த்ரத்திலோ எனில் :—

ஈசனிருப்பதாகவே ஸித்தாந்தம். மற்ற எல்லா ஆத்மாக்களினின்றும் பிரிந்த இயல்பு உடையவனாகிய ஒரு தனி ஆத்மா, எப்போதும் நித்யனாகவும் முக்தனாக வும் ஸர்வக்ஞனாகவும் இருந்து, இவ்வுலகத்தின் தலைமை செலுத்துவதாக யோக சாஸ்த்ரம் சொல்லுகிறது.

இந்த ஈசன் படைக்கவன்; சிவன், விஷ்ணு, யேஹோவோ அல்லது அல்லா. 'படைக்கோன் காப்பா'னென்று சொல்லி வாழ்க்கையின் எல்லாவிதமான பொறுப்புக்களையும் அவனுடைய திருவடிக்கு ஸமர்ப்பணஞ் செய்து கர்மபந்தமின்றி விடுதலை பெறுவதே கைவல்ய முக்தி. இந்த ஈசனுடைய பக்தியை விட்ட போது நரகம்; இதைக் கைக்கொண்ட போது முக்தி.

'இவனே ஸர்வமும்' என்பது வேதாந்த ஸமரஸக் கொள்கை.

ஸ்வி. உபா. கவலைகளாலும், செய்கைப் பயன்களாலும், விருப்பங்களாலும் தீண்டப் படாத தொரு விசேஷ புருஷன் ஈசுவரன்.

ஸர்வ புருஷன் என்று கூறுவதே பொருந்தும். ஈசனை வேறு உயிர்களினின்றும் தனி உயிராகப் பிரிக்கும் போது, ஈசனுடைய உண்மையே வாதத்துக் கிடமாகிறது. 'ஸர்வம் இதம் ப்ரஹ்ம'—தோன்றுகின்ற இவ் வுலகனைத்தும் கடவுள்—என்போமாயின், நாஸ்திகர் கூட நமது ஸ்தானத்தை அசைக்க முடியாது. நாஸ்திகன் ப்ரக்ருதி யென்பதும், சைவன் சிவனென்பதும், மஹமதியன் அல்லா என்பதும்—ஒரே பதார்த்தம்; 'ஜகத்தின் காரணப் பொருள்.'

அதனை நாஸ்திகர் ஜடமென்று வாதிடுகிறார்கள். ஆனல், அதற்குள்ளே சக்தியும் ஜீவனும் அமைந்திருக்கின்றன என்பதை நாஸ்திகர் மறுக்க வழியில்லை.

ப்ரக்ருதி ஜடமென்று நாஸ்திகன் கூறலாம். ஆனல் நான் ஜடமில்லை. அந்த நாஸ்திகனும் ஜடமில்லை. எங்களுக்குள் விளங்கும் சைதன்யத்தை ஜடத்தின் குணமேயென்று நாஸ்திகன் சொல்லிய போதிலும், அது சைதன்யமே யில்லை யென்றுவது ஜடத்தின் இக்ர இனங்களுக்கும் இந்தச் சைதன்ய சக்திக்கும் அபாரமான பேதமில்லை யென்றுவது நாஸ்திகன் சொல்ல முடியாது.

அது எப்படியானலும், ஜடம் சித் இரண்டும் சேர்ந்தது வஸ்து. இதை நாஸ்திகன் மறுக்க முடியாது.

அந்த வஸ்துவையே வேதம் 'தெய்வம்' அல்லது 'கடவுள்' என்கிறது. எனவே இந்தக் கடவுள் இல்லை யென்று சொல்ல நாஸ்திகனல் ஸாதிக்கப் படாது.

ஆனல், பதஞ்சலி சொல்லுகிற ஈசுவரனை ஸாங்கியர்கள் மறுப்பது மட்டுமேயன்றி வேதாந்த சாஸ்த்ரமும் மறுக்கத் தான் செய்கிறது. இதைப் பற்றி மற்றொரு (செய்யுட்) ப்ரபந்தத்தில் நான் எழுதியிருக்கும் பாட்டொன்றை இங்கு எடுத்துக் காட்டுகிறேன்:—

'சொல்லடா ஹரியென்ற கடவுளெங்கே
சொல்லென்று ஹிரண்யன் தான் உறுமிக்கேட்க,
நல்ல தொரு மகன் சொல்வான்:—"தூணிலுள்
நாராயணன் துரும்பிலுள்ளா"னென்றான். [ளான்,
வல்லமை சேர் கடவுளிலா அணுவிவான்றில்லை,
மஹா சக்தி யில்லாத வஸ்து வில்லை,

அல்லலில்லை, அல்லலில்லை, அல்லலில்லை,
அனைத்துமே தெய்வ மென்ற லல்லலுண்டோ?'

எல்லாம் பரமாத்மாவே என்பதை விட்டுப் பதஞ் சலி, 'மற்ற உயிர்களினின்றும் பிரிந்த தனிப் புருஷ னே ஈசுவர' னென்று கூறியிருத்தல் அனுபவத்துக் கும் யுக்திக்கும் பொருந்தாது.

ஸூ. உரு. எல்லாவற்றையும் அறியும் அறிவின் வேர் (ஈசனிடம்) நிரதிசயமானது.

இந்த ஸூத்ரத்தில் 'நிரதிசயம்' என்ற பதம் 'தனக்கு மேல் பிறிதொன்றில்லாது' என்று பொருள்படுவது. 'மற்ற ஆத்மாக்களிடம் வித்து வடிவமாகக் காணப்படும் ஸர்வக்ஞத் தன்மை அவ னிடம் எல்லையற்றதாக விளங்குகிறது' என்று விவே காநந்தர் இந்த ஸூத்ரத்துக்குப் பொருள் சொல்லு கிறார். 'அவரிடத்தில் (ஈசுவரனிடத்தில்) எல்லா வற்றையும் அறியும் சக்தியானது உயர்வற உயர்வு பெற்றது.' என்று மதுரை நாராயணய்யர் அர்த்த மெழுதியிருக்கிறார்.

பின்வரும் விநோதமான குறிப்புக்கள் மதுரை நாராயணய்யர் வ்யாக்யானத்தில் காணப்படுகின்றன:—

'அவருடைய ஸ்ருஷ்டியிலல் அவருக்கு யா தொரு ப்ரயோஜனமுமில்லை. ப்ராணிகளின் ப்ர யோஜனம் உண்டாகின்றது. ப்ராணிகளுக்கு ஞான கர்மங்களை உபதேசிப்பதலல் கல்பம், ப்ரளயம், மஹா ப்ரளயம் இவைகளில் ஏற்படும் ஜனனமரணங்களி

னின்று ப்ராணிகள் கரையேறும்படி செய்வது தான் ஈசுவரன் அடையும் ப்ரயோஜனம்.

இவ்விதமே, பஞ்சசிகாசார்யர் அடியில் வருமாறு சொல்லியிருக்கிறார்: 'ஆதிவித்வான் (கபிலர்) சுத்தஸாத்விக சித்தத்தை நிர்மித்து, அதன் மூலமாகக் கருணையால் ஜிஞ்ஞாஸு (அறிவை விரும்புவோன்) ஆகிய ஆஸுரி என்பாருக்கு ஸாங்க்ய சாஸ்த்ரத்தை உபதேசித்தார்.' கபிலர் மஹா விஷ்ணுவின் அவதார மாகையால், ஈசுவரன் ப்ராக்ருத சரீரமில்லாதவராகையால், சுத்த சித்தத்தை நிர்மித்துக் கொண்டாரென்று சொல்லியிருக்கிறது.

அடியிற் கண்ட முக்கியமான அம்சங்களும் வேத நாராயணய்யர் வ்யாக்யானத்தினின்றும் எடுத் தெழுதப்படுகின்றன :—

'இவ்விதமே, வாயு புராணம்:—"எல்லாவற்றையும் அறியுந் தன்மை ; என்றுந் திருப்தியுடனிருத்தல் ; அநாதியான ஞானம், ஸ்வதந்த்ரம், குறைவில்லாத சக்தி, அநந்த சக்தி இவ் வாறும் ஈச்வர அங்கங்கள் என்று அறிஞர்கள் சொல்லுகிறார்கள். ஞானம், வைராக்யம், ஐசுவர்யம், தபஸ், ஸத்யம், சுசித்வம், தைர்யம், ஜகத்தை சிருஷ்டி செய்யும் சக்தி, ஆத்ம ஸ்வரூப ஞானம், எல்லாவற்றுக்கும் அதிஷ்டானமாக இருத்தல் என்ற பத்து குணங்கள் எப்பொழுதும் அழிவில்லாமல் ஈசுவரனிடம் இருக்கின்றன." இத் தன்மையான குணங்களை உடையவராலல் துக்கம் நிறைந்த இந்த லோகத்தை ஈசுவரன் ஸ்ருஷ்டித்

திருக்கமாட்டாரென்ற ஆசேபத்துக்கு ஸமாதானம் :—பரம ச்ரேயஸ்கரமான கைவல்யத்தை ப்ராணிகள் அடையும் பொருட்டு, ஸுக துக்கங்களை ஏற்படுத்தி அவைகளின் அநுபவங்களினால் ப்ராணிகள் மனம் சுத்தியாகி, ஞானம் உண்டாகி, ப்ரக்ருதி புருஷ விவேகம் உண்டாகிறது. அதனால் கைவல்யம் ஸித்தியாகிறது. இது ஈச்வரனுடைய பரம காருண்யத்தைக் காட்டுகிறது.....முதல் குரு.....யோகிகளின் குருபரம்பரையில் ஈச்வரன், ஹிரண்யகர்ப்பன்.'

மேலே, விவேகாநந்தரின் கருத்தைச் சொல்லுகிறேன் :—

'வான வெளியிலே வரம்புள்ள ஓர் ப்ரதேசத்தை (இடப் பரப்பை) நீ சிந்திப்பாயானால், அதற்கப்பாலும் வெளியுண்டென்ற சிந்தனை உனக்குண்டாகிறது. இப்படிப் போகப் போக நீ எத்தனை பெரிய வட்டம் போட்டாலும் அதற்கப்பால் எல்லையற்ற நிசைவெளி யிருக்கிறது. காலத்தைப் பற்றி நினைக்கும் போதும் இப்படியே தான் நடக்கிறது. ஒரு கோணைப் பொழுதைப் பற்றி எண்ணும் பொழுதே, காலம் நித்யமானது என்ற எண்ணம் உடன் தோன்றுகிறது. அறிவு விஷயத்திலும் இங்ஙனமே தான். மனிதனிடத்தே அறிவு ஒரு வித்தாக இருக்கிறது. ஆனால் அதிலிருந்து எல்லையற்ற அறிவொன்றிருப்பதாக ஊஹிக்கப் படுகிறது.'

இந்த 'எல்லையற்ற அறிவை'யே யோகிகள் ஈச்வரனென்கிறார்கள். இவ்விஷயத்தைப் பற்றி மேலே

(முதற்பாதம்) மூப்பத் தெட்டாம் ஸூத்ர உரையில் விரிவாகப் பேசுவோம். அங்கு காண்க.

ஸூ. உசு. அவன் காலத்தால் வரை யறுக்கப் படாதவ ரைதலால், அதிபூர்வமான குருக்களுக்குங்கூட அவனே குரு.

வ்யா : ஈசனே புராதன குரு என்கிறார். ஸர்வ ஞானத்துக்கும் உத்பத்தி ஸ்தானம் பகவானே யென் பது கருத்து.

ஸூ. உஎ. அவனுடைய வாசகம் ப்ரணவம்.

'ஓம்' என்பது ப்ரணவ மந்த்ரம். ப்ரணவமே பகவானுடைய முக்ய நாமம். ஓம் என்பது மூல மந்த்ரம். இந்த மந்த்ரத்துக்கு ஆகமங்கள் கோடி வகைகளில் பொருள் சொல்லுகின்றன. ப்ரணவம் என்ற சொல் எப்போதும் புதுமை யானது என்ற பொருளைத் தருவது. ஓம் என்ற பதம் 'ஆம்' என்று ஸம்மதியைக் குறிப்பது. மஹா கணபதியே இந்த மந்த்ரத்தின் அதிஷ்டான தேவதை. சிருஷ்டி அடையாளம்.

ஸூ. உஏ. அதன் பொருளை பாவனை செய்வதே அதனை ஜபித்தல்.

எல்லையற்ற அறிவுக் கடலென்ற பொருளை தியானம் செய்ய வேண்டும். அதுவே ஜபம். பொருளை பாவனை செய்யாமல் வெறுமே சொற்களைத் திரும்பத் திரும்பச் சொல்லுதல் அதிகப் பயன் தர மாட்டாது என்பது பதஞ்சலி மஹர்ஷியின் மதம்.

ஸர்வ வ்யாபியான பரமாத்மாவை மனதால் தியானஞ் செய்வது மிகவும் சிரமம். வாக்குக்கும் மனதுக்கும் எட்டாத பரம் பொருளை நாம் எங்ஙனம் தியானம் செய்வோம்?

எல்லையற்ற மங்கள மயமான ஞானக் கடல், எங்கும் நிறைந்த பராசக்தி, எல்லாப் பொருள்களிலும் தொழில் புரியும் சூடர்ப் பொருள், யாதுமாவது, பரம சக்தி, அகண்ட சைதந்யம், அகண்ட ஸௌந்தர்யம், பரம ஜ்யோதி, மஹா மௌனம்,— என்று பல விதமாக மனம் சொற்களை வழங்குகிறது. எனிலும், அப் பொருளைப் பற்றிக்கொள்ளுதல் மனத்துக்கு வழக்கப்படவில்லை. ஸர்வ சக்தியாகிய பரமாத்மா என்ற வஸ்துவை அர்த்தமயமாக தியானம் செய்தால் என்றி வெறுமே நாமஸ்மரணம் அதிகப்பயன் படாது என்று பதஞ்சலியார் சொல்வது ஒருவாறு மெய்யே யென்று கருதுவதற்குப் பல காரணங்கள் காட்டலாம்.

ஆனால் ஈசனுடைய நாமஸ்மரணத்தைக் காட்டிலும் வேறு ஞானம் உண்டாவதற்கே வேறு வழியிருப்பதாகத் தோன்றவில்லை. பகவந் நாமஸ்மரணமே தாரகம் என்ற பக்தர்களுடைய கொள்கையையே நான் உண்மையாகக் கருதுகிறேன்.

நாம் நம்புகிறோம்.

'நீ என்னைக் கொலை செய்தாலும், தெய்வமே, நான் உன்னைப் பின்னும் நம்புவேன்' என்ற வாக்யத்தை நாம் கடைப்பிடித்திருக்கிறோம்.

எல்லாத் துன்பங்களுக்கும், எல்லாச் சிறைவுகளுக்கும், எல்லா பயங்களுக்கும் கடவுளின் ஸம்ரக்ஷணை நிவாரணம்; வேறுவித ஸம்ரக்ஷணை உலகத்தில்லை. 'அவனன்றி யோரணுவு மசையாது.' சிவனன்றி வேறு புகலில்லை. தேடித் தேடிப் பார்த்தாலும் தெய்வ மன்றித் துணையில்லை. அந்தத் தெய்வம் நம் அறிவுக் கெட்ட வில்லை.

என்ன செய்வோம்?

பின்னும் கடவுளை நம்பத் தான் செய்வோம். 'நம்புவதே வழி யென்ற மறை தன்னை நாம் இன்று நம்பி விட்டோம்.'

என்றைக்கும், ஒரு நாளில்லாவிட்டால் ஒருநாள், இந்தப் பாரம் பொருள் மனிதனுடைய அறிவுக்குள்ளே அடைபடத் தான் செய்யும்.

'அஸாத்யத்தை மனிதன் ஸாத்ய மென்று கருதிப் பின்னும் பாடு பட வேண்டும். இல்லா விட்டால் அவன் உண்மையின் தேட்டத்தைக் கைவிட நேரும்,' என்றொரு ஐரோப்பிய மஹாகவி சொல்லுகிறார்.

கடவுள் அறிவுக்கும் வாக்குக்கும் எட்டாத தென்று சொன்னேன்? அது தவறான வார்த்தை. பூர்வ பக்ஷங்களை அநுசரித்துச் சொல்லிய வார்த்தை.

'ஸர்வம் பரமாத்மா' என்பதே ஸித்தாந்தம்.

எனவே, நீ தியானம் செய்யத் தொடங்குங் காலத்தில், முன்னே ஒரு விளக்கிருந்தால் அது தான் தெய்

வம். பல்லி யிருந்தால் அதுதேவ தியானத்துக் குரியது. சுவர் நின்றால் அதுதேவ கடவுள். எதுவும் தியானத்துக் குரிய பதார்த்தம்.

அங்கு அர்த்த பாவனை, 'எல்ல ரூபியான ஸர்வ மான பொருளை அதன் ஒரு பகுதியில் தியானிக்கிறேன்' என்று செய்யத் தகும்.

செப்புவ தெல்லாம் ஜபம், நான் சிந்திப்ப தெல்லாம் நின் ஒப்பில் தியாக மென ஓர்ந்தேன் பாபமே

என்று தாயுமானவர் சொல்லுகிறார்.

எல்லாம் கடவு ளாதலாலே, மனதில் தோன்றும் நிகழ்ச்சிகளெல்லாம் ஈசனுடைய தியானங்களாகக் கருதத் தக்கனவென்பது இக் கண்ணியின் பொருள்.

மேலும், கண் முன்னே நிற்கின்ற பொருள்க ளனைத்துமே தெய்வம் என்பது மெய்யாயின், நம்மைச் சூழ்ந்த அசேதன வஸ்துக்களைக் காட்டிலும் சேதன வஸ்துக்களிடம் நாம் அதிக தெய்வீக புத்தி செலுத்த வேண்டு மென்பது எளிதாக ஊகித்துக் கொள்ளத் தக்க விஷயமாம். இவற்றுள்ளும் மற்ற உயிர்களைக் காட்டிலும் மனித உயிர்களிடம் தேவதா புத்தி செலுத்தல் நமக் கெளிது. அது முக்கிய மாகச் செய்யத் தக்கது. அருகே யுள்ள பந்து மித்திரரிடம் பரமாத்ம தர்சனம் செய்தல் ஸாத்ய மாயின், பிறகு அவர்களை ஸ்மரிக்கும் பொழு தெல்லாம் சிவ ஸ்மரணம் செய்கிற பயனுண்டாகிறது.

மேலும், ஜபம் மூன்று விதமானது :—

(க) சிவ, சிவ, சிவ, அல்லது ராம, ராம, ராம, என இங்ஙனம் ஏதேனு மொரு மந்திரத்தை வாயினால் உரக்க உச்சரிப்பது.

(உ) அடி நா அசையும்படி, ஆனால் வெளியே பிறருக்கு ஓசை கேட்காதபடி, ஜபம் செய்வது.

(ங) மனதுக்குள்ளே சொல்லிக் கொள்வது.

இம் மூன்றுக்குள் மனதுக்குள்ளே சொல்லிக் கொள்ளுதல் விசேஷமானது.

இந்த ஜபத்தினால் சில ஸமயங்களில் தீங்கு நேரிடும். பொருளைக் கருதாமல் வெறுமே பதத்தை ஓயாமல் சொல்லும்படி புத்தியை வற்புறுத்துவதி னின்றும், புத்தி ப்ரமங் கொண்டு போகக் கூடும். ஆதலால்—'சிவ, சிவ' என்று உச்சரிப்போர் ஸர்வ மங்களத்தின் பெயரை உச்சரிக்கிறோம் என்ற பொரு ளறிந்து கொண்டு செய்தல் நன்று. இங்ஙனமே 'சக்தி' என்னும் பதம் திறமையைக் குறிக்கும். பிற மந்த்ரங்களையும் இங்ஙனமே கொள்ளுக. அர்த்த ஜபம் விசேஷ மானது.

எனினும், நாம ஸ்மரணத்தைக் காட்டிலும் பக வானுடைய கல்யாண குணங்களை நாம் ஓழுகிக் காட்டு தலே மேலான பூஜை யென்பதில் ஸந்தேஹ மில்லை. 'அறிவு ஸமபாவனை ஸந்தோஷமென்ற மலர்களால் அந்தத் தேவாம் பிரிவரிய ஆத்ம சுத்துவத்தை யர்ச்சிப்பதே பெரிய பூஜை' என்று பெரியோரும் கூறினர்.

மேலும், ஈசன் நான்.

"சுக்வமஸி" என்று வேதம் சொல்லுகிறது.

இவ்விஷயமாக நான் மற்றொரு தாளில் பாடியிருக்கும் விருத்த மொன்றை இங் கெடுத்துக் காட்டுகிறேன் :—

பூமியிலே வழங்கி வரு மதத்துக் கெல்லாம்
பொருளினை நாமிங் கெடுத்துப் புகலக் கேளாய்,
சாமி நீ, சாமி நீ, கடவு ணீ யே,
சுத்வ மஸி, சுத்வ மஸி, நீயே தெய்வம்.
பூமியிலே நீ கடவு ளில்லை யென்று
புகல்வது நின் மனத்துள்ளே புகுந்த மாயை.
சாமி நீ, யம் மாயை தன்னை நீக்கி
ஸதா காலம், "சிவோஹ" மென்று ஸாதிப்பாயே.

ஸ-வி. உக. இந்த ஜபத்திலிருந்து தனி யறிவின் உணர்வுண்டாகும், இடையூறுகள் நீங்கும்.

தனியறிவு என்பது ஆத்மா. யோக விக்நிக்கு நேரும் இடையூறுகள் எவை என்பது கீழே நடை-ஆம் ஸூத்ரத்தில் கூறப்படும்.

இனி அர்த்தத்திலே சிந்தனையை ஆழச் செலுத்தி ஜபம் பண்ணுவதால் முக்தி கூடப் பலித மாகிறபோது, இஹலோகத்தில் அறிவு, கீர்த்தி, வீர்யம் முதலிய பெருமைகள் வேண்டுவோருக்கு ஜபம் எவ்வளவு தூரம் அனுகூலம் என்பது சொல்ல வேண்டுவதில்லை.

ஸ-வி. நட. நோய், உள்ளச் சோர்வு, ஸந்தேஹம் அஜாக்ரதை, சோம்பர், இந்திரிய விஷயங்களில் பற்று

டைமை, பிழையுடைய காட்சி, யோகபூமி யொன்றை எட்டுதற்குத் திறமில்லாமை, எட்டிய பூமியினின்றும் நழுவுதல்—இவை யோகிக்கு நேரிடும் இடையூறுகளாம்.

நோயில்லாமை யோக ஸாதனத்துக்கு மிகவும் முக்கியமாகும். நோயானிக்கு யோகஸாதனம் கை கூடாது. நோய் மனத்தின் கற்பனையால் உண்டா கிறது. பொறாமை, லோபம், அஸூயை, கோபம், களவு முதலிய துர்க்குணங்களால் உண்டாகும் பயமே நோய்க்கு ப்ரதான காரணம். எல்லா ஜீவராசிகளும் பரமாத்ம ஸ்வரூப மென்ற ஞான முண்டாய், அதி னின்றும் ஸமபாவனை ஏற்பட்டால், பிறகு ஒருவனுக்கு பயம் செத்துப்போகும். பயம் செத்தாலொழிய நோய் சாகாது. நோய் ஸம்பந்தமான பயங்களை உடனே அழித்துக்கொள்ள முயலுதல் அப்யாஸியின் முதற்கடமை.

உள்ளச் சோர்விலும் சிரத்தைக் குறைவு நேரும். ஸாதனத்துக்கு வேண்டிய ஊக்க மில்லாமல் போய் விடும். இஃதொரு தடை.

மேலும், ஸாதனத்தினின்றும் ஒரு சில ஸாமான்ய ஸித்திகளேனும் தோன்றும் வரை, அடிக்கடி ஸம்சயங் கள் ஜனித்துக்கொண்டே யிருக்கும். இந்த ஸம்சயம் ஒரு தடை. ஊக்கத்தாலும், ஸத்யத்தாலும் ஜயத்தை வெல்லவேண்டும்.

யோக சாஸ்த்ரத்தில் 'பூமி' என்றால் 'அனு பவநிலை' என்றர்த்தம். ஸாதனத்திலே எய்தும் படிப் படியான சித்த நிலைகளுக்கு "பூமி" களென்று பெயர்.

ஒருவன் எட்டிய பூமியினின்றும் கழுவி விடாமல் இருப்பதற்கு ஒரே உபாயந்தான் உண்டு. அதாவது, இன்னும் மேலே ஏறிச் செல்ல முயலுதல். எதிலும் மேன்மேலே ஏறுதவன் தான் தற்சுற்றியைப் பாதுகாக்க முடியாது. ஏற முயற்சி செய்துகொண்டே போகவேண்டும். இல்லாவிட்டால், ப்ரகிருதி உன்னை இறக்கிக்கொண்டே போகும்.

ஸூ. சுக. ஸமாதியிலிருந்து கழுவுதல் நேர்ந்தால், அதனுடனே, துக்கம், மனநோவு, மெய்ந்நடுக்கம், பெருமூச்செறிதல் என்பவை தோன்றுகின்றன.

ஸூ. சுஉ. அவற்றை அகற்றுவதற்கு ஒரே தத்துவத்தை அப்யஸிப்பதே உபாயம்.

வ்யா : 'ஒரே தத்வம்' என்பதற்கு 'ஈசுவரன்' என்று சிலர் பொருளுரைக்கிறார்கள். 'யாதாயிது மொரு தத்வம்' என்று விஞ்ஞானபிக்ஷு அர்த்தம் சொல்லுகிறார். யாதாயிதுமொரு தத்வத்தை எடுத்துக்கொண்டு அதையே தியானம் செய்து பழக்கப் படுத்திவரல், மேற்கூறப்பட்ட இடையூறுகள் நீங்கி விடும்.

இது பொதுப்படையான வார்த்தை. இன்னின்ன தத்துவங்கள் அப்யாஸத்துக் குரியன என்பதைக் கீழே முறையாக விரித்துச் சொல்லுகிறார். இவற்றுள் ஒருவருக்கு வேண்டதக்கது பிறருக்கு வேண்டதகாத தாகலாம். ஆதலால், அவரவர் தகுதமக் கிணங்கிய அப்யாஸத்தைக் கைப்பற்றிக்கொள்ளு

கல் பொருந்தும். அதினின்றும் உள்ளத்தில் அமைதி பிறக்கக் காணலாம்.

ஸ-ரி. ஈஈ. சுகம் துக்கம் புண்ணியம் பாவம் இவை யுள்ள விஷயங்களில் முறையே நட்பு, கருணை, மகிழ்ச்சி, உபேக்ஷை என்பவற்றைச் செலுத்துவதால் சித்தத்திலே அமைதி யுண்டாகும்.

வ்யா : சுகமாக வாழ்வோனைக் கண்டு நீ பொறுமைப் படாமல் அவனிடம் நட்புச் செலுத்த வேண்டும். துக்கப் படுவோரிடம் கருணை செலுத்தவேண்டும். புண்ணியச் செயல்களைக் கண்டு மகிழ்ச்சி கொள்ள வேண்டும். பாவச் செயல்களைக் கண்டால் அவற்றில் சினமடையாமல் புறக்கணிப்பு அடைதல் வேண்டும்.

ஸ-ரி. ஈச. விதிப்படி மூச்சை வெளியே விடுவதனாலும், உள்ளே அடக்குவதனாலும் (சித்தம்) அமைதி பெறும்.

இங்ஙனம் சித்த சாந்திக்காக மூச்சை ஆளும் முறைமை 'ப்ராணயாமம்' என்று சொல்லப்படும். மூச்சை உள்ளே இழுத்தல் பூரகமென்றும், கட்டி வைத்தல் கும்பகமென்றும், வெளியே விடுதல் ரேசக மென்றும் கூறப்படும். ப்ராணயாமத்தின் பல வகைகளையும், அவற்றுக்குரிய விதிகளையும் ஹடயோக நூல்களிலே கண்டு கொள்ளுக. மனதை யாதொரு சிரமமில்லாமல் மூச்சுப் போக்குவரவிலே செலுத்தி

மூச்சை இயற்கைப்படி கடைபெறவிடுதல் ப்ராணயா மங்களில் சிறந்தது என்று நான் நினைக்கிறேன்.

'ப்ராணன்' என்ற பதம் மூலத்திலுள்ளது. அதற்கு 'மூச்சு' என்பது சரியான மொழி பெயர்ப் பன்று. மூச்சுக் காற்றான ஜீவசக்திக்கு ப்ராணன் என்று பெயர்.

மனதை எங்கே நிறுத்துகிறோமோ அந்த இடத் தில் உயிர் நிற்கிறது. உயிர் நிற்குமிடத்தில் மூச்சு நிற்கும்.

ஸ்வ. கூரு. (குறிப்பிட்டதொரு) பொருளை யுடைய தாகிய (மனச்) செய்கை தோன்றுமிடத்தே, மனம் கட் டுப் படும்.

வ்யா: "விஷயவதீ வா ப்ரவ்ருத்தி ருத்பன்னா மனஸஸ் ஸ்திதி நிபந்தநீ" என்பது மூலம்.

தெளிவாக, இதன் பொருள், 'யாதேனு மொரு பயனுடையதாகிய தொழில் செய்யப் புகுமிடத்தே மனம் கட்டப்பட்டு நிற்கும்' என்பதுதான். எனினும் ஸ்தூலமான வெளிப்படையான பொருளைத் திரஸ் காரம் செய்துவிட்டு, வலிந்து பிற பொருள் கொள்ளு தலே பண்டிதத் தன்மைக்கு லக்ஷணமென்னும் கருத் துடைய புராதன வ்யாக்யாநகாரர், வேறு பல இடங் களில் செய்திருக்குமாறே, இந்த ஸூத்ரத்துக்கும் வலிந்து பிறபொருள் காட்டி இருக்கின்றனர்.

அவர்கள் சொல்லிய பொருளைச் சோதனைபண்ணி, யுக்திக்குப் பொருந்துமா என்று பார்த்த பிறகே கொள்

ரூதல் வழக்கமாக வுடைய ஸ்வாமி விவேகாநந்தர் இவ் விடத்தே கவனக் குறைவால் பூர்வ்க ஜன்மங்களையே பரிசோதனை யின்றிக் கைக்கொண்டு பின்வருமாறு பொருள் சொல்லுகிறார் :—

'அப்யாஸத்திலிருந்து இந்திரியங்களுக்குப் புலப் படக் கூடிய புதுமைகளைக் காணும் மிடத்தே, மனம் அந்த அப்யாஸத்தில் நிலைபெற்றுவிடும்.' என்று விவேகாநந்தர் வ்யாக்யானம் பல்லுகிறார். அப்பால் பின்வரும் குறிப்புக்கள் அவரால் சேர்க்கப்படுகின்றன. 'மனத்தை அடிக்கடி மூக்கின் நுனியிலே நிற்கும்படி செய்தால் சில தினங்களுக்கப்பால் அற்புதமான ஸுகந் தங்கள் புலப்படுமென்று யோகிகள் சொல்லுகிறார்கள். நாக்கின் அடியில் நிறுத்திலுல் விசேஷமான ஒலிகள் செவியுறும். நாக்கின் நுனியிலே நிறுத்திலுல் நல்ல ருசிகளின் உணர்ச்சி உண்டாகும். இவ்வாறு எத்தனையோ சோதனைகள் சொல்லப் படுகின்றன. அப்யாஸத்தில் ஸம்சயம் ஏற்படுவதால் மேற் சொல்ல மாட்டாதவர்களுக்கு இந்த அனுபவங்கள் தான் றிலுல் ஸம்சயங்கள் நீங்கி மேல் அபிவிருத்தி செய்ய இடமுண்டாகு மென்பது யோகிகளின் கருத்தம்.'

ஸ. ஹ. அல்லது, சோகமில்லாத ஜ்ஞோதிமய மான மனநிலை (இதனாலும் சித்த ஸமாதானம் ஏற் படும்.)

வ்யா: ஸ்வாமி விவேகாநந்தர் எழுதுகிறார் :—

'ஹ்ருதய ஸ்தலத்தில் ஒரு தாமரை யிருப்பதாக, நினைத்துக்கொள். அதன் இதழ்க ளெல்லாம் கவிழ்ந்து

ருதல் வழக்கமாக வுடைய ஸ்வாமி விவேகாநந்தர் இவ் விடத்தே கவனக் குறைவால் பூர்வீக வுகைகளையே பரிசோதனை யின்றிக் கைக்கொண்டு பின்வருமாறு பொருள் சொல்லுகிறார் :—

'அப்யாஸத்திலிருந்து இந்திரியங்களுக்குப் புலப் படக் கூடிய புதுமைகளைக் காணும் மிடத்தே, மனம் அந்த அப்யாஸத்தில் நிலைபெற்றுவிடும்.' என்று விவேகாநந்தர் வ்யாக்யானம் பண்ணுகிறார். அப்பால் பின்வரும் குறிப்புக்கள் அவரால் சேர்க்கப்படுகின்றன. 'மனத்தை அடிக்கடி மூக்கின் நுனியிலே நிற்கும்படி செய்தால் சில தினங்களுக்கப்பால் அற்புதமான ஸுகந் தங்கள் புலப்படுமென்று யோகிகள் சொல்லுகிறார்கள். நாக்கின் அடியில் நிறுத்தினால் விசேஷமான ஒலிகள் செவியுறும். நாக்கின் நுனியிலே நிறுத்தினால் நல்ல ருசிகளின் உணர்ச்சி உண்டாகும். இவ்வாறு எத்தனையோ சோதனைகள் சொல்லப் படுகின்றன. அப்யாஸத்தில் ஸம்சயம் ஏற்படுவதால் மேற் செல்ல மாட்டாதவர்களுக்கு இந்த அனுபவங்கள் தான் தினைல் ஸம்சயங்கள் நீங்கி மேல் அபிவிருத்தி செய்ய இடமுண்டாகு மென்பது யோகிகளின் கருத்தாம்.'

ஸ. கூ. அல்லது, சோகமில்லாத ஜோதிமய மான மனநிலை (இதனாலும் சித்த ஸமாதானம் ஏற் படும்.)

வ்யா: ஸ்வாமி விவேகாநந்தர் எழுதுகிறார் :—

'ஏதாவது ஒரு ஸ்தலத்தில் ஒரு காமனை யிருப்பதாக, நினைத்துக்கொள். அதன் இதழ்க ளெல்லாம் கவிழ்ந்து

ப்ரவேசிக்கிறது. அதற்கு மேல் போய்க்கொண்டிருக்கிறது ஸுஷும்ந நாடி. அது வெளியிலுள்ள ஸூர்ய மண்டலங்களைத் தாண்டிப் போகிறது. அதுதான் மனத்தின் ஸரியான ஸ்தானம். அதில் தாரணை தியானம் செய்தால் "சித்த ஸம்வித்" உண்டாகிறது. வஸ்துக்களின் உண்மையான (Thought-forms) நிலையின் ஸாக்ஷாத்காரம் பெறுகிறான். அந்த ஸ்தானத்தில் மனம் நிற்பதிலால், ஸூர்யன், சந்திரன், க்ரஹங்கள், நக்ஷத்ரங்கள் இவற்றின் தேஜோ ரூபங்கள் நாலுவிதமாகத் தோன்றுகின்றன; அதாவது, மனம் அந்த ரூபங்களாகிறது. ஸுஷும்ந நாடியை ஆச்ரயித்திருக்கின்றமையால் இந்த மநஸ், ரஜஸ் தமஸ் இரண்டும் குறைந்தும் ஸத்வம் மேலிட்டும் இருக்கிறது. அதனால் அந்த நிலை 'ஜ்யோதிஷ்மதீ' (ஜோதியுடையது) என்று ஸூத்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.'

ஆயினும், மேற்கூறிய இரண்டு ஸூத்ரங்களின் (நாடு, நாசு) தெளிவான பொருள் மீட்டு மொரு முறை இங்கு சுருக்கமாகக் காட்டத்தக்கது.

ஒரு பொருளை யுடைய தொழில் நிகழுமிடத்தே மனம் ஒரு நிலைப்படு மென்பது நாடு-ஆம் ஸூத்ரக் கருத்து.

துன்பம் யாதுமன்றி ஒளியுடைய மனநிலை, (காதல், அன்பு, ஔஷதம் முதலியவற்றால்) பெறுமிடத்தே, சித்த ஸமாதானம் பிறக்கு மென்பது நாசு-ஆம் ஸூத்ரக் கருத்து.

ஸூ. கூஎ. அல்லது விருப்பப்பொருள் நீங்கிய சித்தத்தினல் மனம் ஒரு நிலைப்படும்.

வ்யா: 'வீத ராக விஷயம் வா சித்தம்' என்பது மூலம். இதன் பொருளை தன்கு தெளிவிக்கும் பொருட்டாக கூடு—ஆம் ஸூத்ரத்தி லிருந்து மற் றொரு முறை திருப்பிச் சொல்ல வேண்டும்.

விஷய வதீ வா ப்ரவ்ருத்தி ருத்பன்ன

மனஸஸ் ஸ்திதி நிபந்தனீ (கூடு)

(அதாவது) விஷய முடைய தெளிவில் மனதின் நிலையைக் கட்டும்.

விசோகா வா ஜ்யோதிஷ்மதி. (கூசு)

சோக மற்ற ஒளியுடைய ப்ரவ்ருத்தியும் (அங் ஙனமே மனதைக் கட்டும்).

வீத ராக விஷயம் வா சித்தம் (கூஎ)

விருப்பப் பொருள் நீங்கிய சித்தமும் (அங் ஙனமே மனதைக் கட்டும்).

வா என்னும் இனப் பொருள் குறிக்கும் சொல் மூன்று ஸூத்ரங்களி லும் இருக்கல் காண்க. ('வா'—அல்லது).

இங்கு பல்லடைக் காலத்து வ்யாக்யான கர்த்தாக் களை அனுஸரித்து ஸ்வாமி விவேகானந்தர்:—

'அல்லது, விருப்பம் நீங்கிய ஒரு சித்தத்தைப் பற்றி தியானம் செய்யலாம்' என்று பொரு ளுரைத் தப் பின்வருமாறு விளக்க முறை தாகிறார்:—

'யாதேனும் ஒரு ஞானியுடைய சித்தத்தைப் பற்றிச் சிந்தனை செய். அச் சித்தம் எல்லா விருப்பங் களும் நீங்கி யிருப்பதை யென்னை. அத்தகைய சித் தத்தைப் பற்றி தியானம் செய்வதால் உன் உள்ளத் திலே அமைதி யுண்டாகும்.'

இங்ஙனமே மதுரை நாராயணையர் உரையில்:—

'அல்லது, ஆசை விட்ட மறை புருஷர்களை மனம் விஷயீகரித்தலினால் (அது ஸ்தைர்யம் பெறும்)' என்று பொருள் கூறி விட்டுப் பின் வரும் குறிப்பு எழுதி யிருக்கிறார் :—

'ஆசை விட்டவர்களான வ்யாஸர் முதலிய மறர்ஷிகளின் குணங்களை தியானித்தல் வேண்டும். அவர்களின் மன நிலையை தியானித்தலால், அந்த நிலையை, அப்யாஸம் செய்கிற யோகி பெறுகிறான்.'

'உன் சித்தத்தில் விருப்பம் நீங்கினால் ஸமா தானம் ஏற்படும்' என்று நாம் பொருள் சொல்லு கிறோம். 'விருப்பமற்ற மற்றொரு சித்தத்தின் த்யாகத் தால் சாந்தி விளையும்' என்று மூன்றிய வ்யாக்யாந காரர் வலிந்து பொருள் கொண்டனர். இது தான் பேதம்.

ஸ்வ. சுபு. அல்லது, கனவிலும் உறக்கத்திலும் உண்டாகிய ஞானத்தை தியானம் செய்தல்.

இதனாலும் சித்த சாந்தி உண்டாகு மென்கிறார். கனவிலே தன்னை அறிதல் ஸாதனத்தால் எளிதாகச் செய்துகொள்ளலாம். கனவிலே எண்ணியது தான்

கனவாக மீண்டும் வருகிறது. ஸ்வப்நத்தில் நாம் இதர லோகங்களுடன் ஸம்பந்தப் படுவதாகவும் இவ்வுலகத்தில் தோன்ற இடமில்லாத அற்புத ஞானம் இதர லோகங்களி னின்றும் நமக்குக் கனவில் எப்தக் கூடுமென்றும் சிலர் சொல்லுகிறார்கள். ஸ்வப்நத்தில் நாம் இதர லோகங்களுடனே ஸம்பந்தப் படுகிறோ மென்பது மெய்தான்.

ஸங்கேதத்தில் ஸ்வர ஸ்தானங்கள்—ஸ, ரி, க, ம, ப, த, நி—என ஏழு இருக்கின்றன. ஆதலால் நாம் எந்த ஓலியையும் "ஸ" (ஷட்ஜம்) என்றும் ஸமஸ்தானம் அதற்குக் கீக்கபடி ம்ற்ற—ரி, க, ம, ப, த, நி—பாடலாம்.

நாம் பாடும்போதே, கீழே சில ஸ்வரங்கள் எட்டாதது போலவும் சரீரமும் மற்றும் வினாள்வதாகவும் தோன்றுகிறது. அதாவது—த்ருத்வாத்தமாக—முப்பு "க" (காந்தாரம்) அல்லது "ம" (மத்யமம்) வினாள்வதாக இப்போது "ஸ" (ஷட்ஜம்) என்றும் ஸமஸ்தானத்தைக் கொண்டு அதற்கு மேல் ஏழ்வரைசக்ருத் சக்கபடி ரி, க, ம, ப, த, நி. என்றும் கொள்ளலாம். எப்படி நாம் சொன்னாலும் பாடினாலும் ஸாதாரணமாக மானிகுறைவுடைய தொனியுடை உலகு இரண்டரை ஸ்தாயிகளான். ஒரு ஸ, ரி, க, ம, ப, த, நி—ஒரு ஸ்தாயி அதற்கு மேலுள்ள ஸ, ரி, க, ம, ப, த, நி, மேல் ஸ்தாயி. எடுப்புக் கீழேயுள்ளது கீழ்ஸ்தாயி.

இங்ஙனம் ஸாதாரணமாக மானிகுறைவுடைய தொனியைக்கு இரண்டரை ஸ்தாயிகான் எட்டும். சிலருக்கு

மூன்று ஸ்தாயியும், சிலருக்கு இன்னும் அதிக மாகவும் எட்டக்கூடு மென்று சொல்லுகிறார்கள். இருந்தாலும் மூன்றரை ஸ்தாயிக்கு மேலே மனிதக் தொண்டை பேசுதல் ஸாத்யமில்லை.

ஆனால், ஒலியுலகத்தில் அநந்த ஸ்தாயிகள் இருக் கின்றன. கிளிக்குஞ்சு கத்துவதை ஷட்ஜமாக வைத் துக் கொள்வோம். சந்த்ர மண்டலம் இடிந்து பூமி மேல் விழுந்தால் அதிலுண்டாகும் ஒலியை கைகிளிக் குஞ்சின் ஒலியினின்றும் எத்தனை ஸ்தாயி மேலாகக் கணக்கிடலாம்? ஊழிக் காற்று அடிப்பதாக வைத்துக் கொள்வோம். நமது ஸூர்ய கோளமும் அதனைச் சூழ்ந்த க்ரஹ குடும்பமும் தம்முள்ளே மோதி இடி பட்டுச் சிதறிப் பொடியாவதாக பாவனை செய்வோம். அதில் தோன்றும் ஒலி கைகிளிக்குஞ்சு ஸ்தாயிக்கு மேலே எவ்வளவு தூரம் போகும்? இங்ஙனம் ஒலி யுலகத்து ஸ்தாயிகள் அநந்தமாயினும் மனிதனுடைய தொண்டைக்கு இரண்டரை ஸ்தாயிகள் மாத்திரமே எட்டுவது போல, அவனுடைய செவிப்புலனுக்கும் ஏழு ஸ்தாயிகள் தான் அகப்படு மென்று ஜகதீச சந்த்ர வஸு கணக்குச் சொல்லியதாக நாபகமிருக்கிறது.

அதாவது,—எங்ஙனம் கூறுவேன்?—அநந்த மான—எண்ணைத் தொலையாத, எண்ண எண்ண எண்ண எண்ண எண்ண எண்ணத் தொலையாத—ஒலிக் கடலில் ஏழு ஸ்தாயி நமது செவிக்கெட்டு மென்றால் நமது செவிப்புலனுடைய சிறுமையை நான் எங்ஙனம் வருத்துக் கா[illegible]

இது போல அநந்தமான—எல்லை யில்லாத எல்லையே யில்லாத—ஜ்யோதிக் கடலில் நம்முடைய விழிக்கும் சுமார் ஏழு "ஸ்காயி" ஒளி தான் தென் படு மென்றும் அதற்கும் மேலும் கீழும் நாம் முழுக் குருடென்றும் ஜகதீச சந்த்ர வஸு சொல்லி யிருக் கிறார். ஸ்காயிக் கணக்கு ஸரியாக ஞாபகமில்லை, எனக்கிப்போது. எழுக்குமேலே போகாது; நிச்சயந் தான் எனக்கு.

ஒளிக்கடலோ பெரிதினும் பெரிது,—எழுத்தில் எங்ஙனம் காட்டுவோம்?—அகண்டம்.

ஒளியோ எல்லையற்றது.

நாமோ துளி தவிர முழுக் குருடு!

மனிதன் இருளாகக் கருதுவதை ஆந்தை ஒளி யாகக் கருதுகிறது. ஒளி விஷயத்தில் ஆந்தை நம் மைக் காட்டிலும் கீழ் "ஸ்காயி" பழகி யிருக்கிறது. ஆனால், நம்முடைய "ஸ்காயி" ஆந்தைக்கிடைட்டாது. பகலில் நாம் ஸாதாரண ஒளியாகக் கருதும் வெயி லொளி ஆந்தைக்குக் கண்கூச்சத்தை விளைவிக்கிறது. நமக்கே ஸூர்யனை நேரே பார்த்தால்—நல்ல பயிற்சி யுடையோர் தவிர, ஸாதாரண மனிதருக்கெல்லாம்—கண் கூசுகிறது, பார்க்க முடியாது; பெரும்பாலும் குருடு தான்.

ஆனால் பருந்து ஸூர்யனைக் கூசாமல் பார்க் கும். எனவே, ஒளி விஷயத்தில் நம்மைக் காட்டிலும்

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஒரு நாள் காலையில் பத்மாஸனத்தில் வீற்றிருந்து உதய ஸூர்யனை நோக்கத் தொடங்கியவர் அரை விநாடி கூட அந்த ஸூர்யனை விட்டுக் கண்ணை அப்புறப் படுத்தாமல், நடுப்பகலில் முகத்தை ஸூர்யனுக்கு நேரே காமரை போல் காட்டியும், அங்ஙனமே நேராமாக நேராமாக முதுகை மல்லாந்து வளைத்துக்கொண்டே, ஸூர்யனை விட்டு விழிகளை விலக்காதபடி மாலை நேரத்தில் அந்த ஸூர்யன் முன்னே (கன்முகத்தை முதுகுப் புறத்தினின்றும் காதலன் முத்த மிடுவதற்கு நின்றபடி மல்லாந்து வளைந்து முகங் காட்டுங் காதலி போலே) காட்டியும், இங்ஙனம்—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்—ஒரு நாள் முழுதும் யோகப் பயிற்சி செய்தாரென்று சொல்லப்படுகிறது.

எனவே, ஸாதாரண மனிதரைக் காட்டிலும் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவருக்கு ஒளி விஷயத்தில் அதிக ஸ்தாயிகள் எட்டின.

இங்ஙனம், கோடி ஸூர்ய ப்ரகாசமுண்டானால்? அந்த கோடானு கோடி ஸூர்யன்கள் ஜகத்திலிருக்கின்றன. அவை ஒளி வீசத் தான் செய்கின்றன. ஆனால் நம்முடைய விழிப்புலன் சிறிது. நாம் மிகச் சிறிய எல்லைதான் பார்க்கிறோம்.

இங்ஙனம் ஜகத்தில் தத்துவங்களெல்லாம் அநந்தமாகவே யிருக்கின்றன. விரிக்கிற் பெருகும்.

இங்ஙனமே, நம்முடைய சைதன்யமும் அநந்த விஸ்தார முடையது.

பரமாத்ம சைதந்யத்தின் மஹிமையையே பூர்வ யோகிகள் அநந்த கோடியு கோடியு கோடியு கோடி ஸௌர்ய ஜ்யோதியாக வர்ணித் திருக்கிறார்கள், உபமித்திருக்கிறார்கள்.

எல்லாம்—என்பது ஸர்வத்தின் பெயர்.

எல் என்பது, தமிழில், ஸௌர்யனைக் குப் பெயர்.

ஸர்வமென்று மனக் கொள்ளைக்கு ப் புறம்பாக நம்முடைய மூன்றேர் ஸௌர்யனை யூகத்தினை செய்தது யுக்கமே யாகும்.

'ஸர்வ மென்று மனக் கொள்ளை வேறு; ஸர்வ மென்று ஞான லோகம் வேறு; ஸர்வ மென்ற பதார்த் லோகம் வேறு; இதற்குள்ளே யே ஸர்வம் நிலைமய மான லோகம் வேறு; ஸர்வம் தத்தீஜ மயமான லோகம் வேறு; கால மயமான ஜகத் வேறு' எனப் பலவாக அநந்த லோகங்கள் தோன்று மாயினும், ஸர்வம் ஒன்று. அதன் பெயர் கடவுள்.

மன்னுயிர் அனுவே; வானுயர் அண்டம். அதில் அநந்த லோகங்களை அநந்த வஸ்துக்களாலே பெருக் கிய அநந்தாநந்த வஸ்து.

எனவே ஒரு கல்லிலும் தொழலாம்; பதுமை யிலும் தொழலாம்; அந்த ஸர்வமாகிய கடவுளைப் பெண்ணிலும் தொழலாம்; ஆணிலும் தொழலாம்.

ஸர்வமும் அஃதெனில், ஸர்வ பதார்த்தங்களும் அதன் ப்ரதிநிதிகளாகக் கருதி வணங்குதற் குரியன அல்லவோ ?

மேலே நாம் விளக்கியபடி உணர்வு—அறிவு, சைதந்யம்—அநந்தமாக இருக்கவும், நமக்கு அதில் இரண்டு மூன்று "ஸ்தாயிகள்" மாத்திரமே ஸாதாரண நிலையில் எட்டுகின்றன. மிஞ்சிப் போனால், சிலருக்கு எட்டு ஸ்தாயி ஒன்பது ஸ்தாயிகள் எட்டுகின்றன. அவர்களை மஹாத்மாக்களென்றும், அவதார புருஷர்களென்றுங் கொண்டாடுகிறோம். இதுநிற்க.

சைதந்யமாகிய எல்லையற்ற கடலில் நமக்குத் தென்படும் ஓரிரண்டு ஸ்தாயிகளிலுங் கூட நாம் ஆரோஹணா அவரோஹணா க்ரமங்களிலும், ஸ்வரக் கோவைகளிலும், ராக வேற்றுமைகளிலும் எண்ணிறந்த விசித்ர விசித்ரமான அநுபவங்கள் பெறுதல் ஸாத்யமே யாகும். அதுதான் இந்த ஜகத்தில் மஹத்தான ஆச்சர்யம்.

நம்முடைய வரையறுக்கப் பட்ட புலனுணர்வுக்குள்ளே அனந்தங்கள் பல இருக்கின்றன. ஸ்வரங்கள் ஏழு தானே ? அப்படி இருந்தும், அவற்றின் கலப்புக்களால் இந்த பூமண்டலத்தின் மீது இதுவரை எற்பட்டனவும் இப்போது எற்பட்டு வருவனவும் இனி எற்படப் போவனவு மாகிய ராக பேதங்களே எண்ணில்லாதன. ஜ்யோதி விஷயத்

திலும் அப்படியே. நமக்குப் புலனுகக் கூடிய ஜ்யோதிஸ்காயிகள் சிலவே யாயினும், இவற்றுள் காணுப் வர்ண பேதங்கள் அநேகமாகும்.

இங்ஙனமே, நம்முடைய ஸாதாரண ஜாக்ரபுத்திக்கு—அதாவது, ஸாதாரண மனிதனுடைய ஸாதாரண ஜாக்ர புத்திக்கு—இடமாகிய ஸைதன்ய ஸ்காயிகள் சிலவே யாயினும், இதற்குள்ளே அநந்தமான ஸம்பவங்கள் நிகழ்ந்து வருதல் வெளிப்படை. இதனுள் அநந்தமான இன்ப வாயில்கள் இருக்கின்றன.

அப்படி யிருந்தும், மனிதர் இந்த எல்லைக்குள் தீரத்துடன் ஸஞ்சரிக்கவில்லை. ஸாதாரண ஜாக்ர லோகத்திலும், எவனும் வானத்தில் பருந்து சுற்றுவது போலே சுற்றுவதைக் காண்பது மிகவும் துர்லபமாகும். இங்கு மானுடர், எலி பொன்று பொறிக்குள்ளே அகப்பட்டுத் தவிப்பது போலே, ஒரு சில வளையங்களுக்கு உட்பட்டுத் தவிக்கிறார்கள்.

பளீரென்று தீப்பெட்டியினின்றும் ஸௌர்யனைப் போய்க் கவ்வக் கூடிய திறமை மனுஷ்ய ஸாதாரண ஜாக்ர புத்திக்கு உண்டு என்பது வெளிப்படை. சித்த யந்திரத்தை ஒரு வேகமாகச் சுழற்றிக் கொண்டு போய் அநந்தமான காட்சிகள் காணுந் திறமை ஸாதாரண மனிதனுக்கு ஜாக்ர உணர்வில் உண்டு. ஆனால், அத் திறமையை அவன் சேரே உபயோகப் படுத்துவதில்லை. இது நிற்க. நமக்கு

ஸாதாரண ஜாக்ர நிலையில் தோன்றும் இரண்டொரு சைதன்ய ஸ்தாயிகளைக் தவிர இவற்றின் கீழும் மேலும் எண்ணாற்ற சைதன்ய ஸ்தாயிகள் உண்டென்று மேலே சொன்னோம். இதை ஒட்டிச் சில தத்துவ சாஸ்திரிகள் இந்த இரண்டொரு சைதன்ய ஸ்தாயிகளுக்குக் கீழே இருப்பவற்றுக் கெல்லாம் ஒரு பெயர் கொடுத்துக் 'கீழ்ச் சைதன்யம்' (Sub-conscious) என்றும், ஸாமான்ய மனிதனுடைய ஜாக்ரவஸ்தையிலுள்ள சைதந்ய விஸ்தாரத்தை 'ஸாதாரண சைதன்ய' மென்றும், இந்த எல்லைக்கு மேலே யுள்ள அனந்த ஸ்தாயிகளுக்கும் ஒரு பெயர் கொடுத்து அதை 'மேற்சைதன்யம்' (Super-conscious) என்றும் சொல்லுகிறார்கள்.

'உழக்குக்குள்ளே கிழக்கேது, மேற்கேது? எல்லாம் ஒன்றுய், ஒரே அனந்த மண்டலமான பொருளில் மேலேது, தாழ்வேது? ஸர்வமும் சைதன்ய மாகையிலே, சைதன்யப் பெருங் கடலுக் கிடையே ஒரு சில துளிகளைப் பற்றிக் கொண்டு நாம் மற்றப் பகுதியை அதற்கு மேலென்றும் கீழென்றும் வகுக்க இட முண்டோ?' எனில், உண்டு.

எங்ஙனமெனிலோ, அநந்த மாகிய ஜ்யோதிர்வெள்ளத்தில் நமக்குத் தென்படும் அளவையே ப்ரமாணமாக வைத்துக் கொண்டு, அதற்கு மேலும் கீழுமுள்ள பகுதிகளுக்கு ஒரே மொத்தமாக ஒளி

மிகை யென்றும், இருளென்றும் பெயர்கள் கொடுத்துப் பகுத்திருப்பதும் போலே, எங்கு.

இங்ஙனம் கிழக்கைகண்ட சென்றோர் பெரும்பான்மையாகக் கூறப்பட்ட மூன்று வகைக் கோணலையும், மேலும் ஒரு படியாகச் சில கலிங்கர் குறிப்பிடுகிறார்கள். வெளிநாடுகளில் பெரிதாகத் தூக்கிடப்பட்டு பிரிகின்றன. எனவே, வாதாபியாக ராகு நாட்டில் கோணல் கூடாக சில அறிவுகள் எனவே மேலை கோணல்கள் உலகுக்கு மிகவே பெரிதாக, சில் அற்புதமான அறிவுகள் எற்படுதல் வாதத்தான் என்றும், அவை ஒருவேளை மேல் லோகங்களின்றும் (கங்கா ப்ரவாகம் வானத்தி னின்றும் பாதாளத்தில் இறங்கியது போல்) ஸாதாரண ஜாக்ர உலகில் வாகிய பூவனத்தைக் கடந்து, (சில ஸமயங்களில் ஸாதாரண ஜாக்ர புத்தியாகமலே) 'பாதாள சைதன்ய' மண்டலத்தில் இறங்கிக் கனவில் தோன்றக்கூடு மென்றும் மேலை பதஞ்சலி முனிவர் கூறி

குழப்பிக் குழப்பிச் சிரிக்கக் காட்டுகிறது.

எனினும், பொதுவாகவிலே சில படிகள் ஏறினவர்களுக்குக் 'கீழ்ச் சைதன்ய' தோற்றத்தில் சில புதிய வெடிப்புக்கள் தோன்றி, பூமண்டலத்தின் மத்திய பாகத்தில் மறைந்த கிடைக்கும் அந்த சில மேலைத் திறப்புக்களில் வெளியேறி வருவதை போலே, சில் அற்புதமான அறிவுகள் எற்படுதல் வாதத்தான் என்றும், அவை ஒருவேளை மேல் லோகங்களின்றும் (கங்கா ப்ரவாகம் வானத்தி னின்றும் பாதாளத்தில் இறங்கியது போல்) ஸாதாரண ஜாக்ர உலகில் வாகிய பூவனத்தைக் கடந்து, (சில ஸமயங்களில் ஸாதாரண ஜாக்ர புத்தியாகமலே) 'பாதாள சைதன்ய' மண்டலத்தில் இறங்கிக் கனவில் தோன்றக்கூடு மென்றும் மேலை பதஞ்சலி முனிவர் கூறி

யுள்ள ஸுத்ரத்தி னின்றும் ஊஹிக்க இட முண்டாகிறது.

கனவில் தேவதா ரூபங்கள், அற்புதமான இயற்கைக் காட்சிகள் (அதாவது ஸாதாரணமாக விழிப்பில் காணக் கூடிய பரமாச்சர்யமான இயற்கைக் காட்சிகளினின்றும் வேறு பட்டன) முதலிய வியப்புக்கள் யோகப் படிகளின் மீது மிகவும் சிரமத்துடன் ஏறிச் செல்லும் ஸாதகனுக்குத் தென்படுமாயின் அவற்றை அவன் நனவிலும் சிந்தை செய்வதால் சித்த சாந்தி விளையு மென்பது பதஞ்சலியின் கருத்து. மேலும், அவ்விதமான தேவ ரூபங்கள் ஒரு வேளை நனவில் கண்ட காட்சிகளின் ப்ரதிபிம்பங்களாகவே யிருக்கு மென்று வைத்துக் கொள்ளினும், நனவுக் காட்சிகளைக் காட்டிலும் கூடச் சில ஸமயங்களில் அவற்றின் கனவு ப்ரதி-சித்திரங்கள் அதிகத் தெளி வுடையன வாக இருப்பதால் அவற்றை நனவில் மீண்டும் சிந்திப்பது சித்த ஸமாதானத்துக்கு வழியாகக் கூடும்..

ஸூ. ஈக. அல்லது, அவரவர் இஷ்டப்படி தியானம் புரிதலால்.

வ்யா: எந்தப் பொருள் உனக்குப் பிரியமோ அது யாதாயினும் அதை தியானம் செய்வதால் சாந்தி பிறக்கு மென்பது கருத்து.

ஸூ. சஂ. இவனுக்குப் பரமாணு முதல் பரம மஹத்வம் வரை எல்லாம் வச மாகும்.

வ்யா: இங்ஙனம் சித்த அமைதி ஏற்படுத்திக் கொண்ட யோகிக்கு பரமாணு (மிகச் சிறிது) முதல் பரம மஹத்வம் (மிக்க பெருமை) வரை ஜகத் தெல் லாம் வசமாய் விடும்.

ஸூ. சக. வ்ருத்திகள் அழி வெய்தும் போது, கோள்வோன் கொள்ளுதல் கொள்ளப்படும் பொருள் மூன்றிலும் பளிங்கு போல் ஓர் நிலையும் ஒரு தன்மை யுமான ஸமாபத்தி ஏற்படும்.

வ்யா: அதாவது, அஹங்கார ஸம்பந்தமான சித்த வ்ருத்திகள் நீங்கி, மேல் ஸூத்ரங்களில் சொல்லப் பட்ட வழிகளால் சித்த சாந்தி யெய்திய யோகிக்கு, விஷய வஸ்துக்களுடன் எக்காலத்தும் மூளும் பாடு தோன்றுது. வர்ண முடைய பொருள்களுக்கு அரு கேயுள்ள பளிங்கு போலே அவனுடைய சித்தம் எதிரே கண்ட விஷயத்துடன் ஸம நிலை எய்தி விடுகிறது. இந்த ஸூத்ரத்தில் 'கொள்வோன்' என்பது ஆத்மா, 'கொள்ளுதல்' அறிதல், 'கொள்ளப் படும் பொருள்' எதிரே அறியத் தக்கபடி நிற்கும் விஷயம்.

'ஸமாபத்தி' என்பது பொருத்தம், லயப்படுதல்; இஃதே ஸமாதி என்றும் சொல்லப்படும்.

ஸூ. சஉ. அதில் சொல், பொருள், உணர்வு மூன்றுங் கலந்து நிற்கும்போது, அஃது ஸவிதர்க்க ஸமாதி எனப்படும்.

தியானத்துக்கு விஷயமாக எடுத்துக் கொள்ளப்

படும் பதார்த்தத்தைப் பற்றிய சொல், பொருள், உணர்வு மூன்றுங் கலந்து நிகழும் உள்ளக் காட்சியை ஸவிதர்க்க சமாதி என்றார்.

தியானத்துக்கு ஒரு மனுஷ்யனையே பதார்த்தமாக எடுத்துக் கொள்ளுவோமெனில், அவனைப் பற்றிய பதம், அர்த்தம், ஞானம் இவற்றுடன் கலந்த தியானம் ஸவிதர்க்கமாம்; அதாவது, பலவித தர்க்கத்துடன் கூடியது.

ஸ-வி. சூ. நினைவு பரிசுத்த மடைவதனாலும், அல்லது ஸ்வரூப சூன்யத்தாலும் அர்த்தம் மாத்திரம் விளங்குவது நிர்விதர்க்க ஸமாதி.

நினைவு பரிசுத்தமடைதலாவது தியான பதார்த்தத்தின் ஸம்பந்தமான இதர ஸம்ஸ்காரங்களின் நாபகம் ஏற்படாதிருப்பது. ஸ்வரூப சூன்யமாவது தியானம் செய்வோன் தன் அஹங்கார வடிவத்தை மறத்தல். கேவலம் தியான பதார்த்தத்தைப் பற்றிய வேறு சிந்தனைகள் ஒன்றுமே யில்லாமல் அதன் உள்ளுறை பொருள் மாத்திரமாக உனது சித்தம் பரிணமித்து (அதன் செயல்களைக் கூடக் கருதாமல் அதன் உட் பொருள் நீ யாகி) நிற்கும் ஸமாதி நிர்விதர்க்க மெனப் படுகிறது. (அதாவது, தர்க்க மில்லாதது). இவை யிரண்டும் ஸ்தூல விஷயங்களைப் பற்றி நிகழ்வன.

ஸ-வி. சூ. இதுபோலவே, ஸ-சூக்ஷ்ம விஷயங் களைப்பற்றி இயலும் ஸவிசார நிர்விசார ஸமாதிகள் சொல்லப்படுகின்றன.

ஸ்தூலமான விஷயங்களைப்பற்றி சொல்லப் பட்ட ஸவிதர்க்க நிர்விதர்க்க ஸமாதிகளின் பிரிவு முறைப்படியே, ஸூக்ஷ்ம விஷயங்களைப்பற்றி இரு வகையாக நிகழ்வன ஸவிசார ஸமாதி என்றும் பெயர் பெறும். ஸ்தூல விஷயங்களாவன பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்ட பொருள்கள். ஸூக்ஷ்ம விஷயங்களாவன : இந்திரியங்கள், மனம், அஹங்காரம், சித்தம், ப்ரதானம் (அதாவது ஸத்வ ரஜஸ் தமோ குணாங்களின் மூல ஸ்தானமாகிய ப்ரக்ருதியின் ஆதி நிலை)—இவை ஸூக்ஷ்ம விஷயங்களாம்.

ஸூ. சக. ஸூக்ஷ்ம விஷயத் தன்மை மூல ப்ரக்ருதி வரை யுரைத்தாம்.

'மூல ப்ரக்ருதி' என்று நாம் மேலே மொழி பெயர்த்திருக்கும் வஸ்துவுக்குப் பதஞ்சலி மஹர்ஷி 'அலிங்கம்' என்று பெயர் சொல்லுகிறார். 'அலிங்கம்' என்றால் 'குறி யில்லாதது' என்பது பொருள். அதனை ஸ்ருஷ்டிக்கு முந்திய நிலை யென்பர். இதனை 'அவ்யக்தம்' என்றும் சொல்லப்படும். ஆக்ஷர ஸூக்ஷ்மத்துக்கும் அதிகமான வஸ்து.

ஸூ. சகூ. இவையே வித்துடைய ஸமாதிகள்.

மேலே கூறப்பட்ட ஸவிதர்க்க நிர்விதர்க்க ஸவிசார நிர்விசார ஸமாதிகளே வித்துடைய ஸமாதி களென்றும் சொல்லப்படும். அதாவது, இவை கர்

மத் தொடர்பை நீக்குவதில்லை. இவற்றால் புதிய கர்ம விளைகள் (ஸம்ஸ்காரங்கள்) ஏற்படுகின்றன.

ஸூ. சூ. நிர்விசார ஸமாதியில் தொடர்ச்சி பெறுவதனால் அத்யாத்ம ப்ரஸாதம் ஏற்படுகிறது.

அத்யாத்ம ப்ரஸாதம் என்பது ஆத்ம சாந்தி.

ஸூ. சூவ. அங்கு அறிவு 'ரிதம்பரா' எனப்படும்.

'ரிதம்பரா' என்றால் 'உண்மையைச் சுமப்பது' என்றர்த்தம். அந்த உணர்ச்சியில் எப்போதும் பரிபூர்ண ஸத்யமே நிற்கும்.

ஸூ. சஙூ. இது கேள்வியாலும் அனுமானத்தாலும் கிடைக்கும் அறிவினின்றும் வேறுபட்டதாம், விசேஷப் பொருளுடையதாகையால்.

பிறர் சொற்களைக் கேட்பதினின்றேறனும்—வேதாகமங்களினின்றேறனும்—கிடைக்கும் உணர்வைக் காட்டிலும், இந்த நிர்விசார ஸமாதி நம் அனுபவத்துக்கு வரும்போது, நமக்கு உயர்ந்த விதமான ஞான மொன்று பிறக்கிற தென்று விவேகானந்தர் சொல்லுகிறார்.

தியானம் செய்யப்படும் ஸூக்ஷ்மப் பொருளை, வெறுமே அதன் செய்கைகளால் கணிப்பதைக் காட்டிலும், அதன் சுத்த ஸ்வரூபத்தில் தியானம் செய்யும் திறமை பெறுவதால் எப்தும் உணர்வு—உள்ளத்தின் நிலை—விசேஷமான இயல்புடையது. எதைப்பற்றியும் நமது மனச் சலனத்துடன் நிகழும் ஆராய்ச்சி

வடிவமான ஸமாதியைக் காட்டிலும், யதார்த்த ரூப மான தியானமே அறிவில் சுத்தமான தெளிவையும் இன்பத்தையும் விளைக்கும். தியான விஷயங்களை நம்முடைய மனம் ஆராய்ச்சி செய்யுமிடத்தே, அறைங் காரத் தொடர்களைக் கிளப்பிக் குழப்ப முண்டாக்கும். வெறுமே அவற்றுடன் சுத்த ரூபத்தில் கலந்து விடுங் கால் நம்முடைய அஹங்காரம் மடிந்து போகும். எந்த வஸ்துவின் ரூபமும் நம்முடைய அறிவுக் கெய்தி விடும். எனவே, அப்படிப்பட்ட தியானத்தால் நமக் கெவ்விதமான சலிப்புக்களும் நிகழமாட்டா. உண்மை மயமான உணர்வு பிறக்கும்.

நிர்விசார ஸமாதி விஷயமாக, மதுரை காராய ணய்யர் உரையில் காணப்படும் பின்வரும் வசனங்கள் இங்கு குறிப்பிடத் தக்கன :

'ஸாதாரணமாக ஏனையோருக்கு ஞானம் ஒன் றன் பின் ஒன்றாய்க் க்ரமமாக உண்டாகிறது. இந் நிலைமை யடைந்தாலுக்கு அப்படி யின்றி ஏக காலத் தில் எல்லா விஷயங்களின் ஞானம் உண்டாகிறது. இந் நிலையில் உள்ளவன் பிறர் யாராலும் பரிகபிக்கக் கூடாதவனாக அத்தன்மையான உயர்ந்த ஸ்தானத்தை அடைந்து, பர்வதத்தின் மேலுச்சியி லுள்ளவன் போல, ஜனங்களைக் கருணையுடன் பார்க்கிறான். இவ்விதம் மஹா பாரதத்தில் சாந்தி பர்வத்தில் சொல்லப் பட்டுள்ளது.'

ஸ-தி. நு0. அதனல் உண்டாகும் ஸம்ஸ்காரம் மற்ற ஸம்ஸ்காரங்களைத் தடை செய்யும்.

ஸம்ஸ்காரங்களாவன கர்மங்களாலே சித்தத்தில் மிஞ்சி நிற்கும் கர்ம விளைகள். இந்த ஸம்ஸ்கார விளைகள் நம்முடைய சித்த லோகத்தைக் கெடுக்கின்றன. புராதன கர்மங்களால் நாம் எத்தனை தூரம் கட்டுப் படுகிறோமென்பதை ஸாதாரண மனிதன் அறிய மாட்டான்.

ஒரு செய்கை நம்முடைய சித்தத்தில் ஒரு முத்திரை போடுகிறது. அந்த முத்திரை நாசக மெனப்படுவது மட்டுமன்று. கீழ்ச் சைதன்ய மண்டலம் வரையடிப்பது. உனது சைதன்ய ஜகத்தில் ஜாக்ரத் பூமியை மட்டுமே யன்றி அஜாக்ரத்தான சைதன்ய பாதாளங்களிலும் போய் அடிப்பது.

ஒரு முறை ஒரு சித்தச் செய்கை நிகழ்ந்தால் அது மீள மீள நிகழும். ஒரு முறை செய்த தொழிலே மீட்டு மீட்டும் செய்தல் இன்றியமையாததாக தோறும்.

"Qui a bu, boria" என்பது ப்ரென்ச் பழமொழி. அதன் பொருள் :—"(இதற்கு முன்னே) குடித்தவன் (இனியுங்) குடிப்பான்."

ஒரு முறை பொடியை மூக்கிலே செலுத்தினால், முதல்தரம் செலுத்தும்போது நரகம்போலிருக்கும், அப்பால் எங்கு பொடியைக் கண்டாலும் மூக்கூறும். ஒரு முறை பேனாக்கத்தி திருடினவன் கையில் பின்பு பேனாக் கத்தியைக் கண்டபோதெல்லாம் ஊறுதலெடுக்கும்.

ஒரு முறை ஒருவனை மிருகத்தனமாக துஷ்பிரயோகம் செய்தேன், அல்லது அடித்தேன்—அல்லது வேறு வகைகளில் ஒருவருக்குத் தீங்கு விளைவித்தோமானால், பிறகு அவர்களைக் காணும் பொழுதெல்லாம், நினைக்கும் பொழுதெல்லாம் மனம் அசாந்தியடையும். தீய கர்ம ஸம்ஸ்காரங்கள் மீண்டும் அதிகத் தீச் செயல்களாய், மீண்டும் அதிகத் தீய ஸம்ஸ்காரங்களாய், அவற்றினின்றும் பூர்வ பல தீய செயல்களாய், இங்ஙனம் தீராத சங்கிலியாக நடைபெறும். நல்ல கர்மங்களுக்கும் இங்ஙனமே. இவற்றுள் நல்ல கர்ம ஸம்ஸ்காரங்கள் தீய கர்ம ஸம்ஸ்காரங்களைப் பெரும்பாலும் குறுக்கவும், நசுக்கவும், வற்றடிக்கவும், சுவறடிக்கவும், பாழாக்கவும் வல்லன. ஆனாலும் பரிபூர்ணமாக அழித்துவிடமாட்டா. ஏனெனில், சித்த லோகத்தில் ஸாதாரண ஜீவனுக்கு—அதாவது போகஸாதனத்தில் மனவல்ய பதவி பெறுத ஜீவனுக்கு—நல்ல ஸம்ஸ்காரங்களைக் காட்டிலும் தீய ஸம்ஸ்காரங்கள் அதிக வேகத்துடனும் ஸம்ருத்தியுடனும் பரிபாகத்தில் சொல்ல இடமில்லை யெனினும், இரண்டும் ஸம பலத்துடனே வளர்கின்றன. தீயதை நல்லது அழிப்பது போலவே, சில ஸமயங்களில் நல்லதைத் தீயது மிகுதிக்கிறது. ஆகவே, இந்த ஸம்ஸ்கார யுத்தத்தில் ஜீவன் தனது சித்தம் நரக நிலையிலிருப்பது கண்டு, அதையும் அதன் புறக்கோலமாகிய சரீரத்தையும், உதறி எறிந்து விடுகிறது. இங்ஙனம் எறிதலே மரணம் என்று சொல்லப்படும்.

ஸர்வ ஜீவராசிகளும் மரணமடைகின்றன. இதன் காரணம் யாது? ஜீவலோக முழுவதிலுமே நல்ல ஸம்ஸ்காரங்களைக் காட்டிலும் [அதாவது, ஜீவஸம்ரக்ஷணைக் குரிய ஸம்ஸ்காரங்களைக் காட்டிலும்] தீய ஸம்ஸ்காரங்களே அதிக வேகத்துடன் வளர்கின்றன வென்று புலப்படுகிறது.

அங்ஙனமன்று. எனெனில், உயிர்கள் மேன் மேலும் புதியன புதியன வாகத் தோன்றி வருதல்.

எனவே, ஜீவலோகப் பொதுமையில் நல்ல ஸம்ஸ்காரங்களே வெற்றி பெற்று வருகின்றன. மரணம் வெல்லவில்லை. உயிரே வெற்றி யடைந்து கொண்டு வருகிறது. இன்று வரை பூமியின் மீது செத்த ஜீவன்களின் தொகை அதிகமா? மிஞ்சிய உயிர் களின் தொகை அதிகமா? மிஞ்சியவற்றின் தொகை அதிகம். ஸந்தேஹ மென்ன இதிலே? வெளிப் படை.

உயிர் தான் இதுவரை வெற்றி யடைந்து வருகின்றது.

நல்ல ஸம்ஸ்காரங்களே ஜயம் பெற்று வருகின் றன. இதனை இன்னும் சாஸ்திர ரூபத்தில் விவகரிப் போம். உயிரை மரணத்தால் அழிக்க முடியாது. உயிர் மனோமயை மரணத்தீ வற்றடித்தல் ஸாத்தியமில்லை.

உயிருக்கும் சாவுக்கும் சண்டை நடக்கிறது.

ஜீவன் ஸாக்ஷியாகப் பார்த்துக்கொண்டிருக்கிறான். ஜீவன் ஸ்வர்ஸ்ர கோடிகளாக விளங்குகிறானெனினும் ஜீவலோகம் ஒன்றே.

உயிர்த்தலுக்கு அனுகூலமான குணங்கள் பொறுமை, அன்பு, தயாளிவு முதலியன. சாவுக்கு அனுகூலமான குணங்கள் பொறுமை, பகைமை, பயம் முதலியன.

உயிருக் கனுகூலமான குணங்களே தேவர்கள்.

சாவுக் கனுகூலமான குணங்கள் அஸுரர்.

தேவாஸுர யுத்தம் முடிவின்றி நடைபெற்று வருகிறது, ஜகத்தாகிய நாடக சாலையில்; பரமாத்மா வாகிய ராஜாதிராஜன் ஸாக்ஷியாக நின்று பார்த்துக் கொண்டிருக்கிறான். இது நிற்க.

ஸம்ஸார வினைகளை அப்போதப்போது புதுப்பித்தலே நன்று. பழைய கர்ம வினைகளால் நமக்குப் பயனில்லை.

நாம் ஒவ்வையடியாக எவ்விதமான கர்மபந்த வினை களுமில்லாமல் பரமமுக்தி நிலை பெற முயலவேண்டும்.

படிப்படியாக முக்தி யடையவேண்டி முயற்சி பண்ணுவோன் ஒருபோதும் முக்தி பெறமாட்டான். பழரென்று கர்மச் சங்கிலியை ஒரே தடவையாக அறுத்தெறிந்து விடவேண்டும்.

வேத ரிஷிகளின் கவிதை.

முகவுரை.

பூரீ காசியில் ஹிந்து ஸர்வகலா சங்கத்திற்கு அஸ்திவாரக் கல் நாட்டிய போது, பல வித்வான்கள் வந்து உபந்யாஸம் செய்தார்கள். இவற்றுள்ளே, நவீன சாஸ்திர (ஸயன்ஸ்) பண்டிதர்களின் சிகாமணியாக விளங்கும் பூரீமான் ஜகதீச சந்திர வஸு செய்த உபந்யாஸம் மிகவும் மாண்புடையது.

'லௌகிக சாஸ்திர ஆராய்ச்சிகளிலே மறுபடியும் பாரத தேசம் தலைமை வகிக்கும்படி செய்வது நம்முடைய கடமை' என்பதை இவர் பல வகையிலே விளக்கிய பின்பு, தமது முடிவுரையில் பின்வருமாறு சொல்லுகிறார் :—

'ஹிந்து நாகரிகத்திற்குள்ளே ஒரு விசேஷ சக்தியிருக்கிறது. காலத்தின் அழிவுகளையெல்லாம், உலகத்திலேயுள்ள பொருளாஸக்தியும் சிதைவுபடுத்த வரும் மாறுதல்களையெல்லாம், இந்த சக்தியிலேயே நமது நாகரிகம் எதிர்க்க வல்ல தாயிற்று. (எகிப்து தேசத்தில்) நீலநதிக்கரையிலேயும், அஸ்ஸீரியா தேசத்திலும், பாபிலோனிலும், பல்லாயிர வருஷங்களுக்கு முன்னே, பெரிய பெரிய அறிவுப் பயிற்சிகள் தோன்றி வளர்ந்ததையும், மாறியதையும், மறைந்ததையும், நமது மஹத்

தான நாகரிகம் பார்த்துக்கொண்டிருந்தது.(அப்போது கூட நமது நாகரிகம் அளவிடமுடியாத பழமை கொண்டதாக விளங்கிற்று). அந்த நாளிலே பாரத மாதா தனக்கு அழிவில்லையென்ற தீராத பக்தியுடன் விளங்கினாள். இன்றும் யௌவனத்தோடிருக்கிறாள். இனி, எதிர் காலத்திலும் அழியமாட்டோ மென்கிற தீராத பக்தியிலே உறுதிகொண்டு நிற்கிறாள்.'

இங்ஙனம், நவீன சாஸ்திரக் கல்வியாகிய குன்றத்தின் மேலே நெருப்புத் தூணைப்போல ஒளிவீசி நிற்கும் பூநீமான் வஸு கூறிய வார்த்தைகள் வெறுமே உபசார மல்ல. நம்முடைய இடைக்காலத்து மடமை களை யெல்லாம் மஹிமைகளென்று நினைத்து வீண் பெருமை கொள்வோரின் பேச்சை நாம் உதறிவிடுதல் நியாயம். ஆனால் வஸு பண்டிதர் சொல்லியதை நாம் மதிப்புடன் ஏற்றுக்கொள்ளுதல் தகும். இடைக்காலத்திலே நமது ஜாதி பொய்களும் சோர்வுகளும் குவித்த குப்பையின் கீழே அழுந்திக் கிடந்தது. பாரத மாதா நித்திரையி லிருந்தாள். இப்போது, மறுபடியும் அந்தக் குப்பையிலிருந்து வெளிப்பட்டு, தைரியமென்னும் கங்காநதியில் ஸ்நானம் செய்துவிட்டு, நமது பாரத ஜாதி தனது வானத்திலே தோன்றும் ஸூர்யோதயத்தை அன்புடன் அழைத்து வாழ்த்துக் கூறுகின்றது.

மரணமில்லாத இந்த ஹிந்து நாகரிகமாகிய கற்பக விருக்ஷத்துக்கு ஆதியிலே விதை யூன்றியவர்கள் வேத ரிஷிகள். அவர்கள் எக் காலத்திலே—எத்தனை நூற்றாண்டுகளின் முன்னே—இருந்தார்களென்பதைக்

கணக்கிட்டுச் சொல்ல, நவீன ஆராய்ச்சியாதொரு கருவியு மில்லாதிருக்கிறது. ஹிமவத் பர்வதம் எப்போ தண்டாயிற்று? யாருக்குத் தெரியும்? வேத ரிஷிகள் எக் காலத்தில் வாழ்ந்தனர்? எப்படிச் சொல்வது?

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சொல்லுகிறார்:—

'நீங்கள் பிரார்த்தனை செய்யும்போது அது உள்ளத்தின் அடியிலிருந்து வெளிப்பட வேண்டும். பிறகு சிறிதுகாலம் காத்துக் கொண்டிருந்தால், எனது தாயாகிய ஜகதம்பிகை உங்கள் பிரார்த்தனையை நிறைவேற்றிக் கொடுப்பாள்.'

நன்று சொல்வினர் ராமகிருஷ்ண முனி. உள்ளத்தின் அடியிலிருந்து வெளிப்படுகிற வேண்டுதலுக்கு 'மந்திரம்' என்று பெயர். அது பலிக்கும். ஆனால் அங்கிருந்து பிரார்த்தனை கொண்டு வருதல் எளிதன்று. அது பெரிய ஆழம். உள்ளத்தின் அடி! கடலடியை மானுடர் அளந்து பார்த்திருக்கிறார்கள். உள்ளத்தின் அடி காண்பது அதனிலும் பலமடங்கு கஷ்டம். இருந்தாலும் சோர்வு பெற வேண்டா. ஒவ்வொருவரும் உள்ளக் கடலில் இயன்றவரை மூழ்கி அங்கிருந்து பொருள் கொண்டு வரலாம். எத்தனைக் கெத்தனை ஆழத்திலே போகிறோமோ, அத்தனைக் கத்தனை நல்ல முத்து கிடைக்கும்.

ரிஷிகள் உள்ளத்தைத் தெளிவு செய்து கொண்டோர். ஆதலால், அடிவரை எளிதாகப் பாய்ந்து அங்கிருந்து மந்திரங் கொண்டு வந்தனர். அம் மந்திரங்

களுக்கு தேவர் வசப்படுவர். வெறும் 'சொல்'லுக்கு மஹிமையில்லை. அச் சொல் உள்ளத் துணிவை உணர்த் துமாயின், அதற்கு மஹிமை யுண்டு. 'எதனை நினைக் கிறாயோ அதுவே யாகிறாய்' என்பது தவறுத உண்மை. நினைப்பு நிஜ நினைப்பாக இருக்கவேண்டும். ஆழ்ந்த நினைப்பு, அசையாத நினைப்பு, வலிய நினைப்பு, மாறுத நினைப்பு—அவ் வித நினைப்பு விரைவில் உலகம் அறியத் தக்க வெளியுண்மையாக மாறிவிடும். 'இந்திரன்' எனப் படும் விஞ்ஞான சக்தியை மதுச்சந்த ரிஷி மேற்கூறப் பட்டபடி வலிமை கொண்ட மந்திரங்களால் ஸ்தாப னம் செய்கிறார். அம் மந்திரங்கள் கவிதையிடத்தில் திகழ்கின்றன.

ரிக் வேதத்திலே ரிஷிகளுடைய கவிதையைப் படிக்கும்போது நமது உள்ளத்திலே தேன் பாய்கிறது; அறிவு தெய்வவெறி கொள்ளுகின்றது.

இந்திரன்.

முன்னுரை.

கீழே இந்திரனைப் பற்றிய மந்திரங்கள் சிலவற்றை மொழி பெயர்த்து எழுதுகிறேன். அம் மந்திரப் பொருளை விளக்கும்படியான சில விஷயங்களை முதலாவது சொல்லுகிறேன்.

'இந்திரன்' என்பது விஞ்ஞான சக்தி; இவனுக்குப் பகை அஞ்ஞானம். இந்த அஞ்ஞானத்திற்கு 'விருத்திரன்' என்று பெயர். (விருத்ரன்—மூடுவோன், மறைப்போன்.) விருத்திரன் இருள். அவனே தெய்வ இன்பங்களிலிருந்து நம்மைப் பிரித்து வைக்கும் அசுரகாரம்—அதாவது, பிரிவுணர்ச்சி. அவன் தாய்க்கு "தானு" என்று பெயர். (தானு—பிரிப்பது.)

நமக்குள்ளே மூன்று படிகள் இருக்கின்றன, மண் காற்று வானம் என. (அதாவது, உடல், உயிர், அறிவு என்ற மூன்றும்.) வானத்தின்மேலே உண்மை யுலகம் இருக்கிறது. அந்த உண்மை யுலகத்திலிருந்து நமது அறிவிலே ஞானவொளியின் கிரணங்களும், தெய்வ இன்பங்களாகிய நதிகளும் எப்போதும் பாயும் படி செய்யவேண்டும். இதுவே வேத ரிஷிகளின் நாட்டம்.

அந்த நதிகளையும் கதிர்களையும் நம்முள்ளே பாய வொட்டாதபடி, விருத்திராசுரனும் அவன் கூட்டத்தாராகிய பணி முதலிய மற்றப் பிசாசுகளும் தடுக்கின்றன.

அச்சம், கவலை, சிறுமை, திகைப்பு, சோர்வு முதலாக நமக்குள்ளே வாழும் அசுரருக்குக் கணக்கில்லை. இவர் களுக்கெல்லாம் தலைவன் விருத்திரன். இவன் மேற் கூறப்பட்ட தேவதைகளை மண்மலையின் கீழே உள்ள ஓர் இருட் குகையில் அடக்கிவைத்து, அவை நம நிறை விலே பாயாதபடி மேலே நின்று தடுக்கிறான்.

இந்த விருத்திரனை வேதம் பாம்பென்று சொல் லுகிறது. அஞ்ஞானம் ஒரு விஷப்பூச்சி; அதற்குக் கை கால் கிடையாது; வீரியம் கிடையாது. நெளிந்து நெளிந்து உள்ளே புகுந்து ஒளியையும் இன்பத்தையும் மறைக்கிறது.

இந்திரன் முதலிய தேவர்களை யாகத்திலே சோமரசம் கொண்டால், அவர்கள் இந்தப் பாம்பையும் இதன் சேனைகளையும் கொன்று, தேவ நதிகளை விடு வித்து நம்முள்ளே பாயும்படி செய்து, நமக்கு அமரத் தன்மை உண்டாகும்படி செய்கிறார்கள். யாகம் (வேள்வி) என்பது நமது உடல் பொருள் ஆவி அறிவு அனைத்தையும் தேவர்களுக்கு அர்ப்பணம் செய்து விடுதல். இந்த வேள்வி செய்தால் நமக்குள் மண், காற்று, வான் (உடல், உயிர், அறிவு) என்ற மூன்று படிகளிலும் தேவர் வந்து நிலைபெற்று அமிர்தபானம் (ஸோம ரஸம் குடித்தல்) செய்கிறார்கள். இது மஹர்ஷி களின் யோகானுபவத்திலே கண்டது. இதனை நன் றாகத் தெரிந்து கொண்டால், பின்வரும் மந்திரங்களின் பொருள் தெளிவுபடும்.

இந்திரனை ஹிரண்ய ஸ்தூபர்

(தங்கத்தூண்) என்ற ரிஷி பாடியது[1].

1. இந்திரனுடைய வீரச்செயல்களை இங்கு சொல்லுகின்றேன்.

அவன் வஜ்ரி ; மின்னல் அவனுக்குப் படை. அவனுடைய முன்னைத் திறமைகளைச் சொல்லுகிறேன்.

பாம்பைக் கொன்றான் ; ஆறுகளைப் பெருகச் செய்தான். மலைகளின் சார்புகளை உடைத்தான்.

2. மலையின் மேலே கிடந்த விருத்திரப் பாம்பை அழித்துவிட்டான்.

அறிவினாலே செய்த—வானத்தாலாகிய—வயிரப் படையை இவனுக்குத்வஷ்டா என்ற தேவன் செய்து கொடுத்தான்.

நதிகள் வானக் கடலை நோக்கிப் பாடிக்கொண்டு விரைந்து சென்றன, இரைந்துகொண்டு செல்லும் ஆவினம் போல.

3. இந்திரன் எறு போன்றான், மூன்று படிகளிலே மதுவுண்டான் ; அந்த மது வேள்வியிலே வடிக்கப் பட்டது.

---

[1] ரிக்வேதம் ; மண்டலம் 1, ஸூக்தம் 32 : அஷ்டகம் 1, அத்யாயம் 2, வர்க்கம் 36-8.

4. அரவுகளிலே முதலில் தோன்றியவனே இந்திரன் கொன்ற பிறகு, மற்ற மாயாவிகளின் மாயைகளையெல்லாம் வென்றான்.

பின்பு, ஸூர்யனையும் வானத்தையும் உஷாதேவியையும் தோற்றுவித்தான். அதன் பிறகு, இந்திரா, உனக்கோர் பகைவனுமில்லை.

5. மறைக்கும் தொழிலே கொண்ட விருத்திரனுக்குத் தோளில்லை. அவனை இந்திரன் பெரிடியாலே கொன்றான்.

பிளந்த விறகுகளைப் போலே விருத்திரன் மண்மீது சிதறி வீழ்ந்தான்.

6. போர்த் தொழிலறியாதவன் விருத்திரன். இவன் நேர்மை நாடுவோனும் மஹா வீரனுமாகிய இந்திரனைப் போருக் கழைத்தான்.

இந்திரனுடைய அம்புத் திரளை இவனால் கடந்து செல்ல முடியவில்லை. சிதறுகின்ற தனது திறமைகளை இந்திர-சத்துரு ஒன்று சேர்க்க முயன்றான்.

7. காலும் கையுமில்லாதவன் விருத்திரன்.

இந்திரனோடு இவன் போர் செய்ய வந்தான். அவனுடைய வயிரப் படை இவனை மலையின்மீது கொன்றது.

பலவற்றிலே விளங்குவோன் இந்திரன்.

ஆனைறுகளை ஆண்மை போகிய எருதுகள் எதிர்ப்பது போல, அவனை விருத்திரன் பகைத்தான்; சிதறி வீழ்ந்தான்.

8. ஆற்றடி பிளவுண்டு கிடப்பது போலே, விருத்திரன் கிடந்தான்.

இவன் மீது நதிகள் சென்றன.

அவை மனதின் மேல் ஏறிச் சென்றன.

மூன்னர், அவற்றை விருத்திரன் தனது வலிமையாலே சூழ்ந்து நின்றான்.

இப்போது அவற்றின் அடியிலே வீழ்ந்து கிடக்கிறான்.

9. விருத்திரன் தாயும் அகல வீழ்ந்தாள்.

தாய் மேலும் மகன் கீழ் மாயினர்.

இந்திரன் அவள்மீது வீசியிருந்த படையை மீட்டுக்கொண்டான்.

கன்றுடன் கிடக்கும் பசுவைப்போலவே கிடந்தனள் தாய்.

10. தங்குதடையில்லாது பாயும் நதிகளிடையே அவனுடல் அமிழ்ந்திக் கிடந்தது.

விருத்திரனது உடல் மறைவைக் கடந்து நதிகள் விரிந்து பெருகின.

இந்திரனைப் பகைகொண்டோன் நெட்டிருளில் வீழ்ந்தான்.

11. கதிர்களைப் பணியென்னும் பகைவன் பிடித்து வைத்தது போலே, நதிகளை விருத்திரன் தடுத்துக்கொண்டான்.

அவை பகைவனுக்குப் பத்தினிகளாயின. அவற்றைப் பாம்பு காத்தது.

நீர்த் திரள் வெளிப்படும் வாயில் அடைபட்டிருந்தது.

விருத்திரனைக் கொன்று இந்திரன் அதைத் திறந்தான்.

12. இந்திரா, முதற்பெருங் கடவுள் உன்னைப் போரிலே செலுத்தினன்; அப்போது நீ எமக்கு வலிய தேர் உயிர்க்காவல் ஆயினை.

கதிர்களை வென்றாய், சூரா, மதுவை வென்றாய், ஏழு நதிகளையும் பெருகும்படி விடுத்தாய்.

13. இந்திரனும் விருத்திரனும் போர் செய்த காலத்தில், பகைவன் விளவிக்க மின்னலும் குமுறலும் இடியும் அவன் பொழிந்த மழையும் இவனைத் தீண்டவில்லை.

பிறகு பகைவனுடைய சேனைகள் வந்தெதிர்த்தன. அவற்றையும் இந்திரன் வென்றான்.

14. இந்திரா, பகைவனை அழித்த பிறகு, அச்சந் தோடு செல்லும் பருந்துபோல, நீ எதன் பொருட்டாகத் தொண்ணூற்றொன்பது நதிகளையும் உலகங்களையும் கடந்து மேலேறிச் செல்லுகிறாய்?

நீ கண்டு மனமஞ்சத் தகுந்த போராளி, பாம்பிற்கேது?

15. செல்வன, நிற்பன, அனைத்திற்கும் இந்திரனே அரசன்.

இவன் வயிரப்படை கைக்கொண்டான்.

சிகரங்களுடைய அனைத்த மலைக்கும் இவனே வேந்தன்.

தொழில் செய்வோரை யெல்லாம் இவனே ஆளுகின்றான்.

ஆரக்கால்களை வளையம் சூழ்ந்திருப்பது போலே இவன் அவரைச் சூழ்ந்து நிற்கின்றான்.

இந்திரனை மதுச்சந்தர் (தேனிசை) என்ற

ரிஷி பாடியது[1].

1. பாடுவோர் இந்திரனைப் பாடுகின்றனர். மந்திரமோதுவோர் இந்திரனை யோதுகின்றனர். மொழிகள் இந்திரனை வேண்டி எழுகின்றன.

2. இந்திரன் இரண்டு குதிரைகளில் (அவை பூட்டிய தேரில்) ஏறுகின்றான். மொழிகள்மீது ஏறுகின்றான்; அவன் இடிக் கையன்; பொன் வண்ணமுடையவன்.

3. நீண்ட காட்சியின் பொருட்டாக இந்திரன் வானத்திலே ஸூர்யனை ஏற்றினான்; ஒளிக் கதிர்களால் மேகத்தைப் பிளந்தான்.

---

[1] ரிக்வேதம்; மண்டலம் 1, ஸூக்தம் 7 : அஷ்டகம் 1, அத்யாயம் 1, வர்க்கம் 13-14.

4. வலிய ஒளிகொண்ட இந்திரா, செழுமைகளிலும் ஆயிர வகைச் செல்வங்களிலும் எம்மை வளர்க்கிறுக, நினது வலிய ஒளிகொண்ட வளர்ப்புக்களால்.

5. பெருஞ் செல்வத்திலும், சிறு செல்வத்திலும், இந்திரனை அழைக்கிறோம்; மறைவு செய்யும் பேய்களின் மீது மின்னற் படை வந்தது.

தீ (அக்நி தேவன்).

முன்னுரை.

அக்கினி விஷயமாக ரிஷிகள் எழுதியிருக்கும் கவிதையைப் பற்றிப் பேசும்போது, ஸ்ரீ அரவிந்த கோஷ் சொல்லுகிறார் :—

'வலியவனைக் சுடர் வீசிக்கொண்டு நிற்கும் இந்த தேவனைப் பற்றிய மந்திரங்களிலே கவிதை மிகவும் செழிப்புற் றிருக்கின்றது. ஸௌந்தர்யப் பொருள் ஆழ்ந்து நிற்கிறது. தெய்வ வெற் தெளிந்து நிலவுகிறது. பாட்டுக் கொள்ளுகிற அக்கினிதேவனுடைய தழலும், அவன் உறுமுதலும் ஒளியும் பாடுகிற ரிஷிகளின் அறிவிலே தாவிவிட்டன போலும்; அங்கே அவற்றின் களி தழல் கொண்டு எரிகிறது.'

ஆம், உயர்ந்த கவிதையின் நெறியே அது. கவியின் இஷ்ட தேவதை அல்லது இஷ்ட சக்தி, இஷ்ட தர்மம், இஷ்ட சுகம்—இதனுடைய தாந்தி அவனுடைய உள்ளத்திலே வீசும். அந்த ஒளி பாட்டிலே தெரியும். உயர்ந்த கவிதையின் நெறி அது. அக்கினி விஷயமாக ரிஷிகள் சொல்லி யிருக்கும் மந்திரங்கள், சித்திரங்கள், காட்சிகள்—இவற்றிலே சில இங்கு மொழிபெயர்த்துக் காட்டப்படும்.

தீயைப் பாடிய பாடல்கள்[1].

தீயே[2], நீ தேவர்களில் முதற் பட்டவன், முன்னோன், கலிவன். மறைந்திருக்கும் முதற் கடவுளுடைய வடிவத் தழலே—அதன் வெம்மை கொண்ட வலியை, அதன் கனலுவது போன்ற நிறமையை—அக்நி யென்று வாழ்த்துகிறோம்.

அவன் வையகத்தின் படிகளை அமைக்கும் பொருட்டு வருகிறான். அவற்றுள்ளே சுவர்ய தேவதையாக வீற்றிருந்து நடைகளையும், செயல்களையும் காண்டுகிறான்.

எல்லா வகைப்பட்ட செய்கைத் திறமை, உயிர், வலிமை, வடிவழகு, ஒளித் திகழ்ச்சி, அறிவு, பொலிவு, மாட்சி—இவையனைத்தும் அக்நி தேவனுடைய விளக்கங்கள்.

அவனுக்குள்ளே ஸத்யம் மோன நிலையிலே நின்று அவனைச் செயல்களிலும் கிளர்ச்சிகளிலும் நடத்துகிறது.

அவன் கை வைத்த பொருளையெல்லாம் பரிசுத்தப்படுத்துகிறான். வையத்திலே தத்தளித்துக்கொண்டிருக்கும் ஜீவனை இருளிலிருந்து ஒளியிலே கொண்டு சேர்க்கிறான்.

---

[1] வெவ்வேறு இடங்களிலுள்ள வேதவாக்யங்கள் இங்கு வேத ஸாரமாகத் தொகுக்கப்பட்டன.

[2] தீ யென்பது ஞான சக்தி.

வெப்பத்திலும், தொல்லையிலும் மிருந்து உபசாந்தியிலும், ஆனந்தத்திலும் கொண்டு நிறுத்துகிறான்.

ஆரம்பத்திலே இவன் உயிர்ப் படியில் எரியத் தொடங்கும்போது, இவனை நாலு புறத்திலும் புகை வந்து சூழ்கிறது.

இப்போது, அக்நி புகைச்சல் நீங்கி, நாது வானங்களிலே தெளிவுபெற எரிகிறான். சுத்த மனம் என்பதோர் ஆகாசத்தைப் பற்றி எறுகிறான்.

இவன் க்ரது—வேள்வித்நிறம், செய்கைவினை, துணிவு; தெய்வத் துணிவையே அக்நி யென்கிறோம். இவன் கவி.

அறிவுக் கதிர்களை இவன் காவல் செய்கிறான்.

அந்தக் கதிர்கள், புல்லாந்தரையில் மேயுஞ் பசுக்களைப்போலே, நமது உயிர்நிலத்தில் மேயும்போது, இருளுக்கும் பிரிவுக்கும் மக்களாகிய ராக்ஷஸப் பகைவர் அவற்றைக் கவர்ந்து செல்லாதபடி இவன் காக்கிறான்.

பொய் பிழை இவற்றின் கோணல் வழிகளெல்லாம் கடந்து, தாழ்வும் உடைவும் வளைவும் கொண்ட தரையிலிருந்து மேலேற, சேர் வழியையும் உயர்ந்த நிறந்த வெளிகளையும் இவனுடைய உதவியால் அடைகின்றோம்.

இவனை உள்ளத்தே நிறுத்துகிறோம். அறிவும் துணிவும் ஒரு பொருளாகின்றன. வேள்வியின் வளர்ச்சியையும், எற்றத்தையும் அக்நி நடத்துகிறான். இவன்

புரோஹிதன், ஹோதா, ரித்விக்; புறத்தே வேதியர் சூழ்ந்து நின்று செய்வதாகச் சித்திரப்படுத்தும் கர்மங் களெல்லாம் உள்ளத்து வேள்வியில் இவன் ஒருவனே நின்று செய்கிறான்.

நமது வேள்வி தேவருலகத்திற்கு மூன்று செல்லு கிறது. அந்த மஹாயாத்திரையிலே அதனை ராக்ஷஸர் கவர்ந்து செல்லாதபடி அக்நி காக்கிறான்.

இவன் உயிருக்குத் தோழன். நமது காதலன்.

இவனை நம்பினவர்க்குப் பழுதில்லை.

இரவிற்குள்ளே ஆழ்ந்த இருளிலே மூடிக் கிடப்ப வனும் இந்தச் சுடரைக் கொளுத்தினால், அவனுக்குக் கண் தெரியும். இது வளர வளர, ஏற ஏற, அவன் பரி பூரண உண்மையைக் காண்பான்.

உஷஸ்ஸை (ஞானவொளியை)க் காணும் பொ ருட்டு இவன் வானை நோக்கி வளர்கின்றான்.

பிராண லோகத்தின் வானங்களிலே ஊடுரு வித் சென்று தேஜோமயமான ஸ்வர் லோகத்தை எய்துகின்றான்.

ஸ்வர் லோகந் தான் அவனுடைய வீடு.

அது உண்மையிடம், தீரா இன்பம்; அங்கே, தேவர்கள் ஸபை கூடியிருந்து அமிர்த பானம் செய் கிறார்கள்.

இங்கே, மண்ணுலகில் இவ் வொளி மறைந்திருக் கிறது. பூமிதேவி இவனைக் கருவிலே தரிக்கிறாள்.

வானத் தேவனுகிய பிதாவின் காரியங்களுக்கு இவனே விடுவிக்கவில்லை. தனது வினைவுகள் அனைத்திலும், செயுகளிலும், தூண்டுகளிலும், ரகங்களிலும் இவனே மறைத்து வைத்திருக்கிறார்கள்.

அறிவு முதிர்ச்சி பெறும்போது, இவன் மண்ணிலிருந்து வானத்தை நோக்கி எழுகின்றான்.

மூதற் பெருங்கடவுளின் தூண்டு, அரிதே தி.

இவனை இரண்டு அரணிக் கோல்கள் கடைந்து தருகின்றன.

மண் கீழ்க்கோல், வானமே மேற்கோல்; கடையும் தொழிலிலே தோன்றுகிறான். ஆதலால் இவன் 'வறுமையின் மைந்தன்.'

பிராணலோகத்திலே இவன் எறும்போது, புல்லாந் தரையில் மேயும் மாடு போலே, பூமியின் வினைவுகளை யெல்லாந் தின்று கொண்டு புகையுடன் எரிவான்.

அங்குவேட்கையின் வலிமை, வீடாயின் கிளர்ச்சி, அது தீ. தனது உணவுகளை யெல்லாம் அழித்து நாசமாக்குகிறான். தான் போகிற வழியிலே, தூண்டு மகிழ்ச்சியும் பொலிவும் திகழ்ந்த இடங்களில், ஒரு கரிக்கோடு மாத்திரமே மிஞ்சி நிற்கும்படி செய்கிறான்.

ஆனால், எதனை அழிக்கிறானே, அதனை மாசு தீர்க்கிறான். பிறகு, புகை மறைந்து விடுகிறது.

அப்பால், நாலேழுகயங்களின் முன்னே இவன் ஒரு வெள்ளைப்பரிபோன்று, நம்மை எற்றிக்கொண்டு

பரம ஸ்தானங்களிலே விடுகிறான். அங்கே நமது விருப்பங்களெல்லாம் உண்மை பெறுகின்றன. அறிவு ஸம்பூர்ண மாகிறது. அது களியுடனும் வெற்றியுடனும் விகாழில் செய்கிறது.

வேள்வி செய்யும் சூரியனை வேள்வித் தீ இக் ககையை தெய்வ நிலையில் உயர்த்துகிறது. அமரத் தன்மைக்கு வெற்றி புண்டாகிறது. எண்ணமிட்டும் போர் செய்தும் பாடுபட்டுக்கொண்டிருந்த மனிதனைக் கவியாகவும் ஸ்வராஜ்ஞகவும் இயற்கையின் வேந்தனாகவும் அக்நி தேவன் செய்து விடுகிறான்.

தீயைச் சத்திரங்களிலே புகழ்கின்றோம்.

நமது வாயில்கொண்ட மானிகையின் தலைவன்; நம்மிடத்தே அன்புடன் விருந்துண்ண வந்தோன்; உயிரிலே இறைவன்; தழலுகின்ற சடைகளையுடைய கவி; தெய்வக் குழந்தை; புண்ய மூர்த்தியாகிய குமார தேவன்; வெல்லொணாச் சூரன்; தீ.

மனிதரின் முன்னே சென்று வழி காட்டுவோன்; இறப்பவருள்ளே இறப்பின்றி நிற்போன்; மனிதனுக்குள்ளே தேவர் நிறுத்திய தொழிலாளி; அறிவிலே தடைப்படாதோன்; உண்மையில் மூடிவற்றோன்; தீ.

விரிந்தொளிர் செய்யும் உண்மை ஞாயிறு; வேள்வியைச் சுமப்பவன்; அதன் படிகளை வகுப்பவன்; உறுதியான அடிப்படை; தெய்வத் தோற்றம்; ஒளிக் காட்சி; தீ.

தீயை (அக்நி தேவனை) மதுச்சந்தர் என்ற ரிஷி பாடியது[1].

1. தீ வேள்வியின் முன் நிற்பவன்: யுகன் பரு வங்களை வகுக்கும் தேவன்; அங்கு வானவனை உலாவப் பவன்; செல்வங்களை மிகுதியுற நாட்டுவோன்; யுவனை வேண்டுகிறேன்.

2. நினைய முன்னினைப் பலவர் போற்றினர்: நீ யோரும் அவனையே போற்றுக. யவனை இங்கு யுமரை அழைக்கொண்டு தருக.

3. நாளுக்கு நாள் வளருந் செல்வமும், சீர் மிக்க புகழும் தியாலே பெறுக.

4. தீயே, நெய்யிலாங்குப் வேள்வி நினை நீ எப்புறத்தும் சூழ்ந்து காக்கிறாய்; அதே வானவரிடம் சேரும்.

5. தீ வானவனை யழைப்போன்: பல்லைபல்ல செய்கைத் திறமை யாவோன்; சிந்தாகுல னானைக் கேள்வி தருவதிலே சிறந்தோன்; அவ் வானவன் வானவருடன் வருக.

6. அன்ப, வேள்வி தருவோனுக்கு நீ சீர் தரு வாய். அதுதான், தீயே, நினது உண்மை.

---

[1] ரிக் வேதம், மண்டலம் 1, ஸூக்தம் 1.

7. தீயே, நின்பால் நாள்தோறும், இரவும் பகலும் நாம் பணிவேந்தி வருகிறோம்.

8. நெறியிலோங்கும் வேள்விகளின் அரசே, நேர்மை காப்பாய், சுடர் வீசுவாய், தனது மனையிலே வளர்வாய், தீயே, நின்னை யடைகிறோம்.

9. அருகே போவதற்கெளியவனைப், மகனுக்குத் தந்தைபோல் தீ எமக்கு ஆகுக. நல்வாழ்வு பெறும்படி எம்மை நீ சார்ந்திடுக.

விளக்கம்.

'அமிர்தத்தின் பிறப்பிடமாகிய ஸூர்யன் என்ற ஒளியில் நான் என்னையே ஹோமஞ் செய்து கொள்ளுகிறேன்' என்று வேத ரிஷிகள் தமது வேள்வியின் பொருளைத் தாமே வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். இன்றைக்கும் காலையில் ஒவ்வொரு வேதியனும் இந்த மந்த்ரத்தைச் சொல்லுகிறான். இவ்விதமான வேள்வி நடைபெறவேண்டுமானால், அதற்குத் தீயின் துணை வேண்டும். தீ என்பது தவக் கடவுள். தெய்வீக மாகிய அறிவுத்துணிவு தீ எனப்படும். 'தேவருக்கு என்னை ஆஹுதி செய்துவிட்டு, அவர்கள் தரும் அமிர்தத்தை உண்டு நானும் அமரனாகி விடுவேன். இதை அஸுர சக்திகள் தடை செய்ய மாட்டா' என்று மனதிலே நிச்சயம் ஏற்படுத்திக் கொள்ளும் போது, தீ பிறக்கிறது.

1. தீயை எழும்பும்படி செய்தால் போதும். பிறகு இந்த வாழ்க்கை வேள்வியின் பொறுப்பு; என்

னைச் சார்ந்ததன்று. அவனை வேள்வியை அதன் பரு வங்களுக்குத் தக்கவாறு படிப்படியாக மேலே ஏற்றுக் கொண்டு போகிறான். எல்லா விதமான தெய்வ சக்தி களையும் அங்கு அழைத்து வருகிறான்.

2. 'நமக்கு முன்னே விடுதலைபெற்ற மகரிஷிக ளெல்லோரும் தீயையே துணை கொண்டனர். புதிய ரிஷிகளாகிய நாமும் அவரைவிடவே விடுதலைபெறு வோம்' என்று முதல் வேதத்தின் முதல் ஸூக்தம் சொல்லுகிறது. ரிஷி பரம்பரையின் ஆரம்பத்தை எப் படி யறிவோம்!

3. 'செல்வம்' என்பது இவ்வுலகச் செல்வங்கள் ஞானச் செல்வங்கள் ஆகிய இரண்டையும் குறிப்பது. இவற்றை நமக்கு அக்நிதேவன் தருவான்.

"எண்ணிய எண்ணியாங்கு தெய்துவ எண்ணியார் திண்ணியராகப் பெறின்' என்று திருவள்ளுவர் சொல்லுகிறார்.

தீக்கடவுள் எல்லா மனிதரிடத்தும் உள்ளத் திண் மையாக நிற்கின்றான். அவனை வளர்த்தால் எண்ணிய பொருள் எதுவும் எவ்வுலகத்திலும் கைகூடும்.

4. மனித நிலையிலிருந்து அமரநிலை நோக்கிச் செல்லும் வழிதான் வேள்வி போகும் வழி.

5. 'ஞானக் கேள்வி' இன்னதென்பதை மேலே காட்டியிருக்கிறேன்.

7. முழுதும் பணிவு கொள்வதே தேவரை அணுகக்கும் வழி. அஹங்காரத்தை விட்டு, இவ்வுடல் மூதலியவற்றை தேவ ருடைமை யாக்கி அவரையே சரணடைந்து விடுதல் வேண்டும்.

8. நேர்மை—சொல்லிலும், நடையிலும், உள்ளத்திலும் முழு நேர்மை—காணும்போது அங்கே அக்நி சக்தி பிறந்திருப்பதாக அறிந்து கொள்ளலாம். உள்ளத் திண்மை இல்லாவிடில் நேர்மையைக் காத்தல் அரிது.

மித்திரன்.

மித்திரன் என்ற ஸ்ரேய்ய தேவனை விசுவாமித்ர ரிஷி பாடியது[1].

1. மித்ரா தேவனிடமிருந்து பெறும் ஞானக் கேள்வி தொழில் செய்பவனைக் காங்குவது; இன் பங்களை வென்று தருவது; உண்மை புரை படது; ஒளிப் புதுனாகள் வாய்ந்தது. அதனை வாழ்த்து கிறோம்.

2. மித்திரன் அறிஞரை மேம்பட்டு ஈராக்கை நடத்துகின்றான். மித்திரன் மண்ணுலகையும் வானையும் காங்குவோன். மித்திரன் உயிர்களை இமை கொட்டா மல் பார்த்து நிற்கின்றான். அந்த உண்மைக் கடவு ளுக்கு நெய்யொளி கொண்ட உணவு படைப்போம்.

3. மித்ரா, விரதத்தாலே நின்னை உணர்வோன் யாவன், அம் மனிதன் இன்பங்களை நன்று நுகர்க. உன்னாலே காக்கப்படுவோன் (வளர்க்கப்படுவோன்) அழிவு பெறுவதில்லை; தோல்வி படைவதில்லை; துன்பங் களிலிருந்தும் தொல்லையிலிருந்தும் அவனைப் பாவம் வந்து சார்வதில்லை.

[1] இந்த ரிக்குக்கள் தைத்திரீய ஸம்ஹிதை 3-வது காண்டம், 4-வது ப்ரச்நத்தின் கடைசியிலுள்ளன. இவை சான திரிபுகளுடன், ரிக்வேதம், 3-வது அஷ்டகம் 4-வது அத்தியாயத்திலே காணப்படுகின்றன.

விளக்கம்.

காலை ஸந்த்யா வந்தனத்தில் இந்தப் பாட்டுக்கள் உதய ஸூர்யனை நோக்கி ஓதப் படுகின்றன. ஸூர்யன் பரமாத்மாவினுடைய ஞானவொளி; இந்த தேவன் நான்கு அபிசங்களுடையவன்:—மித்திரன், வருணன், அர்யமான், பகன். இவருள்ளே, மித்திரன் அந்த ஒளியின் அன்பைக் குறிப்போன்; வருணன் அதன் அனந்த நிலை (எல்லையற்ற தன்மை) யாவான்; அர்யமான் வலிமைத் தேவன்; பகன் அவ்வொளியின் இன்ப வுணர்ச்சியாக நிற்பவன்.

முழுமுதற் கடவுளுக்கு 'ஒளியே விழி, ஒளியையே சூரியன்' என்று போற்றுகிறோம். பூலோகத்திலே ஒளியாகத் தோன்றும் சக்திதான் சுவர்க்க லோகத்திலே ஞானமாகச் சுடர்கின்றது. அதன் அன்பு வடிவத்தை, அதாவது, தெய்வீக அன்பையே மித்திரனென்று வாழ்த்துகிறோம்.

1. 'ஞானக்கேள்வி' தேவர்களிடமிருந்து மனிதன் அறிவுச் செவியிலேயே பெற்றுக்கொள்வது. அன்பினிடமிருந்து இவ்விதமான கேள்வி பெறுவோர் செய்யும் தொழில்களெல்லாம் நழுவுதல் இல்லாத படி அன்பு தாங்கிக் கொள்ளுகிறது.

2. அன்பில்லாவிடில் மனித வாழ்க்கை நடை பெறுது; வானமும் இயலாது. அன்புதான் இவ்வுலக முழுவனையும் சிதறுதபடி ஆதரிப்பது; அன்பு ஒரு க்ஷணம் கண் மூடிவிடுமானால், உலகமும் உயிர்களும்

அழிந்துபோய்விடும். தேவர்களுக்கு மனிதன் தனது உடைமை முழுவதையும் அர்ப்பணம் செய்துவிட வேண்டும். அதுவே தேவர்களின் உணவு; 'நெய் யொளி கொண்ட தேவதைகள்' என்றும், 'நெய்யொளி கொண்ட ஸரஸ்வதி' என்றும், 'நெய்யொளி கொண்ட அறிவு' என்றும், வேதம் பிற இடங்களில் வழங்கு வதால், 'நெய்யொளி' என்பது 'ஞானத்தெளிவு' தான் பொருள் என்று தெரிந்து கொள்ளவேண்டும். எனவே, நாம் தேவர்களுக்குக் கொடுக்கும் உணவை ஞானத் தெளிவுடன் கலந்து கொடுக்க வேண்டு மென்று விசுவாமித்ரர் சொல்லுகிறார்.

3. 'விரத' என்பது விதி. அன்பின் விதிகளை கன்கு வழுக்கப்படுத்திலால், அன்பு நம்மை வளர்க்கும்; நம்மைக் காக்கும். பிறகு, அறிதலும் தேர்வியும் பாவமும் நமக் கில்லை.

மதுச்சந்தர் (தேனிசை) என்ற ரிஷி வாயு இந்திரன் மித்திரன் வருணன் என்ற தேவர்களைப் பாடியது[1].

உயிர் (வாயுதேவன்).

(1) காற்றே, வா, காட்சி புடையாய், இங்கு நின் பொருட்டுத் தேன்கள் புனைந்து வைத்திருக்கின்றோம்.

அவற்றை அருந்து; கூவுதலைக் கேள்.

(2) உயிரே, மந்திரங்களால் நின்னைத் துதி செய்கின்றனர்.

(யாவர்?) பண் பாடுவோர், தேன் பிழிந்தோர், பகலறிந்தோர்.

(3) உயிரே, நிறைவுதரும் நினது இன்ப ஓடை வேள்வி தருவோனை நோக்கிப் பாய்கின்றது.

(அஃது) தேன் பருகுமாறு விரிவுகொண்டது.

உயிரும், அறிவுச்சுடரும் (வாயு, இந்திரன்).

(4) இந்திரா, காற்றே, இங்கு சாறுகள் பிழிந்திருப்பது, காணீர். இங்கே இனிமைகள் கொண்டு வருக. தேன்கள் நும்மை விரும்புகின்றன.

---

[1] ரிக்வேதம்: மண்டலம் 1, ஸூக்தம் 2: அஷ்டகம் 1, அத்யாயம் 1, வர்க்கம் 3, 4.

(5) வளத்தின் கருப்பொருளிடை யூர் காற்றே, இந்திரா! சாறுகளின் சுவையறிவீர்; விரைவுடன் இங்கு வருக.

(6) காற்றே, இந்திர! லோகம் பிழிதேவன் செம்மையாகச் செய்யும் வெள்ளியின் கண்ணை, சோர்மையற்றுடன், வீரரே, விரைந்து வருக.

அன்பும் விரிவும் (மித்திர வருணர்).

(7) தூய பகுத்தறிவு கொண்ட மித்திரனை அழைக்கிறேன்: பகைவரை மாய்க்கும் வருணனை அழைக்கிறேன். அவர் தெளிவுடன் ஒளிரும் அறிவைச் சமைப்பார்.

(8) சோர்மையை வளர்ப்போர், சோர்மை நிலை பற்றுவோர், அந்த மித்திர வருணர் சோர்மையிலை பெரிய வேள்விக் திறம் அடைகின்றனர்.

(9) மித்திர வருணர் கவிகள்; பல பிறப்புடையோர்; விரிந்த மனையுடையோர்; அவர் நம்மை உத்திறமையுடைய தொழிலில் நாட்டுக.

அசுவினௌ தேவர்.

முன்னுரை.

'அசுவினௌ' என்சூல், 'குதிரை யேறி வரும் இருவர்' என்பது பொருள். இவர் இரவு பகலைக் குறிப்பிடுவதாகச் சில ஐரோப்பிய பண்டிதர்கள் கருதுகிறார்கள். தேவ வைத்தியரென்பது புராணக் கொள்கை. தமிழிலே, வாசி என்ற சொல் குதிரையைக் குறிக்கும்; இது வாஜி என்ற வடமொழியின் திரிபு. இந்தச் சொல்லே யோகிகள் உயிர்க்காற்றென்ற பொருளில் வழங்குவதுண்டு. அசுவம் என்பது உயிர்த் திறமை. அத் திறமையை அதன் போக்கு வரவுகளிலே பாதுகாக்கும் இரண்டு வித சக்திகளே அசுவினௌ தேவர் என்பது யோகிகளின் மதம்.

மதுச்சந்த ரிஷி அசுவினௌ தேவரையும், இந்திரனையும், வானவர் கூட்டத்தையும், ஸரஸ்வதி தேவியையும் பாடியது[1].

அசுவினௌ தேவர்

(1.) புரவி நடத்துவீர், விரைந்த நடை கொண்டீர், நன்மைத் தலைவரே, பல இன்பங்க ளுடையீர், எமது வேள்வியின் விருப்பங்களிலே மகிழ்ச்சி பெறுக.

(2) இருவீர், பரியூர்ந்து வருவீர், பல வெற்றிகளை யுடையீர், வீரரே, மதிசிறந்தீர், நமது வலிமை கொண்ட அறிவினுல் எமது சொற்களை விரும்புக.

---

[1] ரிக்வேதம்: மண்டலம் 1. ஸூக்தம் 3: அஷ்டகம் 1. அதியாயம் 1. வர்க்கம் 5-6.

(3) வெல்வீர், இளையுடையீர், நெற் செல்வீர், ருக்ரன் வழிகண்டீர், வேள்விப்புல்லை நன்றாகத் துணித்துப் பரப்பி வைத்திருக்கும் மனிதரிடத்தே ஸோமரஸங்களை உண்ணுவற்பொருட்டு வருக.

இந்திரன்.

(4) வருக, இந்திரா. சித்திரக் கதிரோய்! இந்தத் தேன்கள் நின்னை விரும்பி நிற்கின்றன. இவை நட் பங்களாலே முழுதும் தூய்மை செய்யப்பட்டன.

(5) வா, இந்திரா! அரிவினரே தூண்டுதல் பெற்று ஞானிகளின் எவுகள் தொண்டு இங்கே ஸோமத்துடன் வேண்டுவோனது மந்திரங்களை நோக்கி வா.

(6) இந்திரா, புரவி பூர்வாய், விரையுடன் எம் மூடைய அறிவு மந்திரங்களை நாடி வருக, எமக்கு ஸோமத்திலே இன்பத்தை நாட்டுக.

விசுவ தேவர் (வானவர் கூட்டம்.)

(7) வானவர் எல்லீரும் வாரீர்; காப்புத் தொழில் உடையீர், தொழில் செய்வோரைத் தாங்குவீர், ஸோமம் தருவோனுக்கு (நன்மைகள்) தருவீர். வருக.

(8) வானவர் கூட்டமே, ஆவுகளைக் கடப்பீர், எமது ஸோமத்தை நாடி வருக, மந்தைக்கு வரும் ஆவினம் போலே.

(9) வானவர் கூட்டமே, பகையற்றீர், பல சூழ்ச்சிகளுடையீர், தீங்கற்றீர், தாங்கும் வலிமை யுடையீர், வேள்வியை விரும்புக.

ஸரஸ்வதி.

(10) தாய்மை செய்வாள் ஸரஸ்வதி; வளங்களிலே வளமுடையாள், கருப்பொருள் ஆவாள்; நமது வேள்வியை அறிவிலே தாங்குக.

(11) உண்மைகளைத் தாண்டுவாள். நல்ல மதிகளை ஒளிபெறக் காண்பாள், நமது வேள்வியை ஸரஸ்வதி காங்குகின்றாள்.

(12) (உண்மைப்) பெருங்கடலைக் காட்சியிலேலே தெளிவுறச் செய்கின்றாள். அறிவுக ளனைத்திலும் ஸரஸ்வதி அரசு செய்கின்றாள்.

இந்திரன்.

மதுச்சந்த ரிஷி இந்திரனைப் பாடியது[1].

1. நல்ல வடிவங்கள் சமைக்கும் இந்திரனை நாள்தோறும் காக்கும்படி அழைக்கின்றோம், பால் வேண்டுவோர் நன்கு கறக்கும் ஆவினை நாடுவதுபோல.

2. எமது தென்பிழிவுகளை நாடி வருக. ஸோமமுண்பாய், எமது ஸோமத்தையுண்ணுக. செல்வனெனது கனி எமக்குக் கதிர்களைத் தருமன்றே?

3. இனி, நினது மிகவும் நட்பமாகிய மதிகளை அறியக்கடவோம்.

எம்மை நீ கடந்து சென்று விடலாகாது.

---

[1] ரிக்வேதம்: மண்டலம் 1, ஸூக்தம் 4: அஷ்டகம் 1, அத்யாயம் 1, வர்க்கம் 7, 8.

4. வேள்வி செய்யும் மாலுடனே, இந்திரன் வலியவன், அழிக்க வொண்ணாதான், தெளியலை டையோன். அவனிடம் உதவி கேள். நினது நண்பருக்கு அவன் வர மளிக்கான்.

5. இந்திரனிடத்தே செயல்களை ஒப்படைத்துவிட்டுப் பிறகு நம்மவர் சுற்றி பகைவரை நோக்கி 'இங்கிருந்து விலகி யோடுவீர்' என்று கூறுக.

6. நமக்கு அழிவு செய்ய நாடும் பகைவர் நம்மை 'நற்பேறு பெற்றோர்' என்று போக; இந்திரனுடைய இன்பத்திலே இருந்திடுவோம்.

7. வேள்வி செய்வோரப், விரைந்து வரும் இந்திரனுக்கு விரையுடைய தேனைக் கொண்டுவா; இத்தேன் வேள்வியின் செல்வம்; வீரருக்குக் களி தருவது; தோழரைக் களிப்புறச் செய்யும். இந்திரனை நோக்கி வீழ்வது.

8. நாறு வேள்விக் கிறனுடையாய்! இந்திரா! இத்தேனையுண்டு விருத்திரனை (மறைப்படப் பேய்களை) கொன்றிடுவாய்; வளமுடைய மனிதனை வானிலே காப்பாய்.

9. இந்திரா, வேள்விக்கிறன் பல னுடையாய், வளமுடைய நின்னை வளமிகச் செய்கின்றோம், செல்வங்கள் பெறும் பொருட்டாக.

10. இன்பச் செல்வங்களை வென்று தருவான், பெரியோன், நன்குகரையேற்றுவோன், தென் பிழியும் மனிதருக்கு நண்பன்—அவ் விந்திரனைப் பாடுங்கள்.

இந்திரனை மதுச்சந்த ரிஷி பாடியது[1].

வாருங்கள், வீற்றிருங்கள், இந்திரனைப் பாடுங்கள், துணைவரே! ஸ்தோமங்களை[2]ச் சூடப்பவரே! (1)

பல செல்வங்க ளுடையவனை, விரும்பத் தக்க இன்பங்களின் அரசனை, இந்திரனை, ஸோமரஸம் பிழியுமிடத்தே, ஒன்றுகூடிப் (பாடுங்கள்). (2)

அவன் எங்கள் யோகத்திலே அமர்க. செல்வமும் பலவகை யறிவும் பெருகும்படி அவன் எம்மிடத்தே பொருந்துக. அவன் நம்பொருட்டு வளமைகளுடனே வருக. (3)

போரில், மோதுமிடத்து, இவன் குதிரைகளைப் பகைவர் நயப்பதில்லை (அஞ்சுகின்றனர்). இவ்விந்திரனுக்குப் பாட்டுச் சொல்லுங்கள். (4)

ஸோம முண்பானுக்கு இந்த ஸோமங்களை வடித்தோம். இவை தூய்மை யுடையன, விருந்துக் களிகருவன, கட்டிப்பால்[3] கலந்தன. (5)

இந்திரா, செய்கை நலமுடையாய், ஸோமத்தின் மூகற் பானத்துக்கு நீ பிறந்து விட்டாய்.

---

[1] ரிக்வேதம்: மண்டலம் 1, ஸூக்தம் 5: அஷ்டகம் 1, அத்யாயம் 1, வர்க்கம் 9, 10.

[2] ஸ்தோமம்-மந்த்ர ப்ரதிஷ்டை.

[3] பால் என்பது ரிஷிகளின் பாஷையிலே ஒளிச்சுவை என்றும் பொருள் படும்: 'கோ' என்னும் மொழி பசுவென்றும், ஒளிக்கதிரென்றும் இரண்டு பொருள்பட வழங்குதல் வேதத்தில் ஸர்வ ஸாதாரண மானது.

பிறக்குமிடமெங்கு முதிர்க்க வலியாயுடன் வக்
கடவ். (6)

விரைவு தொடங்கி மொடங்கள் தின்றவின்மை
பாடுக. இந்திர, பாட்டினை விரும்புவோய், நூறிவோய்
கிய நின்னிடத்து நலங்கள் சார்ந்திடுக. (7)

உன்னை விரும்புகாரங்கள் வளர்ந்திடுக ; பல வெள்ளி
களின் இறைவனை, உன்னைச் சார்ந்தவர்கள் பெருமிடம்
செய்யும். எமது பாட்டுகள் உன்னை வளர்த்திடுக. (8)

எல்லா வகை ஆன்மாவுணர்வு உடைய ஆயிரங்க
மான பெருவளத்தை நிரந்தரம், நிகழாக காலம் நிலம்
பவுதல், எமக்கு வென்றி தருக. (9)

உடல்களைக் கொல்லும் காலன் எடுத்துக் கும்பத்
தெப்யாதொழிக. இந்திர, பாட்டை விரும்புவோய்,
அவன் படைக்கலத்தை நீ தடை செய்திடுக. (10)

விளக்கம்.

சுத்தமான அறிவு வட்டார் எங்கும் நிறைந்திருக்
கிறது. அதன் தலைமைக் கடவுள் இந்திரன்.

இந்திரனை நாதனாளத்திலே ஸ்தாபனம் செய்ய
வேண்டுமானால், அதற்குரிய மனோநிச்சயம் செய்து
கொள்ளவேண்டும். அம் மனோநிச்சயம் மந்திரமாக்
காக வெளிப்படுகின்றது. மந்திரம், மனம் என்ற
இரண்டு சொற்களும் வடமொழியில் 'மந்' என்ற
ஒரே பகுதியில் தோன்றியனவை. இந்திரன் வருகையை

வேண்டி இந்த ஸூக்தம் சொல்லப்படுகிறது. தேவர் களை அழைப்போர் முன்னதாகவே ஸோமரஸம் பிழிந்து வைக்கிறார்கள். ஸோமப் பச்சிலையை உரலிலே போட்டு உலக்கையால் இடித்து ஸோமரஸம் பிழியப் படுகிறது. யோகாநுபவத்திலே, உயர் பிரகிருதி; உலக்கை சேதனத் திறமை; உயிர்வாழ்க்கை என்ற இலையை இங்ஙனம் பிழியும்போது, சித்தத் தெளி வாகிய ஸோமரஸம் பிறக்கிறது. யோகசித்தியும், மூவுலகின் செல்வங்களும், அறிவும்—பல வகை தரும் பொருட்டு இந்திரனே வேண்டுகிறோம்.

மனித அறிவிலே தெய்வத் திறமைகள் தோன்று வதை தேவர்களின் புதிய பிறப்பென்று ரிஷி வர்ணிக் கிறார். இங்கு இந்திரன் பிறப்பும், அடுத்த ஸூக்தத் தில் மருத்துக்களின் பிறப்பும் இப்பொருளிலே கொள்ளத் தக்கன.

இந்திரனும் மருத்துக்களும்.

இந்திரனையும் மருத்துக்களையும் மதுச்சந்த
ரிஷி பாடியது[1].

அவனைச் சூழ்ந்து நிற்போர் வேகமும், ஒளியு முடைய சிவப்புக் குதிரையைத் (தேரிலே) பூட்டுகிறார் கள். வானத்திலே சுடர்கள் ஒளி வீசுகின்றன. (1)

விரும்பத்தக்கன, செந்நிறமுடையன, துணிவுடை யன, வீரனைப் பொறுப்பன, இங்ஙனமாகிய குதிரைக

1. ரிக்வேதம்: மண்டலம் 1, ஸூக்தம் 6; அஷ்ட கம் 1, அத்யாயம் 1, வர்க்கம் 11, 12.

னிரண்டையும் இந்திரனுடைய சேனைக் இருபுறத்
திலும் தூண்டுகின்றனர். (2)

ஒளியில்லாத விடத்தில் ஒளியினைச் செய்தல், வடிவ
மில்லாத விடத்து வடிவுத்தினை அளித்தல், மிக
நீ புலி[1]களுடன் பிறந்து விட்டாய்[2]. (3)

பின்பு தாமது வழக்கப்படி மருத்துக்கள் மீளவும்
பிறந்தனர், தமது வேள்விப் பெயர் தாமுடையர்[3]. (4)

இந்திரா, கோட்டைகளை உடைத்து, பலரிடங்
களிலே வேள்வியைச் சாதித்து செல்லும் மருத்துக்களு
டனே,[4] நீ ஒளிக்கதிர்களைச் சென்று மீட்டுத் தாராய்
தனை[5]. (5)

பெரியோன், ஞானக் கேள்வியுடையோன், செல்
வங்கள் தேடிக்கொடுப்போன். அவ்விந்திரனை நோக்கி
மதியின்படி பாடலுற்றனர், பாட்டுறலில் பிரயத்தம்
பெற விரும்புவோர். (6)

---

1. புலி—வைகறை, காலைச் செவ்வானம். இங்கு 'புலிகன்' என்பது ஏகாரவீற்றதாயுள்ளது.

2. இம்மூன்று ரிக்குக்களும் இந்திரனைப் பாடியன.

3. ரிக்குக்கள் 4, 6-10 மருத்துக்களைப் பாடியன.

4. மருத்துக்கள் புயற் காற்றின் தேவர்; இவர் தமது அறிவொளியை மூடும் இருள்களை யெல்லாம் சாடிப் புடைத்துக் குத்தி யொழித்துவிட்டு, வானமழையையும் ஒளியையும் பெறும்படி செய்வர்.

5. இந்த 5-வது ரிக்கும் 7-வதும் இந்திரனையும் மருத்துக்களையும் பாடியன.

அஞ்சாத இந்திரனுடன் நீயும்[1] வந்து எங்கள் முன்னே தோன்றுக. நீங்களிருவரும் களியுடையீர். நிகரான ஒளியுடையீர். (7)

படிக்கக்கூடாதவர், ஒளி சார்ந்தோர், இந்திரனுடைய விருப்பத்தக்க கணங்கள் இந்த மருத்துக்களால் வேள்வி வலியையுடன் ஒளிர்கின்றது. (8)

எங்கும் ஸஞ்சாரம் செய்வாய், இந்திரா, இவ் வேள்வியிலே நின்னை வாக்குக்கள் ஒன்றுகூடி வேண்டுகின்றன. அங்கு அச் சுடர்தரும் அறிவு வானத்திலிருந்து வருக. (9)

அல்லது, அங்கு இம் மண்ணைச் சார்ந்த வானத்தினின்றும் வருக. அல்லது, மேலுறை லோகத்திலிருந்து வருக. (10)

விளக்கம்.

நமது மனமாகிய வேள்விக்கூடத்தை நோக்கி இந்திரன் புறப்படுகிறான். சிவந்த ஒளியும் தூண்வு முடைய குதிரைகளால் அவனுடைய தேர் இழுக்கப் படுவதாகக் கவி கற்பனை செய்கிறார்.

பிறகு, மூன்றுவது படியில்[2], இந்திரன் நமது மேல் மண்டலத்தில் வந்த பிறகு நடக்கும் செய்திகளைக் காட்டுகின்றார். அவன் வருமுன்னே ஒளியின்றி யிருந்

---

1. இந்தப் பாட்டில் நீ என்ற சொல் மருத்துக்களின் கூட்டத்தைக் குறிப் பிடுவதாகப் பழைய உரைகாரர் சொல்லுகின்றனர்.

2 'படி' என்பது 'ரிக்.'

தது. அவன் வந்தவுடன் ஒளி யுண்டாயிற்று. அவன் வரு முன்னே நமது மலையுலம்டலத்தில் நல்ல திருத்த மான வழிவங்கள் அமைந்திராமல் கலங்கிக் குழப்பமுற் றுக் கிடந்தது. அவன் வந்தவுடனே, அங்கு நல்ல வழிவங்கள் உண்டாயின ; அதாவது, ஒழுங்கும் அழகு முடைய மலை நியமங்கள் ஏற்பட்டன. பிறகு, 'வை கறைகள்' என்று சொல்லப்படும் ஞாலை யங்கள் தோன்றின. பின்பு, அங்கே இந்திரனுடைய சீனை மறவராகிய மருத்துக்கள் என்னும் தேவர் பிறக்கிறார் கள். இந்திரன் தான் தோன்றும்போது, அஞ்ஞானம் அச்சம் கவலை முதலிய தன் பகைவரைக் கொல்லும் பொருட்டுப் பகையுடன் வருகின்றான்.

ஒளியின் கதிர்களை அசுரர் ஆங்கு ஓரிருட் குகை யில் மறைத்து வைத்திருக்கிறார்கள். இந்திரனும், மருத்துக்களும், அசுரருடைய கோட்டையைத் தகர்த்து, உள்ளே புகுந்து, அவ்வொளிக் கதிர்களை விடுவித்துக் கொடுக்கிறார்கள்.

வலிமைகொண்ட மந்திரங்களாலே, அதாவது மலை நிச்சயங்களாலே, மனிதன் இவ்வுலகத்தில் அமரநிலை யடைகின்றான். அது பற்றியே, 'பாட்டினால் தேவநிலை பெற விரும்புவோர் இந்திரனைத் தமது, மதி யின்படி பாடலுற்றனர்' என்று ரிஷி சொல்லுகிறார்.

அதிதி.

(ரிக்வேதம் : 1 மண்ட.—191 ஸூ.—6 ரிக்.)

வான் உங்களுக்குத் தந்தை. மண் உமக்குத்

தாய். லோம ரஸம் உடன் பிறந்தது. அதிதி உடன் பிறந்தாள்.

(8 மண்ட.—101 ஸூ.—15 ரிக்.)

ருத்ரர்களின் தாய், வஸுக்களின் மகள், தன் மக்களாகிய தேவருக் கெல்லாம் உடன்பிறந்தாள், அமிர்தத்தின் ஊற்றுவாள். அறிவுடைய மனிதனுக் குச் சொல்லுகிறேன்; 'மாசற்ற ஒளியாகிய அதிதியை மறக்கலாகாது.'

(10 மண்ட.—63 ஸூ.—10 ரிக்.)

நன்கு காக்கும் மண்ணுகவும், நிகரற்ற வாணுகவும் அதிதியே விளங்குகிறாள்; நிறைந்த நலந் தருபவள்; நன்கு நடத்துபவள்; அந்த அதிதியாகிய தெய்வத் தோணியிலே, நாம் நல்ல நிலையின் பொருட்டாக ஏறிக் கொள்ளுவோம்; அது நல்ல தண்டுகளுடையது, மாசற்றது, தொளையில்லாதது.

(10 மண்ட.—36 ஸூ.—3 ரிக்.)

எல்லாத் தீமையினின்றும் நம்மை அதிதி காத் திடுக. அவள் மித்திரனுக்கும் செல்வ மிருந்த வருண னுக்கும் தாய். அவளாலே அழிவற்ற வாழ்ணுளினைச் சேர்ந்திடுவோம்.

(9 மண்ட.—74 ஸூ.—3 ரிக்.)

அதிதியின் நேர்மை நெறியிலே செல்வோன் விசாலமான ஒளிப் பாதையிலே செல்லுகின்றான்.

(2 மண்ட.—27 ஸூ.—7 ரிக்.)

ராஜமாதாவாகிய அதிதியும், அர்யமானும்[1] நம்மை நல்ல வழிகளிலே செலுத்திப் பகைமைகளை யெல்லாம் கடக்கும்படி செய்க. நாம் நல்ல வீரராகிப் பகைமை தீர்ந்து மித்ரவருணரின் மங்களத்தில் வாழ்வோமாக.

(8 மண்ட.—67 ஸூ.—14 ரிக்.)

கட்டுண்ட திருடனை அவிழ்த்து விடுவது போல, எம்மை ஓநாய்களின்[2] வாயிலிருந்து அதிதியும் அவள் மக்களும் விடுதலை செய்க.

(8 மண்ட.—18 ஸூ.—6 ரிக்.)

இரண்டற்றவளாகிய அதிதி பகலிலும் இரவிலும் எமது செல்வத்தைக் காத்திடுக. எப்போதும் வளர்ப்பவளாகி எம்மை அவள் தீமையினின்று காத்திடுக.

(8 மண்ட.—18 ஸூ.—7 ரிக்.)

மதியிலே நிற்பவளாகிய அதிதி நமக்குப் பகலொளியிலே துணை புரிய வந்திடுக. அவள் நமக்கு மங்களமயமாகிய பேரின்பத்தைத் தருக. அவள் நமது பகைவரை (ராக்ஷஸரை) யெல்லாம் ஒழித்திடுக.

(1 மண்ட.—185 ஸூ.—3 ரிக்.)

நிகரற்றதும் தீங்கற்றது மாகிய அதிதியின் வரத்தை வேண்டுகிறேன்.

---

1. அர்யமான் வலிமைத் தெய்வம்; மித்ரன் அன்புத் தெய்வம்; வருணன் விரிவுத் தெய்வம்.

2. ராக்ஷஸரின்.

(7 மண்ட.—40 ஸெ.—2 ரிக்.)

தேவியாகிய அதிதி நமக்குப் பெருஞ் செல்வம் தருக.

(10 மண்ட.—100 ஸெ.—1 ரிக்.)

அனைத்தையும் சமைப்பவளாகிய அதிதியை வேண்டுகிறேன்.

சில திருஷ்டாந்தங்கள் காட்டினேன். பிற்காலத்துக் கதைகளிலே அதிதியின் உண்மைப் பொருள் மறைந்து விட்டது. 'அநந்த சக்தியை' ஒரு ரிஷி பத்தினி யாக்கிவிட்டார்கள். அதிதி யென்பது எல்லையில்லாத பரமாத்ம சக்தி. 'அஹங்காரம்' பிரிவு படுத்துகிறது, கட்டுப்படுத்துகிறது. நான் என்ற பிரிவுணர்ச்சி நீங்கும்போது மனிதன் எல்லையற்ற நிலையுடன் பொருந்துகிறான். அதுவே 'அதிதியோகம்' அல்லது சக்தியோகம் என்று சொல்லப்படும். அதிதியின் மக்கள் ஆதித்யர். இது தேவருக்கெல்லாம் பொதுப் பெயர். ஸூர்யனுக்குச் சிறப்புப் பெயராக வழங்குகிறது. அதிதியைச் சரணமடைந்தோரும் ஆதித்யரே யாவர்.

வாக்கு.

வேதத்தில் வாக்கை ஒரு தெய்வமாகச் சொல்லியிருக்கிறது. திருஷ்டாந்தமாகப் பின்வரும் மந்திரங்களை[1] நாம் ஏற்கனவே[2] படித்திருக்கிறோம் :—

---

1. ரிக்வேதம்: மண்டலம் 1. ஸூக்தம் 3, ரிக் 10-12.
2. 30-வது பக்கம் பார்க்க.

"நம்மைப் பரிசுத்தம் செய்வாள் ஸரஸ்வதி; வளங்களிலே மிகுந்தாள், அறிவுச் செல்வ முடையவள், (நமது) வெள்ளையைத் தாங்குக.

"உண்மை யொளிகளைத் தோன்றுவாள், நல்ல மதி களை விளங்கச் செய்வாள், ஸரஸ்வதி வேள்வியைக் காக்கின்றாள்."

"பெரு வெள்ளமாகிய ஸரஸ்வதி, ஞானவொளி யால் விளக்குவாள், எல்லா அறிவுகளிலும் கதிர் செய்கின்றாள்."

'வாக்' கென்பது, மூலத்திலே, படைத்தல் என்று பொருள்படும். ஸரஸ்வதியை இந்திரனுடைய மனை வியிர் என்று சொல்வதுண்டு. ஸ்ருஷ்டியே வாக்கு; ஸ்ருஷ்டியே சக்தியானபடியாலே தான் புராணக்காரர் ஸரஸ்வதியைப் பிரம்மாவின் சக்தியென்றார். பைபிள் புஸ்தகத்திலே, 'ஆரம்பத்தில் வாக்கு இருந்தது; அந்த வாக்கு ஈசனோடிருந்தது; அந்த வாக்கே ஈசன்' என்று சொல்லப்படுகிறது. சக்தி பரம புருஷனோடிருப்பதையும், அவ்விரண்டும் ஒன்றென்பதையும் அந்த வாக்கியம் காட்டுகிறது.

ஸரஸ்வதி பூஜை—உண்மை வழி.

சொல்லை ஸாதாரணமாக நினைத்துவிட லாகாது. உண்மைச் சொல் சுகமந்திர மாகும். பொய்ச்சொல் அழித்துவிடும். "வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்."

இவனே அறிஞன் தனக்குள்ளே ஞான வெள்ளமாகக் காண்கிறான். அவனுடைய அறிவு கதிர்விடுகின்றது. இவருடைய பூஜைக்கு முக்கிய வழிகள் எவை? தான் எப்போதும் எவ்விடத்திலும் உண்மை சொல்லுதல், பிறர் உண்மை சொல்வதை எப்போதும் எவ்விடத்திலும் விருப்பத்தோடு கேட்டல் என்ற இவ்விரண்டுமேயாம். தான் உண்மை சொல்வது மிகவும் சிரமமாய் விட்டது. பிறர் உண்மை சொல்வதைக் கேட்கும்போது நாராச வாணமாய்விட்டது. ஸாதாரண நிலையில், மனித வாழ்க்கை அத்தனை கோணலாகி விட்டது; மனித அறிவு அவ்வளவு குழப்பமடைந்து நிற்கின்றது.

தேவ வாக்கு அவதாரம் : ஸரஸ்வதி.

வேத மார்க்கமாகிய வேள்வியின் ரஹஸ்யப் பொருளை உணர்ந்து நடந்தால், உண்மை சொல்வதிலும் துன்பமிராது; கேட்பதிலும் துன்பமிராது. உலக வாழ்க்கையே தேவருக்குச் செய்யப்படும் வேள்வியல்லவா? அதனை ஸரஸ்வதியே தரிக்கவேண்டுமென்று மதுச்சந்த ரிஷி வேண்டுவதை மேலே கண்டோம். உண்மைச் சொல்லே ஸரஸ்வதி வசம் நமது வேள்வியை ஒப்புக்கொடுப்பதற்கு முக்கிய வழி யென்றும். இதனுடன், நிந்தை, பழி, சாபம், பயம், அசுசி—இவற்றினல் வாக்கை மாசுபடுத்தாதிருக்கவேண்டும். அமங்கள வார்த்தைகளும் அவச் சொற்களும், பய வசனங்களும் தீமை தரும். பரிபூர்ணமான தீரமும், வலிமையும், உண்மையும், திருத்தமும், தெளிவும் பொருந்திய வாக்கே

தேவ வாக்கென்று சொல்லப்படும். மனித ஜாதிக்கு தேவ வாக்குப் பிறந்திடுக.

ஸரஸ்வதியும் இலக்கியமும்.

உலக நடையிலே, உண்மை முதலிய குணங்கள் ஸரஸ்வதி தேவியின் கருணைக்கு நம்மைப் பாத்திரமாக்கி, நம்மிடத்திலே தேவ வாக்கைத் தோற்றுவித்து, நமது வேள்வியைக் காக்கும் என்பது கண்டோம். இலக்கியக் காரருக்கோ வென்றால், இத் தெய்வமே குலதெய்வம். அவர் இதனைச் சுடர் செய்யும் உண்மையுடனே போற்றவேண்டும். எதனையுமோரணக்குக்காகச் சொல்ல வந்த பொருளை மாற்றிச் சொல்லும் பண்டிதன் ஸரஸ்வதி கடாக்ஷத்தை இழந்து விடுவான். யமகம் திரிபு முதலிய சித்திரக்கட்டுக்களை விரும்பிச் சொல்லுக்குத் தக்கபடி பொருளைத் திரித்துக்கொண்டு போகும் கயிறு பின்னிப் புலவன் வாணியின் திரு மேனியை நோகும்படி செய்கிறான். அவசியமில்லாத அடைமொழிகள் கோப்போன் அந்த தெய்வத்தின் மீது புழுதியைச் சொரிகின்றான். உலகத்தாருக்குப் பொருள் விளங்காதபடி இலக்கியஞ் செய்வோன் அந்த சக்தியைக் கரித்துணியாலே மூடுகின்றான்: 'வெள்ளைக் கலி' யுடுத்துவதில்லை. மனமறிந்த உண்மைக்கு மாறு சொல்லும் சாஸ்திரக்காரனும் பாட்டுக்காரனும் ஸரஸ்வதிக்கு நிகரில்லாத பாதகம் செய்கின்றனர். இலக்கியத்துக்குத் தெளிவும் உண்மையுமே உயிரெனலாம். இவ்வுயிருடைய வாக்கே அருள் வாக்கென்று சொல்லப்படும்.

மருத்து.

(புயற்காற்று).

முகவுரை.

இது கண்வ ரிஷி காட்டிய மந்திரம். மருத்துக்க ளென்னும் புயற் காற்றடிக்கும் தேவர். இவர்கள் ருத்திரன் மக்கள். ருத்ரன் அஞ்சத் தக்கவன். அவனுக்கு மூவுலகமும் நடுங்கும். பரமாத்மாவின் ஸம்ஹார வடிவத்துக்கு, வேதம் ருத்ரன் என்ற பெயர் சொல்லுகிறது. இவன் தன்னைச் சரணமடைந்தோருக்கு எங்கும் எப்போதும் நல்ல துணையாவது போல், இவன் மக்களும் இந்திரனுடைய மற்றத் தேவரும் மாகிய மருத்துக்கள் இருளை ஒழிப்பதிலே கொடியோராயினும் வேள்வி செய்வோருக்கு நன்மை யெல்லாந் தருவர். வானத்திலே தோன்றும் புயற்காற்றுக்களையும், உள்ளத்திலே காணப்படும் உக்ர வேகங்களையும் ஆட்டிவைப்போர் மருத்துக்கள். இவர்களைச் சரணமடைந்தால், காவலும், இன்பங்களும், உண்மையறிவும் தோன்றும். இந்த வானவருடைய துணை வேண்டிக் கண்வ ரிஷி பின்வரும் மந்திரத்தை ஓதுகிறார்.

மருத்தைக் கண்வரிஷி பாடியது[1]

1. இப்படி உங்களுடைய திறமையை மேலிருந்து தீபோல் வீசுவது யாருடைய வேள்வியால்? யாரு

---

1. ரிக்வேதம்: மண்டலம் 1, ஸூ. 39; அஷ்டகம் 1; வர்க்கம் 18, 19.

டைய சூழ்ச்சியால்? யாரிடம் போகிறீர், உலகினை அனைப்பீர், யாரிடம்?

2. உம் ஆயுதங்கள் காக்குவதில் உறுதியும் எதிர்ப்பதில் வலிமையும் பெறுக. தொழில் செய்யும் வீரம் உமக்கே யாகுக. மாயங்கள் செய்யும் மாறுட னுக்கில்லை.

3. உறுதி கொண்டதை விரைந் தெறிகிறீர். கனை முடைய பொருளைச் சுழல்விக்கிறீர். மண்ணில் மரங் களையும் குன்றுத் தொளைகளையும் ஊடுருவிச் செல்லு கிறீர்.

4. பகைவரைக் கடிந்துண்பீர்! உமக்கு வானத் தில் பகையில்லை, மண்ணிலு மில்லை. விரிவுடைய ஆற் றல் நுமக்கேயாம். ருத்ரரே! அதனை யாரும் மீறலாமா?

5. மலைகளை நடுங்கச் செய்கிறார்கள், மரங்களைப் பிளந்து தள்ளுகிறார்கள். வாரீர், மருத்துக்களே, பித் தரைப்போல்; தேவரே, உமது முழுக் குலத்துடன் வருக.

6. புள்ளி மான்களைத் தேர்களில் பூட்டினீர். சிவப்புமான் தலைவனாக இழுக்கிறது. உமது வரவை மன்மக்களும் உற்றுக் கேட்டார், மனிதர் நடுங்கினர்.

7. ருத்ரன் மக்களே, விரிவின் பொருட்டு, உமது துணையை விரைவில் வேண்டுகிறோம். பழமை போலே எமக்குத் துணை கொண்டுவருக; அஞ்சி நிற்கும் கண் வனை நாடி இங்கு வருக.

8. உம்மாலேனும் மனிதராலேனும் தூண்டப் பெற்றதாகி எம்மை அடிக்க வரும் பிசாசு யாதாயினும் அதற்கு ஆற்றலும் வலிமையும் உம்முடைய உதவி களைந் இல்லாதபடி செய்க.

9. வேள்வி காப்பீர், கண்வனை முழுதும் காத்து விட்டீர்; உமது முழு வரங்களுடன் எம்மிடத்து வருக, மழையிடத்து மின்னல்கள் கூடுவதுபோலே.

10. நன்றுகப் பிளப்பீர், முழு வன்மையும் கொண்டு வருகிறீர், உலகத்தை ஆட்டுவீர், மருத்துக் களே! ரிஷிகளின் கொடிய பகையின்மீதே அம்புபோ லொரு பகையினை வீசுக.

விளக்கம்.

உள்ளம் பழங்காடு போலாகி விட்டது. இருள் சேர்ந்து போயிற்று. நல்ல காற்றுப் புக வழியில்லை. புகரும் கினேயும் மிகுதியாகி, இருளும் சேறும் காற்றழு மாகி, நடக்கத் தெரிய வழியில்லாம விருக்கிறது. அப் போது தேவனுகிய இந்திரனிடம் முறையிடுகிறேம். அவனுடைய தோழராகிய வேகசக்திகளை நாடுகிறேம். அந்த யோக சக்திகள் புயற்காற்றைப்போலே வந்து, உள்ளத்திலே சுத்தநிலையும், அமர வாழ்க்கையும் தந்து காக்கின்றன. ஓம் தத்காஸ்து.

புயற்காற்றுத் தேவராகிய மருத்துக்களை கோதமர் பாடியது[1].

(1) *வாரீர், மருத்துக்களே!*

மின்னல்களும், நல்ல பாட்டுக்களும், வேல்களும் நிரம்பியனவாய், (காற்றுக்) குதிரைகளைச் சிறகுபோல் உடையனவாகிய தேர்களின் மீதேறி வருக. நல்ல மாலைகளை யுடையீர்!

மிக்க வளமுடைய இன்பத்தைக்கொண்டு, எம்மிடத்தே பறவைகள் போல் வருக.

(2) *தேர்களை விரைந்திழுக்கும் சிவப்புக் குதிரைகளும் மாநிறமுடைய குதிரைகளுங் கொண்டு, அவர்கள் ஒளியுடன் வருகிறார்கள். (அவர்களில்) ஒருவன் அரிவாள் கொண்டிருக்கிறான். அவன் பொன்னொளி வீசுகிறான். தேருருளையிலால் அவர்கள் பூமியை அடித்தனர்.*

(3) *(வானவரே, நீங்கள்) உடம்பிலே, செல்வத்தின் பொருட்டு, வாள் தூண்டியிருக்கிறீர்கள். காட்டை மேலோங்கும்படி அசைப்பது போலே, எம தறிவையும் ஓங்கும்படி செய்க!*

---

1. *ரிக்வேதம்: மண்டலம் 1, ஸூக்தம் 85; அஷ்-1. அத்-6, வர்க்கம்-14.*

மானுடரே, உங்கள் பொருட்டாக இந்த மருத்துக்கள் நன்கு பிறந்து மிகவும் ஊக்க முடையவராய், மலையை அணைசக்கிறார்கள்.

(4) பருந்துகளே !

எமது நாட்கள் உம்மை ஒரு முறை சுற்றி வந்து, பிறகு எம கறினிடத்தேயும், எமது தெய்விகமான செய்கையினிடத்தேயும் மீண்டெய்தி விட்டன.

நல்ல பாட்டுக்களாலே வேள்வி செய்யும் கோதம ரிஷியின் கூட்டத்தார் கண்ணீர் குடிப்பதற்காகக் கிணற்றின் மேன்மூடியைத் திறந்துவிட்டனர்.

(5) மருத்துக்களே, உமக்காக, கோதமன் பாடிய இப்பாட்டுக்கு நிகர் வேறொன்று கண்டதில்லை. பொன் னுருளைத் தேர்களில் இரும்புப் பற்களுடைய காட்டுப் பன்றிகளைப் போலே வரும் உம்மைக் கண்டு, (கோதமன் இப்பாட்டைச் செய்தான்).

(6) தொண்டன் வாக்காதலால், உமக்கிணங்கிய இந்தப் பாட்டு உம்மை நோக்கி ஓலித்தெழுகின்றது. எம்மிடமிருந்து, சிரமமின்றி, இயற்கையின்படி இந்த வாக்குண்டாயிற்று.

விளக்கம்.

இந்த மந்திரம் பாடினவர் கோதம ரிஷி.

1. பழைய உலகத்தை மாற்றிப் புதிய உலகம் செய்வதும், பழைய காட்டை அழித்துப் புதிய காடு தோற்றுவிப்பதும், பழைய அறிவை நீக்கிப் புதிய

அறிவு கொடுப்பதும், மருத்துக்களின் தொழில். அதனல் அவர்களுடைய தேர்களில் "மின்னலும், நல்ல பாட்டும் வேலும்" கொண்டு வருகிறார்கள். மின்னலாலும் வேலாலும் பழமையை அழித்து, நல்ல பாட்டினல் புதுமை பிறக்கும்படி செய்கிறார்கள். மருத்துக்கள் "நல்ல மாயைகளை யுடையோர்." தேவ மாயையென்றும், அஸுர மாயை யென்றும் இரண்டு வகையுண்டு. நல்ல மாயைகளாவன தேவ மாயைகள்.

2. மருத்துக்களிலே ஒருவன் 'அரிவாள் கொண்டிருக்கிறான்.' இவனுடம்பு பொன்னொளி வீசுகிறது. இவன் யார்? கணாதன்போலும்.

3. மனிதர் பொருட்டாக மருத்துக்கள் 'மலையை யுசைக்கிறார்கள்.' இந்த மலை அஞ்ஞானம், அஹங்காரம்.

4. நாட்கள் மருத்துக்களைச் சூழ்ந்து நம்மிடம் திரும்பி வரும்போது, மருத்துக்களை அழைத்து வருகின்றன. அதாவது, நாம் பல நாளாக மருத்துக்களை வேண்டிச் செய்த தவம் பயனடைந்து விட்டது என்று அர்த்தம். கோதம ரிஷியின் கூட்டத்தார் 'தண்ணீர் குடிப்பதற்காகக் கிணற்றின் மேல் மூடியைத் திறந்து விட்டனர்.' அந்தக் கிணறு யாதெனில் அதுவே அமர வாழ்க்கை. அதில் ஊறிவரும் நீர் அமிர்தம். அந்தக் கிணற்றின் மேல்மூடியாவது ஆணவம். ஆணவத்தை நீக்கி அமிர்த பானம் செய்கிறோமென்பது பொருள். பருந்துகளென்றது மருத்துக்களை.

5. காட்டுப் பன்றிகள் மத்த நிலையும் வலிமையுங் காட்டுவன. அவற்றின் 'இரும்புப் பற்கள்' பழய காட்டைடக் கிழித்துத் தள்ளும் பொருட்டேயாம். இங்ஙனம் மருத்துக்கள் வருவதை நேரே ஞான விழி யால் கோதம ரிஷி கண்டு இப்பாட்டைப் பாடினராத லால் இதில் அனுபூதி ரஸம் காணப்படுகிறது. ஆத லால் 'இந்தப் பாட்டுக்கு நிகர் வேறொன்று கண்ட தில்லை' என்று ரிஷி சொல்லுகிறார்.

6. ஸ்வானுபூதியால் வெளிப்பட்ட பாட்டாகை யால், யாதொரு சிரமமில்லாமல், ஊற்றிலிருந்து நீர் புறப்படுவதுபோல் இயற்கையிலே தோன்றுகிறது. கோதம ரிஷியின் வாக்கினல் உலகத்தான் அந்நா னம் நாசமடைகிறது.

முடிவுரை.

வேத ரிஷிகள் காலத்தில் கோவில் கிடையாது; விக்ரஹாராதனை கிடையாது; ஸந்யாஸம் கிடையாது. அத்வைத த்வைத விசிஷ்டாத்வைதப் பிரிவுகள் கிடையா; பக்தி மார்க்தர் தானுண்டு.

கோவிலும் மடமும், பௌத்தமதப் பழக்கத்தால், வெளிநாடுகளிலிருந்து நமக்குக் கிடைத்த பேறுக ளென்று சரித்திரக்காரர் சொல்லுகிறார்கள். ஆனல், இப்போது ஹிந்துமதப் பயிற்சிகளுள்ளே கோவிலும், சிலையும் நெடுந்தூரம் ஆழ்ந்து போய்விட்டன. ஆத லால், இப்போது ஹிந்து மதத்திலிருந்து கோவிலைப் பிரிக்க முடியாது. கோவில்களுக்குள்ளே பரஸ்பரம்

பொருமையும், சண்டையு மில்லாதபடி எல்லாக் கோவில்களும் ஸாகூதாத் ஸூர்யனுகவும், அக்நி குமாரனுகவும், ருத்ரனுகவும், இந்த்ரனுகவும், வாயுவாகவும், விஷ்ணுவாகவும், வருணனுகவும் விளங்குகிற பரமாத்மாவின் கோவில்களென்றும், கோயில்களுக்குள்ளே கஹஷி பேதங்கள் கிடையாவென்றும் பண்டித பாமரர்கள் நன்றுகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

ப்ரக்ருதி இயற்கைத் தோற்றம்; காணப்படுகிற உலகம் விஷ்ணுவுடைய சரீரம். இதற்குள்ளே வ்யாபித்து நிற்கும் ஆத்மாவே விஷ்ணு. விஷ்ணுவைச் சிலையிலும் வணங்கலாம், மலையிலும் வணங்கலாம், தூணிலும் தருமபிலும் வணங்கலாம். சிலைகளிலே வணங்குதல் ஒருவகை யோகம். வேதரிஷிகள் இந்த விஷ்ணுவை, இந்த்ரனை, ஸூர்யனை, ருத்ரனை நேராகக் கண்டு வணங்கினார்கள். உலகமே இவனுடைய உடம்பாதலால் அவர்கள் உலகத்தை வணங்கினர். அறிவுக்குள்ளே வானமும் ஸூர்யனும் மிருப்பது போலே வெளியுலகத்திலும் இருக்கின்றன. உள்ளும் புறமும் ஒன்று.

மற்றொரு முறை விளங்கச் சொல்லுகிறேன். புயற்காற்றடித்தது. வேதரிஷிகள் அதன் முன்னே போய் நின்றார்கள். ஆயிர மின்னல்கள் வாள் போலே வீசின. உலகம் குலுங்கிற்று. அண்டங்கள் இடிவது போலே சத்தம் கேட்டது. மேற்படி ரிஷிகள் பயப்படவில்லை. மந்திரங்களைப் பாடினர்கள். ருத்ரனுடைய உடம்பு தானே உலகம்? வாயுவே ருத்ரன். வாயுவி

னுடைய உடற் செய்கை தானே புயற்காற்று? இந்திரன் மின்னலையும் இடியையும் காட்டுகிறான். மேகங்கள் கிதறுகின்றன. பூமிக்குத் தண்ணீர் கிடைக்கிறது. இதில் பயத்துக் கிடமெங்கே? ரிஷி புயற்காற்றைத் துதிக்கிறார். பிறகு, இரவு நீங்கி ஸூர்யோதயம் உண்டாகிறது; ஒளி தோன்றுகிறது. அதைப் பார்த்து மேலே கைகூப்பி ரிஷி மந்திரம் பாடுகிறார். பக்ஷிகள் பாடுகின்றன. பூக்கள் மலர்கின்றன. நீரும் காற்றும் சிரிக்கின்றன. இந்தத் தினையும் இயற்கை தெய்வத்தின் காட்சி. இதை ரிஷி போற்றும்போது ப்ரத்யக்ஷ நாராயணனைப் போற்றுகிறார்.

வீட்டிலே நெருப்பு வளர்த்து அதிலே தெய்வத்தைக் கண்டு தொழும் வழக்கம் அக் காலத்தில் மிகுதிப் பட்டது. பொதுவாக இயற்கை வணக்கம் வழக்கமில்லாமல் போன பிறகும் அக்நி பூஜையும், ஸூர்ய பூஜையும் இன்றுவரை நமக்குள்ளே மிஞ்சி நிற்கின்றன. ஸந்த்யா வந்தனங்களில் ஸூர்ய பூஜை நியதமாக நடந்து வருகிறது. ஸர்வ வைதிக கிரியைகளும் ஹோமம் வளர்த்துப் பூஜை பண்ணுமல் நடப்பதில்லை.

ப்ரக்ருதியை நேரே தொழும் வழக்கம் மிகுதிப் பட்டால் வேதம் ஒளி பெறும்.

சரணாகதியே வழி.

வேதரிஷிகள் வேறு வழி காட்டியதாக ஸம்ஹிதைகளிலே தெரியவில்லை.

குருவுக்கு மரியாதை செய்யவேண்டு மென்றும், பரமாத்மா ஒருவனுக்கே சரணாகதி செய்யுமென்றும் என்னுடைய அபிப்ராயம்.

மனைதைக் கட்டி ஆளுவதற்கு மந்திரத்தை உச்சரிப்பதே வழி. மந்திரத்தின் ஒலியை தியானம் செய்வதில் பயன் கிடைக்குமென்று தோன்றவில்லை. அதன் பொருளை தியானிக்கவேண்டும். பின்வரும் பாட்டில் பரம்பொருளாகிய நாராயணனுக்கு சக்தி நாமம் வழங்கப்படுகிறது.

பாட்டு[1]

நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்
நிறைந்த சுடர்மணிப் பூண், பஞ்சுக்கு மேர்பல துன்பங்க ளாமிவள்
பார்வைக்கு மேர் பெருந் தீ,
வஞ்சக மின்றிப் பகையின்றிச் சூதின்றி
வையக மாண்டலெல்லாம்
தஞ்சமென் றேயுரைப்பீர்; அவள் பேர், சக்தி
ஓம், சக்தி ஓம், சக்தி ஓம். (1)

நல்லதுந் தீயதுஞ் செய்திடும் சக்தி
நலத்தை நமக்கிழைப்பாள்;

---

1. 'தனத தனத தனத தனத தனத தனத தாம்.'

என்று தாளம் போட்டுக்கொண்டு மேற்படி பாட்டை இஷ்டமான ராகத்தில் பாடலாம்.

அல்லது நீங்குமென்றே யுலகேழும்
அறைந்திடு வாய்முரசே!
சொல்லத் தகுந்த பொருளன்று காணிங்கு
சொல்லு மவர் தமையே
அல்லல் கெடுத் தமரர்க்கிணை யாக்கிடும்
ஓம், சக்தி ஓம், சக்தி ஓம். (2)

நம்புவ தேவழி யென்ற மறைதன்னை
நாமின்று நம்பிவிட்டோம்;
கும்பிட்டெந் நேரமும் சக்தியென்றூ லுனைக்
கும்பிடுவேன் மனமே.
அம்புக்கும் தீக்கும் விடத்துக்கும் நோவுக்கும்
அச்சமில்லாத படி
உம்பர்க்கு மிம்பர்க்கும் வாழ்வு தரும்பதம்
ஓம், சக்தி ஓம், சக்தி ஓம். (3)

பொன்னைப் பொழிந்திடு, மின்னை வளர்த்திடு,
போற்றி யுனக்கிசைந்தோம்;
அன்னை பராசக்தி யென்றுனைத் தோம்; கலை
யத்தனையுங் கலைத்தோம்;
சொன்னபடிக்கு நடந்திடுவாய்,
மனமே தொழில் வேறில்லை காண்;
இன்னுமெ தெயுரைப் போம், சக்தி ஓம், சக்தி
ஓம், சக்தி ஓம், சக்தி ஓம். (4)

வெள்ளை மலர்மிசை வேதக் கருட்பொரு
ளாகி விளங்கிடு வாய்,

தெள்ளு கலைக் தமிழ் வாணி, யுனக் கொரு
விண்ணப்பஞ் செய்திடுவேன் :
எள்ளத்தனை பொழுதும் பயனின்றி
யிரா தென்ற ஞவினிலே
வெள்ள மெனப் பொழிவாய், சக்தி வேல், சக்தி
வேல், சக்தி வேல், சக்தி வேல் ! (5)

பகவத் கீதை.

முன்னுரை.

புத்தியிலே சார்பு எய்தியவன், இங்கு, நற் செய்கை தீச் செய்கை இரண்டையுந் துறந்து விடுகின் றான். ஆதலால் யோக நெறியிலே பொருந்துக. யோகம் செயல்களிலே திறமையாவது.—கீதை, 2-ஆம் அத் யாயம்; 50-ஆம் சுலோகம்.

இம்மீ கீதையில் பகவான் செய்யும் உபதேசத் துக்கெல்லாம் அடிப்படை யாம். புத்தியிலே சார்பு எய்தலாவது, அறிவை முற்றிலுந் தெளிவாக மாசு மறு வின்றி வைத்திருத்தல். தெளிந்த புத்தியே வேத சுலோகத்திலே புத்தி என்று சொல்லப் படுகிறது. அறி வைத் தெளிவாக நிறுத்திக் கொள்ளுதலாவது யாதென் றால், கவலை நினைப்புக்களும் அவற்றுக் காதாரமான பாவ நினைப்புக்களு மின்றி அறிவை இயற்கை நிலை பெறத் திருத்துதல்.

'நீங்கள் குழந்தைகளைப் போ லாறு என்றி, மோக்ஷ ராஜ்யத்தை எய்தமாட்டீர்கள்' என்று யேசு கிறிஸ்து சொல்லியதும் இதே கருத்துக் கொண்டுதான்.

'குழந்தைகளைப் போ லாய் விடுங்கள்' என்றால், 'உங்களுடைய லௌகிக அனுபவங்களை யெல்லாம் மறந்து விடுங்கள்; நீங்கள் படித்த படிப்பை யெல்லாம்

இழந்து விடுங்கள்; மறுபடி சிசுக்களைப்போலே தாய்ப் பால் குடிக்கவும், மழலைச் சொற்கள் பேசவுந் தொடங்குங்கள்' என்பது கொள்கை யன்று. 'ஹிரு தயத்தைக் குழந்தைகளின் ஹிருதயம் போலே நிஷ் களங்கமாகவும் சுத்தமாகவும் வைத்துக் கொள்ளுங் கள்' என்பது கருத்து.

ஹிருதயம் தெளிந்தா லன்றி புத்தி தெளியாது. ஹிருதயத்தில் பரிபூர்ணமான சுத்த நிலை யேற்படும் வரை, புத்தி இடை யிடையே தெளிந்தாலும், மீட்டு மீட்டும் குழம்பிப் போய்விடும்.

ஹிருதயம் சுத்தமானால், தெளிந்த புத்தி தோன் றும். பகவான் சொல்லுகிறார்:—'அந்த அறிவுத் தெளிவிலே நிலை பெற்று நில், அர்ஜுன' என. அப்போது நீ செய்யும் செய்கை யாதாயினும், அது நற் செய்கையாம். நீ ஒன்றும் செய்யாதே மனம் போனபடி யிருப்பின் அஃதும் நன்றும். நீ நற் செய்கை தீச் செய்கை என்ற பேதத்தை மறந்து, உனக்கு இஷ்டப்படி எது வேண்டு மாயினும் செய்ய லாம். எனென்றால் நீ செய்வ தெல்லாம் நன்றுகவே முடியும். உனக்கு புத்தி தெளிந்துவிட்ட தன்றோ? புத்தி தெளிவுற்ற இடத்தே உனக்குத் தீயன செய்தல் ஸாத்யப்படாது. ஆகலால், நீ நல்லது தீயது கருதா மல் மனம் போனபடி யெல்லாம் வேலை செய்யலாம்.

இனி, இங்ஙனம் உரை கொள்ளாதபடி, 'நற் செய்கை தீச் செய்கை, அதாவது, எல்லா விதமான

செய்கையையுந் துறந்து விட்டு, அர்ஜுனை, நீ எப் போதும் தூங்கிக் கொண்டே யிரு' என்று கடவுள் உபதேசம் பண்ணியதாகக் கருதுதல் வெறும் மடமை யைத் தவிர வேறென்று மில்லை.

எனென்றால் கடவுளை மேலே மூன்றும் அத் யாயத்தில் பின் வருமாறு சொல்லுகிறார்:—'மேலும், எவனும் ஒரு சமயமேனும் செய்கையின்றி யிருத்தல் இயலாது. எல்லா உயிர்களும் இயற்கையில் தோன் றும் குணங்களால் தமது வசமின்றியே தொழிலில் ஈட்டப் படுகின்றன' என.

ஆகலால் மனிதன் தொழில் செய்து தான் தீர வேண்டும். எப்போதும் தூங்கக் கும்பகர்ணனே கூட இயலாது. அவனுக்குக் கூட ஆறு மாஸக் காலம் விழிப்பு உண்டு. ஆதலால் நீ தொழில் செய்யுமிடத்தே, அதில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களுக்கு மன மூடைந்து ஓயாமல் துன்பப்பட்டுக் கொண்டே தொழில் செய் யும் உலகத்தாரைப் போலே தொழில் செய்யாதே. ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்:—'அர்ஜுனை, உனக் குத் தொழில் செய்யத் தான் அதிகார முண்டு. பய ன் களில் உனக்கு எவ்வித அதிகாரமும் எப்போது மில்லை' என.

ஆகலால், கடவுள் சொல்லுகிறார்:—'கர்மத் தின் பயனிலே பற்றுதலின்றித் தான் செய்ய வேண் டிய தொழிலை எவன் செய்கிறானோ, அவனே துறவி; அவனே யோகி' என்று.

அறிவுத் தெளிவைத் தவற விடாதே. பின் ஓயாமல் தொழில் செய்து கொண்டிரு. நீ எது செய்தாலும் அது நல்லதாகவே முடியும். நீ சும்மா இருந்தாலும், அப்போது உன் மனம் தனக்குத் தான் ஏதேனும் நன்மை செய்து கொண்டே யிருக்கும். உடம்பினால் செய்யப்படும் தொழில் மாத்திரமே தொழி லன்று. மனத்தால் செய்யப் படும் தொழிலும் தொழிலே யாம். ஜபம் தொழில் இல்லையா? படிப்பு தொழில் இல்லையா? மனனம் தொழில் இல்லையா? சாஸ்த்ரங்களெல்லாம், கவிதைகளெல்லாம், நாடகங்களெல்லாம், சட்டங்களெல்லாம், வேதங்களெல்லாம், புராணங்களெல்லாம், கதைகளெல்லாம், காவியங்களெல்லாம், தொழில்கள் அல்லவா? இவை யெல்லாம் உடம்பாற் செய்வ தின்றி மனத்தாற் செய்யப் படுவன அன்றோ?

அறிவுத் தெளிவைக் கலங்க விடாதே.

அப்பால், 'யோகம் பன்னு. எதன் பொருட்டெனில், யோகமே செய்கைகளில் திறமை யாவது' என்று ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லுகிறார்.

தொழிலுக்குத் தன்னைத் தகுதியுடையவனைச் செய்து கொள்வதே யோகம் எனப்படும்.

யோக மாவது ஸமத்வம். 'ஸமத்வம் யோக உச்யதே'. அதாவது, பிறிதொரு பொருளை கவனிக்குமிடத்து, அப்போது மனதில் எவ்விதமான சஞ்சலமேனும் சலிப்பேனும் பயமேனும் இன்றி, அதை

ஆழ்ந்து, மன முழுமையும் அதனுடன் லயப்படுத்தி கவனிப்பதாகிய பயிற்சி.

நீ ஒரு பொருளுடன் உறவாடும் போது, உன் மனம் முழுதும் அப் பொருளின் வடிவமாக மாறி விட வேண்டும். அப்போது தான் அந்தப் பொருளை நீ நன்முக அறிந்தவனாய்.

'யோகஸ்த: குரு கர்மாணி' என்று கடவுள் சொல்லுகிறார். 'யோகத்தில் நின்று தொழில்களைச் செய்' என.

யோகி தன் அறிவைக் கடவுளின் அறிவு போலே விசாலப் படுத்திக் கொள்ளுதல் இயலும். எனென்முல், ஊன்றிக் கவனிக்கும் வழக்கம் அவனுக்குத் தெளிவாக அர்த்தமாய்விடுகிறது. ஆதலால், அவனுடைய அறிவு தெய்விகமான விசாலத் தன்மை பெற்று விளங்குகிறது. அவனுடைய அறிவுக்கு வரம்பே கிடையாது.

எனவே, அவன் எங்கும் கடவுள் இருப்பதைக் காண்கிறான்.

2

வேதத்தின் கொள்கைகளை விளக்கும் பொருட்டாகவே பகவத் கீதை செய்யப்பட்டது. ரிக் வேதத்திலுள்ள புருஷஸூக்தம் சொல்லுகிறது, 'இம்மிதல்லாம் கடவுள்' என்று. இந்தக் கருத்தை யொட்டியே கீதையிலும் பகவான் 'எவன் எல்லாப் பொருள்களி

லும் ஆத்மாவையும் ஆத்மாவில் எல்லாப் பொருள்களை யும் பார்க்கிறானே, அவனே காட்சி யுடையான்' என்கிறார்.

நீயும் கடவுள். நீ செய்யும் செயல்களெல்லாம் கடவு ளுடைய செயல்கள். நீ பந்தத்தில் பிறப்பதும் கடவுளு டைய செயல். மேன்மேலும் பல தளைகளை உனக்கு நீயே பூட்டிக் கொள்வதும் கடவுளுடைய செயல். நீ முக்தி பெறுவதும் கடவுளுடைய செயல்.

'ஆனால் நான் எதற்காகத் தளை நீங்கும்படி பாடு படவேண்டும்? எல்லாம் கடவுளுடைய செய்கையாய் இருக்கும் போது முக்தி யடையும்படி நான் என் முயற்சி செய்ய வேண்டும்?' என்று ஒருவன் கேட்பா னையின், அதற்கு நாம் கேட்கிறோம்: 'முக்தி யாவது யாது?'

எல்லாத் துயரங்களும் எல்லா அச்சங்களும் எல்லாக் கவலைகளும் நீங்கி நிற்கும் நிலையே முக்தி. அதனை எய்த வேண்டு மென்ற விருப்பம் உனக்குண் டாயின், நீ அதற்குரிய முயற்சி செய். இல்லா விட் டால், துன்பங்களிலே கிடந்து ஓயாமல் உழன்று கொண்டிரு. உன்னை யார் தடுக்கிறார்கள்? ஆனால், நீ எவ்விதச் செய்கை செய்த போதிலும், 'அது உன் னுடைய செய்கை யில்லை, கடவுளுடைய செய்கை' என்பதை அறிந்து கொண்டு செய். அதனால் உனக்கு நன்மை விளையும் என்று சாஸ்த்ரம் சொல்லுகிறது. 'ஸர்வம் விஷ்ணு மயம் ஜகத்' என்பது ஸநாதன தர்

மத்தின் ஸித்தாந்தம். எல்லாம் கடவுள்மயம். எல்லாத் தோற்றங்களும், எல்லா வடிவங்களும், எல்லா உருவங்களும், எல்லாக் காட்சிகளும், எல்லாக் கோலங்களும், எல்லா நிலைமைகளும், எல்லா உயிர்களும், எல்லாப் பொருள்களும், எல்லா சக்திகளும், எல்லா நிகழ்ச்சிகளும், எல்லாச் செயல்களும்—எல்லாம் சன்மயம். [ஆதலால், எல்லாம் ஒன்றுக் கொன்று ஸமானம்.] 'சாவாஸ்யம் இதம் ஸர்வம் யத் கிஞ்ச ஜகத்யாம் ஜகத்' என்று சாவாஸ்யோபநிஷத் சொல்லுகிறது. அதாவது:—' இவ் வுலகத்தில் நிகழ்வது யாதாயினும் அது கடவுள்மய மானது' என்று பொருள்படும்.

இந்தக் கருத்தையே ஸ்ரீ கிருஷ்ணன் பகவத் கீதையில் ' இவ் வுலகமனைத்திலும் நிரம்பிக் கிடக்கும் கடவுள் அழிவில்லாதது என்று உணர்' என்று சொல்லுகிறார்.

எனவே, எல்லாம் கடவுள்மயமாய், எல்லாச் செயல்களும் கடவுளின் செயலாக நிற்கும் உலகத்தில், எவனும் கவலைப் படுதலும், பயப் படுதலும், துயர்ப் படுதலும் அறியாமை யன்றே?

' எல்லாம் சிவன் செயல்' என்றால், பின் எதற்கும் நான் என் வருத்தப்பட வேண்டும்? ' இட்ட முடன் என் தலையில் இன்னபடி யென் றெழுதி விட்ட சிவன் செத்து விட்டானே?'

சூரியசந்திரர்களெல்லாம் கடவுள் வலியால் சுழல்கின்றன. திரிலோகங்களும் அவனுடைய சக்கரத்தில்

ஆடுகின்றனை. நீ அவன். உன் மனம், உன் மனத்தின் நினைப்புக்கள் எல்லாம் அவனே. "ஸர்வம் விஷ்ணு மயம் ஜகத்"—அங்ஙனமாக, மானுடா, நீ என் வீணைகப் பொறுப்பைச் சுமக்கிறாய்? பொறுப்பை யெல்லாம் தொப்பென்று கீழே போட்டு விட்டு ஸந்தோஷமாக உன்னால் இயன்ற தொழிலைச் செய்து கொண்டிரு. எது எப்படி யானால் உனக்கென்ன? நீயா இவ் வுலகைப் படைத்தாய்? உலக மென்னும் போது உன்னைத் தவிர்ந்த மற்ற உலகத்தை யெல்லாம் கணக்கிடாதே. நீ உட்பட்ட உலகத்தை, உனக்கு முந்தியே உன் பூர்வகாரணமாக நின்று உன்னை ஆக்கி வளர்த்துத் துடைக்கும் உலகத்தை, மானுடா, நீயா படைத்தாய்? நீயா இதை நடத்துகிறாய்? உன்னைக் கேட்டா நக்ஷத்ரங்கள் நடக்கின்றன? உன்னைக் கேட்டா நீ பிறந்தாய்? எந்த விஷயத்துக்கும் நீ என் பொறுப்பை வஹித்துக் கொள்ளுகிறாய்?

ங

கடவுள் சொல்லுகிறார்:—"லோபமும் பயமும் சினமும் அழிந்து, என் மயமாய், என்னைச் சார்ந்தோராய், ஞானத் தவத்தால் தூய்மை பெற்றோர் பலர் எனது தன்மை எய்தியுள்ளார்" (கீதை—4-ஆம் அத்யாயம்; 10-ஆம் சுலோகம்). இந்த சுலோகத்தில் ஒருவன் இஹ லோகத்திலேயே ஜீவன்முக்தி பெற்று ஈசுவரத்தன்மை யடைவதற் குரிய உபாயம் பகவானால் குறிப்பிடப்பட்டிருக்கிறது. "ஞானத்தைக் கடைப்பிடி.

அதனையே தவமாகக் கொண்டொழுகு. சினத்தை விடு. விருப்பத்தை விடு. என்னையே சரணைகக் கொண்டு என்னுடன் லயித்திரு. நீ எனது தன்மை பெறுவாய்'' என்று கடவுள் சொல்லுகிறார்.

எல்லாச் செயல்களையும் கடவுளுக் கென்று ஸமர்ப்பித்து விட்டுப் பற்றுதல் நீக்கி எவன் தொழில் செய்கிறானே அவனைப் பாவம் தீண்டுவ தில்லை, தாமரை யிலை மீது நீர் போலே. (கீதை-5-ஆம் அத்யாயம். 10-ஆம் சுலோகம்).

சால நல்ல செய்தி யன்றோ, மானுடர்காள், இஃது உங்களுக்கு? பாவத்தைச் செய்யாம லிருக்கும் வழி தெரியாமல் தவிக்கும் மானுடரே, உங்களுக்கு இந்த சுலோகத்தில் நல்வழி காட்டி யிருக்கிறான் கடவுள். ஈசனைக் கருதி, அவன் செயலென்றும், அவன்பொ ருட்டாகச் செய்யப் படுவதென்றும் நன்கு தெளி வெய்தி, நீங்கள் எத் தொழிலைச் செய்யப் புகுந்தா லும், அதில் பாவம் ஒட்டாது. தாமரை யிலை மீது நீர் தங்காமல் நழுவி ஓடிவிடுவது போல், உங்கள் மதி யைப் பாவம் தவர்ந்து நிற்கும் வலியற்றதாய், உங்களை விட்டு நழுவி யோடிப் போய் விடும்.

சு

''மனிதனுக்குச் சொந்தமாக ஒரு செய்கையும் கிடையாது. செய்யுந் திறமையும் அவனுக்குக் கடவுள் ஏற்படுத்த வில்லை. கர்மப்பயனை அவன் எய்துவது

மில்லை. எல்லாம் இயற்கையின்படி நடக்கிறது." (கீதை 5-ஆம் அத்யாயம்; 14-ஆம் சுலோகம்).

எனவே, அவன் செய்கைகளில் எவ்விதப் பொறுமையும் சஞ்சலமும் எய்த வேண்டா. தன் செயல்களுக்கு இடையூறாக நிற்கு மென்ற எண்ணத்தால் அவன் பிற உயிர்களுடன் முரண்படுதலும் வேண்டா.

"கல்வியும் விநயமு முடைய அந்தண னிடத்திலும், மாட்டி னிடத்திலும், யானையி னிடத்திலும், நாயினிடத்திலும், அதைபுண்ணும் சண்டாள னிடத்திலும் அறிஞர் ஸமமான பார்வையுடையோர்" (5-ஆம் அத்யாயம் 18-ஆம் சுலோகம்) என்று பகவான் சொல்லுகிறார்.

எனவே, கண்ணபிரான் மனிதருக்குள் ஜாதி வேற்றுமையும் அறிவு வேற்றுமையும் பார்க்கக் கூடா தென்பது மட்டுமேயன்றி எல்லா உயிர்களுக்குள்ளேயும் எவ்வித வேற்றுமையும் பாராதிருத்தலே ஞானி களுக்கு லக்ஷணமென்று சொல்லுகிறார்.

எல்லாம் கடவுள்மயம் அன்றே? எவ்வுயிரிலும் விஷ்ணு தானே நிரம்பி யிருக்கிறான்? 'ஸர்வ மிதம் ப்ரஹ்ம.' பாம்பும் நாராயணன், நரியும் நாராயணன். பார்ப்பானும் கடவுளின் ரூபம்; பறையனும் கடவுளின் ரூபம். இப்படி யிருக்க ஒரு ஜந்து மற்றொரு ஜந்துவை எக் காரணம் பற்றியும் தாழ்வாக நினைத்தல் அஞ்ஞானத்துக்கு லக்ஷணம். அவ்விதமான ஏற்றத் தாழ்வு பற்றிய நினைப்புக்களுடையோர் எக் காலத்

தும் தக்கங்களிலிருந்து நிவிர்த்தி யடைய மாட்டார். வேற்றுமை யுள்ள இடத்தில் பய முண்டு; ஆபத்துண்டு; மரணமுண்டு. எல்லா வேற்றுமைகளும் நீங்கி நிற்பதே ஞானம். அதுவே முக்திக்கு வழி.

ஞ

பகவத் கீதை கர்மசாஸ்த்ர மென்று மாத்திரமே பலர் நினைக்கிறார்கள். அதாவது, மனிதனை நன்கு தொழில் புரியும்படி தூண்டிவிடுவதே அதன் நோக்க மென்று பலர் கருதுகிறார்கள். இது சரியான கருத்தன்று. அது முக்கியமாக மோக்ஷ சாஸ்த்ரம். மனிதன் ஸர்வ தக்கங்களிலிருந்தும் விடுபடும் வழியைப் போதித்தலே இந் நூலின் முதற் கருத்து. எனென்றால், தொழில் இன்றியமையாதது. அங்ஙனமிருக்க, அதனைச் செய்தல் மோக்ஷ மார்க்கத்துக்கு விரோத மென்று பல வாதிகள் கருதலாயினர். அவர்களைத் தெளிவிக்கும் பொருட்டாகவே, கண்ணபிரான் கீதையில், முக்கியமாக மூன்றும் அத்யாயத்திலும் பொதுப் படையாக எல்லா அத்யாயங்களிலும், திரும்பத் திரும்பத் 'தொழில்செய், தொழில்செய்; தொழிலை விட்டு விடாதே; தொழில் செய்; தொழில் செய்' என்று போதிக்கிறார். இதினின்றும், அதனை வெறுமே தொழில்நூல் என்று பலர் கணித்து விட்டார்கள்.

இங்கு தொழில் செய்யும்படி தூண்டியிருப்பது முக்கியமன்று; அதனை என்ன நிலையிலிருந்து, என்ன

மாதிரியாகச் செய்ய வேண்டுமென்று பகவான் காட்டியிருப்பதே மிக மிக முக்கியமாகக் கொள்ளத் தக்கது.

பற்று நீக்கித் தொழில் செய்; பற்று நீக்கி; பற்று நீக்கி, பற்று நீக்கி ;—பற்று நீக்கி—இது தான் முக்கியமான பாடம். தொழில் தான் நீ செய்து தீர வேண்டிய தாயிற்றே? நீ விரும்பினாலும் விரும்பாவிடினும் இயற்கை உன்னை வற்புறுத்தித் தொழிலில் மூட்டுவ தாயிற்றே? எனவே, அதை மீட்டு மீட்டும் சொல்வது கீதையின் முக்கிய நோக்க மன்று. தொழிலின் வலைகளில் மாட்டிக் கொள்ளாதே. அவற்றுள் இடர்ப்படாதே: அவற்றுல் பந்தப் படாதே, தளைப்படாதே—இது தான் முக்கியமான உபதேசம். எல்லாவிதமான பற்றுக் களையுங் களைந்து விட்டு, மனச் சோர்வுக்கும் கவலைக் கும் கலக்கத்துக்கும் பயத்துக்கும் இவை யனைத்திலுங் கொடியதாகிய ஐயத்துக்கும் இடங் கொடாதிரு. 'ஸம்சயாத்மா விநச்யதி'—'ஐயமுற்றோன் அழிவான்' என்று கண்ணபிரான் சொல்லுகின்றன்.

'ஆத்மாவுக்கு நாசத்தை விளைவிப்பதாகிய நரகத்தின் வாயில் மூன்று வகைப் படும்; அதாவது, காமம், குரோதம், லோபம். ஆதலால் இம் மூன்றையும் விட்டு விடுக." இவற்றுள் கவலையையும் பயத்தையும் அறவே விட்டுவிட வேண்டும். இந்த விஷயத்தை பகவத்கீதை சுமார் நூறு சுலோகங்களில் மீட்டும் மீட்டும் உபதேசிக்கிறது. அதற்கு உபாயம் கடவுள் நம்புதல். கடவுளை முற்றிலும் உண்மையாகத் தமது உள்ளத்தில் வெற்றியுற நிறுத்திலென்றி, உள்ளத்தைக் கவலையும்

பயமும் அரித்துக்கொண்டுதான் இருக்கும். கோபமும் காமமும் அதனை வெதுப்பிக் கொண்டு தானிருக்கும். அதனல் மனிதன் நாச மடையத் தான் செய்வான்.

'பொலிக, பொலிக, பொலிக, போயிற்று வல் வுயிர்ச் சாபம்; நலியும் நரகமும் நைந்த; நமனுக் கிங் கியாதொன்று மில்லை; கலியுங் கெடும், கண்டு கொண் மின்' என்று நம்மாழ்வார் திருவாய் மொழியிற் கூறிய நம்பிக்கையை உள்ளத்தில் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். இதற்கு பக்தி தான் ஸாதனம். பக்தி யாவது 'ஈசன் நம்மைக் கைவிடமாட்டான்' என்ற உறுதியான நம்பிக்கை.

வையகத்துக் கில்லை மனமே, யுனக்கு நலஞ்
செய்யக் கருதி யிது செப்புவேன்—பொய்யில்லை;
எல்லா மனிக்கும் இறை நன்மை யுங் காக்கு மென்ற
சொல்லா லழியுந் துயர்."

இவ் விஷயத்தைக் குறித்து ஸ்ரீ பகவான் பின் வருமாறு திருவாய் மலர்ந் தருளி யிருக்கிறான்:—

'எல்லா ரஹஸ்யங்களைக் காட்டிலும் பெரிய ரஹஸ்யமாகிய என் இறுதி வசனத்தை உனக்கு மீட்டு மொரு முறை சொல்லுகிறேன்; கேள். நீ எனக்கு மிகவும் இஷ்டனாதலால், உனக்கு நன்மை சொல்லுகி

றேன்.' (கீதை 18—ஆம் அத்யாயம்; 64—ஆம் சுலோகம்.)

'உன் மனத்தை எனது ஆக்கி விடு. என் பக்கலையிரு. எனக்குப் பூஜை செய். என்னைக் கும்பிடு. நீ என்னையே எய்துவாய். இஃதுண்மை; உனக்குப் பிரதிக்ஞை செய்து கொடுக்கிறேன். நீ எனக்குப் பிரியமானவன்.' (கீதை 18-ஆம் அத்யாயம், 65-ஆம் சுலோகம்).

"எல்லாக் கடமைகளையும் பரித்யாகம் பண்ணி விட்டு என்னையே சரண் புகு. நான் உன்னை எல்லாப் பாவங்களினின்றும் விடுவிக்கிறேன். துயரப் படாதே." (கீதை 18-ஆம் அத்யாயம், 66-ஆம் சுலோகம்.)

நதியிலுள்ளே விழுந்து விட்ட ஒருவன் இரண்டு கையையும் தூக்கி விடுவது போலே, ஸம்ஸார வெள்ளத்தில் விழுந்த ஒவ்வொருவனும் இரண்டு கைகளையும் தூக்கிக் கொண்டு (அதாவது, எவ்விதப் பொறுப்பு மின்றி எல்லாப் பொறுப்புக்களும் ஈசனுக்கென்று துறந்து விட்டு) கடவுளைச் சரண் புகவேண்டும் என்று ஸ்ரீ ராமானுஜாசார்யர் உபதேசம் புரிந்தனர்.

ப்ரஹ்லாதன் சரித்திரத்திலும், திரௌபதி துகிலுரியும் கதையிலும் இந்த உண்மையே கூறப் பட்டிருக்கிறது. இடுப்பு வஸ்த்ரத்தில் அவள் வைத் திருந்த இடது கையையும் விட்டுவிட்டு இரண்டு கைகளையுந் தூக்கி மூடிமீது குவித்துக் கொண்ட பிறகுதான், கண்ணபிரான் அருளால் திரௌபதிக்கு

மான பங்கம் நேராமல், அவளுடைய ஆடை மேன் மேலும் வளர்ச்சி பெறத் துச்சாசனன் கை சோர்ந்து வீழ்ந்தான். இக் கருத்தைப் பிள்ளைப் பெருமாளையங் கார் :—

" மெய்த்தவளச் சங்கெடுத்தான் மேகலை விட்டங்—
வைத்தவளச்சங் கெடுத்தான் வாழ்வு " [கை தலை

என்ற வரிகளில் மிகவும் அழகாகச் சொல்லியிருக் கிறார். 'உண்மை யாகிய வெல் சங்கைத் தரித்தவன் பாஞ்சாலி தன் கைகளை மேகலையி னின்றும் எடுத்து மூடிமீது வைத்தபோதில் அவளுடைய அச்சத்தைக் கெடுத்தவன் ஆகிய திருமாலுக்கு வாழ்விடம் (திரு வேங்கட மலை)' என்பது அவ் வரிகளின் பொருளாம்.

" சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கை தொழுக்
கற்றுணைப் பூட்டி யோர் கடலிற் பாய்ச்சி னும்
நற் றுணை யாவது நமச் சிவாய வே "

என்ற நாவுக்கரசரின் உறுதி சான்ற சொற்களும் பரம பக்தியின் இலக்கணத்தைக் குறிப்பனவாம். ' தம்மை ஒரு கற்றாணுடன் சேர்த்துக் கட்டிக் கட லுக்குள் வீழ்த்திய போதிலும் தமக்கு நற்புகற் குரிய துணை நமச்சிவாய (சிவனைப் பணிகிறேன்) என்ற மந்திர மல்லது வேறில்லை.' என்று திரு நாவுக்கரசர் சொல்லுகிறார்.

இனி, 'இன்பத்தையும் துன்பத்தையும் ஒன் றாகக் கருதுதல் அவசிய மென்கையில், அப்போது

கடவுளை நமபுவ மக்கன மபாருட்டு! கடவுள் நம்மை அச்சந் தீர்க்துக் காப்பா னென்று எதிர் பார்ப்பது எதன் பொருட்டு? நமக்குத் தீங்கு நேர்காலும், நன்மை நேர்காலும், வாழ்வு நேர்காலும், மரணம் நேர்காலும்—எல்லாம் கடவுள் செயலாகையிலே நாம் எல்லாவற்றையும் ஸமமாகக் கருத வேண்டு மென்று பகவத் கீதை சொல்லுகையிலே, நமக்குக் கடவுளின் துணை எதன் பொருட்டு? நம்மைக் கற்றா னுடன் வலியக் கட்டி யாரேனும் கடலுள் வீழ்க்தி னால், நாம் இதுவும் கடவுள் செய லென்று கருதி அப் படியே மூழ்கி இறந்து விடுதல் பொருந்து மன்ற, அப் போது நமச்சிவாய, நமச்சிவாய என்று கூவி நம்மைக் காத்துக் கொள்ள என் முயல வேண்டும்?' என்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். இந்த ஆக்ஷேபம் தவறுனது. யாங்ஙன மெனில், சொல்லுகிறேன். முந்திய கர்மங் களால் நமக்கு விளையும் நன்மை தீமைகளை ஸமமாகக் கருதி நாம் மனச் சஞ்சலத்தை விட்டுக் கடவுளை நம்பி னால், அப்போது கடவுள் நம்மைச் சில வலிய சோதனைகளுக்கு உட்படுத்துகிறார். அந்தச் சோதனைகளில் நாம் மனந் சோர்ந்து கடவுளிடம் நம்பிக்கையை இழந்து விடாமல் இருப்போமாயின், அப்போது நமக்குள் ஈசனே வந்து குடி புகுகிறான். அப்பால் நமக்குத் துன்பங்களே நேர்வ தில்லை. ஆபத்துக்கள் நம்மை அணுகா. மரணம் நம்மை அணுகாது. எல்லா விதமான ஐயுறவுகளும், கவலைகளும், துயரங்களும் தாமாகவே நம்மை விட்டு நழுவி விடுகின்றன. இந்த

உலகத்திலேயே நாம் விண்ணவரின் வாழ்க்கை பெற்று நித்யானந்தத்தை அனுபவிக்கிறோம்.

மேலும், எல்லாவற்றையும் ஞானி ஸமமாகக் கருத வேண்டுமென்ற இடத்தில், அவன் மனித வாழ்க்கைக்குரிய விதிகளெல்லாம் அறவே மறந்து போய்ப் பித்தனைப் விட வேண்டுமென்பது கருத்தன்று.

ஒரு குழந்தையைக் கொல்வதும், சிவ பூஜை செய்வதும்—இரண்டும் கடவுளுக்கு ஒரே மாதிரிதான். அவன் எல்லா இயக்கங்களும், எல்லாச் செயல்களும் தன் வடிவமாக உடையவன். எனினும், மனித விதிப்படி சிவ துரோக பாவ மென்பதையும் சிவ பூஜை புண்ணிய மென்பதையும் கண்ணபிரான் மறுக்க வில்லை. மனிதன் எல்லாத் துன்பங்களினின்றும் விடுபட்டு, என்றும் மாறாத பேரின்பத்தை துகர விரும்புகிறான். அதற்குரிய வழிகளையே கீதை காண்பிக்கிறது. கஷ்ட நஷ்டங்களை நாம் மனோ தைர்யத்தாலும் தெய்வபக்தியாலும் பொறுத்துக் கொள்ள வேண்டும். ஆனால், நாம் மன மாரப் பிறருக்குக் கஷ்ட மேனும் நஷ்டமேனும் விளைவிக்கக் கூடாது. உலகத்துக்கு நன்மை செய்துகொண்டே யிருக்க வேண்டும். தன்னுயிரைப் போல் மன்னுயிரைப் பேண வேண்டும். நாம் உலகப் பயன்களை விரும்பாமல் நித்ய ஸுகத்தில் ஆழ்ந்திய பின்னரும், நாம் உலகத்தாருக்கு நல் வழி காட்டும் பொருட்டுப் புண்ணியச் செயல்களையே செய்து கொண்டிருக்க வேண்டுமென்று பகவான் கீதையில் உபதேசிக்கிறார்.

மேலும், நமக்கே துன்பங்கள் நம்மை மீறி எய்
தும்போது நாம் அவற்றை பொறுத்துக் கொள்ள
வேண்டு மென்பதே நன்மையையுந் தீமையையும்
நிகராகக் கருத வேண்டு மென்ற உபதேசத்தின் கருத்
தாகு மல்லது, ஒரே யடியாக ஒருவன் தனக்கு மிகவும்
இனிய காதலியை மருவும் இன்பத்துக்கும் தீராத
சூலை நோகத்தால் நேரும் துன்பத்துக்கும் யாதொரு
வேற்றுமையுங் தெரியாமல் புத்தி மண்ணைப் விட
வேண்டு மென்பது அவ் வுபதேசத்தின் கருத்தன்று.
எனென்றால், ஸாதாரண புத்தி யிருக்கும்வரை ஒரு
வன் காதலின்பத்துக்கும் சூலை நோகத் துன்பத்துக்கு
மிடையே யுள்ள வேற்றுமையை உணரா திருத்தல்
ஸாத்ய மன்று. ஆத்ம ஞான மெய்தியதால் ஒருவன்
ஸாதாரண புத்தியை இழந்து விடுவா னென்று நினைப்
பது தவறு. சூலை நோகம் நேரும்போது ஸாமான்ய
மனிதன் மன முடைந்து போய்த் தன்னை எளிதாக
வும் அந் நோயை வலிதாகவும் கருதி ஆசை யிழந்து
நாளடைவில் மேன்மேலும் தன்னை அந்த நோய்க்
கிரை யாக்கிக் கொண்டு, சூலை நோகி என்று தனக்
கொரு பட்டஞ் சூட்டிக் கொண்டு வருந்தி மடிவது
போல் ஞானி செய்ய மாட்டான். ஞானி அத்தகைய
நோய் எதேனும் பூர்வ கர்ம வசத்தால் தோன்று
மாயின், உடனே கடவுளின் பாதத்தைத் துணை
யென்று நம்பித் தன் ஞானத் தீயால் அதை எரித்துத்
தள்ளி விடுவான்.

"ஞானக்நிஸ் ஸர்வ கர்மாணி பஸ்மஸாத் குருதே"—

ஞானத்தீ எல்லா வினைகளையும் சாம்பராக்குகிறது. கடவுளிடம் தீராத நம்பிக்கை செலுத்தவேண்டும். கடவுள் நம்மை உலகமாகச் சூழ்ந்து நிற்கிறான். நாமாகவும் அவனே விளங்குகிறான். அக வாயிலாலேனும் புற வாயிலாலேனும் நமக்கு எவ்வகைத் துயரமும் விளைக்க மாட்டான். ஏன்? நாம் எல்லா வாயில்களாலும் அவனைச் சரண் புகுந்து விட்டோமாதலின்.

அவனன்றி யோர் அணுவும் அசையாது. அவன் நமக்குத் தீங்கு செய்ய மாட்டான். தீங்கு செய்ய வல்லான் அல்லன். ஏன்? நாம் அவனை முழுதும் நம்பி விட்டோமாதலின்.

'கடவுளை நம்பினோர் கைவிடப் படார்.' இதுவே பக்தி.

அந்தக் கடவுள் எத்தன்மை யுடையான்? எல்லா அறிவும், எல்லா இயக்கமும், எல்லாப் பொருளும் எல்லா வடிவமும் எல்லாந் தானே யாகி நிற்பான்.

அவனை நம்பினோர் செய்யத் தக்கது யாது? எதற்கும் துயரப் படாதிருத்தல்; எதற்கும் கவலைப்படாதிருத்தல். எதனிலும் ஐயுறவு பூணாதிருத்தல்.

"ஸம்சயாத்மா விநச்யதி"—ஐயமுடையோன் அழிவான். நம்பினவன் மோக்ஷம் அடைவான்.

எ

குந்தியின் மகனே, சீதம், உஷ்ணம், இன்பம், துன்பம் என்பவற்றைத் தரும் இயற்கையின் தீண்டு

தல்கள் வந்து போகும் இயல்புடையன ; அநித்ய மாயின ; அவற்றைப் பொறுத்துக் கொள். பாரத! (பகவத் கீதை—2-ஆம் அத்யாயம் 14-ஆம் சுலோகம்).

ஆண்காளையே! இவை எந்த மனிதனைத் துன் புறுத்த மாட்டாவோ, இன்பத்தையும் துன்பத்தை யும் நிகராகக் கருதும் அந்த தீரன் சாகா திருக்கத் தகுவான். (வே, 15-ஆம் சுலோகம்).

இஃதே பகவத் கீதையின் சிகரம்.

சாகா திருத்தல்; மண் மீது மாளாமல் மார்க்கண் டேயன் போல் வாழ்தல்; இதுவே கீதையின் ரஸம்.

அமரத்தன்மை: இஃதே வேத ரஹஸ்யம்.

இந்த வழியைக் காட்டுவது பற்றியே வேதங்கள் இத்தனை மதிக்கப்படுகின்றன.

இறந்து போன ஜீவன்முக்தர்கள் யாவரும் ஜீவன் முக்தியை எய்திய பின் அந்த நிலையினின்றும் வழுவிய வர்களாகவே கருதப் படுதல் வேண்டும். நித்யஜீவி களாய் மண்மேல் அமரரைப்போல் வாழ்வாரே நித்ய ஜீவன்முக்தராவர். அத்தகைய நிலையை இந்த உல கில் அடைதல் ஸாத்ய மென்று மேற் கூறிய இரண்டு சுலோகங்களிலே கடவுள் போதித்திருக்கிறார். அதற்கு உபாயமும் அவரே குறிப்பிட்டிருக்கிறார். குளிர் வெம்மை, இன்பம் துன்பம் எனும் இவற்றை விளக் கும் இயற்கையின் அனுபவங்கள், தெய்வ கிருபையால், சாசுவத மல்ல, அநித்யமானவை, தோன்றி மறையும்

இயல்புடையன. ஆகலால், இவற்றைக் கண்ட விடத்தே நெஞ்சு மிளகுதலும் நெஞ்சுடைந்து மடிதலும் சால மிகப் பேதைமையா மன்றே? ஆகலால் இவற்றைக் கருதி எவனும் மனத்துயர்ப் படுதல் வேண்டா. அங்ஙனம் துயர்ப்படா திருக்கக் கற்பான் சாகாமலிருக்கத் தகுவான். இஃது ஸ்ரீ கிருஷ்ணனுடைய கொள்கை. இதுவே அவருடைய உபதேசத்தின் ஸாராம்சம். பகவத் கீதையின் நூற்பயன். எனவே, பகவத் கீதை அமிர்த சாஸ்த்ரம்.

அ

'அமிர்த சாஸ்த்ரம்'—அதாவது சாகாமலிருக்க வழி கற்றுக் கொடுக்கும் சாஸ்த்ர மாகிய பகவத் கீதையைச் சிலர் கொலைநூலாகப் பாவனை செய்கிறார்கள். துர்யோதனாதிகளைக் கொல்லுமாறு அர்ஜுனனைத் தூண்டுவதற்காகவே, இந்தப் பதினெட்டு அத்யாயமும் கண்ணபிரானால் கூறப்பட்டன வாதலால், இது கொலைக்குத் தூண்டுவதையே தனிநோக்கமாக வுடைய நூலென்று சிலர் பேசுகிறார்கள். கொலை செய்யச் சொல்ல வந்த விடத்தே, இத்தனை வேதாந்தமும், இத்தனை ஸத்வ குணமும், இத்தனை தக்க நிவிர்த்தியும், இத்தனை சாகா திருக்க வழியும் பேசப்படுவ தென்னே என்பதை அச் சில மூடர் கருதுகின்றிலர்.

துர்யோதனாதியர் காமக் குரோதங்கள்; அர்ஜுனன் ஜீவாத்மா; ஸ்ரீ கிருஷ்ணன் பரமாத்மா.

இந்த ரஹஸ்யம் அறியாதவருக்குப் பகவத் கீதை ஒரு போதும் அர்த்த மாகாது.

க்ஷத்திரிய அரசர் படித்துப் பயன் பெறச் செய்ய வேண்டு மென்பதே இந்த நூலின் விசேஷ நோக்கம். பூமண்டலத்தா ரணவருக்கும் பொதுமை யாகவே விடுதலைக் குரிய வழிகளை உணர்த்த வேண்டு மென்று கருதி எழுதப் பட்டதே பகவத் கீதை; இதில் ஐய மில்லை. எனினும், இந்த நூல் க்ஷத்திரிய மன்னருக்கு விசேஷமாக உரியது. இது அவர்களுக்குள்ளேயே அதிகமாக வழங்கி வந்தது. வேதங்கள், எப்படி உலகத்துக் கெல்லாம் பொதுவே ஆயினும், பிராமணர் களுக்கு விசேஷமாக உரியனவோ, அதுபோலே புராணங்கள் க்ஷத்திரியர்களுக்கு உரியன.

மேலும் கீதையைச் சொன்னவன் ராஜா; கேட்டவன் ராஜா.

ஆதலால் க்ஷத்திரிய அரசருக்கு இதில் ரஸம் உண்டாகும் பொருட்டாக இது போர்க்களத்தை முகவுரையாகக் கொண்ட மஹா அற்புத நாடகத் தொடக்கத்துடன் ஆரம்பிக்கிறது. 'இந்து இந்நூல் ஞான சாஸ்த்ரங்களில் முதன்மைப் பட்டிருப்பது போல், காவிய வரிசையிலும் மிக உயர்ந்த' தென்பதற்குச் சான்றும்.

ஆனால், அதிலிருந்து இது ஞான சாஸ்த்ரமே யில்லை யென்று மறுக்கும் மூடர், முகவுரையை மாத்ர மே வாசித்துப் பார்த்தார்களென்று தோன்றுகிறது.

"மூகவுரையில் மாத்திர மன்றே? தூலில் நடு விலும் இடை யிடையே, 'தஸ்மாத் யுத்யஸ்வ பாரத' —'ஆகலால், பாரதா, போர் செய்' என்ற பல்லவி வந்து கொண்டே யிருக்கிற தன்றே?" என்று கூறிச் சிலர் ஆக்ஷேபிக்கலாம். அதற்குத்தான் மேலே யே கீதா ரஹஸ்யத்தின் ஆதார ரஹஸ்யத்தை எடுத் துச் சொன்னேன். அதனை இங்கு மீட்டும் சொல்லு கிறேன். துரியோதனாதிகள்—காமம், குரோதம், சோம்பர், மடமை, மறதி, கவலை, தூயரம், ஐயம் முத லிய பாவ சிந்தனைகள். அர்ஜுனன் ஜீவாத்மா. ஸ்ரீ கிருஷ்ணன் பரமாத்மா.

கூ

இந்த ரஹஸ்யம் உனக்கு எங்ஙனம் தெரிந்த தென்று கேட்பீர்களாயின், சொல்லுகிறேன்.

கண்ணனை நோக்கி அர்ஜுனன் சொல்லுகிறான்:—

'நீ வாயு; நீ யமன்; நீ சந்திரன்; நீ வருணன்; நீ அனைத்திற்கும் பிதா; பிதாமஹன்.' (கீதை: 11-ஆம் அத்யாயம்; 39-ஆம் சுலோகம்).

கண்ணன் சொல்லுகிறான்:—'மறுபடியும், பெருந் தோளுடையாய், எனது பரம வசனத்தைக் கேட் பாய். என் அன்புக்குரிய நினக்கு நலத்தைக் கருதி (அதனைச் சொல்லுகிறேன்)'. (கீதை: 10-ஆம் அத்யா யம், முதல் சுலோகம்.)

'நான் உலகத்தின் பெரிய கடவுள். பிறப்பற்ற வன்; தொடக்க மில்லாதவன்; இங்ஙனம் என்னை அறி

வான் மனிதருள்ளே மயக்கந் தீர்ந்தான். அவன் எல்லாப் பாவங்களினின்றும் விடுபடுகிறான்."—(கீதை: 10-ஆம் அத்யாயம், 3-ஆம் சுலோகம்.)

எனவே கீதையில் கேட்பான் சொல்வான் என்ற இரு திறத்தினரும் ஸ்ரீ கிருஷ்ணன் பரமாத்மா என் பதை வற்புறுத்துகிறார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணன் பரமாத்மா என்ற மாத்திரத்திலே அர்ஜுனன் ஜீவாத்மா என்பதும் துர்யோதனாதியர் காமக் குரோதாதிகளென்பதும் சாஸ்த்ரப் பயிற்சியும் காவியப் பழக்கமும் உடையோரால் எளிதில் ஊஹித்துக் கொள்ளத் தக்கனவாம்.

'பிரபோத சந்திரிகை' என்று ஒரு நாடக நூல் இருக்கிறது. அதில் விவேகன் என்ற ராஜன் உலோகாயதன் பௌத்தன் முதலியவர்களுடனே யுத்தம் செய்து வென்றதாகக் கூறப்பட்டிருக்கிறது. வேதாந்த சாஸ்த்ரப் பயிற்சி யில்லாத ஒரு குழந்தை அந்த நூலைப் பார்த்து விட்டு, அதாவது, முன்பின் பாராமல் நடுவிலே மாத்திரம் பார்த்து விட்டு, வெடி யுத்தம் எந்த வருஷத்தில் நடந்த தென்றும், அதில் இரு திறத்திலும் எத்தனை உயிர்கள் மடிந்தன வென்றும் கேட்கப் புகுவது போல், சிலர் துர்யோதனாதியரைக் கொல்லும் புறப் பொருளிலே கீதையின் உபதேசத்தைக் கொள்ளுகின்றனர்.

ஹிந்துக்களாலே ஹிந்து தர்மத்தின் மூன்று ஆதார நிதிகளாகக் கருதப் படும் ப்ரஸ்தான த்ரயங்க

ளாகிய உபநிஷத், பகவத்கீதை, வேதாந்த ஸூத்ரம்— என்பவற்றுள் கீதை இரண்டாவ தென்பதை இந்தச் சில மூடர் மறந்து விடுகின்றனர். 'இதற்கு— அதாவது, பகவத்கீதைக்கு—சங்கரர், ராமானுஜாசார் யர், மத்வாசாரியர் என்ற மூன்று மத ஸ்தாபகாசார யரும் வ்யாக்யான மெழுதி, இதனை ஹிந்து தர்மத்தின் ஆதாரக் கற்களில் ஒன்றாக நாட்டி யிருக்கிறார்கள்' என்பதை இந்த மூடர் அறிகின்றிலர். கொலைக்குத் தூண்டும் நூலொன்றுக்கு சங்கராசார்யர் பாஷ்யம் எழுதுவ தென்றால், அஃது எத்தனை விநோதமாக இருக்கு மென்பதைக் கருதித் தம்மைத் தாமே நகைக் குந் திறமையிலர்.

கொலை எவ்வளவு தூரம்! பகவத் பாத சங்கரா சார்யர் எவ்வளவு தூரம்?

மேலும், நாம் மேலே கூறியபடி, பகவத் கீதை யைக் கொலை நூலென்று வாதாடுவோர் அதில் முக வுரை மாத்திரம் படித்தவர்களே யன்றி நூலின் உட் பகுதியில் நுழைந்து பார்த்தவ ரல்லர் என்பதில் சந் தேக மில்லை.

ஈசனைச் சரணாகதி யடைந்து இஹலோகத்தில் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை எய்தி நிகரற்ற ஆனந்தக் களியில் மூழ்கி வாழும்படி வழிகாட்டுவதே பகவத் கீதையின் முக்கிய நோக்கம். ஆதலால், இஃது கர்ம சாஸ்த்ரம்; இஃது பக்தி சாஸ்த்ரம்; இஃது யோக சாஸ்த்ரம்; இஃது ஞான சாஸ்த்ரம்; இஃது மோக்ஷ சாஸ்த்ரம். இஃது அபரத்வ சாஸ்த்ரம்.

இங்ஙனம் மோக்ஷத்தை அடைய விரும்புவோ ருக்கு முக்கியமான சத்துரு—ஒரே சத்துரு—அவனு டைய சொந்த மனமே யாம். 'தன்னைத் தான் வென்றவன் தனக்குத் தான் நண்பன். தன்னைத் தான் ஆளாதவன் தனக்குத் தான் பகைவன். இங்ஙனம் ஒருவன் தானே தனக்குப் பகைவன், தானே தனக்கு நண்பன்' என்று கடவுள் சொல்லுகிறார்.

தன்னைக் காட்டிலும் உயர்ந்த நட்பும் தனக்குப் பிறிதில்லை. தன்னை யொழியத் தனக்குப் பகையும் வேறு கிடையாது. ஒருவன் தனக்குத் தான் நட் பாகிய போது, உலக முழுதும் அவனுக்கு நட்பாய் விடுகிறது. அங்ஙன மின்றித் தான் கட்டி யாளாமல் தனக்குத் தான் பகையாக நிற்போனுக்கு வையக மெல்லாம் பகையாகவே முடிகிறது. உள்ளப் பகையே பகை; புறப் பகை பகை யன்று. உள்ளப் பகையின் வெளித் தோற்றமே புறப் பகை யாவது. உள்ளப் பகையைக் களைந்து விட்டால், புறப் பகை தானே நழுவிப் போய் விடும்.

புறத்தே தெல்லாம் கடவுளாகப் போற்றத் தக்கது. உள்ளப் பகை யாகிய அஞ்ஞானம்—அதாவது, வேற் றுமை யுணர்ச்சி—ஒன்று மாத்திரமே அழித்தற் குரியது.

வேற்றுமை யுணர்ச்சியை நீக்கி, நம்மைச் சூழ நடைபெறும் செயல்க ளெல்லாம் ஈசன் செயல்க

னென்றும், தோன்றும் தோற்றங்க ளெல்லாம் ஈசனு டைய தோற்றங்க ளென்றும் தெரிந்து கொள்ளு மிடத்தே பயனாச முண்டாகிறது.

'சொல்லடா ஹரி யென்ற கடவு ளெங்கே?
சொல்'லென்று ஹிரணியன் தான் உறுமிக்கேட்க
நல்லதொரு மகன் சொல்வான் 'தூணி லுள்ளான்,
'நாராயணன் துருப்பி லுள்ளா' னென்றான்.
வல்லமை சேர் கடவுளிலா இடமென்றில்லை;
மறறா சக்தி யில்லாத வஸ்துவில்லை.
அல்ல வில்லை; அல்ல வில்லை; அல்ல வில்லை.
அனைத்துமே தெய்வ மென்று லல்ல லுண்டோ?''

'தன் மனமே தனக்குப் பகை யென்பது பேதை மையன்றே? எல்லாம் கடவுளாயின், என் மனமும் கடவுளன்றே? அதனைப் பகைவனைக் கருதுமா றென்னே?' எனில் :—தன்னைத் தான் வென்று தனக்குத் தான் நன்மை செய்யும் போது, தன்னுடைய மனம் தெய்வத் தன்மையுடையதாகக் கருதிப் போற்றத் தக்கது. மற்றப் போது பகையாம்.

எல்லாம் கடவுளாயின், மனம் தீமை செய்யும் போது கடவுளாகு மன்றே? 'எப்பொருள் யாது செய்யுமே யாயினும், அப்பொருள் கடவுள், அதன் செய்கை கடவுளுடைய செய்கை' யென்னும் விதி மாறுதன்றே? எனில் :—அவ்வுரை மெய்யே எனினும், நமக்கு லோகானுபவம் மறுக்கத் தகாத பிரமா ணமாகும். லோகானுபவத்தில் மனம் நமக்குத் தீமை

னென்றும், தோன்றும் தோற்றங்க ளெல்லாம் ஈசனு டைய தோற்றங்க ளென்றும் தெரிந்து கொள்ளு மிடத்தே பயநாச முண்டாகிறது.

'சொல்லடா ஹரி யென்ற கடவு ளெங்கே?
சொல்'லென்று ஹிரணியன் தான் உறுமிக்கேட்க
நல்லதாரு மகன் சொல்வான் 'தூணி லுள்ளான்,
'நாராயணன் துரும்பி லுள்ளா' னென்றான்.
வல்லமை சேர் கடவுளிலா இடமென்றில்லை;
மஹா சக்தி யில்லாத வஸ்துவில்லை.
அல்ல லில்லை; அல்ல லில்லை; அல்ல லில்லை.
அனைத்துமே தெய்வ மென்று லல்ல லுண்டோ?''

'தன் மனமே தனக்குப் பகை யென்பது பேதை மையன்றே? எல்லாம் கடவுளாயின், என் மனமும் கடவுளன்றே? அதனைப் பகைவனைக் கருதுமா றென் னே?' எனில் :—தன்னைத் தான் வென்று தனக்குத் தான் நன்மை செய்யும் போது, தன்னுடைய மனம் தெய்வத் தன்மையுடையதாகக் கருதிப் போற்றத் தக்கது. மற்றப் போது பகையாம்.

எல்லாம் கடவுளாயின், மனம் தீமை செய்யும் போது கடவுளாகு மன்றே? 'எப்பொருள் யாது செய்யுமே யாயினும், அப்பொருள் கடவுள், அதன் செய்கை கடவுளுடைய செய்கை' யென்னும் விதி மாறுதன்றே? எனில் :—அவ்வுரை மெய்யே எனினும், நமக்கு லோகானுபவம் மறுக்கத் தகாத பிரமாண மாகும். லோகானுபவத்தில் மனம் நமக்குத் தீமை

செய்கிறது. அதை வென்று நன்மை செய்யத் தக்க தாகப் புரிதல் ஸாத்யம்.

அங்ஙனம் செய்யும் பொருட்டாகவே, சாஸ்த்ரங் களும் வேதங்களும் எண்ணிறந்தனவாகச் சமைக்கப் பட்டிருக்கின்றன.

மனம் துன்ப மிழைப்பதையும் அதனால் உயிர் கள் கோடானுகோடியாக மடிவதையும் நாம் கண் முன்பு காணும் போது, அதை ஒரேயடியாக மறுத்து விடுவதில் பயனில்லை.

மனம் இயற்கையாலும் தீய ஸஹவாஸத்தாலும் ஆத்மாவுக்குத் துன்ப மிழைத்தல் ப்ரத்யக்ஷம். நல்ல கூட்டத்தாலும், நல்ல பயிற்சியாலும் அதனை உபகார வஸ்துவாகச் செய்தல் ஸாத்ய மென்பது யோகிகளின் ஸர்வ ஸாதாரண அனுபவம்.

எல்லாம் கடவுளுடைய செய லென்பது பொது உண்மை ; பரம ஸத்யம். ஆயினும் மனிதருக்குத் துன்ப முண்டு. எல்லாம் கடவுளுடைய வழிவ மென் பது பரம ஸத்யம் எனினும், ஜீவர்கள் துயரப் படுவதை ப்ரத்யக்ஷமாகக் காணுகிறோம்.

அதாவது, கடவுளுக்கு எல்லாம் ஒன்று போலவே யாம். எத்தனை கோடி உயிர்கள் வாழ்ந்தாலும், எத் தனை கோடி உயிர்கள் மடிந்தாலும், கடவுளுக்கு யாதொரு பேதமுமில்லை. அண்ட கோடிகள் சிதறு கின்றன. பூகம்ப முண்டாய்த் தேசங்க ளழிகின்றன.

'அஞ்ஞானமும் கடவுள் மயந்தானே? அதை ஏன் தொலக்க வேண்டும்?' என்று கேட்டால்:—நீ 'எல்லாம் கடவுள்; ஞானமும் கடவுள், அஞ்ஞானமும் கடவுள்' என்பதை உண்மையாகத் தெரிந்த அளவில் உன்னைப் பரம ஞானம் எய்தி விட்டது. உனது அஞ் ஞானமும் நீங்கிப் போய் விட்டது. அஞ்ஞானமும் அதனாலாகிய துன்பமும் கடவுள் மயம் என்பது மெய்யே. எனில், பின்னர் அவை நீங்கி நீ ஞானமும் இன்பமும் எய்தியதும் கடவுள் செய லென்பதை மறந்து விடாதே. அவ்விடத்து அஞ்ஞானம் நீங்கி யது பற்றி வருத்தப் படாதே.

கடவுளை உபாஸனை செய்வதற் குரிய வழி எங்ஙன மெனில்:—ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லுகிறார்:—'நான் எல்லாவற்றுக்கும் பிதா. என்னிட மிருந்தே எல்லாம் இயங்குகிறது. இந்தக் கருத்துடையோரான ஞானி ஞர் என்னை வழிபடுகிறார்கள்.'—(கீதை 10-ஆம் அத் யாயம். 8-ம் சுலோகம்.)

எந்த ஜந்துவுக்கும் ஹிம்ஸை செய்வோர் உண்மை யான பக்தராக மாட்டார். எந்த ஜீவனையும் பகைப் போர் கடவுளின் மெய்த் தொண்டர் ஆகார். எந்த ஜீவனையுங் கண்டு வெறுப்பெய்துவோர் ஈசனுடைய மெய் யன்ப ரென்று கருதத் தகார். மாம்ஸ போஜனம் பண்ணுவோர் கடவுளுக்கு மெய்த் தொண்ட ராகார்.

மூட்டுப் பூச்சிகளையும் பெண்களையும் கொல்வோர் தெய்வ வதை செய்வோரே பாவர்.

'அஹிம்ஸா பரமோ தர்ம:'—'கொல்லாமையே முக்ய தர்மம்' என்பது ஹிந்து மதத்தின் முக்கியக் கொள்கைகளில் ஒன்றும். கொல்லாமை யாகிய விரதத்தில் நில்லாதவன் செய்யும் பக்தி அவனை அமரத்தன்மையிலே சேர்க்காது. மற்றோர் உயிரைக் கொலை செய்வோனுடைய உயிரைக் கடவுள் மன்னிக்க மாட்டார். இயற்கை கொலைக்குக் கொலை வாங்கவே செய்யும்.

இயற்கை விதியை அனுஸரித்து வாழ வேண்டும். அதனால் எவ்விதமான தீமையும் எய்த மாட்டாது. எனவே ஸாதாரண புத்தியே பரம மெய்ஞ் ஞானம். இதனை ஆங்கிலேயர் 'Commonsense' என்பர். சுத்தமான—மாசு படாத, கலங்காத, அஞ்சாத, பிழைப்படாத—ஸாதாரண அறிவே பரம மெய்ஞ் ஞான மாகும்.

ஸாதாரண ஞானத்தைக் கைக் கொண்டு நடத்தலே எதிலும் எளிய வழியாம். ஸாதாரண ஞான மென்று சொல் மாத்திரத்தில் அது எல்லாருக்கும் பொதுவென்று விளங்குகிறது. ஆனால் ஸாதாரண ஞானத்தின்படி நடக்க எல்லாரும் பின் வாங்குகிறார்கள். ஸாதாரண ஞானத்தின்படி நடக்க வொட்டாமல் ஜீவர்களைக் காமக் குரோதாதிகள் தடுக்கின்றன. ஸாதாரண ஞானத்தின் தெளிவான கொள்கை யாதெனில்,

'நம்மை மற்றோர் நேசிக்க வேண்டு மென்றால் நாம் மற் றோரை நேசிக்க வேண்டு' மென்பது. நேசத்தாலே நேசம் பிறக்கிறது. அன்பே அன்பை விளைவிக்கும்.

நாம் மற்ற உயிர்களிடம் செலுத்தும் அன்பைக் காட்டிலும் நம்மிடம் மற்ற உயிர்கள் அதிக அன்பு செலுத்தவேண்டு மென்று விரும்புதல் ஸகல ஜீவர் களின் இயற்கையாக இயல் பெற்று வருகிறது. இந்த வழக்கத்தை உடனே மாற்றி விடவேண்டும். இதனால் மரணம் விளைகிறது.

நாம் மற்ற உயிர்களிடம் அன்பு செலுத்த வேண் டும். அதனால் உயிர் வளரும். அதாவது, நமக்கு மேன் மேலும் ஜீவசக்தி வளர்ச்சி பெற்றுக் கொண்டு வரும். நம்மிடம் பிறர் அன்பு செலுத்த வேண்டு மென்று எதிர்பார்த்துக் கொண்டும், ஆனால் அதே காலத்தில் நாம் பிறருக்கு எப்போதும் மனத்தாலும் செயலா லும் தீங்கு இழைத்துக் கொண்டு மிருப்போ மாயின்— அதாவது பிறரை வெறுத்துக்கொண்டும், பகைத்துக் கொண்டும், சாபமிட்டுக்கொண்டும் இருப்போமாயின்— நாம் அழிந்து விடுவோ மென்பதில் ஐய மில்லை.

இனி, வேறு சிலர் பகவத் கீதையை ஸந்யாஸ நூலென்று கருதுகிறார்கள். அதாவது, பெண்டாட்டி பிள்ளைகளைத் துறந்து, தலையை மொட்டை யிட்டுக் கொண்டு ஆண்டியாய்த் திரிவோருக்கு எழுதப் பட்ட நூலென்று நினைக்கிறார்கள். இதைக் காட்டிலும் ஆச்

சர்யமான தப்பிதம் நாம் பார்த்தே கிடையாது. கீதையைக் கேட்டவனும் ஸந்யாஸி யல்லன்; சொல்லியவனும் ஸந்யாஸி யல்லன். இருவரும் பூமியாளும் மன்னர்; குடும்ப வாழ்வி லிருந்தோர். 'ஆஹா! அஃ தெப்படிச் சொல்லலாம்? அர்ஜுனன் ஜீவாத்மா வென்றும், கண்ணன் பரமாத்மா வென்றும் மேலே கூறி விட்டு, இங்கு அவர்களை உலகத்து மன்னர்களாக விவகரிப்பதற்கு நியாயமென்னே?' எனில்—வேண்டாம்; அதனை விட்டு விடுக.

பரமாத்மா ஜீவாத்மா இருவருமே உலக காரியங் களில் தலைப் பட்டுத் தானிருக்கிறார்கள். கீர்த்தி பெற்ற வங்க கவி யாகிய பூரீமான் ரவீந்த்ர நாத தாகூர் கடவுளை நோக்கி, 'ஐயனே, நீயே ஸம்ஸார வலையில் அகப்பட்டிருக்கிறாயே? யான் இதினின்றும் விடுதலை வேண்டும் பேதைமை யென்னே?' என்று பாடியிருக் கிறார். ஸம்ஸார விருத்திகள் கடவுளுடைய விருத்தி கள். செய லெல்லாம் சிவன் செயல். 'அவனன்றி ஓரணுவு மசையா' தெனும் பெரிய ஆப்தர் மொழி யுண்டு கண்டீர்.

கீதையிலே, பகவான் சொல்லுகிறான்:—"அர் ஜுன, மூன்றுலகங்களிலும் இனிச் செய்ய வேண்டிய தென மிஞ்சி நிற்கும் செய்கை யொன்றும் எனக்குக் கிடையாது, 'அடையத் தக்கது. ஆனால் என்னால் அடையப் படாதது' என வொரு பேறு மில்லை. எனி னும், நான் தொழில் செய்து கொண்டு தான் இருக்கி றேன்" என.

எனெனில், கடவுள் சொல்லுகிறான் :—'நான் தொழில் செய்யாது வாளா இருப்பின், உலகத்தில் எல்லா உயிர்களும் என் வழியையே பின்பற்றும். அதனால், இந்த உலகத்துக்கு அழிவு எய்தும். அந்த அழிவுக்கு நான் காரணபூத னாகும்படி நேரும். அதனால் நான் எப்போதும் தொழில் செய்து கொண்டே யிருக்கிறேன்' என.

கடவுள் ஓயாமல் தொழில் செய்து கொண்டே யிருக்கிறான். அவன் அண்ட கோடிகளைப் படைத்த வண்ணமாகவும் காத்த வண்ணமாகவும் அழித்த வண்ணமாகவும் இருக்கிறான். இத்தனை வேலையும் ஒரு சோம்பேறிக் கடவுளால் செய்ய முடியுமா? கடவுள் கர்மயோகிகளிலே சிறந்தவன். அவன் ஜீவாத்மாவுக்கும் இடைவிடாத் தொழிலே விதித்திருக்கிறான்; ஸம்ஸாரத்தை விதித்திருக்கிறான்; குடும்பத்தை விதித்திருக்கிறான்; மனைவி மக்களை விதித்திருக்கிறான்; சுற்றத்தாரையும் அயலாரையும் விதித்திருக்கிறான். நாட்டில் மனிதர் கூட்டுறவைத் துறந்து ஒருவன் காட்டுக்குச் சென்ற மாத்திரத்தாலே அங்கு அவனுக்கு உயிர்க் கூட்டத்தின் சூழல் இல்லாமற் போய்விடமாட்டாது. எண்ணற்ற விலங்குகளும், பறவைகளும் ஊர்வனவுமாகிய ஜீவர்களும், மரம் செடி கொடிகளாகிய உயிர்ப் பொருள்களும் அவனைச் சூழ்ந்து நிற்கின்றன. சூழ் பிருகங்களை வைத்துக் கொண்டு. அவற்றுடன் விவகரித்தல் மனிதக் கூட்டத்தினிடையே இருந்து அதனுடன் விவகரிப்பதைக் காட்டிலும் எளிதென்றேனும் கவலைக்

குறைவுக் கிடமாவ தென்றேறனும் கருதுவோன் தவறுக யோசனை பண்ணுகிறான். மனிதர் எத்தனை கொடியோ ராயினும், மூடராயினும், புலி கரடி நாய் நரிகளுடன் வாழ்வதைக் காட்டிலும் அவர்களிடையே வாழ்தல் ஒருவனுக்கு அதிக நன்மை பயக்கத்தக்கது என்பதில் ஐயமில்லை. ஆனால், 'கொடுங் கோல் மன்னர் வாழும் நாட்டிற் கடும் புலி வாழும் காடும் நன்றே' என முன்னோர் குறிப்பிட்டபடி, கடும் புலி வாழுங் காட்டைக் காட்டிலும் நாட்டை ஒருவனுக்கு அதிகக் கஷ்டமாகக் கூடிய மனிதரும் இருக்கக் கூடுமென்பது மெய்யே. ஆனால், இந்நிலையைப் பொது விதியாகக் கருதலாகாது. பொது விதியை ஸ்தாபனம் செய்வதாகிய விதிவிலக்கென்றே கருதத் தகும்.

கதையை வளர்த்துப் பயனில்லை. பெண்டு பிள்ளைகளைத் துறந்துவிட்ட மாத்திரத்திலேயே ஒருவன் முக்திக்குத் தகுதி யுடையவனாய்விட மாட்டான். இஃதே ஸ்ரீபகவான் கீதையில் உபதேசிக்கிற கொள்கை.

பெண்டு பிள்ளைகளையும் சுற்றத்தாரையும் இனத்தாரையும் நாட்டாரையும் துறந்து செல்பவன் கடவுளுடைய இயற்கை விதிகளைத் துறந்து செல்லுகிறான். ஜனஸமூஹ வாழ்க்கையைத் துறந்து செல்வோன் வலியில்லாமையால் அங்ஙனம் செய்கிறான். குடும்பத்தை விடுவோன் கடவுளைத் துறக்க முயற்சி பண்ணுகிறான்.

துறவிகளுக்குள்ளே பட்டினத்துப் பிள்ளை சிறந்தவனென்று தாயுமானவர் பாடியிருக்கிறார். அந்தப் பட்டினத்துப் பிள்ளை என்ன சொல்லுகிறார்?

அறந்தா னியற்றும் அவனிலுங் கோடியதிக மில்லந்
துறந்தான் அவனிற் சதகோடி யுள்ளத்துறவுடையான்
மறந்தா னறக் கற்றறிவோ டிருந்திரு வாதனையற்
றிறந்தான் பெருமையை என் சொல்லுவேன் கச்சியே
கம்பனே.

இல்லத் துறவைக் காட்டிலும் உள்ளத் துறவு சத கோடி மடங்கு மேலென்று மேலே பட்டினத் தடிகள் சொல்லுகிறார். பட்டினத் தடிகள் தாம் துறவி யாதலால் இங்ஙனம் கூறினர். உள்ளத் துறவு தான் செய்தற் குரிய தென்றும் மனத் துறவு செய்ய வொண்ணாத தொரு பாவமென்றும் நான் சொல்லுகிறேன்.

பாவ மாவது யாது? புண்ணிய மென்ப தெதனை?

தனக்கேனும் பிறர்க்கேனும் துன்பம் விளைவிக்கத் தக்க செய்கை பாவம், தனக்கேனும் பிறர்க்கேனும் இன்பம் விளைக்கத் தக்க செயல். புண்ணியச் செயல் எனப்படும்.

ஒருவனுக்கு மனத் துறவைக் காட்டிலும் அதிகத் துன்பம் விளைக்கத் தக்க செய்கை வேறொன்று மில்லை.

'இல்லா ளகத்திருக்க இல்லாத தொன் றில்லை.'—

கற் புடைய மனைவியுடன் காத லுற்று, அறம் பிழையாமல் வாழ்தலே இவ் வுலகத்தில் ஸ்வர்க்க வாழ்க்கையை ஒத்த தாகும். ஒருவனுக்குத் தன் வீடே சிறந்த வாஸ ஸ்தலம், மலையன்று. வீட்டிலே தெய்வத்தைக் காணத் திறமை யில்லாதவன் மலைச் சிகரத்தை

யடுக்க தொரு முழையிலே கடவுளைக் காண மாட்டான்.

கடவுள் எங்கிருக்கிறார்? எங்கும் இருக்கிறார், மலைச் சிகரத்திலே மாத்திரமா இருக்கிறார்? வீட்டி லும் இருக்கத் தான் செய்கிறார்.

அங்கமே நின் வடிவமான சுகர்கூப்பிட நீ
எங்கும் 'வன்? வன்?' என்ற தென்னே பராபரமே?

என்று காயுமானவர் பாடி யிருக்கிறார்.

எங்ஙனமேனும், கடவுளை நேரில் பார்க்க வேண்டு மென்ற பேராவலுடன், சுகப் பிரம்ம ரிஷி, காட்டு வழியே, 'கடவுளே, கடவுளே யோ!" என்று கதறிக் கொண்டு போயினராம். அப்போது அங்கிருந்த மலை, சுனை, மேகம், நதி, ஓடை, மரம், செடி, கொடி, இலை, மலர், பறவை, விலங்கு—எல்லாப் பொருள்களும் 'வன்? வன்?' என்று கேட்டனவாம்.

எங்கும் கடவுள் நிறைந்திருக்கிறார். 'ஸர்வமிதம் ப்ரஹ்ம'—உலக மெல்லாம் கடவுண்மயம் என்று வேதம் சொல்லும் கொள்கையையே யிது கதை விளக் குகிறது.

இங்ஙன மாகையில், வீட்டிலிருந்து பந்துக்களுக் கும் உலகத்தாருக்கும் உபகாரம் செய்து கொண்டு, மனுஷ்ய இன்பங்களை யெல்லாம் தானும் புஜித்துக் கொண்டு, கடவுளை நிரந்தரமாக உபாஸனை செய்து, அதனால் மனிதத் துன்பங்களினின்றும் விடுபட்டு ஜீவன்முக்தராய் வாழ்தல் மேலான வழியா? அல்லது,

காட்டிலே போய், உடம்பை விழலாக வற்றடித்து மடித்தும், புலி பாம்பு முதலிய துஷ்ட ஜந்துக்களுக் கிரையாய் மடிந்தும், கடவுளைத் தேட முயலுதல் சிறந்த உபாயமா?

ஸௌர்யனைக் காணவில்லை யென்று ஒருவன் தன் கைப் பெட்டிக்குள்ளே சோதனை போடுதலொக்கு மன்றே, ஒருவன் கடவுளைக் காண வேண்டிக் காடுகளி லும் இருண்ட முழைகளிலும் புகுந்து வாழ்தல்?

'இல்லற மல்லது நல்லற மில்லை.'

தாயுமானஸ்வாமி, தாம் உயர்ந்த துறவு பூண்டி ருந்த போதிலும், இதனைப் பின்வரும் பாட்டில் அங்கீ காரம் செய்கிறார். அதாவது, முற்றிலும் அங்கீகாரம் புரியவில்லை. துறவறத்தைக் காட்டிலும் இல்லறமே சிறந்த தென்று அவர் தெளிவுபட உரைத்துவிடவில்லை. முக்திக்கு இரண்டும் ஸம ஸாதனங்கள் என்கிறார். தாயுமானவர் சொல்லுகிறார் :—

மத்த மத கரி முகிற் குல மென்ன நின்றிலகு
வாயிலுடன் மதி யகடு தோய்
மாட கூடச் சிகர மொய்த்த சந்திரகாந்த
மணி மேடை யுச்சி மீது
முத் தமிழ்முழக்க முடன்முத்து நகையார்களொடு
முத்து முத் தாய்க் குலாவி
மோகத் திருந்து மென்? யோகத்தினிலேநின்று
மூச்சைப் பிடித் தடக்கிக்
கைத்தல நகப்படை விரித்த புலி சிங்க மொடு
காடி நுழை தாழை கொண்ட

கான மலை யுச்சியிற் குகை யூடிருந்து மென்?
கர தலாமலக மென்ன
சுத்த மற மோன நிலை பெற்றவர்களுப்வர் கான்!
ஜனகாதி துணிவி தன்றே?
ஸர்வ பரிபூரணா அகண்ட சுத்துவமான
ஸச்சி தாநந்த சிவமே.

இதன் பொருள் யாதெனில்:—

'மதமேறிய யானைகள் மேகக் கூட்டங்களைப் போல் மலிந்து நிற்கும் வாயில்களை யுடைய அரமனையில், சந்திரனை அளாவுவன போன்ற உயரமுடைய மாடங்களும் கூடங்களும் சிகரங்களும் சூழ்ந்திருப்ப, அவற்றிடையே நிலா விளையாட்டுக்காகச் சமைக்கப் பட்டிருக்கும் சந்திரகாந்த மேடைகளின் மேலே இனிய தமிழ்ப் பேச்சுக்கும் இனிய தமிழ்ப் பாட்டுக்கும் நாட்டியங்களுக்கு மிடையே முத்தாளி வீசும் நகை புரிகின்ற மாதர்களுடனே முத்து முத்தாக உரையாடி முத்தமிட்டு முத்தமிட்டுக் குலாவிக் காதல் நெறியில் இன்புற்றிருந்தாலென்ன? அஃதன்று, யோக வழியிலே சென்று மூச்சை அடக்கிக் கொண்டு ஆயுதங்களைப் போல் வலிய நகங்களை யுடைய புலி, சிங்கம், கரடி முதலியன பதுங்கிக் கிடக்கும் பொந்துகளை யுடைய காட்டு மலை யுச்சியில் தானொரு பொந்தில் இருந்தா லென்ன? உள்ளங்கை நெல்லிக் கனி போலே விளங்குவ தோருண்மை கூறுகின்றோம்.
'சுலனமின்றி மனதிலே சாந்த நிலை பெற்றோர் உய்வார்.' இஃதன்றே ஜனகன் முதலியோரின் முடி

பாவது? எங்கும் நிறைவுற்றதாய்ப் பிரிக்கப் படாத மூலப் பொருளே! அறிவும், உண்மையும், மகிழ்ச்சியும் ஆகிய கடவுளே!'

இங்ஙனம், இல்லறத்தைப் பந்தத்துக்கு, அதாவது தீராத துக்கத்துக்குக் காரணமென்றும், துறவறம் ஒன்றே மோக்ஷத்துக்கு ஸாதன மென்றும் கூறும் வேறு சில துறவிகளைப் போலே சொல்லாமல், இரண்டும் ஒருங்கே மோக்ஷத்துக்கு ஸமமான ஸாதனங்கள் என்று சொல்லியதே நமக்குப் பெரிய ஆறுதலாயிற்று. ஸம்ஸார ஸுகங்கள் கூட துன்பங்களுக்கே வழி காட்டுகின்றன வென்றும், ஆகவே எல்லா வகையிலும் இஹ லோக வாழ்க்கை துன்பத்தைத் தவிர வேறில்லை யென்றும் சொல்லிச் சில பிற்காலத்துத் துறவிகள் 'வீட்டையும் பெண்டு பிள்ளைகளையும் துறந்து விட்ட மாத்திரத்திலேயே ஒருவன் இஹலோக வாழ்வைத் துறந்து விட்டான் ஆகிறான்' என்ற பிழைக் கருத்துக்கொண்டவர்களாய், ஊர் சோறும் சுற்றிக் கொண்டு, வீடு வாயில் சுற்றம் துணை இனம் எதும் இல்லாதவர்களாய்ப் பிச்சை யெடுத்து வயிறு வளர்க்கிறார்கள். இக் கூட்டத்தாரின் வாழ்க்கை மஹா பரிதாபகர மானது. இந்தக் கூட்டத்தாரில் இடை யிடையே சிற் சில இடங்களில் சிற் சில மஹான்கள் அளவற்ற கல்வி யுடையோராகவும், அளவற்ற தெய்வ பக்தியுடையோராகவும், வரம்பற்ற ஜீவ காருண்ய முடையோராகவும் தோன்றுகிறார்கள். மற்றும், அவர்களில் பெரும்பான்மையோருக்கு ஒரு விதமான முக்திக் கோட்டம் இருக்கத்

கான் செய்கிறது. எனிலும், இவர்களில் மிகப் பெரிய ஈறோன்கள்கூட, உலகத்தில் ஈாணுடன் எய்தற்குரியதாகிய பரிபூர்ண வாழ்க்கை வாழ்ந்தனர் என்று கூறுதற்கில்லை. வேதகாலத்தில் இந்தத் துறவு வழி ஒரிந்துக் களுக்குள்ளே கிடையாது. வேதகாலத்தில், ஸந்யாஸம் நமக்குள்ளே இருந்திருப்பதாக ஸ்வாமி விவேகாநந்தர் சொல்லியிருக்கிறார். வஸிஷ்டர் வாமதேவர் முதலிய வேத ரிஷிகள் அத்தனை பேரும் மனைம் புரிந்து கொண்டு மனைவி மக்களுடனேயே இன்புற்று வாழ்ந்தனர். புலன்களை அடக்கியாளும் பொருட்டாக, அக்காலத்து ரிஷிகள் பிரம்மசாரிகளாக இருந்து நெடுங் காலம் பலவகைக் கொடிய தவங்கள் செய்ததுண்டு. ஆனால், குறிப்பிட்ட காலம் வரை தவங்கள் செய்து முடித்துப் பின்பு இல்வாழ்க்கையுட் புகுதலே ஈறோரிஷிகளுக்குள் வழக்கமாக நடைபெற்று வந்தது. ஈறோ பாரதத்திலும் மற்றைப் பூர்வ புராணங்களிலும் வேத ரிஷிகளைப் பற்றிய கதைகளும் சரித்திரங்களும் ஒரே ஸித்தாந்தமாக வேத ரிஷிகளுக்குத் துறவுறம் என்ற விஷயமே இன்னதென்று தெரியாது என்ற என் வார்த்தையை நிலை நிறுத்துகின்றன. மேலும், ஸ்வாமி விவேகாநந்தர் வேதத்தின் பிற்சேர்க்கைகளாகிய உபநிஷத்துக்களையே முக்கியமாகப் பயின்றவர். இந்த உபநிஷத்துக்கள் வேதாந்தம் என்ற பெயர் படைத்தன; அதாவது வேதத்தின் நிச்சயம். இவை வேதரிஷிகளால் சமைக்கப்பட்டனவல்ல. பிற்காலத்தவர்களால் சமைக்கப்பட்டன. ஸம்ஹிதைகள் என்று மந்திரங்கள்

சொல்லப்படுவனவே உண்மையான வேதங்கள்.. அவையே ஹிந்து மதத்தின் வேர். அவையே வஸிஷ்ட வாமதேவாதி தேவ ரிஷிகளின் கொள்கை.. கலைக் காட்டுவன. உபநிஷத்துக்கள் மந்திரங்களுக்கு விரோதமல்ல; அவற்றுக்கு சாஸ்த்ர மூடிடு. அவற்றின் சிரோ பூஷணம். ஆனால் பச்சை வேதமென்பது மந்திரம் அல்லது ஸம்ஹிதை எனப்படும் பகுதியேயாம்..

இந்த மந்திரங்கள் அல்லது ஸம்ஹிதைகள் பழைய பழைய மிகப் பழைய ஸம்ஸ்க்ருத பாஷையில் எழுதப்பட்டிருக்கின்றன. அதாவது, வேதங்களின் ஸம்ஸ்க்ருதம் மதுரைச் சங்கத்துக்கு மூந்திய தமிழைப் போலவும் உபநிஷத்துக்களின் பாஷை.. சங்கத்துக்குப் பிந்திய தமிழைப் போலவும் இருக்கின்றன.

ஆனால், இந்த உவமானம் முற்றிலும் பொருந்தியதாகக் கூறலாகாது. இன்னும் அதை உள்ளபடி விளக்குமிடத்தே, ஸம்ஸ்க்ருத பாஷையிலுள்ள மற்றெல்லா நூல்களும் ஒரு பாஷை; வேதம் மாத்திரம்— அதாவது, ஸம்ஹிதை அல்லது மந்திரம் மாத்திரம்— தனியான பாஷையாக இருக்கிறது. இஃதொரு பெரு வியப்பு அன்றோ? வேத ஸம்ஸ்க்ருதம் வேறெந்த நூலிலும் கிடையாது. உபநிஷத்தில், ஒரு சில மிகச் சில பகுதிகளில், விசேஷமாக வேத மந்திரங்களை மீட்டு மூரைக்கு மிடத்தே, வேத பாஷையைக் காணலாம்.. மற்றபடி உபநிஷத்து முழுதும் பிற்காலத்து பாஷையிலேயே சமைந்திருக்கிறது.

இங்ஙனமிருக்கப் பிற்காலத்து ஆசார்யர்களிலே சிலர் வேதத்தைத் கர்மகாண்டம் என்றும் அதனுல் தாழ்ந்தபடியைச் சேர்ந்தென்றும் உபநிஷத்தே ஞானகாண்டம் என்றும் ஆகலால் அது வேதத்தைக் காட்டிலும் உயர்ந்த தென்றும் கருதுவாராயினர்.

இங்ஙனம் பிற்காலத்து ஆசார்யர்கள் நினைப்பதற் குண்டான காரணங்கள் பல. அவற்றுட் சிலவற்றை இங்கே தருகிறேன். முதலாவது காரணம், வேத பாஷை மிகவும் பழமைப் பட்டுப் போனபடியால் அதன் உண்மையான பொருளைக் கண்டு பிடித்தல் மிகவும் துர்லபமாய் விட்டது. நிருக்தம் என்ற வேதநிகண்டையும் பிராம்மணங்கள் என்று சொல்லப்படும் பகுதிகளிலே காணப்படும் வேத மந்திர விளக்கங்களையும் கற்ற பின்னரே, ஒருவாறு வேத மந்திரங்களின் பொருளையறிதல் ஸாத்யமாயிற்று. வேதம் பிரம்மாண்ட நூல். அதில் இத்தகைய ஆராய்ச்சி செய்வார் மிக மிகச் சிலரே யாவர். இப்போது வேதத்திற்கு விளக்குப் போலே நிற்கும் ஸாயணரென்ற வித்யாரண்ய சங்கராசார்யரின் பாஷ்யம் பிராம்மணங்களையும் நிருக்தத்தையுமே ஆதாரமாக வுடையது. பிராம்மணங்களில் பெரும்பாலும் கற்பனைக் கதைகளும் கற்பிதப் பொருள்களுமே கூறப்பட்டிருக்கின்றன. நிருக்தத்திலோ என்றால் பெரும்பாலும் வேத பதங்களுக்குச் சரியான பொருளே கூறப்பட்டிருக்கிறது. ஆனல், பல இடங்களில் அதன் தாதுநிச்சயங்கள் மிகவும் ஸம்சயத்துக்கு இடமாகவும் சில இடங்களில் அதன் பொருட் கோளே பிழைப்பட்டதாகவும் இருக்கிறது.

வேத மந்திரங்களுக்கு சரியான அர்த்தம் கண்டு பிடிக்க வேண்டுமென்று கற்காலத்தில் ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் அநேக பண்டிதர்கள் பிரமப் படுகிறார்கள். சில வருஷங்களுக்கு முன்னே காலஞ் சென்றவராகிய ஸ்வாமி தயாநந்த ஸரஸ்வதி வேதத்துக்குத் தாம் எப்போது மில்லாத புதிய அர்த்த மொன்று கற்பித்து அதற்கிணங்க 'ஆர்ய ஸமாஜம்' என்ற புது மதக் கொள்கை யொன்று ஸ்தாபித்தார்.

ஆனால், சிற்சில பதங்களுக்கு ஸாயணாசார்யர் சொல்லும் உரை ப்ரத்யக்ஷமாகப் பிழை யென்று தோன்றினும், பொதுப்படையாகச் சொல்லுமிடத்தே கற்காலத்து ஹிந்து வைதிகர்களால் அங்கீகாரம் செய்யப்பட்டிருக்கும் ஸாயண பாஷ்யமே பூர்வ வ்யாக்யானங்களுக்கு விரோதமில்லாமலும், தெளிவாகவும், உண்மையாகவும் அமைந்திருக்கிறது.

ஸாயண பாஷ்யமில்லா விட்டால், வேதம் ஹிந்து ஜாதிக்குப் பயன்படாமலே போயிருக்கும். சரியான ஸமயத்தில் ஸாயணர் வேதங்களுக்கு பாஷ்யம் எழுதி வைத்தார். எனிலும், ஸாயணாசார்யர்கூடத் தம்முடைய குருக்களைப் போலவே வேதம் கர்ம நூலென்று கருதிவிட்டார். அதனால், அது ஹிந்து மதத்துக்கு ஆதிவேர் என்பதை இந்த ஆசார்யர்களால் மறுக்க முடியாவிடினும், அதற்கு ஞான நெறியில் எவ்வித பிரமாணமுமில்லை யென்று அவர்கள் தவறுக எண்ணும்படி நேர்ந்துவிட்டது. எனென்றால், வேதத்தை கர்மங்களைப் போற்றுகிற நூலாகக் கருதிய

இவர்கள் கர்மங்களென்ற இடத்தே யாகங்களைக் கருதிக் கூறினர். அதாவது, யாகங்களுக்கு மாத்திரம் உபசாரமாகப்படும் நாலாக எண்ணி, கர்மங்கள் என்றால் யாகங்களெனப் பொருள் கொண்டு இவர்கள் வேதக்கை கர்ம காண்டம் என்றார்கள்.

வேடயாகங்களே பெரும்பாலும் பசு வதைகளும், குதிரைக் கொலைகளும், ஆட்டுக் கொலைகளும் முக்கிய மாகப் பாராட்டிய கொலைச் சடங்குகள். இவ்விதமான கொலைகளைச் செய்தல் மோக்ஷத்துக்கு வழி யென்ற போலிவைதிகரைப் பழி சூட்டி, அந்தக் கொலைச் சடங்குகளால் மனிதன் நரகத்துக்கான் போவானென் பதை நிலை நாட்டிய புத்த பகவானும் இவருடைய மதத்தைத் தழுவிய அரசர்களும் இந்தியாவில் யாகத் தொழிலுக்கு மிகவும் இகழ்ச்சி யேற்படுத்தி விட்டார் கள். அந்தக் காலத்தில், புத்த மதத்தை வென்று ஹிந்து தர்மத்தை நிலை நாட்ட, சங்கராசார்யர் அவ தரித்தார். அவர் புத்த மதக் கருத்துக்களைப் பெரும் பாலும் ருசி கண்டு சமைத்துத் தம்முடைய வேதாந் தத்துக்கு ஆதாரங்களாகச் செய்து கொண்டனர். ஷண்மத ஸ்தாபகாசார்யராய், சைவம் வைஷ்ணவம் முதலிய ஆறு கிளைகளையும் வேதாந்த மாகிய வேரையு முடைய ஹிந்து மதம் என்ற அற்புத விருக்ஷத்தை ஸ்ரீ சங்கராசார்யர் தமது அபாரமான ஞானத்திறமை யாலும் கல்வி வலிமையாலும் மீள உயிர்ப்பித்து அதற்கு அழியாத சக்தி ஏற்படுத்தி வைத்து விட்டுப் போனார். தம்மாலே வெட்டுண்ட புத்த மதம் என்ற

விருக்ஷத்தின் கிளைகள் பலவற்றை ஹிந்து தர்மமாகிய மரத்துக்கு நல்ல வளர்ச்சி யுண்டாகும்படி எருவாகச் செய்துபோட்டார். இங்ஙனம் புத்த மதக் கொள்கைகள் பலவற்றை ஹிந்து தர்மத்துக்கு ஆதாரமாகச் சேர்த்துக் கொண்டது பற்றியே, சங்கராசார்யரை அவருடைய எதிர்க்கக்ஷியார் பலர் 'ப்ரச்சன்ன பௌத்தர்' (மறைவுபட்ட பௌத்தர்) என்று சொன்னார்கள். எனிலும் அவர் ஹிந்து தர்மத்துக்குச் செய்த பேருபகாரத்துக்காக ஹிந்துக்களிலே பெரும்பாலோர் அவரைப் பரமசிவனுடைய அவதாரமாகக் கருதிப் போற்றினர்கள்.

பௌத்த மதமே துறவு நெறியை உலகத்தில் புகுத்திற்று. அதற்கு முன் அங்கங்கே சில சில முனிதர் துறவிகளாகவும் சில சில இடங்களில் சிலர் துறவிக் கூட்டத்தாராகவும் இருந்தனர்.

துறவிகளின் மடங்களை இத்தனை தாராளமாகவும் இத்தனை வலிமை யுடையனவாகவும் செய்ய வழி காட்டியது பௌத்த மதம். எங்கு பார்த்தாலும் இந்தியாவை அம் மதம் ஒரே ஸன்யாஸி வெள்ளமாகச் சமைத்து விட்டது. பாரத தேசத்தை அந்த மதம் ஒரு பெரிய மடமாக்கி வைத்து விட்டது. ராஜா, மந்திரி, குடி, படை—எல்லாம் மடத்துக்குச் சார்பிடங்கள். துறவிகளுக்கு சரியான போஜனம் முதலிய உபசாரங்கள் நடத்துவதே மனுஷ நாகரிகத்தின் உயர்ந்த லக்ஷணமாகக் கருதப் பட்டது. துறவிகள் தான் முக்கியமான ஜனங்கள்! மற்ற ஜனங்களெல்லாரும்

அவர்களுக்குப் பரிவாரம்! மடங் கான் பிரதானம்; ராஜ்யம் அதற்கு ஸாதனம்.

பாரத தேசத்தில் புத்த மதம் ஜீவகாருண்யம் ஸர்வ ஜன ஸௌக்யம் என்ற இரண்டு தர்மங்களையும் நெடுந்தூரம் ஊன்றும்படி செய்தது. ஆனால், உலக வாழ்க்கையாகிய ஜகத்தின் ஒளி போன்றவளாகிய பத்தினியைத் துறந்தவர்களே மோக்ஷார் என்று வைத்து, அவர்களுக்குக் கீழே மற்ற உலகத்தை அடக்கி வைத்து உலக மெல்லாம் பொய்மயம் என்றும் துக்கமயம் என்றும் பிதற்றிக் கொண்டு வாழ்நாள் கழிப்பதே ஞான நெறியாக ஏற்படுத்தி, மனுஷ நாக ரிகத்தை நாசஞ் செய்ய முயன்றதாகிய குற்றம் புத்த மதத்துக் குண்டு. அதை நல்ல வேளையாக இந்தியா உதறித் தள்ளிவிட்டது. பின்னிட்டு புத்த தர்மத்தின் வாய்ப்பட்ட பர்மா முதலிய தேசங்களிலும் புத்த மதம் இங்ஙனமே மடத்தை வரம்பு மீறி உயர்த்தி மனித நாகரிகத்தை அழித்துக்கொண்டுதான் வந்திருக் கிறது. பிற்காலத்தில் பௌத்த வழியைத் தழுவி பல மான மடஸ்தாபனங்கள் செய்த ரோமன் கத்தோலிக்க மதத்திலும் குருக்களுடைய சக்தி மிஞ்சிப்போய் மனித நாகரிகத்துக்குப் பேராபத்து விளையும் போலிருந்தது. அதை ஐரோப்பிய தேசத்தார்கள் பல புரட்சிகளாலும் பெருங் கலகங்களாலும் யுத்தங்களாலும் எதிர்த்து வென்றனர். அதுமுதல் ஐரோப்பாவில் மடாதிபதி களுக்கு ராஜ்யத்தின் மீதிருந்த செல்வாக்கும் அதிகா ரமும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருகின்றன. இது நிற்க.

ஹிந்து தர்மம் புத்த மதத்தை ஜயிக்கவேயில்லை யென்றும், பௌத்த மதமே ஹிந்து மதத்தை ஜயித்து விட்டதாகவும் சில மாஸங்களின் முன்பு காரைக்குடியில் ஒரு நண்பர் என்னிடம் தர்க்கித்தார். சரித்திரத்திலும், ப்ரத்யக்ஷத்திலும் ஜயமற்ற புத்த மத மழிந்து ஹிந்து மதம் வெற்றி பெற்று நிற்கும் செய்தி விளங்குகையில், பட்டப்பகலே யிரவென்று கூறுதல் போல் வெடி காரைக்குடி நண்பர் சொல்லிய பச்சைப் பொய்யை இங்கெடுத்துச் சொல்ல வந்த முகாந்தரம் யாதெனில்:—"அவர் சொல்லியது பச்சைப் பொய்யன்று. அதில் சிறிதளவு உண்மையும் கலந்திருக்கிறது. எங்ஙனமெனில், பௌத்த மார்க்கத்தைக் களைந்தெறிந்து மிஞ்சி நின்ற ஹிந்து மதம் பல அமிசங்களில் பௌத்த மதக் கருத்துக்களை முழுமையாகவும் பல அமிசங்களிற் சற்றே மாற்றியும் தன்னுள்ளே சேர்த்துக் கொண்டு விட்டது. ஆகவே, பௌத்த மதம் இந்நாட்டில் இருந்த இடந் தடம் தெரியாமல் மண்ணோடு மண்ணாய் மடிந்து போகவில்லை. அதன் கொள்கைகளில் பல ஹிந்து மதக் கொள்கைகளுடன் கலந்து இந்நாட்டில் வழங்கி வருகின்றன."

இந்தச் செய்தியையே அந்தக் காரைக்குடி நண்பர் மிகவும் அதிசயோக்தியாக மேற்கண்டவாறு பச்சைப் பொய் வடிவத்தில் கூறினர். புனர்ஜன்மக் கொள்கை, புலால்—இவை யிரண்டுமே பௌத்த மதத்திலிருந்து ஹிந்து மதத்துக்குள் நுழைந்த கொள்கைகளில் முக்கியமானவை யென்று கருதப்படு

கின்றன. ஆனால், இக்கொள்கைகள் பௌத்த மதத்தி
லிருந்து தான் ஹிந்து மதத்தில் புகுந்தன வென்று
கூறுவதற்கு பலமான ஆதாரங்களில்லை. புனர்ஜன்மக்
கொள்கை பூர்வ புராணங்களிலேயே இருந்தது.
பௌத்த மதம் அக் கொள்கையை, அறிஞர் கண்டு
நகைக்கத் தக்கபடியாக, வாம்பு மீறி வற்புறுத்திற்று.
பிற்கால ஹிந்து மதத்தில் அக் கொள்கை அளவுக்கு
மிஞ்சி, நிரர்த்தகமாக ஏறிப்போய் இப்போது ஹிந்து
நம்பிக்கையிலுள்ள குறைகளிலொன்றாக இயல்கிறது.
ஸாதாரணமாக ஒருவனுக்குத் தலை நோவு வந்தாலுங்
கூட, அதற்குக் காரணம் முதல் நாள் பசியில்லாமல்
உண்டதோ, அளவு மீறித் தூக்கம் விழித்ததோ, மிகக்
குளிர்ந்த அல்லது மிக அசுத்தமான நீரில் ஸ்நானம்
செய்ததோ என்பதை ஆராயு முன்பாகவே, அது
பூர்வ ஜன்மத்தின் கர்மப் பயனென்று ஹிந்துக்களிலே
பாமரர் கருதக்கூடிய நிலைமை வந்து விட்டது.
உலகத்து வியாபார நிலைமையையும் பொருள் வழங்கும்
முறைகளையும் மனித தந்திரத்தால் மாற்றி விடலாம்
என்பதும், அங்ஙனம் மாற்று மிடத்தே செல்வ மிகுதி
யாலும் செல்வக் குறைவாலும் மனிதர்களுக்குள்ளே
ஏற்படும் கஷ்டங்களையும் அவமானங்களையும் பகைகளை
யும் மரணங்களையும் நீக்கி விடக் கூடும் என்பதும் தற்
காலத்து ஹிந்துக்களிலே பலருக்குத் தோன்றவே
இடமில்லை. பிறர் சொல்லிய போதிலும் அது அவர்
களுக்கு அர்த்தமாவது சிரமம். எனென்றால், பணவிஷ
யத்தில் ஏற்பட்ட பயங்கரமான பேதங்களையும் தார

கம்மியங்களையும் பார பக்ஷங்களையுங் கண்டு, அதற்கு நிவாரணம் தேட வழி தெரியாத இடத்திலே தான், பெரும்பாலும் இந்தப் பூர்வ ஜன்ம கர்ம விஷயம் விசேஷமாக ப்ரஸ்தாபத்துக்கு வருகிறது. அற்பாயுள், நீண்ட ஆயுள், நோய், நோயின்மை, அழகு, அழகின்மை, பாடத் தெரிதல், அது தெரியாமை, படிப்புத் தெரிதல், அது தெரியாமை—முதலிய எல்லா பேதங்களுக்கும் பூர்வ ஜன்மத்தின் புண்ய பாவச் செயல்களையே முகாந்தரமாகக் காட்டினர்க ளெனினும், பண விஷயமான வேறுபாடுகளே இவை யெல்லாவற்றைக் காட்டிலும் மனிதர்களுக்கு உள்ளக் கொதிப்பையும் நம்பிக்கைக் கேட்டையும் விளைத்து, அவர்களை இந்த ஜன்மத்தின் தக்கங்களுக்குப் பூர்வ ஜன்மத்திலே காரணந் தேடுவதும் அடுத்த ஜன்மத்தில் பரிஹாரந் தேடுவதுமாகிய விசாரத்தொழிலிலே தள்ளினை.

எனவே, இந்தப் பூர்வ ஜன்ம ஸித்தாந்தத்தை பௌத்த மதம் நமது தேசத்தில் ஊர்ஜிதப் படுத்தியது பற்றி நாம் அதற்கு அதிக நன்றி செலுத்த இடமில்லை.

பௌத்த மதத்தால் நாம் அடைந்த நன்மைகளிலே உண்மையான நன்மை ஒன்றுதான். அதாவது, விக்ரஹாராதனையை பௌத்த மதம் ஊர்ஜிதப் படுத்திற்று. புதிதாக உண்டாக்கவில்லை. ஏற்கனவேயிருந்த வழக்கத்தை மிகவும் விஸ்தாரமாக்கி ஊர்ஜிதப் படுத்திற்று. பௌத்தர்கள் மனிதருக் கேற்படுத்திய

சிலைகளை நம்மவர் தம்முடைய அற்புத ஞான சக்தியின் விரிவாலும் கற்பனை சக்தியின் தெளிவாலும் தேவர் களுக்குச் சமைத்துக் கொண்டனர். தேவர்களைச் சிலைகளில் வைத்து வணங்குதல் முக்திக்கு மறுத்தான ஸாதனங்களி லொன்றும். ஆனால், உண்மையான பக்தி யுடன் வணங்க வேண்டும்.

இனி, புத்த மதம் இழைத்த பெருந் தீங்கு யாதெனிலோ, இடைக்காலத்து மாயாவாதத்தைதப்பும்ளை எழுப்பிவிட்டது. உபநிஷத்துக்களிலும் வேதத்திலும் 'மாயா'என்றசொல் பராசக்தியைக் குறிப்பது. இடைக் காலத்தில் மாயை பொய் யென்றதொரு வாதம் உண்டாயிற்று. இதனால், 'ஜகத் பொய்; தேவர்கள் பொய்; ஸூர்ய நக்ஷத்ராதிகள் பொய்; பஞ்ச பூதம் பொய்; பஞ்சேந்திரியம் பொய்; மனம் பொய்; சைதன்யம் மாத்திரம் மெய்; ஆதலால், இந்த உலகத்துக் கடமை களெல்லாம் எறிந்துவிடத் தக்கன. இதன் இன்பங்க ளெல்லாம் துறந்துவிடத் தக்கன' என்றதொரு வாதம் எழுந்தது. 'இவ்வுலக இன்பங்களெல்லாம் அசாச வதம்; துன்பங்கள் சாசுவதம். இத் தகைய உலகத் தில் நாம் எந்த இன்பங்களையுந் தேடப் புகுதல் மடமை யாகும். எனவே, எந்தக் கடமைகளையுஞ் செய்யப் புகுதல் வீண் சிரமமாகும்' என்ற கூக்குரல் எற்பட்டது.

ஆனால், இவர்கள் எல்லா இன்பங்களையுந் துறந்து விட்டதாக நடிக்கிறார்களே யன்றி, இவர்கள் அங்ஙு னம் உண்மையிலே துறக்கவில்லை. இவ்வுலகத்தில்

ஜீவர்கள் எல்லா இன்பங்களையுந் துறப்பது ஸாத்யமு மில்லை. கடமைகளைத் துறந்துவிட்டுச் சோம்பேறி களாகத் திரிதல் ஸாத்யம்; அது மிக ஸுலபமுங்கூட. இந்தச் சோம்பேறித்தனத்தை ஒரு பெரிய ஸுகமாகக் கருதியே அனேகர் துறவு பூணுகிறார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது.

இவர்கள் கடமைகளைத் துறந்தனரே யன்றி இன் பங்களைத் துறக்கவில்லை. உணவின்பத்தைத் துறந் துவிட்டார்களா? சோறில்லாவிட்டால் உயிர் போய் விடுமே என்றால், அப்போது நீங்கள் உயிரைக் காப் பாற்றிக் கொள்ளும் பொருட்டுத் தொழில் செய்து ஜீவிக்க வேண்டும். ஆடை யின்பத்தை இவர்கள் துறக்க வில்லை. ஸ்நான வின்பத்தைத் துறக்கவில்லை. தூக்க வின்பத்தைத் துறக்கவில்லை. கல்வி யின்பத் தைத் துறக்கவில்லை. புகழின்பத்தைத் துறக்கவில்லை. உயி ரின்பத்தைத் துறக்கவில்லை. வா தின்பத்தைத் துறக்கவில்லை. அவர்களில் முக்யஸ்தர்களாகிய மடா திபதிகள் பண வின்பத்தையுந் துறக்கவில்லை. இவர் களுடைய போலி வேதாந்தத்தை அழிக்கும் பொருட் டாகவே பகவத்கீதை எழுதப்பட்டது.

உலகமெல்லாம் கடவுள்மயம் என்ற உண்மை யான வேதாந்தத்தை கீதை ஆதாரமாக உடையது. மாயை பொய் யில்லை. பொய் தோன்றுது. பின் மாறுகிறதே யெனில், மாறுதல் மாயையின் இயற்கை. மாயை பொய் யில்லை. அது கடவுளின் திருமேனி.

இங்கு தீமைகள் வென்றொழிக்கற் குரியன. நன்மைகள் செய்கற்கும் எய்துகற்கும் உரியன. சரணாகதியால்—கடவுளிடம் தீராத மாறாத பக்தியால்—யோகத்தை எய்துவீர்கள். எல்லா ஜீவர்களையும் ஸமமாகக் கருதக் கடவீர்கள். அதனால், விடுதலை யடைவீர்கள். ஸத்ய விரதத்தால் ஆனந்தத்தை அடைவீர்கள். இல்லறத் தூய்மையால் ஈசத் தன்மை அடைவீர்கள்.

இந்த மதத்தான உண்மையையே கீதை உபதேசிக்கிறது.

மேற்கோள் விளக்கம்.

கீழையினின்று மேற்கோள்.

பக்கம்.	வரி.	அத்யாயம்.	சுலோகம்.
3	6—10	3	5
,,	18—21	2	47
,,	22—25	6	1
4	21—22	2	48
5	7	2	48
5	கடைசி	6	29
6	1—2		
7	13—14	2	17
12	16	4	34
,,	18—21	16	21
18	கடைசி	4	37
19	20	4	34
26	3—7	6	6
33	20—26	3	22
34	1—7	3	23

வேறு மேற்கோள்.

பக்கம்.	வரி.	ஆகரம்.
1	17—18	மத்தேயு 18, 3.
13	5—8	திருவாய்மொழி 5, 2, 1.

பக்கம்.	வரி.	ஆகரம்.
13	13—16	பாரதி. தோத்திரப். மகாசக்தி வெண்பா 3.
15	5—6	திருவேங்கடமாலை 65.
15	13—16	நமச்சிவாயத் திருப்பதிகம் : தேவாரம் 4, 11, 1.
17	4—11	பாரதி அறுபத்தாறு 15.
33	13—15	கீதாஞ்ஜலி 11.
35	6—7	வெற்றிவேற்கை 25, 3.
36	1—5	பட்டினத்துப். திருவேகம்ப மாலை 1.
37	6—7	தாயு. பராபரக்கண்ணி 211.
38	8	கொன்றைவேந்தன் 3.
38 39	16—25 1—6	தாயு. சச்சிதானந்தசிவம் 6.

ஓம் சக்தி.

சந்திரிகையின் கதை.

முதல் அத்யாயம்.

பூகம்பம்.

பொதியை மலைச் சாரலில் வேளாண்குடி என்றொரு அழகான கிராமம் இருக்கிறது. அதற்கருகே, ஒரு சிறிய நதி ஓடுகிறது. நான்கு திசைகளையும் நோக்கினால், நீல மலைச் சிகரங்களும் குன்றுகளும் தோன்றும். ஊரைரங்கும் தோப்புக்கள். எனவே, காலையில் எழுந்தால் மாலைவரை எப்போதும் ரமணீயமான பக்ஷிகளின் ஒலிகள் கேட்டுக் கொண்டிருக்கும்.

இந்த ஊரில் மற்ற வீதிகளினின்றும் ஒதுக்கமாக, மேற்றிசையில், நதிக்கருகே ஓர் அக்ரஹாரம் அதாவது பிராமணர் வீதி, இருந்தது. அந்த அக்ரஹாரத்தில் குழந்தைகளெல்லாம் எப்போதும் பக்ஷிகளின் நாதங்களுக்கிடையே வளர்ந்துபற்றியோ, வேறு எந்தக் காரணத்தாலோ, மிகவும் இனிய குரலுடையனவாயிருந்தன. அக் குழந்தைகள்—விசேஷமாகப் பெண் குழந்தைகள்—பேசும்போது, ஸாதாரண

மாக நம்மைப் போலவே, மனுஷக் தமிழ் பாஷையே பேசுமெனினும், அந்த பாஷையைக் குயில்கள் போலவும் கிளிகள் போலவும் நாகணவாய்ப் புட்கள் போலவும் அற்புதமான குரலில் பேசின.

அந்த அக்ரஹாரத்தின் மேலோரத்திலே கிழக்கைப் பார்த்த ஒரு கிருஷ்ணன் கோயில் இருந்தது. கோயிலுக்கெதிரே புல் ஏராளமாக வளர்ந்து கிடக்கும். அங்கு பசுக்களும் ஒரு சில கழுதைகளும் மேய்ந்துகொண்டிருக்கும். அல்லது, சில பசுக்கள் கிருஷ்ணன் ஸந்நிதிக்கெதிரே படுத்துக்கொண்டு ஸ்வாமியை நோக்கி ஜபம் பண்ணிக் கொண்டிருப்பதுபோல் அசைபோட்டுக் கொண்டிருக்கும். அவற்றின்மீது காக்கைகள் வந்து உண்ணிகளைக் கொத்தி இன்புறுத்தும். சில ஸமயங்களில் கண்ணுறைத்தைக் கொத்துவது போல் விளையாடி மாட்டுக்குப் பொழுது போகச் செய்துகொண்டிருக்கும். இதையெல்லாம் மரக் கிளைகளின் மீதுள்ள பக்ஷிகள் பார்த்து வியப்புரை கூறிக் கொண்டிருக்கும்.

அன்புக்கும் அமைதிக்கும் சாந்திக்கும் அழுகுக்கும் இலக்கியமாகத் திகழ்ந்தது அவ் வேளாண்குடி யூர் அக்ரஹாரம். அங்கு, பெண்மக்கள் எல்லாரும் பதிவ்ரதாஸ்திரிகள். ஆண்மக்கள் மிகவும் நல்ல குணமுடையோர். ஆனால் பெரும்பாலும் பரம ஏழைகள். பூர்வீக சொத்து, நிலம், தோட்டம் முதலியன—எல்லோருக்கும் சிறிது சிறிதுண்டு. ஆனால், அதிலிருந்து வரும் வரும்படி வெறுமே போஜனத்துக்குக் கூடக் காணாது.

இதில் வேஷ்டிகள், புடவைகள், ரவிக்கைகள், பாவாடைகள், குடுமிக் கலியாணம், பூணூல் கலியாணம், விவாகங்கள், ருது ஸ்நானங்கள், ருது சாந்திகள், சீமந்தங்கள், பல பல பண்டிகைகள், உற்சவங்கள், விழாக்கள் என்பன ஓயாமல் நிகழுமாதலால், அவ்வூர் கிராஸ்தர்கள், மேன்மேலும் தம் நில முதலியன சுருங்கவும் வறுமை மேன்மேலும் வளரவும், எக்கம் பிடித்து வாழ்ந்து வந்தனர். ஆனல், வயது முதிர்ந்தோரிடையே இத்தனை எக்கமும் மனக்குறைவும் குடிகொண்டிருந்தன என்ற செய்தி அவ்வூர்க் குழந்தைகளுக்குத் தெரியாது; பக்ஷிகளுக்குந் தெரியாது, கோயிலெதிரே எப்போதும் செழுமையாக வளர்ந்த புற்றரைகளில் மேய்ந்துகொண்டிருந்த பசுக்களுக்கும், கழுதைகளுக்கும் தெரியாது. இவை எப்போதும் மகிழ்ச்சியிலும், ஆரவாரத்திலும், பாட்டிலும், ஆனந்தக் களியிலும் மூழ்கிக் கிடந்தன.

இந்த அக்ரஹாரத்தில் மற்றெல்லா பிராமணர்களைக் காட்டிலும் அதிக ஏழையான மஹாலிங்கையர் என்பவர் ஒருவர் இருந்தார். அவருடைய குடும்பம் மிகப் பெரிது. வீடு மிகச் சிறிது. அவருடைய தந்தைதாய் தந்தையர் இருவர்; விதவையான தங்கை ஒருத்தி; சுமார் மூப்பது வயதுள்ள மனைவி ஒருத்தி; அவளுக்கு ஐந்து பெண் குழந்தைகள். ஆறுவது ப்ரஸவம் நெருங்கிய ஸமயம்.

இத்தனைபேருக்கும் ஆஹாரம் வேண்டுமே? மஹாலிங்கையருக்கு பூர்வ சொத்துக் கிடையாது.

இளமையும், ஊக்கமும், எப்படியேனும் பணம் ஸம்பாதிக்கலா மென்ற நம்பிக்கையும் அவரை விட்டுப் பிரிந்து நெடுங் காலமாய்விட்டது. அவருக்கு சுமார் நாற்பது வயதுக்கு மேலாக வில்லை. அதற்குள்ளே குழந்தைகளின் தொகை வலியாலும், மனைவியின் வாய் வலியாலும், தாய் தந்தையரின் நோய் வலியாலும், விதவைத் தங்கையின் இளமை வலியாலும் கொடு மறுமாவிங்கையர் மனத் துயர் பெருகித் தலை பயிரெல்லாம் அன்னத் தூவிபோல் நரைத்துக் கூனிக் குறுகி மிகவும் மெலிந்து, கன்னங்கள் ஒட்டிக் கண்கள் குழி வீழ்ந்து முகம் சுருங்கித் திரை கொண்டு, இளமையிலே பாராட்டிய சிங்கார ரஸமிருதியால் போக நோய் கொண்டு, முகத்திலும் முதுகிலும் தோட்களிலும் பரந்த மேகப்படைகளுடையவராய் விளங்கினர்.

இப்படியிருக்கையில் ஒரு மார்கழி மாதத்திரவில், வானம் மைபோல் இருண்டிருந்தது. நக்ஷத்ரங்களெவையும் கண்ணுக்குப் புலப்படவில்லை. கிராமத்தாரெல்லாரும் தத் தம் வீடுகளுக்குள்ளே பதுங்கிக் கிடந்தார்கள். வெளியே பெருமழையும் சூறைக் காற்றும் மிகவும் உக்ரமாக வீசத் தொடங்கின. இரண்டு சாமத்துக்கு ஒருமுறை, உலகம் தகர்ந்து விடச் செய்வனபோன்ற இடியோசைகள் செவிப்பட்டன. மரங்கள் ஒடிந்து விழும் ஒலி கேட்டது. தோப்புகளெல்லாம் சூறைபோகும் ஒலி பிறந்தது. பக்கத்துக் குன்றுகள் ஒன்றுக்கொன்று மோதிச் சிதறுவனபோன்ற ஓசை தோன்றிற்று.

அக்ரஹாரத்தில் தத் தம் வீடுகளுக்குள்ளே பதுங்கி யிருந்த ஜனங்கள் இன்றுடன் உலகம் முடிந்து போய் விட்டது என்று தம் மனதில் நிச்சயப்படுத்திக் கொண்டார்கள். குழந்தைக ளெல்லாம் பயபீதியால் கோ கோ என்று அலறின. ஸாதகர்கள் புலம்பினர். ஆண்மக்கள் விம்மினர். சூறைக்காற்றின் ஆர்ப்பு மிகு திப்பட்டது.

இப்படியிருக்கையில் பூகம்பம் தொடங்கிற்று. அந்த அக்ரஹாரத்திலுள்ள வீடுகளெல்லாம் பழைய வீடுகள். அத்தனை வீடுகளும் சிதறிப் போயின. அத் தனை ஜனங்களும் மடிந்து போயினர்.

மஹாலிங்கையர் வீட்டு வாயிற் புறத்திலிருந்த குச்சிலொன்று மாத்திரம் விழுவில்லை. வீட்டு இடிபாடி யில் கூடியிருந்த கிழுவர், கிழவி, மஹாலிங்கையர், அவருடைய ஐந்து பெண் குழந்தைகள்—எல்லார் மீதும் வீடு விழுந்து, அவர்களத்தனை பேரும் பிணங்களாகக் கிடந் தனர். வாயிற் குச்சிலில் பிரஸவ வேதனையிலிருந்த ஸஹாலிங்கையருடைய மனைவியும் அவளுக்குத் துணை யாக அவருடைய விதவைத் தங்கையு மிருந்தனர்.

இரவு சுமார் ஏழு மணிக்குத் தொடங்கிய சூறைக் காற்றும் மழையும், காலை நான்கு மணி சுமாருக்கு, பூகம்பத்துடன் முடிவுபெற்றன. அரை மணி நேரத் துக்கெல்லாம் உலகம் அமைதி பெற்று விட்டது. மறு நாள் பொழுது விடிந்தது. விதவைத் தங்கை—அவள் பெயர் விசாலாக்ஷி—வெளியே வந்து பார்த்தாள்.

எல்லா வீடுகளும் விழுந்திருந்தன. எங்கும் மனித உடல்களும், மிருக பக்ஷிகளின் உடம்புகளும் பிரேதங்களாக விழுந்து கிடந்தன. முழுக்காட்சியும் அவள் பார்க்க சேரமில்லை. காற்றினாலும் மழையினாலும் மோதுண்டு வீதியில் வந்து கிடந்த பிரேதங்களை மாத்திரமே அவள் கண்டாள். இடிந்த வீடுகளுக்குள்ளே செத்துக்கிடக்கும் ஜனங்களை அவள் காணவில்லை. எனிலும், தன் வீட்டில் எல்லாரும் செத்தது அவளுக்குத் தெரியுமாதலால், மற்ற வீடுகளிலும் அப்படியே நடந்திருக்க வேண்டுமென்றும் அதுகொண்டே தெருவில் ஆட்களைக் காணவில்லை யென்றும் அவள் ஊஹித்துக் கொண்டாள். அப்பொழுது மீளவும் அவளுடைய மனதில், சென்ற பயங்கரமான இரவில் நிகழ்ந்த பயங்கரமான செய்திகள் நினைப்புற லாயின. பூகம்பம் தோன்றினவுடனே மஹாவிங்கையருடைய பிதாவாகிய கிழவர், "ஐயையோ, பூமி ஆடுகிறதே! நாமெல்லோரும் வாயிற் புறத்திலுள்ள குச்சிலுக்குப் போய் விடுவோம். அதுதான் இவ் வீட்டில் சற்றே உறுதியான இடம். என்னை அங்கே கொண்டு விடுங்கள்" என்று அலறினர். அந்தச் சத்தம் மாத்திரம் விசாலாக்ஷியின் செவியிற் பட்டது. அப்புறம் நடந்த பேச்சொன்றும் அவள் செவியிற் படவில்லை. வாயிற் குச்சிலுக்குள் வெளித் திண்ணை வழியாகத் தான் புகலாம். வீட்டுக்குள் னிருந்தபடியே அங்கு வர வழியில்லை. எனிலும், ஒரு சாளரப் பொந்து வழியாக அந்தக் கிழவருடைய பேரோலம் மாத்திரம் புயற் காற்றொலியையும் மிஞ்சி அவளுடைய செவியிற் பட்டது.

ஆனால், 'அங்ஙனம் அவர்கள் குச்சிலுக்குள் வருவது மாத்திரம் ஸாத்தியமில்லை' யென்பதை அவள் உடனே ஊஹித்துக் கொண்டாள். எனெனில், உள்ளேயிருந்தவர்கள் வீட்டு வாயிற் கதவைத் திறந்தன்றோ, திண்ணையிலேறி அதன் வழியாகக் குச்சிலுக்குள் வரவேண்டும்? வாயிற் கதவைத் திறந்த மாத்திரத்திலே ஸப்த மேகங்களும், ஊழிக் காற்றும் வீட்டுக்குள் புகுந்து விடுமன்றோ? ஆகலால், அவர்கள் வெளியேற வில்லையென்று நிஜைத்துக் கொண்டாள். ஓரிரண்டு கூஷணங்களில் திடீரென்று உள் வீடெல்லாம் இடிந்து விழுந்த ஓலியும், அங்கிருந்தோர் எல்லாம் கூடி யலறிய பேரொலியும், அவள் செவியிற் பட்டன. எல்லோரும் செத்தார்கள் என்று நிச்சயித்துக் கொண்டாள். ஆனிருந்த குச்சிலும் விழு மென்று அவள் மிகவும் எதிர் பார்த்தாள். அது விழுவில்லை. அதற்குள்ளே பூகம்பம் நின்றுபோய் விட்டது. சிறிது நேரத்துக் கெல்லாம் புயற்காற்றும் மழையும் அடங்கிப் போயின.

இச் செய்திகளை யெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டு விசாலாக்ஷி தன்னைச் சூழ இடிந்து கிடக்கும் வீடுகளையும் ஒடிந்து கிடக்கும் மரங்களையும் பார்த்து நிற்கையிலே, குச்சிலுக்குள் ளிருந்து "குவா! குவா!" என்ற சத்தம் வந்தது. உள்ளே போய்ப் பார்த்தாள். அண்ணன் மனைவியாகிய கோமதிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்து கிடந்தது. விசாலாக்ஷி அதற்கு வேண்டிய சிகிச்சைகளெல்லாம் செய்து கொண்டிருக்கையில், கோமதிக்கு மரணாவஸ்தை

நேர்ந்து விட்டது. அவள் சாகும்போது :—" விசா லாகூ! விசாலாகூ! நான் இரண்டு நிமிஷங்களுக்கு மேல் உயிருடனிருக்க மாட்டேன். என் பிராணன் போகுமுன்னர் உன்னிடம் சில வார்த்தைகள் சொல்லிவிட்டுப் போகிறேன். அதை உன் பிராணன் உள்ளவரை மறந்து போகாதே! முதலாவது, நீ விவாகம் செய்து கொள். விதவா விவாகம் செய்யத் தக்கது. ஆண்களும் பெண்களும் ஒருங்கே யமனுக் குக் கீழ்ப்பட்டிருக்கிறார்கள். ஆதலால், ஆண்களுக் குப் பெண்கள் அடிமைகளாய், ஆண்களுக்குப் பெண் கள் அஞ்சி ஜீவனுள்ளவரை வருந்தி வருந்தி மடிய வேண்டிய அவசியமில்லை. ஆதலால், நீ ஆண்மக்கள் எழுதி வைத்திருக்கும் நீசத்தனமான சுயநல சாஸ்த் ரத்தைத் தூக்கி எரியடுப்பிலே போட்டுவிட்டு, தைர்யத்துடன் சென்னப்பட்டணத்துக்குப் போய் அங்கு கைம்பெண் விவாகத்துக்கு உதவி செய்யும் ஸபையாரைக் கண்டுபிடித்து, அவர்கள் மூலமாக நல்ல மாப்பிள்ளையைத் தேடி வாழ்க்கைப்படு. இரண் டாவது, நீயுள்ளவரை என் குழந்தையைக் காப் பாற்று. அதற்கு சந்திரிகை என்று பெயர் வை." என்றாள்.

விசாலாகூி 'சரி' என்றாள். கோமதியின் உயிர் பரலோகஞ் சென்றுவிட்டது.

இரண்டாம் அத்யாயம்.

விசாலாக்ஷிக்கு ஜீ. சுப்பிரமணிய அய்யர் செய்த உதவி.

சென்ற அத்யாயத்தில் கூறிய செய்திகள் நிகழ்ந்து சரியாக மூன்று வருஷங்களாயின. 1904-ஆம் வருஷத்தின் இறுதி நடைபெற்றது. அப்போது சென்னைப் பட்டணத்தில் 'சுதேசமித்திரன்' பத்திராதிபராகிய ஜீ. சுப்பிரமணிய அய்யர் சில தினங்களுக்கப்பால் பம்பாயில் நடைபெறப்போகிற 'காங்க்ரஸ்' என்ற பாரத ஜன ஸபைக்கொரு பிரதிநிதியாகச் செல்ல வேண்டுமென்றகருத்துடன் யாத்திரைக்கு வேண்டிய உடுப்புக்கள் தின்பண்டங்கள் முதலியன தயார் செய்து கொண்டிருந்தார். அக் காலத்தில் திருவல்லிக்கேணி வீராகவ முதலித் தெருவில் ஜீ. சுப்பிரமணிய அய்யர் மஹா கீர்த்திபெற்று விளங்கினர். அவருக்குக் கொடிய ரோக மொன்றினால் உடற்பெல்லாம் முகமெல்லாம் சிதைந்து முள் சிரங்குகள் புறப்பட்டிருந்தன. இருந்தாலும் நிகரற்ற ஸ்ரீ தைர்யத்துடன் அவர் தேசப் பொதுக் காரியங்களை நடத்திவந்தார். மேற்கூறிய 1904 டிஸம்பர் மாஸத்திடையே ஒரு நாட் காலையில் அவர் தம் வீட்டு மேடையின்மேல் தம்முடைய விஸ்தாரமான புஸ்தகசாலையி னருகே ஒரு சாய் நாற்காலியின்மீது சாய்ந்துகொண்டு பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தார்.

அவர் முன்னே ஒரு ஸுமங்கலிப் பெண்—அவருடைய இளைய மகள்—ஒரு பிரமாண்டமான ஊறுகாய்ப் பரணியைக் கொண்டு வைத்தாள்.

"இதில் என்னம்மா, வைத்திருக்கிறது?" என்று அய்யர் கேட்டார்.

"நெய்யிலே பொரித்த எலுமிச்சங்காய் ஊறுகாய்; நல்ல காரம் போட்டது" என்று மகள் சொன்னாள்.

"இதையெல்லாம் எப்படிச் சுமந்துகொண்டு போகப் போகிறோம்? அந்த வேலைக்காரனே பெரிய குருட்டுமுண்டம்" என்று அய்யர் முணுமுணுத்தார்.

இதற்குள், மேடையைவிட்டுக் கீழே இறங்கிச் சென்ற மகள் திரும்பிவந்து, "அப்பா, வாயிலிலே ஒரு பிராமண விதவை ஒரு சிறு குழந்தையுடன் வந்து நிற்கிறாள். ஏதோ அவஸர காரிய நிமித்தமாக உம்மை உடனே பார்க்க வேண்டுமென்று சொல்லுகிறாள்" என்றாள்.

"அவளுக்கு எத்தனை வயதிருக்கும்?" என்று ஜீ. சுப்ரமணிய அய்யர் கேட்டார்.

"இருபது வயதிருக்கலாமென்று தோன்றுகிறது" என்று மகள் சொன்னாள்.

"சரி, ஒரு நாற்காலியைக் கொணர்ந்து என் எதிரே போடு. அந்தப் பெண்ணை வரச் சொல்" என்று அய்யர் சொன்னார்.

மகள் அங்ஙனமே ஒரு நாற்காலி எடுத்துக் கொண்டுவந்து அவரெதிரே போட்டாள். அப்பால்

கீழே சென்றாள். சில நிமிஷங்களுக்குள்ளே, நம் முடைய விசாலாக்ஷி குழந்தை சந்திரிகையுடன் அந்த மேடைக்கு வந்து ஜீ. சுப்பிரமணிய அய்யருக்கெதிரே போட்டிருந்த நாற்காலியின்மேல் உட்கார்ந்தாள்.

எந்த விசாலாக்ஷி? சென்ற அத்யாயத்தில் பூகம்பத்திலே தப்பிப் பிழைத்த விசாலாக்ஷி. அங்ஙனமே பூகம்பத்தில் பிழைத்த சந்திரிகை என்ற குழந்தையுடன் வந்து, ஜீ. சுப்பிரமணிய அய்யர் முடியைச் சுப்பால் உணர்த்திய குறிப்பின்படி, அவரெதிரே ஆஸனத்தில் அமர்ந்தாள்.

"எந்த ஊரம்மா?" என்று அய்யர் கேட்டார்.

"பொதியை மலைச் சாரலில் குற்றாலத்துக்கருகே வேளாண்குடி என்ற கிராமம்" என்று விசாலாக்ஷி சொன்னாள்.

"ஓஹோஹோ! மூன்று வருஷங்களுக்கு முன்பு எறக்குறைய இதே மாஸத்தில் வேடி கிராமத்தில், சூத்திரத்தெருக்களெல்லாம் தப்பிப் பிழைக்க, அக்ரஹாரம் மாத்திரம் பூகம்பத்தில் அழிந்து போனதாகக் கேள்விப் பட்டேன்; அதே வேளாண்குடி தானே?" என்று அய்யர் கேட்டார்.

விசாலாக்ஷி "ஆம்" என்றாள்.

"நீ மிகவும் யௌவனமுடையவளாகவும் அழகுடையவளாகவும் இருக்கிறாயே! உனக்கு இந்தக் கைம்பெண் நிலைமை நேர்ந்து எத்தனை காலமாயிற்று?" என்று அய்யர் கேட்டார்.

"பதினைந்து வருஷங்களாயின" என்று விசாலாக்ஷி சொன்னாள்.

"உனக்கு இப்போது எத்தனை வயது?" என்று அய்யர் கேட்டார்.

"இருபத்தைந்து" என்று விசாலாக்ஷி சொன்னாள்.

"பத்து வயதில் கன்னிப் பருவத்தில் விதவையாய் விட்டாயா?" என்று அய்யர் கேட்டார்.

"ஆம்" என்று விசாலாக்ஷி சொன்னாள்.

அதைக் கேட்டவுடனே தமது சொந்த மகளாருக்கு இளம் பிராயத்திலே விதவையானதும், பிறகு தாம் அவளுக்கு பம்பாயிலே சென்று தென்னாட்டு வைதிக பிராமணரொருவருக்கு விவாகம் செய்து கொடுத்தும், அம் மகள் தன் கணவனுடன் நீடு சுகித்து வாழும் பாக்கியம் பெறுமல் மிக விரைவிலே மடிந்ததும், தம்முடைய தர்ம பத்தினி உயிர் துறந்ததும்— ஆகிய இச் செய்திகளெல்லாம் ஜீ. சுப்பிரமணிய அய்யரின் ஞாபகத்துக்கு வர, அப்போது, சிங்கத்துக்கும் இடிக்கும் அஞ்சாத அவருடைய வீர நெஞ்சம் இளகி, அவர் பச்சைக் குழந்தைபோல் விம்மி விம்மி அழத் தலைப்பட்டார். சில க்ஷணங்களுக்குள்ளே தம்மைத் தாம் தேற்றிக்கொண்டு, ஜீ. சுப்பிரமணிய அய்யர் விசாலாக்ஷியை நோக்கி, "நீ இங்கே வந்ததின் நோக்கம் யாது?" என்று கேட்டார்.

"என்னைத் தக்க கணவனொருவனுக்கு வாழ்க்கைப் படுத்திக் கொடுக்கவேண்டும். என் கையில் ஒரு

கொழுந்துக் காசுகூடக் கிடையாது. ஆகலால், என் கணவன் பணமுடையவனில்லாவிட்டாலும் நல்ல படிப்பும், மாலைந்தோறும் கொஞ்சம் பொருள் ஈம்பாதிக்கும் திறமும் உடையவனாக இருக்க வேண்டும். இந்தக் குழந்தையும் என்னைநோன்கான் இருக்கும்" என்றாள்.

"இந்தக் குழந்தை எது?" என்று ஜீ. சுப்பிரமணிய அய்யர் கேட்டார்.

"இது என் கணையனரின் குழந்தை. வேளாண் குடி அக்காலம் முழுமையும் பூகம்பத்தில் அழிந்த போது, நானும் இக் குழந்தையின் தாயும் மாத்திரம் மழைக்கும் காற்றுக்கும் அந்த பூகம்பத்துக்கும் இரையாகாமல் உயிர் தப்பினோம். பூகம்பமும் புயற் காற்றும் பெருமழையும் அடங்கிச் சிறிது நேரத்துக்கப்பால் இக் குழந்தை பிறந்தது. இதைப் பெறும் கடமை தீர்ந்தவுடன் தாயும் பரலோகம் போய் விட்டாள். சாகும் போது இதன் காவலை என்மீது சுமத்திக் கட்டளையிட்டாள்" என்று விசாலாகூடி சொன்னாள்.

"இந்த மூன்று வருஷங்களாக நீ ஆஹாரத்துக்கு என்ன செய்கிறாய்?" என்று ஜீ. சுப்பிரமணிய அய்யர் கேட்டார்.

"செம்புப் பிச்சை; உவாதான மெடுத்து வயிறு வளர்த்து இந்தக் குழந்தையைப் காப்பாற்றிக் கொண்டு வருகிறேன்" என்றாள்.

ஜீ. சுப்பிரமணிய அய்யர் உடனே தம்முடைய கைப்பெட்டியைத் திறந்து நூறு ரூபாய் நோட்

ஏன்றை எடுத்து விசாலாக்ஷி கையில் கொடுத்தார். விசாலாக்ஷி அதனை எழுந்து நின்று வாங்கி, இரண்டு கண்களிலும் ஒற்றிக்கொண்டு, தன் புடவைத் தலைப்பில் முடித்து இடுப்பிலே சொருகிக்கொண்டாள்.

"சரி, அம்மா, நீ போய் வா" என்று ஜீ. சுப்பிரமணிய அய்யர் சொன்னார். அப்போது விசாலாக்ஷி சொல்லுகிறாள்:—"ஐயா, நான் தங்களைப் பிதாஸ்தானமாக பாவித்துத் தங்களிடம் பணம் வாங்க உடம்பட்டேன். எனிலும், நான் இங்கு வந்தது தங்களிடம் பணம் வாங்கிக்கொண்டு போவதற்கன்று என்பதைத் தாங்கள் மறக்கக்கூடாது; கணவனை வேண்டி உங்களிடம் வந்தேன்" என்றாள்.

அது கேட்டு, ஜீ. சுப்பிரமணிய அய்யர்:—"அந்தக் காரியம் என்னால் செய்து கொடுக்கமுடியாது" என்றார்.

"தங்களைத் தவிர எனக்கு வேறு புகலுமில்லை" என்று விசாலாக்ஷி வற்புறுத்தினாள்.

"என்னால் ஆகத்தமில்லையே! நான் என்ன செய்வேன்?" என்றார் அய்யர்.

"நீங்கள் தயவு வைத்தால் ஆகும்" என்று விசாலாக்ஷி சொன்னாள்.

"உன்னிடம் நல்லெண்ணமில்லாமலா, நீ கேட்காமலே உனக்கு நூறு ரூபாய் கொடுத்தேன்?" என்று ஜீ. சுப்பிரமணிய அய்யர் கேட்டார்.

"அவ்வளவு தயவு போதாது. இன்னும் அதிக தயவு செலுத்தவேண்டும்" என்று விசாலாக்ஷி மன்றாடினாள்.

ஜீ. சுப்பிரமணிய அய்யர் தலையைச் சொரிந்தார். சில சமிக்ஞைகளாற்பால் விசாலாக்ஷியை நோக்கிச் சொல்லுகிறார்:— "ராஜமஹேந்திரபுரத்தில் என்னுடைய ஸ்நேகிதர் ஒருவர் இருக்கிறார். அவருடைய பெயர் வீரேச லிங்கம் பந்துலு. அவர் விதவைகளாற்கு விவாகம் செய்துவைப்பதில் மிகவும் சிரத்தையுடன் உழைத்து வருகிறார். உன் வசம் ஒரு கடிதம் எழுதிக் கொடுக்கிறேன். அதை அவரிடத்தில் கொண்டு கொடு. அவர் உனக்கு வேண்டிய ஸௌகரியம் செய்துகொடுப்பார்" என்றார்.

"சரி" என்றாள் விசாலாக்ஷி.

உடனே, ஜீ. சுப்பிரமணிய அய்யர் தம்முடைய மேஜையின்மேல் வைத்திருந்த மணியைக் குலுக்கினார். கீழேயிருந்து அவருடைய மகன் வந்து, "என்ன வேண்டுமப்பா?" என்று கேட்டான்.

"அந்த வேலைக்காரப் பயல் இன்னும் வரவில்லையோ?" என்று ஜீ. சுப்பிரமணிய அய்யர் உறுமினார்.

"அவன் பட்டணத்துக்கன்றோ போயிருக்கிறான், ஸ்மித் ஷாப்பிலே போய் மருந்து வாங்கிக் கொண்டுவர? இனி அவன் பன்னிரண்டு மணிக்கு மேலேதான் வருவான். உமக்கென்ன வேண்டும்?" என்றாள்.

"என்னுடைய மேஜை மேலே, பேனை மைக்கூடு வைத்திருக்கிறேன். மேஜை நிறந்துகான் இருக்கிறது. அதற்குள்ளே வலப் பக்கத்து அறையில் கடிதமெழுதுங் காளுஞ் உறைகளுஞ் கிடக்கின்றன. ஒரு காளும் ஒரு உறையும் கொண்டுவா. மையொத்தும் காளையும் எடுத்துவா. அடியில் வைத்திருக்கும் ஒரு கடிப் புஸ்தகம் கொண்டுவா" என்று ஜீ. சுப்பிரமணிய அய்யர் சொன்னர்.

அவர் வேண்டிய ஸாமான்களை யெல்லாம் மகள் கொண்டுவந்து கொடுத்தாள். ஜீ. சுப்பிரமணிய அய்யர் ஒரு கடிதமெழுதி உறைக்குள்ளே போட்டு, அதை மகளிடம் கொடுத்து "உறையை சரியாக ஒட்டிக்கொண்டுவா" என்றார். அவள் அதை ஒட்டிக்கொண்டுவந்து கொடுத்தாள். கொடுத்து விட்டு, மகள் மறுபடி பேனையும் மைக்கூட்டையும் மையொத்தும் காளையும் கொண்டு மேஜையில் வைத்துவிட்டுக் கீழே சென்று விட்டாள். ஜீ. சுப்பிரமணிய அய்யர் கடிதத்தைக் கையில் வைத்துக்கொண்டே விசாலாக்ஷியை நோக்கி, "உனக்குத் தெலுங்கு தெரியுமா?" என்று கேட்டார். "தெரியும்" என்றாள் விசாலாக்ஷி. "எங்கே படித்தாய்?" என்று அய்யர் கேட்டார்.

"எங்களூரில் நானிருந்த வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் தெலுங்கப் பிராமண ரொருவர் இருந்தார். நான் சிறு குழந்தைப்பிராய முதலாகவே அந்தக் குடும்பத்தாருடன் மிகவும் நெருக்கமாகப் பழகிக் கொண்டு

வந்தபடியால் எனக்குத் தெலுங்கு பாஷை தெலுங்கர் களைப் போலவே பேச வரும்" என்றாள்.

"சரி. உனக்குக் கூடிய சீக்கிரத்தில் நல்ல குணமக னுடன் விவாகம் நடைபெறும். நீங்கள் தம்பதிகளிரு வரும் நெடுங்காலம் இன்புற்று வாழக் கடவீர்" என்று சொல்லி, அய்யர் அவளிடம் காயிதத்தைக் கொடுத் தார். அவள் அக் கடிதத்தை வாங்கி கண்ணிலே ஒற்றிக் கொண்டு மடியில் வைத்துக் கட்டிக்கொண்டாள். பிறகு ஜீ. சுப்பிரமணிய அய்யரை நோக்கி ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ணிவிட்டு, அவரிடம் விடை பெற்றுக் கொண்டு, குழந்தையை அழைத்துக்கொண்டு சென் றனள். அக் குழந்தையும் ஜீ. சுப்பிரமணிய அய்யரை நோக்கிப் புன்னகை செய்துகொண்டே போயிற்று.

மூன்றும் அத்யாயம்.

விசாலாக்ஷியின் ஏமாற்றம்.

ராஜமேந்திரபுரத்தில் வீரேசலிங்கம் பந்துலு வீட்டைத் தேடிப் போய் விசாலாக்ஷி விசாரித்தாள். அவர் அங்கில்லை யென்றும், அவள் வந்த நாளுக்கு முதல் நாள்தான் புறப்பட்டுச் சென்னைப்பட்டணத் துக்குப் போனரென்றும் தெரியவந்தது. சென்னை எழும்பூரில் பண்டித வீரேசலிங்கம் பந்துலு ஒரு தனி வீட்டில் தம் மனைவியுடன் வந்து தங்கியிருந்தார்.

விசாலாக்ஷி சென்னப்பட்டணத்துக்கு வந்து, மறு நாட்காலையில் எழும்பூரில் அவர் இருந்த வீட்டிற்குப் போனாள். உள்ளே அவர் மாத்திரம் நாற்காலி மேஜை போட்டு உட்கார்ந்து கொண்டு ஏதோ நூலெழுதிக் கொண்டிருந்தார்.

விசாலாக்ஷி அவரை நமஸ்காரம் பண்ணினாள். ஜீ. சுப்பிரமணிய ஐய்யரிடமிருந்து தான் வாங்கிக்கொண்டு வந்த கடிதத்தைக் கொடுத்தாள். வீரேசலிங்கம் பந்துலு தன் எதிரேயிருந்த நாற்காலியின் மீது விசாலாக்ஷியை உட்காரச் சொன்னார். அவள் தன் மடியில் சந்திரி கையை வைத்துக்கொண்டு அந் நாற்காலியின் மீதுட் கார்ந்தாள். வீரேசலிங்கம் பந்துலு அவள் கொணர்ந்த கடிதம் முழுதையும் வாசித்துப் பார்த்துவிட்டு, அவளை நோக்கி 'இன்றைக்கென்ன கிழமை?' என்று தமிழில் கேட்டார். அவள் 'புதவாரமு' என்று தெலுங்கில் மறு மொழி சொன்னாள்.

"மீகு தெலுகு வச்சுனு?" என்று வீரேசலிங்கம் பந்துலு கேட்டார்.

"அவுனு சால பாக வச்சுனு" என்றாள் விசாலாக்ஷி.

இங்கு நமது கதை வாசிப்போரிலே பலருக்குத் தெலுங்கு பாஷை தெரிந்திருக்க வழியில்லை யாதலால், அவ் விருவருக்குள் தெலுங்கில் நடைபெற்ற ஸம் பாஷணையை நான் தமிழில் மொழி பெயர்த்துத் தருகிறேன்.

"உனக்குத் தாய் தந்தையர் இருக்கிறார்களா?" என்று வீரசிங்கம் பந்துலு கேட்டார்.

"இல்லை" என்றாள் விசாலாக்ஷி.

"அண்ணன், தம்பி, அக்காள், தங்கை—?"

"எனக்கு யாருமே இல்லை. அதாவது, என்னுடைய விவகாரங்களில் கவனம் செலுத்தி என்னைக் காப்பாற்றக்கூடிய பந்துக்கள் யாருமில்லை. அப்படியே சிலர் இருந்தபோதிலும், நான் இப்போது விவாகம் செய்து கொள்ளப் போவதினின்றும் அவர்கள் என்னை ஜாதிக்குப் புறம்பாகக் கருதிவிடுவார்கள்" என்று விசாலாக்ஷி சொன்னாள்.

"உனக்கு என்னென்ன பாஷைகள் தெரியும்?" என்று வீரசிங்கம் பந்துலு கேட்டார்.

"எனக்குத் தமிழ் தெரியும். தெலுங்கு தெரியும். இரண்டு பாஷைகளும் நன்றாக எழுதவும் வாசிக்கவும் பேசவும் தெரியும்" என்று விசாலாக்ஷி சொன்னாள்

"இங்கிலீஷ் தெரியுமா?" என்று பந்துலு கேட்டார்.

"தெரியாது" என்றாள் விசாலாக்ஷி.

"கொஞ்சங் கூட?" என்று கேட்டார்.

"கொஞ்சங்கூடத் தெரியாது" என்றாள்.

"ஸங்கீதம் தெரியுமா?" என்று பந்துலு கேட்டார்.

"எனக்கு நல்ல தொண்டை. என் பாட்டை

மிகவும் நல்ல பாட்டென்று என் சுற்றத்தார் சொல்வார்கள்" என்று விசாலாக்ஷி சொன்னாள்.

"வீணை, பிடில், ஹார்மோனியம்—எதேனும் வாத்யம் வாசிப்பாயா?" என்று பந்துலு கேட்டார்.

"ஒரு வாத்யமும் நான் பழகவில்லை" என்றாள் விசாலாக்ஷி.

"தாளந் தவறாமல் பாடுவாயா?" என்று பந்துலு கேட்டார்.

"தாளம் கொஞ்சங்கூடத் தவறமாட்டேன்" என்று விசாலாக்ஷி சொன்னாள்.

"எங்கே? ஏதேனும் ஒரு பாட்டுப் பாடிக் காட்டு, பார்ப்போம்" என்று பந்துலு கேட்டார்.

அந்த ஸபையத்தில் சபையலறைக்குள் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தவளாகிய வீரேசலிங்கர் பந்துலுவின் கிழவனவி உள்ளேயிருந்து இவர்கள் பேசிக் கொண்டிருந்த கூடத்துக்கு வந்து ஒரு நாற்காலியின் மீது உட்கார்ந்தாள். அவளைக் கண்டவுடன், விசாலாக்ஷி எழுந்து நமஸ்காரம் பண்ணினாள். அவள் ஆசீர்வாதங் கூறி வீற்றிருக்க விடைகொடுத்து விசாலாக்ஷியின் மடியிலிருந்த குழந்தையை வாங்கித் தன் படியில் வைத்துக்கொண்டாள்.

குழந்தை வீறிட்டு அழத் தொடங்கிற்று.

"என்னிடம் கொடு, நான் அழாதபடி வைத்துக் கொள்ளுகிறேன்" என்று பந்துலு சொன்னார். அவள் அக் குழந்தையைத் தன் கணவனிடம் கொடுத்தாள்.

அவர் மடிக்குப் போனவுடனே குழந்தையாகிய சந்திரிகை அழுகையை நிறுத்தியது மட்டுமன்றி வாயைத் திறந்து புன்னகை செய்யத் தொடங்கினாள்.

"கிழவருக்கு வேறென்றுந் தெரியாவிட்டாலும், குழந்தைகளை அழகுபடி வைத்துக் கொள்வதில் மிகவும் ஸமர்த்தர்" என்றாள் கிழவி.

"ஆமாம்! எனக்கென்ன தெரியும்? படிப்புத் தெரியுமா, இழவா? நீ தான் ஸகல கலா பண்டிதை" என்று சொல்லி வீரேசலிங்கம் பந்துலு முறுவலித்தார்.

அப்பால், வீரேசலிங்கம் பந்துலு தமக்கு ஜீ. சுப்பிரமணிய அய்யர் எழுதிய கடிதத்தில் கண்டபடி விசாலாக்ஷியின் விருத்தாந்தங்களை யெல்லாம் விரித்துக் கூறினார்.

அவருடைய மனைவி இதைக் கேட்டு:—"சென்ற வாரம் தங்களைப் பார்க்கும்பொருட்டுத் தஞ்சாவூர் டிப்டி கலெக்டர் ஒரு அய்யங்கார் வந்திருந்தாரன்றோ? அவர் தமக்கு ஒரு விதவைப் பெண் பார்த்து விவாகம் செய்து வைக்கவேண்டுமென்று தங்களை வேண்டினரன்றோ? அவருக்கு இந்தப் பெண்ணைக் கொடுக்கலாம். இவருடைய முதல் புருஷன் இவள் ருதுவாவதற்கு முன்னே யிறந்தாரை? பிந்தி இறந்தாரை?" என்று வினவினாள்.

அப்போது வீரேசலிங்கம் பந்துலு:—"அந்த விஷயம் உனக்குச் சொல்லத் தவறிவிட்டேனே? இதோ

சொல்லுகிறேன் கேள். இவளுக்குப் பத்தாம் வயதிலே அந்தப் புருஷன் இறந்துபோனான். அவன் இறந்து போய் இப்போது பதினைந்து வருஷங்களாயின்" என்றார்.

"சரி; அப்படியானால் அந்த டிப்டிகலெக்டர் யாதோர் ஆக்ஷேபமின்றி இவளை மணம்புரிந்து கொள்வார். முதற் புருஷனுடன் கூடியனுபவிக்காமல் கன்னிப் பருவத்திலே காலியறுத்த பெண் தமக்கு வேண்டுமென்று அவர் சொன்னாரன்றோ?" என்று கிழவி கேட்டாள்.

"ஆம்; இவள்தான் அவர் விரும்பிய லக்ஷணங்களெல்லாம் பொருந்தியவளாக இருக்கிறாள். இவளை அவர் அவசியம் மணம்புரிந்து கொள்ள விரும்புவார். நீ சொல்லுமுன்பே, நான் இந்தக் கடிதத்தை வாசித்துப் பார்த்த மாத்திரத்தில், டிப்டி கலெக்டர் கோபாலய்யங்காரை நினைத்தேன். ஆனால் 'இந்தப் பெண் அவரை மணம்புரிந்துகொள்ள உடன்படுவாளோ' என்பதுதான் ஸந்தேஹம்" என்று பந்துலு சொன்னார்.

இதைக் கேட்டவுடனே கிழவி:—"என்? அவரிடத்தில் என்ன குற்றங் கண்டீர்? எலுமிச்சம் பழம் போலே நிறம்; ராஜ பார்வை; பருத்த புஜங்கள்; அகன்ற மார்பு; ஒரு மயிர்கூட நரையில்லை; நல்ல வாலிபப் பருவம். டிப்டி கலெக்டர் உத்தியோகம் பண்ணுகிறார். எத்தனை கோடி தவம் பண்ணினாளோ, இவளுக்கு அப்படிப்பட்ட புருஷன் கிடைக்கவேண்டும்" என்றாள்.

அப்போது விரோசனிங்கம் பந்துலு:—"அந்த கோபாலய்யங்கார் நீ சொன்ன லக்ஷணங்களெல்லாம் உடையவனென்பது மெய்யே. ஆனல் சாராயம் குடிக்கிறார். மாம்ஸ போஜனம் பண்ணுகிறார். கட்குடியர் வேறென்ன நல்ல லக்ஷணங்களுமுடையவராக இருப்பினும் அவற்றை விரைவில் இழந்து விடுவார்கள். அவர் களுடைய செல்வமும் பதவியும் விரைவில் அழிந்து போய்விடும்" என்றார்.

இது கேட்டு விசாலாக்ஷி:—"சரி. அவர் என்னை விவாகம் செய்துகொள்ளுமுன்பு ஏற்பாடு செய்யுங்கள். அவருடைய கெட்ட குணங்களை யெல்லாம் நான் மாற்றிவிடுகிறேன்" என்றாள்.

"குடி வழக்கத்தை மாற்ற பிரமதேவனலேகூட முடியாது" என்று விரோசனிங்கம் பந்துலு சொன்னார்.

அதற்கு விசாலாக்ஷி:—"என்னல் முடியும். ஸாவித்ரி தன் கணவனை யமலோகத்திலிருந்து மீட்டுக் கொண்டு வரவில்லையா? பெண்களுடைய அன்புக்கு ஸாத்யப்படாதது யாதொன்றுமில்லை. நான் அவருடைய மாம்ஸ போஜன வழக்கத்தை உடனே நிறுத்தி விடுவேன். மது வழக்கத்தை ஓரளவு வருஷங்களில் நிறுத்திவைப்பேன். மற்ற லக்ஷணங்களெல்லாம் அவரிடம் நல்லனவாக இருப்பதால் இவ் விரண்டு குற்றங் களிருப்பது பெரிதில்லை. நான் அவரை மணம் புரிந்து கொள்ள முற்றிலும் ஸம்மதப் படுகிறேன்" என்றாள்.

இது கேட்டு விரோசனிங்கம் பந்துலு:—'சரி.

பாட்டுப் பாடத் தெரியும் என்றாயே? ஏதேனும் கீர்த்தனம் பாடு, கேட்போம்" என்றார்.

"சுருதிக்குத் தம்பூர் இருக்கிறதோ?" என்று விசாலாக்ஷி கேட்டாள்.

"ஹார்மோனியம் இருக்கிறது" என்று சொல்லி வீரேசலிங்கம் பந்துலுவின் மனைவி உள்ளேபோய் ஒரு சேர்த்தியான சிறிய அழகிய 'மோஹன்' பெட்டியை எடுத்துக்கொண்டுவந்து விசாலாக்ஷியிடம் கொடுத்தாள்.

பெட்டியை மடிமீதுவைத்து விசாலாக்ஷி முதற் கட்டை சுருதி வைத்துக்கொண்டு மிகவும் ஸன்னமான அற்புதமான குரலில் தியாகய்யர் செய்த "மாருபல்கு கொன்ன லேதிரா" (மறுமொழி சொல்லாதிருப்பதென்னடா?) என்ற தெலுங்குக் கீர்த்தனையைப் பாடினாள். கால் விரல்களினால் தாளம் போட்டாள்.

அப்போது அந்த வீட்டு வாசலில் ஒரு மோட்டார் வண்டி நின்ற சத்தம் கேட்டது. சேவகனொருவன் ஒரு சீட்டைக் கொண்டுவந்து வீரேசலிங்கம் பந்துலுவிடம் கொடுத்தான். அதைப் பார்த்தவுடனே வீரேசலிங்கம் பந்துலு எழுந்து தன் கையிலிருந்த குழந்தை சந்திரிகையை விசாலாக்ஷியிடம் நீட்டினார். அவள் வெடி கீர்த்தனத்தில் பல ஸங்கதிகளுடன் அனுபல்லவி பாடி முடித்து மறுபடி "மாரு பல்க" என்ற பல்லவி யெடுக்குந் தறுவாயிலிருந்தாள்.

விசாலாட்சி பந்துவை குழந்தையை நீட்டினாள், விசாலாட்சி தன் கையிலிருந்த ஹார்மோனியப் பெட்டியைக் கீழே வைத்துவிட்டு எழுந்து நின்று குழந்தையைக் கையில் வாங்கிக்கொண்டாள்.

"என்ன விசேஷம்? யார் வந்திருக்கிறார்கள்?" என்று பந்துலுவை நோக்கி அவருடைய மனைவி கேட்டாள்.

"கோபாலய்யங்காரே வந்து விட்டார். பழம் நழுவிப் பாலில் விழுந்தது" என்று சொல்லி விசாலாட்சி பந்துலு மேல் மேலுத்தியை எடுத்துப் போர்த்துக் கொண்டு, மட மட வென்று வெளியே சென்றாள்.

இவர் வெளியே போனவுடன், கிழவி விசாலாட்சியை நோக்கி, "அவர்களிருவரும் வந்தால் தமக்குள்ளே பேசிக்கொண்டிருப்பார்கள். நாம் சமையலறைக்குப் போய்விடுவோம். இன்று பகலில் கோபாலய்யங்கார் இங்கேயே போஜனம் பண்ணுவார். அவர் பந்துலுவைப் பார்க்க வந்தால், ஒரு வேளை ஆஹாரமாவது இங்கு செய்யாமல் போவது வழக்கமில்லை. மேலும் இப்போது அவருக்கு ராஜாக் காலம். ஆகலால் நாம் விருந்துக்கு அழைத்தால் மறுத்துச் சொல்ல வேண்டிய தேது இராது. நீயும் இங்கேயே இரு. நானுக்குப் போகலாம். பந்துலுவுக்கும் எனக்கும் மாத்திரமென்று ஒரு ரஸம், அன்னம், சட்னி, அப்பளம் பண்ணிவைக்கக் கருதியிருந்தேன். இப்போது விருந்து வந்து விட்டது.

நேற்று வாங்கிக்கொண்டு வந்த வெங்காயமும் புடலங் காயும் நிறைய மிஞ்சிக் கிடக்கின்றன. வெங்காய ஸாம்பார், தேங்காய் சட்னி, மைஸூர் ரஸம், புடலங் காய் பொடித்தூவல், வடை, பாயஸம் இவ்வளவும் போதும். அப்பளத்தை நிறையப் பொரித்து வைப் போம். கோபாலய்யங்காருக்குப் பொரித்த அப்பளத் தில் மோஹம் அதிகம். சரி. நீ காலையிலே ஸ்நானம் பண்ணிவிட்டுத் தான் வந்திருக்கிறாய். குழந்தையை வேலைக்காரியிடம் கொடுத்தால் விளையாட்டுக் காட்டிக் கொண்டிருப்பாள். நீ கைகால் அலம்பிவிட்டு என்னு டன் சமையலுக்கு வா" என்றாள்.

விசாலாக்ஷி "அப்படியே சரி" என்றாள். மாதர் இருவரும் சமையலறைக்குள்ளே புகுந்தனர். வேலைக் காரியும் குழந்தை சந்திரிகையும் அவ்வீட்டுக் கொல்லை யிலிருந்த விஸ்தாரமான தூங்கோசாலையில் மர நிழலில் வீற்றிருந்து பக்ஷிகளின் விளையாட்டுக்களையும் அற்புத மான பாட்டுகளையும் ரஸித்துக்கொண்டிருந்தனர்.

குழந்தை சந்திரிகைக்கு வயது இப்போது மூன்று தானேயிற்று. எனிலும், அது சிறிதேனும் கொச்சைச் சொற்களும் மழலைச் சொற்களும் இல்லாமல் அழுத்தந் திருத்தமாக வார்த்தை சொல்லும். அந்தக் குழந்தை யின் குரல் சிறிய தங்கப் புல்லாங்குழலின் ஓசையைப் போன்றது. குழந்தையின் அழகோ வர்ணிக்குந் தரமன்று. தெய்விக ரூபம்; வனப்பின் இலக்கியம்.

சோலைப் பறவைக ளெல்லாம் இக் குழந்தையின் அழகைக் கண்டு மயங்கிக் களிகொண்டு இதன் தலை

யைச் சுற்றிச் சுற்றி வட்டமிடலாயின. பலவிதக் குருவி களும், குயில்களும், கிளிகளும், நாகணவாய்களும் தங் களுக்குத் தெரிந்த நாதங்களில் மிகவும் அழகிய நாதங் களைப் பொறுக்கியெடுத்து, இக் குழந்தையின் முன்னே வந்து நின்றெழுலித்தன. வானரங்கள் தமக்குத் தெரிந்த பாய்ச்சல்களிலும் நாட்டியங்களிலும் மிகவும் வியக்கத்தக்கனவற்றை இக் குழந்தைக்குக் காண் பித்தன.

புன்னகை செய்தலர்ச் சிறு வாயைச் சந்திரிகை மூடவேயில்லை. வானமும், ஸூர்யனும், ஒளியும், மேகங்களும், மரங்களும், செடிகளும், கொடிகளும், மலர்களும், ஸுந்தரப் பக்ஷிகளும் கூடிக் காலை நேரத் தில் விளையாடிய அற்புதக் காட்சியிலும், பறவைகளின் ஒலிகளிலும் சந்திரிகை சொக்கிப்போய் விட்டாள்.

ஒரு ஸமயம் அவள் தன்னை மறந்து எழுந்து வானத்தை நோக்கி நின்று இரண்டு கைகளையும் கொட் டிக்கொண்டு கூத்தாடுவாள். ஒரு ஸமயம் பக்ஷிகளின் ஒலிகளை அனுசரித்துக் தானும் கூவுவாள்.

இங்ஙனமிருக்கையில், வேலைக்காரி குழந்தையை நோக்கி:—"நீ ஒரு பாட்டுப்பாடு" என்றாள். "அம்மை கற்றுக் கொடுத்த 'நந்தலால்' பாட்டுப் பாடலாமா?" என்று சந்திரிகை கேட்டாள்.

"அந்த அம்மா உனக்குத் தாயில்லையா? அம்மை யா?" என்று வேலைக்காரி கேட்டாள்.

அதற்குச் சந்திரிகை:—"என் தங்கையும், தாயும்

நான் பிறந்தன்றைக்கே செத்துப் போய் விட்டார்கள். இந்த ஸங்கதி எனக்கு அத்தை சொன்னாள். நடுராத்திரி வேளையாம். பூமி நடுங்கிற்றும். பேய்க் காற்றடித்ததாம். சோனை மழை பெய்ததாம். எங்கள் ஊர் முழுதும், எல்லா வீடுகளும் இடிந்து விழுந்து, அத்தனை ஜனங்களும் செத்துப் போய் விட்டார்களாம். எங்கள் வீடும் இடிந்து அப்பா, தாத்தா, பாட்டி, என் னுடைய அக்காமார் ஐந்து குழந்தைகள் ஆகிய எல்லாரும் செத்துப்போய் விட்டார்கள். அம்மாவும் அத்தையு மிருந்த குச்சில் மாத்திரம் இடிந்து விழ வில்லை. அம்மா வயிற்றுக்குள்ளே நான் இருந்தேன். அப்பால் நான் அந்த இராத்திரியிலேயே பிறந்தேன். நான் பிறந்தவுடனே அம்மா செத்துப் போனாள். இதுவெல்லாம் அத்தை எனக்குச் சொன்னாள். அது முதல் எனக்குப் பசுவின் பாலும் சாதமும் கொடுத்து, அத்தைதான் காப்பாற்றிக்கொண்டு வருகிறாள்'' என்று தன் குழந்தைப் பாஷையில் கால்மணி நேரத் தில் சொல்லி முடித்தது. ஆனால் உடைந்த சொற் களும், நிறுத்தி, நிறுத்தி, யோசித்து, யோசித்து, மெல்ல மெல்லப் பேசுவதும் இருந்தனவே யல்லாது, பொருள் விளங்காததும் உருச் சிதைந்தது மாகிய குதலைச்சொல் ஒன்றுகூடக் கிடையாது.

இங்ஙனம் அந்த அழகிய குழந்தை பேசிக் கொண்டு வருகையில் அதன் விழிகளிலும் இதழ்களி லும் பொறி வீசி யெழுந்த அன்புச் சுடரையும் அறிவுச் சுடரையும் பணிப்பெண் மிகவும் உற்று

நோக்கி கவனித்துக்கொண்டு வந்தாள். அவள் அகன் அழகில் மயங்கிப் போய் அகனை எடுத்து மார்பாரத் தழுவிக்கொண்டு முகத்தோடு முக மொற்றி முத்த மிட்டாள்.

அந்த ஸமயம் காலை பதினொரு மணியிருக்கும். ஸுகமான காற்று வீசிக்கொண்டிருந்தது. அந்தப் பணிப்பெண் அவளை முத்தமிடும் செய்கையை இருவர் பார்த்துக்கொண்டு நின்றனர். அவ் விருவரில் ஒருவர் அவள்மீது காதல் கொண்டார்.

நான்காம் அத்யாயம்.

வீரேசலிங்கம் பந்துலு வீட்டில் விருந்து.

மோட்டார் வண்டியிலிருந்து டிப்டி கலெக்டர் கோபாலய்யங்காரைத் தக்க உபசார வார்த்தைகளு டன் கைகொடுத்தழைத்து வந்து வீரேசலிங்கம் பந் துலு வீட்டுக்குள் தாது படிப்பறையில் நாற்காலியில் உட்கார்த்தி காபி கொணர்ந்து கொடுத்தார். நெய்த் தேங்குழல் நான்னைத் தின்று, ஒரு பெரிய வெள்ளி ஸ்தாலி நிறைய காபியுந் குடித்துவிட்டு, கோபாலய் யங்கார் "ஹரா" என்று ஏப்பமிட்டுச் சாய்வு நாற்காலி யின் மீது சாய்ந்துகொண்டார். அவரிடம் வீரேசலிங் கம் பந்துலு ஒரு வெற்றிலைத் தட்டு நிறைய வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு வாஸனைத் திரவியங்களுடன் கொண்டுவைத்தார். அது முழுதையும் அய்யங்கார்

மென்று மென்று முக்கால்மணி நேரத்தில் ஹாகம் பண்ணிவிட்டார்.

அப்பால் பந்துலு அவரிடம் ஒரு தெலுங்கு பத்திரிகையை நீட்டினார். அவர் அதை ஆதிமூதல் அந்தம் வரை, விளம்பரங்களுட்பட, ஒரு வரி கூட மிச்சமில்லாமல் வாசித்து முடித்தார். கோபாலய்யங்கார் இங்கிலீஷ், ஸம்ஸ்கிருதம், தமிழ், தெலுங்கு நான்கு பாஷைகளிலும் உயர்ந்த பயிற்சியுடையவர். இவர் தெலுங்கு ஜில்லாக்களில் சில வருஷங்களில் வேலை பார்த்த ஸமயத்தில் தெலுங்கு பாஷையைத் தன் தாய் மொழிக்கு நிகராகப் பயின்றுகொண்டார்.

இவர் பத்திரிகை வாசித்து முடித்தபின், இருவரும் வீட்டுக் கொல்லையிலே போய்ச் சிறிது நேரம் உலாவிக் கொண்டிருந்தனர்; பிறகு ஸ்நானம் பண்ணினார்கள்; போஜனம் பண்ண உட்கார்ந்தார்கள்.

தேவலோகத்து விருந்துபோன்ற சமையல் பக்குவம். வீரேசலிங்கம் பந்துலுக்கு மூர்ச்சைபோடத் தெரிந்தது. இத்தனை ருசியான உணவை அவர் தம் முடைய ஜன்மத்தில் உண்டதில்லை. கனவில் கண்டதில்லை. கற்பனையில் எட்டினதில்லை. தின்னத் தின்ன ருசி தெவிட்டவேயில்லை. கோபாலய்யங்காருடைய முகத்தைப் பந்துலு ஒரு முறை திரும்பிப் பார்த்தார். பந்துலுவின் முகத்தை அய்யங்கார் ஒரு முறை திரும்பிப் பார்த்தார்.

பந்துலுவின் மனைவி பரிமாறிக்கொண்டிருந்தாள்.

"யாருடைய சமையல் தெரியுமா?" என்று பந்துலுவின் மனைவி கேட்டாள். "காலையில் வந்தானே, அந்தப் பெண்ணுடைய சமையலா?" என்றார் பந்துலு.

"ஆம்" என்றாள் பந்துலுவின் மனைவி.

"அந்தப் பெண்ணை இங்கு சற்றே வரச்சொல். கும்முடைய கோபாலப்பங்கார் அவளுடைய முகத்தின் அழகையும் அவள் சொல்லின் அழகையும் அவளறிவின் அழகையும் பார்க்கவேண்டும். சமையலழகை மாத்திரம் பார்க்கால் போதுமா? அந்த மஹாலக்ஷ்மியின் ஸகல லக்ஷணங்களையும் பார்க்க வேண்டாமா?" என்றார் விநோதலிங்கம் பந்துலு.

"அவளுக்கு பலமான தலைநோவு. சமையல் சரமம் பாத்திரை சரமம் எல்லாம் சேர்ந்து அவளுக்குத் தலைநோவு உண்டாக்கிவிட்டன. இராத்திரி அவளுக்கு உடம்பு சரியாய்விடும். அப்போது அப்பங்கார் அவளைப் பார்க்கலாம்" என்று பந்துலுவின் மனைவி சொன்னாள். அப்பால் நெடுநேரம் இருவரும் ஆஹாரம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். போஜனம் முடிந்து கை கழுவிவிட்டுப் பந்துலுவும் அப்பங்காரும் மறுபடி பந்துலுவின் படிப்பறையில் வந்து நாற்காலிகளில் உட்கார்ந்துகொண்டார்கள். மேஜைமேல் பந்துலுவின் மனைவி கொண்டுவந்து வைத்த தாம்பூலத்தை எடுத்துப்போடத் தொடங்குகையில் "இதுவே சுவர்க்கம்" என்று பந்துலு சொன்னார்.

"எது?" என்று பந்துலுவின் மனைவி கேட்டாள்.

"இப்போது செய்த போஜனம்" என்று பந்துலு சொன்னார்.

"சமையல் ருசியாக இருந்ததா?" என்று பந்துலுவின் மனைவி கோபாலய்யங்காரை நோக்கி வினவினாள்.

"மிகவும் ருசியாக இருந்தது" என்று கோபாலய்யங்கார் சொன்னார். அந்த ஸமயத்தில் கோபாலய்யங்காருடைய மனம் அங்ஙனம் ருசியாகச் சமையல் செய்த பெண்ணின் அழகையும், புத்தி நுட்பத்தையும், சொல்வினிமையையும் குறித்து விசாலிங்கம் பந்துலு செய்த வர்ணனைகளைப் பற்றிச் சிந்திக்கலாயிற்று. அவள் உண்மையாகவே அத்தனை அற்புதமான பெண்தானா? அல்லது பந்துலு நூலாசிரியராகையால் வெறுமே கற்பனை தான் சொன்னாரா?" என்று அவருக்கு ஓர் ஐயமுண்டாயிற்று.

அப்போது பந்துலு தன் மனைவியை நோக்கி, "அந்தப் பெண் தன் குடன் கொண்டுவந்திருக்கும் குழந்தையை இங்கே கூட்டிவா" என்றார். "சரி" என்று சொல்லிப் பந்துலுவின் மனைவி சமையலறைக்குள்ளே போனாள்.

அப்போது கோபாலய்யங்கார் விசாலிங்கம் பந்துலுவை நோக்கி :— அந்தப் பெண் அக் குழந்தைக்கு உறவெப்படி?" என்று கேட்டார்.

"அந்தப் பெண் நடையனூர் கணபதியரின் மகள் அக் குழந்தை. அவர்களுடைய கதை மிகவும் ரஸமானது. நான் அதை உங்களுக்குப் பின்பு சொல்லு

"இப்போது செய்த போஜனம்" என்று பந்துலு சொன்னார்.

"சமையல் ருசியாக இருந்தது?" என்று பந்துலுவின் மனைவி கோபாலய்யங்காரை நோக்கி வினவினாள்.

"மிகவும் ருசியாக இருந்தது" என்று கோபாலய்யங்கார் சொன்னார். அந்த ஸமயத்தில் கோபாலய்யங்காருடைய மனம் அங்ஙனம் ருசியாகச் சமையல் செய்த பெண்ணின் அழகையும், புத்தி நுட்பத்தையும், சொல்வினைமையையுங் குறித்து விசாலிங்கம் பந்துலு செய்த வர்ணனைகளைப் பற்றிச் சிந்திக்கலாயிற்று. அவள் உண்மையாகவே அத்தனை அற்புதமான பெண்தானா? அல்லது பந்துலு நாலாகியராகையால் வெறுமே கற்பனை தான் சொன்னாரா?" என்று அவருக்கு ஓர் ஐயமுண்டாயிற்று.

அப்போது பந்துலு தன் மனைவியை நோக்கி, "அந்தப் பெண் தன்னுடன் கொண்டுவந்திருக்கும் குழந்தையை இங்கே கூட்டிவா" என்றார். "சரி" என்று சொல்லிப் பந்துலுவின் மனைவி சமையலறைக்குள்ளே போனாள்.

அப்போது கோபாலய்யங்கார் விசாலிங்கம் பந்துலுவை நோக்கி :— அந்தப் பெண் அக் குழந்தைக்கு உறவெப்படி?" என்று கேட்டார்.

"அந்தப் பெண் நமக்குடைய தையலார் மகள் அக் குழந்தை. அவர்களுடைய கதை மிகவும் ரஸமானது. நான் அதை உங்களுக்குப் பின்பு சொல்லு

தோற்றம் கோபாலய்யங்காரின் மனக் கண்ணுக்கு முன்னே எழுந்தது.

"குழந்தாய், உனக்குப் பாட்டுப் பாடத் தெரியுமா?" என்று கோபாலய்யங்கார் கேட்டார். "தெரியும்" என்றாள் சந்திரிகை. "எங்கே, ஒன்று பாடு. கேட்போம்" என்றார் கோபாலய்யங்கார்.

"அத்தை எனக்குக் கற்றுக்கொடுத்த நந்தலால் பாட்டுப் பாடலாமா?" என்று சந்திரிகை கேட்டாள்.

"பாடு" என்றார் கோபாலய்யங்கார்.

சந்திரிகை பாடத் தொடங்கினாள்:—

நந்தலால் பாட்டு.

யதுகுல காம்போதி ராகம்—ஆதி தாளம்.

ஸஸ்ஸாஸா—ஸம்மாபதா—பதபபமபா—பாபா பநீஸதபா—மாகா—ஸரிமகரீ—கெகரிரிஸஸா.

பார்க்கு மரத்திலெல்லாம், நந்தலாலா—நின்றன்
பச்சை நிறந்தோன்று தடா, நந்தலாலா;
காக்கைச் சிறகினிலே, நந்தலாலா—நின்றன்
கரியவிழி தோன்றுதடா, நந்தலாலா;
கேட்கு மொலியி லெல்லாம், நந்தலாலா—நின்றன்
கீத மிசைக்கு தடா, நந்தலாலா;
தீக்குள் விரலை வைத்தால், நந்தலாலா—நின்னைத்
தீண்டு மின்பந் தோன்றுதடா, நந்தலாலா.

இந்தப் பாட்டை மிகவும் மெதுவாக, ஒவ்வோ ரடியையும் இரண்டுதரம் சொல்லி இசை தவறுமல், தாளந் தவறுமல், கந்தர்வக் குழந்தை பாடுவது போல்

அக் குழந்தை மிகவும் அற்புதமாகப் பாடி முடித்தது. கோபாலய்யங்காருக்கு மூர்ச்சை போட்டுவிடத் தெரிந்தது. அவர் தம்முடைய ஜன்மத்தில் இவ்வித ஸங்கீதம் கேட்டதில்லை; கனவில் கண்டதில்லை; கற்பனையில் எட்டியதில்லை.

"இதுதான் சுவர்க்கம்" என்று கோபாலய்யங்கார் சொன்னார்.

"எது?" என்று பந்துலுவின் மனைவி கேட்டாள்.

"இந்தக் குழந்தையின் பாட்டு" என்று அய்யங்கார் சொன்னார்.

"ஸங்கீதமா? கவிதையா? இந்தக் குழந்தையின் குரலா? இவற்றுள் எது சுவர்க்கம் போலிருக்கிறது?" என்று பந்துலுவின் மனைவி கேட்டாள்.

அதற்கு கோபாலய்யங்கார்—"மூன்றும் கலந்த சுவர்க்கம் போன்றிருந்தது. விசேஷமாக, இதன் குரல் மிகவும் தெய்விகமானது. குரல்கூட அவ்வளவில்லை. இந்தக் குழந்தை பாடிய மாதிரியே ஆச்சர்யம்" என்றார்.

"குழந்தையின் அழகையும் பாடுகையில் அது காண்பித்த புத்திக் கூர்மையையும் சேர்த்துச் சொல்லுங்கள்" என்று பந்துலு சொன்னார்.

"அவையும் சேர்ந்ததான்" என்று அய்யங்கார் சொன்னார்.

இவர்கள் இங்ஙனம் வியப்புரை சொல்லிக்கொண்டிருக்கையில் அக் குழந்தை எழுந்து அறையை விட்டு

வெளியே ஓடிப்போய்விட்டது. அதன் பிறகே பந்துலுவின் மனைவியும் சென்றுவிட்டாள்.

அப்போது கோபாலய்யங்கார் வீரேசலிங்கம் பந்துலுவை நோக்கி, "இந்தக் குழந்தையையும் இதன் தாயையும் பற்றிய கதை சொல்வதாகத் தெரிவித்தீர்களே? இப்போது சொல்லுகிறீர்களா?" என்று கேட்டார்.

பந்துலு பூகம்பம் முதலாக நாளதுவரை தாமறிந்து கொண்ட அளவில் அவ்விருவருடைய கதை முழுதையும் ஸாங்கோபாங்கமாக எடுத்துரைத்தார்.

"என் ஜன்மம் பலிதமாய் விட்டது" என்றார் கோபாலய்யங்கார்.

"அதெப்படி?" என்று பந்துலு கேட்டார்.

"இப்படிப்பட்ட பெண்ணரத்தினை விவாகம் செய்யும் பொருட்டாகவே நான் நெடுங்காலமாகக் காத்திருந்தேன். இப்போது என் மனோரதம் நிறைவேறிவிட்டது" என்றார் அய்யங்கார்.

இதைக் கேட்டு வீரேசலிங்கம் பந்துலு கலகலவென்று நகைத்தார்.

"ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று அய்யங்கார் கேட்டார்.

"விவாகம் முடிந்து விட்டதுபோல் நீங்கள் பேசுகிறீர்களே! அதைக் கேட்டு நகைத்தேன். தங்களை மணம்புரிந்துகொள்ள அந்தப் பெண் ஸம்மதிப்பாளோ மாட்டாளோ? இன்று ராத்திரி அவள் போஜன காலத்

தில் நம்மோடிருந்து விருந்துண்பாள். ஸாதாரணமாக, ஹிந்து ஸ்திரீகளிடம் காணப்படும் பொய்ந்நாணம் அவளிடத்தில் சிறிதேனும் கிடையாது. அப்போது நீங்களிருவரும் பரஸ்பரம் ஸந்திக்து ஸம்பாஷணை செய்யலாம்; இடமுண்டாகும். நாளைக் காலையில் என் மனைவியின் மூலமாக அந்தப் பெண்ணுடைய ஸம்மதத்தை விசாரித்துத் தெரிந்துகொள்ளலாம். அவள் ஸம்மதமுணர்த்துவாளாயின், பிறகு விவாகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யலாம்" என்று பந்துலு சொன்னார். இதைக் கேட்டு கோபாலய்யங்கார்—"அப்படியானால் இன்றைக்கும் நாளைக்கும் நான் இங்கேயே தங்களுடைய விருந்தாளியாக இருந்து விடுகிறேன். எனக்கு வேறெங்கும் எவ்விதமான கார்யமுமில்லை" என்றார்.

"அப்படியே செய்யுங்கள்" என்றார் பந்துலு.

பிறகு வீரேசலிங்கம் பந்துலு தம்முடைய பேனைமைக்கூடு முதலிய கருவிகளை எடுத்து வைத்து எழுத்து வேலை செய்யத் தொடங்கினர்.

கோபாலய்யங்கார் சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடியே நித்திரை போய்விட்டார்.

கோபாலய்யங்கார் தூங்கிக்கொண்டிருக்கையில் சமையலறைக்குள் மாதரிருவரும் இராத்திரி போஜனத்துக்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்து கொண்டிருந்தனர். மிக விஸ்தாரமான சமையல்; ஆறு சுவைகளும் வியப்புறச் சமைந்தது. வீரேசலிங்கம் பந்துலுவின் மனைவி சமையல் தொழிலில் மிகத்தேர்ச்சி பெற்றவள்.

நமது விசாலாக்ஷியோ அவளிலும் ஆயிரமடங்கு அதிகத் தேர்ச்சி கொண்டவள். கோபாலய்யங்கார் பிராமண ஆசாரங்களைக் கைவிட்டுப் பாஷண்டராய் விட்டபோதிலும், "பிராமணை: போஜனப்ரியா:" (பிராமணர் உணவில் பிரியமுடையோர்) என்ற வாக்கியத்தை அனுஸரிப்பதில் ஸாமான்ய வைதிக ப்ராஹ்மணர்களைக் காட்டிலும் நெடுந்தூரம் மேற்பட்டவர். ப்ராமணர்களை குற்றஞ் சொல்ல வேண்டுமென்ற கருத்துடன் மேற்படி வாக்கியத்தைப் பலர் உபயோகப்படுத்துகிறார்கள். 'பார்ப்பானுக்குச் சோற்று ருசியில் மோஹம் அதிகம்' என்று மற்ற ஜாதியார் ஸாதாரணமாகச் சொல்லிவருகிறார்கள். பிராமணர்களே சில ஸமயங்களில் இதைத் தங்கள் ஜாதிக்கு இயற்கையில் அமைந்ததொரு குறைபோல பேசிக்கொள்ளுகிறார்கள். சில ஸமயங்களில் தம்மைத் தாம் வியந்துகொள்ளும் நோக்கத்துடன் ஒரு பெருமையாக அவ் வசனத்தைக் கையாடுகிறார்கள். வேறு சில ஸமயங்களில் மற்ற ஜாதியாரிடமிருந்து பணங் கேட்பதற்கு மூகாந்தரமாக இந்த வாக்கியத்தைத் தவிர்க்கொணர்க விதியைப் புலப்படுத்துவது போல் எடுத்துரைக்கிறார்கள். ஆனால் இந்த வாக்கியம் வெறும் பிசகென்று நான் நினைக்கிறேன். "ஸர்வே ஜநா: போஜனப்பிரியா:" எல்லா ஜனங்களும் போஜனத்தில் பிரியமுடையவர்கள் என்பது என்னுடைய அபிப்பிராயம். உணவின் அளவை எடுத்து நோக்கின் ஸாதாரண பிராமணனொருவனைக் காட்டிலும் ஸாதாரண சூத்திரன்—மறவன், அல்லது இடையன், அல்லது உழவன்,

எந்தத் தொழிலாளியும்—நாளொன்றுக்குக் குறைந்த பக்ஷம் மூன்றுமடங்கு அதிகமாகத் தின்னுகிறான். ஆங்கிலேயன் ஒன்பது மடங்கு அதிகமாக உண்கிறான். ஜர்மனியன் இருபத்தேழு பங்கு அதிகமாகத் தின்கிறான். இனி, அளவை விட்டுவிட்டு, ஆஹாரத்தின் பக்குவபேதங்களை என்னுமிடத்தே அதில் பிராமணர், அல்லாதார் என்ற பாகுபாட்டுக் கிடமில்லை. செல்வர்கள் உணவைப் பலவகையாகப் பக்குவங்கள் செய்து புசிக்கிறார்கள். ஏழைகள் சிலவகைப் பக்குவங்களை செய்கிறார்கள். பரம ஏழைகளாய், ஒருவேளை சோற்றுக்கும் வழியில்லாத ஜனங்களே, இந் நாட்டில், லக்ஷக் கணக்காக மலிந்து கிடக்கிறார்கள். இவர்கள் கூழும் கஞ்சியும் ஒருகால் மிளகாயும் தவிர வேறுவிதமான பக்குவங்களை உண்ணுதல் அருமையிலும் அருமையிலும் அருமை. இத்தனை கொடிய ஏழ்மை நிலையில் பெரும்பாலும் பள்ளர் பறையர்களும் சூத்திரர்களில் தாழ்ந்த வகுப்பினருமே இருக்கிறார்கள். ஆனால் மற்ற வகுப்பாரிலும் பலர் அந்த ஸ்திதிக்கு மிக ஸமீபத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். பிராமணர்களிலும் அங்ஙனமே பலர் அந்தப் பரிதாபகரமான நிலையில் அகப்பட்டுத் தவிக்கத் தான் செய்கிறார்கள். ஆனால் இந்த தேசத்தில் மற்ற ஜாதி ஏழைகளைக் காட்டிலும் பிராமண ஏழைகளுக்கு, முக்கியமாக வைதிகபிராமணர்களுக்கு, இரும் சாப்பாடு அதிகமாகக் கிடைக்கும் வழி யேற்பட்டிருக்கிறது. எனிலும் இவ் விஷயத்தில் பிராமணரென்றும் அல்லாதாரென்றும்

பிரிவுசெய்தல் பொருந்தாது. பொதுப்படையாக ஏழை களின் வீட்டில் செய்வதைக் காட்டிலும் செல்வர் வீட் டில் கறி குழம்பு முதலிய பதார்த்தங்களில் அதிகவகுப் புக்கள் சமைக்கிறார்களென்று சொல்லலாம். இந்த விதிக்குப் பல விலக்குக்களுமுள்ளதால், 'பொதுப் படையாக' என்றேன். ஏனென்றால் செல்வமிருந்த போதிலும் லோப குணமுடையோரின் வீடுகளில் போஜனவகைகள் மிகக் குறைவாகத்தான் இருக்கும். தரித்ரவும், தொழில் செய்யாமல் சோம்பேறிகளாக வாழும் செல்வர்களுக்கும், பொருள் தேடுவதிலும் அதைக் காப்பதிலும் மிதமிஞ்சிய கவலை செலுத்தும் செல்வர்களுக்கும் ஜீர்ணசக்தி எப்போதும் பரம மோச மாகவே இருக்குமாதலால், அவர்கள் வீட்டில் எத்தனை வகையான பக்குவங்கள் செய்தபோதிலும் ஒன்றிலும் ருசியேற்படாது. எற்கெனவே, இத்தகையோர் போஜ னப்பிரியர் என்று சொல்லத்தகார். அன்னத் துவேஷ முடையோரை போஜனப்பிரியர்என்று கூறுவதெப்படி? இந்த விஷயத்தைக் குறித்து இன்னும் அதிக விஸ்தார மாக எழுதலாம். எனிலும், போஜனம் பண்ணுவதில் எல்லோரும் விருப்புடையோரே யெனிலும், போஜன விஷயத்தைக்குறித்து நீண்ட ப்ரஸ்தாபம் நடத்துவதில் தற்காலத்துப் படிப்புப் படித்தவர்களுக்கு அதிகச்சுவை யேற்படாதாகையாலும், இந்நூல் படிப்போரில் எவ் வித ருசியுடையோருக்கும் அதிக அருசி யேற்படாமல் கதையெழுத வேண்டுமென்பது என்னுடைய நோக்க மாதலாலும் எனது கருத்தை இங்கு சுருக்கமாகச்

சொல்லி முடித்துவிடுகிறேன். எவ்வகையாக நோக்கு மிடத்தும் பிராமணர் போஜனப்பிரியர் என்று கூறி அவ்வகுப்பினர் இவ்விஷயத்தில் பொது மனித ஜாதியினின்றும் வேறுபட்ட குணமுடையோர் என்று குறிப்பிடும் பழமொழியுக்தமில்லை யென்பதே என் அபிப்ராயம். இது நிற்க.

கோபாலய்யங்காருக்கு ஜீர்ண சக்தி அதிகம். வீமசேனனுக்கு 'விருகோதரன்' ஓநாய் வயிறுடையோன்—என்ற பெயரொன்று உண்டு. ஓநாய்க்குப் பசி அதிகமாம். தின்னத் தின்ன—எவ்வளவு தின்றபோதிலும்—ஸாதாரணமாக அதன் பசி அடங்குவதில்லையாம். உழைக்கும்போது மிகவும் தீவிரத்துடனும் நிதானத்துடனும் சோம்பலென்பது சிறிதேனு மில்லாமலும் உழைத்தால், மனிதர் இப்படிப்பட்ட பசி பெறலாம். தொழில் செய்வதில் வலிமை செலுத்த வேண்டும். ஒருவனது முழு வலிமையையும் செலுத்திச் செய்யப்படும் தொழிலே தொழிலாம். ஆனால், எவ்வளவு தொழில் செய்த போதிலும், அதை எத்தனை வலிமையுடன் செய்த போதிலும், அதனால் உடம்புக்கு சிரமமுண்டாகாத வண்ணமாகச் செய்யவேண்டும். வேர்க்க வேர்க்க கஸ்ரத் எடுப்பவன் ஸமர்த்தனல்லன். எத்தனை கஸ்ரத் எடுத்தாலும் வேர்வை தோன்றுதபடி தந்திரமாக எடுப்பவனே ஸமர்த்தன். இதை ஒரு வேளை ஸாதாரண மல்லர் அங்கீகாரம் செய்யத் தகைக்கக் கூடும். ஆனால் நூறு கஸ்ரத் பண்ணின மாத்திரத்திலேயே உடம்பெல்லாம் வெயர்த்துக் கொட்டிப் போகும் மனி

தனைக் காட்டிலும், ஆயிரம் கஸ்ரத் செய்தபின் வெயர்க்கும் மனிதன் அதிக ஸ்மர்த்தன் அதிக பலவான் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். இந்தக் கணக்கைத்தான் நான் இன்னும் சிறிது தூரம் எட்டிப் போடுகிறேன். கஸ்ரத் செய்யும் தொழிலாயினும், கை தெழுதும் தொழிலாயினும்—எல்லாவிதமான தொழிலுக்கும் தத்துவம் ஒன்றேயாம். அதாவது மனதில் சிரமந் தோன்றின பிறகு தான் உடம்பில் சிரமந் தோன்றுகிறது. அசைக்க முடியாத பொறுமையுடன் தொழில் செய்தால் தொழில் சிரமமுந் தோன்றாது; அது உன்னதமான வெற்றி பெறவுந் செய்யும். இங்ஙனம் தொழில் செய்தால் மேன்மேலும்புதிய ரத்தம் பெருகி, உடம்பில் மேன்மேலும் ஒளியும் வலியும் விருத்தி யடைந்துகொண்டு வரும். இந்த வழியில் வீமசேனனுக்கு ஆயிரம் பொன் கொடுக்கலாமென்னில், கோபாலய்யங்காருக்குப் பத்துப் பொன் கொடுக்கலாம். அவ்வளவு பண்டிதர். எனவே மதுமாம்ஸப் பழக்கங்களால், வீரசேலிங்கம் பந்துலு எதிர்பார்த்தபடி, கோபாலய்யங்கார் அத்தனை விரைவாக இறந்து போவாரென்று எதிர்பார்க்க இடமில்லை. இது நிற்க.

கோபாலய்யங்கார் போஜன ப்ரியர்களிலே சிரேஷ்டர். இந்த விஷயம் பந்துலுவின் மனைவிக்கு மிகவும் நன்றாகத் தெரியும். எனவே, விசாலாக்ஷியின் விழிகளென்னும் வலைக்குள் கோபாலய்யங்காரின் வ்ருதய மென்ற மானை வீழ்த்துவதற்கு இரை போடும் அம்சத்தில் கோபாலய்யங்காருடைய வயிற்றுக்கு ஸ்தூல

மாகிய விருந்து போடுவதே தக்க இரையென்று தீர்மானித்துக்கொண்டு, வீரசிங்கம் பந்துலுவின் மனைவி மிகவும் கோலாகலமாகச் சமையல் பண்ணினாள். முப்பது வகைக் கறி; முப்பதுவகை சட்டினி; முப்பது வகை பொரியல்;—எல்லாம் பசு நெய்யில். இலை போட்டு ஜலந் தெளித்துப் பரிமாறுதல் தொடங்கி விட்டது. காலிலே; குழந்தைக்கொன்று; விசாலாக்ஷிக் கொன்று; பந்துலுவுக்கொன்று; கோபாலய்யங்காருக் கொன்று. பந்துலுவின் மனைவி பரிமாறுகிறாள்.

பந்துலுவும் கோபாலய்யங்காரும் வந்து முதலாவது உட்கார்ந்தார்கள். சிறிது நேரத்துக்கெல்லாம் விசாலாக்ஷியும் குழந்தையும் வந்து உட்கார்ந்தனர். போஜனம் தொடங்கி நடைபெற்று வருகிறது. சிறிது நேரம் கழிந்தவுடனே கோபாலய்யங்கார் விசாலாக்ஷியை நோக்கி:—"விசாலாக்ஷி எங்கே?" என்று கேட்டார். இவள்தான் விசாலாக்ஷி யென்பது அவருக்குத் தெரியாது. பணிப்பெண்ணையும் குழந்தையையும் ஒன்றாக நோக்கியது முதலாக அப்பணிப் பெண்ணை விசாலாக்ஷி என்ற பிராந்தியில் அவர் மயங்கியிருந்தார்.

"நான்தான் விசாலாக்ஷி" என்றாள் விசாலாக்ஷி.

"நீயா விசாலாக்ஷி?" என்றார் கோபாலய்யங்கார்.

"ஆம்" என்றாள் விசாலாக்ஷி.

"காலையில் இக் குழந்தையுடன் சோலையில் விளையாடிக் கொண்டிருந்த பெண் யார்?" என்று கோபாலய்யங்கார் கேட்டார்.

" அவள் இக்குழந்தையுடன் விளையாடிக் கொண் டிருக்கவில்லை. இந்தக் குழந்தைக்குக் காவல் காத்துக் கொண்டிருந்தாள். அவள் பந்துலு வீட்டு வேலைக் காரி " என்று விசாலாக்ஷி சொன்னாள்.

கோபாலய்யங்காருக்கு நெஞ்சுக்குள் ஒரு பேரிடி விழுந்தது போலாயிற்று. காலையில் பூஞ்சோலையில் வேலைக்காரி சந்திரிகையை முத்தமிட்டபோது அச் செய்கையை இருவர் பார்த்ததாகவும் அவ்விருவருள் ஒருவர் அந்த வேலைக்காரியின் மீது காதல் கொண்டன ரென்றும் சென்ற அத்யாயத்தின் இறுதியில் சொல்லி யிருக்கிறேன். அங்ஙனம் நோக்கிய இருவர் கோபா லய்யங்காரும் பந்துலுவும். காதல் கொண்டவர் கோபா லய்யங்கார். அந்த வேலைக்காரிக்கு இருபது வயதிருக் கும். மிகவும் அழகுடைய பெண். விசாலாக்ஷியின் அழகு அறிவும் பயிற்சியும் கலந்த அழகு. பணிப்பெண் ணுடைய அழகு கிராமியமானது.

எனினும், இப்போது விசாலாக்ஷியை நோக்குமிடத் தே கோபாலய்யங்காருக்கு இவள் அதிக அழகா, அவள் அதிக அழகா என்றஸமுசய மேற்பட்டது. கண் களை மூடிக்கொண்டு மனவிழியால் பணிப் பெண்ணு டைய வடிவத்தை நோக்குவார். பிறகு கண்ணை விழித்து எதிரே நிற்கும் விசாலாக்ஷியின் முகத்தைப் பார்ப் பார். இப்படி இரண்டு மூன்று தரம் கண்ணை மூடி மூடி விழித்துச் சோதனை செய்து பார்த்ததில் அவருடைய புத்திக்கு இன்னார்தான் அதிக அழகென்பது நிச்சயப் படவில்லை. எனினும், விசாலாக்ஷியை மணம் புரிந்து

கொள்வதே பொருந்து மென்ற யோசனை ஒரு கூடாய் அவருக்குண்டாயிற்று. ஆயிறுப், காதல் வலிபதன்றோ? காதலுக்கெதிரே எந்த சக்தி, எந்த யோசனை நிற்க வல்லது? காதல் இறுதியிலே வெற்றி பெற்றுத் திரு. கோபாலய்யங்காரே! உம்முடைய விதி உறுதியாய் விட்டது. உமக்கு விசாலாக்ஷியை மணம்புரிந்து கொள் ளும் பாக்கியம் இனிக் கிடையாது. காதலை எதிர்த்து யாராலும் ஒன்றும் செய்யமுடியாது. அதன் போக்கு காட்டுத் தீயின் போக்கை யொத்தது. அது தானாகவே எரிந்து தணியவேண்டும். அல்லது, தெய்விகச் செயலாலாகப் பெருமழை பெய்து அதைத் தணிக்கவேண்டும். மற்றபடி, மனிதர் தண்ணீர்விட்டு அவிப்பது என்பது ஸாத்யமில்லை.

நெடுநேரம் போஜனத்தில் செலவிட்டார்கள். பல விஷயங்களைக் குறித்து ஸம்பாஷணை நடைபெற்றது. ஆனால் கோபாலய்யங்கார் மாவிலிருந்து ரஸம் போய் விட்டது. அவர் அந்த அற்புதமான பக்குவங்களை ருசி யின்றி உண்டார். பந்துலுவின் மனைவியும் பந்துலுவும் எதிர்பார்த்த வண்ணம் அவர் நிறைய உண்ணவுமில்லை. ஒவ்வொரு வகையிலும் சிறிது சிறிதுண்டார். பேச்சி லும் அவருக்கு அதிக ரஸமேற்படவில்லை. ஆஹாரம் முடிவு பெற்றது. படுக்கைக்குப் போகுமுன்னர் கோபாலய்யங்காரும் பந்துலுவும் படிப்பறையில் தனி யே இருந்து வெற்றிலை போட்டுக்கொண்டார்கள். அப் போது பந்துலுவை நோக்கி கோபாலய்யங்கார்—

"பந்துலுகாரு, நான் விசாலாக்ஷியை விவாகம் செய்து

கொள்ளப் போவதில்லை" என்றார். "என்? அவளிடம் என்ன குறை கண்டீர்?" என்று பந்துலு கேட்டார்.

அதற்கு கோபாலய்யங்கார்—"அவளிடம் நான் என்ன குற்றம் கற்பிக்க முடியும்? விசாலாக்ஷி ஸர்வ சுப லக்ஷணங்களும் பொருந்தியவளாகவே இருக்கிறாள். எனினும், மற்றொருத்திக்கு எனது நெஞ்சை நான் காணிக்கை செலுத்திவிட்டேன். மற்றொருத்தியின் மீது காதலுடையேன்" என்றார்.

"அதை நீங்கள் என்னிடம் காலையில் சொல்லவில்லையே? காலையில் விசாலாக்ஷியை மணம் புரிந்து கொள்ள மிகவும் ஆவலுடனிருப்பது போல் வார்த்தை சொன்னீர்களே? இப்போது திடீரென்று தங்களுடைய மனம் மாறியிருப்பதன் காரணம் யாது?" என்று பந்துலு வினவினார்.

"எனக்குக் காலையில் தெரியாது. எனது நெஞ்சை மற்றொருத்திக்குப் பறிகொடுத்து விட்டேன் என்ற செய்தி எனக்கிப்போதுதான் தெரிந்தது" என்றார் அய்யங்கார்.

"அஃதெங்ஙனம்" என்று பந்துலு கேட்டார்.

அப்போது கோபாலய்யங்கார் காலையிலே பூந்தோலையில் பணிப்பெண்ணும் குழந்தை சந்திரிகையுமிருப்பது கண்டு தாம் பணிப்பெண்மீது காமுற்ற செய்தியையும், அப்பால் அந்தக் குழந்தையின் அத்தை என்ற பேச்சு வரும்போதெல்லாம் தாம் அந்தப் பணிப்பெண்ணை

அக்குழந்தையின் அத்தையென்று தவறுதலாகக் கருதிவந்த செய்தியையும், அப்பால் இராத்திரி போஜன ஸமயத்தில் தமது தவறு தமக்கு விளங்கிய செய்தியையும் பந்துலுவிடம் விரிவாகக் கூறினார். இதைக் கேட்டவுடனே பந்துலு நகைத்தார். "காதலாவது, உருளைக் கிழங்காவது! அய்யங்கார் வ்வாமிகளே, பணிப் பெண்ணாவது, கன்யகாவது! நடக்கக் கூடிய விஷயமா? பணிப் பெண்ணை எங்ஙனம் மணம்புரிந்து கொள்ளப் போகிறீர்கள்?" என்று பந்துலு கேட்டார்.

இது கேட்டு கோபாலய்யங்கார்—"அந்தக் காரியம் அவ்வளவு தூரம் சிரமமென்று என் புத்திக்குத் தோன்றவில்லை. நாளைக்குக் காலையில் பொழுது விடிந்தவுடனே அவளை யழைத்து அவருடைய ஸம்மதத்தை அறிந்துகொள்வோம். அவள் ஸம்மதிப்பதுவாளாயின், அப்பால் அவளுடைய பந்துக்களைக் கண்டுபேசி வேண்டிய ஏற்பாடுகள் செய்து முடித்துவிட்டு இன்னும் ஒரு வாரத்துக்குள் விவாஹத்தை நடத்திவிடலாம். இதில் சிரமமெங்கே யிருக்கிறது?" என்றார்.

அப்போது பந்துலு—"தங்களைப்போன்ற ஸ்தானமும் மதிப்புடைய ஸ்நேகரை அந்தப் பெண் மணம் செய்துகொள்ள மிக விரைவில் ஸம்மதிப்பாள். அவளுடைய பந்துக்களும் கேட்டமாத்திரத்தில் இணங்கிவிடுவார்கள். இதிலெல்லாம் அதிகக் கஷ்டமில்லை. ஆனால் நீங்கள் அந்தப் பணிப்பெண்ணை மணம்புரிந்து கொண்டால் அதை உலகத்தார் கண்டு நிகைப்படைந்து தங்களைப் புத்தி ஸ்வாதீனமற்றவரென்று நினைப்பார்

கங்களுக்கு மதிப்பு மிகவும் குறைந்துபோய்விடும்" என்றார்.

"ஸர்க்கார் வேலை போகாதே! அதற்கு யாதொரு ஹானியும் வராது. இங்கிலீஷ் ராஜ்யம்! தஞ்சாவூர் சரபோஜி மஹாராஜாவின் ஆட்சியில்லை! எந்த ஜாதியார் எந்த ஜாதிப் பெண்ணை மணம் புரிந்து கொண்டபோதிலும், இங்கிலீஷ் ராஜ்யத்தில் தண்டனை கிடையாது" என்று கோபாலய்யங்கார் சொன்னார்.

அதற்குப் பந்துலு—"அவ்விஷயம் எனக்குத் தெரியாததன்று. தாங்கள் வேலைக்காரியை மணம் புரிந்து கொள்வதால் உங்கள்மீது ராஜாங்க அதிருப்தி ஏற்படாது. உங்கள் உத்தியோகத்துக்கு யாதொரு தீங்கும் நேராது. ஆனால், உங்களுடைய ஸ்நேகிதர்களும் உங்களுடன் ஸமபதவியுடைய பிறரும் உங்களை இகழ்ச்சியாகப் பேசுவார்கள். 'மதிப்புடன் வாழ்ந்தவனுக்கு நேரும் அபகீர்த்தி மரணத்தைக் காட்டிலும் கொடியது என்று கண்ணன் பகவத் கீதையில் சொல்லுகிறார். அந்த அபகீர்த்தியைக் குறித்தே நான் அஞ்சுகிறேன்" என்றார்.

இதுகேட்டு கோபாலய்யங்கார் — "வெறுமே விதவா விவாகம் செய்து கொண்டாலும் பந்துக்களும் ஸ்நேகிதர்களும் அபகீர்த்தி சாற்றத் தான் செய்வார்கள். அதற்குத் துணிந்த நான் இதற்குத் துணிதல் பெரிதன்று. பந்துக்களும் ஸ்நேஹிதர்களும் சிறிது காலம்வரை வாய் ஓயாமல் பழி தூற்றிக்கொண்டிருப்பார்கள். பிறகு அவர்களுக்கே சலிப்புண்டாய்

விதம். தேசிய வங்கியிலிருந்து பணம் எடுத்தால் கால் பேசு வது? தேசிய மனிதனை எடுத்தால் கால் நூற்றிக்கொண்டு நிரப்புவது? காலையிலிருந்து எல்லாம் சரியாயிருந்தது. ஜாதிப்பிரிவினை நிரந்தரமாயிருந்தது. சாகும் வரை பக்கத்து வீட்டுக்காரனுடன் பேசாமலிருக்க முடிவு செய்திருந்தார்கள். எதற்கும் இருக்கட்டும் என்று சில விசாலமனப்பான்மை உள்ளவர்கள் மட்டும் சாவுக்கு முன்னால் ஒரு தடவை பேசிக்கொள்ளலாம் என்று முடிவு செய்திருந்தார்கள். ஜாதிப்பிரிவினை நிரந்தரமாயிருந்தது. ஆனால் ஒரு விஷயம் மட்டும் மாறியிருந்தது. ஸ்நேகிதர்களும் எதிரிகளும் ஒரே மாதிரி நடந்து கொண்டார்கள். ஸ்நேகிதர்களின் ஜனத்தொகை குறைந்தது. எதிரிகளின் ஜனத்தொகை இரண்டு மடங்கு அதிகமாயிற்று. ஆகவே, ஒருவனுக்கு ஜாதிப் பிரஷ்டத்திலிருந்து நேரும் கஷ்டம் அதிகமாயிருந்தது. ஸ்நேகிதர்களும் இந்த விஷயத்தின் நுணுக்கத்தை மாற்றி இது பழுந்து செய்தியாய்விட்ட மாத்திரத்தில் முன்போலவே என்னுடன் பழகத் தொடங்கி விடுவார்கள். ஊர்வாயை மூட ஒரு உலை மூடியுண்டு. அதன் பெயர் காலம். பழைய ஸ்நேஹிதர்கள் கைவிட்ட போதிலும், புதிய ஸ்நேஹிதர் ஏற்படுவார்கள். பணம் உள்ளவரை ஒருவனுக்கு ஸ்நேஹிதரில்லை யென்ற குறைவு நேரிடாது. ஸர்க்கார் உத்தியோகமுள்ளவரை ஸ்நேஹிதரில்லை யென்ற குறைவு நேராது" என்றார்.

"இருந்தாலும் தாங்கள் அந்த வேலைக்காரியை மணம்புரிந்து கொள்வதில் எனக்கு ஸம்மதமில்லை. உலகத்தாரின் அபவாதத்தைப் பொருட்படுத்தாமல் நமது

மனச்சாக்ஷியின்படி நடப்பதே தகும் என்பதை நான் அங்கீகாரம் செய்து கொள்ளுகிறேன். உலகத்தின் அபவாதம் பெரிதில்லை. ஆனால், நீங்கள் விரும்புகிறபடி விவாகம் செய்துகொள்ளக் கூடாதென்பதற்கு வேறு காரணங்களுமிருக்கின்றன" என்று ஸ்ரீநிவாஸ பந்துலு சொன்னார்.

"அந்தக் காரணங்களை யெடுத்து விளக்குங்கள்" என்றார் கோபாலய்யங்கார்.

"முதலாவது, அந்தப் பணிப்பெண் சிறிதேனும் கல்வி பயிற்சி யில்லாதவள். கல்விப்பயிற்சி யில்லாவிடினும் மேற்குலத்துப் பெண்களிடம் பரம்பரையாக ஏற்படக் கூடிய நாகரிக ஒழுக்கங்களும் நடைகளும் சாமான்யமான கீழ்க்குலத்துப் பெண்களிடம் இரா. இதையெல்லாம் உத்தேசிக்குமிடத்தே, நீங்கள் அந்தப் பணிப் பெண்ணை மணம்புரிந்து கொள்ளுதல் மிகவும் சகாசகாரியம்" என்று பந்துலு சொன்னார்.

அதற்கு கோபாலய்யங்கார்—"நல்ல படிப்பு, நல்ல பயிற்சி, சிறந்த ஒழுக்கம், நல்ல ஸங்கீத ஞானம்—இன்னும் எத்தனையோ லக்ஷணங்களுடைய பெண்ணைத் தான் மணம்புரிந்து கொள்ளவேண்டுமென்று நானும் நினைத்திருந்தேன். ஆனால் அதுவெல்லாம் என் மனதில் உண்மையான காதல் தோன்று முன்னர் நினைத்த நினைப்பு. இப்போது மன்மதன் என் நெஞ்சில் சிங்காரனமிட்டு வீற்றிருந்து வேறொரு பாடஞ் சொல்லுகிறான். படிப்புப் பெரிதில்லை. பயிற்சி பெரிதில்லை. ஒழுக்கம் பெரிதில்லை. காதல் கண்ணிலேயே தான்

இனிது. மற்றிதல்லாம் பகற்காதலென்றே பொருள். மேலும், கிழ்க்குலத்துப் பெண்கள் தக்க தர்ம ஞானமில்லாமலிருப்பார்களென்று நினைப்பது தவறு. எல்லா ஜாதியாருக்குள்ளும் தர்மதாட்சியுடைய ஆண்களும் பெண்களும் இருப்பார்கள். ஆங்காங்கு எல்லா ஜாதிகளிலும் இருப்பார்கள். மேற்குலத்துக் குரிய நாகரிக நடைசீலக் கிழ்க்குலத்துப் பெண்கள் மிக விரைவிலே கற்றுக்கொள்ள முடியும். அந்தரங்க நடைகளென்பன செல்வத்தாலும் ஸ்தானத்தாலும் ஏற்படுவன. அவை பரம்பரையாலே தான் விளைய வேண்டுமென்ற அவசியமில்லை. பழக்கத்தால் உண்டாய்விடும். என்னுடன் ஒரு வருஷம் குடியிருந்தால் போதும். அந்தப் பணிப்பெண்ணுக்கு நாகரிக நடை களெல்லாம் சுலபமாக ஏற்பட்டுவிடும். படிப்பு முதலியனவும் நான் விரைவிலே அவளுக்குக் கற்றுக்கொடுப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்து விடு வேன்" என்று ஆய்யங்கார் சொன்னார்.

"உலக அனுபவமில்லாத பதினெரு வயதுப் பச் சைப் பிள்ளைகள் சொல்லக்கூடிய வார்த்தை இது. மூப்பது வயதாய், உயர்ந்த மர்க்காரி லெவியிலிருந்து ஸகலவித லௌகிக அனுபவங்களுமுடைய தாங்கள் இந்த வார்த்தை சொல்வதை கேட்டு எனக்கு மிக வியப் புண்டாகிறது. காதல் மூன்று நாள் நிற்கும் பொருள். வெறுமே புதுமையை அதாரமாகக்கொண்டது. புது மை மாறிப் போனவுடன் காதல் பறந்து போய் விடும். அப்போல் கனமான அறிவுப் பயிற்சியாலும் ஒழுக்கத்

காலும் கம்பத்துகருக்குள் எற்படும் பற்றுதலே நீலியுடையது'' என்று விசேசனிங்கம் பந்துலு சொன்னார்.

''மூன்று சாட்சுனிம் மாறுக்கூடிய புதுமை யுணர்ச்சிக்குக் காதலென்று பெயரில்லை. அதன் பெயர் பிராந்தி. அந்த பிராந்தி என் உள்ளத்தில் எழுக்கூடியதன்று. அவ்வித பைத்தங்கள் தோன்றுதபடி என் உள்ளத்தை நான் நன்றுகத் திருத்திப் பண்படுத்தி வைத்திருக்கிறேன். காதலென்பது தேவலோகத்து வஸ்து. இவ்வுலகத்துக்கு வாழ்க்கை மாறியபோதிலும் அது மாறுது. ஸாவித்ரியும் ஸத்யவானும்; லைலாவும் மஜ்னூவும்; சோமியோவும் ஜூலியெத்தும் கொண்டிருந்தார்களே, அந்தவஸ்துக்குக் காதலென்று பெயர். அது அழியாத நித்ய வஸ்து. ஹிமயமலை கடலில் மிதந்தபோதிலும், காதல் பொய்த்துப் போகாது. அத்தகைய காதல் நான் அந்தப் பணிப் பெண்மீது கொண்டிருக்கிறேன்'' என்று அய்யங்கார் சொன்னார்.

செவிடன் காதில் சங்கூதுவதுபோல் விசேசனிங்கம் பந்துலு பலபல நியாயங்கள் கூறி அந்தப் பணிப் பெண்மீது கோபாலய்யங்கார் கொண்டிருக்கும் மையலை அகற்றிவிட முயற்சி செய்தார். இவர் பாதி பேசிக் கொண்டிருக்கும்போதே கோபாலய்யங்கார் கொட்டாவி விடத் தொடங்கி விட்டார். அவருக்குப் பந்துலுவின் வார்த்தைகளில் ருசியில்லை. இதனை யுணர்ந்து பந்துலு—''ஸரி, இந்த விஷயத்தைக் குறித்து விஸ்

தாமதமாக நான்கு மணிக்குத் தானே பேசிக் கொள்ளலாம். இப்போது நிச்சயம் செய்யப் போவோம்" என்றார்.

அப்போது கோபாலய்யங்கார்—"அங்ஙனமே செய்வோம். ஆனால் தாங்கள் போகுமுன் தாங்கள் கையுசெய்து எனக்கொரு விஷயம் தெரிவிக்கவேண்டும். அந்தப் பணிப்பெண் யார்? அவளுடைய பெயர் யாது? அவளென்ன ஜாதி? அவளுடைய பெற்றோர் அல்லது சுற்றத்தார் எங்கிருக்கிறார்கள்?" என்று கேட்டார்.

அதற்கு ஷீலாசலிங்கம் பந்துலு—"அப்பணிப் பெண்ணுக்குப் பெயர் மீனாக்ஷி. அவள் ஜாதியில் இடைச்சி. அவளுடைய சுற்றத்தார் எங்கிருக்கிறார்களென்பது தெரியாது. ஏதோ ஏதோ! இதில் ஒரு முக்யமான விஷயத்தை யோசிக்க மறந்து விட்டோம்! ஒரு வேளை ஏற்கெனவே அவளுக்கு விவாகம் ஆய்விட்டதோ என்னவோ?" என்றார்.

"அதைக் குறித்துத் தங்களுக்கு ஸம்சயம் வேண்டியதில்லை. நான் காலையிலேயே அவளுடைய கழுத்தை நன்றாக கவனித்தேன், அவளுடைய கழுத்தில் தாலியில்லை" என்று கோபாலய்யங்கார் சொன்னார்.

"தாலி ஒரு வேளை ப்ரிக்கைக்குள்ளே மறைந்து கிடந்திருக்கக் கூடும். தங்கள் கண்ணுக்கு அகப்படாமல் இருந்திருக்கலாம்" என்றார் பந்துலு.

"அதைக் குறித்தும் ஸம்சயம் வேண்டியதில்லை. தாதலுக்குக் கண்கிடையாதென்று சிலர் தப்பான படி

மொழி சொல்லுகிறார்கள். காதலுக்கு மிகவும் கூர்மை யான கண்களுண்டு. நான் மிகவும் ஜாக்ரதையாகப் பார்த்தேன். காலியில்லை யென்பது எனக்குப் பரம நிச்சயம். அவளுக்கு விவாகமாகவில்லை. அவள் முகத்தைப் பார்த்ததிலேயே அவள் விவாகமாகாதவ ளென்பது எனக்குத் தெளிவாக விளங்கி விட்டது. எனக்கு இவ்விஷயத்தில் அனுபவம் அதிகம். ஒரு ஸ்த்ரீயின் முகத்தைப் பார்த்த மாத்ரத்திலேயே இவள் விவாகமானவள் அல்லது ஆகாதவள் என்பது எனக்கு ஸ்பஷ்டமாகத் தெரிந்துவிடும். இதுநிற்க. அவ ளுடைய சுற்றத்தார் எங்கிருக்கிறார்க ளென்பது தெரியாவிடினும், வேறு அவளுடைய விருத்தாந்தங் கள் அவளைப்பற்றித் தங்களுக்குத் தெரிந்திருக்கக் கூடி யனவற்றை எனக்குச் சொல்லுங்கள்" என்று கோபா லய்யங்கார் வேண்டினர்.

"எனக்கு அவளுடைய பூர்வோத்தரங்களைப்பற்றி ஒன்றுமே தெரியாது. அவள் என்னுடைய சொந்த வேலைக்காரியுமன்று. இங்கு எழும்பூரில் இதே தெருவில் நாலைந்து வீடுகளுக்கப்பால் என் நண்பர் வேங்கடாசல நாயுடு என்றொருவர் இருக்கிறார். அவர் பிரமஸமாஜத் தைச் சேர்ந்தவர். இந்த வீடும் அவருக்குச் சொந்த மானதே. இந்த வேலைக்காரி அவருடைய குடும்பத் தில் வேலை செய்பவள். இங்கு நான் தாமதிக்கும் சில தினங்களுக்கு என் மனைவிக்குத் துணையாக வீடு பெருக்கி, மாடு கறந்து, விளக்கேற்றி, இன்னும் வேறு சிறு தொழில்கள் செய்யுமாறு இவளை வேங்கடாசல

நாயுடு எங்களிடம் அனுப்பியிருக்கிறார். நாங்கள் ராஜமஹேந்திரபுரத்துக்குப் போகும்போது அப் பெண் மறுபடி நாயுடு வீட்டில் வேலைக்குப் போய்விடுவாள்" என்று பந்துலு சொன்னார்.

"காலைக்குக் காலையில் நான் வெடி வெங்கடாசல நாயுடுவைப் பார்க்கவேண்டும். அவர் இங்கு வருவாரா? நாம் அவருடைய வீட்டுக்குப் போகவேண்டுமா?" என்று கோபாலய்யங்கார் கேட்டார்.

"அவரையே இங்கு வரச் சொல்லலாம். நாம் போகவேண்டாம். எனினும், இந்தப் பணிப்பெண்ணை மணம்புரிந்து கொள்ளும் விஷயத்தைத் காங்கள் மறந்து விடுவதே யுக்தமாகத் தோன்றுகிறது" என்று வீரேசலிங்கம் பந்துலு கூறினார்.

இது கேட்டு கோபாலய்யங்கார் :—"எதற்கும் காலைக்குக் காலையில் நாயுடுவை இங்கு தருவியுங்கள். மற்ற சங்கதி பிறகு பேசிக்கொள்வோம்" என்றார்.

அப்பால் இருவரும் நித்திரை செய்யப் போய் விட்டனர். இரவிலேயே வீரேசலிங்கம் பந்துலு தமக்கும் அய்யங்காருக்கும் நடந்ததைப் பாலஜோஸ்யரைத் தவிர மனைவியிடந் தெரிவித்தார். அவள் மறுநாட் பொழுது விடிந்தவுடனே அச்செய்தியை யெல்லாம் விசாலாக்ஷியிடம் கூறினாள். அது கேட்டு விசாலாக்ஷி பந்துலுவின் மனைவியுடைய பாதங்களில் ஸாஷ்டாங்கமாக விழுந்து, "இது போதும். வேறு தக்க வரன் பார்த்து நீங்களே எனக்கு விவாகம் செய்துவைக்க

வேண்டும். உங்களை விட்டால் எனக்கு வேறு புகல் கிடையாது" என்றாள்.

அப்போது பந்துலுவின் மனைவி :—"பயப் படாதே, அம்மா. உனக்கு நல்ல புருஷன் கிடைப் பான். உன்னுடைய குணத்துக்கும் அழகுக்கும் ராஜா வைப் போன்ற புருஷன் அகப்படுவான். நான் உனக்கு மணஞ்செய்து வைக்கிறேன்" என்றாள்.

ஐந்தாம் அத்தியாயம்.

கோபாலய்யங்காருக்கு விவாகம்.

மறுநாட் காலையில் ஸ்ரீநிவாசலிங்கம் பந்துலு ஒரு ஆளனுப்பி வேங்கடாசல நாயுடுவைத் தமது வீட்டுக்கு வரவழைத்தார். நாயுடு, பந்துலு, அய்யங்கார் மூவரு மிருந்து பரியாலோசனை செய்யத் தொடங்கினார்கள். நாயுடுவும் பந்துலுவும், பணிப்பெண்ணாகிய மீனாக்ஷியை அய்யங்கார் விவாகம் செய்ய நினைப்பது தகாதென் றும், விசாலாக்ஷியை மணம் புரிவதே தகுமென்றும் பல காரணங்களுடன் எடுத்துரைத்தனர். அய்யங்காரின் மனதில் அக் காரணங்கள் தைக்கவேயில்லை. சுயநலத் துக் கனுகூலமாக இருக்கும் காரணங்களை அங்கீகரிப் பதும் பிறர்க்குரைப்பதும் மனித இயற்கை. சுயநலத்து க்கு விரோதமாக நிற்கும் நியாயங்களை ஸாதாரணமாகப் புறக்கணித்து விடுதலும் அல்லது அவற்றுக்கு எதிர் நியாயங்கள் கண்டுபிடிக்க முயல்வதும் மனித இயல்

பார். நியாய சாஸ்த்ரமான வாதி பிரதிவாதி என்ற இரண்டு வகையினரின் கொள்கைகளுக்கும் இடங் கொடுக்கத் தக்கது. திருவாங்கூரில் சிறு நகாலத்துக்கு முன்பு 'கர்டனர்கடப் சங்கரய்யர்' என்றொரு நியாயாதிபதி இருந்தாராம். அவர் தம்முன் விசாரணைக்கு வரும் வழக்குகளில் தனக்கபராதமாகத் தெவ்வொன்றினுள்ளத் தக் கக்ஷி சொல்வது நியாயமென்று தெரியாமல் மிகவும் ஸங்கடப்படுவாராம். 'நியாயம் எப்படி. வென்றாலும் போகுக' என்றெண்ணி, மனக்கப்படிக்கும் மனப் போனபடிக்குத் தீர்ப்புச் செய்யும் குணம் அவரிடம் கிடையாது. எப்படியேனும் உண்மையைக் கண்டுபிடித்து நீதி செலுத்த வேண்டுமென்பது அவருடைய தொழில், அங்ஙனம் செய்யப் புகுபிடத்தில், "வாதி சொல்வதைக் கேட்டாற் வாதி கக்ஷி உண்மையென்று தோன்றுகிறது. பிரதிவாதி சொல்வதைக் கேட்டால் பிரதிவாதி கக்ஷி பொய்யென்று தோன்றுகிறது. நான் எந்தக் கக்ஷிக்குத் தீர்ப்புச் சொல்வேன்?" என்று அவர் தம்முடைய நண்பரிடங் கூறி வருத்தப்படுவாராம். இது பற்றி அவருடைய நண்பர்கள் அந்த நியாயாதிபதிக்கு 'கர்டனங்கடப் சங்கரய்யர்' என்று பட்டப் பெயர் சூட்டினர்கள்.

இவ்வுலகத்தில் வெறுமே நீதி சாஸ்த்ரத்து வழக்குக்களின் விஷயத்தில் மாத்திரமன்று, ஜன ஸமூஹ ஸம்பந்தமாகவும், மத ஸம்பந்தமாகவும், பிற விஷயங்களைப் பற்றியும் தோன்றும் எல்லா வழக்குக்களிலும் இங்ஙனமே நடு உண்மையை கண்டு பிடித்தல் சாலவும்

சரமமென்று நான் நினைக்கிறேன். அளவற்ற தவ
றும் அதலால் விளையும் ஞானத்தினவு றுடையோரே
எதிலும் பக்ஷபாதமற்ற மயக்கமற்ற நடு உண்மை
கண்டு தேரவல்லார். மற்றப்படி உலகத்து வழக்குக்
கள் பெரும்பான்மையிலும், வலிமையுடைய மனிதருக்
கும் வகுப்புக்களுக்கும் சார்பாகவே நியாயந் தீர்க்கப்
படுகின்றது.

"பொய்யுடை யொருவன் சொல்வன்மையினால்
மெய்போலுமே ; மெய்போலுமே
மெய்யுடை யொருவன் சொல்லமாட்டாமையால்
பொய்போலுமே பொய்போலுமே."

இங்ஙனம் சொல்வலிமை மட்டுமே யன்று ; ஆள்
வலிமை, தேசல் வலிமை, பொருள் வலிமை—எல்லா
வித வலிமைகளும் நியாயத் தராசைத் தமது சார்பாக
இழுத்துக்கொள்ள வல்லன.

எனவே, அய்யங்கார் தம்முடைய உயர்ந்த கல்வி
யாலும், உயர்ந்த உத்தியோகத்தின் வலிமையாலும்,
தம்முள்ளத்திலமைந்த பேராவலின் வலியாலும் நாயகு
வையும் பந்துவையும் எளிதாகத் தமது சார்பில்
திருப்பிக்கொண்டார். அப்பால் நாயகுவிடம் பணிப்
பெண்ணின் பூர்வோத்தரங்களைக் குறித்து விசாரித்
தார். அவள் இடையர் வீட்டுப் பெண்ணென்றும், அவ
ளுடைய பிதா பல் மாடுகள் வைத்துக்கொண்டு ஊரா
ருக்குப் பால் விற்று ஜீவனம் செய்வாராய்ப் பக்கத்துத்
தெருவில் வசிக்கிறாரென்றும், அந்தப் பெண்ணுக்கு
இரண்டு மூத்த ஸஹோதரர் இருக்கிறார்களென்றும்,

அவர்கள் ஆலயில் வேலை செய்கிறார்களென்றும், தலைக்குப் பதினைந்து ரூபாய் சம்பளமென்றும், அவளுக்குத் தாய் இறந்து போய்விட்டாளென்றும், தலையன்னாரின் மனைவிகளே அவர்களுடைய வீட்டில் சமையல் செய்கிறார்க ளென்றும், ஆதலால் மீனாக்ஷிக்குத் தன் வீட்டில் எவ்விதமான வேலையுங் கிடையாதென்றும், நாயுடுவின் வீட்டிலும் அவளுக்குக் குழந்தைகளே மேற் பார்த்தல், ஸாமான்கள் வாங்கிக்கொண்டு வருதல் முதலிய கௌரவமான கார்யங்களே கொடுபட்டிருக்கின்றன வென்றும், வீடுவாயில் பெருக்குதல், பாத்திரங் கழுவுதல், துணி தோய்த்தல் முதலிய கீழ்க்காரியங்கள் அவள் செய்வது கிடையாதென்றும், அவள் கிறிஸ்தவப் பள்ளிக்கூடத்தில் படித்து நன்றாகத் தமிழ் எழுத வாசிக்கக் கற்றுக்கொண்டு இருக்கிறாள் என்றும், அமைதி பொறுமை இன்சொல் பணிவு முதலிய நல்ல குணங்களுடையவ ளென்றும், அவளுக்கு மாஸம் நாயுடு வீட்டில் பன்னிரண்டு ரூபாய் சம்பளமென்றும், அதை அவள் வீட்டில் கொடுக்கவில்லை யென்றும், நாட்டுக்கோட்டை ம. சி. மாணிக்கஞ் செட்டியார் கடையில் தன் பெயருக்கு வட்டிக்குக் கொடுத்துவிடு கிறாளென்றும், அந்தத் தொகை இதுவரை வட்டியுடன் ஐந்நூறு ரூபாய் இருக்குமென்றும், அவளுக்கு வயது இருபதென்றும், இன்னும் விவாகம் ஆகவில்லை யென்றும், விவாகத்துக்கு அவள் ஆவலுடன் எதிர் பார்த்திருக்கிறா ளென்றும் நாயுடு விஸ்தாரமாகத் தெரிவித்தார்.

"அவளுடைய பிதாவின் பெயரென்ன? அவர் இப்போது வீட்டிலிருப்பாரா?" என்று கோபாலய்யங்கார் கேட்டார்.

"அவளுடைய பிதாவின் பெயர் சுப்புசாமிக் கோனூர். அவர் இப்போது வீட்டிலிருப்பார்" என்று நாயுடு சொன்னார். உடனே கோபாலய்யங்காரின் வேண்டுகோளுக்கிணங்கி அவருடன் நாயுடு, பந்துலு இருவரும் சேர்ந்து மூவருமாகப் பக்கத்துத் தெருவிலிருந்த சுப்புசாமிக் கோனூருடைய வீட்டுக்குப் போனார்கள். அங்கு சுப்புசாமிக் கோனூர் காலையிலெழுந்து பழையது சாப்பிட்டுவிட்டு, வெற்றிலை பாக்கு புகையிலை போட்டுக்கொண்டிருந்தார். நாயுடுவையும் அவருடைய நண்பரிருவரையும் கண்டவுடன் அவர் எழுந்து நின்று, உள்ளேயிருந்து ஒரு நீளப்பலகை கொண்டு போட்டார். வந்தவர் மூவரும் அதன் மீதுட்கார்ந்து கொண்டார்கள். பிறகு, நாயுடு தாங்கள் வந்த நோக்கத்தை ஸாங்கோபாங்கமாகக் கோனூரிடம் எடுத்துரைத்தார். செக்கச்செவேறென்ற முகமும், கன்னங்கரேலென்ற சுருள் சுருளான கத்தரிக்க முடிமயிரும், அகன்ற தெளிந்த அறிவுச்சுடர்கின்ற விழிகளும், நெருக்க மீசையும், விரிந்த மார்பும், திரண்ட தோளும், வயிரப் பொத்தான் போட்ட பட்டுச் சட்டையும், தங்கக் கடிகாரமுமாகத் தமக்கு டிப்டி கலெக்டர் கோபாலய்யங்கார் மாப்பிள்ளையாக வருவதைக் கண்டு சுப்புசாமிக் கோனூர் பரவசமாய் விட்டார். அவருள்ளத்தில் ஆனந்தக்களி தாண்டவமாயிற்று. ஆயினும் பிராமணருக்குப் பெண் கொடுத்தால் பாவம் நேரு

மென்று ஒரு விஷயம் மாத்திரம் அவர் எனக்கு மிகச் சந்தேகப்படுகிறது.

"நான் எனக்கு திருப்தியாய், சாமீ? வேதாந்த னவன். எனக்கு இனிமேல் இவ்வுலகத்தாசை ஒன் றுமேயில்லை. எனக்கு இனிமேல் பரிசுத்தமும் பரி சுத்தமுமான ஜீவாத்மாவையும் பரமாத்மாவையும் ஒரே சமயத்தில் [illegible] எப்போதும் நிலைத்திருக்கும் இன்பம் ஒன்றே விரும்புகிறேன். கனகு என்னுயிரினும் மேலான குழந்தை. அவளை நான் உங்களிடம் சேர்த்து விட்டால் என் வாழ்நாளைச் சிலவழித்தவனாவேன். நான் சாஸ்திரங்களில் கட்டுக்கதையுடையவன். பிராமணனாகிய நான் சூத்திரப் பெண்ணைக் கலியாணம் செய்து கொடுப்பதால் எனக்குப் பாவம் நேரும். ஆகலால், நான் இந்த விஷயத்துக்கு ஸம்மதிக்கவே வழியில்லை" என்று சுப்பு சாமிக் கோனார் சொன்னார்.

இதைக் கேட்டு கோபாலப்பங்கார்—"கோனாரே, முதலாவது, நான் பிராமணனில்லை. நான் பிராமண தர்மத்துக்குரிய ஆசாரங்களைத் துறந்து சூத்திரனாகி விட்டேன். ஆகலால் தாங்கள் என்னைத் தங்கள் ஜாதி யாகவே பாவித்து, எனக்குத் தங்கள் மகளை மனம் புரிவிக்க வேண்டுகிறேன். மேலும் நிஜமான பிராமண னே பிராமண குலத்தில் மாத்திரமன்றி மற்ற நான்கு வர்ணங்களிலும் பெண்ணெடுக்கலாமென்று சாஸ்திரம் சொல்லுகிறது. இந்த விஷயத்தில் உங்களுக்கு ஸந் தேகமிருந்தால், என்னிடம் தமிழில் மறு ஸ்மிருதி

இருக்கிறது; உங்களிடம் அந்த நூலைக் காட்டு கிறேன். அதை நீங்களே வாசித்துப் பாருங்கள். உங் களுக்குத் தமிழ் வாசிக்கத் தெரியுமோ, தெரியாதோ? தெரியுமா? அப்படியானால் நீங்கள் நான் சொல்வது மெய்யென்பதைக் கண்கூடாகப் பார்த்தறிந்து கொள்ள லாம். இதில் எவ்விதமான பாவத்துக்கும் இடமில்லை" என்றார்.

"அங்ஙனம் சாஸ்த்ரமிருப்பது மெய்தான்" என்று வேங்கடாசல நாயுடு சொன்னார்.

"ஆமாம்; அதுவே மனு ஸ்ம்ருதியின் கொள்கை" என்று வீரேசலிங்கம் பந்துலு கூறினார்.

"எனினும், உலக ஆசாரத்தில் அவ்விதம் வழங்கு வதைக் காணோமே?" என்று சுப்புசாமிக் கோனார் ஆக்ஷேபித்தார்.

"நமது தேசத்தில் பூர்வ சாஸ்த்ரங்களுக்கும் நடைகளுக்கும் விரோதமான ஆசாரங்கள் பல பிற் காலத்தில் வழக்கமாய்விட்டன. அவற்றுள் இந்த விஷ யமும் ஒன்றும். இவ் விஷயத்தில் நமக்குத் தற்கால ஆசாரம் அதிகப் பிரமாணமன்று. முற்காலத்து சாஸ் திரமே அதிகப் பிரமாணம்" என்று கோபாலய்யங் கார் சொன்னார்.

அப்போது வேங்கடாசல நாயுடு சொல்லுகிறார்:— "கேளும், சுப்புசாமிக் கோனரே! பாவம் என்பதெல் லாம் வீண் பேச்சு. இது சாஸ்த்ரோக்தமான விஷயம். இதில் யாதொரு பாவமும் கிடையாது. அப்படியே

பாவமிருந்தபோதிலும், அந்த மாப்பிள்ளையும் பெண் ணையும் சாருமே பன்றி, உம்மைச் சாபமாக. அந்த வுடன், உமக்கும் சிறந்த பாவம் வந்து சேரக் கூடுமென்றிலும், அதற்குத் தகுந்த பிராயச்சித்தங்கள் பண்ணிவிடலாம். பெருமாள் கோயிலுக்கு ஏதேதும் காணிக்கை செலுத் தினால் போதும். அதில் எவ்வளவு கொடுப்ப பாவமும் வெந்து சாம்பராய்ப் போய்விடும். உமக்கு எத்தனை பணம் வேண்டுமானாலும், அப்படங்காயவர்கள் கொடுப் பார்'' என்றார்.

பணம் என்ற மாத்திரத்தில் பிணமும் வாயைத் திறக்கும் என்பது பழமொழி. சுப்புசாமிக் கோனார் எறக்குறையக் கொட்டாவி யளவுக்கு வாயைப் பிளந் தார்.

'' எனக்குக் கொஞ்சம் கடன் பங்களாவும் இருக் கின்றன. அவற்றையுந் தீர்த்துவைக்க ஏற்பாடு செய் தால் நல்லது'' என்று சுப்புசாமிக் கோனார் சொன்னார்.

'' தங்களுக்கு எத்தனை ரூபாய்க்குக் கடன் இருக் கிறது?'' என்று கோபாலய்யங்கார் கேட்டார்.

'' ஆயிரம் ரூபாய் கடன் இருக்கிறது'' என்றார் கோனார்.

''மூவாயிரம் ரூபாய் கொடுக்கிறேன்; போதுமா?'' என்று கோபாலய்யங்கார் கேட்டார்.

'' ஓ! யதேஷ்டம்! இந்த வாரத்துக்குள்ளேயே விவாகத்தை முடித்துவிடலாம்'' என்று சுப்புசாமிக் கோனார் சொன்னார். அப்பால், மீனாக்ஷியை அழைத்து

அவரைடைய மனம்தத்தையுச் தெரிந்து கொண்டான் நல்லதொரு கோபாலய்யங்கார் கூறினார்.

" அவன் இப்போது வீட்டிலில்லை. நானே அவனிடம் சொல்லி விடுகிறேன்; அவள் சிறு குழந்தை. அவள் பிறந்தநாளில் இதுவரை என் வார்த்தையை ஒரு முறைகூடத் தட்டிப் பேசியதில்லை. இப்போது, இப்படியே உயர்ந்து. இத்தனை மேன்மையான வைபவத்தை நினைத்துமிடத்தில் அவள் என் சொல்லைச் சிறிதேனும் தட்டிப் பேசமாட்டாள்" என்றார் கோனார்.

" எதற்கும் அவளை அழைத்து ஒருமுறை அவனிடமும் கேட்டால் தான் என் மனம் ஸமாதான மடையும் நாங்கள் இங்கேயே காத்துக் கொண்டிருக்கிறோம். அவளை அழைப்பியுங்கள் " என்று கோபாலய்யங்கார் சொன்னார். அங்ஙனமே கோனார் ஒரு ஆளை விட்டு மீனாக்ஷியை அழைத்து வரும்படி செய்தார். மீனாக்ஷி வந்தாள். அவளைத் தனியாக அழைத்துப் போய் சுப்புசாமிக் கோனார் விஷயங்களைத் தெரிவித்தார். மாப்பிள்ளையின் படிப்பையும், செல்வத்தையும், பதவியையும் மிகவும் உயர்வாக்கி வர்ணித்தார். மாப்பிள்ளையின் அழகை அவள் பார்க்கும்படி அவரையும் காண்பித்தார். அவள் அவருக்கு வாழ்க்கைப்பட ஸம் மதமுற்றாள். சிறிது நேரத்துக்குள் மகளையும் அழைத்துக்கொண்டு சுப்புசாமிக் கோனார் புறத்து திண்ணைக்கு வந்து சேர்ந்தார். அவருடைய விழிகளை கோபாலய்யங்கார் நோக்கினர். அவள் எதிர் நோக்களித்தாள். ' கண்ணெனை கண்ணினை நோக்கொக்கின், வாய்ச்சொற்

கள் என்ன பயனுமில்' என்றார் திருவள்ளுவ நாயனார். அவளைப் பார்த்த மாத்திரத்திலே தம்மை மணம் புரிய ளம்மதப்பட்டு விட்டாளென்று கோபாலய்யங்காருக் குத் தெளிவாகப் புலப்பட்டு விட்டது. எனினும், பரி பூர்ண நிச்சய மேற்படுத்திக் கொள்ளுமாறு அவர் சுப்புசாமிக் கோனரை நோக்கி, "மீனாக்ஷி என்ன சொல்லுகிறாள்?" என்று கேட்டார்.

"அவளிடத்திலேயே நேராகக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமே" என்றார் கோனர்.

"என்ன மீனாக்ஷி? என்ன சொல்லுகிறீர்? என்னை மணம் புரிந்துகொள்ள ஸம்மதக்காரா?" என்று கோபாலய்யங்கார் கேட்டார்.

மீனாக்ஷி "ஸம்மதம்" என்று மௌனமாகக் கூறித் தலை கவிழ்ந்தாள். கோபாலய்யங்காருக்கு ஜீவன் மறுபடி உண்டானது போல் ஆயிற்று. அவர் முகத்தில் புன்னகை தோன்றிற்று.

அந்த வாரத்திலேயே கோபாலய்யங்காரும் மீனாக்ஷியும் பிரம ஸமாஜத்தில் சேர்ந்து கொண்டார்கள். அவ் விருவருக்கும் பிரம ஸமாஜ விதிகளின்படி, சென்னப்பட்டணத்தில் வைத ஸமாஜக் கோயிலிலே விவாகம் நடைபெற்றது. விவாகம் முடிந்தவுடனே கோபாலய்யங்கார் தமது மனைவியை அழைத்துக்கொண்டு தஞ்சாவூருக்குப் போய் அங்கு தம் உத்தியோகத்தில் சேர்ந்து கொண்டார்.

ஆறும் அத்யாயம்.

விசாலாக்ஷிக்கு நேர்ந்த ஸங்கடங்கள்.

கோபாலய்யங்காருக்குத் தன்னை மணம் புரிந்து கொள்ள ஸம்மதமில்லையென்று தெரிந்த மாத்திரத்தில், விசாலாக்ஷி வீரேசலிங்கம் பந்துலுவின் மனைவியிடம் தனக்கு வேறெங்கேனும் நல்ல வரன் தேடி வாழ்க்கைப்படுத்த வேண்டுமென்று மேன்மேலும் மன்றாடிப் பிரார்த்தனை புரிந்தாள். அதற்குப் பந்துலுவின் மனைவி, "நீ எங்களுடன் இங்கேயே இன்னும் பத்துப் பதினைந்து நாள் இரு. இன்னும் சில தினங்கள் வரை பந்துலு கோபாலய்யங்காரின் விவாகத்துக்கு வேண்டிய கார்யங்களிலேயே கருத்துச் செலுத்த நேரும். உன் விஷயத்தைக் கவனிக்க அவருக்கு அவகாசம் இராது. பத்து நாள் ஆன பின்பு நாங்கள் ராஜமஹேந்திரபுரத்துக்குப் போவோம். நீயும் எங்களுடன் வா. எப்படியாவது உனக்கு நான் வரன் தேடிக் கொடுக்கிறேன். ஆனால் அவஸரப்படுவதில் யாதொரு கார்யமும் நடக்காது. சிறிது காலம் பொறுத்துத் தான் பார்க்க வேண்டும்" என்றாள்.

இதுகேட்டு விசாலாக்ஷி:—"மயிலாப்பூரில் என்னுடைய அம்மங்கார் (மாமன் மகள்) இருக்கிறாள். அவளுடைய புருஷன் ஹைகோர்ட் வக்கீல் உத்தியோகம் பார்க்கிறார். பந்துலுகாரு கோபாலய்யங்காரின் விஷயத்தைக் கவனித்துக் கொண்டிருக்கையில்,

நான் இங்கு சும்மா என் இருக்க வேண்டும்? இந்தப் பத்து நாளும் நான் போய் மயிலாப்பூரில் காமணிக் கிறேன். பத்து நாள் கழிந்தவுடன் இங்கு வருகி றேன்" என்றாள்.

பிறகு அவர்கள் இவ் விஷயத்தைக் குறித்து வீரேசலிங்கம் பந்துலுவிடம் ஆலோசனை செய்தார் கள். அவர் விசாலாக்ஷி தன் இஷ்டப்படி செய்வதைத் தடுக்கத் தாக்ஷாயணி இல்லை யென்றும், அவள் மயி லாப்பூரில் பத்து நாள் இருந்துவிட்டு வரலாமென்றும், இதற்கிடையில் அவளாரம் சேர்ந்தால் தாம் மயிலாப் பூருக்குக் கடிதமனுப்பி விசாலாக்ஷியைத் தருவித்துக் கொள்ளக் கூடுமென்றும் தெரிவித்தார்.

"மயிலாப்பூரில் உன் பந்துவின் விலாஸ மெப் படி?" என்று பந்துலு கேட்டார்.

அதற்கு விசாலாக்ஷி:—"என் அம்மாங்காருடைய* புருஷன் மயிலாப்பூரில் லஸ் சர்சு ரஸ்தாவிலிருக்கிறார். அவருடைய பெயர் ஸோமநாதய்யர். ஆனால் அவரும் என் அம்மங்காரும் அவர் வீட்டிலிருக்கும் அவரு டைய தாயாரும் மிகவும் வைதிக நம்பிக்கைகளுடைய வர்கள். நான் மறுபடி விவாகம் செய்துகொள்வதில்

---

* மாமன் மகளுக்கு அம்மங்கார் என்றும், அத்தை மகளுக்கு அத்தங்கார் என்றும் பிராமணர்களுக்குள்ளே பெயர்கள் வழங்கி வருகின்றன. சிலருக்கு ஒரு வேளை இச் சொற்கள் தெரியாமலிருக்கக் கூடுமாதலால் அவற்றை இங்கு விளக்கிக் கூறினேன்.

அவர்களுக்கு ஸம்மதம் இராது. விவாகம் நடந்து முடி யும்வரை, நான் விவாகம் செய்துகொள்ளப் போகிறே னென்ற விஷயத்தை என் பந்துக்களுக்கு அநாவசிய மாகத் தெரிவிப்பதில் எனக்கு ஸம்மதமில்லை. ஆக லால், தாங்கள் நான் இருக்குமிடத்துக்கு ஆளனும் கடிதமேனும் அனுப்பவேண்டியதில்லை. இன்ன தேதி யன்று நான் இங்கு வரவேண்டுமென்று இப்பொழுதே சொல்லிவிடுங்கள். அந்தத் தேதியில் நான் இங்கு வருகிறேன். அதற்கிடையே என்னை மறந்துபோய் விடாமல் என் காரியத்தில் கவனம் செலுத்திக்கொண் டிருங்கள்" என்றாள்.

அப்போது பந்துலு, "நான் உன்னை மறக்கவே மாட்டேன். உன் விவாகம் நடப்பதற்குரிய யோசனை என் புத்தியில் அகலாதே நிற்கும். நீ அதைக் குறித் துக் கவலைப்பட வேண்டா. ஜனவரி மாஸம் இரு பதாந் தேதி நான் இங்கிருந்து ராஜமஹேந்திரபுரத்துக் குப் புறப்படப் போகிறேன். நீ ஜனவரி மாஸம் பதினெட்டாந் தேதி இங்கு வா" என்றார்.

இது கேட்டு விசாலாக்ஷி :—"தாங்கள் இந்த ஊரி லிருக்கும்போதே எனக்கொரு வரன் தேடிக் கொடுக்க முயற்சி பண்ணுவதே உசிதமென்று நினைக்கிறேன். இது ராஜதானிப் பட்டணம். இங்கு கிடைக்காத வரன் ஒதுக்கமான கோதாவரிக் கரையில் எங்ஙனம் கிடைக்கப் போகிறான்?" என்றாள்.

அதற்குப் பந்துலு :—" அப்படி யில்லை யம்மா.

இங்கிருக்காலும் ராஜாதிராக்கிரபுத்தி லிருக்காலும். ஒன்று போலே தான். இவ் விஷயத்தில் சிரக்கை யெடுக்கக் கூடிய நண்பர்கள் எனக்குப் பல ஊர்களிலே இருக்கிறார்கள். அவர்களுக்குக் கடிதம் எழுதுகிறேன். அவர்கள் அவ் வவ் விடங்களில் விசாரித்து விடை யெழுதுவார்கள். பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்வேன்" என்றார்.

"பத்திரிகைகளில் விளம்பரம் பிரசுரிக்கும்போது என் பெயர் போடக்கூடாது" என்றாள் விசாலாக்ஷி.

"சரி. பெயர் போடாமல் பொதுப்படையாக எழுதுகிறேன். இந்த கோபாலய்யங்காரின் விவாகம் இன்னும் ஒரு வாரத்துக்குள் முடிந்துபோய் விடும். பிறகு, உன் காரியத்தை முடிக்குமுன்பு நான் வெளிறக்க வேலையையும் கவனிக்க மாட்டேன். எத்தனை சிரமப் பட்டேனும் உன் நோக்கத்தை நான் நிறைவேற்றிக் கொடுக்கிறேன். பயப்படாதே" என்று பந்துலு சொன்னார்.

"அப்படியானால், என்ன ஜனவரி பதினெட்டாந் தேதியா இங்கு வரச் சொல்லுகிறீர்கள்?" என்று விசாலாக்ஷி கேட்டாள்.

"இன்னும் எழுட்டு நாளில் கோபாலய்யங்கார் விஷயம் முடிந்து போய்விடும். எனவே ஜனவரி பத்தாந் தேதி இங்கு வந்துவிடு" என்றார் பந்துலு.

அப்பால் பந்துலுவிடமும் அவர் மனைவியிடமும் விடைபெற்றுக்கொண்டு விசாலாக்ஷி, சந்திரிகை ஸஹித

மாக, மயிலாப்பூர் லஸ் சர்சு ரஸ்தாவில் ஹைகோர்ட் வக்கீல் ஸோமநாதய்யர் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்.

வக்கீல் ஸோமநாதய்யரின் மனைவிக்குப் பெயர் முத்தம்மா. நமது விசாலாக்ஷியை கண்டவுடன் இவள் மிகுந்த ஆவலுடன் நல்வரவு கூறி உபசாரம் பண்ணினாள். இவ்விருவரும் அத்தங்கார் அம்மங்கார் என்ற உறவு மாத்திரமேயன்றி பால்ய முதலாகவே மிகவும் நெருங்கிய நட்புடன் பழகி வந்தவர்கள்.

முத்தம்மா திருநெல்வேலியில் தெப்பக் குளத் தெருவில் பிறந்து வளர்ந்து வந்தவள். திருநெல் வேலியிலிருந்து வேளாண்குடி மிகவும் ஸமீப மாத லால் இவ் விருவரும் அடிக்கடி ஸந்திக்க நேர்ந்தது. சுற்றுப் பக்கங்களிலுள்ள கிராமங்களில் எங்கு எந்த பந்துக்கள் வீட்டில் என்ன விசேஷம் நடந்த போதி லும், அங்கு விசாலாக்ஷியும் வருவாள்; முத்தம்மாளும் வந்து விடுவாள். வந்தால், இவ் விருவர் மாத்திரம் எப்போதும் இணைபிரிவதே கிடையாது. சாப்பாட் டுக்கு உட்கார்வதென்றால், இருவரும் கூடவே தொடை மேல் தொடை போட்டுக்கொண்டு உட்கார்வார்கள். விளையாட்டிலும் பிரிய மாட்டார்கள். விளையாட்டு முடிந்தால் இருவரும் கைகோத்த வண்ணமாகவே சுற்றித் திரிவார்கள். இராத்திரி, இருவரும் ஒரே பாயில் கட்டிக்கொண்டு படுத்திருப்பார்கள். மேலும், ஒரு ஸமயத்தில் முத்தம்மாளை அவளுடைய பிதா வேளாண்குடியில் தன் தமக்கை வீட்டிலேயே, அதா வது, விசாலாக்ஷியின் தாய் வீட்டிலேயே, ஆறுமு

மானம் இருக்குமட்டும் விட்டிருந்தார். அது எப்போ தென்றால், பத்தாம் வயதில் விசாலாக்ஷி காலியறுக்க னாயத்தில். அப்போது முத்தம்மா வந்து வேளாண் குடியில் சில மாதங்களிருந்தால் தான் தன் மகனுக்கு ஒருவாறு ஆறுதலேற்படுமென்று கருதி விசாலாக்ஷி யின் தாய் தன் தம்பிக்கு அவளாகச் சொல்லி யனுப்பினாள்.

தமக்கையின் வார்த்தையைத் தட்ட மனமில்லா மல், அவர் அங்ஙனமே முத்தம்மாளை வேளாண்குடி யில் கொண்டு விட்டிருந்தார். ஒரே வீட்டில் ஒன்று தக் குடியிருந்தபோது அவ்விருவரின் உளங்களும் ஒட் டியே போய்விட்டன. வேளாண்குடியிலிருந்து திரும் பித் திருநெல்வேலிக்குச் சென்ற பிறகுங்கூட நெடுங் காலம் வரை இரா வேளைகளில் கனவிலெல்லாம் முத் தம்மா விசாலாக்ஷியுடன் ஸம்பாஷணை நடத்துவது போலவே பேசிக் கொண்டிருப்பாள்.

விசாலாக்ஷியோ வெனில், அப் பிரிவு நிகழ்ந்து நெடுங்காலம் வரை பகலிலேயே தன்னுடைய மற்றத் தோழிப் பெண்களைக் கூப்பிடும் போது 'முத்தம்மா, முத்தம்மா' என்று கூப்பிடுவாள். இப்படி அளவு கடந்த பாலிய ஸ்நேஹமுடைய இவ்விருவரும், முத் தம்மா புக்ககத்துக்கு வந்த பிறகு ஒருவரையொருவர் ஸந்திக்கவேயில்லை. ஸோமநாதய்யர் கும்பகோணத்தில் பிறந்து வளர்ந்து கும்பகோணம் காலேஜிலேயே பீ.ஏ. பரீக்ஷை தேறினார். முத்தம்மாளுடைய பிதா அவ ளுடைய ஜாதகத்தை எடுத்துக்கொண்டு மதுரை, திருச்

சிறுப்பள்ளி காலேஜ்களைப் பரிசோதனை செய்து முடித்துக் கடைசியாகக் கும்பகோணம் காலேஜுக்கு வந்து லோகநாதய்யரைக் கண்டு தக்க மாப்பிள்ளை யென்று நிச்சயித்தார். அந்தக் காலத்தில் வரதக்ஷணை—அதாவது மாப்பிள்ளையைப் பெண் வீட்டார் பணம் கொடுத்துக் கிரயத்துக்கு வாங்குதல்—என்ற வழக்கம் கிடையாது. கன்யா சுல்கம்—அதாவது பெண்ணுக்கு மாப்பிள்ளை வீட்டார் கிரயங் கொடுத்து வாங்குதல்—என்ற வழக்கமே நடைபெற்று வந்தது. எனவே, லோகநாதய்யர் ஏழைகளுடைய பிள்ளையாதலால், கன்யாசுல்கம் கொடுத்து விவாகம் செய்து கொள்ள வழி தெரியாமல் "என்னடா, செய்வோம்!" என்று தத்தளித்துக் கொண்டிருந்தார். அவருடைய உருவ லக்ஷணங்களையும் படிப்புத் திறமையையும் உத்தேசித்து அவருக்கே தனது மகளைக் கன்யா சுல்கம் வாங்காமல், அதாவது இலவசமாக, மணம்புரிந்து கொடுத்து விடலாமென்று முத்தம்மாளின் பிதா தீர்மானித்தார்.

லோகநாதய்யர் திருநெல்வேலிக்கு வந்து பெண்ணுடைய அழகையும் புத்திக் கூர்மையையும் கண்டு விபந்து அவளை மணம்புரிந்து கொள்ள உடம்பட்டார். தனக்கு விவாகம் முடிந்த பின்னர் முத்தம்மா விசாலாக்ஷியை ஒரிரண்டு முறைதான் ஸந்திக்க நேர்ந்தது. முத்தம்மா ருதுவாய், அவளுக்கு ருது சாந்தியாய் அவள் புக்ககத்துக்குச் சென்ற பின்னர் அவளும் விசாலாக்ஷியும் ஒரு முறை கூட ஸந்திக்க நேரவில்லை. அவள் கும்பகோணத்துக்கு வந்துவிட்டாள். பி.ஏ., பி.எல்.

பரிசாக கொடுத்து, மிளாமகாதய்டன், மைறகோர்ட் வக்கீ லாப் கூப்பிகாணாக்கிக் சில வருவங்கள் உத்தியோகம் பண்ணிவிட்டு, அப்பால் பணம் எடுப்போய் அதினின் றும் அதிகப் பணக்காரை கொண்டு மயிலாப்பூரில் வந்து ஒரு பெரிய பங்களா வாடலைக்கு வாங்கி அதில் குடியிருந்து சென்னை மைறகோர்ட்டில் பெரிய வக்கில் உத்தியோகம் பண்ணிக்கொண்டு வருகிறார்.

ஆகலால், இப்போது, பல வருஷங்களுக்குப் பின் புதுகாக ஸந்திக்கதில், முத்தம்மாளும் விசாலாக்ஷி யும் ஸ்நேஹ பாவசாரப் பூவாக்க ஸாகரத்தில் அழுந்திப் போயினர். முத்தம்மாளுக்கு இருபத்தைதந்து வயது கானிருக்கும். அவளுக்கு மூன்று ஆண் குழந்தை களிருந்தன. மூத்தவனுக்கு ஒன்பது வயதிருக்கும். அவன் பெயர் ராமகாதன். அடுத்த பின்னைக்கு ஏழு வயதிருக்கும். அவன் பெயர் ராமகிருஷ்ணன். அதற்க குழந்தைக்கு மூன்று வயது. அதன் பெயர் அநந்த கிருஷ்ணன்.

மூத்தம்மாளுடைய மாமியார் ஒருத்தி அங்கவிட்டி லேயே இருந்தாள். அவளுக்கு அறுபது வயதிருக்கும். அவள் விதவை. அவள் பெயர் ராமுப்பாட்டி. அவ ளுக்கு சுபாயதிரகம், அவ்வு, காசதிரகம்; அதாவது, சீக்கிரத்தில் கொல்லுகிற தொரோமான சுகபமில்லை நோபாளியை மருந்தாலும் உயிருடன் வைத்து வைத்துக் கடைசியில் கொல்லும் மாதிரி. இரத்தி ஏழு மணியாய் விட்டால் அவள் இரும்பத் தொடங்கி விடு வாள். பாதி ராத்திரி, ஒரு மணி, காலை இரண்டு மணி

வரைமறுத்தபயங்கரமாக இருமிக்கொண்டேயிருப்பாள். அந்த இருமலைக் கேட்டால், கேட்பவருடைய பிராணன் இரண்டு நிமிஷத்துக்குள்ளே போய் விடும் போலிருக்கும். ஆனால், ராமுப்பாட்டி சென்ற முப்பது வருஷங்களாக அப்படித்தான் இருமிக்கொண்டு வருகிறாள். அவளுடைய பிராணன் அணுவளவுகூட அசையவில்லை.

இப்படியிருக்கையில், விசாலாக்ஷி ஸௌமநாதய்யர் வீட்டுக்கு வந்து சேர்ந்து சில தினங்கள் கழிந்தவுடனே, ஒருநாள் எகாதசி இரவு. ராமுப்பாட்டிக்கு அன்று முழுதும் போஜனம் கிடையாது. ஆகலால், அவள் அன்று வழக்கப்படி இரவில் இருமமுடியவில்லை. அயர்ந்து தூங்கிப்போய் விட்டாள். அவள் கீழ்த்தளத்தில் வெளியோரத் தரையில், ஒரு கட்டில் மெத்தை போட்டுப் படுத்துக்கொண்டிருந்தாள். அவள் பக்கத்தில் ஒரு 'புயற்காற்று' விளக்கும் ஒரு தீச்சட்டியும் கட்டிலுக் கருகில் இருபுறங்களிலும் பாரிசத்துக் கொன்றுக, இரண்டு நாற்காலிகளின் மீது, அதாவது சாய்விடமில்லாத நாற்காற் பலகைகளின்மீது, வைக்கப்பட்டிருந்தன.

அதற்கு மேற்கே மூன்றறை கழித்து நான்காமறையில் விசாலாக்ஷி ஒரு கட்டில் மெத்தை போட்டுப் படுத்திருக்கிறாள். அவளுடைய கட்டிலின் அருகே கட்டிலைக் காட்டிலும் சிறிதளவு உயரமான ஒரு நாற்காற் பலகையின்மீது ஒரு புயற்காற்று விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அவள் கையில் வைத்து வாசித்துக் கொண்டிருந்த ஒரு நாவல் தானே

தழுவி வெள்ளை வெளேரென்ற உரையின்மீது விழுந்து கிடந்தது. அவளுடைய கரிய நீண்ட கூந்தல் அந்த கைய வெள்ளைத் தலையணையின்மீது கன்னங் கரே லென்று விழுந்து கிடந்தைத தோற்றுகையில், பனிக் குன்றின் மீது கரிய மேகம் கிடப்பது போலிருந்தது. விசாலாக்ஷி விதவையாயினும் அவள் தலையை மொட்டை யடிக்கவில்லை. சாகும்பொழுது தன் தமையன் மனைவி "அடீ, விசாலாக்ஷீ! நீ எப்படியேனும் மறு விவாகம் செய்துகொள்" என்று சொல்லிவிட்டுப் போன வார்த் தையில் அவளுக்கிருந்த நம்பிக்கையாலும், திடீரென்று தூகம்பமும் புயற்காற்றும் விளவித்த, எதிர்பார்க்கப் படாத, கோர மரணப் பெருங்கோலத்தைக் கண்டும் பின் ஆவி பிழைத்தகுணல் அவளுக்கேற்பட்ட பெரிய ஸ்கர்யத்தாலும் அவள் தலை மயிர் வளர்க்கத் தொடங்கி விட்டாள்.

தலைமயிர் வளர்த்துக் கொண்டே ஓரிரண்டு வரு ஷம் நாங்களேரி அவளுடைய தாயுடன் பிறந்த மற் றொரு மாமன் வீட்டில் சந்திரிகையுடன் வந்து குடி யிருந்தாள். அந்த ஊரில் அந்தணர்கள் அவள் மீது அபாரமான பழிதூற்றத் தொடங்கி விட்டார்கள். அந்தத் தூற்றுதல் பொறுக்க மாட்டாதபடியாலே தான் அவள் அவ்வூரை விட்டுப் புறப்பட்டு வழி நெடு கத் தீர்த்த யாத்திரை செய்துகொண்டு சென்னப் பட்டணம் வந்து சேர்ந்திருக்கிறாள். "இந்த ஊரில் எனக்குப் பழி பொறுக்க முடியவில்லை; மாமா, நான் காசிக்குப் புறப்பட்டுப் போய் கங்கைக் கரையில் தவம்

பண்ணிக் கொண்டிருந்து நாளடைவில் என் பிராணனை விட்டு விடுகிறேன். எனக்கு வழிச்செலவுக்கு ஏதேனும் பணம் கொடும்; நான் அங்கே சென்று பிச்சை யெடுத்து இந்தக் குழந்தை சந்திரிகையையும் காப் பாற்றி நானும் பிழைத்துக் கொள்கிறேன்" என்று அவள் நாங்களெனியை விட்டுப் புறப்படுமுன் தன் மாமனிடம் ப்ரார்த்தனை செய்துகொண்டாள்.

"இந்தக் குழந்தைக்கு விவாகம் பண்ணவேண்டிய பருவம் சேர்ந்தால் அப்போதென்ன செய்வாய்?" என்று மாமா கேட்டார்.

" அங்கே நம்முடைய தமிழ்த் தேசத்துப் பிராமணர் அனேகர் குடியேறி யிருக்கிறார்கள். இனி மேன் மேலும் அதிகமாகக் குடியேறி வருவார்கள். யாத்திரைக்காக வேறு, வருஷந்தோறும் நம்மவர் அனேகர் வந்து போய்க்கொண்டிருப்பார்கள். அத்தனை ஜனங்களில் என் சந்திரிகைக்கொரு மாப்பிள்ளை கிடைக்காமலா போகிறான்?" என்று விசாலாக்ஷி கேட்டாள்.

உடனே அவர் விசாலாக்ஷியின் கையில் ஐந்நூறு ரூபாய் வெள்ளி நாணயங்களாக ஒரு பையில் கட்டிக் கொடுத்து, "இதைக் கொண்டுபோய், ரயில் செலவு போக மிஞ்சியதை அங்கு யாரேனும் ஸாஹூகார் கையில் வட்டிக்குக் கொடுத்து வட்டி வாங்கி ஜீவனம் செய்து கொண்டிரு. அடிக்கடி இங்கு வந்து போய்க் கொண்டிரு. உனக்கு அப்போதப்போது என்னாலான உதவிகளைச் செய்து கொண்டு வருகிறேன். பயப்

படாதே!" என்று சொல்லி மாமா இவளை யனுப்பி விட்டார். ஊராருடைய தூற்றல் பொறுக்க மாட்டா மையால் அவருக்குப் இவளை எப்படியேனும் அக்க ஊரை விட்டனுப்பி விடுவதில் மும்முரமாகவே யிருந் தது. அவருடைய இஷ்டத்துக்கு விரோதமாக அவளை மொட்டை யடித்துக் கொள்ளுமபடி கட்டாயப்படுத்த அவருக்கு மனமும் இல்லை. அவர் அப்படியே கட்டாயப் படுத்தியிருந்தாலும், அவள் அதற்குக் கட்டுப்பட் டிருக்கமாட்டாள். அவள் கட்டுப்பட்டு மொட்டை யிட்டுக் கொண்டாலும் அதைப் பார்க்க அவருக்கு மனமிருந்திராது. அவருக்கு விசாலாக்ஷியின்மீது அத் தனை தூரம் பிரியம். அவளைத் தன் சொந்த மகள் போலவே கருதினார்.

எனவே, அவரிடம் பணத்தை வாங்கிக்கொண்டு விசாலாக்ஷி புறப்பட்டு வழி நெடுக ஸ்தல யாத்திரை செய்த ஸமயத்தில் அவளுடைய கற்பை யழிக்கவும், அவள் கையிலிருந்த பணத்தை அபஹரித்துக்கொள்ள வும், அல்லது அவ்விரண்டு வகைப் பாதகச் செயல் களையும் கலந்து செய்யவும் பல ஆண்மக்கள் முயன்ற னர். ஆனால் அவளை சாஸ்த்ரோக்தமாக விவாகம் செய்துகொண்டு அவளுடன் சந்தோஷமாக வாழக்கூடிய வழக அவளுக்கு எவனும் தென்படவில்லை. எனவே, முழுதும் ஆசாபங்கமுற்றவளாய், அதனால் ஒருவித மூர்க்கத்தைரியம் அதிகப்பட்டுத் தான் இவள் ஜீ. சுப்பிரமணிய அய்யரிடத்திலும், அப்பால் வீரேசலிங் கம் பந்துலுவிடத்திலும், இத்தனை பெருந் தணிவுடன்

தனக்கு வான்தேடிக் கொடுக்கும்படி வற்புறுத்தக் கூடியவளாயிருள். அப்பால், மேலே கதையை நடத்துவோம்.

இப்போது, அதாவது 1905ஆம் வருஷ ஆரம்பத்தில் கார்காலத்தில் ஏகாதசி இரவில், மயிலாப்பூர் வக்கீல் ஸோமநாதய்யர் வீட்டில் தரைப்பகுதியில் ஓரறையில் விசாலாக்ஷி சந்திரிகையுடன் படுத்திருந்த கதையை மேலே சொல்லுவோம்.

அவளுடைய கரிய கூந்தல் அந்த நேர்த்தியான விளக்கொளியில் மிக அழகாகப் பரந்துகிடந்தது. அவளுடைய முகம் பூர்ணசந்திரனைப் போலே ஒளி வீசிற்று. அவளுடைய மார்பு மெல்லிய பச்சைப் பட்டு ரவிக்கையின்மீது வனப்புறப் பூரித்து நின்றது. அவளுடைய மார்புத் துணி தாக்கத்திலே கழன்று போய்விட்டது. தேவ ஸ்திரீயோ, கந்தர்வ ஸ்திரீயோ என்று தேவ கந்தர்வர் கண்டாலும் மயங்கத் தக்க வாறு அத்தனை எழிலுடன் படுத்திருந்தாள்.

அவள் அறைக்கதவைத் தாழ்ப்போடவில்லை. கிழவி ராமுப்பாட்டியின் இருமல் சத்தம் காதில் விழாத படி, ஸோமநாதய்யர் தம் பத்தினியுடன் மாடிமேல் கொல்லைப்புறத்திலிருந்த அறையில்—அதாவது கிழவியினுடைய அறையிலிருந்து எத்தனை தூரம் தள்ளியிருக்க ஸாத்தியப்படுமோ, அத்தனை தூரத்தில்—இராத்திரிகளிலே படுத்துக்கொள்வது வழக்கம். ஆனால் அன்று அந்த ஏகாதசி இரவில் ஸோமநாதய்யரின்

மனைவி முத்தம்மாள் அவருடன் படுத்துக்கொள்ளவில்லை. ஏனென்றால், அவள் அன்று ராகவையாடைய குழந்தைகளைத் தூக்கு விலக்குற்றவளாய், வெளித் திண்ணையில் ஒரு மூங்கிலறை கட்டி அதற்குள் கோரைப்பாயை விரித்து அதன்மீது படுத்திருந்தாள். அவளுடைய மூன்று குழந்தைகளாகிய அருக்காணி ராக்கி அவளுடன் படுத்திருந்தான். ராமராகவும் ராமகிருஷ்ணையும் மேலே ஸோம நாதய்யரின் கட்டிலுக்கும் அவருடைய மனைவியின் கட்டிலுக்கும் புறத்தே குழந்தைகளைக்கொண்டு போட்டிருந்த மூன்று கட்டிலின்மீது படுத்திருந்தனர்.

நள்ளிரவு. சோவென்று மழை கொட்டுகிறது. அந்த மழையாகிய தாயின் பாட்டின் குரலில் மயங்கிப் போன குழந்தைகளைப் போல் ராமும் பாட்டியும், கோட்டத்தில் வெளிக் குச்சியில் படுத்திருந்த கோட்டக் காவலனும், திண்ணையில் படுத்திருந்த முத்தம்மாளும், அவளருகே அருந்த கிருஷ்ணனும், உள்ளே விசாலாக்ஷியும் சந்திரிகையும், மேலே ராமநாதனும் ராமகிருஷ்ணனும் எல்லாரும் ஆழ்ந்த நித்திரையில் மூழ்கி விட்டனர். அப்போது ஒரு ஆள் மாத்திரம் நித்திரை செய்யவில்லை. அது நம்முடைய ஸோம நாதய்யர். ஸோமநாதய்யருக்கு வயது அப்போது சுமார் முப்பதிருக்கும். ஆள் நல்ல அழகன். 'ஸான் டோ' இரும்பு குண்டு போட்டு அவருடைய இரண்டு புஜங்களும் அழகாகப் பருத்திருந்தன. கோட் சைகள் நன்கு திரண்டிருந்தன. முன்னங் கைகள்

செவ்வனே உருட்சி பெற்றிருந்தன. விரல்கள் உறுதி பெற்றிருந்தன. மார்பு நேர்த்தியாகப் படைத்திருந்தது. வயிறு நன்கு படிந்திருந்தது. மேலும் பலவித அப்பாஸங்களால் அவருடைய தொடைகளும் கால்களும் வலிமையும் உறுதியும் அழகு முறச் சமைந்திருந்தன. ஆனால் அவருக்குத் தீமையிர் மாத்திரம் கொஞ்சம் நரைக்கத் தொடங்கிவிட்டது. கொஞ்சம் வழுக்கையுமுண்டு. கண் பார்வை கொஞ்சம் சொற்பம். அதற்காக ஐரோப்பியக் கண் சோதனை வைத்தியரிடமிருந்து உயர்ந்த விலையில் மூக்குக் கண்ணாடி வாங்கி அதற்குத் தங்கக் கம்பி போட்டு மாட்டிக் கொண்டிருந்தார். முகம் நன்றாக க்ஷவரம் பண்ணி மிகவும் தளதளப்பாகவும் அழகாகவு மிருந்தது. அவர் மாத்திரம் அன்றிரவு நித்திரை புரியவில்லை யென்றேன். ஏன்? என்ன செய்து கொண்டிருந்தார்? மெல்ல மாடியை விட்டுக் கீழே இறங்கினர். விசாலாக்ஷி படுத்திருந்த அறைக்குப் புறம்பே வந்து நின்றார். கதவை மெல்ல அசைத்துப் பார்த்தார். கதவு விசாலாக்ஷியின் சூதற்ற தன்மையால் திறந்து கிடந்தது. உள்ளே நுழைந்தார். விசாலாக்ஷி படுத்திருந்த கட்டிலின் பக்கத்தே போய் நின்றுகொண்டு அந்த திவ்யமான ஒளியில் அவளுடைய திவ்ய விக்ரஹத்தைக் கண்டார். தன்னை மறந்து போய் அவள் மேலே கையைப் போட்டார். அவள் திடுக்கிட்டு விழித்து இவரைப் பார்த்தவுடன் அஞ்சி மார்புத் துணியை நேரே போர்த்துக் கொண்டாள். அப்பால் இவரை நோக்கி மிகவும் கோபத்துடன் :—

"இங்கு எதன் பொருட்டாக இத்தகைய வந்தீர்?" என்று கேட்டாள். இவர் எதிர்பாராவண்ணம் மறுமொழி சொன்னார். இவருடைய சொற்களின் ஓவியாலும் முகக் குறிகளாலும் இவருடைய ஏற்றுக்கொள்ளாமை என்பதை அவள் உணர்ந்துகொண்டு தன் இடுப்பில் சொருகியிருந்த கூர்மை கத்தியொன்றை எடுத்து இவருடைய பார்வைக்கு நேரே நீட்டினாள். இவர் பயந்து போய் இன்னது செய்வதென்று தெரியாமல் திகைத்து நின்றார். இவர் இங்ஙனம் நிற்பதைக் கண்டு விசாலாகூடி இடிபோன்ற உரத்த குரலில் "இங்கிருந்து வெளியேறிப் போம்" என்றலறினாள்.

"குழந்தையை எழுப்பிவிடாதே" என்று வைராக்கியர் மெல்ல ஜாடைகள் செய்வது போலே கிளர்த்துச் சொன்னார். முன்னைக் காட்டிலும் உரப்பாக விசாலாகூடி முப்பத்து மூன்று இடிகள் சேர்ந்து இடிக்கும் குரலில் "போம்; இங்கிருந்து வெளியேறு!" என்று மற்றொரு முறை கர்ஜித்தாள். லௌகராக்கியர் வெலவெலத்துப்போய் வெளியேறி மாடிக்குச் சென்று தன் அறைக்குள்ளே போய், அறைக் கதவைச் சார்த்தித் தாழிட்டு, விளக்கை யணைத்துவிட்டு உள்ளே கட்டில் மீது படுத்துக்கொண்டு மேலெல்லாம் போர்வை போட்டு மூடிக் கண்களை இறுக மூடிக்கொண்டு தூங்க முயன்றார். ஆனால் அவருக்குத் தூக்கம் வரவில்லை. உடம்பெல்லாம் வியர்க்கத்து. போர்வையைக் கழற்றி யெறிந்தார். குளிரெடுக்கத்து. மறுபடி போர்வையை எடுத்து மூடிக்கொண்டார். கைகால் உளைச்சல்

ஸஹிக்க முடியவில்லை. நரம்புகளைத் தூண்டு தூண்டாக வெட்டுவது போன்ற வேதனை யுண்டாயிற்று. அவ ருடைய ஹ்ருதயத்தில் ஆயிரம் பிசாசுகள் சேர்ந்து நர்த்தனம் செய்வதுபோன்ற பலவகைப்பட்ட வேதனை ஏற்பட்டது. அவருக்குத் தூக்க மெப்படி வரும்?

கீழே விசாலாக்ஷி, இவர் வெளியேறியவுடன் தன் அறைக்கதவைத் தாழிட்டுக்கொண்டு மறுபடி கட்டி லின்மேல் வந்து படுத்துச் சில க்ஷணங்களுக்கெல்லாம் ஆழ்ந்த நித்திரையில் அமிழ்ந்து விட்டாள். மழை சற சரவென்று பொழிந்துகொண்டிருக்கிறது.

ஏழாம் அத்யாயம்.

விடுதலை.

"ஒருகால் விடுதலை யுற்றூன்
எப்போதும் விடுதலை யுற்றூன்"

மறுநாட் பொழுது விடிந்தது. ஸோமநாதய்யர் வீட்டில் சிராத்தம், அவருடைய பிதாவுக்கு. முத் தம்மா தூரங்குளித்து வீட்டுவேலைக்கு மீண்டுவிட் டாள். முத்துஸ்வாமி தீக்ஷிதரும், குப்புஸ்வாமி தீக்ஷி தரும் பிராமணர்த்த பிராமணராக அழைக்கப்பட்டிருந் தனர். அவ்விருவருள்ளே முத்துஸ்வாமி தீக்ஷிதரே புரோஹிதர். இவ்விருவரும் காலையில் பத்து மணிக்கே வந்துவிட்டார்கள். ஆனல் பகல் இரண்டு மணிவரை ஸோமநாதய்யர் மெத்தையைவிட்டுக் கீழே இறங்க முடியவில்லை. அவருக்குப் பலமான தலை நோவு.

இதனிடையே தீக்ஷிதரிருவரும் சும்மா பதுமைகள்போல் உட்கார்ந்திருக்க மனமில்லாமல் வேதாந்த விசாரணையில் புகுந்தனர்.

முத்துஸ்வாமி தீக்ஷிதர் சொன்னார்:—"ஜீவன் முக்தி இவ்வுலகத்தில், அதாவது, இந்த சரீரத்தில் ஸாத்யமே" என்றார்.

"ஆனால் இந்த சரீரத்தில் எற்படும் முக்தி எப்போதைக்கும் சாசுவதமாக நிற்பது நிச்சயமில்லை" என்று குப்புசாமி தீக்ஷிதர் சொன்னார்.

"உமக்கு விடுதலை என்றால் இன்னதென்ற விஷயமே புலப்படவில்லை யென்று தெளிவுபட விளங்குகிறது. விடுதலை யென்பது ஒருகாற் பெறப்படுமானால் மறுபடி தளையென்பதே கிடையாது. முக்திக்குப் பிறகு பந்தமில்லை. ஸர்வபந்த நிவாரணமே முக்தி. அந்த ஸர்வபந்த நிவாரணமாவது ஸர்வ துக்க நிவாரணம், ஸர்வ துக்கங்களையும் ஒரேயடியாகத் தொலைத்து விடுதல். அந்த நிலைமை பெற்ற பிறகும் ஒருவன் மறுபடி பந்தத்துக்குக் கட்டுப்பட இடமுண்டாகு மென்று சொல்லுதல் பொருந்தாது." என்று முத்துஸ்வாமி தீக்ஷிதர் சொன்னார்.

"ஸ்வர்க்க லோகத்திற்குப் போன பிறகும் அங்கிருந்து வீழ்ச்சி யேற்படுவதாக நம்முடைய சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றனவே, அதன் தாத்பர்ய மென்ன?" என்று குப்புசாமி தீக்ஷிதர் கேட்டார்.

"அந்த விஷயமெல்லாம் எனக்குத் தெரியாது. ஜீவன்முக்திக்கு நான் சொன்னது தான் சரியான அர்த்தம். அதை எந்த சாஸ்த்ரத்திலும் பார்த்துக் கொள்ளலாம்" என்று முத்துஸ்வாப்பா தீக்ஷிதர் சொன்னார்.

இவர்கள் இந்த விஷயத்தைக் குறித்து நெடுநேரம் வார்த்தையாடிக் கொண்டிருந்தார்கள்.

கடைசியாக ஸோமநாதய்யர் மாடியை விட்டுக் கீழே யிறங்கி வந்தார். அவர், "இந்த தர்க்கத்தின் விஷயமென்ன?" என்று கேட்டார்.

"'ஒருமுறை ஜீவன் முக்தி பெற்றால் அது எப்போதைக்கும் சாசுவதம்தானே? மீட்டும் பந்தப்ராப்தி ஏற்படுமா' என்ற விஷயத்தைக் குறித்து விசாரணை செய்கிறோம்" என்று குப்புசாமி தீக்ஷிதர் சொன்னார்.

"இந்த விஷயத்தில் தங்களுடைய அபிப்ராயமெப்படி?" என்று ஸோமநாதய்யரை நோக்கி முத்துஸ்வாப்பா தீக்ஷிதர் கேட்டார்.

"எனக்கு வேதாந்த விவகாரங்களில் பழக்கம் போதாது" என்று ஸோமநாதய்யர் சொன்னார்.

திடீரென்று விசாலாக்ஷி அவர்களுக்கு முன்னே தோன்றி, "ஜீவன்முக்தி இவ்வுலகில் ஸாத்ய மென்பதே பொய். நீங்கள் அதை யடைந்திருக்கிறீர்களோ? அடைந்தோர் யாரையேனும் பார்த்திருக்கிறீர்களோ?" என்று கேட்டாள்.

"ஸ்வாமி ராமகிருஷ்ண பரமஹம்ஸர் இருந்தார்; அவர் பெரிய ஜீவன்முக்தர்" என்று ஸோமநாதய்யர் சொன்னார்.

அன்று ஸாயங்காலம் முத்தம்மாளிடம் அனுமதி பெற்றுக்கொண்டு விசாலாக்ஷி சந்திரிகையுடன் ராயிலாப்பூரிலிருந்து புறப்பட்டுப் பட்டணம் தங்கசாலைத் தெருவிலிருந்த மற்றொரு பந்துவின் வீட்டில் போய் இறங்கினாள். இந்த பந்து யாரெனில் விசாலாக்ஷியின் பெரிய தாயார் மகள். அந்த அம்மாள் பெயர் பிச்சு. அவளுடைய புருஷனுகிய சங்கரய்யர் தங்கசாலைத்தெருவில் மிகவும் கீர்த்தியுடன் மிட்டாய்க் கடை வைத்துக் கொண்டிருந்தார். அதில் அவருக்குக் கன லாபம். அவர் கையில் தங்கக் காப்பு; வயிர மோதிரங்கள்; கழுத்தில் பொற்சரளி. அவருக்கு வயது மூப்பதுக்கு மேலிராது. மிகவும் அழகான புருஷன். அவருக்குக் குழந்தைகள் இல்லை. அவர் வீட்டுக்கு நம்முடைய விசாலாக்ஷி போய்ச் சேர்ந்தாள்.

அங்கு இவள் போன தினத்துக்கு மறுநாள் காசியிலிருந்து ஒரு பால ஸந்யாஸி வந்திருந்தார். இவர் ஜாதியில் தென்தேசத்துப் பிராமணர். ஆனால் பார் வைக்கு வடதேசத்தார்களைப் போலவே சிவப்பாகவும் புஷ்டியாகவும் உயரமாகவும் ஆஜானுபாஹுவாகவும் இருப்பார். மிகவும் அழகிய வடிவழகுடையவர்.

இவருக்கு நாலைந்து பாஷைகள் நன்றாகத் தெரியும். இவர் ஸங்கீதத்தில் அபார வித்வான். இவர்

தம்மை ஜீவன்முக்தி அடைந்துவிட்டதாகச் சொல்லிக் கொண்டார். எனிலும், ஸதா இவருடைய முகத்தில் கவலைக் குறிகள் இருந்துகொண்டே யிருந்தன. மஹா மேதாவி. உலகத்து ஸாதாரண மூடபக்திகளை யெல் லாம் போக்கிவிட்டார். ஆனால், தீய விதியின் வசத் தால் தமக்குத் தாமே மானஸிகமான பல புதிய மூட பக்திகளும் பொய்ப் பிசாசுகளும் உற்பத்தி செய்து கொண்டு ஓயாமல் அவற்றுடன் போராடிக் கொண் டிருந்தார். அதாவது, அவர் இன்னும் ஜீவன்முக்தி அடைந்துவிடவில்லை. அடைய வேண்டிய மார்க்கத்தி லிருந்தார். எனிலும், தாம் முக்தி அடைந்துவிட்டதா கவே அவர் பிறரிடம் சொல்லியது மட்டுமன்றித் தம் மூடைய மனதுக்குள்ளும் அவ்வாறே நிச்சயப்படுத் திக்கொண்டு விட்டார்.

விசாலாக்ஷி தம் வீட்டுக்கு வந்த தினத்திற்கு மூன்று நாட்களின் பின்பு ஒரு மாலையில், நிலவு தோன் றும் பருவத்தில் மிட்டாய்க் கடை சங்கரய்யர் தமது வீட்டு மேடையில் அழகிய நிலா முற்றத்தில் நான்கு நாற்காலிகள் போட்டு நடுவே டீபாயின்மீது பக்ஷ ணங்கள், தேநீர், வெற்றிலை, பாக்கு, பூக்கொத்துக்கள் முதலியன தயார் செய்து வைத்தார். சங்கரய்யரும், காசியிலிருந்து வந்திருக்கும் பால ஸந்யாஸியும், சங்க ரய்யருடைய மனைவி பிச்சுவும், விசாலாக்ஷியும், நால் வரும் அந்த நான்கு நாற்காலிகளின் மீதிருந்து கொண்டு சிற்றுண்டியுண்ணத் தொடங்கினர். குழந்தை சந்திரிகை கீழே படுத்து உறங்கிவிட்டாள். அவளுக்குக்

காவலாகக் கிழ இடைச்சி, ஒரு வேலைக்காரி, படுத் திருந்தான்.

நேர்த்தியான நிலவிலே மிட்டாய்க்கடை சங்கரய்யர் வீட்டு மொட்டையில், அந் நால்வரும் பல வகையான இனிய பண்டங்களை மெல்ல மெல்ல எடுத்துண்டு கொண்டிருக்கையிலே, சங்கரய்யருக்கும் காசியிலிருந்து வந்த பால ஸந்யாஸிக்கும் வேதாந்த விஷயமான ஸம்பாஷணை தொடங்கிற்று. சங்கரய்யர் வேதாந்தக் கிறுக்குடையவர். அதனாலே தான், அவர் இந்த ஸந்யாஸியைக் கண்டு பிடித்தவுடனே பரம குருவாகப் பாவித்துத் தம் வீட்டுக் கழைத்து வந்து தம்மோடனேயே சில தினங்கள் தங்கியிருக்கும்படி கேட்டுக் கொண்டார். ஸந்யாஸியின் பெயர் நித்யானந்தர். அவருக்கு வயது இருபத்தெட்டுக்கு மேலிராது. மஹா ஸுந்தர ரூபி. வடிவெடுத்த மன்மதனைப் போன்றவர். அவரைக் கண்ட மாத்திரத்திலேயே நமது விசாலாக்ஷி அவர்மீது அடங்காத மையல் கொண்டுவிட்டாள். ஸந்யாஸியும் அங்ஙனமே விசாலாக்ஷியின் மீது மோஹ மையல் பூண்டார். ஸந்யாஸி மையல் கொள்ளுதல் பொருந்துமோ என்று நீங்கள் கேட்பீர்களாயின் அது சரியான கேள்வி யன்று. மன்மதனுடைய பாணங்கள் யாரைத் தான் வெல்லமாட்டா?

'காற்றையும் நீரையும் இலையையும் புஜித்து வந்த விசுவாமித்திரன் முதலிய மஹரிஷிகள் கூட மன்மதனுடைய அம்புகளை எதிர்த்து நிற்க வலிமையற்றிரு

யினர்' என்று பர்த்ருஹரி சொல்லுகிறார். எட்டயா-
புரம் கடிகை முத்துப் புலவர் தம்மூடைய நூல்களு-
ளொன்றில் மன்மதனை எல்லாக் கடவுளரிலும் வலிமை
கொண்ட பெரிய கடவுளாகக் கூறுகிறார். பார்வதியை
மறந்து தவம் செய்து கொண்டிருந்த சிவபிரான் மீது
மன்மதன் அம்புகள் போட்டபோது, அவர் கோபங்
கொண்டு மன்மதனை எரித்தாரே யன்றி, அவன்
அம்புகளின் திறமையை விழலாக்கி மறுபடி யோகம்
பண்ணத் தொடங்கினாரோ? அன்று; அவர் காமனம்பு
களுக்குத் தோற்று ஜகன்மாதாவை மணம் புரிந்து
கொள்ளத் திருவுளங் கொண்டருளினார். மேலும்,
மன்மதன் மஹா விஷ்ணுவின் குமாரன், பிரமாவுக்கு
ஸ்நேஹிதன். அவனே பிரமா, அவனுலே படைப்
புத் தொழில் தோன்றுதல் ப்ரத்யக்ஷமன்றே?

நித்யானந்த பால ஸன்யாஸி ரிக்வேத முழுதை-
யும் ஸாயண பாஷ்யத்துடன் படித்தவர். உபநிஷத்-
துக்களில் முக்கியமான தசோபநிஷத்துக்களை சங்கர
பாஷ்யத்துடன் கற்றுணர்ந்தவர். மற்றும் எண்ணற்ற
அத்வைத நூல்களிலும் விசிஷ்டாத்வைத நூல்களிலும்,
தர்க்கம் மீமாம்ஸை யோகம் ஸாங்க்யம் முதலிய சாஸ்-
திரங்களிலும், புராண இதிஹாஸங்களிலும், காவ்யங்
களிலும், நாடகங்களிலும் அபாரமான பயிற்சியுடை
மையால், ஹிந்து மதத்துக்கும் ஹிந்து நாகரீகத்துக்
கும் தக்க ப்ரதிநிதியாகக் கருதத் தக்கவர்.

தமிழும், ஹிந்தி, வங்காளி, மஹாராஷ்ட்ரம்,
தெலுங்கு, தமிழ், இங்கிலீஷ் இந்த ஆறு பாஷைகளி-

லும் மிக உயர்ந்த தேர்ச்சி கொண்டவராய், இவற்றில் எழுதப்பட்ட மிகச் சிறந்த சாஸ்த்ரங்களையும் காவ்யங்களையும் நன்கு பயின்று சிறந்த அறிவுக் தெளிவு படைத்தவர். எனவே, இவர் சொல்லும் வேதாந்தம் வெறுமே வாய்ப் பேச்சு மாத்ரமன்று. உள்ளத்தில் பலமிக ஆராய்ச்சிகளாலும், உயர்ந்த கேள்விகளாலும், தெளிந்த வாதங்களாலும் நன்றாக அழுந்திக் கிடந்த கொள்கை. இவருக்கு ஜீவன்முக்தி பதம் எற்படுவதற்கு ஸ்திரீயில்லாத குறைதான் ஒரு பெருங் கலடையாக நின்றது. எனெனில், பொருளில்லாவிடினும் கல்வியில்லாவிடினும் ஒருவன் ஜீவன்முக்தி பத மெய்தலாம். ஆனால் காதல் விஷயத்தில் வெற்றி பெறுகவன் முக்தியடைந்து இவ் வுலகில் வாழ்வது மிகவும் சிரமம் என்று தோன்றுகிறது.

பௌத்த மதத்தின் மேம்பாட்டினாலே தான், ஆரம்பத்தில் பெண்ணுடன் கூடிவாழும் வாழ்க்கையை விட்டு முக்தி தேடப் புகும் வழக்கம் இந் நாட்டிலும் உலகத்திலும் ஊர்ஜிதப் பட்டதென்று நினைக்க தோன்றுகிறது. பூர்விக வேதாந்திகள் எல்லோரும் பத்தினிகளுடன் வாழ்ந்ததாகவே முன்னூல்கள் சொல்லுகின்றன. பௌத்த மதத்திலிருந்துதான் ஹிந்து மதமும் பிற மதங்களும் ஒரே படியாக உலகத்தைத் துறந்து விடுவதாகிய நித்ய ஸந்யாஸ முறையைக் கைக்கொண்டனவென்று கருதுகிறேன். வேதாந்திகள் மோக்ஷத்துக்கு ஸாதனமாகச் செய்த வேள்விகளில்லாம் அவர்களுடன் மனைவியருமிருத்தல் அவசிய

மாகக் கருதப்பட்டது. பூர்வ விஷயங்கள் எங்ஙனமாயி
னும் "இல்லறமல்லது நல்லறமன்று" என்னும் ஔவை
வாக்கியத்தையே நான் ப்ரமாணமாகக் கொண்டிருக்
கிறேன். காதல் தவறான வழிகளில் செல்லும்போதும்
உண்மையினின்றும் தழுவும்போதும் மாத்திரமே,
அது இவ்வுலகத்தில் பெருந்துன்பங்களுக்கு ஹேது
வாகிறது. உண்மையான காதல் ஜீவன்முக்திக்குப்
பெரிய ஸாதனமாகும். 'உண்மையான காதலின்
பாதை மிகவும் கரடுமுரடானது' என்று ஷேக்ஸ்பியர்
என்ற ஆங்கிலக் கவியரசர் சொல்லுகிறார். அந்தக்
கரடுமுரடான பாதையிலே ஒருவன் சிறிது தூரம்
மனத் தளர்ச்சி யில்லாமலும் பாவ நெறியில் தழுவிச்
செல்லாமலும் உண்மையுடன் செல்வானையின் இன்பத்
தைச் சுத்த நிலையில் காணலாம். இவ் வுலக இன்பங்
கள் சாசுவதமில்லை யென்றும் கானலைத்திலே தோன்றி
மறைவன என்றும் சொல்வோர் சித்தத்தில் உறுதி
யில்லாதவர்கள். இவ்வுலக இன்பங்கள் எண்ணத்
தொலையாதன. இவ்வுலகத்தின் காட்சியே முதலாவது
பெரும் போன்பம். ஸூர்யனும், வெயிலும், பக்ஷி
களும், இனிய தோற்றமுடைய மிருகங்களும், சோலை
களும், மலைகளும், நதிகளும், காடுகளும், அருவிகளும்,
ஊற்றுக்களும், வான வெளியும், வானமூடியும், சந்தி
ரனும், நிலவும், நக்ஷத்திரங்களும் பார்க்கப் பார்க்கத்
தெவிட்டாத ஆனந்தம் தருவன. ஏழை மானிடரே!
இவையெல்லாம் சாசுவதமல்லவா? க்ஷணந்தோறும்
தோன்றி மறையும் இயல்பு கொண்டனவா? தனித்

தனி மரங்கள் மறையும். ஆனல் உலகத்தில் காடுகளில் லாமல் போகாது. தனிப் பக்ஷிகளும் மிருகங்களும் மறையும். ஆனல் மிருகக் கூட்டமும் பக்ஷி ஜாதியும் எப்போதும் மறையாது. இயற்கை இலக்ஷணம் இங்ஙன மாக, மலை, கடல், வானம், இடைவெளி, ஸூர்யன், சந்திரன், நக்ஷத்திரங்கள் இவை எப்போதும் மாறுவனவல்ல. எப்போதேனும் யுகாந்தரங்களில் இவையும் மாறக் கூடுமென்று சாஸ்திரிகள் ஊஹித்தாலே சொல்லுகிறார்கள். ஆனல் அந்த ஊஹவாக்கைப் பற்றி நாம் இப்போது கவனிக்கவேண்டிய அவசியமில்லை. இன்னும் எத்தனையோ கோடி வருஷங்களுக்குப் பிறகு இவை ஒரு வேளை அழியக்கூடுமென்று அந்த சாஸ்திரிகள் சொல்லுமிடத்தே, நாம் அவற்றை நித்ய வஸ்துக்களாகப் போற்றுதல் கவருகாது. இது நிற்க.

இன்னும் உலகத்தில் மனிதனுக்கு நெடுங்கால இன்பங்கள் வேறெத்தனையோ இருக்கின்றன. நேராக உண்டு வந்தால், அதாவது பரியறிந்து உண்பதென்ற விரதங் கொண்டால், மனிதருக்கு உணவின்பம் எப்போதும் தவிட்டாது. நோயின்றி இருந்தால் ஸ்வாதீனத்தின் இன்பம் என்றும் தவிட்டாது. இன்னும் நட்பு, கல்வி, ஸங்கீதம் முதலிய கலைகள் முதலிய எக்காலமும் தவிட்டாத இன்பங்கள் இவ்வுலகத்தில் மனிதருக்கு எண்ணின்றி நிறைந்து கிடக்கின்றன. இப்படியிருக்க, இவ்வுலக இன்பங்கள் சக்ஷணத்தில் தோன்றி மறையும் இயல்புடையன என்றும், நீர்மேற் குமிழிக

ளொத்தன என்றும் சொல்வோர் அறிவில்லாதோர், சோம்பேறிகள், நெஞ்சுறுதி யில்லாதோர்.

இன்பமயமான இவ்வுலகத்தில் காணப்படும் எல்லா இன்பங்களைக் காட்டிலும் காதலின்பமே சால வுஞ் சிறந்தது. அதில் உண்மையும் உறுதியுங் கொண்டு நின்றால், அது எப்போதும் தவறுதோர் இன்ப ஊற்றாகி மனித வாழ்வை அமர வாழ்வுக்கு நிகராகப் புரிந்து விடும். ஒரு மனிதன் ஒரு ஸ்த்ரீயையே, ஒரு ஸ்த்ரீ ஒரு மனிதனையே, மாறுதலின்றிக் காதல் செய்து வருதலாகிய வழக்கம் மனிதருக்குள் ஏற்படு மாயின் அவர்கள் காதலின்பம் எத்துணை சிறந்திருக்கின்பதையும் எத்தகைய பயன்கள் தருவதின் பதையும் காமே எளிதில் உணர்ந்துகொள்ள வல்லோராவர்.

இங்ஙனம் ஆலோசனை புரிந்து நித்யாநந்தர் என்ற பால ஸந்யாஸி தாம் விசாலாக்ஷி மீது காதல் கொண்டது தவறில்லையென்று தீர்மானித்துக் கொண்டார். ஒரு நாள் மாலையில் நித்யாநந்தரும் விசாலாக்ஷியும் மிட்டாய்க் கடை சங்கரய்யர் வீட்டு மேடையில் தனியே ஸந்திக்கார்கள். அவ்விருவருள் நெடுநேரம் ஸம்பாஷணை நடந்தது. தாம் ஸன்யாஸத்தை விட்டு நீங்கி லௌகிக வாழ்க்கையில் புகுந்து விசாலாக்ஷியை மணம் புரிந்து கொள்ள நிச்சயித்ததற்குள்ள காரணங்களெல்லாம் அவர் விசாலாக்ஷியிடம் விரிவாக எடுத்துரைத்

தார். அவளும் அக்காரணங்கள் நியாயமானவையே யென்று மிகவும் லாலபமாக அங்கீகாரம் செய்து கொண்டாள். கதையை வளர்த்துப் பிரயோஜனமென்ன? அவ்விருவரும் சந்திரிகை லஹரிகமாக உடனே புறப்பட்டு எழுந்தூரில் வீரசிங்கப் பத்துலு இருந்த வீட்டுக்குச் சென்றார்கள். அங்கு போருமுன் னுகவே நித்யானந்தர் கம்முடைய காவியுடைகளைக் கழற்றி எறிந்துவிட்டு வெள்ளை வேஷ்டியும், சேர்த்தியான சட்டையும், பஞ்சாபித் தலைப்பாகையும் அணிந்து கொண்டார். "இந்த லௌகிக ரூபத்தில் ஸ்வாமிகளைப் பார்த்தால் நேபாளத்து ராஜா மகனைப் போலிருக்கிறது" என்று சங்கரய்யர் சொன்னார். "இன்னும் என்னை ஸ்வாமிகளென்று சொல்லாதேயுங்கள். லங்கா லக் கோலத்தையும் தொலைத்தேன்; பழைய நித்தியானந்தனென்ற பெயரைக்கூடத் தொலைத்துவிட்டேன். இனிமேல் எனது பிரிய காந்தையாகிய விசாலாக்ஷியின் பெயருக்கேற்ப விசுவநாத சர்மா என்று பெயர் வைத்துக்கொள்வேன்" என்றார். எனவே, நாமும் இக்கதையில் இனிமேல் இவருக்கு நித்யானந்தர் என்ற பெயரை நீக்கி விசுவநாத சர்மா என்ற பெயரையே வழங்கிவருதல் அவசியமாகிறது.

விசுவநாத சர்மாவை இந்த லௌகிக வேஷத்தில் பார்த்த மாத்திரத்திலே விசாலாக்ஷிக்கு ஏற்கனவே அவர் மீதேற்பட்டிருந்த கண் தலை தெரியாத காதல் மூன்னிலும் ஆயிர மடங்கு அதிகமாய், அவளை வெறி கொண்டவள் போலாக்கிவிட்டது.

இவ்விருவரும் வீரேசலிங்கம் பந்துலு விருந்து இடத்துக்கு வந்து சேர்ந்தவுடனே, விசாலாக்ஷி பந்துலுவிடத்திலும் அவர் மனைவியிடத்திலும் கன்னிவிசுவநாத சர்மா மணம் செய்துகொள்ள இணங்கிய செய்தியையும், அவ்வாறு இணங்கும்படி நேர்ந்த பூர்வ விருத்தாந்தங்களையும் எடுத்து விஸ்தாரமாகச் சொன்னாள். வீரேசலிங்கம் பந்துலுவுக்கு அளவிறந்த மகிழ்ச்சியுண்டாய்விட்டது. எற்கெனவே இவ்விஷயத்தில் அவர் பல இடங்களில் முயற்சிசெய்து பார்த்து வெற்றிபெற வழியில்லாமல் திகைத்துக்கொண்டிருந்தார். இப்போது அவருடைய முயற்சியில்லாமலே தமது விருப்பம் நிறைவேறிவிட்டமை கண்டு அவருக்கு அத்தனை பூரிப்புண்டாயிற்று.

"எல்லாம் தெய்வச் செயல். நாமொன்று நினைக்க தெய்வ மொன்று செய்கிறது" என்று சொல்லி அவர் மனமாரக் கடவுளைப் போற்றித் தொழுதார். பிறகு விசுவநாத சர்மாவையும் விசாலாக்ஷியையும் பிரமஸமாஜத்தில் சேர்த்தார். கோபாலய்யங்காருடைய விவாகம் நடந்து இரண்டு வாரத்துக்குள் மறுபடி சென்னை பிரமஸமாஜ ஆலயத்திலேயே, அந்த ஸமாஜ விதிகளின்படி விசாலாக்ஷிக்கும் விசுவநாத சர்மாவுக்கும் விவாகம் நடந்தேறிற்று. விவாகம் நடந்த ஒரு வாரத்துக்குள் மிட்டாய்க்கடை சங்கரய்யரின் முயற்சியாலும் வேறு சில நண்பர்களின் முயற்சியாலும் நமது விசுவநாத சர்மாவுக்கு ஒரு உத்தியோகம் ஏற்பட்டது. தங்கசாலைத் தெருவிலே மூன்று, நான்கு குஜராத்தி லக்ஷாப் பிரபுக்

கனின் பிள்ளைகளுக்கு வரிந்தி, ஸம்ஸ்க்ருதம், இங்கிலீஷ் மூன்றும் இராப்பாடம் சொல்லிவைக்க வேண்டியது. இதற்காக அவருக்கு அறுபது ரூபாய் மாதந்தோறும் சம்பளம் கிடைத்தது. சங்கரய்யர் வீட்டுக்கு ஸமீபத்தில் இரண்டு ஸ்நேகளுக்கப்பால் ஒரு வீடு காலியாக இருந்தது. சிறிய வீடு. கீழே இரண்டு மூன்று அறைகள். உயர்ந்த மாடி. அந்த வீட்டுக்குப் பின் அழகான தோட்டமிருந்தது. அதில் ஒரு சிறிய கூரை பங்களா புதிதாகத் தயார் பண்ணி, அதில் நாற்காலி, மேஜை, புஸ்தகங்கள், பிள்ளைகள் வந்தால் உட்காருவதற்கு நாற்காலி வகைகள் முதலியன வாங்கி வைப்பதற்குரிய செலவெல்லாம் சங்கரய்யர் செய்தார். அந்த வீட்டில் புதிதாக விவாகமான தம்பதிகளை சங்கரய்யர் குடியேற்றினர். இவருக்கு விசுவநாத சர்மாவிடம் மூன்னைக் காட்டிலும் நூறு பங்கு அதிக பக்தி ஏற்பட்டது. சில மாதங்கள் கழிந்த பிறகு, மேற்கூறிய குஜராத்திப் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கும் வரும்படி தவிரவும் விசுவநாத சர்மாவுக்கு வேறு வரும்படி கிடைக்கத் தொடங்கிற்று. ஆரம்பத்தில் அவர் சென்னையில் நடைபெற்று வரும் இங்கிலீஷ், தமிழ்ப் பத்திரிகைகளுக்கு வியாஸங்களும், தலையங்கங்களும் எழுதி சாஸ்த்ர விஷயங்களைப் போலவே லௌகிக விஷயங்களிலும் பயிற்சியால் உயர்ந்த ஞான மேற்படுத்திக்கொண்டார். எழுதும் திறமையிலோ, இங்கிலீஷிலும், தமிழிலும் அவருக்கு ஸமமான தொழிலாளி இந்த தேசத்திலேயே குறைவென்று கூறலாம். அத

னல் பத்திராதிபர்கள் அவரெழுதும் வ்யாஸங்களை மிக வும் ஆவலுடன் எற்றுக்கொண்டு தக்க சம்பளம் கொடுக்கத் தொடங்கினர்கள். இங்கு கொஞ்சம் கை தேறியவுடனே, அவர் தக்க மனிதர்களுடைய சிபார் சால் பம்பாய் கல்கத்தா முதலிய வெளி நகரங்களில் ப்ரசுரமாகும் உள்நாட்டுப் பத்திரிகைகளுக்கும், இங்கி லாந்து, அமெரிக்காவிலுள்ள பத்திரிகைகளுக்கும் விஷயதானம் செய்யும் பதவி பெற்றார். இதிலெல்லாம் அவருக்கு மாஸந்தோறும் ஐந்நூறு ரூபாய்க்குக் குறையாத வரும்படி வரத் தொடங்கிற்று. அவர் தீராத உழைப்பாளி யாய்விட்டார்.

அவருடைய முகத்தில் முன்னிருந்த கவலைக் குறிகளெல்லாம் நீங்கிப்போய் விட்டன. எப்போதும் அவர் முகத்தில் ஸந்தோஷமும் திருப்தியும் நிலவ லாயின. விசாலாக்ஷியோ முன்னிருந்த அழகைக் காட் டிலும் முந்நூறு பங்கு அதிக அழகு படைத்து விட்டாள். அவர்கள் வீட்டிற்கு ஒரு பசு வாங்கி னர்கள். அந்தப் பசுவைக் கறக்கவும், குழந்தைக்குப் பொழுது போக்கவும், மற்றபடி வீடு வாயில் பெருக்கு தல், பாத்திரந் தேய்த்தல் முதலிய தொழில்கள் செய்யவும், விசாலாக்ஷி மிகவும் புத்தியும் அனுபவமும் உண்மையும் உழைப்புமுடைய வேளாளக் கிழவி யொருத்தியை நியமனம் செய்து, அவளுக்கு வீட்டி லேயே போஜனமும் மாஸம் எட்டு ரூபாய் சம்பள மும் ஏற்படுத்தினாள். இவர்களுடைய வீட்டுச் செல வெல்லாம் நூறு ரூபாய்க்கு மேலாகாது. எனவே,

மாலைந்தீகாறும் நானூறு ரூபாட்க்குங் குறையாமல் விசுவநாதசர்மா ஒரு பெரியநாணபழுடைய குஜராத்தி வியாபாரியிடம் வட்டிக்குக் கொடுத்துவரத் தொடங்கினர். சிறிது காலத்துக்குப்பின் விசுவநாத சர்மா தமக்குப் பத்திரிகை தொழில்விடய எனனானால் திரவியம் கிடைப்பதினின்றும், பிள்ளைகளுக்குப் பாடங் கற்றுக் கொடுப்பதாகிய சிரமான தொழிலை விட்டு விட்டார். காலையில் எழுந்து காலைக்கடன் முடித்து சௌச கொண்டவுடனே தினந்தோறும் அவர் தங்களதுக்கு தெருவினின்றும் புறப்பட்டுச் சென்னை வேறுகோட்டுக்கு எதிரே கடற்கரையில் வந்து தெற்றோரம் உலாவி விட்டு சுமார் ஒன்பது மணிக்கு வீட்டுக்குத் திரும்புவார். வந்தவுடனே ஸ்நானம் பண்ணிவிட்டு போசனம் செய்வார். பதினோரு மணி முதல் பாலை மூன்று மணிவரை தமது எழுத்துவேலை நடத்துவார். அப்பால் இடைப்பகல் சிற்றுண்டி யுண்டு தெருவிலே திரும்பி வருவார். அப்பால் ஒரு மணி நேரம் படிப்பிலும், நாள் எழுதுவதற்கு வேண்டிய ஆலோசனைகளிலும் செலவிடுவார். அப்பால், தம்முடைய சிறு குதிரை வண்டியில் விசாலாக்ஷியையும் சந்திரிகையையும் ஏற்றிக்கொண்டு கடலோரத்தில் உலாவி விடுவார். இரவு எழுமணி நேரத்துக்கு வீட்டுக்குத் திரும்புவார்கள். எட்டு மணி நேரமாகும்போது இரவுத்தின போசனம் தொடங்கும். அப்பால் விசாலாக்ஷியும் சாவித்திரியும் பேச்சிலும் விளையாட்டிலும் மன்மதக் கேளிகளிலும் பொழுது கழிப்பார்கள். இரவு பன்னிரண்டு மணிக்கு

மூன்பு அவர்கள் நித்திரை செய்யப் போவதே கிடை யாது. என்னதான் பேசுவார்களோ, எதுதான் பேசு வார்களோ கடவுளுக்குத் தான் தெரியும். ஒவ்வோரி ரவும் இவ்விருவரும் பேசுவதும் சிரிப்பதும் பக்கத்து வீடுகளிலிருப்போருக்கெல்லாம் பெரும்பாலும் தூக்கம் வராதபடி செய்யும். ஒருவர் பேச்சு மற்றொருவருக்குத் தெளிவாகக் கேட்கக் கேட்கத் தெவிட் டாமலிருக்கும். சில இரவுகளில் விசாலாகூடி ஹார்மோ னியம் சுருதி போட்டுக்கொண்டு பாடுவாள். இவள் பாட்டின் அற்புதத்தில் மயங்கி வெறிகொண்டு விசுவ நாத சர்மா தன்னை மறந்து எழுந்து குதிக்கத் தொடங்கிவிடுவார். சில ஸமயங்களில் இருவரும் கை கோத்துக்கொண்டு நாட்டியம் புரிவார்கள். வேலைக் காரக் கிழவியும் குழந்தையும் ஓரறைக்குள் படுத்துக் கொண்டு தூங்கிப்போய் விடுவார்கள். தோட்டத்தி லிருந்த சிங்காரப் பரணில் இந்த தம்பதிகளின் களி கள் நடைபெறும்.

இவ்விருவரும் ஒருவர்க்கொருவர் படைத்த காதல் மானுஷிக மன்று, தெய்விகம். அது கலியுகத்துக் காத லன்று; கிருதயுகத்துக் காதல். ஒரே பெண்ணிடம் மாறாத காதல் செலுத்துவதாகிய ஏகபத்னி விரதத்தில் ஸ்ரீராமபிரான் புகழ்பெற்றவன். ஆனால் அவனும் பத்தினியிடம் ஸம்சயங்கொண்டு இலங்கையிலே அவ ளைத் தீப் புகச் செய்தான். பின்பு உலகப் பழிக்கு அஞ்சி, அவளைக் காட்டுக்குத் தூரத்தினான். இவ்வித மான களங்கங்கள் கூட இல்லாதபடி நமது விசுவநாத

சர்மா ஸாஸ்திரத் லைகுண்ட நாராயணனை பூரீ தேவி யிடம் சென்றுக்துவது போன்ற பரம ப்ரேமை சென்றுக் திறர். சிவன் பார்வதி தேவியிடம் சென்றுத்தார், பக்தி நடத்து விசுவநாத சர்மாவாள் விசாலாக்ஷியிடம் சென்றுக் கப்பட்டது. அவருடம், இப்படிப் பரம ஞானியாகிய கணவன் தன்னிடம் தேவுகா விசுவாஸர், சென்றுக்து வதை கண்டு பூரிப்படைந்து, தான் அவரை ஸாக்ஷாத் பகவானைகவே கருதி மறுதகாள பக்தி சென்றுத்தி வந் தாள். இப்படியிருக்கையிலே விவாகம் நடந்து ஒன்றரை வருஷமாவதற்குள் விசுவநாத சர்மாவுக்கு மைத்தியம் பிடித்துவிட்டது. அவர் மிகச் சிறந்த ஞானியாயிலும் யோகாப்யாஸத்தால் மூக்தி யடைவது ஸுலபமென்று கருதி மனஸ்தப் பலவகைகளில் இடையருமல் அடக்கி அடக்கி பலாத்காரஞ் செய்துகொண்டு வந்ததினின் றும், புத்தி கலங்கிவிட்டது. எழுத்து வேலை சரியாக நடத்த முடியவில்லை. வீட்டிலேயே ஒரு நாட்டு வைத் தியர் வந்து பார்த்துச் சிகிச்சை செய்துகொண்டிருந் தார். மந்திரவாதிகளை அழைத்துப் பார்க்கலாம் என்று சங்கரய்யர் சொன்னதற்கு விசாலாக்ஷி அது அவசிய மில்லை யென்று சொல்லிவிட்டாள்.

விசாலாக்ஷியின் கதி மிகவும் பரிதாபகரமாயிற்று. திடீரென்று ஸ்வர்க்கலோகத்தில் இந்திரபதவியினின்று தள்ளுண்டு மண்மீது பாம்பாகி விழுந்த நஹுஷன் நிலை மையை இவள் ஸ்திதி ஒத்ததாயிற்று.

காதலால் மோக்ஷமே பெறலாமென்று விசுவநாத சர்மா சொல்லியதை இவள் மனம் பூர்த்தியாக நம்பித்

கனது அற்புத ஸௌந்தர்யமும் ஞானத் தெளிவு மூடைய அக் கணவனை ஒருங்கே மன்மதனுகவும் விஷ் ணுவாகவும் சிவனுகவும் கருதிப் போற்றிவந்து அவ னன்பிலே ஆனந்தபரவசமெய்தி யிருந்தாள். அவ ளுக்கு இந்தக் கொடிய நோய் நேர்ந்ததைக் கண்டு தன் பக் கடலில் அமிழ்ந்திப் போய்விட்டாள். இடை யிடையே விசுவநாத சர்மாவுக்கு புத்தி தெளியும் நேரங்களும் வருவதுண்டு. அப்போது, அவர் விசா லாக்ஷியை அழைத்துத் தன் அருகில் இருத்திக் கொண்டு:—"கண்ணே, நீ எதற்கும், எதற்கும், எதற் கும் கவலைப்படாதே. கவலைப்படாதிருத்தலே முக்தி. கவலைப்படாதிருந்தால் இவ்வுலகத்தில் எந்த நோயும் வராது. எவ்வித ஆபத்தும் நேராது. தவறி எவ்வித நோய், அல்லது எவ்வித ஆபத்து, நேர்ந்த போதிலும் ஒருவன் அவற்றுக்குக் கவலை யுறுவதை விட்டு விடுவா னுயின், அவை தாமே விலகிப் போய்விடும். கவலையை வென்றால் மரணத்தை வெல்லலாம். பயமும், துயரமும், கவலையும் இல்லாதிருந்தால் இவ்வுலகத்தில் எக்காலமும் சாகாமல் வாழலாம். நான் என்னை மீறிச் சில பயங் களில் ஆழ்ந்து விட்டேன். அதனாலே தான் எனக்கு இந்த நோய் வந்திருக்கிறது. இது இன்னும் சிறிது காலத்துக்குள் நீங்கிப் போய்விடும். நமக்கோ பணத் தைப்பற்றிய விசாரமில்லை. நான் மூன்று வருஷம் எழுதாமலும், ஒரு காசுகூட ஸம்பாதிக்காமலும் இருந்த போதிலும் குஜராத்தியானிடம் போட்டிருக் கும் பணத்தை வாங்கி ஸம்பிரமமாகச் சாப்பிடலாம். என்னைப்பற்றிய விசாரங்களுக்கும் உன் மனதில் இடங் கொடாதே.

இடுக்கண் வந்துற்றகாலை, எரிகின்ற விளக்குப்போல நடுக்க மொன்றுமின்றி நகுக ; தாம் நக்க போதவ் விடுக்கணையரியு மெஃகாம், இருந்தழு தியாவ ருய்ந்தார் ?

என்று சீவகசிந்தாமணியில் திருத்தக்க தேவர் பாடி யிருக்கிறார். அதாவது, 'துன்பம் நேரும் போது நாம் சிறிதேனும் கலங்காமல் அதை நோக்கி நகைக்க வேண்டும். அங்ஙனம் நகைப்போமாயின் நமது நகைப்பே அத்துன்பத்தை வெட்டுதற்குரிய வாளாய்விடும். அவ்வாறின்றி வீணே உட்கார்ந்து துயரப்படுவதனால் மனிதருக்கு உய்வு நேராது (நாசமே எய்தும்)'. இந்த உபதேசத்தை நீ ஒருபோதும் மறக்காதே. என் கண்ணே, என் உயிரே, விசாலாக்ஷி, நீ என்ன நேர்ந்தாலும் மனதைத் தளரவிடாதே. நீ எக்காலமும் எவ்விதநோயுங் கவலையுமின்றி வாழவேண்டு மென்பதே என் முக்கிய விருப்பம். உன் மனம் நோக நான் பார்த்து ஸஹிக்க மாட்டேன்" என்று பலபல சொல்லி மணவினையை ஸமாதானப் படுத்த முயல்வார். ஆனால், இவர் இங்ஙனம் பேசிக்கொண்டிருக்கையிலேயே விசாலாக்ஷியின் கண்களில் ஜலம் தாரை தாரையாகக் கொட்டத் தொடங்கிவிடும். அவள் கோவென்றழுது விம்முவாள். இதைக் கேட்டு விசுவநாத சர்மாவும் ஓலமிட்டழுகத் தொடங்குவார். இப்படி இவர்களிருவரும் கூடிப் பெருங்குரலிட்டழுது கொண்டிருக்கையில் ஒரு ஸமயம் வைத்தியர் வந்துவிட்டார். இந்தக் கோலத்தைப் பார்த்து வைத்தியர் விசாலாக்ஷியை காண்பதினின்று நேரும் துக்கத்தால் சர்மாவின் நோய் மிகுதிப்படு

மென்றும், ஆகலால் இனிமேல் விசாலாகூடி தன் கணவனை அடிக்கடி தனியாக ஸந்திக்கக் கூடாதென்றும், அப்படியே ஸந்திக்க போதிலும் சில நிமிஷங்களுக்கு மேலே அவருடன் தங்கியிருக்கக்கூடாதென்றும் எப்போதுமே அவர் தன்னிடம் அதிகமாகப் பேச இடங்கொடுக்கக் கூடாதென்றும் அவளிடம் தெரிவித்தார். அவளும் எவ்விதத்திலும் தன்னால் தன் கணவனுக்கு அதிகக் கஷ்டம் நேரலாகாதென்ற நோக்கத்துடன், ஆஹாரம் போடும் நேரங்களைத் தவிர மற்ற நேரங்களில், சர்மாவை அடிக்கடி பார்க்காமலும், அவருடன் அதிகமாகப் பேசாமலும் ஒதுங்கியே காலங் கழித்து வந்தாள். ஆனால் இதினின்று விசுவநாத சர்மாவின் துயரமும் மனக்கலக்கமும் அதிகப் பட்டனவே யன்றிக் குறைவு படவில்லை. தம்மை விசாலாகூடி புறக்கணிக்கிறாளென்று சர்மா எண்ணவில்லை. அவர் அப்படி எண்ணக் கூடியவரு மல்லர். ஆனால் தனது தேக நிலையைக் கருதி அவள் மிகவும் மனக்களர்ச்சியும் துக்கமுமெய்தி அதுபற்றியே தோட்டத்துப் பங்களாவுக்கு அவள் அடிக்கடி வந்து தன்னைப் பார்க்காமலும், அதிகமாகத் தன்னிடம் வார்த்தையாடாமலு மிருக்கிறாள் என்று அவர் நினைத்துக் கொண்டார்.

இங்கு வியாதிகளின் ஸம்பந்தமாக ஒரு சிறு கதை சொல்லுகிறேன். வாந்தி பேதிப் பிசாசு முன்னொரு காலத்தில் இந்தியாவிலிருந்து புறப்பட்டு அரபியாவிலுள்ள மக்க நகரத்துக்குப் போய்க்கொண்டிருந்தகாம். போகும் வழியில் பாரஸீகத்தில் பெரிய தபஸ்வி

யும் ஞானியுமாகிய ஒரு மஹமதியப் பக்கிரி அந்தப் பேயைக் கண்டு "எங்கே போகிறாய்?" என்று கேட்டார். அது கேட்டு வாந்தி பேதி சொல்லுகிறது:— "மக்க நகரத்தில் இப்போது வருஷத் திருவிழா தொடங்கியிருக்கிறது. நாலு திசைகளினின்றும் எல்லாற்ற ஜனங்கள் திருவிழாவுக்காக அங்கு வந்து கூடியிருப்பார்கள். அவர்களை வேட்டையாடும் பொருட்டு மக்கத்துக்குப் போகிறேன்" என்றது.

அது கேட்டு அந்த ஸந்யாஸி:— "சிச்சீ! பூர்க்கப் பிசாசே! மக்கத்தில் அல்லாவைத் தொழும் பொருட்டு நல்ல நல்ல பக்தர்கள் வந்து திரண்டிருப்பார்கள். அவர்களை நீ போய்க் கொல்ல நான் இடங் கொடுக்க மாட்டேன்" என்றார்.

அதற்கு வாந்திபேதிப் பேய் சொல்லுகிறது:— "ஸ்வாமியாரே, என்னையும் அல்லா தான் படைத்து மனித உயிர்களை வாரிக்கொண்டு போகும் தொழிலுக்கு நியமனம் செய்திருக்கிறார். உலகத்தில் நடக்கும் எல்லாக் காரியங்களும் அல்லாவின் செயல்களேயன்றி மற்றில்லை. அவனின்றியோர் அணுவுமசையாது. ஆதலால் எனது போக்கைத் தடுக்க உம்மால் முடியாது. முடியுமெனிலும் நீர் அதனைச் செய்தல் நியாயமன்று. மேலும் மக்கத்துக்கு வந்திருப்போர் அத்தனை பேரும் புண்யாத்மாக்களென்றும் தர்மிஷ்டர்களென்றும் உண்மையான பக்தர்களென்றும் நினைத்து விடக் கூடாது. எத்தனையோ பாவிகளும், அதர்மிஷ்டரும், கொரான் விதிகளை மீறி நடப்போரும் அங்கு வந்திருப்

பார்கள் என்பதில் ஐயமில்லை. தவிரவும் புண்யாத்மாக்களுக்கு இவ்வுலகில் சாவு கிடையாதென்று அல்லாவிதிக்கவில்லை. பாவிகள் மாத்திரமேயன்றி புண்யவான்களும் சாகத் தான் செய்கிறார்கள். வேறு நோய்களால் நெடுங்காலம் வருந்தி வருந்திக் துடித்துத் துடித்துச் சாவதைக் காட்டிலும் என்னுல் தூரிதமான மரணமெய்துதல் மனிதருக்கு நன்றேயன்றித் தீங்காகாது. ஆதலால் எப்படியோசித்த போதிலும், நான் சொல்வதை நீர் தடுக்க முயலுதல் பொருந்காது. எனிலும், ஏதானுகிய உம்முடைய மனதுக்குச் சற்றே திருப்தி விளைவிக்கத் தக்கதாகிய வார்த்தையொன்று சொல்லுகிறேன். அதாவது, நீர் அங்கு இத்தனை பேரைத்தான் கொல்லலாமென்று தொகை குறிப்பிட்டுக் கட்டளையிடும். அந்தத் தொகைக்கு மேலே நான் ஒற்றை உயிரைக்கூடக் கொல்வதில்லையென்று பிரதிக்ஞை செய்து கொடுக்கிறேன்" என்றது.

இங்ஙனம் வாந்தி பேதிப் பேய் சொல்லியதைக் கேட்ட முனிவர்—"சரி; போ. அங்கு அநேக லக்ஷக்கணக்கான ஜனங்கள் திரண்டிருப்பார்கள். அவர்களில் நீ ஒரே ஓராயிரம் பேரைத் தான் கொல்லலாம். அதற்கு மேல் ஒருயிரைக்கூடத் தீண்டலாகாது. ஜாக்ரதை! போய் வா" என்றார்.

கல்லதென்று சொல்லிப் பேய் பக்கிரியிடம் விடை பெற்றுக்கொண்டு மக்கத்துக்குப் போயிற்று. அப்பால் சில தினங்கள் கழிந்தபின், அந்தத் திருவிழாவுக்கு வந்தவர்களில் லக்ஷம்பேர் வாந்தி பேதியால் இறந்து

போயினரென்ற செய்தி பக்கிரியின் செவிக் கெட்டிற்று. அவர் தம்மை வாந்தி பேதிப் பேய் வஞ்சித்து விட்டதாகக் கருதி மிகவும் கோபத்துடனும் மனவருத்தத்துடனு மிருந்தார். மறுநாள் வாந்தி பேதிப் பேய் அந்த வழியாகவே மக்கத்தினின்றும் இந்தியாவுக்கு மீள யாத்திரை செய்து கொண்டிருக்கையில் அந்தப் பக்கிரியைக் கண்டு வணங்கிற்று. பக்கிரி பெருஞ் சினத்துடன் அப் பேயை நோக்கி—"துஷ்டப் பேயே, பொய் சொல்லிய நாயே, என்னிடம் ஆயிரம் பேருக்கு மேலே கொல்வதில்லை யென்று வாக்குறுதி செய்து கொடுத்துவிட்டு அங்கு, மக்கத்திலே போய், லக்ஷம் ஜனங்களை அழித்து விட்டனையாமே? உனக்கு என்ன தண்டனை விதிக்கலாம்?" என்றார்.

இதைக் கேட்டு வாந்தி பேதிப் பேய் கலகலவென்று சிரித்தது. அது சொல்லுகிறது—"கௌரீர், முனிசிரேஷ்டரே, நான் உமக்குக் கொடுத்த வாக்குறுதி தவறுதபடியே ஆயிரம் பேருக்குமேல் ஒருயிரைக்கூடத் தின்டவில்லை. ஆயிரம் பேரே என்றுல் மாண்டவர். மற்றவர்கள் தமக்குத் தாமே பயத்தால் வாந்தியும் கழிச்சலும் வருவித்துக்கொண்டு மாய்ந்தனர். அதற்கு நான் என்ன செய்வேன்? என் மீது பிழை சொல்லுதல் தகுமோ?" என்றது.

அப்போது முனிவர் பெருமூச்சு விட்டு—"ஆஹா! ஏழை மனித ஜாதியே, பயத்தாலும், ஸம்சயத்தாலும் உன்னை நீயே ஓயாமல் கொலை செய்துகொண்டிருக்கிறுயே! உன்னுடைய இந்த மஹா மூடத்தன்மை

கொண்ட மதியையும், இம் மதியை உன்னிடத்தே தாண்டிவிடும் மற்ற பயங்கரமான விதியையும் நினைக்கும்போது என் நெஞ்சம் கலங்குகிறதே! நான் என் செய்வேன், நான் என் செய்வேன்! நான் என்ன செய்வேன்! சுப்! நம்மால் என்ன செய்ய முடியும்? அல்லா வேறா அக்பர். அல்லா மற்றான். அவருடைய திருவுளப்படி எல்லாம் நடைபெறுகிறது. அவர் திரு வடிகள் வெல்லுக" என்று சொல்லி முழங்கால் படியிட்டு வானத்தை நோக்கியவராய் அல்லாவைக் குறித்து தியானம் செய்யத் தொடங்கினர். பேயும் அவரிடம் விடை பெற்றுக்கொண்டு போய் விட்டது.

இந்த மாதிரியாக நான் ஒரு கதை வரைந்திருக்கிறேன். நோய்க்கு முக்யமான காரணம் ஜீவர்களின் மனதில் தோன்றும் பயம். கவலை, கோபம், ஸம்சயம், பொறாமை, வெறுப்பு, அதிருப்தி முதலிய விஷ குணங்களேயாமென்பது இந்தக் கதையின் பொருள். இதை நான் அங்கீகரிக்கிறேன். உள்ளத்திலே தோன்றும் அச்சம் முதலியனவே நோய்களைப் பிறப்பிக்கின்றன என்பதில் ஸந்தேகமில்லை. ஆனால் அங்ஙனம் பிறக்கும் நோய்களை நன்கு போஷணை செய்து வளர்ப்பதும், அதினின்றும் மரணத்தின் வரவை மிகவும் எளிதாக்குவதுமாகிய தொழில்கள் பெரும்பாலும் வைத்யர்களாலேயே செய்யப் படுகின்றன என்று தோன்றுகிறது. ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன் என்ற பழமொழி முற்றிலும் உண்மையெனவே நான் நினைக்கிறேன்.

இதினின்றும் வைத்ய சாஸ்த்ரம் பொய்யென்றுவது, வைத்யர்களெல்லாருமே தமது சாஸ்திரத்தை நன்கு கற்றுணராத போலி வேஷதாரிகளென்றுவது, மனமறிந்த அயோக்யர்க ளென்றுவது, வேண்டுமென்று மனிதனைக் கொல்லுகிறார்க ளென்றுவது நான் சொல்ல விரும்புவதாக யாரும் நினைத்து விடலாகாது.

வைத்ய சாஸ்த்ரத்தில் எத்தனையோ கண்கண்ட பயன்களிருப்பதை நான் அறிவேன். வைத்யர்களிலே பலர் தமது சாஸ்த்ரத்தில் உண்மையான உயர்ந்த தேர்ச்சியுடையோராகவும் ஜீவகாருண்யத்தில் சிறந்த மஹான்களாகவும் இருப்பதை நான் அறிவேன். ஆனாலும், வியாதிகள் பல்குவதற்கும், மரணம் இங்ஙனம் மனிதரைப் பூச்சிகளிலும் கடையாக வாரிக்கொண்டு போவதற்கும் உலகத்து வைத்தியர்கள் பெரும்பாலும் மோதுவாகிறார்களென்ற என் கொள்கை தவறுனதன்று. ஒன்றுக் கொன்று விரோதமாகத் தோன்றும் இவ்விரண்டு கொள்கைகளும் எங்ஙனம் ஏககாலத்தில் உண்மையாகுமென்பதைத் தெரிவிக்கிறேன்.

ஆனால், ஏற்கனவே இந்த அத்யாயம் மிக நீண்டு போய்விட்டது. நம்முடைய கதையின் போக்கோ சிறிது நேரம் விசாலாக்ஷியையும் விசுவநாத சர்மாவையும் விட்டுப் பிரிந்து வேறு சிலருடைய விருத்தாந்தங்களைக் கூறும்படி வற்புறுத்துகின்றது. ஆதலால் வைத்தியர் ஸம்பந்தமான விவகாரத்தைப் பின் ஓர் அத்யாயத்தில் விளக்கிக் காட்டுகிறேன்.

எட்டாம் அத்யாயம்.

ஸோமநாதய்யர் ஞானம் பெற்ற வரலாறு.

1907-ஆம் வருஷம்—அதாவது விசாலாக்ஷியின் விவாகம் நடந்த இரண்டு வருஷங்களுக்கப்பால்—மே மாஸத்தில் ஒரு நாள் மாலை நல்ல நிலவடித்துக்கொண் டிருக்கையில் மயிலாப்பூர் லஸ் சர்ச் வீதியில் ஹை கோர்ட் வக்கீல் ஸோமநாதய்யர் தம் வீட்டு மேடையில் நிலா முற்றத்திலே இரண்டு நாற்காலிகள் போட்டுத் தாமும் தம்முடைய மனைவி முத்தம்மாளும் உட்கார்ந்து கொண்டு, அவளுடன் ஸம்பாஷணை செய்து கொண் டிருந்தார்.

"காபி போட்டுக் கொண்டு வரலாமா?" என்று முத்தம்மா கேட்டாள்.

"எனக்கு வேண்டியதில்லை. பகலிலே உண்ட ஆஹாரம் இன்னும் என் வயிற்றில் ஜீரணமாகாமல் அப்படியே கிடக்கிறது! இன்றிரவு சாப்பிடலாமா, உபவாஸம் போட்டு விடலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன். இப்படியிருக்கையில் காபி குடிப் பது உடம்புக்கு மிகவும் கெடுதியென்று நினைக்கிறேன். உனக்கு வேண்டுமானால் காபி போட்டுக் கொண்டு வந்து குடித்துக் கொள்" என்றார் ஸோமநாதய்யர்.

"எப்போது பார்த்தாலும் ஏதாவது நோய் சொல் லிக் கொண்டே யிருக்கிறீர்கள். அதுவும் என்னைக்-

கண்டால் போதும்; உடனே நீங்கள் நோயழுகை அழுவதற்கு ராஜா. 'இன்றைக்கு என் உடம்பு ஸௌக்ய மாக இருக்கிறது. ஒரு வியாதியுமில்லை' என்று உங் கள் வாயிலேலே சொல்ல ஒரு தரங்கூடக் கேட்டதில்லை. என் உயிர் உள்ளவரை அந்த நல்ல வார்த்தையை நான் ஒருதரமேனும் காது குளிரக் கேட்கப் போகிறதேயில்லை, அல்லது கேட்காமலே பிராணனை விடப் போகிறேனே, தெரியாது. கை உளைச்சல், கால் உளைச்சல், அங்கு வீக்கம், இங்கு குடைச்சல், வயிற்றுவலி, தலைவலி, அஜீர்ணம், அஜீர்ணம், அஜீர்ணம்—எப்போதும் இதே அழுகை கேட்டுக் கேட்டு எனக்குக் காது புளித்துப் போய்விட்டது. இனிமேல் ஒரு வார்த்தை சொல்லு கிறேன், அதை ஜாக்கிரதையாக ஒரு பக்கத்தில் வைத் துக் கொண்டிருங்கள். அதாவது, உங்கள் உடம்பு ஸௌகமாகவும் ஆரோக்யமாகவும் இருந்தால் என்னிடம் சொல்லுங்கள். வியாதியிருந்தால் எனக்குச் சொல்ல வேண்டாம். இந்த ஒரு தயவு எனக்கு நீங்கள் அவசிய மாகச் செய்யவேண்டும்" என்றாள்.

ஸோமநாதய்யருக்குக் கோபம் பளிச்சென்று வந்து விட்டது. அவருக்கு முற்கோபம் அதிகம். மனைவியை வாய்க்கு வந்தபடி யெல்லாம் திட்டத் தொடங்கிவிட்டார். "நன்றி கெட்ட நாய், மூண்டாய், உன் பொருட்டாக நான் படும் பாடு 'பஞ்சு தான் படுமோ? சொல்லத்தான் படுமோ, எண்ணத்தான் படுமோ?' நாய் போலே உழைக்கிறேன். கும்பகோ ணத்தில் நல்ல வரும்படி வந்து கொண்டிருந்தது. இங்கு

வந்தது முதல், வரவு நாளுக்கு நாள் குறைவு பட்டுக் கொண்டே யிருக்கிறது. எனவே, உனக்கும் உன் குழந்தைக்கும் சோறு, துணி, மருந்துகள் ஸம்பாதித்துக் கொடுப்பதில் எனக்கு நேரும் கஷ்டங்களும் மனவருத்தங்களும் கணக்கில் அடங்க மாட்டா. நான் முன்பு சேர்த்து வைத்த சொத்தை யெல்லாம் விழுங்கி அதற்கு மேல் பதிணையிரம் ரூபாய் வரை கடன் ஏறிப் போயிருக்கிறது. எத்தனையோ பொய்கள் சொல்ல வேண்டியிருக்கிறது. எமாற்றவேண்டி யிருக்கிறது. நீதி ஸ்தலத்திலே போய் மனமறிந்த பொய்களைச் சொல் வதே நமக்குப் பிழைப்பாய்விட்டது. இந்த வக்கீல் தொழிலும் சரி, வேசைத் தொழிலும் சரி. தர் மத்தைக் கெடுத்து இஹத்தையும் பரத்தையும் நாசம் பண்ணிக்கொண்டு உன் பொருட்டாகப் பாடுபடுகிறேன். மேலும் ஒரு வழக்கு ஜயித் தால் பத்து வழக்குக்கள் தோற்றுப் போகின்றன. அதில் என் மனதுக் கேற்படும் துக்கத்துக்கும் அவ மானத்துக்கும் கணக்கில்லை. தவிரவும் இத் தொழிலோ கோர்ட்டிலேனும் கசஷிக்காரரிடமேனும் ஓயாமல் தொண்டைத் தண்ணீரை வற்றடிக்குந் தொழில். அத னால் உடம்பில் அடிக்கடி சூடு மிகுதிப்பட்டு மலச்சிக் கல் உண்டாக்குகிறது. மலச்சிக்கலே ஸர்வ ரோகங் களுக்கும் ஆதாரமென்று நவீன வைத்ய சாஸ்த்ர பண்டிதர்கள் சொல்லுகிறார்கள். ஆதலால், உடம்பில் எப்போதும் ஓய்வின்றி ஏதேனும் வியாதி இருந்து கொண்டே யிருக்கிறது. இதனாலும் குழந்தைகளுக்கு

உடம்புக்கேதேனும் வந்தால் அப்போது என் மனத்தி லுண்டாகும் பெருந் துயரத்தாலும், அவர்களுடம்பு நேரே இருக்கவேண்டுமே, கடவுளே, என்றன்னை! நான் எப்போதும் எக்கப்படுவதுண்டு, கீலை மயிர் நரைத்துப் போய்விட்டது. மண்டையில் வழுக்கை விழுந்துவிட்டது. உனக்காகப் பாடு பட்டே நான் கிழவனைப் விட்டேன். உன் தொல்லையாலேயே என் பிராணன் போகப் போகிறது. அடா, தீராத நோயி ருந்தால், எப்படி ஸஹிப்பது? ஒரு நாளா, இரண்டு நாளா, ஒரு வாரமா, இரண்டு வாரமா, ஒரு மாஸமா, இரண்டு மாஸமா, ஒரு வருஷமா, இரண்டு வருஷமா, உன்னுடன் கூடி வாழத் தொடங்கிய கால முதலாக இன்றுவரை எப்போதும், ஒரு க்ஷணந் தவறாமல் என் உடம்பு ஏதேனும் ஒரு நோயினால் கஷ்டப்பட்டுக் கொண்டு தானிருக்கிறது. இத்தனை நோயையும் இத் தனை கஷ்டத்தையும் பொறுத்துக்கொண்டு என் உயிர் இதுவரை சாகாமலிருக்கிறதே, அதுதான் பெரிய ஆச் சர்யம். இவ்வளவுக்கும் நான் உன்னிடமிருந்து பெறும் கைம்மாறு யாது? பேதைச் சொற்கள், மடச் சொற்கள், பயனற்ற சொற்கள், மனதைச்சுடும் பழிச் சொற்கள், காது நரம்புகளை அறுக்கும் குரூரச் சொற் கள்—இவையே நான் பெறும் கைம்மாறு. ஓயாமல் 'புடவை வேண்டும்,' 'ரவிக்கை வேண்டும்,' 'நகை வேண்டும்,' 'குழந்தைகளுக்கு நகைகள் வேண்டும்'— ஷீண் செலவு! ஷீண் செலவு! ஷீண் செலவு! என்ன துன் பம், என்ன துன்பம்! என்ன துன்பமடா, ஈசா! எனக்

கிந்த உலகத்தில் சமைத்து விட்டாய்! இந்தக் கஷ்டத்தையெல்லாம் இன்னும் எத்தனை காலம் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டுமோ? என் பிராணன் என்றுதான் நீங்கப் போகிறதோ?" என்று சொல்லி லோமநாதய்யர் அழத் தொடங்கி விட்டார்.

அப்போது முத்தம்மா:—"அழுகையையெல்லாம் என்னிடம் கொண்டு வருகிறீர்கள். புன்னகை, ஸந்தோஷம், சிருங்கார ரஸம் இதற்கெல்லாம் வேறு பெண் ஏற்பாடு செய்துகொள்ளுங்கள். இல்லாவிட்டால் என்னைத் தள்ளிவிட்டு வேறு ஸ்திரீயை பஹிரங்கமாக விவாகம் செய்துகொள்ளுங்கள். அதுதான் உங்களுக்கு நல்லது.

இன்னொரு புதுப் பெண்—சிறு பெண்ணை மணம் புரிந்துகொண்டு அவளுடன் இன்புற்று வாழத் தொடங்குவீர்களாயின் உங்களுக்குள்ள மனக் கவலையெல்லாம் நீங்கிப்போய்விடும். பிறகு புத்தியில் தெளிவும் சுறுசுறுப்பும் ஏற்படும். அப்பால் கோர்ட்டில் ஸாமர்த்யமாகப் பேசும் திறமை மிகுதிப்பட்டு, உங்களுக்கு வக்கீல் வேலையில் நல்ல லாபம் வரத் தொடங்கும். உடம்பிலுள்ள வியாதிகளெல்லாம் நீங்கிப்போய்விடும். நீங்கள் ஸந்தோஷத்துடனும் ஆரோக்யத்துடனும் வாழ்வீர்கள். மலச்சிக்கலால் எல்லா வியாதிகளும் தோன்றுவதாக வன்றோ நீங்கள் சொல்லுகிறீர்கள். எங்கள் அத்தங்கார் விசாலாக்ஷி அப்படிச் சொல்லமாட்டாள். அவளும் உங்கள் போலே பெரிய வேதாந்தியும் ஞானியுமாதலால் அவளுடைய கருத்தை உங்களுக்குச் சொல்

கிந்த உலகத்தில் சமைத்து விட்டாய்! இந்தக் கஷ்டத் தையெல்லாம் இன்னும் எத்தனை காலம் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டுமோ? என் பிராணன் என்று தான் நீங்கப் போகிறதோ?" என்று சொல்லி ஸோம நாதய்யர் அழத் தொடங்கி விட்டார்.

அப்போது முத்தம்மா:—"அழுகையை யெல் லாம் என்னிடம் கொண்டு வருகிறீர்கள். புன்னகை, ஸந்தோஷம், சிருங்கார ரஸம் இதற்கெல்லாம் வேறு பெண் எற்பாடு செய்துகொள்ளுங்கள். இல்லாவிட் டால் என்னைத் தள்ளிவிட்டு வேறு ஸ்திரீயை பதிரங்க மாக விவாகம் செய்துகொள்ளுங்கள். அதுதான் உங் களுக்கு நல்லது.

இன்னொரு புதுப் பெண்—சிறு பெண்ணை மணம் புரிந்துகொண்டு அவளுடன் இன்புற்று வாழத் தொட ங்குவீர்களாயின் உங்களுக்குள்ள மனக் கவலை யெல் லாம் நீங்கிப்போய்விடும். பிறகு புத்தியில் தெளிவும் சுறுசுறுப்பும் ஏற்படும். அப்பால் கோர்ட்டில் ஸாமர்த் யமாகப் பேசும் திறமை மிகுதிப்பட்டு, உங்களுக்கு வக்கீல் வேலையில் நல்ல லாபம் வரத் தொடங்கும். உடம் பிலுள்ள வியாதிகளெல்லாம் நீங்கிப்போய்விடும். நீங் கள் ஸந்தோஷத்துடனும் ஆரோக்யத்துடனும் வாழ் வீர்கள். மலச்சிக்கலால் எல்லா வியாதிகளும் தோன் று வதாக வன்றோ நீங்கள் சொல்லுகிறீர்கள். எங்கள் அத்தங்கார் விசாலாக்ஷி அப்படிச் சொல்லமாட்டாள். அவளும் உங்கள் போலே பெரிய வேதாந்தியும் ஞானி யுமாதலால் அவளுடைய கருத்தை உங்களுக்குச் சொல்

தொழில் எனக்குப் பெருங் கஷ்டமாகிவிடும். ஆகவால் உன்னைத் தள்ளிவைத்துவிட்டு வேறு விவாகம் செய்து கொள்ளும்படி நீ தயவுடன் சிபார்சு செய்யும் வழக்கத்தை இன்றுடன் நிறுத்திக்கொள்ளும்படி, அதாவது, என் காது நம்புகளையும் ஹிருதய நம்புகளையும் அறுப்பதற்கு நீ நிஷ்கிருணையாகவும் இடையின்றியும் மறவாமலும் மீட்டுமீட்டும் உபயோகித்துவரும் அஸ்த்ரங்களில் இந்த ஒற்றை அஸ்த்ரத்தின் ப்ரயோகத்தையேனும் இனி நிறுத்தி விடும்படி, நான் உன்னை மிகவும் காழ்மையுடன் ப்ரார்த்தனை செய்கிறேன்" என்றார்.

"சரி. எனக்குக் கலகோகிறது. நான் கீழே போய்க் காபிபோட்டு சாப்பிடப்போகிறேன்" என்று சொல்லி முக்தம்மா எழுந்தாள்.

"காப்பி குடித்துவிட்டு இங்கு திரும்பிவருவாயா?" என்று ஸோமநாதய்யர் கேட்டார்.

"எதற்கு? இன்னும் ஏதேனும் அழுகைகளேனும் வசைகளேனும் மிச்ச மிருக்கின்றனவோ? நான் குரூர வார்த்தைகள் சொல்வதாக வருத்தப் படுகிறீர்களே? நீங்கள் என்னைப் பற்றி என்னிடம் சொல்லும் வார்த்தைகளெல்லாம் அமிர்வமயமாக இருக்கின்றன என்று தான் நினைத்திருக்கிறீர்களோ? சற்று நேரத்துக்கு முன் என்னுடன் கூடிவாழ்வதில் நீங்கள் அடையும் இன்பத்தை விஸ்தாரமாக வர்ணித்தீர்களே? அச் சொற்கள் என் செவிக்கு தேவாமிர்தமாகத் தான் இருந்

தனை. கேட்கக் கேட்கத் தெவிட்டவில்லை. சரி. அது வீண் பேச்சு. பணங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சிப் பயனில்லை. எத்தனை காலம் உங்களுடன் வாழும்படி பகவான் தலையில் எழுதி யிருக்கிறானோ, அது வரை இப்படிப்பட்ட ஆசீர்வாதங்கள் தங்களுடைய திருவாயினின்று பிறந்து கொண்டேதானிருக்கும். அவற்றை நான் ஸ்வீகரித்துக் தான் தீரவேண்டும். எனக்கு நிவர்த்தி யேது? நீங்களாவது என்னை விலக்கி வைத்து விட்டு மற்றொருத்தியை விவாகம் செய்துகொண்டு ஸௌக்கியமாக வாழ்வீர்கள். நான் அப்படிச் செய்ய முடியுமா? எனக்கு வேறு புகலேது?" என்று முத்தம்மா சொன்னாள்.

"அடியே, நாயே, நான் மறுவிவாகம் செய்து கொள்ளலாமென்ற வார்த்தையை என் காது கேட்க உச்சரிக்கக் கூடாதென்று நான் சொன்னேனே. இல்லையோ? இப்போதுதான் சொல்லி வாய் மூடினேன். மறுபடி அந்தப் புராணத்தை எடுத்து விட்டாயே. உனக்கு மானமில்லையா? வெட்கமில்லையா? சூடு சுரணை யில்லையா? இதென்னடா கஷ்டமாக வந்து சேர்ந்திருக்கிறது! இவள் வாயை அடக்குவதற்கு ஒரு வழி தெரியவில்லையே, பகவானே! நான் என்ன செய்வேன்? எதேனும் ஒரு வியாதி வந்து இவள் வாயடைத்து ஊமையாய் விடும்படி கிருபை செய்ய மாட்டாயா, ஈசா?" என்று கூறி ஸோமநாதய்யர் பிரலாபித்தார்.

"சரி. போதும், போதும். காது குளிர்ந்துபோய் விட்டது. என்னைக் காபி குடித்துவிட்டு மறுபடி இங்கு வரும்படி சொன்னீர்களே, எதற்காக?" என்று முத்தம்மா மீண்டுமொருமுறை வினவினாள்.

"காபி குடித்துவிட்டுவா. பிறகு விஷயத்தைச் சொல்லுகிறேன். முதலிலேயே இன்ன காரணங் களுக்காகத் தான் அழைக்கிறேன் என்று உனக்கு மூச்சுவிக்காமல் எழுதி கையெழுத்துப் போட்டுக் கொடுத் தால்தான் வருவாயோ?" என்று ஸோமநாதய்யர் கர்ஜித்தார்.

"சரி; வருகிறேன். இதற்காகத் தொண்டை யைக் கிழித்துக் கொள்ளவேண்டிய அவசியமில்லை. இது ஹைகோர்ட்டில்லை; வீடு" என்று சொல்லி முத்தம்மா அந்த ஏழைப் பிராமணன்மீது ஒரு கடைசி அஸ்திரத்தை ப்ரயோகம் செய்துவிட்டுக் கீழே இறங் கிச் சென்றாள்.

அவள் போனவுடன் ஸோமநாதய்யர்:—"ஹை கோர்ட்டில் எனக்கு யாதொரு லாபமும் கிடைக்க வில்லையாம். அதற்காகக் கேலி பண்ணிவிட்டுப் போகிறாள். இந்த நாயின் வாயை அடக்க ஒரு வழி தெரியவில்லையே!" என்று நினைத்து வருந்தினர்.

"வில்லம்பு சொல்லம்பு மேதினியிலே யிரண்டாம்;
வில்லம்பிற் சொல்லம்பே மேலதிகம்."

என்று பழைய பாட்டொன்று சொல்லுகிறது. இந்தச் சொல்லம்பைப் பிரயோகிப்பதில் ஆண் மக்க

ளைக் காட்டிலும் பெண்கள் அதிகத் திறமை யுடைய வர்களென்று தோன்றுகிறது. இதற்கு முக்கியமான காரணம் ஆண்மக்கள் பெண்மக்களுக்குச் செய்யும் சரீரத் துன்பங்களும், அநீதிகளும், பலாத்காரங்களுமே போலும். வலிமையுடையோர் தம் வலிமையால் எளியாரைத் துன்பப்படுத்தும்போது எளியோர் வாயால் திரும்பத் தாக்கும் திறமை பெறுகிறார்கள். கை வலிமை குறைந்தவர்களுக்கு அநியாயம் செய்யப்படுமிடத்தே அவர்களுக்கு வாய்வலிமை மிகுதிப்படுகின்றது. மேலும், மாதர்கள் தாய்மாராகவும் ஸஹோதரிகளாகவும் மனைவியாகவும் மற்ற சுற்றத்தாராகவும் இருந்து ஆண் மக்களுக்கு சக்தியும் வலிமையும் மிகுதிப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் வேலை செய்கிறார்கள். அவ் வலிவையும் சக்தியும் தமக்கு விரோதமாகவே செலுத்தப்படுமென்று நன்கு தெரிந்த இடத்திலும், மாதர்கள் தம்மைச் சேர்ந்த ஆண் மக்களிடம் தமக்குள்ள அன்பு மிகுதியாலும், தாம் ஆடவர்களின் வலிமையையே சார்ந்து வாழும்படி நேர்ந்திருக்கும் அவசியத்தைக் குறித்தும், அவர்களிடத்தே மேற் கூறிய குணங்களேற்படுத்தி வளர்க்க வேண்டுமென்ற நோக்கத்துடன் இடையின்றி முயற்சி பண்ணுகிறார்கள். இவ்வுலக வாழ்க்கையில் ஒருவன் வெற்றியடைய வேண்டுமானால், அவன் ஸம்பாதித்துக் கொள்ளவேண்டிய குணங்களெல்லாவற்றிலும் மிக மிகமிக உயர்ந்த குணமாவது பொறுமை. மனிதனுடைய மனம் சிங்கம்போல் தாக்குந் திறனும், பாயுந் திற

ணும்கொண்டிருப்பது மட்டுமேயன்றி ஒட்டகத்தைப் போலே பொறுக்குந் திறனும் எய்தவேண்டும். அவ்விதமான பொறுமை பலமில்லாதவர்களுக்கு வராது. மனத்திட்டமில்லாதோரின் நாடிகள் மிகவும் எளிதாகச் சிதறடிக்கக் கூடியன. ஒரு இலேசான எதிர்ச்சொல் கேட்கும்போதும், இலேசான ஐங்கடம் நேரும்போதும் அவர்களுடைய நாடிகள் பெருங் காற்றினடைப்பட்ட கொடியைப் போல் துடித்து நடுங்கத் தொடங்குகின்றன. மனத் திட்ப மில்லாதோருக்கு நாடித் திட்ப மிராது. அவர்களுக்கு உலகத்தில் புதியது நேர்ந்தபோதிலும், அதை அவர்களுடைய இந்திரியங்கள் ஸஹிக்குந் திறமை யற்றனவாகின்றன. மனவுறுதி யில்லாத ஒருவன் ஏதேனும் கணக்கெழுதிக் கொண்டிருக்கும்போது, பக்கத்திலே ஏதேனும் குழந்தைக் குரல் கேட்டால் போதும். உடனே இவனுடைய கணக்கு வேலை நின்றுபோய்விடும். அல்லது கவறுதல்களுடன் இயல்பெறும். அடுத்த வீட்டில் யாரேனும் புதிதாக ஹார்மோனியம் அல்லது மிருதங்கம் பழகுகிற சத்தம் கேட்டால் போதும். இவனுடைய கணக்கு மாத்திரமே யன்றி சுவாஸமோ ஏறக்குறைய நின்றுபோகக் கூடிய நிலைமை எய்திவிடுவான். புதிதாக யாரைக் கண்டாலும் இவன் கூச்சப்படுவான்; அல்லது பயப்படுவான்; அல்லது வெறுப்பெய்துவான். மழை பெய்தால் கஷ்டப்படுவான். காற்றடித்தால் கஷ்டப்படுவான். தனக்கு ஸமான மாகியவர்களும் தனக்குக் கீழ்ப்பட்டவர்

களும் தான் சொல்லும் கொள்கையை எதிர்த்து எதேனும் வார்த்தை சொன்னால், இவன் செவிக்குள்ளே நாராச பாணம் புகுந்து போலே பரிடர்ப் படுவான்.

பொறுமை யில்லாதவனுக்கு இவ்வுலகத்தில் எப்போதும் துன்பமே யன்றி, அவன் ஒரு நாளும் இன்பத்தைக் காண மாட்டான். ஒருவனுக்கு எத்தனைக் கெத்தனை பொறுமை மிகுதி படுகிறதோ, அத்தனைக் கத்தனை அவனுக்கு உலக விவகாரங்களில் வெற்றி யுண்டாகிறது. இது பற்றியே யன்றோ நம் முன்னோர் "பொறுத்தார் பூமி யாள்வார், பொங்கினர் காடாள்வார்" என்று அருமை யான பழமொழி யேற்படுத்தினர்.

இத்தகைய பொறுமையை ஒருவனுக்குச் சமைத்துக் கொடுக்கும் பொருட்டாகவே, அவனுடைய சுற்றத்து மாதர்களும், விசேஷமாக அவன் மனைவியும், அவனுக்கு எதிர் மொழிகள் சொல்லிக் கொண்டே யிருக்கிறார்கள். கோபம் பிறக்கத் தக்க வார்த்தைகள் சொல்லுகிறார்கள். வீட்டுப் பழக்கந் தான் ஒருவனுக்கு நாட்டிலும் ஏற்படும். வீட்டிலே பொறுமை பழகினவன்றி, ஒருவனுக்கு நாட்டு விவகாரங்களில் பொறுமை யேற்படாது. பொறுமை எவ்வளவுக் கெவ்வளவு குறைகிறதோ, ஒருவனுக்கு அத்தனைக்கத்தனை வியாபாரம், தொழில் முதலியவற்றில் வெற்றியும் குறையும். அவனுடைய லாபங்களெல்லாம் குறைந்து கொண்டே

போம். பொறுமையை ஒருவனிடம் எற்படுத்திப் பழக்க வேண்டுமானால் அதற்கு உபாயம் யாது? சரீரத்தில் ஸஹிப்புத் திறமை யேற்படுத்தும் பொருட்டாக ஜப்பான் தேசத்தில் சிறு குழந்தையாக இருக்கும் போதே ஒருவனுடைய தாய்தந்தையார் அவனை நெடு நேரம் மிக மிகக் குளிர்ந்த பனிக் கட்டிக்குள் தன் விரலை அல்லது கையைப் புதைத்து வைத்துக் கொண்டிருக்கும்படி செய்து பழக்குகிறார்கள். மிக மிகச் குடான வெந்நீரில் நெடும் பொழுது கையை வைத்துக் கொண்டிருக்கும்படி எவுகிறார்கள். இவை போன்றன உடம்பினால் கூடி குளிரைத் தாங்கும்படி பயிற்றுவதற்குரிய உபாயங்களாம். இது போலவே ஸுக துக்கங்களை ஸஹித்துக் கொள்வதாகிய மனப் பொறுமை எற்படுத்துவதற்கும், சூடான சொற் களும் ஸஹிக்க முடியாத பேதமைச் சொற்களும் சொல்லிச் சொல்லித்தான், ஒருவனைப் பழக்க வேண் டும். அவற்றைக் கேட்டுக் கேட்டு மனிதனுக்குக் காதும் மனமுமும் நன்கு திட்ப மெய்தும். இங்ஙனம் பொறுமை உண்டாக்கிக் கொடுக்கும் பொருட்டாக வும், மனிதனுடைய மனத்தில் அலறிலேயே அடிக்கடி படைத்துக் கொள்ளப்படும் வீண் கவலைகளினின்றும் வீண் பயங்களினின்றும் அவன் மனத்தை வலிய மற்றொரு வழியில் திருப்பிவிடும் பொருட்டாகவும், ஒருவனுடைய மாதா அல்லது மனைவி அவனிடம் எதிர்பார்க்கப்படாத, பேதமை மிஞ்சிய, கோபம் விளைக்கக் கூடிய சொற்கள் உரைக்கிறார்கள். அவ

னுடைய அன்பு எக்கணை ஆழமானதென்று சோதிக்
கும் பொருட்டாகவும் அங்ஙனம் பேசுகிறார்கள்.
அன்பு பொறுக்கும். அன்பிருந்தால் கோபம் வராது.
அன்றி ஒருவேளை தன்னை மீறிக் கோபம் வந்த
போதிலும் மிகவும் எளிதாக அடங்கிப் போய்விடும்.
இக்கணைய அன்பைக் கணவன் தன் மீதுடையவனை
என்பதைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு மாதர்
பல ஸமயங்களில் கோபம் வினைக்கத் தக்க வார்த்தை
களை மனமறியப் பேசுகிறார்கள். நம்முடன் பிறந்து
வளர்ந்து நம்மைத் தாயாகவும் சினேஹிதியாகவும்
ஸஹோதரியாகவும் எப்போதும் காப்பாற்றிக்கொண்
டும், கவனித்துக் கொண்டும், நம்மிடம் தீராத அன்பு
செலுத்திக் கொண்டும் வருகிற மாதர்கள் சில ஸம
யங்களில்—அனேக ஸமயங்களில்—நமக்குப் பயனற்
றனவாகவும், கழி பெரும் பேதைமையுடையன
வாகவும் தோன்றக் கூடிய மொழிகளைப் பேசுவதி
னின்றும் ஆடவர்களாகிய நம்மூட் பலர் அம் மாதர்
களை மறவா மடமை பொருந்தியவர்களென்று நினைப்
பது தவறு. அங்ஙனம் நினைத்தல் நமது மடமை
யையே விளக்குவதாம். ஆண்மக்கள் ப்ரத்யேக
மாகக் கற்கும் வித்தைகளிலும், விசேஷமாகப் பயி
லும் தொழில்களிலும், பொதுவாக சரீரபலத்திலும்
மாதரைக் காட்டிலும் ஆண்மக்கள் உயர்ந்திருக்கக்
கூடுமே யெனிலும், ஸாதாரண ஞானத்திலும், யுக்தி
தந்திரங்களிலும், உலகப் பொது அனுபவத்தால்
விளையும் புத்திக் கூர்மையிலும் ஆண்களைக் காட்டி

லும் பெண்கள் குறைவாக இருப்பார்களென்று எதிர் பார்ப்பதே மடமை.

ஆதலால், குடும்பத்திலிருந்து பொறுமை என்ப தொரு தெய்விக குணத்தையும், அதனால் விளையும் எண்ணற்ற சக்திகளையும் எய்த விரும்புவோர், தாய் மனைவி முதலிய ஸ்திரீகள் தமக்கு வெறுப்புண்டாகத் தகுந்த வார்த்தை பேசும்போது, வாயை மூடிக் கொண்டு பொறுமையுடன் கேட்டுக் கேட்டுப் பழக வேண்டும். அங்ஙனமின்றி ஒரு ஸ்திரீ வாயைத் திறந்த மாத்திரத்திலேயே, அவள் தாயாயினும், உடம்பிலும் உயிரிலும் பாதியென்று அக்கினியின் முன் ஆணையிட்டுக் கொடுத்த மனைவி யாயினும், அவள் மீது புலிப் பாய்ச்சல் பாய்ந்து பெருஞ் சமர் தொடங் கும் ஆண்மக்கள் நாளுக்கு நாள் உலக விவகாரங் களில் தோல்வி எய்துவோராய்ப் பொங்கிப் பொங்கித் துயர்ப்பட்டுத் துயர்ப்பட்டு மடிவார்.

இந்த ஸங்கதிகளெல்லாம் ஸோமநாதய்யருக்கு மிகவும் இலேசாகத் தென்படலாயின. சில மாஸங் களுக்கு முன்பு அவருடைய கிழத் தாயாகிய ராமுப் பாட்டி இறந்து போய் விட்டாள். அவள் சாகு முன்பு இவரைத் தனியாக அழைப்பித்து இவருடன் சிறிது நேரம் ஸம்பாஷணை செய்து கொண்டிருந் தாள். அவள் சொன்னாள் :—" அடே, அய்யா, ஸோமு! உன் பெண்டாட்டி முத்தம்மாளை நீ ஸாமான்யமாக நினைத்து விடாதே. அவள் மஹா பதிவ்ரதை. உன்னை ஸாக்ஷாத் பகவானுக்கு ஸமமாகக்

கருதிப் போற்றி வருகிறாள். உன்னுடைய ஹிதத்தைக் கருதியும் உனக்குப் பொறுமை வீணா விக்கும் பொருட்டாகவும் அவள் சில ஸமயங்களில் எறுமாறுக வார்த்தை சொன்னால், அதைக் கொண்டு நீ அவளிடம் அதிக அருவருப்பும் கோபமும் எய்தலாகாது. நானே சாகப் போகிறேன். இன்னும் இரண்டு தினங்களுக்கு மேல் என் உயிர் தறுகி நிற்குமென்று தோன்ற வில்லை. நான் போனபின் உனக்கு அவளைத் தவிர வேறு கதி யேது? தாய்க்குப் பின் தாரம். தாய் இருக்கும் போதே ஒருவன் அவளிடம் செலுத்தும் உண்மைக்கும் பக்திக்கும் நிகரான உண்மையையும் பக்தியையும் தன் மனைவியிடத்திலும் செலுத்தவேண்டும். இதுவரை நீ முத்தம்மாளை எத்தனையோ விதங்களில் கஷ்டப் படுத்தி வதைத்து வதைத்து வேடிக்கை பார்த்தாய் விட்டது. கொண்ட பெண்டாட்டியின் மனம் கொதிக்கும் படியாக நடப்பவன் வீட்டில் லக்ஷ்மீதவி கால் வைக்கமாட்டாள். அந்த வீட்டில் மூதேவி தான் பரிவாரங்களுடன் வந்து குடியேறுவாள். இந்த வார்த்தையை எப்போதும் மறக்காதே. இதை ஆணி மந்திரமாக முடிச்சுப் போட்டு வைத்துக் கொள். குழந்தாய், ஸொழு, அந்தப் பராசக்தி லலிதாம்பிகை தான் உனக்கும் உன் பெண்டு பிள்ளைகளுக்கும் நீண்ட ஆயுளும் மாறாத ஆரோக்கியமும் கொடுத்து, உங்களை என்றும் ஸந்தோஷ பதவியிலிருத்திக் காப்பாற்றிக் கொண்டு வரவேண்டும்" என்றாள்.

அந்த வார்த்தை அவருக்கு அடிக்கடி நினைப்புக்கு வரலாயிற்று. "அத்தை யருமை செத்தால் தெரியும்" என்பது பழமொழி. ராமுப் பாட்டியின் முதுமைக் காலத்தில், ஸோமநாதய்யர் அவளை யாதொரு பயனு மில்லாமல் தன்னுடைய ஹிம்ஸையின் பொருட்டாக வும் கஷ்டத்தின் பொருட்டாகவும் நிகழ்ச்சி பெற்று வரும் ஒரு கிழ இருமல் யந்திரமாகப் பாவித்து நடத்தி வந்தார். அவள் ஒரேயடியாகச் செத்துத் தீர்ந்த பிறகு தான், அவருடைய மனதில் அவள் மிகவும் மஹிமை பொருந்திய தெய்வ மாகிய மாதா என்ற விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற வசனம் அவருக்கு உண் மைப் பொருளுடன் விளங்கலாயிற்று. தாயிற் சிறந்த கோயிலில்லை. உலகத்தை யெல்லாம் படைத்துக் காப் பவளாகிய ஸாக்ஷாத் ஜகன்மாதாவே தனக்குத் தாய் வடிவமாக மண்மீது தோன்றிக் காப்பாற்றுகிறாள். "புருஷ ஏவேதம் ஸர்வம்" என்று வேதம் சொல்லு கிறது. இவ்வுலகத்திலுள்ள பொருளெல்லாம் கடவுளே யென்பது அந்த வாக்யத்தின் அர்த்தம். "ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்"—உலக முழுதும் கடவுள் மயம். நம் வீட்டை நாயாக நின்று காப்பதும் கடவுள் தான் செய்கிறார். வேலையாளாக வந்து வீட்டைப் பெருக்கு வதும் கடவுள் தான் செய்கிறார். தோழனாகவும் பகை வனாகவும், ஆசானாகவும் சீடனாகவும், தாய் தந்தை யாகவும், பெண்டு பிள்ளைகளாகவும் நம்மைக் கடவுளே சூழ்ந்து நிற்கிறார். எனினும் பிற வடிவங்களால் அவர்

நமக்குச் செய்யும் உபகாரங்களைக் காட்டிலும் தாய் தந்தையாராக நின்று அவர் செலுத்தும் கருணைகள் சாலமிகப் பெரியன. தாய் தந்தையிருவருமே கடவுளின் உயர்ந்த விக்ரஹங்களாக வணங்குதற்குரியர். அவ்விருவருள் தாயே நம்மிடத்து அதிக தெய்விகமான அன்பு செலுத்துவது கொண்டும், நாம் கைம்மாறிழைக்க முடியாத பேரருட் செயல்கள் தந்தையிடமிருந்து நமக்குக் கிடைப்பதைக் காட்டிலும் தாயினிட மிருந்து அதிகமாகக் கிடைப்பது கருதியும், அவள் ஒருவனுலே தந்தையைக் காட்டிலுங்கூட உயர்வாகப் போற்றப் படத் தக்கவள். இதனைக் கருதியே "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற வசனத்தில் தந்தையின் பெயருக்கு முன்னே தாயின் பெயர் கூட்டப்பட்டிருக்கிறது.

ஸோமநாதய்யர் காமம் குரோதம் முதலிய தோஷங்களை உடனே அடக்கிக் கொள்ளக் கூடிய சக்தி பெற்றிலரும், கல்வி கேள்விகளால் அவருக்கு ஏற்பட்டிருந்த புத்திக் தெளிவு இடைக்கிடையே அந்தக் காமம் முதலிய தீயகுணங்களைக் கண்டித்து நன்கு சுடர் வீசும் ஸமயங்களும் இருந்தன. அந்தநேரங்களில் அவருடைய புத்திக்குப் பெரியபெரிய உண்மைகள் புலப்படுவதுண்டு. மேலும் தாம் சுமார் இரண்டு வருஷங்களின் முன்னே விசாலாக்ஷியிடம் அவமானப்பட்ட காலை முதலாக; அவர் பரஸ்த்ரீகளின் விஷயத்தில் அதிகமாக புத்தியைச் செலுத்தும் வழக்கத்தை நாளுக்கு நாள் குறைத்துக் கொண்டே வந்தார். "பாவத்தின் கூலியே மரணம்"

என்று கிறிஸ்தவ வேதம் சொல்லுகிறது. துக்கத்தை யும் பயத்தையும் இவற்றால் விளையும் மரணத்தையும் ஒருவன் வெல்ல விரும்புவானையின், இங்கு பயங்களுக் கும் துக்கங்களுக்கும் முக்கிய மூலகாரணமாக இருக்கும் பாவங்களை விட்டு விடவேண்டும். யாதேனுமொரு பாவத்தை வெல்லும் முயற்சியில் ஒரு மனிதன் மிகவும் கஷ்டப்பட்டுக் கைதேறி விடுவானையின், பிறகு மற்றப் பாவங்களை வெல்வதில் அவனுக்கு அத்தனை கஷ்ட மிராது. அவனுக்கு அஸுர யுத்தத்தில் தோல்வியுண் டாய் விடும். அஸுரர்களென்பன பாவங்கள். தேவர் கள் ஹிதம் பண்ணும் சக்திகள்.

எப்போதுமே ஸாமான்யர் பாவச் செய்கை களுக்கு அதிகமாக ஈடுபட்டவரல்லர். முக்கியமாக விப சாரதோஷத்துக்கு அவர் அதிக வசப் பட்டவ ரல்லர். பெரும்பாலும், இப் பாவத்தை அவர் மானஸிக மாகச் செய்து வந்தவரே யல்லாமல் கார்யாம்சத்தில் அதிகமாக அனுஸரித்தது கிடையாது. ஆனால் யேசு கிறிஸ்து நாதர் சொல்லுகிறார்:—அன்ய ஸ்த்ரீகளுடன் ஸம்பந்தப் படுவோர் மாத்திரமே வியபிசாரமாகிய பாத கத்துக்கு ஆட்பட்டோர் என்று கருதுதல் வேண்டா. வெறுமே மனத்தால் ஒருவன் தன் மனைவி யொழிய மற் றொரு ஸ்த்ரீயை விரும்புவானையின், அவனும் வியபிசார பாவத்துக்குட் பட்டவனே யாவான்" என்கிறார். இந்த விஷயத்தை உலகத்தார் ஸாதாரணமாக கவனிப்பது கிடையாது. பிறனுடைய சொத்தைத் திருடி, ஊர்க் காவலாளிகளின் விசாரணைகளில் அகப்பட்டு, தண்

டனை யடைந்து சிறை புகுந்து வாழ்வோன் மாத்தி ரமே கள்வனென்று பாமரர்கள் நினைக்கிறார்கள். பிற னுடைய சொத்தை அபகரிக்க வேண்டு மென்று மன தில் எண்ணுதல் பொதுப். அங்ஙனம் எண்ணிய மாத்திரத்தாலேயே ஒருவன் கள்வனாகி விடுகிறான். கள்வனுக்குரிய தண்டனை அவனுக்கு மனிதர்களால் விதிக்கப்படாவிடினும், கடவுளால் அவசியம் விதிக்கப் படுகிறது.

ஆனால், இளமுங்கிலை வளைத்து விடுதல் ஸுலபம், முற்றிப் போன முங்கிலை வளைக்க முடியாது. அதை வளைக்கப் போகுமிடத்தில் அது முறிந்து போய்விடும். மனித ஹ்ருதயத்தை இளமைப் பிராயத்தில் சீர்திருத் துதல் ஸுலபம். பின்னிட்டு முதிர்ந்த வயதில் மனித ஹ்ருதயத்தை வளைத்தல் முங்கிலை வளைப்பது போல் ஸாத்யமன்று; ஆனால் மிகவும் சிரமமான வேலை. இது பற்றியே முன்னோரும் "இளமையிற் கல்" என்று உபதேசம் புரிந்தனர்.

எனினும், வருந்தினால் வாராத தொன்று மில்லை. மனித ஹ்ருதயம் எப்போதுமே முற்றிப் போன முங்கிலாகும் வழக்கமில்லை. இளமையிலிருப்பதைக் காட்டிலும் வயதேறிய பிறகு தவம் முதலியவற்றைப் பயிலுதல் மிகவும் சிரமமென்பது கருதி எவனும் நெஞ்சந் தளர்தல் வேண்டா. கல்வியையும் தவமும் எந்தப் பிராயத்திலும் தொடங்கலாம். இதைப் பற்றியே ஸோமநாதய்யர் அடிக்கடி யோசித்துக் கடைசியாகத் தவம் பயிலுதல் அவசியமென்று நிச்சயித்துக் கொண்

டார். தவமென்றால் காட்டிலே போய், மரவுரியுடுத்து கந்த மூலங்களை புஜித்துக்கொண்டு செய்யும் தவத்தை இங்கு பேசவில்லை. ஆகுதலாகிய உண்மைத் தவத்தையே இங்கு குறிப்பிடுகிறார். ஆத்ம ஞானத்தை—அதாவது, எல்லாம் ஒன்று; எல்லாம் கடவுள்; எல்லாம் இன்பம் என்ற ஞானத்தை—ஒருவன் தனது நித்திய அனுபவத்தில் பயன்படுத்தி நன்மை யெய்த வேண்டுமாயின் அதற்காக அவன் கைக் கொண்டொழுக வேண்டிய ஸாதனங்களில் மிக உயர்ந்தது தவம்.

அதாவது, இந்திரியங்களை அதர்ம நெறிகளில் இன்புற வேண்டுமென்ற விருப்பத்தினின்றும் தடுத்தல். இந்திரியங்களைத் தடுத்தலாவது மனைத் தடுத்தல். மனமே ஐந்து இந்திரிய வாயில்களாலும் தொழில் புரியும் கருவி. சஞ்சலம் பயம் முதலிய படுகுழிகளில் வீழ்ந்து தவிக்காதபடி மனத்தைக் காத்தலும் தவமென்றே கூறப்படும். எல்லாப் பாவங்களைக் காட்டிலும் வலியது, மற்றெல்லாப் பாவங்களுக்கும் காரணமாவது, பயம். எனவே, பயத்தை வென்றால் மற்றப் பாவங்களை வெல்லுதல் எளிதாய்விடும். மற்றப் பாவங்களை வென்றால், தாய்ப் பாவமாகிய பயத்தை வெல்லுதல் பின் எளிதாம். இவ் விரண்டு நெறியாலும் தவத்தை ஏக காலத்தில் முயன்று பழகுதல் வேண்டும்.

இவ்வகைத் தவத்தையே ஸோமநாதய்யர் விரும்புவராயினர். மேலும் தவங்களில் உயர்ந்தது பூஜை. மனத்தைத் தீய நெறியில் செல்ல விடாமல் தடுப்பதற்கு மிகவும் சுருக்கமான உபாயம் அதனை நன்

னெய்யிலே செலுத்துகல். மனக்கைச் செலுத்துகற் குரிய நன்னெறிகள் அனைத்திலும் உயர்ந்தது பூஜை. அன்பால் செய்யப்படும் உபசாரங்களே பூஜைகள் எனப்படும். எல்லாமாகிய கடவுளிடத்திலும், கடவுளா கிய எல்லாப் பொருள்கள், விசேஷமாக எல்லா உயிர்க ளிடத்திலும், இடையருத கல்லன்பு செலுத்துவதும், அந்த அன்பின் கிரியைகளாகிய வழிபாடுகள் புரிவ தமே மிகச் சிறந்த தவம்: அதுவே அறங்களனைத் திலும் பேரறம். அம்மே மோகூம் வீட்டின் கதவு. அன்பே மோகூம். அன்பே சிவம். இதனையே பக வான் புத்தரும் நிர்வாணமாகிய மறுமை முக்திக்குக் கருவியாகக் கூறினர். 'கடவுளிடத்தும் மற்றுள்ள உயிர்களிடத்திலும் அன்பு செலுத்துவதே மோகூத் துக்கு வழி'யென்று யேசு கிறிஸ்துவும் சொல்லியிருக் கிறார். மேலும், மற்ற மனிதர்களைத் தொழுதலும் வழிபடுதலும்—அவர்களிடத்துத் தீராத அன்பு செலு த்தி அவர்களுருக்குத் தொண்டு புரிதலும்—இல்லா தோன் கடவுளுக்குச் செய்யும் ஜபம் முதலிய கிரியைக ளால் கடவுளிடத்தே அன்புடையவன் என்று தன்னைக் கூறிக் கொள்ளுதல், வெறும் வேஷமாத்திரமே யன்றி உண்மையான தெய்வ பக்தியைக் காட்டுவதாகாது என்று கிறிஸ்து நாதர் உபதேசித்தருளினார். கண்ணுக் குத் தெரியும் கடவுளராகிய மனிதரிடத்தே அன்பு செய்யாதவன் கண்ணுக்குத் தெரியாத ஜகத்தின் மூல ஒளியாகிய ஆதிக் கடவுளிடத்தே அன்பு செய்ய வல்லன் ஆகமாட்டான் என்று கிறிஸ்துநாதர் சொல்லுகிறார்.

இதனை யெல்லாம் ஸோமநாதய்யர் நன்முக அறிந் தவராதலால், மற்ற ஜீவர்களிடத்தில் அன்புசெலுத்திப் பழகுவதை முக்கிய விரதமாக எடுத்துக் கொண்டார். மற்ற உயிர்களிடத்திலும், விசேஷமாக மற்ற மனிதரிடத்திலும் உண்மையான அன்பு செலுத்திப் பழகுதல் ஸாமான்யமான காரியமன்று. அதி சிரமமான காரியம் ஜன்ம முதலாக நமக்கு ஏற்பட்ட விசேஷ ஸம்ஸ்காரங் களாலும் கணக்கில்லாத அனந்த கோடி சிருஷ்டிகளில் அனந்த கோடிகளாகத் தோன்றி மறையும் ஜீவ குலத் துக்குப் பொதுவாக ஏற்பட்டிருக்கும் பூர்வ ஸம்ஸ் காரங்களாலும் மனிதருக்கு இயல்பாகவே மற்ற உயிர் களிடமும், மற்ற மனிதரிடமும் பெரும்பாலும் பயம், வெறுப்பு, பகைமை முதலிய த்வேஷ குணங்கள் ஜனிக்கின்றன. பல உயிர்களிடம் அன்பும் நட்பும் ஜனிப்பது முண்டு. ஆனால், பொதுவாக ஜீவர்கள் இயற்கையிலேயே ஒருவருக் கொருவர் ஸஹிப்பில் லாமை, அஸூயை முதலிய குணங்களுடையோ ராகின்றனர்.

இந்த அநாதியான ஜீவ விரோதம் என்ற குணத்தை நீக்கி ஸர்வ ஜீவ காருண்யமும் ஸர்வ ஜீவ பக்தியும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டு மென்ற இச்சை ஸோமநாதய்யருக்கு உண்டாயிற்று. எனவே, அவர் ஆடு மாடுகளைக்கண்டால் முன்போல் இகழ்ச் சிக் கொள்கை கொள்வதில்லை. ஏழைகளைக் கண்டால், கொடிய நோயாளிகளைக் கண்டால், குரூபிகளையும் மிகுந்த முதுமையால் உருச் சிதைந்து விகார ரூப

மடைந்திருப்போரையுங் கண்டால், அருவருப்பு எய்தி முகஞ் சுளிப்பதை நிறுத்தி, அவர்களை மானஸிகமாக வந்தனை செய்யவும், ஆசீர்வாதம் பண்ணவும், இயன்ற வரை புறக் கிரியைகளாலும் அவர்களுக்கு இனியன செய்யவும் முயன்றார்.

இதுவரை தமக்குக் கோபமும் அருவருப்பும் விளைவித்துத் தம்மால் இகழ்ச்சியுடனும் எரிச்சலுடனும் புறக்கணிக்கப்படும் மனிதர்களைக் காணும் போது முகமலர்ச்சி கொள்ளவும், அவர்களிடம் தாழ்மை யுரையும் இன்சொற்களும் பேசவும் பழக்கப் படுத்திக்கொள்ளத் தொடங்கினர்.

இம்மெல்லாம் ஆரம்பத்தில் அவருக்கு மிகவும் சிரமமாக இருந்தது. இம்மனத்திலும் சிரமம் யாதென்றால், அவருக்கு முத்தம்மாளிடம் ஸுமுக மாக இருந்து அவளிடம் அன்பு காட்டுதல். அவ ளைக் கண்டவுடனே முகத்தைச் சுளிக்காமலிருக்க அவருக்கு ஸாத்யப்படவில்லை. பரஸ்த்ரீகளிடம் காம மூறுமலிருப்பது அவருக்கு நாளடைவில் ஒருவாறு எளிதாயிற்று. ஆனால், முத்தம்மாளிடம் ப்ரேமை செலுத்துவதெப்படி? விவாகம் செய்து, ருதுசாந்தி முடிந்து சில மாஸங்கள் வரை அவருக்கு முத்தம்மா ளுடைய உறவும் ஊடாடுதலும் இன்பம் பயந்து கொண்டிருந்தன. அப்பால் அவை அவருக்கு ஸுக ஹேதுக்களாகாமல் மாறிப்போய்விட்டன. பதினைந் தாம் வயதில் அந்த பாக்யவதி அவருடைய சயன

வீட்டுக்கு ஒரு ஆண் குழந்தையையும் கொண்டு வரத் தொடங்கினாள். அவர் அவளை முத்தமிடப் போகும் சமயத்தில் அந்தக் குழந்தை வீறிட்டழத் தொடங்கிற்று. அல்லது மல மூத்ர விஸர்ஜனம் செய்து அவளுடைய மடியையும் இவருடைய வேஷ்டியையும் அசுத்தப்படுத்தலாயிற்று. அன்றைக்குத் தொடங்கிற்று பெருங் கஷ்டம். பிறகு புதிய குழந்தைகள் இரண்டு பிறந்தன. தமக்கும் தம்முடைய மனைவிக்கும் இளமைப்பிராயம் தவறி விட்டன என்ற எண்ணம் அக் குழந்தைகளைப் பார்க்குந்தோறும் அவருள்ளத்தில் எழலாயின. இதினின்றும் அவர் குழந்தைகளிடம் அருவருப்படைதல் என்ற பரம மூடத்தனத்துக்குத் தம்மை ஆளாகிக் கொள்ளாமல் தப்பினர். ஆனால், அதைக் காட்டிலும் ஆயிரம் பங்கு அதிக மூடத்தனமாகத் தமது பத்தினியை நோக்கும் பொழுதெல்லாம் அவனிடத்தில் வெறுப்பைப் பெய்துவதும் முகத்தைச் சுளிப்பதுமாகிய தீயவழக்கத்தில் தம்மை யறியாது விழுந்து, தாளுக்கு நாள் அந்தப் படுகுழியில் தமது சித்தத்தை அதிக ஆழமாக அமிழ்ந்துபோக இடங் கொடுத்தார். இத்தனை காலத்துக்கு அப்பால் இவருக்குண்டாகிய புதிய தெளிவின் பயனாக, இப்போது அந்த மனைவியிடம் அன்பு செலுத்த முயற்சி பண்ணினார். அந்த முயற்சி இவருக்கு ஆரம்பத்தில் வேப்பெண்ணெய் குடிப்பதுபோல் மிகவும் கசப்பாக இருந்தது. அவளோ, இவரிடத்திலே தோன்றிய மாறுதலைக்

கண்டு உள்ளத்தில் மகிழ்ச்சி கொண்டாளாயினும், இவருடைய புதிய அன்பை உறுதிப் படுத்தவேண்டு மென்ற எண்ணத்துடன் இவரைப் பல கடினமான சோதனைகளுக்கு உட்படுத்தத் தொடங்கினள். எனவே இவர் நம்பிக்கையையும் ஞானத்தையுந் தானைக் கொண்டு வேப்பெண்ணெய் குடிக்கப்போன இடத்தில் இவருடைய மூதுகில் சவுக்கடிகள் வேறு விழுலாயின. மஹா பதிவ்ரதையாகிய முத்தம்மா தன்னுடைய கணவன் இங்ஙனம் வேப்பெண்ணெய் குடிக்க வந்த ஸமயங்களில், அவருக்குச் சர்க்கரை முதலியன கொடுத்து அவருடைய கஷ்டத்துக்குப் பரிஹாரங்கள் செய்யாதபடி இங்ஙனம் சவுக்கடிகள் கொடுத்து அவருடைய மூதுகைக் காயப்படுத்தியது அவளுடைய விரத மஹிமைக்குப் பொருந்துமோ என்று சிலர் ஐயுறலாம். ஆனால், அவள் உயர்ந்த பதிவிரதையாகிய காரணம் பற்றியே, எத்தனைக்கு எத்தனை விரைவாக நடத்துதல் ஸாத்தியமோ அத்தனைக் கத்தனை விரைவாக அவரை அஞ்ஞான விஷத்திலிருந்து பரிபூர்ணமாக விடுவித்து அவருக்கு ஞான மிர்தத்தைப் புகட்டவேண்டுமென்ற கருத்துடையவளாயிருள்.

ஜீவாமிர்தமாகிய தர்ம பத்நியின் காதலை ஒரு பரம மூடன் வேப்பெண்ணெய்க்கு ஒப்பாகக் கருதி வருமிடத்தே, கூடிய அளவு விரைவில் அவனுக்கு என்ன கஷ்டம் விளவித்தேனும் அவனை அந்த மஹா நரகமாகிய அஞ்ஞானத்தினின்றும் வெளியேற்ற

முயலுவதே தனது முக்கியக் கடமையென்று அவள் நியாயமாக நிச்சயித்தாள். அவனுக்கு சாசுவதமான ஞானமும் நித்ய இன்பமும் ஏற்படுத்திக் கொடுத்து அவனைக் காப்பாற்ற வேண்டுமென்று கருதி, அதனால் அவனுக்குச் சிறிதுகாலம் வரை அதிக சிரமங்கள் ஏற்பட்டபோதிலும் தீங்கில்லை யென்று தீர்மானம் செய்தாள். ஒருவன் காலில் ஆழமாக விஷமுள் பதிந்திருக்கையில் அதை ஊசி கொண்டெடுக்கும்போது அவன் அந்த ஊசி குத்தும் வேதனையைப் பொறுக்கமாட்டாமல் முள்ளை யெடுக்க முயலாதபடி மிட்டாய் தின்று தன் மனதை அந்த நோயினின்றும் புறத்தே செலுத்த வேண்டு மென்று விரும்புவானையின், அவனுக்கு ஹிதத்தை நாடுவோர் அப்போது செய்யத் தக்கது யாது? அவனுக்கு ஊசி குத்துவதனால் வேதனையைப் பொருட்டாக்கக் கூடா தென்று அவனிடம் நிஷ்கருணையாகத் தெரிவித்து விட்டு ஊசியை ஆழமாகப் பதித்து விஷ முள்ளை எடுத் துக் களைதல் நன்றே? அல்லது, ஊசியைப் புறத்தே போட்டுவிட்டு அவனுக்கு ஜிலேபி காபியால் விஷ முள்ளின்செயலை நிறுத்திவிடலாம் என்று அவன் நினைப் பது மடமை யன்றே? அதற்கு நாம் இடங்கொடுக்க லாமோ? அவன் அழு அழு, ஊசியை அழுத்தி விஷ முள்ளை எடுத்தெறிந்தாலன்றி அவனுக்கு விஷமுள் ளின் செய்கையால் மரண மேற்படு மென்பதை அவ னுக்கு வற்புறுத்திக் கூறி எங்ஙனமேனும் ஊசியை உபயோகித்தலன்றே உண்மையான அன்புக்கும் கருணைக்கும் அடையாளமாவது?

இங்ஙனம் ஆலோசனை புரிந்தே, முத்தம்மா சமது ஸோமநாதய்யருக்கு அடிக்கடி விளாற்றுப் பூஜைகள் நடத்தி வந்தாள். இங்ஙனம் கல்லெண்ணங் கொண்டே அவள் தம்மிடம் கடுஞ் சொற்களும், கடுநடைகளும் வழங்குகிறாளென்ற விஷயம் நாட்பட ஸோமநாதய்ய ருக்கும் சிறிது சிறிது அர்த்தமாகத் தொடங்கி விட்டது. இருந்தபோதிலும் அவரால் ஸஹிக்க முடிய வில்லை.

காதற்கோயில் மிகத் தூய்மைகொண்ட கோயில். ஒரு முறை அங்கு போய்ப் பாவஞ் செய்து வெளியே துரத்துண்டவன் மீளவும் அதனுள்ளே புகுமுன்னர் அவன் படவேண்டிய துன்பங்கள் எண்ணிறந்தன.

கண்ணைக் குத்திப் பார்வையை அழித்துக் கொள்ளுதல் ஸுலபம். ஆனால் இழந்த பார்வையை மீட்டும் ஏற்படுத்திக்கொள்ளுதல் எளிதில் இயல்வ தொரு கார்யமா? ஸோமநாதய்யருக்குக் குருட்டுக் கண்ணை மாற்றி மறுபடி நல்ல கண் கொடுக்கவேண்டு மென்ற விருப்பத்துடன் முத்தம்மா வேலை செய்தாள். அதில் அவள் செய்த சிகிச்சைகள் அவருக்கு ஸஹிக்க முடியாதனவாகவே யிருந்தன.

ஆனால் எப்படியேனும் தான் இழந்த பார்வையை மீட்டும் பெறவேண்டு மென்ற பேராவல் அவருக்கும் இருந்தபடியால், சிகிச்சையிலுண்டாகிய சிரமங்கள் பொறுக்க முடியாதனவாகத் தோன்றினும், பல்லைக்

கடித்துக் கொண்டு, தம்முடைய முழு சக்தியையும் செலுத்தி ஒருவாறு ஸஹித்துப் பழகினர்.

எனவே முத்தம்மாளை ஓயாமல் தம்முடன் இருக்கும்படிக்கும் பேசும்படிக்கும் வற்புறுத்தத் தொடங்கினர். இவர் எத்தனைக் கெத்தனை அவளுறவையும் ஊடாட்டத்தையும் விரும்பத் தொடங்கினரோ, அத்தனைக்கு அத்தனை அவள் இவரிடமிருந்து ஒதுங்கவும் மறையவும் தொடங்கினள். "இவளை நாம் காதலுக்கு யோக்யதையில்லாத மனையடிமைப் புழுக்கச்சியாகவும் குழந்தை வளர்க்கும் செவிலியாகவும் நடத்தி வந்தோம். அப்போதெல்லாம் இவள் நமக்கு மிகவும் பணிவுடன் அடிமையிலும் அடிமையாய் நடந்து வந்தாள். இப்போது நாம் பரமார்த்தமாக இவளுடைய அன்பைக் கருதி அதனை வேண்டிச் சருவப் புகுந்த போது, இவள் பண்ணுகிற மோடியும் இவள் செய்யும் புறக்கணிப்புக்களும் பொறுக்க முடியவில்லையே! இதென்னடா கேலி! சொந்தப் பெண்டாட்டியைக் காதலிராணியாகக் கொண்டாடப் போனவிடத்தே அவள் நம்மை உதாஸீனம் பண்ணினாள். என்ன செய்வது? பதிவிரதையாவது, வெங்காயமாவது! நாம் இளைத்து கவிழ்ந்தோமென்பது கருதி இவள் நமது காதலை உண்மையாகவே அருவருக்கிறாளோ, என்னவோ? எவன் கண்டான்? ஸ்த்ரீகளுடைய ஹ்ருதயத்துக்கு ஆழங் கண்டோன் யார்? கடலாழங் காணுதல் எளிது; மாதர் மனத்தை ஆழங்காணுதல் அரிது. ஆண்மக்களைக் காட்டிலும் பெண்களுக்கு

எட்டு மடங்கு அதிகம் காமமென்று நீதி சாஸ்த்ரம் சொல்லுகிறது. எனவே, கலை வழுக்கையாய், நரை தொடங்கிக் கிழப்பருவத்திலே புகத் தொடங்கிய என்னிடம் இவள் உண்மையாகவே அவமதிப்புக் கொண்டாளெனின் அஃதோர் வியப்பாகமாட்டாது. என்னே உலக விசித்திரம்! என் குடும்பத்தில் மாத்திரமா, உலக முழுமையிலும் மனிதரெல்லாரும் வீட்டுப்பெண்டாட்டியென்றால் அவள் தன் விருப்பத்துக்குக் கடமைப்பட்ட அடிமைச்சியாகவே கருதுகிறார்கள். புதிய தொரு சித்திரத் தெய்வத்தின்மீது காதல் கொள்வதுபோல் நான் சொந்தப் பெண்டாட்டியிடம் காதல் செய்யப் புகுமிடத்தே, அவள் என்னை இப்படிக் கேலி பண்ணுகிறாள். எனிலும் இவள் பதிவிரதையல்லளென்று கருதவும் நியாயமில்லை. எனது பெற்ற தாய் இறக்கப் போகுந் தருணத்தில் இவள் மஹா சுத்தமான பதிவிரதையென்று சொல்லி விட்டு மடிந்தாளே. அவள் தீர ஆராய்ச்சி செய்து நிச்சயப் படுத்தாத வார்த்தையை மரண காலத்தில் சொந்த மகனிடம் சொல்லக் கூடுமென்று நினைக்க இடமில்லையே. தாய் நம்மிடம் பொய் சொல்லிவிட்டா போவாள்? மேலும், அவள் இந்த வார்த்தை என்னிடம் சொல்லிய காலத்தில், அவளுடைய முகத்தை நான் நன்றாக உற்று கவனித்தேனன்றோ? அவள் அச் சொல்லைப் பரிசுத்தமான ஓர் தயத்துடனும் உண்மையான நம்பிக்கையுடனும் கூறினளென்பது அவள் முகத்தில் மிகத் தெளிவாக விளங்கிற் றன்றோ? மேலும், அவள் தீர ஆழ்ந்து பாராமல்

வஞ்சிக்கப்பட்டவளாய் அங்ஙனம் கவறுது நம்பிக்கை கொண்டிருக்கக் கூடுமென்று நினைக்கப் புகுவோமா யின், அது பெரு மடமைக்கு லக்ஷணமாகும். பாம்பின் கால் பாம்புக்குத் தெரியும். எத்துணை மறைந்த போதி லும் பெண் மர்மம் பெண்ணுக்குத் தெரிந்து விடுமன் றே? ஒரு வருஷமா, இரண்டு வருஷமா? இவருடைய நடையை என் மாதா பத்து வருஷகாலமாக, இரவு பகல் கூடவே யிருந்து மிகவும் ஜாக்ரதையுடன் கவ னித்து வந்தவளன்றே? மேலும் என் மாதா புத்திக் கூர்மை யில்லாத மந்தமா? இருபது கம்பிளியை போட்டு ஒரு ரஹஸ்யத்தை மூடி வைத்தாலும், அது அவருடைய கண்களுக்குத் தெரிந்து விடுமன்றே? தாய் சொல்லியதை மறுப்பதில் பயனில்லை. அதில் ஐயப்படுவது மூடத்தனம். 'ஐய முற்றுன் அறி வுறு வான்' என்று பகவத் கீதையில் கண்ணபிரான் அருளிச் செய்திருக்கிறானன்றே? நிச்சயமாக நம்முடைய புத் திக்குப் புலப்படும் உண்மை யொன்றைப் பற்றி லீம் ஸம்சயம் படும் அதிகாரம் மனத்துக்குக் கொடுப்போ மாயின், அது நம்மை நரகத்தில் கொண்டு சேர்க்கும். நம்முடைய முத்தம்மா பதிவிரதைதான். நம்முடைய உண்மையைச் சோதித்தறியும் பொருட்டாகவே, நம்மை இந்த வலிய சோதனைகளுக்கு உட்படுத்து கிறாள். இதனால் நாம் அவளிடம் கொண்டிருக்கும் பிரேமைத் தழல் அவிந்து போக இடங் கொடுக்கக் கூடாது. இதனால் நாம் அவளிடம் விரஸப்பட லாகாது. அவள் தான் நமக்குத் தாரகம். வேறு

புகல் நமக்கில்லை. எக் காலத்திலும் நம்முடைய வழிகளை இருள் மூடாத வண்ணம் நம் மாதா கருணை யுடன் நிறுத்தி விட்டுப்போன நித்ய விளக்கன்றோ இந்தக் கண்மணி முத்தம்மா? மேலும், மூட நெஞ் சமே! பாவியாகிய புழு நெஞ்சமே! முத்தம்மா நம்மை என்ன சோதனைகள் செய்கிறாள்? ஊடல் தானே பல்லாண்டுகிறாள்? ஊடலன்றோ காதலின் மிக இனிய பகுதியாவது?

உணவினும் உண்ட தறவினிது காமம்
புணர்தலின் ஊட லினிது

என்றன்றோ ஸாகூஷாத் பிரமமே தவனுடைய அம்ச பூதரும் மஹாகவியுமாகிய திருவள்ளுவ தேவர் அருளி யிருக்கின்றார். நாய் மனமே! உனக்கு என் காதற் கிளியிட மிருந்த இகழ்ச்சி யெல்லாம் இன்னும் உன்னை முற்றிலும் விட்டு விலகவில்லை. 'இவளாவது? நம்மிடத்தில் ஊடல் காட்டுவதாவது?' என்ற கர்வ சிந்தனையால், இந்த விஷயத்தில் மனதுக்குக் கஷ்ட மேற்படுகிறதேயன்றி வேறில்லை. இவள் என்ன காரணத்தால் உனக்கு இத்தனை துச்சமாய்விட்டாள்? துச்ச மனமே? இவளைக் காதலிராணி யென்று கொண்ட இடத்தில், உணர்வு, உயிர், உடம்பு என்ற மூன்றும் அவளுக்கே ஸமர்ப்பணமாகி விட்டன வன்றோ? அவள் ஊடினால் அதுவும் ஓரின்பம். அவள் கூடி னால் அதுவும் ஓரின்பம். மேலும், காதலி சொல்லும் வசை மொழிகளெல்லாம் நம்முடைய செவிகளில் அமிர்தம் போல் விழுவதன்றோ? ஆண்மைக்கு லக்ஷண

மாம்? காதலிப் பெண் உண்மையாகவே சினங் கொண்டோடா அல்லது பொழுதுபோக்கின் பொருட் டாகவோ, நம்மைத் திட்டினால், நாம் அந்தத் திட்டுக் கள் யெல்லாம் மிட்டாயென்று நினைப்பதன்றோ புருஷலக்ஷணம்? அங்ஙனமின்றி அவளிடம் எதிர்த் துச் சினங் கொள்ளுதல் பேடித்தன்மை யன்றோ? அவள் எது செய்தாலும் அவளே நமக்குத் தெய்வம், அவளே நமக்கு இன்பம். அவள் வலிய வந்து நம்மை முத்தமிட்டபோதிலும், அவளருளே கதி. அவள் நமது தலையை வாளைக் கொண்டு அறுத்தபோதிலும், அதுவே நமக்கு ஸ்வர்க்க போகம்."

என்று இங்ஙனம் நிலாமுற்றத்தில் நாற்காலியின் மீதுட்கார்ந்து நிலவை நோக்கி ஆலோசனை செய்து கொண்டிருந்த ஸோமநாதய்யர் அப்படியே நித்திரை யில் ஆழ்ந்து விட்டார். பிறகு அவர் கண்ணை விழித் துப் பார்க்கையிலே, சந்திரன் உதித்த இடத்தினின் றும் நெடுந்தூரம் விலகிவந்திருப்பது கண்டார். மாலையில் சுமார் ஏழுமணிக்கு முத்தம்மா காபி போட்டுக் குடித்துவிட்டு வருவதாகச் சொல்லி விட் டுக் கீழே போனாள். இப்போது மணி எத்தனை யிருக்கு மென்று அவர் தம்முடைய சட்டைப் பையி லிருந்த கைக் கடிகாரத்தை எடுத்து நோக்கினார். நடுநிசி, பன்னிரண்டு மணி யாய்விட்டது. படுக்கை யறைக்குள்ளே போய்ப் பார்த்தார். அங்கு திமிதிமி யென்று மண் எண்ணெய் மேஜை விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இன்னும் ஒரு க்ஷணம் இவர்

காமஸப் பட்டு வந்திருப்பாராஞல் கண்ணுடிக் குழாய் வெடித்துப்போயிருக்கும். அ தனி லு ம் பெரிய ஆபத்துக்கள் விளைந்தாலும் விளைந்திருக்கும். இவர் விளக்கின் ஸ்திதியைப் பார்த்தவுடனே பளிச் சென்று பாய்ந்து திரியைக் குறைத்தார். விளக்கு நேரே எரிந்தது. அவர்களுடைய படுக்கையறை யில் மூன்று கட்டில்களுண்டென்று முன்னமேயே சொல்லியிருக்கிறேன். அவற்றுள் ஒரு கட்டின் மீது அனந்த கிருஷ்ணனைத் தழுவிக்கொண்டு முத் தம்மா படுத்திருந்தாள். மற்றொரு கட்டில் மூத்த குழந்தைகள் இரண்டும் படுத்திருந்தன. ஸோம நாதய்யருடைய கட்டில் சும்மா கிடந்தது. முத்தம் மாவை எழுப்பிக் கீழே அழைத்துப் போய் போஜனத் துக்கு ஏற்பாடு பண்ணலாமா என்று ஒரு க்ஷணம் ஸோமநாதய்யர் யோசனை பண்ணினார். அப்பால், "அறிவுடனே கண்ணை விழித்து நன்றுகப் பார்த்துக் கொண்டே படுகுழியிற் போய் வீழ்வ தொப்பப் பசி யில்லாமல் உண்பதிலிருந்தே நோய்களும், சாவும் ஏற்படுதல் ப்ரத்யக்ஷமாகத் தெரிந்திருந்தும் நாம் தினந்தோறும் பசியின்றி உண்டு மரணத்துக்கு வழிதேடுதல் பேதைமையினும் பெரிய பெரும் பேதைமை யாகுமன்றே?" என்றொரு நினைப்பு அவருக்குண்டாயிற்று. "இன்றைக்கு நல்ல நாள். பசியில்லாத ஸமயங்களில் உபவாஸம் போடுவ தாகிய நல்ல வழக்கத்தை இன்றிரவே தொடங்கி விடு வோம். பிரிய ரத்தினமாகிய முத்தம்மாளும் ஆழ்ந்து

நித்திரை செய்கிறாள். இவளை இம்போது எழுப்பிச் சோறுபோடச் சொல்லித் தொல்லைப்படுத்துதல் பாவமாகும். ஆகலால் 'உபவாஸமே கிடப்போம்' என்று தீர்மானம் பண்ணி, ஸோமநாதய்யர் விளக்குத் திரியை மிகவும் சிறிதாக்கிக் குறைத்து மேஜையினின்றும் விளக்கை யெடுத்துப் படுக்கையறையின் மூலையொன்றில் தரைமீது வைத்தார். மெல்லவந்து முத்தம்மா துயிலெழாதபடி மெதுவாக அவளைத் தழுவி அவளுடைய கன்னத்தில் ஒரு முத்தமிட்டார். பிறகு தம்முடைய கட்டிலின் மீதேறிப் படுத்துக்கொண்டார். விரைவில் நித்திரைபோய் விட்டார். அன்றிரவு முழுதும் ஸோமநாதய்யர் மிகவும் ஆச்சர்யமான இன்பக் கனவுகள் கண்டார்.

ஒன்பதாம் அத்யாயம்.

பெண்டாட்டிக்கு ஜயம்

மறுநாட் காலை முதல் முத்தம்மா பாடு கொண்டாட்டந் தான். வீட்டில் அவளிட்டது சட்டம், அவள் சொன்னது வேதம். ஸோமநாதய்யர் ஏதேனுமொரு காரியம் நடத்த வேண்டுமென்று சொல்லி, அவள் கூடாதென்றால் அந்தக் காரியம் நிறுத்தி விடப்படும். அவர் ஏதேனும் செய்யக் கூடாதென்று சொல்லி அவள் அதைச் செய்து தான் தீரவேண்டு.

மென்பளாயின் அது நடந்தே தீரும். இங்ஙனம் மூக்கம்மா தன் மீது கொடுங்கோன்மை செலுத்துவது பற்றி அவருக்கு அடிக்கடி மனவருத்த மேற்படுவதுண்டு. ஆனால், அந்த வருத்தத்தை அப்போதப்போதே அடக்கி விடுவார். "தெய்வத்தினிடம் ஒருவன் உண்மையான பக்தி செலுத்தப் போனால், அது அவனை எத்தனையோ சோதனைகளுக்குட் படுத்தும் என்கிறார்கள். அதினின்றும் ஒருவன் தனது பக்தியைச் சோர விடுவானையின், அவன் உண்மையான பக்தனாவானே? உண்மையான பக்தியால் கடைசியில் எய்தப்படும் பயன்கள் அவனுக்குக் கிடைக்குமோ? நாம் இவளை ப்ரத்யக்ஷ தெய்வமாகவன்றோ பாவித்து நடத்துகிறோம். எனவே, இவள் எது செய்தாலும் பொறுத்துக் கொண்டு தான் இருக்க வேண்டும். நாம் மனவருத்தப் படலாகாது" என்று தீர்மானித்துத் தம்மைத் தாமே தேற்றிக் கொள்வார். இப்படியிருக்கையில் ஒரு நாள் மூக்கம்மா தன் கணவனை நோக்கி :— "நானை ஞாயிற்றுக் கிழமை தானே? உங்களுக்கோ கோர்ட்டு வேலை கிடையாது. ஆதலால் நாமிருவரும் குழந்தைகளையும் வேலைக்காரனையும் *

---

* ஆசிரியர் இக்கதையைப் பூர்த்தி செய்வதற்குள் காலஞ் சென்று விட்டார். இதுவரை விசாலாக்ஷி அம்மாளுடைய சரித்திரம் விரித்துக் கூறப்பட்டது. இரண்டாவது பாகத்திலே தான் சந்திரிகையின் வரலாற்றைச் சொல்வதாக உத்தேசித்திருந்தார். சுமார்

பத்துப் பக்கங்கள் மாத்திரமே இரண்டாம் பாகத்தில் எழுதப்பட்டிருந்தன. வைரமுதுகையரும் முத்தம் மாளும் ஸமுத்ரக்கரைக்குப் போதல்—ஸமுத்ர வர்ணனை, விசுவநாத சர்மாவுக்கு பைத்தியம் தெளிதல், சர்மா விசாலாக்ஷி சந்திரிகை முதலியவருடன் வசித்துக் கொண்டிருத்தல் ஆகிய இவைதான் மீதி பத்துப் பக்கங்களின் கதை. மீதி பக்கங்கள் சுதேசமித்திரன் பிராஞ்சு பிரஸ் மானேஜர் அவர்களிடம் கொடுத்திருப்பதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. அங்கு பல தடவை விசாரித்தும் கிடைப்பதற் கிடமில்லாமற் போய்விட்ட படியால் "சந்திரிகையின் கதை" யை இப்படியே நிறுத்தவேண்டியதாயிற்று.

பாரதி பிரசுராலயத்தார்.

நவதந்திரக் கதைகள்

முன்னுரை.

வேதாரண்யம் என்ற ஊரில் விவேக சாஸ்திரி என்றொரு பிராமணன் இருந்தார். அவருக்கு மூன்று பிள்ளைகள். அந்த மூன்று பிள்ளைகளையும், மனைவியையும் வைத்துக் காப்பாற்றுவதற்குப் போதுமான நன்செய் நிலம் அவருக்கிருந்தது. ஆனால் பிள்ளைகள், மூவருக்கும் விவாகமாய்த் தலைக்கு ஒரிரண்டு குழந்தைகளும் பிறக்கவே, குடும்பம் மிகப் பெரிதாகிவிட்டது. ஆதலால், அவருடைய முதுமைப் பிராயத்தில் ஜீவனத்துக்கு சிரமமுண்டாய்விட்டது. பிள்ளைகளுக்கு ஸம்ஸ்க்ருதப் படிப்புச் சொல்லிவைத்து ஒருவனை வேதாந்த சாஸ்திரத்திலும், மற்றொருவனை விடாகரணத்திலும், மூன்றாமவனைத் தர்க்க சாஸ்திரத்திலும் தேர்ச்சியேயாகும்படி செய்து வைத்திருந்தார். கால நிலைமையால், அந்த வித்தைகள் வயிற்றுப் பிழைப்புக்குப் பயன்படவில்லை. பிறரிடம் பிச்சை கேட்க ஸம்மதமில்லாதமானமுள்ள குடும்பத்தாராதலால், அவர் வயிற்றுக்கு ஆஹாரம் செய்துகொள்ளுதல் கஷ்டமாயிருந்தார்கள். இப்படியிருக்கையில், ஒரு நாள் விவேக சாஸ்திரி தமது கையில் தாதுவைப் பார்த்து இன்னும் ஒரு வருஷத்

துக்கு மேலே தம்மால் ஜீவிக்க முடியாதென்று தெரிந் தவராகித் தம்முடைய மக்களை அழைத்துப் பின்வரு மாறு சொல்ல லானார்:—

"வாரீர், மக்களே, நான் சொல்லப் போவதை ஸாவதானமாகக் கேளுங்கள். என்னுடைய ஜீவன் இவ்வுலகத்திலே இன்னும் ஒரு வருஷத்துக்கு மேலே நில்லாது. நான் உங்களுக்கு அதிகச் செல்வம் வைத் துவிட்டுப்போக வழியில்லாமற் போய்விட்டது. விதிவச மாக எற்பட்ட மதிமயக்கத்தால், உங்களுக்கு லௌகிக லாபங்கள் உண்டாகக்கூடிய வித்தைகள் கற்றுக்கொடுக் கத் தவறிவிட்டேன். உங்களுக்கோ குடும்ப பாரம் ஏற்கெனவே மிகுதியாய்விட்டது; இன்னும் காலம் போகப் போக இதனிலும் அதிகப் படக்கூடும். நீங் கள் எப்படி இந்தச் சுமையைப் பொறுக்கப் போகிறீர்க ளென்பதை நினைக்கும்போது எனக்குக் கவலை யுண்டா கிறது. ஆயினும், லௌகிக தந்திரங்களை நீங்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டுச் சில கதைகள் சொல்லிவிட்டுப் போகிறேன். தினந்தோறும் விளக்கு வைத்தவுடனே என்னிடம் சிறிது நேரம் கதை கேட்க வாருங்கள். எனது காலத்துக்குப் பிறகு உங்களுக்கு இந்தக் கதைகள் பயன்படும்" என்றார். அப்படியே, பிள்ளைகள் சரியென்று அங்கீகாரம் செய்து கொண்ட னர். பிள்ளைகளிலே மூத்தவன் பெயர் வாஸுதேவன், இரண்டாமவன் பெயர் காளிதாஸன், மூன்றுவது பிள்ளைக்கு ஆஞ்சநேயன் என்று பெயர்.

முதற் பகுதி.

(பயனறிதல்)

அன்று மாலை மூன்று பிள்ளைகளும் ஸந்தி ஜபங்களை முடித்துக்கொண்டு, பிதாவிடம் வந்து நமஸ்காரம் செய்துவிட்டுக் 'கதை' கேட்க வந்திருக்கிறோம் என்றார்கள். விவேக சாலிநி தம் பிள்ளைகளை அன்புடன் உட்காரச் சொல்லி "குழந்தைகளே! நமது குலதேவதையாகிய காசி-விசாலாக்ஷியை ஸ்மரித்துக் கொள்ளுங்கள்" என்றார். அப்படியே மூவரும் கண்ணை மூடிக்கொண்டு சிறிது நேரம் தியானம் செய்து முடித்தார்கள். பிறகு பிதா கதை சொல்லத் தொடங்கினார்:—

"கேளீர், மக்களே! ஒரு காரியம் தொடங்கும் போது அதன் பயன் இன்னதென்று நிச்சயமாகத் தெரிந்துகொள்ள வேண்டும். அந்தப் பயன் நமக்கு வேண்டியதுதானா என்பதையும் ஆராய்ந்து செய்ய வேண்டும். பயன்படாத காரியத்திலே உழைப்பவன் ஸங்கீதம் படிக்கப்போன கழுதை போலே தொல்லைப் படுவான்" என்றார். அதெப்படி? என்று பிள்ளைகள் கேட்டார்கள்.

ஸங்கீதம் படிக்கப்போன கழுதையின் கதை

பிதா சொல்லுகிறார்:—

பொதிய மலைக் காட்டிலே, ரஜிகசிரோமணி என்

மேய்ந்து நன்றாகக் கொழுப்படைந்து வருகையில் வசந்த காலத்தில், ஒரு நாள் மாலை, ஒரு மாமரத்தின் பக்கமாகப் போகும்போது, கிளையின்மேல் மதுகண்டிகை என்றகார் குயில் பாடிக்கொண்டிருந்தது. அதை ரஸிகசிரோமணி சிறிது நேரம் நின்று கேட்டது. குயிலின் பாட்டு மனோகரமாக இருந்தது. அந்தப் பாட்டிலே கழுதை மயங்கிப்போய் மதுகண்டிகையை நோக்கிச் சொல்லுகிறது :—"பெண்ணே, உன் பாட்டு எனக்குப் பரவச முண்டாக்குகிறது. ஆஹா! ஸங்கீதத்தின் இன்பமே இன்பம்! உனது குரல் ஸன்னமானது. நமக்குக் கனத்த சாரீரம். உனக்குள்ள பயிற்சியும் திறமையும் நமக்கிருந்தால் மிகவும் நன்றாக இருக்கும். காட்டிலுள்ள மிருகங்களெல்லாம் கேட்டு வியப்படையும். சிங்கராஜா நம்மை ஸம்ஸ்தானத்து வித்வானாக நியமனம் செய்வார். 'இந்தக் காட்டிலுள்ள புல்லாந்தரைகளிலே ரஸிகசிரோமணி ஒருவன்தான் மேயலாம். மற்ற எந்த மிருகமும் மேயக் கூடாது' என்று கட்டளை பிறப்பித்துவிடுவார். பிறகு நமக்கு யாதொரு வேலையு மேற்படாது. நமது நிலைமை மிகவும் கொண்டாட்டமாய் விடும்."

இவ்வாறு ரஸிகசிரோமணி மேன்மேலும் சொல்விக்கொண்டு போவதைக் கேட்டுக் குயில் சிரிப்புடன் :—"கேளாய், ரஸிகமாமா, உனக்கு இந்தத் தொழில் வரமாட்டாது. வீணாக மனோராஜ்யம் பண்ணுவதிலே பயனில்லை" என்றது.

கழுதைக்குக் கோபமுண்டாய் விட்டது. கழுதை சொல்லுகிறது:—

"செல்வமும், அழகும், கல்வியும், வலிமையும் ஐந்துக்களுக்கு அதிக கர்வத்தை யுண்டாக்குகின்றன. கன்னைக் காட்டிலும் இந்த நிமிஷம் ஒரு விஷயத்திலே கணிந்திருப்பவன் எப்போதும் கணிவாகவே யிருப்பா னென்று மூடன் நினைக்கிறான். எந்தத் தொழிலும் யாருக்கும் வரும். வருந்தினால் வாராத தொன்று மில்லை. பார்ப்பாரப் பிள்ளைக்கு வியாபாரத் தொழில் வாராதென்று சொல்லி நகைத்த செட்டி அவமான மடைந்த கதை உனக்குத் தெரியாதோ?"

"அதென்ன கதை?" என்று மதுகண்டிகை கேட்டது.

மாணிக்கஞ் செட்டி மானி அய்யனை நகைத்தது.

அப்போது ரஸிகசிரோமணி சொல்லுகிறது :—

கேளாய், கர்வம்பிடித்த மதுகண்டிகை யென்ற குயிற் பெண்ணே! பல வருஷங்களின் முன்பு மதுரை மாநகரி வீதி மனிகை மாணிக்கஞ் செட்டி என்றொருவ னிருந்தான். அவனுடைய தந்தை மனிகை வியாபாரஞ் செய்து கடன்பட்டு வீடுவாசலை யிழந்து ஏழ்மையிலே இறந்துபோனான். பின்பு மாணிக்கஞ் செட்டியின் தாய் கடலைச் சுண்டலும், தானையும் விற்றுச் செட்டாகக் குடித்தனம் பண்ணித் தன் பிள்ளையை வளர்த்து வந்தாள். மாணிக்கஞ் செட்டிக்குப் பத்து வயதான

வுடன் அவனை ஒரு பெரிய வியாபாரி தனது கடை யிலே மாதம் அரை ரூபாய் சம்பளத்துக்கு வைத்துக் கொண்டான். இவன் தாயாரிடத்திலிருந்து செட்டு கருத்து முதலிய நல்ல குணங்களைப் பயின்றவனை லால், பெரிய வியாபாரிக்கு இவன் மேலே தயவும், நம்பிக்கையும் உண்டாயின. பெரிய வியாபாரிக்குப் பிள்ளை யில்லை. ஒரே பெண். அவள் பெயர் மரகதவல்லி. நாளடைவில் மாணிக்கஞ் செட்டியை வியாபாரி தன் கடையில் பங்காளியாகச் செய்துகொண்டான். தன் மகளை இவனுக்கே விவாகம் செய்து வைத்தான். அவன் இறந்த பிறகு உடைமை யெல்லாம் மருமக னுக்கே வந்துவிட்டது. மதுரை மாசி வீதி மளிகைக் கடை மாணிக்கஞ் செட்டி என்று ப்ரக்யாதி ஏற்பட்டு விட்டது. இந்த மாணிக்கஞ் செட்டியினிடம், பதி னாறு வயதுள்ள மானி அய்யன் என்ற பார்ப்பாரப் பிள்ளை ஒருவன் வந்தான்.

"ஐயரே, என்ன வேண்டும்?" என்று செட்டி கேட்டான்.

"தங்களுடைய கடையிலே எனக்கொரு வேலை போட்டுக் கொடுக்க வேண்டும்" என்று சிறுவன் சொன்னான்.

"உனக்கென்ன தெரியும்?"

"எனக்கு எண்சுவடி முழுதும் நன்றாகத் தெரி யும். கணக்குப் பதிவு தெரியும். கூடிய வரை எழுதப் படிக்கத் தெரியும்."

இதைக் கேட்டவுடனே செட்டி நகைத்தான்.

"பார்ப்பாரப் பிள்ளைகள் வந்தால் அவர்களுக்கு ஒரு விஷயம் தெரியாதென்று சொல்லும் வழக்கமே கிடையாது. எதுவும் தெரியும். ஐயரே, போய் வாரும். இவ்வளவு தெரிந்த பிள்ளைகள் நம்மிடம் வேலைக்கு வேண்டாம்" என்று சொன்னான்.

"சரி" என்று மானி அய்யன் வெளியிற் போனான். "இங்கே வாரும் ஐயரே" என்று மாணிக்கனை செட்டி திரும்பவும் அவனைக் கூப்பிட்டான். சிறுவன் திரும்பி வந்தான்.

"ஐயரே! நீர் முந்திச் சித்திரை வீதியில் முருகச் செட்டியார் கடையில் இருக்கவில்லையா?" என்று செட்டி கேட்டான்.

மானி—"ஆம்" என்றான்.

செட்டி—"அங்கிருந்து என் வெளியேறி விட்டீர்?"

மானி—"எனக்கும் முருகச் செட்டியாருக்கும் குணம் ஒத்து வரவில்லை."

செட்டி—"அதென்ன விஷயம் காரணம்?"

மானி—"நம்முடைய குணம் அவருக்குப் பிடிக்க வில்லை. அவருடைய குணம் எனக்குப் பிடிக்கவில்லை. அவ்வளவுதான்."

செட்டி, "அதுதான் என்ன விஷயம்?" என்று கேட்டான்.

மானி—" அதை இவ்விடத்தில் விளங்கச் சொல் வதில் ப்ரயோஜனம் இல்லை."

செட்டி—"என்? குற்றம் உம்முடையதுதானே?"

மானி—" என்மேல் ஒரு குற்றமும் இல்லை. ஒரு நாள் என்னைக் கடையில் வைத்துவிட்டு வெளியே போனீர். அவருடைய மகனும் அன்று கடைக்கு வர வில்லை. கடையில் என்னைத் தவிர வேறு யாருமே கிடையாது. இப்படி யிருக்கையில், சங்குத் தேவன் என்ற மறவன் வந்து, "செட்டியார் எங்கள் வீட்டிலே யிருக்கிறார். ஐந்து தலாம் சர்க்கரை வாங்கிக்கொண்டு வரச்சொன்னார். அவருடைய சொந்தச் செலவுக்கு வேண்டுமாம். தனது பற்றென்று எழுதச் சொன்னார்" என்றான். அந்தச் சங்குத்தேவன் அந்தச் செட்டி யாருடன், உயிருக் குயிரான ஸ்நேகம் என்பதும் எனக்குத் தெரியும். நான் எப்படிக் கொடுக்காம விருப்பது? செட்டியாரிடம் நேரிலே போய் கேட்டுக் கொண்டு செய்யலாமென்றால், கடையை யாரிடம் ஒப்புவித்து விட்டுப் போவது? மறவனிடம் ஒப்பு வித்து விட்டு வரலா மென்றாலோ ஐந்து தலாம் சர்க் கரைக்கு நம்பக் கூடாத மனிதனிடம் கடையை விட்டு விட்டு வரலாமா? நான் சர்க்கரையைக் கொடுத்துவிட்டேன். செட்டியார் வந்தார். சங்குத் தேவனுக்குச் சர்க்கரை கொடுத்தாயா? என்று கேட்டார். ஆ மென்றேன். எவ்வளவு கொடுத்தாய் என்றார். ஐந்து தலா மென்றேன். யாருடைய உத் தரவின் மேலே கொடுத்தாய்? என்றார். உங்க

ருடைய உத்தரவின் மேலே என்றேன். நான் எப் போது உன்னிடம் உத்தரவு கொடுத்தேன் என் ரூர். சங்குத்தேவனிடம் உத்தரவு கொடுத்ததாக அவன் சொன்ரு னென்றேன். அவன் சொன்னல் உனக்குப் புத்தி எங்கே போச்சுது என்ரூர். எனக் குக் கொஞ்சம் கோபம் வந்துவிட்டது. 'என் புத்தி யைப் பற்றிப் பேச்சில்லை. உம்முடைய ஸ்நேகிதன் தானே அவன்? பொய் சொல்லமாட்டா னென்று நினைத்துக் கொடுத்து விட்டேன். குற்றமாக இருந் தால் என்மேல் பற்று எழுதி விடலாம்' என்று சொன் னேன். முருகச் செட்டிக்கு என்மேலே நெடுநாளாகக் கோபம். சிதம்பரத்திலிருந்து வந்திருக்கும் அவ ருடைய மைத்துனரை என்னுடைய ஸ்தானத்துக்கு வைத்து விட வேண்டுமென்று அவருக்கு வீட்டிலே போதனை ஏறிவிட்டது. என்னை வெளியே போகச் சொல்வதற்கு என்ன உபாயம் செய்யலாமென்று பல நாளாக யோசனை செய்து வந்தார். இதனல் நான் மரியாதையாகச் சொல்லிய வார்த்தையை அவர் அதிகப்ரசங்கித்தன மென்று பாராட்டி 'ஐயோ! நானே முதல் வேறு கடையிலே வேலை பார்த்துக் கொள்ளும். இன்று மாலே வீட்டுக்குப் போகும் போது சம்பளம் கணக்குத் தீர்த்து வாங்கிக்கொண்டு போகலாம்' என்று சொன்னர். நான் சரியென்று விலகிவிட்டேன். இவ்வளவுதான் நடந்த சங்கதி."

அப்போது மாணிக்கஞ் செட்டி கேட்கிரூன் :—

"உம்முடைய பெயரென்ன?"

மானி—"என்னுடைய பெயர் மானி அய்யன்."

செட்டி—"உமது பிதாவின் பெயரென்ன?"

மானி—"அவர் பெயர் ஸீகாராமையர்."

செட்டி—"அவர் உயிரோடிருக்கிறாரா?"

மானி—"இல்லை; இறந்து போய்விட்டார்."

செட்டி—"வீட்டிலே தாயார் இருக்கிறார்களா?"

மானி—"ஆமாம்."

செட்டி—"இன்னும் எத்தனை பேருண்டு, குடும்பத்திலே?"

மானி—"வேறு யாரும் கிடையாது. எனக்குக் கூடக் கலியாணம் ஆகவில்லை."

இதைக் கேட்டுச் செட்டி நகைத்தான்.

"என் ஐயரே! கலியாணம் ஆகவில்லை யென்று வருத்தந் தானே? பார்ப்பாரப் பிள்ளைகளுக்கு வயிற்றுச் சோறு தேடு முன்பாகவே பெண்டாட்டி பிள்ளைகள் இல்லாவிட்டால் சுகப்படாது. குடும்பத்தை முதலாவது பொறுதாகச் செய்து வைத்துக் கொண்டால் பிறகு பிச்சை யெடுப்பது சுலபம். ஆள் கூட்டம் அதிகமாகத் திரட்டிக்கொண்டு மேளதாளத்துடன் பிச்சைக்குப் போகலாம்" என்றான்.

மானி—"செட்டியாரே! எனக்கு விவாகத்திற்குப் பணவுதவி செய்யும்படி உங்களிடம் யாசகத்துக்கு வரவில்லை. வேலை செய்தால் சம்பள முண்டோ என்று கேட்க வந்தேன். இல்லை யென்றீர்கள்—

நான் திரும்பிப் போனேன். போனவனை மறுபடியும் அழைத்துப் புன் படுத்த வேண்டாம்.”

செட்டி—“எத்தனை வயதிலே விவாகஞ் செய்து கொள்வீர்?”

மானி—“அதைப்பற்றி நான் இப்போது யோசிக்கவில்லை.”

செட்டி—“உம்முடைய தாயார் யோசிக்க வில்லையா?”

மானி—“எனக்குத் தெரியாது.”

செட்டி—“கலியாண விஷயத்திலே தாயார் வார்த்தை தானே கேட்பீர்?”

மானி—“நிச்சயமில்லை.”

செட்டி—“பின், என்ன செய்வீர்?”

மானி—“நான் குடும்ப ஸம்ரக்ஷணைக்கு முயற்சி வேண்டி அலைகிறேன். தாங்கள் ஸம்பத்தி விருக்கிறீர்கள். உங்களுக்கு ஸந்தோஷமாக வார்த்தை சொல்லிக்கொண்டிருக்க நேர மிருக்கிறது. என்னை பகவான் அந்த நிலையில் வைக்கவில்லை.”

செட்டி—“ஐயரே! வீட்டுக்குப் போகவேண்டுமா? அவஸரமா? இன்று போஜனச் செலவுகளுக்கு ஒன்றும் வேண்டாமோ?” என்றான்.

இதைக் கேட்டவுடன் மானிக்குக் கோப மூண்டாய் விட்டது.

மானி அய்யன் சொல்லுகிறான் :—

“செட்டியாரே, மீனாக்ஷியம்மையின் கிருபையால் நமது வீட்டிலே, இன்னும் அநேக மாதங்களு

க்கு வேண்டிய உணவு சேர்த்திருக்கிறேன். என்னுடைய தாயார் பேருக்குக் கொஞ்சம் நிலமும் உண்டு. இவ்விடத்தில் நமது முயற்சி நிறைவேற வழியில்லாவிட்டால் வேறிடத்துக்குப் போகலாமே, இங்கிருந்து மீண் வார்த்தை சொல்வது நியாயமில்லை யென்ற கருத்தின்மேல் நான் அவசரப்பட்டேன். அதைத் தவிர வேறொன்றுமில்லை. இப்போது, தாங்கள் கேள்வி கேட்டு வரும் மாதிரியைப். பார்க்கும்போது, இன்னும் சற்று நேரம் இங்கிருந்து தங்களுக்குச் சில விஷயங்கள் சொல்லி விட்டுப் போகலா மென்ற எண்ணமுண்டாகிறது. நம்மூர் வியாபாரிகள் விஷயமாக, எனக்குள்ள சில கருத்துக்களைத் தங்களைப்போன்ற மனிதரிடம் சொல்லித் தீர்த்தாலொழிய என் மனம் ஆறுதலடைய மாட்டாது. வேலைக்குக் கேட்க வந்த இடத்திலே அதிகப் பேச்சு வைத்துக்கொள்ளக்கூடாதென்று நினைத்தேன். தாங்கள் தொளைத்துத் தொளைத்துக் கேட்பதைப் பார்த்தால், தங்களுக்கு இப்போது உல்லாஸ நேரம் போலே தோன்றுகிறது. ஆகையால் உங்களிடமே சொல்லலாமென்று தீர்மானம் செய்கிறேன்."

அதற்கு மாணிக்கஞ் செட்டி—"சொல்லும் ஐயரே, மனதுக்குள் வைத்துக்கொண்டு குமைய வேண்டாம். பணம் தேடி வைத்தவர்களைத் தேடத் திறமில்லாதவர் எப்படிக் கெல்லாம் சீர்திருத்த உத்தேசங் கொண்டிருக்கிறார்க ளென்பதைக் கண்டு பிடிப்பதிலே எனக்கும் ருசியுண்டு. சொல்லும், உம்முடைய கொள்கைகளைக் கேட்போம்" என்றான்.

மானி அய்யன்—"வடக்குத் தேசத்திலிருந்து சில வியாபாரிகள் இங்கே அடிக்கடி வருகிறார்கள். அவர்களுடன் நான் கொஞ்சம் வழக்கப்பட்டிருக்கிறேன். அவர்களுக்குள்ள வியாபாரத் திறமையும் புத்தி நுட்பமும் நம்மூர் வியாபாரிகளிடமில்லை. இது முதலாவது சொல்லவேண்டிய விஷயம். இவ்விடத்து வியாபாரிகளிடம் இருக்கிற கருவத்துக்குத் தகுந்தபடி. புத்திசாலித்தனமில்லை. இனி, இரண்டாவது விஷயம் சொல்லுகிறேன். சேஷமத்துடனும், செழிப்புடனும் ஊர் இருந்தாலொழிய வியாபாரம் செழிக்காது. வியாபாரத்துக்கு மஹிமை வரவேண்டுமானால் ஊருக்கே ஒரு மஹிமை வரவேண்டும். இந்த விஷயம் இதுவரை தங்களிடம் எவனும் சொல்லியிருக்க மாட்டான்."

மாணிக்கஞ் செட்டி—"எனக்கே தெரியும். இந்த ரஹஸ்யம் யாரும் சொல்லவேண்டியதில்லை. சரி, மேலே கதையை நடத்தும்."

மானி அய்யன்—"கதையில்லை, செட்டியாரே, காரியம். இனி மூன்றுவது விஷயம் யாதெனில் இந்த வியாபாரிகளுக்குக் குமாஸ்தாக்களிடம் சரியாக வேலை வாங்கத் தெரியவில்லை. எனென்றால், முதற் காரணம், சம்பளம் நேரே கொடுக்க மனம் வருவதில்லை. ஒரு மனிதனுல் நாம் லாபமடைய விரும்பினால் அவனுக்கு வயிறு நிறையச் சோறு போடவேண்டும். வெளியிலிருந்து வரும் புத்திசாலியைக் காட்டிலும் குடும்பத்தைச் சேர்ந்த மூடனே விசேஷமென்று நினைக்கத்

கூடாது. மூடனிடம் உன்னுடைய காரியத்தை ஒப்புவித்தால் அவன் அதைக் குட்டிச்சுவராக்கிப் போடுவான். தவிரவும், முகஸ்துதி செய்பவனையும், பொய்நடிப்புக் காட்டுவோனையும், தலையிலே வைத்துளாடமர்த்திய முள்ளவனையும், யோக்கியனையும் கீழே போடக் கூடாது. ஒரு நாளில் இத்தனை நாழிகைதான் வேலையுண்டென்ற கட்டுப்பாடிருக்கவேண்டும். அதிக நேரம் வேலை வாங்குவதும், நினைத்தபொழுதெல்லாம் ஆள் விட்டனுப்புவதும் குற்றம். இன்னும் சொல்லவா?"

மாணிக்கஞ் செட்டி—" ஐயரே, கொஞ்சம் இலேசாக அடக்கும். குமாஸ்தாக்களிடமுள்ள குற்றத்தைச் சொன்னால், உமக்கு விஷயம் பூராவாகத் தெரியும். குமாஸ்தாக்களிடம் நாணய மில்லை. பணக்காரப் பிள்ளைகள் வெளியே ஒரு கடையில் சிறிய சம்பளம் வாங்கி வேலை பழகப் போவது கௌரவக் குறைவென்ற மூட எண்ணத்தால் கிடைப்பதில்லை. வருவோனெல்லாம் கோவணாண்டி; பணப் பொறுப்பையும் காரியப் பொறுப்பையும் அவர்களிடம் அதிகமாக ஒப்புவிக்க இடமில்லை. அவர்களுக்கு குற்றேவல் செய்து தயவு சம்பாதிப்பதிலே தான் உற்சாக முண்டாகிறது. உழைப்பிலும் கருத்திலும் உற்சாக மில்லை. எப்படியிருந்தாலும், ஏழைக்கு ஏழைப்புத்திதானே ஏற்படுங் காணும்? நமது பந்துவாக இருந்தால் மூடனானாலும் அதிகவஞ்சனை பண்ணமாட்டானென்று நினைக்கலாம்."

மாணி அய்யன்—" அதுதான் நினைக்கக் கூடாது. 'உடன் பிறந்தார் சுற்றத்தாரென்றிருக்க வேண்டாம்.

உடன் பிறந்தே கொல்லும் வியாதி' என்ற வசனம் கேட்டதில்லையா?"

மாணிக்கஞ் செட்டி—"தெரியுங்காணும்! ஆகவே இரண்டும் கஷ்டமாகிறது. மடத்தாண்டி கையிலே பணத்தைக் கொடுப்பது புத்திசாலித்தனமா? ஊரான் கெடுத்துக் கெடுவதைக் காட்டிலும் நம்மவனல் கெடுவோமே!"

மானி—"செட்டியாரே, கெடவா வியாபாரம் பண்ணுகிறோம். ஜயிக்க வியாபாரம் செய்கிறோம். ஓரிடத்திலே தக்க காரியஸ்தன் கிடைக்காவிட்டால் மற்றோரிடத்திலிருந்து தருவித்துக் கொள்ளவேண்டும். எந்தக் கணக்குக்கும் ஒரு தீர்வை யுண்டு; எந்தச் சிக்கலுக்கும் அவிழ்ப்புண்டு."

இவ்வாறு மானி அய்யன் சொல்லியதைக் கேட்டு, மாணிக்கஞ் செட்டி சிறிது நேரம் யோசனை செய்யலானான்.

மாணிக்கஞ் செட்டி யோசிக்கிறான்:—

"பார்ப்பான் கெட்டிக்காரன். நாம் எடுத்திருக்கும் ஆலோசனைக்கு இவனை உதவியாக வைத்துக் கொள்ளலாம். ஆனால் நமது நோக்கத்தை இவன் தெரிந்து கொள்ளக்கூடாது. தெய்வம் விட்டது வழி. ஒரு கை பார்ப்போம்."

இப்படி யோசித்து மாணிக்கஞ் செட்டி சொன்னான்:—

"ஐயரே, ஒரு மூன்று மாஸத்துக்கு உம்மை ஒரு சோதனைக்காகக் கடையிலே அமர்த்திக் கொள்ளுகிறேன். மூன்று மாஸத்துக் கப்பால் என் மனதுக்குப் பிடித்தால் வேலை உறுதிதான். பிடிக்காவிட்டால், விலகிக் கொள்ள வேண்டும். முதல் மூன்று மாஸத்துக்குச் சம்பளம் கிடையாது. உம், ஸம்மதமா?"

பார்ப்பாரப் பிள்ளை தன் மனதுக்குள்ளே "அடலோபிப்பயலே" என்று வைதுகொண்டான்; சொல்லுகிறான்:—"செட்டியாரே, மூன்று மாஸம் வேலை பார்க்கிறேன். பிறகு திருப்தியானால் வேலை உறுதி, இல்லாவிட்டால் அவசியமில்லை. அது உங்களுடைய இஷ்டம்போலே. ஆனால் உழைக்கிற நாள் சம்பளம் கையிலே கொடுத்து விடவேண்டும். ஸம்மதமா?" என்றான்.

"என்ன ஐயரே, விறைப்பிலே கேட்கிறீரே?" என்றான் செட்டி.

"ஸாதாரணமாகத்தான் கேட்டேன்" என்றான் பார்ப்பான்.

செட்டி சொல்லுகிறான்—"ஐயரே, போய் ஒரு வாரங் கழித்துத் திரும்பி வாரும். அப்போது அவசியமானால் சொல்லுகிறேன்."

அதற்குப் பார்ப்பான்—"செட்டியாரே, அவசியமாக இருந்தால் தாங்கள் சொல்லியனுப்பவேண்டும். நானாக வர லௌகர்யப் படாது." என்றான்.

செட்டி கடகடவென்று நகைத்தான். பிறகு சொல்லுகிறான்—" ஐயரே, கொஞ்சம் இலேசாக அடக்கும். நமக்குப் பார்ப்பார் கிடைப்பது கஷ்டமில்லை காணும். உமக்குச் செட்டி கிடைப்பது கஷ்டம் " என்றான்.

" ஐயரே, போய் வாரும் " என்று செட்டி சொன்னான். இவன் சரி யென்று வீட்டுக்கு வந்து விட்டான். நாள் இரண்டாயின. மாணிக்கஞ் செட்டிக்கு ஒரு பெரிய ஸங்கடம் வந்து சேர்ந்தது. அவனுக்கு ஒரு மைத்துனன். அந்த மைத்துனன் பெயர் தட்டிக்கொண்டான் செட்டி. இவனை மாணிக்கஞ் செட்டி தனது கார்யஸ்தனைத் தஞ்சாவூரில் வைத்திருந்தான். தஞ்சாவூரில் மாணிக்கஞ் செட்டிக்கு ஒரு கடையும் கொஞ்சம் கொடுக்கல் வாங்கலும் உண்டு. தட்டிக்கொண்டான் செட்டி நஷ்டக் கணக்குக் காட்டுவதிலே புலி. ஒரே அடியாகப் பெரிய தொகையை அழுத்திக்கொண்டு கணக்குக் காட்டிவிட்டான். அந்த நஷ்டக் கணக்கு மாணிக்கஞ் செட்டிக்கு வந்தது. ஓலையை விரித்து வாசித்துப் பார்த்தான். வயிறு பகீ என்றது.

" கெடுத்தானே பாவி ! கெடுத்துப்போட்டானே ! இனி என்ன செய்யப் போகிறோம் " என்று மிகவும் துன்பப்பட்டான். ஆனாலும், ஒருவாறு மனத்தைத் தேற்றிக்கொண்டு, மேலே நடக்க வேண்டிய காரியத்தைப் பார்ப்போ மென்று சொல்லி, " இப்போது தஞ்சாவூருக்கு அனுப்ப ஒரு தகுதியான மனுஷன்

வேண்டுமே, யாரை அனுப்புவோம்" என்று யோசித்தான். மானி அய்யருடைய ஞாபகம் வந்தது. 'அவனைக் கூப்பிடுவோம்' என்று தீர்மானம் செய்து கொண்டு ஒரு ஆள் அனுப்பினான். மானி அய்யன் வந்து சேர்ந்தான்.

"வாரும், அய்யரே" என்றான் செட்டி.

"தங்களுடைய உத்தரவுக்குக் காத்துக் கொண்டிருக்கிறேன்" என்று மானி அய்யன் வணக்கத்துடன் சொன்னான்.

"பார்ப்பான் கெட்டிக்காரன்" என்று செட்டி தன் மனதிலே நினைத்துக்கொண்டான்.

ரஸிகசிரோமணி என்னும் கழுதை சொல்லிற்று:—

"மேற்படி மானிக்கனு செட்டி பார்ப்பானை நகைத்ததுபோல் நீயும் என்னை இப்போது நகைக்கிறாய், பின்னிட்டு என்னை நீயே மெச்சுவாய்."

அதற்குக் குயில் சொல்லிற்று :—

"ரஸிக மாமா, உனக்கு ஸங்கீதமும் வராது. கதை சொல்லவும் தெரியவில்லை" என்றது. கழுதைக்குக் கோபம் வந்துவிட்டது. "எனக்கா வராது? எனக்கா? என்னையா சொல்லுகிறாய்? என்னத்தான்?" என்றது.

"ஆம், ஆம், ஆம், ஆம்" என்று குயில் நான்குதரம் சொல்லிற்று.

"உனக்கு இத்தனை மதமா?" என்றது கழுதை.

"அட, உண்மையைச் சொல்லக் கூடாதா?" என்றது குயில்.

"சொல்லக்கூடாது" என்றது கழுதை. "சொல்லலாம்" என்றது குயில்.

"நீ அந்த மரத்திலிருந்து கொஞ்சம் இறங்கிக் கீழே வா" என்றது கழுதை.

"நீ தான் தயவு செய்து இங்கே கொம்பின்மேலே ஏறி வா" என்று சொல்லிக் குயில் நகைத்தது.

கழுதை மஹா கோபத்துடன் அங்கிருந்து புறப்பட்டது. குயில், "மாமா, மாமா, கோபித்துக் கொண்டு போகாதே. இங்கே வா. ஒரு பேச்சுக் கேள்" என்று கூப்பிட்டது.

கழுதை திரும்பி வந்தது.

குயில் கேட்கிறது—"அந்த மாணிக்கஞ் செட்டி கதையை எடுத்தாயே, அதை முழுதும் சொல்லவேண்டாமா?"

கழுதை—"உனக்குத் தெரிய வேண்டிய அளவு சொல்லியாய் விட்டது. மிச்சம் உனக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை" என்றது.

குயில்—"பாதிக் கதையிலே நிறுத்திலுல் அடுத்த ஜன்மம் பேயாகப் பிறப்பாய். ஸங்கீதம் இதைவிட இன்னும் தர்லபமாகப் போய்விடும்" என்றது.

அப்போது கழுதை பயந்து போய், "பாதிக் கதையிலே நிறுத்திலுல் பேய்ப் பிறவியா? உண்மை

தானே? என்று கேட்டது. கழுதைக்கு மறு ஜன்ம நம்பிக்கை மிகவும் தீவிரம்.

குயில் சொல்லிற்று—"ஆமாம். உண்மைதான். எங்கள் தாத்தா சொன்னார்."

குயிலுடைய தாத்தா சொன்னல் உண்மையாகத் தான் இருக்குமென்று கழுதைக்குச் சரியான நம்பிக்கை ஏற்பட்டது.

"அப்படியானால் கதை முழுதையும் சொல்லி விடலாமா?" என்று கழுதை கேட்டது.

"சொல்லு. அதற்கு நடுவிலே நான் ஒரு சின்னக் கதை சொல்லி முடித்துவிடுகிறேன்."

"உன் கதைக்குப் பெயரென்ன?" என்று கழுதை கேட்டது.

குயில்—"ரோஜாப் பூக் கதை"

"சொல், சொல்" என்று கழுதை தூண்டப்படுத் திற்று. குயில் சொல்லலாயிற்று.

ரோஜாப் பூ என்ற பாம்பின் கதை.

மதுகண்டிகை என்ற குயில் சொல்லுகிறது:—

பழைய காலத்திலே, வஞ்சி நகரத்தில், ஒரு தோட்டத்து வேலியிலே, ஒரு பாம்பு தனது பெண் குட்டியுடன் வாசம் செய்தது. அந்தக் குட்டி மிகவும் அழகாக இருந்தனால் அதற்கு 'ரோஜாப் பூ' என்று பெயர்.

ஒரு நாள் இரவிலே காய்ப் பாம்பும், குட்டியும் புகரிலிருந்து வெளிப்பட்டுக் காற்று வாங்கிக்கொண் டிருக்கையில், குட்டி காயை நோக்கிக் கேட்கிறது :—

"அம்மா! நம்மை எல்லாரும் ஏன் பகைக்கிறார் கள்? நம்மை வீதியிலே எந்த மனிதன் கண்டாலும் கல்லால் எறிகிறானே, காரணமென்ன?"

காய் சொல்லுகிறது :—

"குழந்காய், நமது ஜாதிக்குப் பல்லிலே விஷம். நாம் யாரையேனும் கடித்தால் உடனே இறந்துபோய் விடுவார்கள். இதனல் நம்மிடத்திலே எல்லாருக்கும் பய முண்டாகிறது. பயத்திலிருந்து பகை யேற்படும். அதுதான் காரணம்."

இங்ஙனம் காய்ப் பாம்பும் குட்டியும் வார்த்தை சொல்லிக் கொண்டிருக்கையில் பக்கத்திலே ஒரு முனிவர் நடந்து சென்றார். அவர் இந்தப் பாம்பு களைப் பார்த்துப் பயப்படவில்லை. ஓடுங்கவில்லை. திரும் பிக்கூடப் பார்க்கவில்லை. அவர் பாட்டிலே போனர். இதைப் பார்த்து ரோஜாப் பூ மிகவும் ஆச்சரியப்பட் டுத் தனது காயிடம் கேட்கிறது :—

"எனம்மா, இவர் மாத்திரம் பயப்படாமல் போகிறாரே, அதென்ன?"

காய் சொல்லுகிறது :—"இவர் சித்தர். நாம் கடித்தால் சாகமாட்டார். இவருக்கு நம்மிடத்திலே பயமில்லை. ஆகையால் பகை யில்லை. இவர் பெரிய

ஞானி. இவர் வரங் கொடுத்தாலும் பலிக்கும்; சாப மிட்டாலும் பலிக்கும்.” இவ்வாறு தாய் சொல்லியதைக் கேட்டவுடனே குட்டி சிறிதுநேரம் ஏதோ யோசனை செய்து பார்த்துப் பிறகு “அம்மா, இவர் எங்கே குடி யிருக்கிறார்?” என்று கேட்டது.

“அதோ தெரிகிறது பார், தூரத்திலே ஒரு கிராமம். அதற்குக் கிழக்கே ஒரு சுனையும் பக்கத்திலே ஒரு தோப்பும் இருக்கின்றன. அந்தத் தோப்பிலே இவர் குடியிருக்கிறார்” என்று தாய் சொல்லிற்று.

சில நாளுக்கப்பால் இந்த ரோஜாப் பூ என்ற பாம்புக் குட்டி தனியே முனிவர் இருக்கும் இடத்துக்கு வந்து சேர்ந்தது. அவர் ஒரு மரத்தடியிலே உட்கார்ந் திருந்தார். காலிலே போய் விழுந்தது. “என்ன வேண்டும்?” என்று கேட்டார்.

“ஒரு வரம்” என்றது.

“என்ன வரம்?” என்று கேட்டார்.

“நான் நினைத்தபோது மிகவும் அழகான தொரு மனிதப் பெண்ணாக மாறவேண்டும்” என்று பாம்புக் குட்டி சொல்லிற்று.

“எதன் பொருட்டு?” என்றார்.

“இந்த ஜன்மத்தை எல்லாரும் பகைக்கிறார் கள். ராஜகுமாரர் பார்த்தாலும் பிரியப்படத் தக்க ரூபம் எனக்கு வேண்டும்” என்றது.

பாம்பின் நோக்கத்தைத் தெரிந்துகொண்டு முனிவர் சொல்லுகிறார் :—"சரி, உனக்கு அப்படியே நினைத்தபோது மனுஷரூபம் வரும். ஆனால் எவனிடத்தில் வார்த்தை சொல்லும்போது உனக்குப் பயமேற்படுகிறதோ அவனிடன் அதிக நேரம் தங்கக் கூடாது. தங்கினால் அவனுலே உனக்கு மரணம் நேரிடும்" என்று விடை கொடுத்தனுப்பினர். பின்னொரு நாள் இரவில் ரோஜாப் பூ மனிதப்பெண் வேஷந்தரித்துக்கொண்டு, வஞ்சி ராஜாவின் அரமனையைச் சார்ந்த சோலையிலே ராஜகுமாரன் விளையாடும் நிலா முற்றத்துக் கருகே போய் நின்றுகொண்டிருந்தது. அங்கு ராஜகுமாரன் வந்தான். இந்தப் பெண்ணை நோக்கி இவள் அழகை வியந்து "நீ யார்?" என்று கேட்டான்.

"சிங்கள ராஜன் மகள்" என்று ரோஜாப் பூ சொன்னுள். ராஜகுமாரன் திகைத்துப் போய் "என்னது! சிங்கள ராஜ்யமா? இந்த நேரத்திலே இங்கு தனியே எப்படி வந்தாய்? யாருடன் வந்தாய்?" என்றான்.

அதற்கு ரோஜாப் பூ :—"எனக்கொரு முனிவர் ஒரு மந்திரங் கற்றுக் கொடுத்திருக்கிறூர். அதைக் கொண்டு நினைத்த வேளையில் நினைத்த இடத்திற்கு வான் வழியாகப் பறந்து செல்வது வழக்கம். இந்த வழியே பறந்து வருகையில் நிலாவொளியிலே இந்தச் சோலையும் நிலாமுற்றமும் கண்ணைக் கவர்ந்தன. இங்கு சற்றே நின்று பார்த்துவிட்டுப் போவோமென்று வந்தேன்" என்றுள்.

இதற்குள் ராஜகுமாரன் இவளுடைய அழகிலே மோஹித்துப்போய் "உன்னைப் பார்த்தால் தேவ ரம்பை அல்லது நாககன்னிகை போலே தோன்று கிறது" என்றான். "நாககன்னிகை" என்ற வார்த் தையைக் கேட்டவுடனே ரோஜாவுக்கு உடம்பெல் லாம் படபடவென்று நடுக்கங் கண்டது.

"என் பயப்படுகிறாய்?" என்று ராஜகுமாரன் கேட்டான். ரோஜாவுக்கு முனிவர் சொன்னவார்த்தை ஞாபகம் வந்தது. இனி இங்கே நின்றால் அபாயம் நேரிடுமென்று பயந்து மிக வேகத்துடன் ஓடி மறைந்து போய்விட்டது பாம்புக்குட்டி. பின்னொருநாள், மாலை வேளையில் மரஞ்செடியில்லாத பொட்டல் வெளியிலே காட்டுப் பாதைக்கு ஸமீபத்தில் ஆழ்ந்த கிணறொன் றின் அருகேயுள்ள புதரில் ரோஜாப்பூ தனியாக இருக்கும்போது, அவ்வழியே பௌவனமும் அழகு மூடைய ஒரு புரோஹிதப் பிராமணன் போய்க்கொண் டிருந்தான். தூரத்தில் வரும்போதே அவனைக் கண்டு ரோஜாப் பூ பெண் வடிவமாக மாறி நின்றது. பார்ப் பான் பார்த்தான். நடுக்காடு; தனியிடம்; மாலைநேரம்; இவளழகோ சொல்லி முடியாது. 'இவள் யாரடா இவள்?' என்று யோசனையுடன் சற்றே நின்றான். ரோஜாப்பூ அவனைக் கூப்பிட்டு, "ஐயோ, தாகம் பொறுக்க முடியவில்லை. கிணற்றில் இறங்கப் பயமாக இருக்கிறது. நீர் இறங்கி உமது கையிலுள்ள செம் பிலே சிறிது தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தால் புண்ணியமுண்டு" என்றாள். பார்ப்பான் ஸந்தோ

வத்துடன் கிணற்றிலே யிறங்கப் போனான். தண்ணீருக்கு மேலே ஒரு நீர்ப்பாம்பு தென்பட்டது. உடனே அவன் ரோஜாவை நோக்கித் திரும்பி, "ஆஹா! பாம்பைப் பார்த்தாயோ?" என்றான்.

ரோஜாவுக்கு உடம்பெல்லாம் வெயர்த்துப் போய்க் கையும் காலும் நடுங்கலாயின.

"என் நடுங்குகிறாய்?" என்று பார்ப்பான் கேட்டான். ரோஜாப்பூ அங்கிருந்து விரைவாக மறைந்தோடிவிட்டது. இவ்விதமாக ரோஜாப்பூ யாரை மயக்கி வசப்படுத்திக்கொள்ள விரும்பினாலும் ஒரு பயம் சேரிட்டுக்கொண்டே யிருந்தது. கடைசியாக அவளுக்கு (அந்தப் பாம்புப் பெண்ணுக்கு) 'கர்த்தப ஸ்வாமிகள்' என்றொரு ஸந்நியாசி வசப்பட்டான்.

இவ்வாறு மதுகண்டிகை என்றும் குயில் சொல்லி வருகையில் ரஸிகசிரோமணி, 'அந்த ஸந்நியாஸி யார்?' என்று கேட்டது.

கர்த்தப ஸ்வாமிகள் என்ற ஆண்டி கதை.

குயில் சொல்லுகிறது:—

"கேளாய் ரஸிகமாமா, கங்காதீரத்தில் ராமநகரம் என்ற ஊரில் ஒரு வண்ணான் வீட்டிலே 'பக்திவிஸ்தாரன்' என்றொரு கழுதை இருந்தது. தாய் சொன்ன வார்த்தை தட்டாது. யார் சொன்ன வார்த்தையும் தட்டாது. சிறு பிள்ளைகள் கல்லெறிந்தால் கனைத்துக்

கொண்டு ஓடவேண்டாமோ? அதுகூடச் செய்யாது. பொறுமையே அவதாரம் செய்தாற்போன்ற கழுதை. இந்தக் கழுதை ஒருநாள் நதிக் கரையிலே புல் மேய்ந்துகொண்டிருக்கையிலே பக்கத்திலிருந்த ஒரு மரத்தின்மேல் இரண்டு காக்கைகள் பின்வருமாறு சம்பாஷணை செய்துகொண்டிருந்தன. அந்த வார்த்தைகளை யெல்லாம் கழுதை கவனத்துடன் கேட்டது. ஒரு காகம் சொல்லுகிறது :—

"பிரயாகையில், கங்கையும் யமுனையும் வந்து சேரும் இடத்தில் ஒருவன் போய் விழுந்து பிராணனை விடும்போது அடுத்த ஜன்மத்தில் என்ன பிறவி வேண்டுமென்று நினைத்துக்கொள்ளுகிறானே, அதே பிறவி அவனுக்கு நிச்சயமாகக் கிடைக்கும். இந்த விஷயம் உனக்கு இதுவரை கேள்வியுண்டா?"

இதற்கு இரண்டாங் காகம் :—"உனக்கு யார் சொன்னார்கள்?" என்று கேட்டது.

முதற் காகம் :—"இன்னார் சொன்னார்களென்பதை உன்னிடம் சொல்லக்கூடாது. அது ரஹஸ்யம். ஆனால் உண்மைதான், எனக்கு நிச்சயமாகத் தெரியும்."

இரண்டாங் காகம் :—"உன்னிடம் சொல்லியது யார்?" என்று மறுபடியும் வற்புறுத்திக் கேட்டது.

முதற் காகம் :—"அட நம்பிக்கையில்லாத ஜந்துவே! உனக்கு நல்ல கதி ஒரு நாளும் ஏற்படாது! யார் சொன்னதென்று கேட்கிறாய்? என்னுடைய குரு

சொன்னார். அவரைப் போன்ற ஞானி பிரம லோகத்திலே கூடக் கிடையாது. ஒரு காலத்தில் பிரம தேவனுக்குப் படைப்புத் தொழில் சம்பந்தமாக ஒரு சந்தேகம் மேற்பட்டது. உடனே பிரம்மா நாரதரை அனுப்பி என் குருவை அழைத்து வரச் சொல்லித்தமது சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொண்டார்."

இந்த வார்த்தையைக் கேட்டவுடனே இரண்டாங் காகம் கலகல வென்று சிரித்து, அங்கிருந்து பறந்தோடிப் போய்விட்டது. சம்பாஷனை முழுவதையும் மிகுந்த சிரத்தையுடன் கேட்டுக்கொண்டிருந்த கழுதை உடனே அவ்விடத்திலிருந்து புறப்பட்டு, இராப் பகலாக நடந்து "திரிவேணி சங்கம்" (அதாவது, பிரயாகையில் கங்கையும் யமுனையும் கூடுமிடம்) வந்து சேர்ந்தது.

அந்த இடத்திலே போய்க் கழுதை பின்வருமாறு நினைத்துக்கொண்டு முழுகிப் பிராணனை விட்டது:—

"இந்த வடதேசத்திலே எனக்கு ஸந்தோஷமில்லை. அடுத்த ஜன்மம் தென்னாட்டிலே பிறக்கவேண்டும். ஒருவிதமான குடும்பத் தொல்லையுமில்லாமல், எல்லா இடங்களிலும் இஷ்டப்படி ஸஞ்சாரம் செய்துகொண்டு, எல்லா ஜனங்களும் இனமாகப் போடும் போஜனத்தைத் தின்றுகொண்டு, சந்தோஷத்துடன் வாழும் ஒரு மனித ஸந்யாஸியாகப் பிறக்கவேண்டும். ஆனால் இந்தக் கழுதைப் புத்தி மாறுகபடி இருக்கவேண்டும். வெளிக்கு ஸந்யாஸிபோலிருந்து எல்லாரும் உபசாரங்கள் செய்தபோதிலும், என் மனதிற்

குள்ளே 'நாம் கழுதை' யென்ற ஞாபகம் நிலைபெற் றிருக்க வேண்டும்."

இவ்விதமான தியானத்துடன் இறந்துபோன கழுதை மறுஜன்மத்திலே தென்னாட்டில் ஒரு ஊரில் ஒரு நல்ல குடும்பத்திலே ஆண் குழந்தையாகப் பிறந்து வளர்ந்தது. தாய் தந்தையர் இந்தப் பிள் ளைக்கு "முத்துசாமி" என்று பெயர் வைத்தார்கள். முத்துசாமி மனத்திலே தான் கழுதையென்ற ஞாபகம் பரிபூர்ணமாக இருந்தது. பூர்வ ஜன்மத்தைப்பற்றி வேறு யாதொரு நினைவுமில்லை. ஆனாலும், தான் மற்ற மனிதர்களைப்போலில்லை யென்பதும், உள்ளுக்குள்ளே கழுதை யென்பதும் அவன் சித்தத்தை விட்டு நீங்க வில்லை. பதினாறு வயதாகு முன்பாகவே இவன் ஸந் யாஸியாகிக் காவி வஸ்திரம் தரித்துக்கொண்டு ஊரு ராகப் பிச்சை வாங்கியுண்ணும் தொழிலிலே இறங்கி விட்டான். முத்துசாமி என்ற பெயரைத் துறந்து கர்த் தப ஸ்வாமிகள் என்று பெயர் வைத்துக்கொண்டான். கர்த்தபமென்றால் ஸம்ஸ்கிருத பாஷையில் கழுதைக் குப் பெயர். இவனுக்குத் தமிழ், ஸம்ஸ்கிருதம் இரண்டு பாஷையும் தெரியும். வேறுவர் உபாஸனை யுண்டு. உலகத்திலுள்ள பாஷைகளெல்லாம் ஸம்ஸ்கிருதத்தி லிருந்து வந்ததாகவும், அது தமிழிலிருந்து மூலத்த தாகவும் ருஜுப்படுத்தி ஒரு புஸ்தக மெழுதினான். இப்போது பரத கண்டத்திலே நாலாயிரம் ஜாதிக ளாகக் குறைந்து போய்விட்டது நியாயமில்லை யென் றும், ஆதியிலே நாற்பதினாயிரம் ஜாதிப் பிரிவுகள்

இருந்தன வென்றும், அந்த ஏற்பாட்டை மறுபடி ஸ்தாபனம் செய்ய வேண்டுமென்றும், ருஜூப்படுத்தி மற்றொரு நூல் செய்யுளாக எழுதினன். நிகண்டைப் பார்த்து அதிலுள்ள தெய்வப் பெயர்களை யெல்லாம் ஒன்று சேர்த்து, இவை யெல்லாம் தன்னுடைய இஷ்ட தேவதையாகிய வயிரவ மூர்த்தியின் திரு நாமங்களென்று சொல்லி ஒரு நாமாவளி ஏற்படுத்தினன். பூணூல் போடும் வரை, பிராம்மணப் பிள்ளை சூத்திரனைவே யிருப்பதால், அவன் பார்க்க மற்ற பந்துக்கள் ஆறாரம் பண்ணுவது கொடிய அநாசார மென்று ஒரு கஷ்டி கொண்டுவந்தான். பூணூல் போடாத பிராமணக் குழந்தைக்குத் தாய் பால் கொடுக்கும்படி சேரிட்டாள், பின்பு ஸ்நானஞ் செய்யா மல் வீட்டுப் பாத்திரங்களைத் தொடக்கூடாது. அப் படித் தொட்டால் அவள் ரௌரவாதி நரகங்களுக்குப் போவதுடன், அந்தக் குடும்ப முழுமைக்கும் அதோ கதி சேரிடுமென்று ஸ்தாபனம் செய்தான். இவனுக்கு வேண்டிய மட்டும் சிஷ்யர்கள் சேர்ந்து விட்டார்கள். பணமும் சேர்ந்தது. ஒரு மடம் கட்டினன். "நாற்பதி னயிர-ஜாதிபேத-பூர்வதிராவிட-வயிரவ-கர்த்தப - பிரா மண - சிவ - பலிஷ்கார - மறவ - மடம்" என்று அந்த மடத்துக்குப் பெயர் வைத்தான்.....இந்த மடத் துக்கு ரோஜாப்பூ என்ற பாம்புப் பெண் வந்து சேர்ந்தான்.

கர்த்தப ஸ்வாமியைப் பாம்புப் பெண் வசப்படுத்தியது.

தென்னாட்டிலே சாலிவாடி புரத்தில் கர்த்தப ஸ்வாமி மடங் கட்டித் தனது சீடர்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கையில் அங்கே ரோஜா என்ற பாம்புப் பெண் வந்தாள். எலுமிச்சம் பழத்தைப் போலே நிறம்; மானைப்போலே விழி; பூர்ண சந்திரன்போலே முகம்; உடம்பிலே லாகவமும், கட்டும், பெண் புலியைப் போலே.

ஒரு நாள் மாலை நேரம்; சாமியார் பகற் சோறு தின்று, அந்த சிரமத்தினால் நாலைந்து மணி நேரம் தூங்கி விழித்த பிறகு, அந்த ஆயாஸம் தீரும்பொருட்டு நாலைந்து தோசைகளைத் தின்று, அரைப்படி பாலைக் குடித்துவிட்டு, வாயிலே வாஸனைப் பாக்குப் போட்டு மென்றுகொண்டு, இரண்டு சீடர்களிடம் பிரசங்கம் செய்துகொண்டிருக்கிறார்.

சாமியார் சொல்லுகிறார்:—

"கேளீர், சீடரே,

'ஜன்மநா ஜாயதே சூத்ர:
கர்மணா ஜாயதே த்விஜ:'

பிறக்கும்போது சூத்திரன்; பூணூல் போட்ட பிறகுதான் பிராமணன். இந்த விதிக்கு விலக்கே கிடையாது. உபநயனம் செய்த பிறகுதான் பிராமணப் பிள்ளைக்கு பிராமணத்துவம் உண்டாகிறது. இதில் சந்தேகமில்லை. உபநயனம் செய்யும்வரை அவ

னுக்கு எச்சில், தீண்டல் ஒன்றுமே யில்லை. சண்டா ளனைப் போல் வளருகிறான். அப்படிப்பட்ட குழந் தையை அவனுடைய தாயார் தீண்டிவிட்டுப் பிறகு ஸ்நானம் செய்யாமல், மடைப்பள்ளியைத் தொட்டுச் சமையல் செய்தால், அந்த அன்னம் ஸ்வாமி நைவேத் தியத்துக்கு உதவாது. அவ்விதமான அன்னத்தை ஸ்வாமிக்கு நைவேத்தியம் செய்வோர் குளிக்கப் போய்ச் சேறு பூசிக்கொள்வது போலே, பூணை பண் ணைப்போய்ப் பாவத்தைத் தேடிக்கொள்ளுகிறார்கள்."

என் றிவ்வாறு, பல நியாயங்களைக் காட்டிச் சாமி யார் தான் எடுத்த கக்ஷியை ஸ்தாபனம் செய்து கொண்டிருந்தான். சீடர்கள் மிகவும் பக்தி சிரத்தை யுடன் தலையை அசைத்தசைத்துக் கேட்டுக்கொண் டிருந்தார்கள். இந்தத் தருணத்திலே பாம்புப் பெண் வந்து சாமியாருக்கு நமஸ்காரம் பண்ணினாள்.

"உட்காரம்மா" என்று சாமியார் மெதுவான குரலிலே சொன்னார். உட்கார்ந்தாள். "நீ யார்?" என்று சாமியார் கேட்டான். பாம்புப் பெண் சொல்லு கிறாள்:—

"தாமரைப் பூ சேற்றிலே பிறக்கிறது. வண்டு காட்டிலே பிறக்கிறது. தாமரையைத் தேடி வண்டு வருகிறது. நான் சிங்கள தேசத்து ராஜன் மகள். பரதகண்டத்திலே, பற்பல இடங்களில் யாத்திரை செய்துகொண்டு, இந்த நகரத்துக்கு வந்து சேர்ந் தேன். அம்மன் சன்னிதித் தெருவிலே இறங்கி யிருக்

கிறேன். இந்த ஊரில் தாங்கள் பெரிய பக்திமா னென்றும், யோகி யென்றும், ஞானி யென்றும் கேள் விப்பட்டேன். தங்களிடம் வந்து ஆத்மா கடைத் தேறும்படியான மந்திரோபதேசம் பெற்றுக்கொண்டு போகலாமென்ற கருத்துடன் வந்தேன்" என்றாள். சாமியாருக்கு உச்சந் தலையிலே பூமாரி பொழிந்தது போல், உடம்பெல்லாம் புளகமாய்விட்டது. சிங்கள தேசத்து ராஜன் மகள் சீடப்பெண்ணாக வந்தால் யாருக்குத்தான் ஆனந்தமேற்படாது?

"இப்போதே மந்திரோபதேசம் பண்ணட்டுமா?" என்று சாமியார் கேட்டார். அவசரம் வாரிக்கொண்டு போகிறது, அவளுக்கு!

அதற்கு ராஜா சொல்லுகிறாள்:—

"நல்ல நாள், நல்ல லக்னம் பார்த்துச் செய்ய வேண்டும். மேலும், குருவுக்குப் பாதகாணிக்கை வைக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும்; நாள் பார்த்துச் சொல்லுங்கள்" என்றாள். சாமியாருடைய சந்தோஷம் கரை கடந்து விட்டது. சாமியார் சோதிடம் பார்க் கிறார்:—

"இன்றைக்கு என்ன கிழமை? ஞாயிற்றுக்கிழ மை. நாளைக்குத் திங்கட்கிழமை, ஸோமவாரம், நல்ல நாள். காலையிலே எழரை மணி முதல் ஒன்பது மணி வரைக்கும் ராகுகாலம்; அது முடிந்தவுடனே நல்ல லக்னம் வருகிறது. செவ்வாய் மிதுன ராசியிலே பிர வேசிக்கிறான். அவனைக் குரு பார்க்கிறான். அப்போது

மந்திரம் கூறுவதற்குப் பொருத்தமான வேளை. 'சுப யோக - சுபகரணை - ஏவங்குண - விசேஷணை - விசிஷ்டா யாம்' என்று சாஸ்திரம் முறையிடுகிறது. நம்முடைய மந்திரமோ வைரவ மந்திரம். எல்லா விதமான தேவ நாமங்களும் வைரவ நாமத்துக்குள் அடங்குமென்பதற் குச் சூடாமணி நிகண்டிலே தக்க ஆதார மிருக்கிறது. 'முத்தனே, குமாரன், பிள்ளை' என்று நிகண்டுக்காரர் சொல்லுகிறார். இந்த மந்திரோபதேசம் பெற்றவருக்கு இந்த ஜன்மத்திலே முக்தி" என்று சாமியார் சொல்லி நிறுத்தினர். ரோஜா ஒரு புன்சிரிப்புக் காட்டினாள். சாமியாருடைய ஆனந்தம் எறக்குறைய ஜன்னி நிலை யிலே வந்து நின்றது. சாமியார் பின்னும் சொல்லு கிறான்.

"கேளாய், சிங்கள தேசத்து ராஜகுமாரியே! உன் பெயரென்ன? ரோஜாவா? ஆ ஹா ஹா! குலத் துக்கும் ரூபத்துக்கும் பொருத்தமான பெயர். கேளாய், ரோஜாவே, ஜன்மங்கள் கோடானு கோடி.

'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய், மரமாகிப்
பல்விருக்க மாகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய், மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுராகி முனிவராய்த் தேவராய்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன், எம்பெருமான்'

என்று திருவாசகம் சொல்லுகிறது."

மேற்படி பாட்டைச் சாமியார் தனது பெயருக்கும் இயல்புக்கும் பொருந்திய குரலிலே பாடிக் காட்டினார். இந்தப் பாட்டிலே "பாம்பு" என்ற சொல் வந்தது. இருந்தாலும், ராஜாவுக்கு பயமுண்டாகவில்லை. இவன் முழுமூட னென்பது அவளுக்கு ஆரம்ப முதலாகவே தெரிந்து விட்டது. 'என்மூலம் குற்றமில்லை. நாம் இவனை விடக்கூடாது. இதுவரை எத்தனையோ மனிதர் கை தவறிப் போய்விட்டார்கள்; இந்த மடத்தை நாம் இஷ்டப்படி ஆளலாம். இது தான் சரியான புள்ளி' என்று பாம்புப்பெண் உறுதி செய்து கொண்டாள்.

சாமியார் சொல்லுகிறான்:—"கேளாய், ராஜாப் பெண்ணே! சிங்கள ராஜன் கண்ணே! ஜன்மங்கள் எண்ணைத் தொலையாது—ஆற்று மணலைப் போலே; வானத்திலுள்ள நக்ஷத்திரங்களைப்போலே. 'புனராபி ஜனனம், புனராபி மரணம்' என்று சங்கராசாரியர் சொல்லுகிறார். இந்த ஜன்மங்களிலே மனித ஜன்மம் சிறந்தது. கடல் சூழ்ந்த இந்த நிலவுலகத்திலே இத்தனை மேலான நர ஜன்மத்தை எடுத்துக் கக்க குருவைத் தேடி யடைந்து மோக்ஷத்துக்குப் போகும் உபாயத்தைத் தெரிந்துகொள்ளாதவர்கள் மறுபடி தாய் வயிற்றிலே பிறந்து பத்து மாதமிருந்து துயரப்பட்டு, மண்ணிலே பிறந்து பலவகைத் துன்பங்களை அனுபவிக்கிறார்கள். உனக்குத் தெரியாத விஷய மொன்றுமில்லை. நம்மூடைய வைரவ மந்திரம் உனக்

குக் கிடைக்கப் போகிறது. நீ பெரிய பாக்கியசாலி" என்றார். கதையைச் சுருக்கி விடுகிறேன்.

மறுநாள் காலையிலே பாம்புப் பெண் ஒரு நாகரத்தினத்தைக் கொண்டுவந்து சாமியார் காலிலே காணிக்கையாக வைத்து மந்திரோபதேசம் பெற்றுக் கொண்டாள். சில தினங்களிலே சாமியார் இவள் சொல்லியபடி யெல்லாம் கூத்தாடுகிற நிலைமைக்கு வந்துவிட்டார்." என்று மதுகண்டிகை என்னும் குயில் ரஸிகசிரோமணியிடம் சொல்லிற்று.

குயில் சொல்லுகிறது:—

"கர்க்கப ஸ்வாமி யென்பவன் பாம்புப் பெண்ணுடைய வஞ்சனையில் அகப்பட்டுக்கொண்டான். அதனால் அவனுக்கு மிகுந்த பழி யுண்டாயிற்று. ஊரார் அவனை மடத்திலிருந்து துரத்திவிட்டார்கள். பிறகு பாம்புப் பெண்ணும் அவனைப் பிரிந்து சென்று விட்டாள். அதன் பின், அவ்விருவரும் உலக வாழ்க்கையிலே பல வகைத் துன்பங்களுக்கு இரையாகி முடிந்தனர்" என்றது.

அப்போது, ரஸிகசிரோமணி, "இக்கதையை எதன் பொருட்டாகச் சொன்னாய்?" என்று கேட்டது.

குயில்—"உங்கள் ஜாதிக்கே பிறர் வார்த்தையை எளிதாக நம்பி மதிமோசம் போவது வழக்க மென்பதைக் காட்டும் பொருட்டாகச் சொன்னேன். ஆனால் நீ அப்படியில்லை நீ கழுதையாக இருந்தாலும் புத்திசாலி; நியாயத்தைச் சொன்னால் கட்டுப்படுகிறாய்.

ஞ்சாவூர் கட்டிக்கொண்டான் செட்டி கதையை மேலே சொல்லு" என்று வேண்டிற்று.

த. கோ. செட்டி கதை.

ரஸிகசிரோமணி:—

"முன் கதையை எந்த இடத்தில் நிறுத்தினேன்? னிச்சென்று ஞாபகம் வரவில்லை. உனக்கு ஞாபக மிருந்தால் அடியெடுத்துக் கொடு" என்று கேட்டது.

குயில் அடியெடுத்துக் கொடுக்கிறது:—

"கட்டிக்கொண்டான் செட்டி தஞ்சாவூரிலே மதுரை மாணிக்கஞ் செட்டி என்பவனுடைய குமாஸ் தாவாக இருக்கையில் யஜமானனுடைய பணத்தில் பெருந் தொகையை அழுத்திக்கொண்டு கள்ளக் கணக் கனுப்பினான். தனக்கு நேரிட்ட அநியாய நஷ்டத்தி னிருந்து ஒருவாறு தப்பவேண்டு மென்று யோசனை செய்து மதுரை மாணிக்கஞ் செட்டி மானி அய்யன் என்ற பிராமணனை வரவழைத்துத் தஞ்சாவூருக்குப் போகும்படி சொல்லுகிறான். இந்த இடத்தில் உன் கதையை நிறுத்தினாய். மேலே நடத்து" என்றது. ரஸிகசிரோமணி பின்வருமாறு கதை சொல்லலாயிற்று.

அந்த மாணிக்கஞ் செட்டி சொல்லுகிறான்:—

"ஐயரே, நீர் உடனே புறப்பட்டுத் தஞ்சாவூருக் குப் போகவேண்டும். அங்கே தட்டிக்கொண்டான் செட்டி வீடெங்கே என்று கேட்டால் யாவரும் சொல் லுவார்கள். நடுத்தெருவிலே கிழக்கோரத்து வீடு.

அவனிடத்தில் எப்படியேனும் நிரோகம் செய்து கொண்டு, அவன் வீட்டில் நருங்கிப் பழகவேண்டும். நமக்கு அவன் கள்ளக் கணக்கு அனுப்பி யிருக்கிறான். என்றாலும், தனது சொந்த உபயோகத்தைக் கருதி நியாயமான கணக்கு அவசியம் எழுதி வைத்திருக்க வேண்டும். அந்தக் கணக்குச் சுவடியை என்ன தந்திரம் பண்ணியேனும் இங்கே கொண்டு வந்து விட வேண்டும்."

இதைக் கேட்டு மாணி அய்யன்—"சரி; யோசிக்க வேண்டியதில்லை. நான் காரியத்தை முடித்துக் கொண்டு வருகிறேன்" என்றான். பிறகு அவன் மாணிக்கஞ் செட்டியினிடம் தன் செலவுகளுக்கு வேண்டிய பணத்தை வாங்கிக்கொண்டு தஞ்சாவூருக்கு வந்தான். தலையை மொட்டை யடித்தான். காவி வேஷ்டியும் கட்டிக்கொண்டான். செட்டியின் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான்.

பிற்பகல் வேளை, செட்டி ஏதோ பகலைம் தின்று தாகசாந்தி செய்துகொண்டு வெற்றிலை சுவைக்கிறான். "நாராயண", "நாராயண" என்ற உச்சாரணத் துடன் ஸந்யாஸி அவன் முன்னே போய் உட்கார்ந்து, கண்ணை மூடிக்கொண்டு ஸமாதியிலே ஆழ்ந்து விட்டான். பத்து நிமிஷம் கழிந்த பிறகு கண்ணைத் திறந்தான். அப்போது தட்டிக்கொண்டான் செட்டி அவன் காலிலே ஸாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம் செய்து, "சாமிகளுக்கு எவ்விடம்? அடியேன் சிறு குடிலுக்கு எழுந்தருளியதன் நோக்க மென்ன?" என்றான்.

அவனிடத்தில் எப்படியேனும் சிநேகம் செய்து கொண்டு, அவன் வீட்டில் நெருங்கிப் பழகவேண்டும். நமக்கு அவன் கள்ளக் கணக்கு அனுப்பி யிருக்கிறான். என்றாலும், தனது சொந்த உபயோகத்தைக் கருதி நியாயமான கணக்கு அவசியம் எழுதி வைத்திருக்க வேண்டும். அந்தக் கணக்குச் சுவடியை என்ன தந்திரம் பண்ணியேனும் இங்கே கொண்டு வந்து விட வேண்டும்."

இதைக் கேட்டு மானி அய்யன்—"சரி; யோசிக்க வேண்டியதில்லை. நான் காரியத்தை முடித்துக் கொண்டு வருகிறேன்" என்றான். பிறகு அவன் மாணிக்கஞ் செட்டியினிடம் தன் செலவுகளுக்கு வேண்டிய பணத்தை வாங்கிக்கொண்டு தஞ்சாவூருக்கு வந்தான். தலையை மொட்டை யடித்தான். காஷி வேஷ்டியும் கட்டிக்கொண்டான். செட்டியின் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான்.

பிற்பகல் வேளை, செட்டி ஏதோ பகவதானம் தின்று தாகசாந்தி செய்துகொண்டு வெற்றிலை சுவைக்கிறான். "நாராயண", "நாராயண" என்ற உச்சாரணத்துடன் ஸந்யாஸி அவன் முன்னே போய் உட்கார்ந்து, கண்ணை மூடிக்கொண்டு ஸமாதியிலே ஆழ்ந்து விட்டான். பத்து நிமிஷம் கழிந்த பிறகு கண்ணைத் திறந்தான். அப்போது தட்டிக்கொண்டான் செட்டி அவன் காலிலே ஸாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம் செய்து, "சாமிகளுக்கு எவ்விடம்? அடியேன் சிறு குடிலுக்கு எழுந்தருளியதன் நோக்க மென்ன?" என்றான்.

காரியத்தான். அதிலிருந்து எனக்கேதேனும் தீங்கு வரக்கூடுமோ என்ற பயமுண்டாகிறது. இந்த விஷயத்தில் பின்வரும் விஷயைச் சாமிகள் ஆருடத்தினால் கண்டு சொல்லவேண்டும்" என்று பணிவு காட்டினான்.

ஸந்யாஸி மறுபடி கண்ணை மூடிச் சில நிமிஷங்கள் வாயை முணுமுணுத்தான். பிறகு சொல்லுகிறான் :—

"மாமாவுக்கு நஷ்டம் வருகிறது. க. கொ. வுக்கு லாபம் வருகிறது" என்றான்.

செட்டி இதைக் கேட்டு ஆச்சரியத்துடன் மதுரை மாணிக்கனை செட்டிக்கு நஷ்டமென்றும், கட்டிக் கொண்டான் செட்டிக்கு லாபமென்றும் ஆருடம் சொல்வதாகத் தெரிந்துகொண்டு, இந்தச் சாமியாரை நன்றாகப் பரீக்ஷிக்க வேண்டுமென்ற கருத்துடன், "சாமிகளே, அவ்விடத்தில் உத்தரவு செய்வது எனக்கு நேர அர்த்தமாக வில்லை. விளங்கச் சொல்ல வேண்டும்" என்று கேட்டான்.

அதற்கு ஸந்யாஸி :—

"செட்டியாரே, ஆருடம் நாம் சொல்வதில்லை. நமக்கு பிரம்மவித்தை யொன்றுதான் தெரியும். மற்ற தெல்லாம் வீண் வித்தை. நம்முடைய நாக்கில் இருந்து கொண்டு ஒரு யக்ஷிணி தேவதை இந்த ஆருடம் சொல்லுகிறாள். அதன் குறிப்புப் பொருளை நாம் கவனிப்பதே கிடையாது. கவனித்தாலும், சில சமயங்களில் அர்த்தமாகும். சில சமயங்களில் அர்த்தமா

காது. கேட்பவர் சந்தர்ப்பத்துக்குத் தகுந்தபடி அர்த்தம் கண்டுபிடித்துக் கொள்ளவேண்டும்" என்றான்.

செட்டி தனது ரஹஸ்யத்தைச் சாமியார் கூடத் தெரிந்துகொள்ளாதபடி, அவ்வளவு நயமாகத் தனக்கு அனுகூலம் சொல்லிய யக்ஷிணி தெய்வத்தினிடம் மிகுந்த நம்பிக்கை கொண்டவனாய் ஆனந்த பரவசனாய் விட்டான். சாமியாரிடத்திலும் அவனுக்குச் சொல்ல முடியாத மதிப்புண்டாயிற்று. ஒரு தட்டு நிறையப் பலவிதமான பழங்களும், காய்ச்சின பாலும் கொண்டு வரும்படி செய்து சாமியார் முன்னாலே வைத்து, "திருவமுது செய்தருள வேண்டும்" என்றான்.

ஸந்யாஸி ஒரு வாழைப்பழத்திலே பாதியைத் தின்று, அரைக் கிண்ணம் பாலைக் குடித்துவிட்டு "போதும்' என்று சொல்லிவிட்டான்.

அப்போது செட்டி ஸந்யாஸியை நோக்கி, "ஏதேனும், மடத்துக் கைங்கரிய மானாலும், கோயில் திருப்பணி யானாலும், சுவாமிகள் என்ன கட்டளை யிட்டபோதிலும் என்னாலியன்ற பொருளுதவி செய்யக் காத்திருக்கிறேன்" என்றான்.

சாமியார் தலையை அசைத்து,—"பிரம்மமே ஸத்யம், ஜகத் மித்யை; மடமேது, கோயிலேது? பரமாத்மா கட்டளை யிலலவாக ஹிருதயத்திலுள்ள குகையில் விளங்குகிறான். எல்லாம் நமக்குள்ளே தானிருக்கிறது. உம்மால் நமக்கு எவ்விதமான பொருளுதவியும் வேண்டியதில்லை" என்றான்.

இப்படி இருக்கையில், ஒரு வேலையாள் வந்து, "கரும்பனூர்க் காத்தவராயக் கவிராயர் வந்திருக்கிறார். எஜமானைப் பார்க்க வேண்டுமென்று சொல்லுகிறார்" என்று செட்டியிடம் தெரிவித்தான்.

செட்டி சாமியாரை நோக்கி "வரச் சொல்லட்டுமா?" என்று கேட்டான்.

ஸந்யாஸி—"ஆகேஷப மென்ன?" என்றான்.

"வரச் சொல்லு" என்று செட்டி உத்தரவு கொடுத்தான்.

கட்டிக்கொண்டான் செட்டியும், ஆருட ஸ்வாமிகளும், கரும்பனூர்க் காத்தவராயக் கவிராயரும், மூன்று பேருமாக ஸம்பாஷிக்க லானார்கள்:—

க. கா. க.—ஸ்வாமிகளுக்கு எவ்விடம்?

ஆ. ஸ்.—ஸந்நியாஸிக்கு இடமேது? வீடேது?

க. கொ. செ.—ஞானத்தினுடைய கடல், உபாஸனையே திருவடிவம், பக்திக் கோயில். ஸ்வாமிகளுக்கு இறந்த காலம், நிகழ் காலம், வருங்காலம் மூன்றுந் தெரியும்.

க. கா. க.—இலக்கணத்தின் கருத்தே அது.

ஆ. ஸ்.—உண்மையான துறவி ஒரு நாள் தங்கிய இடத்தில் மறுநாள் தங்க லாகாது. ஒரு முறை புஜித்த வீட்டில் மறு முறை புஜிக்க லாகாது. பிரம்மம் ஒருமை. உலகம் பன்மை.

க. கொ. செ.—பிரம்மம் ஒருமை, பிரம்மங்கள் பன்மை என்று உத்தரவாக வேணும்.

ஆ. ஸ்.—அது இலக்கணப்படி. நான் வேதாந்த அர்த்தம் சொல்லுகிறேன்.

க. கொ. செ.—சரிதான். சரிதான். மேலே உத்தர வாகட்டும்.

ஆ. ஸ்.—மழைநாளில் மாத்திரம் ஸந்யாஸி ஒரே இடத்தில் தங்கலாம். ஆகாசமே மேற்கூரை; பூமி கட்டில், மெத்தை. வெயில் பனி யெல்லாம் சந்தனம், பனிநீர். கவிராயரே கவனிக்கிறீர்களா?

க. கா. க.—சன்னிதானத்தின் மீது ஒரு ஆசு கவி இயற்றுகிறேன், இயற்றி யாயிற்று. இதோ உரைக்கிறேன்.

வேண்டா.

"உலகைத் துறந்தீர் உருவைத் துறந்தீர்,
மலையைப் பிளந்துவிட வல்லீர்—இலகுபுகழ்
ஞானம் தவம் கல்வி நான்குந் துறக்கிலீர்,
ஆனந்த மையாஹரீ."

ஆ. ஸ்.—ஹரி நாமத்தை உரைத்தீர்கள். ஆனந்தம். ஆனந்தம்.

க. கொ. செ.—சந்தோஷ மென்ன? தெய்வபக்தி தானே மனுஷனுக்கு முக்கியமாக இருக்கவேண்டும்.

ஆ. ஸ்.—இந்த ஆசு கவிஞ்யக் கவிராயர் இந்த சரீரத்தை நோக்கிச் சொன்னார். ஆனாலும் நமக்குள்ளே விளங்கும் பரமாத்மா கேட்டு மகிழ்வடைந்தான்.

இப்படிப் பலவிதமாக நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தபிறகு, கவிராயர் மற்றொரு ஸமயம் வருகிறேன் என்று சொல்லி எழுந்து போய்விட்டார். போகும் போது கவிராயர் மனதில் இந்தச் சாமியார் நிருடன் என்று சொல்லிக்கொண்டு போனார். கவிராயர் போன வுடன் ஸந்யாஸி சொல்லுகிறான்:—

"இந்தக் கவிராயருக்கு கர்வம் அதிகம் போலே தோன்றுகிறது."

த. கொ. செ.—சன்னிதானத்தின் மீது ஆசு கவி பாடியிருந்தும் இப்படிச் சொல்லுகிற மூகாந்தரமென்ன?

ஆ. ஸ்.—நம்மிடத்தில் அவருக்கு பக்தி ஏற்பட்டது மெய்தான்; ஆனாலும் கர்வி. கர்வியை நம்பக் கூடாது. கபடியை நம்பினாலும் நம்பலாம், கர்வியை நம்பக்கூடாது.

த. கொ. செ.—கபடியை எப்படி நம்புவது?

ஆ. ஸ்.—நாம் இருவரும் பரஸ்பரம் நம்புகிறோம். நாம் கபடிகளில்லை.

த. கொ. செ.—ஆகையால மென்ன? கர்வியைத் தான் நம்பக்கூடாது. சந்நிதானத்தில் உரைப்பதே உண்மை.

ஆ. ஸ்.—"தத்ஸ விதுர் வரேண்யம்."

த. கொ. செ.—அதன் பொருள் அடியேனுக்கு விளங்கச் சொல்லவேண்டும்.

இப்படிப் பலவிதமாக நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தபிறகு, கவிராயர் மற்றொரு ஸமயம் வருகிறேன் என்று சொல்லி எழுந்து போய்விட்டார். போகும் போது கவிராயர் மனதில் இந்தச் சாமியார் நிருடன் என்று சொல்லிக்கொண்டு போனார். கவிராயர் போன வுடன் ஸந்யாஸி சொல்லுகிறான்:—

"இந்தக் கவிராயருக்கு கர்வம் அதிகம் போலே தோன்றுகிறது."

த. கொ. செ.—சன்னிதானத்தின் மீது ஆசு கவி பாடியிருந்தும் இப்படிச் சொல்லுகிற மூகாந்தரமென்ன?

ஆ. ஸ்.—நம்மிடத்தில் அவருக்கு பக்தி ஏற்பட்டது மெய்தான்; ஆனாலும் கர்வி. கர்வியை நம்பக் கூடாது. கபடியை நம்பினாலும் நம்பலாம், கர்வியை நம்பக்கூடாது.

த. கொ. செ.—கபடியை எப்படி நம்புவது?

ஆ. ஸ்.—நாம் இருவரும் பரஸ்பரம் நம்புகிறோம். நாம் கபடிகளில்லை.

த. கொ. செ.—ஆகையால மென்ன? கர்வியைத் தான் நம்பக்கூடாது. சந்நிதானத்தில் உரைப்பதே உண்மை.

ஆ. ஸ்.—"தத்ஸ விதுர் வரேண்யம்."

த. கொ. செ.—அதன் பொருள் அடியேனுக்கு விளங்கச் சொல்லவேண்டும்.

பிற்பகல்—பழங்கள், பால்.

இரவு—நடுப்பகல்போல்; ஆனல் அன்னத்திற்குப் பதில் தோசை.

இரண்டு நாள் கழிந்தவுடன் செட்டி இன்னும் இரண்டு நாள் இருக்கச் சொன்னன். பிறகு இன்னும் இரண்டு நாள் இருக்கச் சொன்னன். இப்படியாகப் பல தினங்களாயின.

மதுரை மாணிக்கஞ் செட்டி—"தட்டிக்கொண்டானிடம் மானி அய்யனை அனுப்பினேனே, ஓரோலை கூட வரவில்லையே? என்ன செய்கிறனே தெரியவில்லையே" என்று யோசிக்கலானன்.

ஒரு நாள் மாலையில் தட்டிக்கொண்டான் செட்டியும் ஆருட ஸ்வாமியும் பேசிக்கொள்ளுகிறார்கள்.

செட்டி கேட்டான் :—"ஆனைக்கொரு காலம் வந்தால், பூனைக்கொரு காலம் வருமென்ற பழமொழியின் அர்த்தமென்ன?"

ஆருடஸ்வாமி சொல்லுகிறன் :— கஜவதனம்; ஆனை யென்பது விநாயகரைக் குறித்தாலும் குறிக்கலாம். அப்போது பூனைக்கிடமில்லை. பூனை இல்லையா? எலிவாஹனமோ இல்லையோ? அந்த எலிக்கு விநாதம் ஒரு பூனை இராதோ? அந்தப் பிள்ளையார் வீட்டு எலிக்கு ஒரு காலம் வந்தால் மேற்படி பூனைக்கு ஒரு காலம் வராதோ? இப்படியும் ஒரு அர்த்தம் சொல்லலாம்.

வேதாந்தமாகவும் பொருள் சொல்லலாம்; 'ஆணவமாவது மதம். பூணையாவது விவேகம். மதத்தின் காலம் போலவே விவேகத்தின் பெருமை விளங்கும்' என்பது நூணர்க்கம்.

இங்ஙனம் ஆருடஸ்வாமி சொல்வதைக் கேட்டுத் தட்டிக்கொண்டோன் செட்டி கேட்டான்:—

"மதமென்றால் சைவமும், வைஷ்ணவமும். அப்படியா?"

உடனே ஆருட ஸ்வாமி:—"ஹும்? ஹும்! ஹும்! அப்படியில்லை. காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் என்ற ஆறும் உட்பகை. இதிலே, ஐந்தாவதாகிய மதம். அதாவது கர்வம். மதம் பிடித்துப்போய் நடக்கிற குணம். அது தீர்ந்த பிறகுதான் விவேக மேற்படும்."

செட்டி கேட்டான்:—ஸ்வாமிகளே, என்னிடம் ஒரு கணக்குப் புஸ்தகம் இருக்கிறது. இருந்தது—நேற்று மாலையில் இருந்தது. இன்று பகல் பார்த்தேன்; காணவில்லை. அந்த விஷயம் வெளியே தெரியக்கூடாது. பகிரங்கமாகத் தேடக்கூடிய புஸ்தகமில்லை. இன்னார் எடுத்தனரென்று தெரியவில்லை. ஸ்வாமிதான் உத்தரவாக வேண்டும்" என்றான்.

அப்போது ஆருடஸ்வாமி:—"என்னை யக்ஷிணி திருவாரூருக்குக் கூப்பிடுகிறது. நான் இன்றிரவு புறப்பட்டுப்போய் நாளை மாலையில் அங்கிருந்து திரும்புவேன். வந்த பிறகு சொல்லுவேன்" என்றான்.

செட்டி—" தெய்வமே துணை " என்றான்.

சாமியார்—" குருவுந் துணை " என்றார்.

செட்டி—" எனக்கு நன்மை கிடைக்குமா ?"

சாமி—" கிடைக்கும்."

செட்டி—" என் துக்கம் தீருமா ?"

சாமி—" தீரும்."

செட்டி—" கணக்கு என் கைக்குத் திரும்பி வந்தால் நான் எந்த தருமத்துக்கும் அவ்விடத்தில் கட்டுப்பட்டிருப்பேன்."

சாமி—" செட்டியாரே, செட்டியாரே, நமக்கு நீர் எவ்விதமான தர்பமும் செய்ய வேண்டாம். உம் முடைய கடமையை நேரே கவனித்தால் அதுவே போதும்."

செட்டி—" என் கடமை யாது ?"

சாமி—இப்போது ஒரு ஸுலோகம் மாதிரியாகச் சொல்லிவிட்டுப் போகிறேன். திருவாரூருக்குப் போய் திரும்பி வந்தவுடனே அதை விளக்கிச் சொல்லுகிறேன். அதற்கு முந்தி உமக்கே பொருள் விளங்கி னாலும் விளங்கிப் போகும். அந்த ஸுலோகம் எப்படி என்றால் :—

ம மே ய ம ஏ

இவ்வளவுதான். இது ரகசியம். எழுதி வைத்துக்கொள்ளும். செட்டி அப்படியே ஒரு ஓலை நறுக்கில் எழுதி வைத்துக்கொண்டான்.

இரண்டு வாரங்களுக்கப்பால் தஞ்சாவூர்த் தட்டிக்கொண்டான் செட்டிக்குப் பின் வருமாறு ஒரு காகிதம் வந்தது.

மதுரையில் ஆருட ஸ்வாமி தஞ்சை த. கொ. செட்டியாருக்கு ஆசீர்வாதம்.

நான் தங்களிடம் சொல்லிய ஸுத்ரத்துக்குத் தாத்பர்யம் என்னவென்றால்,

"மற்றவனை யேமாற்றியவனை
மற்றவன் எமாற்றுவான்"

ரஸிகசிரோமணி என்ற கழுதை சொல்லுகிறது :—

"தட்டிக்கொண்டான் செட்டி மதுரை மாணிக்கஞ் செட்டியின் காலிலே போய் விழுந்து தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்டான். கஷ்டத் தொகையில் பாதி பெற்றுக்கொண்டு மாணிக்கஞ் செட்டி தனது மைத்துனனை மன்னித்து விட்டான். அவனுடைய இடத்தில், தனது தஞ்சாவூர் கார்யஸ்தனுக மானி அய்யனையே நியமனம் செய்தான். ஆரம்பத்தில் மானி அய்யனை உபயோகமில்லாதவனென் றெண்ணி நகைத்தது மடமை யென்பதை மாணிக்கஞ் செட்டி தெரிந்துகொண்டு தனக்குப் பார்ப்பான் செய்த உபகாரத்தையும் அவனுடைய திறமையையும் வியந்து அவனுக்குப் பலவிதமான ஸம்மானங்கள் செய்தான். அது போலவே, ஓ கருவம் பிடித்த மதுகண்டிகை யென்ற குயிற் பெண்ணே,

நீ இப்போது என்னை நகைக்கிறாய். இன்னும் சிறிது காலத்துக் கப்பால் என்னுடைய நிறமையைக் கண்டு நீயே ஆச்சரியப்படுவாய்" என்றது.

அது கேட்டு மதுகண்டிகை சொல்லலாயிற்று:—"கேளாய், ரஸிகமாமா, நீயோ தீராத பிடிவாதக்காரனை இருக்கிறாய். அலையைக் கட்டலாம்; காற்றை நிறுத்தலாம்; மனவுறுதி கொண்ட தீரனுடைய தீர்மானத்தை யாவராலும் தடுக்க முடியாது. உன்னிடமிருக்கும் இந்த மனவுறுதியைக் கண்டு உன்மேல் எனக்கு நட்புண்டாகிறது. அது நிற்க, இப்போது நான் உனக்கொரு ரஹஸ்யம் சொல்லுகிறேன். அதை ஸாவதானமாகக் கேள். ஸ்ரீயடிவாரத்திலுள்ள மந்தபுரம் என்ற கிராமத்தில் அரச மரத்தடியிலே ஒரு பிள்ளையார் கோயில் இருக்கிறது. நாள்தோறும் காலையொருமுறை மாலையொரு முறை அந்தக் கோயிலுக்குப் போய்த் தலையில் மூன்று குட்டுக் குட்டிக்கொள். மூன்று தோப்புக்கரணம் போடு. 'பிள்ளையாரே, பிள்ளையாரே, எனக்கு ஸங்கீத ஞானம் வேண்டும்' என்று கூவு. பாட்டு தானே வரும். இதற்கு யாதொரு குருவும் வேண்டியதில்லை" என்றது.

"உண்மைதானே?" என்று கழுதை சற்றே ஐயத்துடன் கேட்டது.

அதற்குக் குயில் சொல்லுகிறது:—"எனக்கு இந்த மாதிரிதான் ஸங்கீதம் வந்தது. எல்லாக் குயில்களுக்கும் இப்படித்தான். எங்கள் ஜாதியாருக்கு மாத்திரம்தான் இந்த ரஹஸ்யம் தெரியும். இதுவரை இதர ஜாதியாரிடம் சொல்லியதில்லை. நான் உன்னிடம் முன்ன அன்பினாலே சொன்னேன்" என்றது.

சரி யென்று சொல்லி, ரஸிகசிரோமணி தள்ளிக் குதித்துக்கொண்டு போய், மறு நாள் பொழுது விடிந்த வுடனே மந்தபுரத்துப் பிள்ளையார் கோவிலுக்கு முன்னே வந்து நின்று கொண்டு, குயில் சொன்ன கிரி யைகளெல்லாம் முடித்துக் கன்னுடைய பாஷையில் பாட்டு வர வேண்டுமென்று கூவத் தொடங்கிற்று. உடனே, கோயிலில் வந்து ப்ரதக்ஷிணம் முதலியன செய்துகொண்டிருந்த அடியார்கள் இந்த இரைச்சலைப் பொறுக்கமாட்டாமல் கழுதையைக் கல்லா லெறிந்து காலையொடித்துத் துரத்திவிட்டார்கள். ஆகலால், தனக்கு இயற்கையில் கிடைக்கக் கூடாத பொருளை விரும்பி எவனும் வீணாக கொள்ளலாகாதென்று விவேக சாஸ்திரி தனது மக்களிடம் கதை சொன்னார்.

அப்போது காளிதாஸன் என்ற பிள்ளை கேட் கிறான் :—

"கழுதைக்குத் தண்பம் சேரிடவேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடன் போதனை செய்த குயிலுக்கு ஒரு தண்டனையு மில்லையா?" என.

ஆஞ்சனேயன் என்ற மற்றொரு மகன்—"அப்பா, அந்தக் கழுதை ஸ்வாமியை வந்து கும்பிட்டதே; அதற்குத் தீங்கு வரலாமோ?" என்று கேட்டான்.

அதற்கு விவேக சாஸ்திரி சொல்லுகிறார் :—"தெய்வ பக்திக்கு நல்ல பயனுண்டு. ஆனால் அதனுடன் விவே கம் சேர்ந்திருக்க வேண்டும். விவேக மில்லாதவனு டைய தெய்வபக்திக்கு உறுதி கிடையாது. தெய்வத்தி னிடம் ஒருவன் வரங்கேட்கப் போகையிலே முதலா வது விவேகம் கேட்கவேண்டும். விவேகமே இந்த உல

கத்தில் எல்லாவித மான செல்வங்களுக்கும் ஆரம்பம். விவேகமில்லாதவன் குருடன். விவேகத்துடன் சேர்ந்த தெய்வ பக்தியே உண்மையானது. அவ்விதமான தெய்வ பக்தியிலும் ஒருவன் எடுத்த காரியத்தில் ஜயமடையலாம். இதைக் குறித்து ஒரு கதை சொல்லுகிறேன்" என்றார்.

"அந்தக் கதைக்குப் பெயரென்ன?" என்று பிள்ளைகள் கேட்டார்கள். "காட்டுக் கோபில்" என்று விவேக சாஸ்திரி சொன்னார்.

அப்போது காளிதாஸன்—"அப்பா, நான் கேட்டது சொல்லவில்லையே?" என்றான்.

ஆஞ்சனேயன்—"விவேக மில்லாதவன் தெய்வ பக்தி செய்தால், அதனால் அவனுக்குத் தீமைதான் விளையுமா?" என்று மறுபடி கேட்டான்.

அதற்கு விவேக சாஸ்திரி சொல்லுகிறார்:—"இதுவரை சொன்ன பகுதி 'பய னற்கல்' எனப்படும். இனிமேலே சொல்லப்போகிற பகுதிக்கு 'நம்பிக்கை' என்று பெயர். உங்களுடைய வினவிற்கு விடை கதை மூலமாகச் சொல்லாமல் நேரே சொல்லி விடுகிறேன். மூடனுக்கு ஸங்கட முண்டாக்கி வேடிக்கை பார்ப்பவன் பாவி. அவனுக்கு இந்த ஜன்மத்தில் பலவிதமான தீங்குகள் விளையும். விவேகமில்லாதவன் கூட தெய்வபக்தி செய்வதனால் அவனுக்கு நன்மை ஏற்படாமல் போய்விடாது. ஆரம்பத்திலே பலவித இடையூறுகளுண்டாய், அவற்றிலிருந்து கடைசியாக விவேகம் உண்டாகும். பிறகு தெய்வ பக்தி மேன்மையான பயன்களைத் தரும்" என்றார்.

இரண்டாம் பகுதி.

நம்பிக்கை.

காட்டுக்கோயிலின் கதை.

விவேக சாஸ்திரி தமது மக்களை நோக்கிச் சொல்லுகிறார் :—

முன்னொரு காலத்தில் பொன்னங்காடு என்ற பெருங்காட்டில் வீரவர்மன் என்னுரு சிங்கம் அரசு செலுத்திக்கொண்டு வருகையில், அதனிடத்துக்கு விகாரன் என்ற புறத்து நரியொன்று வந்து வணக்கம் செய்தது. "நீ யார்? உனக்கென்ன வேண்டும்?" என்று வீரவர்மன் கேட்டது.

அப்போது நரி சொல்லுகிறது—"என் பெயர் விகாரன். வடக்கே நெடுந்தூரத்திலுள்ள பேய்க்காடு என்ற வனத்தில் அரசு செலுத்தும் கண்டிராஜன் என்ற சிங்கத்தினிடம் எனது பிதா மந்திரியாக இருந்தார். அவர் காலஞ்சென்ற பிறகு, அந்த ஸ்தானத்தில் என்னை வைக்காமல், அவ்வரசன் தனது குணத்துக் கிணங்கியபடி கண்டகன் என்ற பெயர் கொண்ட கிழ ஓநாயை மந்திரியாகச் செய்து என்னைப் புறக்கணித்து விட்டான். 'மதியாதார் தலைவாசல் மிதிக்கவேண்டாம்' என்று வசன மிருப்பதால் நான் அந்த ராஜ்யத்தை விட்டுப் பல தேசங்களில் ஸஞ்சாரம் செய்து வருகையிலே, ஸந்தானத்தின் வீரச் செயல்களையும் தர்ம

குணங்களையும் கேள்விப்பட்டு, 'ஆஹா! வேலை செய்தால் இப்படிப்பட்ட சிங்கத்தினிட மன்றோ செய்ய வேண்டும்' என்ற ஆவல் கொண்டவனாய், ஸங்கீர்த்தனத்தைக் காரணம் செய்து நற்முடைய பிறப்பைப் பயனுடையதாகச் செய்துகொள்ள வேண்டு மென்ற நோக்கத்துடன் இங்கு வந்தேன். தம்மைக் கண்ட மாத்திரத்தில் எனது கவி நீங்கிவிட்டது" என்று சொல்லிற்று.

இதைக் கேட்டுச் சிங்கம் புன்னகை கொண்டு, சிறிது நேரம் யோசனை செய்துவிட்டு, "சரி, நீ நம் முடைய அரமனையில் சேவகம் செய்துகொண்டிரு" என்றுக்கினை செய்தது. மறு நாட் காலையில் வீரவர்மனிடம் அதன் கீழ் மந்திரியாகிய தந்திரசேனன் என்ற நரி வந்து சொல்லலாயிற்று:—

"அரசனே, நேற்றுத் தம்மிடம் விகாரன் என்ற பேய்க்காட்டு நரி வந்து பேசியதாகவும் அவனைத் தாம் அரமனை வேலையில் நியமித்துக் கொண்டதாகவும் கேள்விப் பட்டேன். என்னிடம் ஆலோசனை செய்யாமல் தாம் இந்தக் காரியம் செய்தது பற்றி நான் வருத்தப்படுகிறேன். ராஜ்ய நீதியில் சிறந்த ஞானமுடைய தாம் புறத்து நரியை, கன்னரசன் காரியத்தை நடத்தத் திறமையில்லாமலோ, துரோகத்தாலோ வெளிப்பட்டு வந்திருக்கும் நரியை, முன் சரித்திரம் தெரியாத நரியை, இத்தனை அவஸரப்பட்டு நம்பின செய்கையை நினைக்கும்போது, எனக்கு ஆச்சரிய முண்டாகிறது" என்றது.

இதைக் கேட்ட வீரவர்மன் நகைத்து 'நீர் சாஸ்த்ரத்தை நம்பிச் சொல்லுகிறீர். நான் தெய்வத்தை நம்பிச் செய்தேன்' என்றது. அப்போது தந்திரலோனன் என்ற கிழ நரி சொல்லுகிறது:—"என்ன சாஸ்த்ரத்தை நம்புகிறுமே, அவனே தெய்வத்தை நம்புகிறான். உலகத்தின் அனுபவமே தெய்வத்தின் வாக்கு. அனுபவத்தை ஆதாரமாகக்கொண்டது சரியான சாஸ்திரம். நான் லோகானுபவத்தை ஆதாரமாகக்கொண்டு சொல்லுகிறேன். இது தெய்வத்தால் ஏற்பட்டதே யன்றி வேறில்லை. ஆதலால், நான் சாஸ்த்ரத்தை நம்புவதாகவும், தாம் தெய்வத்தை நம்புவதாகவும், பேதப்படுத்திச் சொல்வதின் பொருள் எனக்கு விளங்கவில்லை" என்றது. சிங்கம் மறுமொழியே சொல்லவில்லை. சிறிது நேரம் சும்மாகாத்திருந்துவிட்டு, "மௌனம் ஸர்வார்த்த ஸாதகம்" என்றெண்ணிக் கிழ நரி விடை பெற்றுச் சென்றது. அப்போது சிங்கம் விகாரன் என்ற பேய்க்காட்டு நரியைத் தன் முன்னே அழைப்பித்துப் பின்வருமாறு கேட்டது:—

"விகாரா, தண்டிராஜன் உனது பிதாவின் ஸ்தானத்தில் உன்னை நியமிக்காமல், கண்டகனை நியமித்த காரணமென்ன? உன்னிடமிருந்த பிழை யென்ன?"

நரி சொல்லுகிறது—"என் பிரானே, நான் யாதொரு குற்றமும் செய்யவில்லை. ஒரு வேளை என் வயதுக் குறைவை எண்ணிச் செய்திருக்கலாம். மந்திரித் தொழிலுக்குக் கிழவனே தகுதி யென்று மதியில்லாத ராஜாக்கள் நினைக்கிறார்கள். மேலும்,

"நற்ரு மரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற் [போற்
கற்ரூரைக் கற்ரூரே காழுறுவர் - கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர், முதுகாட்டிற்
காக்கை யுகக்கும் பிணம்" என்றது.

அப்போது சிங்கம் "உங்களுடைய குலத்துராஜனுக்கும் எனக்கும் பகை யென்பதை நீ அறிவாயா?" என்று கேட்டது.

"அறிவேன்" என்று நரி சொல்லிற்று.

"கன்னரசனைக் கைவிட்டுப் பகை யரசனைச் சார்ந்து வாழ விரும்பும் மந்திரிக்குப் பெயர் தெரியுமா?" என்று வீரவர்மன் கேட்டது. "அவன் பெயர் துரோகி" என்று விகாரன் சொல்லிற்று. சிங்கம் நகைத்தது. "உன்னுடைய குலதெய்வத்தின் பெயரென்ன?" என்று சிங்கம் கேட்டது.

"காட்டுக்கோயில் மாகாளி" என்று நரி சொல்லிற்று. சிங்கத்தின் உடம்பில் நடுக்கமுண்டாயிற்று. உடனே 'ஹா' என்று கத்திச் சிங்கம் தனது கையை உயர்த்திக்கொண்டு சொல்லுகிறது.

"மூட நரியே! எது நேர்ந்தாலும் உன்னைக் கொல்லக் கூடாதென்று நேற்றே என் மனதில் தீர்மானம் செய்துகொண்டபடியால், இப்போதுன்னைக் கொல்லாமல் விடுகிறேன். என்னிடம் நீ பொய் சொல்லுகிறாயா? சொல் உண்மையை. உனது குல தெய்வத்தின் பெயரென்ன?" என்று உறுமிக் கேட்டது.

விகாரனென்ற நரி நடுங்கிப் போய்ப் பின்வருமாறு சொல்ல லாயிற்று.

நரி சொல்லுகிறது :—" ஐயனே, என்னுடைய பூர்வ குல தெய்வம் ஆகாவது; என்னுடைய முன்னேரும் நேற்றுவரை நானும் கும்பிட்டு வந்த தெய்வம் வேறு. அதன் பெயர் பேய்நாகன். அந்த தெய்வமே எங்கள் பேய்க்காட்டுக் காவல் நடத்தி வருகிறது. பேய்க்காட்டைச்சுற்றிய கண்டிராஜனுக்கும் அவனுடைய குடிகள் எல்லாருக்கும் அதுவே குலதெய்வம். பரம்பரை வழக்கத்தால் எனது பிறப்பு முதல் நேற்றுக் கங்களுடைய சந்நிதானத்தைக் காணம் பண்ணும் வரை நானும் பேய்நாகனையே குலதெய்வமாகக் கொண்டாடினேன். கண்டிராஜனுடன் மனஸ் தாபப்பட்டு வெளியேறின காலமுதலாக யாதொரு சரணுமில்லாமல் அலைந்த எனக்கு நேற்று இவ்விடத்து சந்நிதானத்தில் அபயங் கொடுத்தவுடனே, எனக்கு சந்நிதானமே அரசனும், குருவும், தெய்வமும் ஆகி விட்டபடியால், இவ்விடத்துக் குலதெய்வத்தின் பெயர் காட்டுக் கோயில் மாகாளி என்பதைத் தெரிந்து கொண்டு, அந்த மஹா சக்தியையே எனக்கும் குல தெய்வமாக வரித்துக்கொண்டேன்" என்றது.

இதைக் கேட்டு 'வீரவர்மன்' காடு குலுங்கும்படி கோப நகை நகைத்துச் சொல்லுகிறது :—

"இன்னும் பொய் சொல்லுகிறாய். உன்னை மீளவும் சோதிக்கிறேன். நேற்று உன்னைப் பார்த்தவுடனே கொல்ல நினைத்தேன். நீ சரணமென்று காலில் விழுந்த

படியால் துரோகி யொருவன் வஞ்சமாக அடைக்க லம் புகுந்தாலும், அவனைக் கொல்லாமல் விடுவது வீர ருக்கு லக்ஷணமென்று நினைத்து உன்னைக் கொல்வ தில்லை யென்று மனதில் நிர்ணயம் செய்து கொண் டேன். ஒரு வார்த்தை சொல்லுகிறேன் கேள். நீ கம்மிடம் உளவு பார்க்க வந்த ஒற்றன். அந்த மூடு மூடனுகிய கண்டிராஜன் உன்னை இங்கே அனுப்பி யிருக்கிறான். நான் இஷ்டப்படும் வரையில் இனி அவனுடைய முகத்தை நீ பார்க்கப் போவதில்லை. உன்னை நம்முடைய அரமனையில் வைத்துக்கொள் வேன். ஆனால் என்னுடைய அனுமதியின்றி நீ பொன் னங் காட்டை விட்டு வெளியேறக்கூடாது. அப்படி வெளியேற முயன்றால் உன்னுடைய நான்கு கால்களை யும் வெட்டிவிடச் செய்வேன், தெரிகிறதா?"

விகாரன்:—"ஐயனே, என் விஷயமாக ஸங்கி கானத்தினிடம் யாரோ பொய்க் கதை சொல்லியிருப்ப தாகத் தெரிகிறது. பொறுமையினாலே செய்திருக் கிறார்கள். எனக்கும் கண்டிராஜனுக்கும் விரோதமென் பதைத் தாங்கள் பேய்க்காட்டுக்கு அனுப்பி விசா ரித்துக்கொண்டு வரும்படி செய்யலாம். அங்கே யாரி டம் கேட்டாலும் சொல்லுவார்கள். இது பொய் வார்த்தை யில்லை. காரணம் நேற்றே தெரிவிக்க வில் லையா? என்னுடைய பிதா வகித்த மந்திரி ஸ்தானத்தை அவன் எனக்குக் கொடுக்காமல் அந்த ஓநாய்க்குக் கொடுத்தான். அதிலிருந்து விரோதம். என்னை ஒன் றும் செய்யவேண்டாம். எனக்குத் தாங்களே குரு,

காங்களே பிதா, காங்களை தெய்வம். கங்களைத் தவிர எனக்கு இப்போது வேறு கதியில்லை" என்றது.

அதற்கு வீரவர்மன்:—"சரி, இனிமேல் பொய் சொன்னால் அவசியம் கண்ணிரண்டையும் பிடுங்கி விடுவேன். சொல்லு, அந்த கண்டிராஜனிடம் சைனியங்கள் எவ்வளவிருக்கின்றன?"

விகாரன்:—" ராஜாதிராஜனே, நான் அந்தக் காட்டில் எவ்விதமான அதிகாரமும் வகிக்கப் பெறவில்லை. சைனிய உளவுகள் எனக்கெப்படித் தெரியும்?"

இதைக் கேட்டவுடனே சிங்கம் "யாரடா அங்கே சேவகன்?" என்று கர்ஜனை செய்தது. உடனே ஒரு ஓநாய் ஓடிவந்து பணிந்து நின்றது. அதை நோக்கி வீரவர்மன் "ஸேனாபதியை உடனே அழைத்து வா" என்று ஆக்கினை செய்தது. "உத்தரவுப்படி" என்று சொல்லி ஓநாய் வணங்கிச் சென்றது.

பிறகு வீரவர்மன் நரியை நோக்கிச் சொல்லுகிறது:—

"விகாரா, நமது ஸேனாபதியாகிய அக்னிகோபன் இன்னும் ஐந்து நிமிஷங்களுக்குள் இங்கே வந்து விடுவான். அவன் வருமுன்பு நான் கேட்கிற கேள்விகளுக்கு நீ தவறாமல் உண்மை சொல்லக் கடவாய். இதோ என் முகத்தைப் பார்" என்றது.

நரி குடல் நடுங்கிப் போய்ச் சிங்கத்தின் முகத்தைச் சற்றே நிமிர்ந்து பார்த்தது. இனிமேல் இந்தச் சிங்கத்தினிடம் பொய் சொன்னால் உயிர்மிஞ்சாதென்று நரிக்கு நல்ல நிச்சயம் ஏற்பட்டு விட்டது.

பிறகு நரி சொல்லுகிறது:—

"ஸ்வாமி, நான் சொல்லுகிற கணக்குக் கவற்ற லும் கவறக்கூடும். எனக்குக் கிரிந்கவரையில் உண்மை சொல்லிவிடுகிறேன். எனக்கு எவ்விக கண்டனையும் விதிக்க வேண்டாம். எனக்கு உங்களுடைய பாகமே துணை"—என்றது.

வீரவர்மன்:—"பேய்க்காட்டு சைனியம் எவ் வளவு? உடனே சொல்லு, உண்மை சொல்லு."

விகாரன்:—"புலிப்படை முந்நூறு. காடி இரு நூறு, காண்டாமிருகம் நூறு, ஓநாய் ஆயிரம், ஆனைப் படை ஆயிரம், நரிப்படை நாலாயிரம்."

வீரவர்மன்:—"உளவு பார்த்து வரும் காக்கை கள் எத்தனை?"

விகார:—"இருநூற்றைம்பது."

வீர:—"சுமை தூக்கும் ஒட்டகை எத்தனை? கழுதை எத்தனை?"

விகார:—"ஒட்டகை எண்ணூறு. கழுதை பதி னாயிரம்."

வீர:—"எத்தனை நாள் உணவு சேகரித்து வைக் கிருக்கிறான்?"

விகார:—"நூறுநாளுக்கு."

வீர:—"கண் பத்திரம்."

விகார:—"ஸத்யம் சொல்லுகிறேன்; நூறுநாளுக்கு."

இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் வேணுபதி யாகிய அக்நிகோபன் என்ற வேங்கைப்புலி வந்து கும்பிட்டு நின்றது.

"வருக" என்றது சிங்கம்.

அப்போது விகாரன் என்ற நரி தன் மனதுக் குள்ளே யோசனை பண்ணிக்கொள்ளுகிறது :—

"ஹூம்! இந்தச் சிங்காராஜன் மஹா வீரனுகவும், மஹா கோபியாகவும் இருந்தாலும் நாம் நினைத்தபடி அதனை புத்திசாலி யில்லை. நம்மை எதிரியின் ஒற்ற னென்று தெரிந்துகொண்ட பிறகும் நம்மை வைத்துக் கொண்டு சேனைபதியிடம் யுத்த விசாரணை செய்யப் போகிறன். ஏதேனும், ஒரு யதிர்ச்சா வசத்தால் இவனுடைய காவலிலிருந்து நாம் தப்பி யோடும்படி சேரிட்டால், பிறகு இவனுடைய யுத்த மர்மங்களை நாம் தண்டிராஜனிடம் சொல்லக்கூடு மென்பதை இவன் யோசிக்கவில்லை. இவனுக்கு தீர்க்காலோசனை போதாது."

இங்ஙனம், நரி பலவாறு சிந்தனை செய்யுமிடையே, வாயிற் காப்பாளுகிய ஓநாய் ஓடிவந்து "மஹாராஜா, புரோஹிதர் வந்திருக்கிறார்" என்றது. "உள்ளே வரச்சொல்லு" என்று வீரவர்மன் கட்டளை யிட்டது. அப்பால், அங்கிரன் என்ற பெயர் கொண்டதும், வீர வர்மனுடைய குலத்துக்குப் பரம்பரையாகப் புரோ ஹிதஞ் செய்யும் வமிசத்தில் பிறந்ததும், பெரிய மதி வலிமை கொண்டதுமாகிய கிழப்பருந்து பறந்து வந்து சிங்கத்தின் முன்னே வீற்றிருந்தது. சிங்கம் எழுந்து வணங்கிற்று. சிறிது நேரம் உபசார வார்த்தைகள் சொல்லிக்கொண்ட பிறகு புரோஹிதப் பருந்து சிங்கத்தை நோக்கி :—

"அந்த நரி தான் பேய்க்காட்டு விகாரனே?" என்று கேட்டது. சிங்கம் ஆம் என்றது. நரி திரு டன் போலே விழித்தது. அப்போது சிங்கம் சொல்லு கிறது:—"ஸ்வாமி, இந்த நரியை நான் நயத்தாலும் பயத்தாலும் எனது பக்கம் சேரும்படி சொல்லி விட் டேன். இவன் தண்டிராஜனிட மிருந்த அன்பை நீக்கி என்னளாகி விட்டான். இவனை நான் இப்போது நம்முடைய மந்திர சபையில் இருக்க இடங்கொடுத்த தினாலேயே நான் இவனிடம் பரிபூர்ண நம்பிக்கை கொண்டிருக்கிறேன் என்பதைத் தாங்கள் தெரிந்து கொள்ளலாம். இவனுடைய பழைய நினைப்பை மறந்து இப்போது தண்டிராஜனுடைய உளவுகளை நமக்குத் தெரிவிக்கும் தொழிலில் அமர்ந்திருக்கிறான். அதனாலே தான் நமது சபையில் இவனைச் சேர்க்கும் படியாகிறது" என்றது.

பருந்து புன்னகை செய்தது. ஒன்றும் சொல்ல வில்லை. அப்போது சிங்கம் கேட்கிறது:—

"ஸ்வாமி, ஒருவன் எதிர்பார்க்காத காரியத்தில் எதிர்பார்க்காதபடி ஆச்சரியமான வெற்றியடைய வேண்டுமானால் அதற்கு வழியென்ன?" என்றது.

அப்போது அங்கிரன் என்ற புரோஹிதப் பருந்து சொல்லுகிறது:—

"அரசனே, மந்திர சபையில் எதிர்பார்க்காத கேள்வி கேட்டாய். உனக்கு நான் மறுமொழி சொல்ல வேண்டுமானால், அதற்கு நீண்ட கதை சொல்லும்படி நேரிடும். மந்த்ராலோசன சபையில்

முக்யமான காரியத்தை விட்டுப் புரோஹிதனிடம் கதை கேட்க வேண்டுமென்ற சித்தம் உனக்குண்டானால் நான் சொல்வதில் ஆக்ஷேபமில்லை. நேரம் அதிகப்படும். அதுகொண்டு என்னிடம் கோபம் வரக்கூடாது" என்றது. அப்போது சிங்கம் ஒரு துளி சிரிப்போடு சொல்லுகிறது:—"மந்திரசபை பின்னாலே தள்ளி வைத்துக்கொண்டோம். இப்போது கதை நடக்குக" என்றது. உடனே, புரோஹிதனுகிய அங்கிரன் என்ற பருந்து சொல்லுகிறது.

தின்னன் என்ற மறவன் கதை.

கேளாய் ராஜகேஸரியாகிய வீரவர்மனே, முன்னொரு காலத்தில் மதுரையிலே விக்ரம பாண்டியன் அரசு செலுத்தியபோது காலாட்படையிலே தின்னன் என்றொரு மறவன் இருந்தான். அவன் ஒரு நாள் மாலையில் அரமனைப் பக்கமாக நடந்து போகையில் உச்சி மாடத்தின் மேலே பாண்டியன் மகளாகிய தர்மலக்ஷ்மி என்ற பெண் பந்தாடிக்கொண்டிருந்ததைக் கண்டு மிகவும் காதல் கொண்டவனைப் அவளை மணம் செய்துகொள்ள வேண்டுமென்று விரும்பினான். அப்பால் அவன் ஒரு சோதிட சாஸ்திரியினிடம் போய், 'ஒருவன் ராஜாவின் மகளை மணம் செய்துகொள்ள விரும்பினால் அதற்கு எவ்விதமான பூஜை நடத்த வேண்டும்?' என்று கேட்டான்.

'நீயார்? உனக்கென்ன தொழில்?' என்று சோதிடன் கேட்டான்.

"நான் காலாட்படை மறவன். என் பெயர் நிண்ணான்" என்று இவன் சொன்னான்.

இதைக் கேட்டவுடன் சோதிடன் "என்னிடம் கேட்காதே ஓடிப் போ" என்று சொல்லித் துரத்தி விட்டான். பிறகு நிண்ணான் பீரங்கியம்மன் கோயில் பூஜை செய்யும் குருக்கள் ஒருவரிடம் போய்க் கேட்டான். அந்தக் குருக்க என்ன செய்தார்? "அப்பா! நீ இன்னும் ஒரு வருஷம் கழித்த பிறகு என்னிடம் வந்து இதைக் கேள். அப்போது மறு மொழி சொல்லுகிறேன். அதுவரை சொல்ல முடியாது" என்று போக்குச் சொல்லி அனுப்பிவிட்டார். பிறகு நிண்ணான் ஒரு மந்திரவாதியிடம் போய்க் கேட்டான். அந்த மந்திரவாதி சொல்லுகிறான்:—"தம்பி, பதிறை பொன் கொண்டுவந்து கொடு. நான் ஒரு பூஜை நடத்தி முடித்து உன்னுடைய மனோரதம் நிறைவேறும்படி செய்விக்கிறேன்" என்றான்.

நிண்ணான் திரும்பிப் போய்விட்டான். அவனிடம் பதிறை வெள்ளிக்காசு கூடக் கிடையாது. அவன் ஏழைப்பிள்ளை. இதன் பிறகு 'யாரைப் போய்க் கேட்கலா' மென்று யோசனை செய்து பார்த்தான். "சே சே, ராஜாவின் மகளையே கேட்டு விட்டா லென்ன?" என்று அவன் புத்தியில் ஒரு யோசனை யேற்பட்டது. "சரி. அப்படியே செய்வோம்" என்று தீர்மானம் பண்ணிக்கொண்டான். அவனுக்குப் பக்கத்து வீட்டிலிருந்த ஒரு பூவாணிச்சியின் மகள் நாள் தோறும் அரமனைக்கு மாலை கட்டிக்கொண்டு கொடுத்து வருவது வழக்கம். அந்தப் பெண் தின்

னனுக்கு நெடுநாளாகப் பழக்கமுண்டு. இவன் என்ன சொன்னபோதிலும் அந்தப் பெண் கேட்பாள். ஆதலால், இவன் ஒரு சிறிய நறுக்கோலையில்,

"மன்னன் மகளே, காலாள் மறவன்
என்ன செய்தால், உன்னைப் பெறலாம்?"

என்ற வாக்கியத்தை எழுதி, அந்த நறுக்கோலையை மிகவும் அழகான ஒரு பூமாலைக்குள் நுழைத்து வைத்து, அந்தப் பூவாணிச்சிப் பெண்ணிடம் கொடுத்து "நீ இதை அரசன் மகள் முன்னாலே கொண்டு போய் ஒருதரம் உதறிவிட்டு மாலையை அவளிடம் கொடு" என்று சொல்லியனுப்பினான். அவளும் அப்படியே பூமாலையைக் கொண்டு ராஜகுமாரியின் முன்னே ஒரு தரம் உதறிய பின்பு, அதைக் கொடுத்து விட்டுத் திரும்பி வீடுவந்து சேர்ந்தாள். ராஜகுமாரி அந்த நறுக்கோலை கீழே விழுந்து கிடப்பதைக் கண்டு அதை யெடுத்து வாசித்தாள் :—

"மன்னன் மகளே, காலாள் மறவன்
என்ன செய்தால் உன்னைப் பெறலாம்?"

அங்கிரன் என்ற புரோஹிதப் பருந்து சொல்லுகிறது :—

கேளாய் வீரவர்மராஜனே, அந்தப் பூவாணிச்சிப் பெண் மாலையை உதறினபோது நறுக்கோலை கீழே விழுவதை ராஜகுமாரி பார்த்தாள். பூவாணிச்சிப் பெண் அரண்மனையிலிருந்து தன் வீட்டுக்குத் திரும்பிப் போனவுடனே திண்ணன் அவளைக் கண்டு "ராஜகுமாரியிடம் மாலையைக் கொடுத்தாயா?" என்று

கேட்டான். ஆ மென்றாள். "உறங்ணையா?" என்று கேட்டான். "செய்தேன்" என்றாள். சரி யென்று சொல்லிப் போய்விட்டான். மறுநாட் காலையில் பூவாணிச்சிப் பெண் வழக்கம்போலே அரமனைக்கு மாலை கொண்டு போனாள். அப்போது ராஜகுமாரி அந்தப் பெண்ணிடம் ஒரு நறுக்கோலையைக் கொடுத்து நேற்று உன்னிடம் மாலை கொண்டு தந்த காலாள் மறவனிடம் இதைக் கொண்டு கொடு என்றாள்.

பூவாணிச்சிப் பெண் திகைத்துப் போய்விட்டாள். "பயப்படாதே; கொண்டுபோ" என்று ராஜகுமாரி சொன்னாள். பூவாணிச்சிப் பெண் நறுக்கோலையைக் கொண்டு தின்னனிடம் கொடுத்தாள். அவன் வாசித்துப் பார்த்தான். அதிலே "தெய்வமுண்டு" என்றெழுதி யிருந்தது. பின்னொரு நாள் தின்னன் தனியே யிருந்து யோசிக்கிறான்:—

"இந்த அரசன் மகள் நம்மைப் பரிஹாஸம் பண்ணமாட்டாள். ஏதோ நல்ல வழிதான் காட்டி யிருக்கிறாள். தெய்வத்தை நம்பினால் பயன் கிடைக்கு மென்று சொல்லுகிறாள். சரி, அப்படியே நம்புவோம், ...அந்தக் காலத்தில் தெய்வம் தவம் பண்ணு வோருக்கு நேரே வந்து வரம் கொடுத்த தென்று சொல்லுகிறார்கள். இந்த நாளில் அப்படி நடப்பதைக் காணோம்.....அடா போ! பழைய காலமேது? புதிய காலமேது? தெய்வம் எந்தக் காலத்திலும் உண்டு. தெய்வத்தைக் குறித்துத் தவம் பண்ணு வோம். வழி கிடைக்கும்" என்று சொல்லி ஒரு காட்டுக்குப் போய், அங்கே காய் கனிகளைத் தின்று சுனை

நீரைக் குடித்துக்கொண்டு தியானத்திலே நாள் கடத்திணன். அந்தக் காட்டில் இவனுக்கும் ஒரு வேடனுக்கும் பழக்கமுண்டாயிற்று. அந்த வேடன் இவனுடைய தவப்பெருமையையும், இவன் முகவொளியையும் கண்டு, இவனிடம் மிகுந்த பிரியங் கொண்டவனாய் இவனுக்கு மிகவும் சுவையுடைய தேனும் கிழங்குகளும் கொண்டு கொடுப்பான். இவன் வேடனுக்கு தெய்வ பக்தி யேற்படுத்தினன். ஒரு நாள் அந்த வேடன் இவனிடம் ஒரு மூலிகை கொண்டு கொடுத்து, "இது மிகவும் ரஹஸ்யமான மூலிகை. இதைப் பத்திரமாக வைத்துக்கொள்ளு. ஒருவனுடம்பில் எத்தனை பெரிய புண் இருந்தாலும், இந்த மூலிகையில் ஒரு தினையளவு அரைத்துப் பூசினால், புண் இரண்டு ஜாமத்துக்குள் ஆறிப்போய் விடும்" என்னுன். அதை இவன் பத்திரமாக வைத்துக்கொண்டான். திண்ணன் குடியிருந்த பர்ணசாலைக்கருகே ஒரு பாம்புப் புற்றிருந்தது. அதில் கிழ நாக மொன்று வசித்தது. அதை ஒரு நாள் வேடன் கண்டு கொல்லப்போனன். அப்போது திண்ணன்:—"ஐயோ பாவம்! கிழப் பாம்பு. அதைக் கொல்லாதே. அது நெடு நாளாக இங்கிருக்கிறது. என்னை ஒன்றும் செய்வதில்லை. அதன் வழிக்குப் போகாதே" என்று சொல்லித் தடுத்து விட்டான். பின்னொரு நாள் அந்தப் பாம்பு தனியே செத்துக் கிடந்தது. அந்தப் பாம்பு சாகும்போது ஏன்னதோ வேறென்ன விநோதமோ—அந்தப் பாம்புக் கருகே ஒரு பெரிய ரத்தினம் கிடந்தது. அதை நாகரத்தின மென்று திண்ணன் பத்திரப்

படுத்தி வைத்துக் கொண்டான்; அன்றிரவிலே திண்ணன் ஒரு கனவு கண்டான். அதில் அவனுடைய இஷ்ட தேவதையாகிய மீனாக்ஷியம்மை தோன்றி "உனது தவத்தால் மகிழ்ந்து உனக்கு நாகராஜ்னம் கொடுக்கிறேன். இதைக் கொண்டுபோய் ஸௌக்யமாக வாழ்ந்துகொண்டிரு" என்றாள். திண்ணன் அந்தக் கனவை நம்பவில்லை.

"நம்முடைய நினைவிலேயே இந்தக் கனவுண்டாயிருக்கிறது. தெய்வமாக இருந்தால், ராஜகுமாரி வேண்டுமென்று தவஞ்செய்ய வந்தவனிடம் நாகராஜ்னத்தைக் கொடுத்து வீட்டுக்குப் போகச் சொல்லுமா? செய்யாது. ஆதலால் இந்தக் கனவு தெய்வச் செய்கை யன்று, நம்முடைய மனதின் செய்கை" என்று நிர்மானம் செய்து, அந்தக் காட்டிலேயே எப்போதும் போலே தவஞ் செய்துகொண்டிருந்தான்.

பிறகொரு நாள், அந்தக் காட்டில் விக்ரம பாண்டியன் வேட்டைக்கு வந்தான். அவன் திண்ணனைக் கண்டு "நீர் யார்? இந்த வனத்தில் எத்தனை காலமாகத் தவம் செய்கிறீர்?" என்று கேட்டான். அப்போது திண்ணன் சொல்லுகிறான்:—

"நான் பாண்டி நாட்டு மறவன். என் பெயர் திண்ணன். இங்கு பல வருஷங்களாகத் தவஞ் செய்கிறேன். காலக் கணக்கு மறந்துபோய் விட்டது" என்றான்.

"என்னைத் தெரியுமா? நான் பாண்டிய நாட்டரசன்" என்று பாண்டியன் சொன்னான்.

"தெரியும்" என்று திண்ணன் சொன்னான்.

அரசன் இந்த மறவனுடைய அழகையும், ஒளியையும் கண்டு வியந்து :—

"இந்த இளமைப் பிராயத்தில் இவ்வனத்திலே என்ன கருத்துடன் தவம் செய்கிறீர்?" என்று கேட்டான்.

"மதுரை யரசன் மகளை மணம் செய்யவேண்டித் தவம் செய்கிறேன்" என்று திண்ணன் சொன்னான்.

அரசன் திகைப்படைந்து போய், "எங்ஙனம் கைகூடும்! அம்மவோ" என்றான்.

"மீனாக்ஷி கேட்ட வரம் கொடுப்பாள்" என்று திண்ணன் சொன்னான். "மன்னன் மகளுக்கு நீ என்ன பரிசம் கொடுப்பாய்?" என்று பாண்டியன் கேட்டான்.

"புண்ணைத் தீர்க்க மூலிகையும், மண்ணைச் சேர்க்க நாகரத்தினமும் கொடுப்பேன்" என்று திண்ணன் சொன்னான்.

அரசன் அவ்விரண்டையும் காட்டும்படி சொன்னன். திண்ணன் காட்டினான். வேட்டையிலே புண்பட்ட மானுக்கு அந்த மூலிகையை அரைத்துப் பூசினர்கள். உடனே புண் தீர்ந்துவிட்டது.

இந்தத் திண்ணனுடைய தவப்பெருமையும், அதனிலே கைகூடிய தெய்வ அருளும் அவன் முகத்திலும், விழியிலும், சொல்லிலும், செய்கையிலும் விளங்குவது கண்டு பாண்டியன் மனமகிழ்ச்சியுடன், அவனுக்கே தனது மகளை மணஞ்செய்து கொடுத்தான். ஆதலால், எதிர்பார்க்க முடியாத பயன் உலகத்

தார் கண்டு வியக்கும் வண்ணமாக ஒருவனுக்குக் கை கூட வேண்டுமானால் அதற்கு தெய்வ பக்தியே உபாயம்" என்று பருந்து சொல்லிற்று.

அப்போது அந்த சபையிலே லைறைபதி அக்னி கோபன் மகனாகிய ரணகுமாரன் என்ற இளம்புலியும், தந்திரலேனன் மகன் உபாயவஜ்ரன் என்ற நரியும், வேறு பல புலி, நரிகளும், தம்முடன் உடம்பு முழு தும் புண்பட்டு இரத்தம் ஒழுகிக்கொண்டிருந்த சிங்க மொன்றை இழுத்துக்கொண்டு ராஜ சபையில் உத் தரவு பெற்றுக்கொண்டு வந்து வணங்கி நின்றன.

அந்தப் புண்பட்ட, கைதிச் சிங்கம் யாரென்றால், அதுதான் பேய்க்காட் டரசனாகிய தண்டிராஜன்!

இந்த ஆச்சரிய வினைவைக் கண்டு வீரவர்மன் புன்னகை செய்தது. விகாரன் என்ற பேய்க்காட்டு நரி மூர்ச்சை போட்டு விழுந்தது. புரோஹிதர், லைறை பதிகள் வீரவர்மனை வாழ்த்தி அவனுடைய சத்ரு இத் தனை நாளாகக் கைதிப்பட்டு வந்த மகிழ்ச்சியை விழியி னலே தெரிவித்தனர்.

உபாயவஜ்ரன் என்ற நரியின் திறமை.

அப்போது வீரவர்மன் ரணகுமாரனையும் அவன் தந்தையாகிய லைறைபதி அக்னிகோபனையும் நோக்கி மிகவும் மகிழ்ச்சி பாராட்டி ரணகுமாரனுக்குப் பதவியும் பட்டமும் மேம்படச் செய்தது. பிறகு உபாயவஜ்ரனை நோக்கிப் "பிள்ளாய்; இனிமேல் நீயும் நமது சபைபில் ஒரு மந்திரியாகக் கடவாய்" என்றது.

அங்கு மேலெல்லாம் இரத்தமொழுக, ஒரு கண் ணிலும் இரத்தம் வழியத் தலை கவிழ்ந்து நின்ற தண்டி ராஜனுக்கு உபசார வார்த்தைகள் சொல்லி, உள்ளே அனுப்பி ராஜவைத்யர் மூலமாகச் சிகிச்சை செய்விக் கும்படி ராஜாக்கினை பிறந்தது.

அப்பால் வீரவர்மன் :—

"உபாயவஜ்ரா, நீ புறப்பட்டது முதல், தண்டி ராஜனுடன் நமது சபை முன்பு தோன்றிய காலம் வரை நடந்த விருத்தாந்தங்களை யெல்லாம் ஒன்று விடாதபடி சொல்லு" என்றது.

உபாயவஜ்ரன் ராஜ சபையில் விஞ்ஞாபனம் செய்கிறது—

"சக்திவேல் ராஜசுவரா! பொன்னங்காட்டி லிருந்து புறப்பட்டு நாகமலைக்குப் போகும் வரை விசேஷமொன்றும் நடக்கவில்லை. அங்கு காசுக் குகை யில் ரணகுமாரர் தமது பரிவாரங்களுடன் இருப் பதைக் கண்டேன். ராஜாக்கினை இப்படி யென்று தெரிவித்தேன். அவர் தமக்கும் அவ்விதமாகவே உத் தரவு கிடைத்திருப்பதாகச் சொல்லி வழித்துணைக்கு யார் யார் வேண்டுமென்று கேட்டார். குடிலப்பன் என்ற குள்ள நரியையும், விளக்கண்ணன் என்ற வேட்டை நாயையும், தொளைச்சாண்டி என்ற மூஞ் சூற்றையும், கிழக்கரியன் என்ற காக்கையையும் அழைத்துக்கொண்டு போனேன்.

கோவிந்த நாம சங்கீர்த்தனக் கூட்டம்.

அப்போது வீரவர்மன் தனது சபையில் வந்து நின்று மேற்படி நால்வரையும் கடைக்கண்ணால் நோக்கிப் புன்னகை செய்தது.

உபாயவஜ்ரன் சொல்லுகிறது:—நான் அந்த நால்வரையும் கொண்டுபோய், ஓரிடத்திலே நிறுத்திக் கொண்டு, "விளக்கண்ணு, நொளைச்சாண்டி, குடிலப்பா, கிழக்காரியா, நீங்கள் நாலு பேரும் சிஷ்யராகவும், நான் குருவாகவும் வேஷம் போட்டுக்கொள்ள வேண்டும்" என்றேன். அந்தப்படி வேஷம் தரித்துக்கொண்டோம். கோவிந்த நாம ஸங்கீர்த்தனைக் கூட்டமாகப் புறப்பட்டோம். பொது எல்லையில் நதியில் ஸ்நானம் பண்ணி ஸந்த்யாவந்தனாதிகளை முடித்துக் கொண்டோம். 'கோவிந்த நாம ஸங்கீர்த்தனம்!' என்று நான் கத்துவேன்.

"கோவிந்தா! கோவிந்தா!" என்று சிஷ்யர் நால்வரும் கத்துவார்கள். கையிலே ஆளுக்கொரு தம்பூர், கோவிந்த நாம ஸங்கீர்த்தனம் பண்ணிக்கொண்டே எதிரி யெல்லைக்குள் பிரவேசித்தோம். நாகாலையில், குடியன் கோயிலுக்குப் பக்கத்திலே வேதிகை கட்டிக் கரடிச்சாத்தான் ஹோமம் வளர்க்கும் யாகசாலைக்குப் போய்ச் சேர்ந்தோம். பகல் முழுதும் நாங்கள் கோவிந்த நாமத்தை விடவேயில்லை. கிழக்காரியனுக்குத் தொல்லை கட்டிவிட்டது. எங்களைக் கண்டவுடனே கரடிச்சாத்தான் 'வாருங்கள் வாருங்கள்' என்று உபசாரம் சொல்லிப் பக்கத்திலிருந்த யாக

கோஷ்டியாரிடம் அடியேனைக் காட்டி "இவர் பெரிய பாகவதர். துளஸீதாஸ், கபீர்தாஸ் அவர்களுடைய காலத்துக்குப் பிறகு இவரைப்போலே பக்தர் யாரும் கிடையாது"[1] என்று சொல்லிற்று.

மாலையில் யாககோஷ்டி கலைந்து விட்டது.

சூனியக் குகையில் மந்திராலோசனை.

உபாயவஜ்ரன் தெரிவித்துக் கொள்ளுகிறது:—

"பிறகு நள்ளிரவில், காரிருள் நேரத்திலே நானும் காடிச்சாத்தானுமாக நாகமலையிலுள்ள சூனியக்குகையில் போய் இருந்துகொண்டு ஆலோசனை செய்யலாமேம். எடுத்தவுடனே சாத்தான் தகஷிணை விஷயம் பேசினான். கையிலே கொண்டுபோயிருந்த வஸ்துவை அவன் மடியில் வைத்தேன். அதை உடனே ஒரு பொந்துக்குள்ளே சென்று நுழைத்து வைத்துவிட்டு என்னிடம் திரும்பி வந்தான். பிறகு கொஞ்சம் பிணங்கத் தொடங்கினான். "துஷ்டநிக்ரஹத்திலே கூட ஒரு வைப்பு வரம்பிருக்க வேண்டும். ஸ்வாமித் துரோகம் செய்யலாகாது. வீட்டுமனும், துரோணனும் உள்ளத்தில் பாண்டவரை உகந்தாலும், உயிரைத் துரியோதனனுக்காக இழந்தனர். ஆகலால் தண்டிராஜனுடைய சரீரத்துக்கு ஹானி வராதபடி என்னுலாகவேண்டிய உதவியைக் கேட்டால் நான் செய்வேன்" என்றான்.

"தண்டிராஜனை எங்கள் நாகமலையிலுள்ள காசுக் குகையிலே கொண்டு சேர்ப்பிக்கவேண்டும்" என்றேன்.

"சீச்சீ! கோழைகளா!" என்றான்.

வாளை உருவினேன்.

கும்பிட்டு மன்னிக்கும்படி கேட்டான். பிறகு "அந்தக் காரியம் செய்யமாட்டேன்" என்று உறுதியாகச் சொல்லிவிட்டான்.

"தோமத்துக்கு வருவானே?" என்று கேட்டேன். "வருவான்" என்றான்.

"உடன் வரும் படை எத்தனை?" என்று கேட்டேன்.

"பரிவாரமாகப் பத்துப் பன்னிரண்டு புலி நாய்கள் வரும். படை வராது" என்றான்.

"என்னுடன் சிநேகப்படுத்தி வைப்பாயா?" என்று கேட்டேன்.

"செய்கிறேன்" என்றான்.

"கோள் வார்த்தை எதனும் கண்டிராஜன் செவியில் எட்டுவதாக இருந்தால் உனக்கு உயிர்ச் சேதம் நேரிடும்" என்றேன். 'தகுதியே, தகுதியே' யென்று முணுமுணுத்தான்.

"நானும் கண்டிராஜனும் தனியிடத்தே பேசும்படி நீ செய்வித்தவுடன் உனக்குத் தந்தில் மும் மடங்கு தரப்படும்" என்றேன்.

இங்ஙனம் பேசிக்கொண்டிருக்கையிலே திடீரென்று ஏதோ யோசனை பண்ணி என்னை மூச்சைப் பிடித்துக் கொல்லத் தொடங்கினான். நான் அவனுடைய அடிவயிற்றிலே எனது பிடிவாளை மூன்றங்குல ஆழம் அழுத்தினேன். கோ வென்று கூவிக் கைகளை நெகிழ்த்துக் கொண்டான். நானும் வாளை உருவிக்

கொண்டேன்.

உடனே மன்னிணப் பிருண்டி வயிற்றிலே திணித்து இரத்த மொழுகாதபடி அடைத்துக் கொண்டு, என்னிடம் திரும்பி வந்து,

"இதென்ன தம்பி? முத்தமிட வந்தால் அடி வயிற்றில் வாளைக்கொண்டு குத்தினீரே? நியாயமா?" என்று கேட்டான்.

"கை தெரியாமல் பட்டு விட்டது. மூன்று லக்ஷத்து முப்பது தரம் மன்னித்துக்கொள்ள வேண்டும்" என்றேன்.

அன்றிரவு மந்திராலோசனையை இவ்வளவுடன் நிறுத்திக்கொண்டு குடியன் கோயிலுக்கருகே கரடிச் சாத்தானுடைய யாகசாலைக்குத் திரும்பிவந்து சேர்ந் தோம். மறுநாள் பொழுது விடிந்தது.

உபாயவஜ்ரன் என்ற நரியின் திறமைகள்.

சக்திவேல்! வீரவர்ம ராஜனே, நானும் அந்தக் கரடிச்சாத்தானும் சூளியக் குகையில் வாய்ச் சண்டை கைச்சண்டையாகிப் பிறகு ஸமாதானப்பட்டு அன் றிரவு அங்கிருந்து வெளிப்பட்டுக் குடியன் கோயிலுக் கருகே கரடிச்சாத்தான் வளர்க்கும் ஹோமசாலைக்குத் திரும்பி வந்து, கொஞ்சம் நித்திரை செய்தோம். மறுநாள் பொழுது விடிந்தது. தண்டிராஜன் தனது சைனியத்துடன் நாகமலைப் பாகத்துக்கு வந்துவிட் டான். கரடிச்சாத்தானைத் தனது கூடாரத்துக்குத் தருவித்தான். இவனும் அவனும் சம்பாஷணை செய்து கொண்டிருக்கையிலே என்னை அழைப்பித்தார்கள்.

நான் அங்கே போகு முன்பு ரணகுமாரனிடம் சொல்ல வேண்டிய விஷயங்களைச் சொல்லித் திட்டப்படுத்தி விட்டுத் தண்டிராஜன் முன்னே சென்றேன். கரடிச் சாத்தானிடம் ஒரு மோதிரத்தைக் காண்பித்தேன். அவன் தனக்கு தாகவிடாய் தீர்த்துவர வேண்டு மென்று மூகாந்தரம் சொல்லி வெளியே போனான். நானும் தண்டிராஜனும் தனியே இருந்தோம். நமஸ் காரம் பண்ணினேன். "யார் நீ?" என்று கேட்டான். "விகாரனுடைய குமாரன். என் பெயர் உபாய வஜ் ரன். விகார மாமா சொன்னார். அவர் உத்திரவின் படி இங்கு வந்தேன்."

"நாகமலையில் காசுக்குகையில், தங்கக்காசு மகா ரிஷி என்ற சித்தர் இருக்கிறார். அவர் கல்லைப் பொன் னாக்குவார். அவரிடத்தில் பொன் வாங்கிக்கொண்டு போக வீரவர்மன் வருவான். மேல்படி தங்கக்காசு மகரிஷியை விகார மாமா நம்முடைய கஜானிக்கு அனு கூலம் ஆகச் செய்து விட்டார். அவர் வீரவர்மனை மதுவிலே மயக்கி வைப்பார். அவன் களியுண்டிருப் பான். அந்த சமயத்தில் நாம் அங்கே யிருக்கவேண்டும். வீரவர்மனைப் பிடித்துக் கட்டி வந்துவிடலாம். இதுவெல்லாம் விகார மாமா சொல்லிக்கொடுத்த ஏற்பாடுகள்: சொன்னேனன்." அவன் நம்பவில்லை. யாரையெல்லாமோ கலந்து பேசினான். கரடிச்சாத்தா னைக் கலந்து வார்த்தை சொன்னான். பிறகு மாலையில் என்னை மறுபடி அழைப்பித்து உன்னிடம் எனக்கு நம்பிக்கை பிறக்கவில்லை என்று சொன்னான். நான் அவர்கள் குலத்து மூலமந்திரத்தை உச்சரித்தேன்.

உடனே பகவான் கிருஷ்ணனை ஸ்மரித்து அந்தப் பாவத்தை நீக்கிக்கொண்டேன். நம்முடைய மஹா சக்தி மந்திரத்தை அதன்பின் ஸ்மரித்தேன். அவனுக்கு நம்பிக்கை பிறந்து அவனுடன் ஐந்து பேரைச் சேர்த்துக்கொண்டு காசுக்குகைக்கு வந்தான். அங்கு ரணகுமாரன் ஒருவனே ஐந்து பேரையும் அடித்துத் துரத்திவிட்டு தண்டிராஜனையும் குண்டுக் கட்டாகக் கட்டிப் பிடித்துக்கொண்டு வந்தான்" என்றது.

இங்ஙனம் உபாயவஜ்ரன் என்ற கரியின் வார்த்தையைக் கேட்டு மிகவும் மெச்சிச் சிங்கம் தனது சபையைக் கலைத்துவிட்டது. பிறகு சிறிது காலத்துக்கப் பால் மறுபடி சண்டை தொடங்கிற்று" என்று விவேக சாஸ்திரி தன் மக்களிடம் சொல்லி வரும்போது, "தண்டிராஜனைப் பிடித்துக் கைதி யாக்கின பிறகு சண்டை எப்படி நடக்கும்?" என்று அவருடைய மூன்றுவது குமாரனாகிய ஆஞ்சனேய சாஸ்திரி கேட்டான்.

அப்போது விவேக சாஸ்திரி சொல்லுகிறார்:—

தண்டி பிடிபட்டான் என்ற செய்தி தெரிந்த உடனே பேய்க்காட்டில் ராஜ்யப் புரட்சி உண்டாய்க் குடியரசு நாட்டிக் கரடிச்சாத்தானைத் தலைவனாக நியமித்தார்கள். ஸோதரத்வம், ஸமத்வம், ஸ்வதந்தரம் என்ற மூன்றையும் மந்திரமாகக் கரடிச்சாத்தான் ஊர்தோறும் பறையறைவித்தான். இந்தச் செய்தி தெரிந்த வீரவர்மன் தனது படையை அனுப்பிக் கரடிச்சாத்தானைப் பிடித்து வரும்படி செய்தான். கரடி

யின் வாலை யறுத்து வேறொரு காட்டுக்குத் துரத்தி விட்டான். கண்டியின் கும்பியாகிய உத்தண்டியைக் குடியரசின் கலவணுக நியமனம் செய்தான். கண்டியைப் பொன்னங்காட்டுக் கோட்டையிலே கைதியாக வைத்துக்கொண்டான். பொன்னங்காட்டில் ஒரு நரிக் கூனி உண்டு. அவள் பெயர் நரிச்சி நல்லதங்கை. இந்த நரிச்சி நல்லதங்கையானவள் வீரவர்மன் சிறு குழந்தையாக இருந்த காலத்தில் அரமனையில் ஏவல் செய்துகொண்டிருந்தாள். அப்போது ஒரு நான் வீரவர்மன் விளையாட்டாகக் கல் வீசிக்கொண்டு இருக்கையிலே, ஒரு கல் நரிச்சி நல்லதங்கையினுடைய மூதுகில் வந்து விழுந்து விட்டது. நல்லதங்கையின் மூதுகு அது மூதல் ஓடிந்துபோய் அவளுக்கு கூனிச்சி நல்லதங்கை என்ற பெயர் உண்டாயிற்று. ஆஹா! இப்படி இவளை மூதுகை ஓடித்து அலங்கோலமாகச் செய்தாமே என்ற பச்சாதாபத்தால் வீரவர்மன் அவளிடம் மிகமிஞ்சின தயை செலுத்தினான். 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம்.' அவள் எவ்விதமான குற்றங்கள் செய்தபோதிலும், நீதிப்படி தண்டிக்காமல் அரைத் தண்டனை, கால் தண்டனையாக விட்டு வந்தான். அவள் இவனை கூடமிக்கவே யில்லை. இவனுக்குத் தீங்கு செய்வதையே விரதமாகக் கொண்டு வந்தாள். அவள் பெரிய தந்திரி. வீரவர்மனுக்குக் கெடுதி சூழ்ந்துகொண்டே காலத்தைக் கருதிக் காத்துக்கொண்டிருந்தாள். காலமும் அனுகூலமாக வாய்ந்தது. பேய்க்காட்டு நாயகனுகிய உத்தண்டி தனது தமையன் ஸ்தானத்தில் தானே அரசனென்று சொல்லி வீர

வர்மன்மீது போர் தொடுத்தான். ராஜ்யத்தை இத்
தனை சுலபமாக இழந்த கண்டி மூடனைக் குடிகள்
வெறுத்து உத்தண்டியை அரசனைகக் கொண்டு போய்க்
காட்டை அவமதிப்புக் கிடமாகச் செய்த வீரவர்மனை
யும் கண்டிக்கும்பொருட்டு உத்தண்டி தொடுத்த
போரில் மிகவும் மகிழ்ச்சி கொண்டாடினர். இத்தரு
ணத்தில் கூனிச்சி நல்லதங்கை ரஹஸ்யமாக விகார
னிடத்திலும், கண்டிராஜனிடத்திலும் கலந்து தனித்
தனியாக ஸம்பாஷணைகள் செய்துகொண்டு பொன்
னங்காட்டுக் கோட்டை, கொத்தளம், படை பரிவாரங்
களைக் குறித்துத் தனக்குத் தெரிந்த ரஹஸ்யங்களைச்
சொல்லி உத்தண்டிக்கு உதவி செய்யும் பொருட்டாகப்
போய்க்காட்டுக்குச் சென்றாள். இங்ஙனம் விவேக சாஸ்
திரி தம்முடைய மக்களுக்குக் கதை சொல்லி வருகை
யிலே ஆஞ்சனேயன் கேட்கிறான் :—

"பக்திமான் பிழைகளும் செய்வானே?"

விவேக:—"மனதறிந்து செய்யமாட்டான். கர்ம
வசத்தால் பிழைகள் ஏற்படலாம்."

ஆஞ்ச:—"கர்மம் பக்தியை மீறிச் செல்லுமோ?"

விவேக:—"பக்தி பரிபூரணமான பக்குவம்
பெறும் வரையில், கர்மத் தொடர் மனிதனை விடாது.
பழுந்த செய்கை பயன் விளைவிப்பதை அழிக்க வேண்டு
மானால், பக்தியாகிய தனல் அறிவாகிய வேதிகையிலே
புகையில்லாதபடி எரியவேண்டும். அந்த நிலைமையை
வீரவர்மன் பெறவில்லை."

ஆஞ்ச:—"கூனியினுடைய மனம் வீரவர்மனைக்

கண்டு என் இளகவில்லை?"

"ஸாகூர்த் பகவான் ராமாவதாரம் செய்து பூமியில் வினங்கினான். அந்தக் கூனி மனம் அவனிடம் அன்புறவில்லை; மதிமையைக் கண்ட மாத்திரையில் எல்லாருடைய நெஞ்சும் வசமாய்விட்டது. ஸௌர்யனைக் கண்டவுடன் குருவிகள் பாடிக் கொண்டு வெளியே பறக்கும்; ஆந்தைகள் இருட்டுக் குள்ளே நுழையும். எல்லா மானிதரையும் வசப்படுத்தக்கூடிய தெய்வ பக்தி இதுவரை மனுஷ்ய ஜாதியில் காணப்படவில்லை. இனிமேல் தோன்றக் கூடும்" என்று விவேக சாஸ்திரி சொன்னார்.

விவேக சாஸ்திரி சொல்லுகிறார்:—

"கேளீர், மக்களே, பூன்பு நரிச்சி கல்லதங்கை என்பவள் வீரவர்மனிடம் இருந்து ஓடிப்போய்ப் பேய்க்காட்டில் உத்தண்டி ராஜனைச் சரண் புகுந்தாள். அவனிடம் அந்த நரிச்சி பொன்னங்காட்டு ராஜ்யத்தின் சேனை பலம், மந்திரி பலம், பொருள் வலி முதலிய ரஹஸ்யங்களை யெல்லாம் தெரிவித்தாள். அப்போது இரண்டு ராஜ்யங்களுக்கும் யுத்தம் தொடங்கிவிட்டது. அந்த யுத்தத்தில் வீரவர்மன் பக்கத்தில் இருந்த சைன்யங்கள் பின்வருமாறு:—

புலிப் படை ஆயிரம், கரடிப் படை ஆயிரம், ஓநாய் ஆயிரம், யானை ஆயிரம், ஒட்டகை ஆயிரம், சுமை தூக்குகிற கழுதை பதினாயிரம், உளவு பார்க்கிற காக்கை இரண்டாயிரம், மேலும் பாம்புப் படை பதினாயிரம், கழுகுப் படை மூவாயிரம், பருந்துப் படை பதினாயிரம்.

எதிர்ப்பக்கத்தில் (உத்தண்டி பக்கத்தில்) இந்த சைனியத்திலே எட்டிலொரு பங்குகூடக் கிடையாது.

எனவே முதல் இரண்டு ஸ்தலங்களில் உத்தண்டியின் படைகள் முறியடிக்கப்பட்டன. உத்தண்டி மிகவும் வ்யஸனத்துடன் தனது மாளிகையில் உட்கார்ந்து யோசனை பண்ணிக்கொண்டிருக்கிறான். அப்போது நரிச்சி நல்லதங்கையை அழைத்து யோசனை கேட்போம் என்ற எண்ணங் கொண்டவளைப் அவளைக்கூட்டி வரச் செய்தான். அவ்விருவரும் ஸம்பாஷணை செய்கிறார்கள்.

உத்தண்டி சொல்லுகிறான் :—'நீ உளவுகள் சொல்லியும், நமது சேனைபதி திறமை யில்லாமையால் இரண்டு ஸ்தலங்களில் வந்து படைகள் தோற்றுவிட்டன. என்ன செய்வோமென்பது தெரியவில்லை. நான் உன்னையே நம்பியிருக்கிறேன். என்னுடைய ஸைந்யம் வீரவர்மனுடைய ஸைந்யத்தில் எட்டில் ஒரு பங்கு கூட இல்லை யென்பது தெரிந்தும் உன்னுடைய வலிமையை நம்பி நான் இந்தப் போரில் மூண்டேன். இக்கருணத்தில் நாம் வெற்றி பெறுவதற்கான வழிகள் நீதான் சொல்லவேண்டும்" என்றான். அப்போது நரிச்சி நல்லதங்கை சொல்லுகிறாள் :—"ராஜாதி ராஜனே, உத்தண்டி பூபாலனே, சத்ரு சிங்க மண்டல விநாசக ஜய கண்டனே, கேளாய்; நானே ஸ்திரீ. அதிலும் தங்களைப்போன்ற சிங்கக் குல மில்லை. நரிக் குலம். முதுகு புண்பட்டவளாய்த் தங்களிடம் சரண மென்று வந்தேன். எனக்குத் தெரிந்தவரை பொன் னங்காட்டு ஸைந்யம் படை முதலிய உளவுகளெல்லாம்

சொன்னான். தங்களுடைய வைக்கப்பட்ட அளவில் இரு
பிரிந்தபோதிலும் தந்திரத்தால் வீரவர்மனுடைய
படைகளை வென்று விடலாமென்று தாங்களும் தங்க
ளுடைய மூத்திய மந்திரி, பிரதானிகளும் சேர்ந்து
குளும் இருந்து யோசனை செய்து முடிவு செய்தீர்கள். இப்
போது என்னிடம் யோசனை கேட்கிறீர்கள்! நான்
எப்படிச் சொல்லுவேன்? மேலும், ஒரு வேளை நான்
யுக்தி சொல்லி அதனால் நீங்கள் ஜெயிப்பதாக வைத்
துக்கொண்டபோதிலும், பிறகு என்ன லாபமாகு
தருவீர்கள்? அதைச் சொன்னால் நான் எனக்குத்
தெரிந்தவரை யோசனை சொல்லுகிறேன். ஜயத்துக்கு
நான் பொறுப்பில்லை. ஒரு வேளை நான் சொல்லும்
யோசனையால் வெற்றி கூடினால், எனக்கு நீர்
என்ன பிரதி யுபகாரம் செய்வீர்? அதைத் தெரிவித்
தால், பிறகு நான் என்னால் கூடிய யோசனை சொல்லு
கிறேன்" என்றது. அப்போது உத்தண்டி சொல்லு
கிறது:—

"நீ எது கேட்டாலும் கொடுப்பேன்" என்றது.

அப்போது நரிச்சி நல்லதங்கை:—

"ஏ, உத்தண்டி ராஜனே, நான் சொல்லும்
யோசனையால், உனக்கு வெற்றி கிடைத்தால், நீ என்னை
மணம் செய்துகொண்டு உன்னுடைய பட்டத்து ராணி
யாக்குவாயா?" என்று கேட்டது. இது கேட்டு உத்
தண்டி கோபத்துடன், "சிச்சீ மூடை நரியே, நீ வீட்
டில் எவல் தொழில் செய்தவள், கூனிச்சி; கிழவி.
நாமோ ராஜகுலம். நல்ல யௌவன தசையில் இருக்கி
றோம். நம்முடைய அந்தப்புரத்தில் இருக்கும் சிங்

கச்சியோ கடம்பவனத்து ராஜனுகிய மஹாகீர்த்தி யுடைய குண்டோதரன் மகள், காமாக்ஷியென்று பூமண்டலமெங்கும் கீர்த்தி வாய்ந்தவள். அவளைப் போல் அழகும் கல்வியுமுடைய பெண் சிங்கச் சாதியில் எங்குமே கிடையாது. இதை யெல்லாம் உணர்ந்த வனாகிய நீ என்னிடம் என்ன மூடவார்த்தை சொன் னாய்? உளறுகே. நீ பெண்ணைகயால் விட்டேன். ஆனால இருந்து இப்படி வார்த்தை சொன்னால் இதற் குள் தலையை வெட்டிப் போட்டிருப்பேன்." என்று சொல்லிக் கர்ஜனை புரிந்தது.

அப்போது நரிச்சி நல்லதங்கை சொல்லு கிறாள்:—

"கேளாய் உத்தண்டி ராஜனே, எனக்கு உன்னை மணம் செய்துகொள்ள வேண்டுமென்ற உட்கருத்து கிடையாது. சும்மா, உன்னைச் சோதனை போடுவதற் காகப் பேசிய வார்த்தையேயன்றி வேறொன்றுமில்லை. சிங்கச் சாதிப் பெண்களுக்குள்ளே அழகில் மாத்திரமே யல்லாது கல்வியிலும் சிறந்தவளாகிய காமாட்சி தேவி (சிங்க ராணி)யை மனையாளாகக் கொண்ட நீ இப்படிப் பட்ட ஆபத்து நேரத்தில் அவளிடம் யோசனை கேட் காமல், கேவலம் ஒரு கிழ நரிச்சியிடம் கேட்க வந்தா யே, அது பிழை என்பதை உனக்குத் தெரிவிக்கும் பொருட்டாக அந்த வார்த்தை சொன்னேன். உன்னை மணம் செய்து கொள்ளவேண்டும் என்ற சிந்தனை எனக்குக் கனவிலே கூடக் கிடையாது. உன்னைக் கேவி பண்ணி உன்னுடைய ராணி காமாட்சியை நீ இந்த யுத்த படத்தினால் மறந்திருக்கும் செய்தியை நினைப்பு

றட்டி உன்னை அவனிடம் போகச்சொல்லி கேட்கும்படி
நானும் யிரும் போருட்டாக அந்த வார்த்தையை சொன்
னேனே யன்னாலும் கோவிக்காமல் யட்சியிருக்
கின்றனை. பகவான் புத்த தாராயணன், அகம்பாடா
சிதன், லோகநாதத்தா, புரதேவதத்தாயன், உலகத்
துக்கு மூதாதை அவனை புத்தினுடைய பட்டத்
மகனையும், யுத்தி பாதநாதா மகனையும் யானைந்து சொல்து
கொண்டு புத்தங்கத்தில் துயில்கிறான். நீரு, உத்தண்டி
ராஜனை, நாதி போதமா கற்பிக்கிறாய்? சிங்கம் போல்
நாதியென்றும், நரி கீழ் நாதியென்றும் நீ நினைக்கி
றாயா? அப்படித்தான் அந்த மூடனுக்கு யீயவர்மன்
நினைத்தான். அது நிற்க.

"நீரு, உத்தண்டிராஜனை, வயதில் மூத்த பெண்ணை
இளைய பிள்ளை மணம் செய்து கொள்ளத் தகாதென்று
சொன்னாய்! அது மறுமா மூடத்தனமான வார்த்தை!
புதிதாக வருகிற ஒவ்வொரு இந்திராணிக்கும் ஆதிமூதல்
பழைய இந்திராணிதான் பாரமல் இருந்து வருகிறாள்.
கூரிச்சி என்று சொல்லி என்னை கலைத்தாய், உடம்
புக்கா பிரேமை செய்கிறேம். அரசனை, உயிருக்கு
அன்பு செலுத்துகிறேம். இவ்வெல்லாம் நீ அறியாத
விஷயம். இது நிற்க.

"உத்தண்டிராஜனே, இவ்வளவுக்கு மேலும் உனக்கு வெற்றி பெற உபாயங் கற்றுக்கொடுத்தால் நீ எனக்கு வேறே என்ன கைம்மாறு தருவாய்?" என்று கேட்டது.

அப்போது உத்தண்டி ராஜன் சொல்லுகிறது:— "நீ விவாஹத்தைத் தவிர வேறென்ன தானம் கேட்டபோதிலும் கொடுப்பேன்" என்றது. அதற்கு ரிச்சி நல்லதங்கை சொல்லுகிறது.—"நீ முதல் தடவையும் இப்படித்தான் எது கேட்டாலும் கொடுப்பேன் என்றாய். பிறகு வாக்குத் தவறினாய். நீ மறுபடியும் வாக்குத் தவறலாம் என்ற ஸந்தேஹம் எனக்கு ஜனிக்கிறது" என்றது. அப்போது உத்தண்டி—"பயப்படாதே! வேறென்ன கேட்டாலும் தருகிறேன்." என்றது.

"உன்னுடைய ராஜ்யத்தில் பாதி கொடுப்பாயா?" என்று ரிச்சி நல்லதங்கை கேட்டாள். உத்தண்டியும் இதைக் கேட்டு மனவருத்த மடைந்தான். ராஜ்யத்தில் பாதி கொடுக்க அவனுக்குப் பெரும்பாலும் ஸம்மதமில்லை. ஆனாலும் என்ன செய்யலாம்? தனது சேனாதிபதிகள் இனியேனும் போரில் வெல்வார்களென்ற நம்பிக்கை அவனுக்குக் கிடையாது. எப்படியேனும் ரிச்சி நல்லதங்கை ஒரு வழி கண்டுபிடித்துச் சொல்வாளென்றும் அதனால் தனக்கு வெற்றியேற்படலாமென்றும், அவனுக்கு நம்பிக்கை யிருந்தது. மேலும் இரண்டாம் முறை வாக்குத் தவற வெட்கப்பட்டான். ஆதலால் அவளிடம் நீ சொல்லுகிற உபா

யக்கை அனைவரிக்து அதனால் எனக்கு வெற்றி கிடைக் தால் உனக்குக் கட்டாயம் என் ராஜ்யத்தில் பாதி தரு வேனென்று வாக்குக் கொடுத்தான்.

அப்போது சிங்கம் சொல்லுகிறான்:—

"கொலம்பஸ் கோழி முட்டையை உடைத்துக் காட்டினை மாதிரி வந்து சேரும்" என்றான்.

"அதென்ன வர்த்தமானம்!" என்று உத்தமம் என்று சிங்கராஜன் கர்ஜனை செய்தது.

கல்லுகங்கை சொல்லுகிறான்:—

"ஒரு கோழி முட்டையை, அடை போ, கொலம் பஸ் என்கிற தூதுகாலப் போர்வழியும் அவனோடு சமார் மூப்பத்தெழு ஸ்பேஹனிர்களும் ஒரு நாள் போஜனம் செய்துகொண்டிருந்தார்களாம். அப்போது கொலம் பஸ் கேட்டான்:—" இங்கே யாராவது ஒரு கோழி முட்டையை மேஜையின் மேல் யாதொரு ஆதாரமு மில்லாமல், அசை வில்லாமல் கட்டாயமாக நிறுத்தி வைக்கக் கூடுமா? நான் செய்வேன். வேறு யார் செய் வார்!" என்றான். அப்போது கொலம்பஸ் உடன் இருந்த நண்பர் பலரிடங்களில் முயற்சி பண்ணியும் கோழி முட்டையை மேஜைமேல் ஆதாரமில்லாமல் கட்டாயமாக நிறுத்த ஸாத்யப்படவில்லை. கடைசியாக, அவர்களெல்லாம் தோல்வியை ஒப்புக்கொண்டார்கள். அப்போது கொலம்பஸ் எழுந்து நின்றான். கோழி முட்டையைக் கையில் எடுத்தான். ஒரு ஓரத்தை நசுக்கி விட்டு, மேஜைமேல் கட்டமாக நிறுத்திவிட்டான்.

நண்பர்களிலே பலர் அவனுடைய சமத்காரத்தைப் பார்த்து ஆச்சர்யப்பட்டார்கள். ஆனால் சில மூடர்கள் மாத்திரம் 'ஓஹோ இதென்ன எமாற்றுகிற மாதிரி. கோழி முட்டையில் ஓரத்தைத் துளிகூட உடைக்காமல் நிறுத்தவேண்டுமாக்கும் என்று நாங்கள் நினைத்திருந்தோம். உடைத்து நிறுத்தலாம் என்று முதலிலேயே சொல்லியிருந்தால் நாங்கள் அப்போதே செய்திருக்க மாட்டோமா?' என்று சொல்லி முணுமுணுத்தார்களாம்" என்று நரிச்சி சொன்னாள். "இவ்வளவுதானே?" என்று உத்தண்டி கேட்டான். "ஆமாம்! இவ்வளவுதான்" என்று நரிச்சி சொன்னாள். அப்போது உத்தண்டி சொல்லுகிறான்:—"அப்படியானால் கொலம்பஸ் சுத்த அயோக்யன்! அவனுடைய கெட்டிக்காரத்தனத்தைப் பார்த்து ஆச்சர்யப்பட்ட ஸ்நேஹிதர்கள் பரம மூடர்கள்" என்றான். அதற்கு நரிச்சி நல்லதங்கை சொல்லுகிறாள்:—

"அந்த மாதிரிதான் எனக்கும் சொல்லிப் பாதி ராஜ்யங் கொடுப்பதாக வாக்களித்ததை அழித்துப் போடுவாயோ?" என்றான்.

உத்தண்டிராஜன்:— "மாட்டேன்! நீ யோசனை சொல்லு. அது எத்தனை ஸாமான்யமாகப் பின்பு புலப்பட்டபோதிலும் அதனால் வெற்றி கிடைப்பது மெய்யானால் உன்னிடம் நன்றி மறக்காமல் உனக்குப் பாதி ராஜ்யம் கொடுத்து விடுவேன்" என்றது.

அப்போது நரிச்சி நல்லதங்கை சொல்லுகிறாள்:—

"உத்தண்டி மஹாராஜனே, நங்களுடைய மாமனார் குண்டோதர ராஜனுக்கு ஒரு காயிதம் எழுதிக்கொடுங்கள். அதில் வேறொன்றும் எழுதக்கூடாது. ஜாபத்து ஸமயம். ஸைந்யம் வேண்டும். ராச்சி நல்லதங்கையை கட்டு என்று மாத்திரம் வரி மாத்திரம் எழுதினால் போதும். இப்போதே எழுதிக்கொடு. நான் அப்பால் உனக்கு ஸைந்யம் கொண்டுவந்து வீரவாஹுவையும் மாமனையையும், அவரங்காரத்தையும் தாலிச்சிறன். உன் பெயரை, நங்க சரித்திரத்தில் எக்காலத்திலும் அழியாமல் நிலுத்திவைக்கிறேன்" என்றான்.

அப்படியே உத்தண்டி ஓலை எழுதி ராச்சி கையிலே கொடுத்தான். அதை வாங்கிக்கொண்டு கூனிச்சி யாகிய ராச்சி நல்லதங்கை பல்லக்குப் பரிவாரங்களுடன் உத்தண்டி ராஜனுடைய ஸ்காணுதிபதி என்ற பதவியில் மாமனார் குண்டோதர ராயசிங்க மஹாராயசிங்க ருடைய ராஜதானிக்கு வந்து சேர்ந்தாள்.

இது நிற்க.

பேய்க்காட்டில் உத்தண்டி தன் மரணவியாகிய சிங்கச்சி காமாக்ஷியினிடம் போய் நடந்த வர்த்தமானத்தை யெல்லாம் சொன்னான். அவள் மிகவும் கோபத்துடன்:—"என்னுடைய பிதாவினிடமிருந்து ஸைந்யபலம் கருவிக்க வேண்டுமானால், அதற்கு என் அநுமதியில்லாமல் ராச்சி நல்லதங்கையை அநுப்பிவைத்து நடந்துவிடுமென்று நீ நினைக்கிறாயா?" என்றாள்.

அப்போது உத்தண்டி சொல்லுகிறான்.—"உனக்கு ராஜநீதியே தெரியவில்லை; காமாக்ஷி, ராஜ்ய

அவசரத்தைக் கருதி இரண்டாம் பேரிடம் சொல்லா மல் எத்தனையோ காரியம் செய்ய நேரிடும்" என்றான்.

"ராஜ்ய அவஸரத்தைக் கருதிச் சரியான மந்த்ரா லோசனை யில்லாமல் எடுத்த காரியங்கள் எல்லாவற்றி லும் தோற்றுப் போவதே வாடிக்கையாக நீங்கள் நடத்திவருகிறீர்கள்" என்று காமாக்ஷி சொன்னாள்.

"ஆபத்து ஸமயத்திலே ஏசிக் காட்டுவது பாவி களான ஸ்திரீகளுடைய வழக்கம்!" என்று உத்தண்டி சொன்னான்.

"நாலு சாஸ்திரம் படிக்கப்போன பிராமணப் பிள்ளையின் கதை தெரியுமா?" என்று சிங்கச்சி காமாக்ஷி கேட்டாள்.

"நான் ஆபத்தான நிலைமையில் இருக்கும்போது நீ கதை சொல்ல வருகிறாயே! அதென்ன?" என்று உத்தண்டி கர்ஜனை புரிந்தான்.

"வீரவர்மன் தன்னுடைய பத்தினியிடத்தில் தேவதா விசுவாசம் வைத்திருப்பதாகவும் அவனை எப் போதும் சிடுசிடுப்பதே கிடையாதென்றும், தனது ப்ரதான ராஜ்ய கார்யங்களில் எதையும் தனது பத் தினியாகிய மாகாளியிடம் கேட்காமல் செய்வதில்லை யென்றும், முன் அந்த ஸ்தானத்திலிருந்து வந்த காடி ஸந்யாஸி யொருவர் சொன்னதோ; ரோகமிருக் கிறதா?" என்று காமாக்ஷி கேட்டாள்.

"நான் ஸங்கடத் குழியில் விழுந்து வெளியேற வழி யறியாமல் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கையில் நீ சத்துருவின் புகழ்ச்சியை என் செவியில் பேசுகிறாயே, உனக்கிது தகுமா?" என்று உத்தண்டி வினவினான்.

"ஸ்திரீகளை அவமரியாதை பண்ணுகிறவர் மனிதரில் மிருகங்கள் என்று சாஸ்திரம் சொல்லுகிறதே; அது நாபக மூண்டா?" என்று காமாக்ஷி கேட்டாள்.

"நான் இப்போது சாஸ்திரமாகவும் அவமதிப்புச் செய்யவில்லை" என்றான் உத்தண்டி.

"என்னிடம் ஒரு வார்த்தை கூடக் கேளாமல் நீ என் பிதாவுக்கு ஸைந்யம் வேண்டுமென்று பிரார்த்தனை அனுப்பினாயே! அது என்னை அவமதித்ததாகாட்டாதா?" என்றாள் காமாக்ஷி.

"அது போலல் போகிறது. இனிமேல் நடக்க வேண்டிய காரியத்தைப் பேசுவோம்" என்று உத்தண்டி சொன்னான்.

"மேல் நடக்கவேண்டிய காரியம் யாதோ?" என்று சிங்கச்சி கேட்டது.

அப்போது உத்தண்டி சொல்லுகிறான் :—"மேல் நடக்கவேண்டியது யுத்தம். மேல் நடக்கவேண்டியது, ஜயம்!"

"போர் எந்த இடங்களில் நேர்ந்தது? போர் நேர்ந்த ஸ்தலங்களின் பெயர் என்ன?" என்று சிங்கச்சி கேட்டது. "நாகபடீயிலே நேர்ந்தோம்.

வெள்ளைவாய்க்கால் கரையிலே தோற்றோம். நாகமலையில் தோற்ற வேளைபதி கரடி வேலப்பன், வெள்ளை வாய்க்கால் கரையிலே தோற்றவன் புலி பொன்னம்பலம்" என்று உத்தண்டி சொன்னான்.

"அந்த வேலப்பனையும், பொன்னம்பலத்தையும் நாளை ஸூர்யோதயமாய் ஒரு ஜாமத்துக்கு முன்பு சுட்டுக் கொன்று விடவேண்டும்" என்று சிங்கச்சி காமாக்ஷி சொன்னாள்.

உத்தண்டி :—"ஸாத்யப்படாது" என்றான். அவள் "ஏன்?" என்றாள். அவன்:—"அவ்விருவரும் பெரிய வம்சத்துப் பிள்ளைகள். அவர்களுக்குத் தீங்கு செய்தால் தேசத்துப் பிரபுக்கள் நமக்கு விரோதமாகத் திரும்புவார்கள்" என்றான். அவள்:—"இப்போது இந்த தேசத்தில் உமக்கு அனுகூலமாக எத்தனை பிரபுக்கள இருக்கிறார்கள்?" என்று கேட்டாள். அப்போது உத்தண்டி:—"என் நாட்டிலுள்ள பிரபுக்கள் அத்தனை பேரும் எனக்கு வேண்டியவர்களே. எதிர்க்கட்சி யாருமே கிடையாது!" என்றான்.

"நாளைப் பொழுது விடிந்து ஒரு ஜாமத்துக்கு முன்பு வேலப்பனையும், பொன்னம்பலத்தையும் சுட்டுக் கொன்று விடவேண்டும். அது செய்தால், மேலே ஜயத்துக்குரிய உபாயங்கள் நான் சொல்லுகிறேன்" என்று காமாக்ஷி சொன்னாள்.

"நான் ஒருபோதும் அதற்கிணங்கமாட்டேன்" என்றான் உத்தண்டி.

அப்போது உத்தண்டி என்ற சிங்க ராஜனிடம் பத்தினியாகிய சிங்கச்சி காமாகூடி சொல்லுகிறது :—

"ஸ்திரீகளை அவமதிப்புச் செய்வோன் ஆண்மக்களுக்குள்ளே முதல் விரலுக விளங்க மாட்டான். பெண்ணைத் தாழ்வாக நினைப்பது அநாகரிக ஜாதியாருடைய முதல் லக்ஷணம். நீ என் வார்த்தையைக் கட்டுகிறாய் ; உனக்குச் சம்மட ஜயிக்காது. நீ என்னை எப்போதும் அலட்சியம் பண்ணுகிறாய். எனது பிதா உனக்குத் துணைப் படைகள் என்னை யறியாமல் அனுப்பும்படி செய்ய முடியுமென்று நினைத்தது உன் ஆலோசனைக் குறைவைக் காட்டுகிறது. உன்னை அழிய விடுவதில் எனக்கு லாபமில்லை. நீயோ மந்திரிகளின் உபதேசத்தாலும், மூட மந்திரிகளின் விரவர்மனைப் பகைத்துக்கொண்டாய். என்னிடத்தில் மந்திராலோசனை கேட்கமாட்டாய் ; நரிச்சி நல்லதங்கையிடம் கேட்பாய்! அந்தக் கூனற் கிழவிக்கு மாலியிட லம்மதப்பட வில்லையே ! நீ அந்த மட்டில் புத்திசாலிதான் ! அவளுக்குப் பாதி யரசு கொடுப்பதாகச் சொல்லிவிட்டாயா ? உன்னுடைய புத்திக் கூர்மையை என்னென்று சொல்வேன் ?" என்றது.

இது கேட்டு உத்தண்டி சொல்லுகிறான் :—

"ஆஹா ! நான் நரிச்சி நல்லதங்கையிடம் ஏதேனும் ரகசியமாகப் பேசிக்கொண்டிருந்ததை உனக்கு யார் சொன்னார்கள் ? உன்னுடைய தூண்டுதலின் மேலேதான் அவள் என்னிடம் அப்படிக் கேட்டாளோ ?"

காமாசுஷி — "இல்லை, நீ யன்றே அவளைக் கூப்பிட்டனுப்பி வார்த்தை சொன்றுப்! நீ இப்படி அழைப்பித்துக் கேட்பாய் என்ற விஷயம் எனக்கு முன்னமே தெரிந்திருந்தாலன்றே நான் தூண்டி விட்டிருக்கக் கூடுமென்று சொல்லலாம்!"

உத்தண்டி — "பின்னே, உனக்கெப்படித் தெரிந்தது? நான் முந்தியே முதல் நினைத்தேன்; என்னுடைய ஒற்றர்களை யெல்லாம் நீ வசப்படுத்தி வைத்திருக்கிறாய். எனக்குத் தெரியாமல் நீ வேறு தனியாகப் பல ஒற்றர்களை வைத்திருக்கிறாய். என் மந்திரிகளிலும் சேனைபதிகளிலும் பெரும்பாலோர் எனக்கு அஞ்சுவதைக் காட்டிலும் அதிகமாக உனக்கு அஞ்சி நடக்கிறார்கள். எனக்குத் தெரியாத ஒரு ரஹஸ்ய சங்கத்துக்கு நீ தலைவியென்று தோன்றுகிறது! உன்னை வஞ்சனை செய்ய வேண்டுமென்ற எண்ணம் எனக்குக் கிடையாது. ஆனால் என்னுடைய ராஜ்யத்தில் என் வார்த்தைக்கு யாதொரு மதிப்பில்லாமலும் எல்லாக் காரியங்களுக்கும் உன் இஷ்டப்படியாகவும் இருப்பது எனக்கு சம்மதமில்லை" என்றான். அப்போது சிங்கச்சி காமாசுஷி சொல்லுகிறாள் :—

"ஓஹோ! என்னிடத்தில் இவ்வளவு பயத்தை மனதில் வைத்துக்கொண்டு, என்னை லக்ஷ்யமும் பண்ணாமல் நீ இருப்பது ஒரு ஆச்சர்யந்தான்; எனக்கு விரோதிகளான வேலப்பனையும், பொன்னம்பலத்தையும் சேனைபதிகளாக நியமித்தாய். எனக்கு வேண்டிய

லைனைப் நிகளை விலக்குறைப் ; போர் தோற்றது ; இன்னமும் என்னை அவமதிக்கிறாய். என்னுடைய யோசனை கேட்டபடியால் உனக்கு இந்த ராஜ்யம் கிடைத்தது. பட்டங்கட்டின மறுநாளே நீ என்றி கெட்டவன் என்பதை நான் கண்டுகொண்டேன்" என்றான்.

உத்தண்டி :—"உன்னை நான் அவமதிக்கவில்லையே" என்றான்.

"அரை நாழிகைக்கு முன்பு கூட என்னைத் திரும்புக்கு ஸமானமாக எண்ணி நடத்தினையன்றோ?" என்றான் சிங்கக்சி.

"என்ன செய்தேன்!" என்று சொல்லி உத்தண்டி கர்ஜனை புரிந்தான்.

"நான் ஒரு கதை சொல்லத் தொடங்கினேன், உனக்கு நல்லறிவு புகட்டும் பொருட்டாக. அதைக் கேட்கக்கூட உனக்குப் பொறுமையில்லை. என்னைச் சென்னென்று விழுந்தாய். என்னைக் கண்டால் உனக்கு முகத்தில் கடுகு வெடிக்கிறது. என் வார்த்தை கேட்டால் உனக்குக் காதில் நாராசம் காய்ச்சி விட்டது போல ஆய்விடுகிறது" என்றான் சிங்கக்சி.

"அதென்னவோ கதை என்றாயே! பெயர் மறந்து போச்சு! ஹாம்! ஹாம்! பிராமணப் பிள்ளை நாலு சாஸ்த்ரம் படித்த கதை! அதை சொல்லு கேட்கிறேன்" என்றான் உத்தண்டி. அப்போது சிங்கக்சி சொல்லுகிறது.

பிராமணப் பிள்ளை காலு சாஸ்திரம் படித்துக்கொண்டு வந்த கதை.

சிங்கச்சி காமாக்ஷி சொல்லுகிறாள் :—

"கேளாய் ராஜனே, புருஷனுக்கு ஸ்திரீ உடம்பில் பாதி. நீ என்னை வெறுத்தபோதிலும் எனக்கு உன்னைத் தவிர வேறு புகல் கிடையாது. நீ என்னிடம் வைத்திருந்த அன்பை யெல்லாம் மறந்து விட்டாலும் என் நெஞ்சு உன்மீதுள்ள அன்பை மறக்கவில்லை. இன்னொரு சிங்கி யென்றால் நீ செய்துவரும் அவகார்யத்துக்கு உன்னை முகங்கொண்டு பார்க்கமாட்டாள். நான் ஐயோ பாவமென்று உன்னை சகிக்கிறேன். ஆயினும், நான் இப்போது கதை சொல்ல ஆரம்பித்தால் நீ பொறுமையுடன் கேட்கமாட்டாய் என்ற சந்தேகம் எனக் குண்டாகிற படியால், இப்போது சொல்ல வேண்டாமென்று யோசிக்கிறேன்" என்றாள்.

உத்தண்டி "பொறுமையுடன் கேட்கிறேன்" என்று ஸத்யம் பண்ணினான். பிறகு சிங்கச்சி பின் வரும் கதையை உரைக்கலாயிற்று.

ஒரு ஊரிலே ஒரு பிராமணப் பாட்டி யிருந்தாள். அவளுக்கொரு பிள்ளையுண்டு. அந்தப் பிள்ளை வீட்டில் யாதொரு வேலையும் செய்யாமல் மூன்று வேளையும் தண்டச்சோறு தின்பதும் ஊர் சுற்றுவதுமாக இருந்தான். அந்தப் பாட்டி, தோசை, இட்டலி,

மூறுக்கு, கடலேச்சுண்டல் விபாபாரம் பண்ணி அதில் வரும் லாபத்தால், குதிம்ப ளம்ரகூடியை செய்துகொண் டிருந்தான். அவன் நாளுக்கு நான் அதிகச் சோரம் பேறியாய்ச் சேரத்தை நாசம் பண்ணிக்கொண்டிருந் தான். அப்போது பாட்டி ஒரு நான் அவனைக் கூப் பிட்டு:—"அடா மகனே, ஒரு தொழிலும் செய்யாமல் சும்மா தின்று கொழுத்துச்கொண்டு எத்தனை நான் இப்படி என் கழுத்தை அறுக்கலாமென்று போசனை பண்ணுகிறாய்? நான் உயிரோடிருக்கும் வரை எப்படி பாவது பாடுபட்டு உன் வயிற்றை நிரப்புவேன். எனக்குப் பிற்காலம் நீ எப்படி ஜீவிப்பாய்? நான் சாகு முன்னே உனக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைத்துவிட்டுச் சாகலாமென்று நினைத்துக்கொண்டிருக் கிறேன். அதற்காகத்தான் பக்கத்துத் தெருச் செட்டி யாரிடம் மாஸம் ஒரு ரூபாய் சீட்டுப் போட்டுக் கொண்டு வருகிறேன். நீ அந்தப் பெண்டாட்டியை எப்படி வைத்துக் காப்பாற்றுவாய்? சீ, நாயே, ஓடிப்போ, எங்கேனும் வடதேசத்துக்குப் போய் நாலு சாஸ்த்ரம் படித்துக்கொண்டு வா" என்றாள்.

அந்தப் பையனுக்கு சாஸ்த்ரம் என்றால் இன்ன பதார்த்தம் என்ற விஷயமே தெரியாது. ஆனாலும் அவன் மனதில் கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண் டும் என்ற தாகம் இருந்தது. ஆதலால் பெண்டாட்டி யைக் காப்பாற்ற சாஸ்த்ரம் படிக்க வேண்டுமென்று தாயார் சொல்லியதைக் கேட்டவுடன் அவனுக்கு சாஸ்த்ரப் பயிற்சியில் விசேஷமான ஆவல் மூண்டது.

அன்று பகல் சாப்பிட்டவுடனே தாயாரிடம் சொல்லிக்கொள்ளாமல் ஊரிலிருந்து புறப்பட்டு வடதிசை நோக்கிச் சென்றான். போகும் வழியிலே ஒரு பனை மரம் நின்றது.

"எங்கே போகிறாய் அப்பா?" என்று இந்தப் பிள்ளையை நோக்கி அந்தப் பனைமரம் கேட்டது.
"நான் சாஸ்திரம் படிக்கப் போகிறேன்" என்றான்.

அப்போது அந்தப் பனைமரம் சொல்லுகிறது :—
"ஓ ஹோ ஹோ; சாஸ்திரமா படிக்கப் போகிறாய்? அப்படியானால் நான் ஒரு சாஸ்திரம் கற்றுக்கொடுக்கிறேன் தெரிந்துகொள்" என்றது. பிராமணப் பிள்ளை உடம்பட்டான்.

அப்போது பனைமரம் "நெட்டைப் பனைமரம் நிற்குமாம் போலே போலே" என்ற வாக்கியத்தைச் சொல்லிற்று. இந்த வாக்யத்தைப் பையன் திரும்பத் திரும்பத் தன் மனதுக்குள் உருப்போட்டுக்கொண்டே போனான்.

அங்கே ஒரு பெருச்சாளி வந்தது. அந்தப் பெருச்சாளி இவனை நோக்கி, "அடா பார்ப்பாரப் பிள்ளாய், எங்கே போகிறாய்?" என்று கேட்டது.
"சாஸ்திரம் படிக்கப் போகிறேன்" என்று இவன் சொன்னான். "அப்படியானால் நான் ஒரு சாஸ்திரம் சொல்லுகிறேன் படித்துக்கொள்" என்று பெருச்சாளி கூறிற்று. பையன் உடம்பட்டான். "பெருச்சாளி மண்ணைத் தோண்டுமாம் போலே போலே" என்ற சாஸ்திரத்தை அந்தப் பெருச்சாளி சொல்லிக் கொடுத்

தது. இவன் மேற்படி இரண்டு சாஸ்த்ரங்களையும் வாயில் உருப்போட்டுக்கொண்டே நடந்து சென்றான். வழியில் ஒரு குளம் இருந்தது. அதில் இறங்கி ஜலம் குடிக்கப் போனான். நடுக் குளத்தில் ஒரு கோரைப் புல் நின்றது. அது இவனை நோக்கி:—"ஐயரே, எங்கிருந்து வந்தாய்? எந்த ஊருக்குப் போகிறாய்?" என்று கேட்டது. இவன் தன்னுடைய விருத்தாந்தங்களைச் சொல்லி "சாஸ்த்ரம் படிக்கப் போகிறேன்" என்றான். "அப்படியானால் நான் ஒரு சாஸ்த்ரம் கற்பிக்கிறேன். படித்துக்கொள்" என்று கோரை சொல்லிற்று. பிராமணப் பிள்ளை உடம்பட்டான்.

"நடுக்குளத்திலே கோரை கிடந்து விழிக்குமாம் போலே போலே" என்ற வாக்கியத்தை அது கற்றுக் கொடுத்தது. இவன் மூன்று வாக்கியங்களையும் பாராமல் சொல்லிக்கொண்டு பின்னும் நடந்து சென்றான். அங்கே ஒரு நரி வந்து அவனை நோக்கி:—"எங்கே போகிறாய்? என்ன சங்கதி?" என்று விசாரணை பண்ணிற்று. இவன் "சாஸ்த்ரம் படிக்கப் போகிறேன்" என்றான். 'ஓகோ! சாஸ்த்ரம் படிக்கவா போகிறாய்! நல்லது, உனக்கு நான் சாஸ்த்ரம் கற்றுக் கொடுக்கிறேன். தெரிந்துகொள்' என்று நரி சொல்லிற்று. இவன் உடம்பட்டான். "ஆனைக் கண்டால் நரி வாலைக் குழைத்துக் கொண்டோடுமாம் போலே போலே" என்ற வாக்கியத்தை நரி போதித்தது. இவன் "ஆஹா! புறப்பட்ட தினத்திலே நமக்கு

நாலு சாஸ்த்ரமும் தெரிந்துபோய்விட்டதே. என்ன அதிர்ஷ்டமப்பா, நமக்கு; இந்த நான்கு சாஸ்த்ரத்தையும் மறக்காமல் வீட்டில் தாயாரிடம் போய்ச் சொன்னால் அவள் நமக்குக் கல்யாணம் செய்து கொள்ள அனுமதி கொடுப்பாள்" என்று ஸந்தோஷப் பட்டுக்கொண்டே தன் ஊரை நோக்கிச் சென்றான். போகும் வழியில் இரவாகி விட்டது. ஊர் நெடுந் தூரத்துக்கப்பால் இருந்தபடியால் இடையே இருந்த ஒரு கிராமத்தில் அவ்விரவு தங்கி, மறு நாட் காலையில் அங்கிருந்து புறப்படலாமென்று நினைத்து, அங்கு ஒரு வீட்டு வாசல் திண்ணையிலே போய்ப் படுத்துக் கொண்டான். விடிய ஒரு ஜாமம் ஆனபோது, இவன், கண்ணை விழித்துக்கொண்டு, தான் படித்த நாலு வாக்கியங்களையும் பாடம் பண்ண ஆரம்பித்தான். அப் போது அந்த வீட்டின் கொல்லைப் புறத்தில் கள்ளர் வந்து கன்னம் வைத்துக்கொண்டிருந்தார்கள். இவன் சத்தம் போட்டுச் சந்தை சொல்லிக் கொண்டிருந் தான்.

முதலாவது :—'நெட்டைப் பனைமரம் நிற்குமாம் போலே போலே' என்றான். இவன் கூவின சத்தத் தைத் திருடர் கேட்டு "ஓஹோ! நாம் இங்கு நிற் பதைக் கண்டு வீட்டிலுள்ளோரை எழுப்பும் பொருட் டாக எவனோ இப்படிக் கூவுகிறான்" என்றெண்ணி பயந்தார்கள். அந்த சமயத்தில் இவன் :—

"பெருச்சாளி மண்ணைத் தோண்டுமாம் போலே போலே" என்று கூவினான்.

இதைக் கேட்டுத் திருடர் :—"அடே! நாம் கன்னம் வைக்கிறதைக் கண்டுதான் இவன் இப்படிக் கூவுகிறான்" என்று கை கால் நடுங்கத் தொடங்கினர்கள்.

அப்போது இவன் :—"நடுக்குளத்திலே கோரை கிடந்து விழிக்குமாம் போலே போலே" என்று தனது மூன்றும் சாஸ்த்ரத்தை ஓதினான்.

கள்ளர் :—"அடா, நாம் அவசியம் ஓடிப்போக வேண்டும். நாம் இங்கே தைகைப்புடன் விழித்துக் கொண்டு நிற்கிறோமென்பதை அந்த மனிதன் சயிக்கினையாகச் சொல்லுகிறான்" என்று பேசிக்கொண்டு சிலர் ஓடத் தொடங்கினர். இதற்குள் திருடருடைய சத்தம் இவன் காதிலும் படவே, "கொல்லைப் புறத்தில் ஏதோ பலர் காலடிச் சத்தமும், முணுமுணுக்கிற சத்தமும் கேட்கிறது. என்னவோ தெரியவில்லை. ஒருவேளை திருடராக இருந்தாலும் இருக்கலாம். எதற்கும் போய்ப் பார்ப்போம்" என்று யோசனை பண்ணிக் கொண்டு வந்தான். வரும்போதே தனது சாஸ்த்ர பாடத்தை மறக்காமல், "ஆளைக் கண்டால் நரி வாலைக் குழைத்துக் கொண்டோடுமாம் போலே போலே" என்று கூவிக்கொண்டு வந்தான். திருடர் தாங்கள் வேலைசெய்திடத்திலிருந்து திருடிக்கொண்டு வந்த நகைப் பெட்டிகளையும், பணப்பெட்டிகளையும் கீழே போட்டு விட்டு ஓடிப்போயினர். இவன் பிறகு வீட்டினுள்ளாரை எழுப்பி அந்தப் பெட்டிகளைக் காட்டினான். வீட்டினுள்ளார் 'நடந்த விஷயமென்ன?' என்று விசா

ரிக்தார்கள். இவன் நடந்த விஷயத்தைச் சொன்னான். அப்போது வீட்டார் இவனுலே யன்ரு திருடர் கன்னம் வைத்துத் தமது வீட்டுப் பொருளைக் கொள்ளே யிடாமலும், தமதுடம்பிற்குத் தீங்கு செய்யாமலும் ஓடினர்கள் என்ற நன்றி யுணர்ச்சியால் அந்த நகைப் பெட்டிகளையும், பணப் பெட்டிகளையும் இவனுக்கே கொடுத்து விட்டார்கள். இவன் அந்த திரவியத்தை யெல்லாம் தாயாரிடம் கொண்டு கொடுத்து:—"எனக் குக் கல்யாணம் பண்ணி வை அம்மா" என்ருன். அவள் இவனே நோக்கி:—"மகனே உனக்கு இந்த நிதி யெல்லாம் எங்கே கிடைத்தது?" என்று கேட் டாள். இவன் நடந்த விவரங்களை யெல்லாம் கூறினன். தாய் மிகவும் மகிழ்ச்சிகொண்டு, அவனுக்கு ஒரு பெரிய பிரபுவின் மகளைக் கல்யாணம் செய்வித்தாள். பிறகு எல்லாரும் ஸௌக்யமாக நெடுங் காலம் வாழ்ந்து கொண்டிருந்தனர்."

என்று சிங்கச்சி காமாக்ஷி கதை சொன்னுள். அப் போது உத்தண்டி:—"இந்தக் கதை என்ன நோக் கத்துடன் சொன்னுய்?" என்று கேட்டான்.

"உன் மனதிலிருந்த ஆயாசத்தை மாற்றி உனக்கு ஆறுதல் உண்டாக்கும் பொருட்டாகக் கதை சொன் னேன், வேறு நோக்கம் ஒன்றுமில்லை" என்ருள்.

"பார்த்தாயா! நாம் சண்டை தேற்று மானத் தையும் தேசத்தையும் ப்ராணனையும் சத்ருவிடமிருந்து காப்பாற்ற வேண்டுமே. அதற்கென்ன வழி செய்யலா

மென்று கலங்கிக்கொண்டிருக்கிறோம். அந்த சமயத்தில் இவள் நம்மிடம் குழந்தைக் கதை பேசுகிறாள்! பார்க்காயா! பெருச்சாளியாம், கோழையாம், பின்மமாம், நரியாம்! என்ன பச்சைக் குழந்தை வார்த்தை!" என்று சொல்லி மிகவும் கோபத்துடன் உத்தண்டி அப்போது ஓர் பாய்ச்சலாக மானவியின் மீது பாய்ந்து தன் நகங்களை அவளுடைய கழுத்தில் அழுத்தினான். சிங்கக் காமாக்ஷி லாகவத்தால் குழந்தை திமிறிக்கொண்டு தன் கழுத்திலிருந்து இரத்தம் பொழிவதைக் கண்டு கோபத்துடன் தன் முன் வலக்காலால் உத்தண்டியின் முகத்தில் ஓங்கி அடித்தது. உத்தண்டி பெருஞ்சினத்துடன் கண்ணில் தீப் பொறி பறக்க, மீசை துடிக்க, ஹா! என்று கர்ஜனை புரிந்து "அடி பேயே, உன்னை இந்தக் கணத்திலே கொன்று போடுகிறேன் பார்!" என்று சொல்லித் தன் மானவியின் கழுத்தைக் கடித்து இரத்தம் குடிக்கலாயிற்று. காமாக்ஷி உத்தண்டியின் காலைப் பல்லினால் கவ்வி இரத்தத்தை உறிஞ்சத் தொடங்கிற்று. அப்போது சண்டையில் உண்டான சப்தத்தைக் கேட்டுக் காமாக்ஷியின் பாங்கிச் சிங்கங்கள் சில அங்கே ஓடி வந்தன. அவற்றைக் கண்டு உத்தண்டியும் காமாக்ஷியும் விட்டுப் பற்களை மீட்டுக்கொண்டனர். உத்தண்டி அந்தப்புரத்தை விட்டு வெளியே சென்றான். பேய்க்காட்டு விஷயம் இப்படி இருக்க உத்தண்டியிடமிருந்து அவனுடைய மாமனாராகிய குண்டோதர ராஜன் அரசு செலுத்தும் கடம்ப வனத்துக்குத் தூது சென்ற நரிச்சி நல்ல

தங்கை எப்படியாளுள் என்பதை கவனிப்போம். நரிச்சி கடம்ப வனத்திற்கு போன போது தன் பல்லக்கு பரிவாரங்களுடன் நேரே குண்டோதர ராய சிங்க மஹாசிங்கருடைய மாளிகையில் போய் இறங்காமல் ஏதோ மனதுக்குள் ஒரு தந்திரத்தை எண்ணித் தனக்கு மூந்தியே நட்புடையவளாகிய விருத்திமதி என்ற எருமைச்சியின் வீட்டிலே போய் இறங்கினாள். விருத்திமதி பொன்னங்காட்டாரமனைக்கு முன்னொரு முறை சென்றிருந்தபோது அவளுக்கு வீரவர்மராஜன் பலவிதமான பரிசுகள் கொடுத்துத் தனது ராஜ பதவியைக் கருதாமல் மிகவும் அன்பான வார்த்தைகள் கூறி விடுத்ததை அந்த எருமைச்சி தன் வாழ்நாளில் மிகப் பெரிய விசேஷ மென்றெண்ணி வீரவர்மனிடம் பேரன்பு பூண்டவளாய் எப்போதும் அவனையே ஸ்மரித்துக்கொண்டிருந்தாள். எனவே நரிச்சி நல்ல தங்கை வந்தவுடன் எருமைச்சி விருத்திமதி அவளிடம் "வீரவர்மனும் அவனுடைய ராணி மாகாளியும் குழந்தைகளும் சௌக்கியமந்தானே?" என்று விசாரித்தாள்.

அப்போது நரிச்சி நல்லதங்கை தான் வீரவர்மனிடமிருந்து பிரிந்து அவனுக்குத் துரோகியாய் உத்தண்டி ராஜனிடம் வேலை பார்ப்பதாகத் தெரிந்தால் எருமைச்சி தன்னை துரத்திவிடுவாள் என்று யோசித்து "ஆம், எல்லாரும் சௌக்கியமந்தான்" என்றாள். "நீ இப்போது நேரே பொன்னங்காட்டிலிருந்து தான் வருகிறாயா?" என்று விருத்திமதி கேட்டாள்.

நல்லதங்கை—"அன்று; நான் பேய்க்காட்டி லிருந்து வருகிறேன்" என்றாள்.

விருத்திமதி:—"அங்கே எதற்காகப் போயிருந் தாய்?" என்றாள்.

நல்லதங்கை:—'பேய்க்காட்டுக்கும் பொன்னங் காட்டுக்கும் சண்டை யென்று நீ கேள்வியுற்றிருக்க. கூடும். அந்த யுத்தம் நடப்பதை எப்படியேனும் தடுக்க வேண்டுமென்று கருதி, என்னை மாகாளிராணி (வீரவர்மன் பத்னி) சில செய்தி சொல்லிப் பேய்க் காட்டு ராணியாகிய காமாக்ஷியிடம் அனுப்பினாள். வந்த இடத்தில் காமாக்ஷி உங்கள் நாட்டரசனுகிய தன் பிதாவிடம் ஒரு ரகஸ்யமான செய்தி சொல்லி வரும்பொருட்டாக என்னை இங்கே அனுப்பினாள்" என்றதும்,

"என்ன ரஹஸ்யம்?" என்று விருத்திமதி கேட் டாள்.

நரிச்சி நல்லதங்கை:—"காரியம் நிறைவேறு முன்னே அதை மிகவும் பிரான சிநேகிதராக இருப் போரிடத்திலேகூட அனுவசியமாகச் சொல்லக் கூடாது. சொன்னுல் காரியம் கெட்டுப் போகும். ஆதலால் பொறு, நிறைவேறினபின் சொல்லுகிறேன்" என்று வாக்களித்தாள். நல்லதென்று சொல்லி விருத்தி மதி தன் வீட்டுக்கு விருந்தாக வந்த நரிச்சிக்கு ராஜோபசாரங்கள் செய்தாள். பரிவாரங்களுக்கும் யதேஷ்டமாக ஆகாரம் கொடுத்தாள். பிறகு சாயங்

காலமானவுடன் நரிச்சி நல்லதங்கை விருத்திமதியை நோக்கி "இப்போதெல்லாம் நீ அடிக்கடி அரண்மனைக்கு போய் வருவதுண்டோ?" என்று கேட்டாள்.

விருத்திமதி ஆமென்றாள்.

"உங்கள் குண்டோதர சிங்கனுக்கு நான்கு மனைவிகள் உண்டன்றே?" என்று நரிச்சி கேட்டாள்.

விருத்திமதி தலையசைத்தாள்.

"பட்டத்து ராணியின் பெயர் யாது?" என்று நரிச்சி கேட்டாள்.

"பட்டத்து ராணி பெயர் ஸுவர்ணம்பா" என்று விருத்திமதி சொன்னாள்.

"பேய்க்காட்டு காமாக்ஷி தனது தாயின் பெயர் மீனாக்ஷி என்று சொன்னாளே" என்றாள் நரிச்சி.

அதற்கு விருத்திமதி.—"ஆமாம். அந்த மீனாக்ஷி மூன்றாவது ராணி. பட்டத்து ராணியைக் காட்டிலும் மீனாக்ஷியினிடத்திலே தான் குண்டோதரராய சிங்க மஹாசிங்கருக்கு அதிகப் பிரியம்" என்றாள்.

நரிச்சி நல்லதங்கை.—"உனக்கு எந்த ராணியுடனே அதிக சிநேகம்?" என்று கேட்டாள்.

"பட்டத்து ராணியுடன்" என்று விருத்திமதி சொன்னாள்.

"உனக்கும் மீனாக்ஷிக்கும் பேச்சுவார்த்தை இல்லையோ?" என்று நரிச்சி கேட்டாள்.

விருத்திமதி:—" பேச்சு வார்த்தை இல்லாம லென்ன? அதெல்லாம் உண்டு. போஜல் வா என்று கூப்பிடுவாள். மஞ்சள் குங்குமமும் கொடுப்பாள். ஆனல் ஸுவர்ணும்பா என்னிடம் கன்னுடைய அந்த ரங்கங்களை யெல்லாம் சொல்லுவது போலே மீனுக்ஷி சொல்லமாட்டாள்" என்றுள்.

அப்போது சரிச்சி நல்லதங்கை:—" அந்த மீனுக்ஷிக்கு அந்தரங்கமான ஸ்நேகம் யார்?" என்று கேட்டாள்.

விருத்திமதி:—" மல்லிச்சி மாணிக்கவல்லிக்கும் மீனுக்ஷிக்கும் உடம்பு இரண்டு, ஆனல் உயிர் ஒன்று" என்றுள்.

இப்படி இவ்விருவரும் ஸம்பாஷணை செய்து கொண்டிருக்கையில் திடீரென்று குண்டோதர ராய சிங்க மஹாசிங்கருடைய சிப்பாய்கள் வந்து சரிச்சி நல்லதங்கையைக் கைதிபண்ணி விலங்கு போட்டுக் கொண்டுபோய்ச் சிறைப்படுத்தி விட்டனர். விலங்கு பூட்டும்பொழுது சரிச்சி கோவென்றழுதாள். விருத்தி மதி "நல்லதங்காய், நீ பயப்படாதே. ஏதோ தவறுக லாக இவர்கள் வேலை செய்கிறார்கள் என்று தோன்று கிறது. நான் போய் ஸுவர்ணும்பாவிடம் சொல்லி உடனே உன்னை மீட்கிறேன்" என்று சொல்லி அரண் மனைக்குப் போனுள்.

கதம்ப வனத்தில் நடந்த செய்திகள்.

கதம்ப வனத்தில் மூன்றுலகம் புகழும்படி அரசு செலுத்திய வீராதிவீரகுண்டோதர ராயசிங்க மஹாசிங்கனுடைய அரண்மனை அந்தப்புரத்தில், அவனுடைய பட்டத்து ராணியாகிய ஸுவர்ணம்பா தனியே உட்கார்ந்திருந்தாள். சிங்க ஜாதிக்குள்ளே இவள் தன் போலே அழகும், கல்வியும் பராக்கிரமமும் உடையவள் வேறில்லை யென்று தன் மனதுக்குள்ளே நினைத்திருந்தாள். இவளுக்கு அந்தக் காட்டில் வசித்த மிருகங்களனைத்திலும் அதிக அந்தரங்கமான ஸ்நேகம் யாரிடத்திலென்றால், விருத்திமதி யென்ற எருமைச்சியினிடத்திலேயாம். அந்த விருத்திமதி வெயர்க்க வெயர்க்க ஓடியே வந்து சிங்கச்சி ஸுவர்ணதேவியின் காலில் விழுந்தாள்.

"என்ன விஷயம்?" என்று சிங்கச்சி கேட்டாள்.

அப்போது விருத்திமதி சொல்லுகிறாள் :—

"மகாராணியே, கேள். இன்று காலை என் வீட்டுக்குப் பொன்னங்காட்டிலிருந்து என் தோழியாகிய நரிச்சி நல்லதங்கை வந்தாள். அவளை என் வீட்டுக்குள் புகுந்து இந்த ராஜ்யத்து சிப்பாய்கள் கைதி பண்ணிக்கொண்டு போயினர், ஏதோ தவறுதலாகவே இந்தக் காரியம் நடந்துவிட்டதென்று நினைக்கிறேன். யாரோ அவள்மீது குண்டோதர மஹாசிங்கனிடம் குற்றம் சார்த்திப் பேசியிருக்கிறார்கள். அதனால் அவளுக்கு

இந்தக் கதி நேரிட்டு விட்டது. ஐயோ! நான் என்ன செய்வேன்? என்னுடைய உயிர்த்தோழி யாயிற்றே! நான் இந்த அரண்மனைக்கு எந்தனையோ காலமாக உண்மையுடன் உழைத்து வருகிறேனே! என் வீட்டுக்கு வந்த தோழிக்குச் செய்யப்பட்ட அவமானம் எனக்கே செய்யப்பட்டது போலாகுமன்றே? மேலும் அவள் பொன்னங்காட்டு வீரவர்ம ராஜனைக் குழந்தைப் பருவ முதலாக வளர்த்த செவிலித்தாய். அந்த வீரவர்மன் இவளைத் தாய்க்குச் சமானமாக ஆதரித்து வருகிறான். இவளைப்பிடித்து குல்டோதர சிங்கர் அடைத்து வைத்திருக்கிறார் என்ற செய்தி கேட்டால், அவன் உடனே கதம்பவனத்தின்மீது படையெடுத்து வருவான். அவன் படை யெடுத்துவந்தால் அவனை எதிர்த்துப் போர்செய்ய நமது ஸைந்யத்தால் முடியாது. நமது ராஜ்யம் அழிந்துபோய்விடும். ஐயோ! வீரவர்மனை எதிர்த்தபடியாலே தண்டி ராஜன் பட்ட பாடும், அவன் தம்பி உத்தண்டி இப்போது படுகிற பாடும் தெரியாதா? மஹாராணிதானே நீயும்; நீயும் நானும் இணை பிரியாமல் இரண்டு பக்ஷிகள் ஒரு கூட்டில் வாழும் முறைமையாலே, இருவரும் அன்பாகிய கூட்டில் வாழ்ந்து பல வருஷங்களாக ஒன்றுகூடி இருக்கிறோம். சூரியனுக்கும் குளப்பூவுக்கும் ஸ்நேக முண்டாகும் போது அவ்விரண்டுக்கும் சமானத் தன்மை உண்டாகிறது. மேலும் கீழும் அன்பினல் ஸமத்வத்தை அடைகின்றன. உன்னைப்போலே குலத்திலும், நலத்திலும், மஹிமையிலும் சிறந்த சிங்கச்சிமார் எத்தனையோ பேர் உல

கத்தில் இருக்கக்கூடும். உனக்கு அவர்கள் எல்லோரை யும்விட என்மேலே அதிக அன்பு உண்டாயிருக்கிறது. நான் கீழ்க்குலத்திலே பிறந்தாலும், எப்போதும் என் கண்களில் பதுமைபோலே உன்னை வைத்துக்கொண்டு போற்றுவதனால், நான் மஹிமைபெற்று உன்னுடைய அன்புக்குப் பாத்திரமானேன். எனக்கு மஹத்தான கஷ்டம் நேரிட்டிருக்கும்போது, நீ ஸஹித்திருப்பது நியாயமன்று. எனக்கு நீயே துணை, நீயே தோழி, நீயே தாய், தந்தை, நீயே தெய்வம், எனக்கு உன்னைத் தவிர இந்த உலகத்தில் வேறு கதி கிடையாது. நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று சொல்லி கோவென்றலறி அழுதாள். அப்போது சிங்கச்சி ஸுவர்ணதேவி அவளை ஸமாதானப்படுத்திவிட்டு உடனே பக்கத்திலிருந்த பாங்கி ஒருத்தியைக் கூவி:— "பெண்ணே, நீ போய் ராயசிங்கரை நான் அழைத்து வரச் சொன்னதாகச் சொல்லு. உடனே கூட்டிவா" என்றது.

ஸாயங்காலம்; பொழுது புகுந்துவிட்டது. சிங்க குண்டோதரன் தனது ராஜதானியாகிய கதம்ப நகரத் திற்கு ஸமீபத்தில் ஓடும் நர்மதா நதியில் ஸாயங்கால ஸ்நானம் செய்து முடித்துவிட்டு ஸந்தியா வந்தனம் பண்ணிக்கொண்டிருந்தான். அந்த ஸமயத்தில் பாங்கி போய் காலிலே விழுந்தாள்.

"என்ன சங்கதி?" என்று கேட்டான்.

"பெரிய ஆபத்காம், இன்னதென்று எனக்குத் தெரியாது. ஸுவர்ணதேவி தேவரீரை உடனே

அழைத்து வரும்படி கட்டளையிட்டார்" என்றது. "பயந்து, நடுங்கிப் போய் குண்டோதர சிங்க மறை சிங்கன் ஸந்தியாவந்தனத்தைப் பாதியிலேயே நிறுத்தி விட்டு, அப்படியே ஓடி அந்தப்புரத்துக்குள் வந்தது. அங்கு வந்து பார்த்தால் விஷயம் ஒன்றையும் காணவில்லை. மூன்று ஆஸனங்கள் போட்டிருந்தன. ஏருமைச்சி விருத்திமதி ஒன்றின்மேலே வீற்றிருந்தாள். மஹாராணி ஸுவர்ணதேவி ஒன்றில் வீற்றிருந்தாள். மற்றொன்று வெறுமே இருந்தது. "என்ன விஷயம்?" என்று கேட்டுக்கொண்டே குண்டோதரன் அந்தப் புரத்திற்குள் புகுந்தான். இவனைக் கண்டவுடன் விருத்திமதியும் ஸுவர்ணையும் தம் ஆஸனங்களி லிருந்தெழுந்து நின்றனர். "என்ன விஷயம், என்ன விஷயம்?" என்று குண்டோதரன் நெரித்துக் கேட்டான்.

"விருத்திமதியிடம் கேளுங்கள். அவள் சொல்லுவாள்" என்று ஸுவர்ணை சொன்னாள்.

"ஓஹோ பெரிய விபத்து ஒன்றும் இல்லை, அந்த நரிச்சி விஷயம்தான். அவளை விடுவிக்கச் சொல்லி இந்த எருமைச்சி கேட்க வந்திருக்கிறாள். நாம் மடத்தனமாக அளவுக்கு மிஞ்சி மனம் பதற இடம் கொடுத்துவிட்டோம். இருந்தாலும் நம்முடைய பயத்தை வெளியே காண்பிக்கக்கூடாது" என்று மனதில் நினைத்துக்கொண்டு மீசைகளைத் திருகிவிட்டு, லேசான ராஜநடை நடந்துபோய் மூன்றும் ஆஸனத்தில் உட்கார்ந்துகொண்டு குண்டோதரன் கொண்டை

யைக் கனைத்து நோராக்கிக்கொண்டு விருத்திமதியை நோக்கி "என்ன விஷயம்?" என்ருன்.

அப்போது விருத்திமதி சொல்லுகிருள்:— "ராஜேச்வரா, தங்களுடைய ராஜ்யத்திற்கு பெரிய விபத்து நேரிட்டிருக்கிறது. தங்கள்மீது வீரவர்மன் படையெடுத்து வரப்போகிருன். இவ்வளவு காலம் இந்த ராஜ்யத்தில் ஸமாதான மிருந்தது. இப்போது பாழ்த்த யுத்தம் இங்கும் வந்து பிரவேசிக்கப் போகிறது. ஐயோ, நாங்கள் என்ன செய்வோம்? குடிகளெல்லாம் ஸ்ரீவர்ணதேவி தன்னுடைய பெற்ற குழந்தைகளுக்கு ஸமானமாக நினைப்பவளாயிற்றே! அவளுடைய பழக்கத்தால் எனக்கு இந்த ராஜ்யத்தினிடம் அருமையான பக்தி உண்டாய்விட்டதே! என் உயிருக்குமாத்திரம் தீங்கு வருவதாக இருந்தால் நான் அதை பொருட்டாக நினைக்கமாட்டேனே! ராஜ்ய முழுமைக்கும் ஹானி வருகிறதே! ஆஹா! என் செய்வேன்? எத்தனை ஸ்ரீமங்கலிகள் தாலி யறுப்பார்கள்! எத்தனை தாய்மார் பிள்ளை யற்றுப் போவார்கள்! எத்தனை குழந்தைகள் தந்தையற்றுப்போகும்! எத்தனை தாய்மார் பிள்ளைகளைச் சாகக்கொடுத்து எங்கும் தீராத துக்கத்துக்காளாய், பரத்திலும் புத் என்ற நரகத்தில் விழும் படியாகும்! ஐயோ, புத்திரர்களில்லாத பிதாக்கள், புத் என்ற நரகத்துக்குப் போவார்களென்று சாஸ்திரங்கள் திண்ணம் கூறுகின்றனவே! உமது புத்திரர்களே போரில் மடியும்படி நேர்ந்தாலும் நேரிடக்கூடுமே! அப்போது நீர் எப்படி யெல்லாம் கஷ்டப்படுவீரோ,

அறிகிலேன். தேவரீருடைய பிராணனுக்கே ஆபத்தல்லவா? நாங்கள் என்ன செய்வோம்? இனி நான் ஸுவர்ணதேவியின் முகத்தில் எப்படி விழிப்பேன்?" என்று சொல்லி கோவென்று விம்மி விம்மி அழுதான்.

குண்டோதரராயன்:—" என் அந்த வீரவர்மன் நம்மீது படையெடுத்து வரப்போகிறான்? அதை முதலாவது சொல்லு" என்றுரைத்தான்.

அப்போது விருத்திமதி:—" தங்களுடைய சிப்பாய்கள் வீரவர்மனுடைய தாய்க்கு ஸமானமான செவிலித்தாயைப் பிடித்துச் சிறைப்படுத்திவிட்டார்கள்! இந்த விஷயம் அவன் கேட்டால், சுயம்வரம்கூட பொறுக்கமாட்டான். யுத்தம் வருவது நிச்சயம்" என்று சொன்னாள்.

இது கேட்ட குண்டோதர சிங்க மஹாசிங்கராயன் "எனது சிப்பாய்களால் கைதி செய்யப்பட்ட வீரவர்மனுடைய செவிலித்தாயின் நாமம் யாது?" என்று வினவினான்.

" நரிச்சி நல்ல தங்கையம்மன்" என்று விருத்திமதி சொன்னாள்.

இதைக் கேட்ட குண்டோதர சிங்கராய மஹாசிங்கன் கட கட கட கட கட கட வென்று சிரிக்க ஆரம்பித்தான்.

கணைதக் கொத்து

வைசாக்தன் என்ற பண்டாரத்தின் கதை.

வேகபுரத்தில் வீதியிலே ஒரு பண்டாரம் நன்ருகப் பாட்டுப் பாடிக்கொண்டு வந்தான்.

அவன் நெற்றியிலே ஒரு நாமம், அதன் மேலே விபூதிக் குறுக்கு, நடுவில் ஒரு குங்குமப் பொட்டு.

"உனக்கு எந்த ஊர்?" என்று கேட்டேன்.

"நடுப்பட்டி" என்று அந்தப் பண்டாரம் சொன்னன்.

"நீ எந்த மதம்?" என்று கேட்டேன்.

"வைசாக்தம்" என்ருன்.

சிரிப்புடன் "அதற் கர்த்த மென்ன?" என்று கேட்டேன்.

"வைஷ்ணவ—சைவ—சாக்தம்" என்று விளக்கினன்.

"இந்த மதத்தின் கொள்கை யென்ன?" என்று கேட்டேன்.

அப்போது பண்டாரம் சொல்லுகிருன்:—

"விஷ்ணு தங்கை பார்வதி; பார்வதி புருஷன் சிவன். எல்லா தெய்வங்களும் ஒன்று. ஆகலால் தெய்வத்தை நம்ப வேண்டும், செல்வத்தைச் சேர்க்க

வேண்டும். இவ்வளவு தான் எங்கள் மதத்தினுடைய கொள்கை" என்றான்.

"இந்த மதம் யார் உண்டாக்கினது?" என்று கேட்டேன்.

"முன்னோர்கள் உண்டாக்கினது. தனித் தனியாகவே நல்ல மதங்கள் மூன்றையும் ஒன்று சேர்த்தால் மிகவும் நன்மை யுண்டாகு மென்று எனக்குத் தெரிந்தது வெங்கடேசப் பெருமாளும், தில்லை நடராஜரும் கனவிலே சொன்னார்கள். ஆகலால் ஒன்றுகச் சேர்த்தேன்" என்று அந்தப் பண்டாரம் சொன்னான்.

சிறு கதை.

ஒரு வீட்டில் ஒரு புருஷனும் ஸ்திரீயும் குடியிருந்தார்கள். ஒரு நாள் இரவில் புருஷன் வீட்டுக்கு வரும் போது ஸ்திரீ சமையல் செய்து கொண்டிருந்தாள். சோறு பாதி கொதித்துக் கொண்டிருந்தது. அந்த ஸ்திரீ அன்றிரவு கொஞ்சம் உடம்பு அசௌகரியமாக யிருந்தபடியால், தனக்கு ஆஹாரம் வேண்டாமென்று நிச்சயித்துப் புருஷனுக்கு மாத்திர மென்று சமைத்தாள்.

புருஷன் வந்தவுடன், "நான் இன்றிரவு விரதமிருக்கப் போகிறேன். எனக்கு ஆஹாரம் வேண்டாம்" என்றான்.

உடனே பாதி கொதிக்கிற சோற்றை அவள் அப்படியே சும்மா விட்டுவிட்டு அடுப்பை நீராவ்

அவித்து விடவில்லை. தங்களிருவருக்கும் உபயோக மில்லாவிடினும் மறுநாள் காலையில் வேலைக்காரிக்கு உதவு மென்று நினைத்து, அது நன்றாகக் கொதிக்கும் வரை காத்திருந்து வடித்து வைத்து விட்டுப் பிறகு நித்திரைக்குச் சென்றாள்.

அது போலவே, கர்மயோகி தான் ஒரு தொழில் செய்யத் தொடங்கி, இடையிலே அது தனக்குப் பய னில்லை யென்று தோன்றினால், அதை அப்படியே நிறுத்தி விடமாட்டான். பிறருக்குப் பயன் தருமென் பதைக் கொண்டு, தான் எடுத்த வேலையை முடித்த பிறகே வேறு காரியம் தொடங்குவான்.

பிரார்த்தனை.

கிழவனுடைய அறிவு முதிர்ச்சியும், நடுவயதிற் குள்ள மனத்திடனும், இளைஞருடைய உத்ஸாகமும், குழந்தையின் ஶ்ரத்தையமும், தேவர்களே, எனக்கு எப் போதும் நிலைத்திருக்கும்படி அருள் செய்க.

சில வேடிக்கைக் கதைகள்.

1

ஆனைக்கால் உதை.

ஒரு ஊரில் ஆனைக்கால் வியாதிகொண்ட ஒருவன் பழக்கடை வைத்திருந்தான். அந்தத் தெருவின் வழி யாகச் சில பிள்ளைகள் அடிக்கடி போவதுண்டு. போகும்போதெல்லாம் அவர்களுக்கு அந்தப் பழங் களில் சிலவற்றை எடுத்துக்கொண்டு போக வேண்டு

மென்ற விருப்பம் உண்டாயிற்று. கிட்டப் போனால் ஆனைக்கால்காரன் தனது பிரம்மாண்டமான காலைக் காட்டிப் "பயல்களே, கூடையிலே கை வைத்தால் உதைப்பேன். ஜாக்கிரதை!" என்பான்.

"சாதாரணைக் காலால் அடித்தால் கூட எவ் வளவோ நோகிறதே, இந்த ஆனைக் காலால் அடி பட் டால் நாம் செத்தே போவோம்" என்று பயந்து பிள்ளைகள் ஓடி விடுவார்கள்.

இப்படி யிருக்கையில் ஒரு நாள் கடைக்காரன் பாராக்காக இருக்கும் சமயம் பார்த்து, ஒரு பையன் மெல்லப் போய்க் கூடையிலிருந்து ஒரு பழத்தைக் கையிலெடுத்தான். இதற்குள் கடைக்காரன் திரும்பிப் பார்த்து, தனது பெரிய காலை சிரமத்துடன் தூக்கிப் பையனை ஒரு அடி அடித்தான். பஞ்சுத் தலையணையால் அடித்தது போலே அடி மெத்தென்று விழுந்தது. பையன் கலகலவென்று சிரித்துத் தெரு முனையிலே இருந்த தனது நண்பர்களைக் கூவி "அடே, எல்லோ ரும் வாருங்களடா! வெறும் சனை; எலும்பில்லை" என்றான். மனிதர்க ளெல்லாரும் பல விஷயங்களில் குழந்தைகளைப் போலவே காணப்படுகிறார்கள். "வெறுஞ் சனை"யாக இருக்கும் கஷ்டங்களைத் தூரத்திலிருந்து "எலும்புள்ள" கஷ்டங்களாக நினைத்துப் பிறர் அவதிப்படுவதை நாம் பார்த்ததில்லையா? நாம் அங் ஙனம் அவதிப்பட்டதில்லையா?

2

கவிராயனும் கொல்லனும்.

ஐரோப்பாவிலே மஹா கீர்த்தி பெற்ற கவியொருவர் ஒரு கொல்லன் பட்டறை வழியாகப் போய்க் கொண்டிருந்தார். அப்போது பாட்டுச் சத்தம் கேட்டது. கவிராயர் உற்றுக் கேட்டார். உள்ளே கொல்லன் பாடிக்கொண்டிருந்தான். அந்தப் பாட்டு அந்தக் கவிராயராலே எழுதப்பட்டது. அதை அவன் பல வார்த்தைகளைச் சிதைத்தும் மாற்றியும் சந்தங் கவறியும் மனம்போன படிக்கெல்லாம் பாடிக்கொண்டிருந்தான். கவிராயருக்கு மஹா கோபம் வந்துவிட்டது; உடனே உள்ளே போய்க் கொல்லனுடைய பட்டறையிலிருந்த சாமான்களையும் கருவிகளையும் காலுமாறுக மாற்றி வைத்துக் குழப்ப மூண்டாக்கத் தொடங்கினர்.

கொல்லன் கோபத்துடன் :—"நீ யாரடா, பயித்தியம் கொண்டவன், என்னுடைய சாமான்களை யெல்லாம் கலைத்து வேலையைக் கெடுக்கிறாய்?" என்றான்.

"உனக்கென்ன?" என்று கேட்டார் கவிராயர்.

"எனக்கென்னவா! என்னுடைய சொத்து, பயிர், என்னுடைய ஜீவனம்!" என்றான் கொல்லன்.

அதற்குக் கவிராயர் :—"அது போலவே தான், என்னுடைய பாட்டும். நீ சில நிமிஷங்களுக்கு மூன்பு பாடிக்கொண்டிருந்த பாட்டை உண்டாக்கிய கவிராயன் நானே; என்னுடைய பாட்டை நீ காறுமாறுகக் கலைத்தாய், எனக்கு அதுதான் ஜீவனம். இனி

மேல் நீ சரியாகப் படித்துக் கொள்ளாமல் ஒருவனுடைய பாட்டைக் கொலை செய்யாதே" என்று சொல்லிவிட்டுப் போனர்.

3

அமெரிக்காவுக்குப் போன சீன ராஜகுமாரன்.

சீன தேசத்திலிருந்து ஒரு ராஜகுமாரன் அமெரிக்காவுக்குப் போயிருந்தானம். அப்போது ஒரு பிரபுவின் மனைவி சீனத்து விருந்தாளியுடன் பேசிக்கொண்டிருக்கையிலே அவள், "உங்களுடைய சீன தேசத்தில் கலியாணமாகும் வரை மணப் பெண் தனது புருஷன் முகத்தைப் பார்ப்பது வழக்க மில்லையாமே! மெய்தானே?" என்று கேட்டாள். அதற்கு ராஜகுமாரன்:— "உங்கள் தேசத்தில் சில பெண்கள் கலியாணமான பிறகு தனது புருஷன் முகத்தைப் பார்ப்பதில்லை யென்று கேள்விப்படுகிறேன். அது மெய்தானே?" என்றான்.

4

சாஸ்திரியார் மகன்.

ஒரு பிராமணப் பையன் தனது விளையாட்டு வண்டி தெருவிலே ஓடிந்து போனபடியால், அதைப் பார்த்து அழுதுகொண்டு நின்றான். அதைக் கண்ட ஒரு சிப்பாய்:—"குழந்தாய், ஏன் அழுகிறாய்?" என்று கேட்டான்.

பையன் :—" வண்டி ஒடிஞ்சு போச்சு."

சிப்பாய் :—" இதற்காக அழாதே. வீட்டிற்குப் போ. உன்னுடைய தகப்பனர் அதைச் செப்பனிட்டுக் கொடுத்து விடுவார்."

பையன்:—"எங்கப்பா சாஸ்திரியார், அவராலே வம்படியை நேர்ப்படுத்திக் கொடுக்க முடியாது. அவருக்கு ஒரு தொழிலும் தெரியாது. யார் வீட்டிலாவது அரிசி கொடுத்தால் வாங்கிக்கொண்டு வருவார். வேறே ஒரு இழவும் தெரியாது." என்று விம்மி விம்மி யழுதான். சிப்பாய் சிரித்துக்கொண்டே போய் விட்டான்.

5

ஓர் வியாதிக்கு ஓர் புதிய காரணம்.

வேதபுரி என்ற ஊரில் ஒரு பள்ளிக்கூடத்து வாத்தியாரும் ஒரு செட்டியாரும் சிநேகமாக இருந்தார்கள். வாத்தியார் செட்டியாரிடம் கொஞ்சம் கடன் வாங்கி யிருந்தார். செட்டியாருக்கு ஒரு நாள் காலிலே மூள் தைத்துப் பிரமாதமாக வீங்கி யிருந்தது.

"செட்டியாரே, கால் ஏன் வீங்கி யிருக்கிறது?" என்று வாத்தியார் கேட்டார்.

"எல்லாத்துக்கும் காரணம் கையிலே பணமில்லாததுதான்" என்று செட்டியார் சொன்னார்.

சில தினங்களுக்குப் பின் வாத்தியாருக்கு பலமான ஜலதோஷம் பிடித்திருந்தது. செட்டியார் வந்தார். "என், ஐயரே, ஜலதோஷம் பலமாக இருக்கிறதே" என்று கேட்டார்.

"கையிலே பணமில்லை. அது தான் சகலத்துக்கும் காரணம்" என்று வாத்தியார் சொன்னார். செட்டியார் புன்சிரிப்புடன் போய் விட்டார்.

அந்தரடிச்சான் ஸாஹிப் கதை.

மொகலாய ராஜ்யத்தின் போது, தில்லி நகரத்தில் அந்தரடிச்சான் ஸாஹிப் என்ற ஒரு ரத்ன வியாபாரி இருந்தான். அவனுக்குப் பிதாபத்து லக்ஷம் ரூபாய் மதிக்கத் தகுந்த பூஸ்திதியும் பணமும் நகைகளும் வைத்துவிட்டுப் போனர். அவன் அவற்றை யெல்லாம் பால்யத்தில் சூதாடித் தோற்று விட்டான். அந்தரடிச்சான் ஸாஹிபுக்கு ஒரு பிள்ளை பிறந்தது. அவனுக்குச் சொத்தான் ஸாஹிப் என்று பெயர். இந்தப் பிள்ளையும் அவன் மனைவியாகிய வில்லில்லாப்பா என்பவளும், அவனுடைய சிறிய தகப்பன், ஒரு கிழவன், அவன் பெயர் மூர்க்கே போட்டான் ஸாஹிப் ஆகிய மேற்படி கிழவனுமாக, இத்தனை பேர் அடங்கிய, பெரிய குடும்பத்தை அவன் புகையிலைக் கடை வைத்து ரம்ரகஷணை செய்து வந்தான்.

இப்படி யிருக்கையில் அந்தரடிச்சானுக்குத் தீராத வயிற்றுவலி வந்தது. அத்துடன் கண்ணும் மங்கிவிட்டது. எட்டு யோஜனை தூரத்துக்கப்பால், ஒரு அதிர்வெடிச் சத்தம் கேட்டால், அவன் இங்கே பயந்து நடுங்கிப்போய், நூறு குட்டிக்கரணம் போடுவான்.

தலைக்குமேல் காக்கை பறக்கக் கண்டால், தெருவிலே போகையில் ஆந்தை கத்தினால், தூண குறுக்கிட்டால், வண்டி எதிரே ஓடிவந்தால், சிப்பாயைக் கண்டால், இப்படி எவ்வித அபாயக்குறி நேரிட்டாலும்,

ஒவ்வொரு முறையும் நாறு நாறு குட்டிக்கரணம் போடுவது அவனுடைய வழக்கம்.

இங்ஙனம் தெருவில் போகும் போதும், வீட்டில் இருக்கும் நேரத்திலும் குட்டிக்கரணம் போட்டுப் போட்டு அவனே நெட்டைக் குத்தலாக நிறுத்துவதே கஷ்டமாய் விட்டது. ஒரு நாள் மேற்படி அந்தரடிச்சானிடம் அவனுடைய பிள்ளையாகிய செத்தான் வாஹிப் பின்வருமாறு சொல்லலானான் :—

"பப்பாரே! சுத்தமாக ரஸ மில்லே. காசு கொண்ட காலையில் நம்கீ ரொட்டி ஜாஸ்தி. மீன் இல்லே. சாப்பாட்டுக்குக் கஷ்டம். நமக்கு எதுவும் கைகூட வில்லே. ஹிம் ஹீம் ஹாகும்! நீ ரொம்பக் கட்டிக் காரன் என்று நீ நினைத்துக்கொண்டிருக்கிறாய். உம் ஹாகும்! உன்னிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டும். நாளை கேட்கிறேன், ஹிக்கீம்! ஹிக்கீம்; இப்போதே கேட்டு விடட்டுமா? ஹிக்கா ஹிக்கா! ஹ்ம். ஹ்ம். ஜிம். ப்ஸ்ஸ்ஸ்ஸ். நீ யன்றே இந்த நிலைமையே குடும் பத்தைக் கொண்டு வந்து விட்டாய். ஒய்யோம்! ப்யோம்! ப்யோம். நம்கீ ரொட்டி ஜாஸ்தி, மீன் இல்லே. சாப்பாட்டுக்குக் கஷ்டம்! பாலா, மணிலாக் கொட்டை வாங்கிக் கொடு." என்றான்.

அப்போது அந்தரடிச்சான் சொல்லுகிறான் :—

"க்யாரே? நம்கீ ரொட்டி இல்லே. நீ மீனில்லே யென்று நம்மிடத்திலே கோபிக்கிறாயே? அந்தக் கிழ மூர்ச்சே போட்டான் ஸாஹப் இருக்கிறார். அவராலே

வீட்டுக்கு ஒரு கம்படி வருமானம் கிடையாது. ஹாம்! என்ன சொன்னையடா! நான் கூ காடினேன்? என்னை யாடா சொன்னாய்?" என்று கேட்டான்; உடனே முந்நாறு பல்டியடிக்துச் செத்தான் ஸாஹப் மேலே விழுந்தான்.

இப்படி இருக்கையில் அந்த ஊர் பாத்ஷாவுக்குப் பிறந்த நாள் பண்டிகை வந்தது. பெரிய கூட்டம். தோரணங்கள்; டான்கள்; பந்தர்கள்; மாலைகள்; விளக்கு வரிசைகள்; புலி வேஷங்கள், பெரிய பெரிய வஸ்தாதுகள் வந்து குஸ்திச் சண்டைகள், அதிர்வெடி ஜமா!

அதுக்கு நடுவே அந்தாடிச்சான் ஸாஹப் போய் நுழைந்தான். இக்தனை ஜமாவையும் பாத்ஷா ஏழாம் உப்பரிகையின் மேலே இருந்து பார்த்துக்கொண்டிருந்தான். ஓரிடத்தில் கத்திச் சண்டை நடந்துகொண்டிருந்தது.

காலை ஏழு மணி முதல் பகல் பத்து மணி வரையில் மூன்று மணி நேரமாக ஒரு க்ஷணம்கூட சிரமபரிஹார மில்லாமல் அங்கு இரண்டு பயில்வான்கள் கத்திப் போர் செய்துகொண்டிருந்தனர். போர் வெகு ஜோராக நடக்கிறது. அந்த இடத்தில் பெரிய கும்பல் கலையாமல், அத்தனை பேரும் சித்திரப் பதுமைகள் போலே அசையாமல் மேற்படி பயில்வான்களின் சண்டையைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டு நின்றனர்.

பல இடங்களில் அந்தரடிச்சான் ஸாஹப் தட்டுவும் கொட்டுவும் அங்கே வந்து விழுந்தான். கூட்டம் பளீரென்று விலகிற்று. ஒருத்தன் ஹோ! என்று கத்திக்கொண்டோடிப் போனான். அத்தனை கூட்டமும் ஹோ, ஹோ, ஹோ, என்று கத்திக்கொண்டு ஓடிப்போயிற்று. இவன் படபடவென்று குட்டிக்கரணம் போட்டுக்கொண்டே கத்திச் சண்டை வஸ்தாதுகளின் மேலே போய் விழுந்தான். அவர்கள் ஹோ என்று கதறி ஒருவர் வாள் ஒருவர்மீது பாய இரத்தம் பீறிட்டுக் கீழே சாய்ந்தனர். இதை யெல்லாம் ஏழாம் உப்பரிகையின் மேலே யிருந்து பார்த்துக்கொண்டிருந்த பாத்ஷா "ஹோ, ஹோ, இவனை யன்றே நமது ஸைந்பதியாக நியமிக்க வேண்டும்!" என்று கருதி அவனை அழைத்து "நீ நமது ஸைந்பதி வேலையை ஏற்றுக்கொள்" என்றான். இவன் அந்த வார்த்தையைக் கேட்டவுடன் ஸைன யென்ற ஞாபகமும், சண்டை யென்ற நினைவும், அதிலிருந்து மரண மென்ற ஞாபகமும் மனதில் தோன்ற உடனே பயந்து நடுங்கிப் போய் முப்பது குட்டிக்கரணம் போட்டுப் பாத்ஷாவின் மேலே போய் விழுந்தான்.

"ஓஹோ! இவன் தனது வணக்கத்தையும் பராக்ரமத்தையும் நம்மிடத்தில் நேரே காண்பித்தான்" என்று பாத்ஷா ஸந்தோஷத்துடன் வியந்து அவனுக்கு லக்ஷம் மோஹரா விலையுள்ள ஒரு வயிரமாலையை ஸம்மானம் கொடுத்து, ஸைந்பதி நியமன உத்தரவும் கொடுத்தனுப்பினர்.

அந்த பாக்ஷாவின் காலத்தில எங்கும சண்டையே கிடையாதாகையால், அந்தாடிச்சான் ஸாஹஸப் போரில் தனது திறமையைக் காட்ட ஸந்தர்ப்பமே வாய்க்காமல் சாகுமளவும், ஸைனிக என்ற நிலைமையில் ஸௌக்கியமாக நாளொன்றுக்கு ஸகூடம் குட்டிக் கரணங்கள் போட்டுக்கொண்டு, இதனாலேயே எட்டுத் திசைகளிலும் கீர்த்தி யோங்க மிகவும் மேன்மையுடன் வாழ்ந்திருந்தான்.

கிளிக் கதை.

என்னூறு வருஷங்களுக்கு முன்பு திருவண்ணாமலையில் மிளகாய்ப்பழச்சாமி என்றொரு பரதேசி இருந்தான். அவன் நாள்தோறும் இருபது மிளகாய்ப் பழத்தைத் தின்று ஒரு மிடறு தண்ணீரும் குடிப்பான். அவனிடம் ஒரு கிளியுண்டு. மடத்துக்கு வரும் ஜனங்களிடம் ஸ்காந்த புராணம் சொல்லிப் பிரசங்கம் செய்வது அந்தப் பரதேசியின் தொழில். பிரசங்கந் தொடங்கு முன்பு பரதேசி கிளியை நோக்கி:—

"முருகா, முருகா, ஒரு கதை சொல்லு" என்பான்.

உடனே, கிளி ஏதோ கங்கா மங்கா வென்று குழறும். பரதேசி சொல்லுவான் :—

"அடியார்களே, இங்கிருப்பது கிளியன்று. இவர் சுகப்பிரம ரிஷி. இவர் சொல்லிய வசனம் உங்கள் செவியில் தெளிவாக விழுந்திருக்கும். சிறிது கவனக்

குறைவாக இருந்தாலும் நான் அவர் சொல்லியதை மற்றொரு முறை சொல்லுகிறேன்.

கங்கா மங்கை மைந்தன்
பாம்பைத் தின்றது மயில்
மயிலின் மேலே கந்தன்.

இதன் பொருள் என்னவென்றால்....." இவ்விதமாகத் தொடங்கிப் பரதேசிக் கந்த புராண முழுவதையும் நவரஸங்களைச் சேர்த்துச் சோணமாரியாகப் பொழிவான். ஜனங்கள் கேட்டுப் பரவச மடைந்து போய்ப் பொன் பொன்னுகப் பாதகாணிக்கை குவிப்பார்கள். அவன் அந்தப் பணத்தை எவ்விதமாகச் செலவழிப்பானே யாருக்கும் தெரியாது. அது தேவர் மனுஷ்யர் அஸுரர் மூன்று ஜாதியாருக்கும் தெரியாத ரஹஸ்யம். இருந்தாலும் ஊரில் வதந்தி யென்றால், இவன் மேற்படி பொன்னை யெல்லாம் மலையடிவாரத்தில் எதோ ஒரு குகைக்குள் பதுக்கி வைத்திருப்பதாகவும், இருபது வருஷத்துக்குப் பிறகு அத்தனை பொன்னையும் எடுத்துப் பெரிய கோயில் கட்டப் போவதாகவும் சொல்லிக் கொண்டார்கள்.

இப்படி யிருக்கும்போது ஒரு நாள், திடீரென்று மிளகாய்ப்பழச்சாமி மறைந்து போய்விட்டான். பொழுது விடிந்து தூப்பு வேலை செய்யும் கிழவி வந்து பார்க்கும்போது மடம் திறந்து கிடந்தது. உள்ளே போய்ப் பார்த்தால், சாமியார், கூடு, கிளி, தடி, புஸ்தகம், திருவோடு முதலிய யாதொரு வஸ்துவுமில்லை. கிழவி கூவிவிட்டு வீடு போய்ச் சேர்ந்தாள். ஊரில்

காரிக்குக் கொரிந்தது. பொன்னை ஒரு வேளை பரதேசி மறந்துபோய் வைத்துவிட்டுப் போயிருக்கக்கூடும்; அதை யெடுத்து யாதேனும் ஓர் கர்மம் பண்ணலா மென்ற கர்மசிந்தையினால் அதிகாரி சேவகரை விட்டு மலையிலுள்ள பொந்து முழுவதையும் கொளை போட்டுப் பார்க்கச் சொன்னான். சிற்சில இடங்களில் ஓரிரண்டு பொன் அகப்பட்டது. தேடப் போனவர்களில் பல ரைக் கேள் கொட்டிற்று. அதேகரைப் பாம்பு தீண் டிற்று. அதிகாரி தேடுவதை நிறுத்திவிட்டான். சில தினங்களுக்கப்பால் வாழைப்பழச் சாமியாரென்ற மற்றொரு பரதேசி ஒரு கட்டுக் கட்டி விட்டான். அதெப்படி யென்றால், மிளகாய்ப் பழச்சாமி பொற் குடத்துடன் ஆகாயத்தை நோக்கிப் பறந்து போய் மேகமண்டலத்துக்குள் நுழைந்ததைத் தான் பக் கத்திலே யிருந்து பார்த்ததாகவும், தானே யிருந்து வழியனுப்பினதாகவும், புளி பண்ணினான். அதிகாரி அடியார் விசுவாச முள்ளவனைகையால் அந்தப் பரதேசி சொன்னதை நம்பி, அவர் பொன்னைத்தான் தேடப் போனது குற்றமென்று நினைத்து, மேற்படி மிளகாய்ப் பழச்சாமிக்கு வருஷந்தோறும் மேற்படி மடத்தில் குரு பூஜை நடத்தி வைப்பதாகவும், மடத்தை வாழைப் பழச்சாமி வைத்துக்கொண்டு கந்தபுராணப் பிரசங்கஞ் செய்து வந்தால் திருவிளக்குச் செலவு தான் கொடுத்து விடுவதாகவும் சொன்னான். வாழைப்பழச் சாமி சம்மதி கொண்டு மடத்தை ஒப்புக்கொண்டான். இவனுடைய விசேஷ மென்ன வென்றால், இவன்

நாளொன்றுக்கு இருபது வாழைப்பழம் தின்று ஒரு மிடறு கண்ணீர் குடிப்பான். அதன் பிறகு ஜலபானம் கிடையாது. இவனும் ஒரு கிளி வளர்த்தான். அதற்கும் கங்கா மங்கா என்று கற்றுக்கொடுத்து, அதையும் சுகப்பிரம ரிஷி யென்று சொன்னான். ஆனால் பிரசங் கம் செய்வதில் பழைய சாமியாருக்குள்ள திறமையில் நூற்றிலொருபங்கு கூட இவனிடம் கிடையாது. ஆகையால் இவனுக்குப் பழைய வரும்படியில் நூறிலொரு பங்கு கூடக் கிடையாது. இருந்தாலும் சொற் பத்தைக் கொண்டு ஒருவாறு வாழைப்பழச் செலவை நடத்தி வந்தான். இப்படி யிருக்கையில் ஒரு நாள் நாலைந்து புதிய சீடருக்குக் கந்த புராணம் சொல்லத் தொடங்கி வாழைப்பழச் சாமி தனது சுகப்பிரம ரிஷி யிடம் கேள்வி போட்டுக்கொண்டிருக்கையிலே, திடீ ரென்று மடத்துக்குள் பழைய மிளகாய்ப்பழச்சாமி தனது கிளிக்கூடு ஸகிதமாக வந்து தோன்றினான். சாமிக்கும் சாமிக்கும் குத்துச் சண்டை. மிளகாய்ப் பழச்சாமி காலை வாழைப்பழச்சாமி கடித்துக் காலிலே காயம். வாழைப்பழச்சாமிக்கு வெளிக்காயம் பட வில்லை. உடம்புக்குள்ளே நல்ல ஊமைக்குத்து. அப் போது வந்த ஜ்வரத்தில் ஆறு மாஸம் கிடந்து பிழைத் தான். குத்துச் சண்டையின்போது கிளியும் கூட்டுக் குள் இருந்தபடியே ஒன்றுக்கொன்று கங்கா மங்கா என்று அம்பு போட்டதுபோல் தூஷணை செய்து கொண்டன. அந்த சமயத்தில் ஊர்க்கூட்டம் கூடி, அதிகாரியிடமிருந்து சேவகர் வந்து இரண்டு பரதேசி களையும் பிடித்துக்கொண்டு போய் நியாய ஸ்தலத்தில்

விட்டார்கள். வாழைப்பழச்சாமியை ஊரை விட்டுத் தூத்திவிடும்படிக்கும், மிளகாய்ப்பழச்சாமி மடத்தை எடுத்துக்கொள்ளும்படிக்கும், இனிமேல் கந்த புராண உபன்யாஸத்தில் வரும் பொன்னில் ஆறி லொரு பங்கு கோயிலுக்கும், நாலி லொரு பங்கு அதிகாரிக்கும் செலுத்தி விடும்படிக்கும் நியாய ஸ்தலத்தில் தீர்ப்புச் செய்யப்பட்டது.

இருள்.

விந்யா நகரம் என்ற பட்டணத்தில், எண்ணூறு வருஷத்துக்கு முன், திடசித்தன் என்று ஒரு ராஜா இருந்தான். அவனுடைய பந்துக்களிலே சிலர் விரோதத்தினால் அவனுக்குப் பல தீங்குகள் செய்யலாயினர். ஒரு நாள் அவன் நித்திரை செய்யும்போது எதிரிகள் அரண்மனை வேலைக்காரரிலே சிலரை வசமாக்கி உள்ளே நுழைந்து அவன் கால்களைக் கட்டி எடுத்துக்கொண்டு போய், சமீபத்திலிருந்த மலைச் சாரலில் ஒரு குகைக் குள்ளே போட்டு வெளியே வர முடியாதபடி ஒரு பாறையால் மூடி வைத்து விட்டார்கள். இவ்வளவுக்கு மிடையே அவன் கண் விழிக்காதபடி மூக்கிலே ஒரு மயக்கப் பச்சிலையின் சாற்றைப் பிழிந்து விட்டார்கள்.

நெடு நேரம் கழிந்த பிறகு, பச்சிலையின் மயக்கம் தெளியவே அரசன் கண்ணை விழித்துப் பார்க்கும் போது, கை கால்கள் கட்டுண்டு தான் பேரிருளிலே கிடப்பதை உணர்ந்துகொண்டான். "எங்கிருக்கி

றேம்" என்று சிந்திக்கான். இடம் தெரியவில்லை. "நமக்கு யார் இவ்விதமான தீமை செய்திருக்கக் கூடும்?" என்று யோசனை செய்து பார்க்கான். ஒன்றும் தெளிவாக விளங்கவில்லை. எழுந்து நிற்க முயற்சி செய்கான். சாத்தியப்படவில்லை. தாகம் தாக்கை வறட்டிற்று, கண்கள் சுழன்றன. நெஞ்சு படீல் படீலென்று புடைத்துக் கொண்டது. "தெய்வமே, என்னைக் கொல்லவா நிச்சயித்து விட்டாய்?" என்று கூவினான்.

"ஹும்" என்றொரு குரல் கேட்டது.

"ஆ மென்கிறாயே, நீ யார்?" என்று வினவினான்.

"நான் காலன். உன் உயிரைக் கொண்டுபோக வந்திருக்கிறேன்" என்று அந்த மறை குரல் சொல்லிற்று.

அப்போது திடசித்தன்:—"நான் யௌவனப் பருவத்தில் இருக்கிறேன். அறிவிலும் அன்பிலும் சிறந்த எனது மனைவியையும், சிங்கக்குட்டி போன்ற என் மகனையும் செழிப்பும் புகழும் மிகுந்த என் காட்டையும் விட்டு விட்டு உன்னுடன் வருவதில் எனக்கு ஸம்மதமில்லை. இங்கிருந்து போய்விடு" என்றான். மறை குரல் கொல்லென்று சிரித்தது.

"நான் எப்போது கொண்டு போகப்பட்டேன்?" என்று திடசித்தன் கேட்டான்.

"வெடியும் ஒரு ஜாமத்திற்குள்ளே" என்று குரல் சொல்லிற்று. இது கேட்ட மாத்திரத்திலே

திடசித்தன் அயர்ந்து போனான். கண்கள் முன்னிலும் அதிகமாகச் சுழன்றன. நெஞ்சு முன்னிலும் வினை வாக அடித்தது. கால்கள் பதறலாயின.

அப்போது அவனுடைய தாய் சொல்லிக்கொண் டிருந்த மந்திர மொன்று நினைப்பு வந்தது. உடனே உச்சரித்தான். தாய் இறந்து போகும் ஸமயத்தில் அவனை அழைத்து அந்த மந்திரத்தை அவன் காதிலே உபதேசம் செய்துவிட்டு, "மகனே, உனக்கு எவ்வளவு பெரிய ஆபத்து வந்த சமயத்திலும் நீ இம்மந்திரத்தை உச்சரித்தால் விலகிப் போய்விடும்" என்று சொல்லி யிருந்தாள். இப்போது அதனை உச்சரித்தான். 'கரோமி' (செய்கிறேன்) என்பதே அம்மந்திரம். "கரோமி, கரோமி, கரோமி" என்று மூன்று தரம் சொன்னான்.

காலிலே ஒரு பாம்பு வந்து கடித்தது.

"தாயே, உன் மந்திரத்தின் பயன் இதுதானே?" என்று அலறினான்.

"அஞ்சாதே, மந்திரத்தைச் சொல்லு, மந்திரத் தைச் சொல்லு, மந்திரத்தைச் சொல்லு, மந்திரத்தைச் சொல்லு" என்று அசரீரி வாக்கு பிறந்தது.

இந்தப் புதிய வாக்கைக் கேட்கும்போது அவ னுடைய தாயின் குரலைப் போலே யிருந்தது.

கரோமி, கரோமி, கரோமி, செய்கிறேன், செய் கிறேன், செய்கிறேன் என்று மறுபடி ஜபிக்கலானான்.

"குரு, குரு, குரு" (செய், செய், செய்) என் றது அசரீரி.

உடனே மூச்சை உள்ளே இழுக்கு அளவுக்கு மான வேகத்துடன் கையை உதறினான். கைத்தளைகள் பழுதென்று நீங்கின. உடைவாளை யெடுத்தான்.

"செய், செய், செய்" என்று மறுபடி சத்தம் கேட்டது.

பாட்டு கடித்த கால், விரலைப் பளிச்சென்று வெட்டி எறிந்து விட்டான். குரு, குரு, குரு என்ற சத்தம் மீண்டும் கேட்டது.

உடம்பிலிருந்த துணியைக் கிழித்து, மண்ணிலே புரட்டி அதிக கால் ரத்தம் விரலிலிருந்து விழாதபடி சுற்றிக்கொண்டான்.

மறுபடியும் 'செய்' என்ற தொனி பிறந்தது. தலை வாளால் வெட்டிவிட்டான்.

அப்போது அவனுடைய சரீரத்திலே மறுபடியும் ஆயாஸமுண்டாயிற்று. அப்படியே சோர்ந்து விழுந்தான். ஜ்வரம் வந்துவிட்டது. மரண காக முண்டாயிற்று.

"ஐயோ, காகம் பொறுக்கவில்லையே? என்ன செய்வேன்?" என்று புலம்பினான்.

"மந்திரத்தை ஜபம் பண்ணு" என்றது அசரீரி.

"காமி, காமி, காமி" என்று காய் மந்திரத்தை மறுபடி ஜபித்தான்.

"செய்" என்று கட்டளை பிறந்தது.

"என்ன செய்வது?" என்றேறங்கினான்.

"சோர்வடையாதே, செய்கை செய்" என்றது தெரனி.

"என்ன செய்வது?" என்று பின்னொரு முறை கேட்டான்.

"கல்லிலே முட்டு" என்று கட்டளை பிறந்தது.

எழுந்து வந்து குகையை மூடியிருந்த பாறையிலே போய் முட்டினான். மண்டை யுடைந்து செத்தால் பெரிதில்லை யென்று துணிவு கொண்டு செய்தான். மண்டை உடையவில்லை. குகையை மூடிச் சென்றவர்கள் அவசரத்திலே அந்தக் கல்லை மிகவும் சரிவாக வைத்துவிட்டுப் போயிருந்தார்கள். பாறை சரிந்து கீழே விழுந்து விட்டது. வெளியே வந்து பார்த்தான். சூர்யோதயம் ஆயிற்று. கரோமி, கரோமி, கரோமி; செய்கிறேன், செய்கிறேன், செய்கிறேன் என்று சொல்லிக்கொண்டு தனது ராஜதானி போய்ச் சேர்ந்தான். பிறகு அவனுக்கோர் பகையுமில்லை.

குதிரைக் கொம்பு.

சிந்து தேசத்தில் அந்தபுரம் என்கிற நகரத்தில் ரீவண நாயக்கன் என்ற ராஜா இருந்தான். இவன் ஒரு சில யுகங்களின் முன்பு இலங்கையில் அரசாண்ட ராவணனுடைய வம்சம் என்று சொல்லிக்கொண்டான். இவனுடைய சபையில் எல்லா சாஸ்திரங்களையும் கரைத்துக் குடித்த பல பண்டிதர் விளங்கினார்கள். ஒரு நாள் அரசன் தனது சபையாரை நோக்கி,

"குதிரைக்கு என்ன கொம்பில்லை?" என்று கேட்டான். சபையிலிருந்த பண்டிதர்கள் எல்லாம் திகைத்துப் போனார்கள். அப்போது கர்நாடக தேசத்திலிருந்து அந்த அரசனிடம் ஸம்மானம் வாங்கும் பொருட்டாக வந்திருந்த வக்ரமுக சாஸ்திரி என்பவர் தான் அந்தக் கேள்விக்கு விடை சொல்வதாகத் தெரிவித்தார். அரசன் அனுமதி தந்தவுடன் மேற்படி வக்ரமுக சாஸ்திரி பின்வருமாறு கதை சொல்லத் தொடங்கினர் :—

"கேளீர், ரீவண மஹாராஜனை, முற்காலத்தில் குதிரைகளுக் கெல்லாம் கொம்பிருந்தது. இலங்கையில் அரசாண்ட தமது பூதாதையாகிய ராவணாசுரன் காலத்தில், அந்த ராஜனுடைய ஆக்கினைப்படி பிரம தேவன் குதிரைகளுக்குக் கொம்பு வைக்கும் வழக்கத்தை நிறுத்தி விட்டான்" என்றார்.

இதைக் கேட்டவுடன் ரீவண நாயக்கன் உடல் பூரித்துப் போய், "அதென்ன விஷயம்? அந்தக் கதையை ஸவிஸ்தாரமாகச் சொல்லும்" என்றான்.

வக்ரமுக சாஸ்திரி சொல்லுகிறார் :—

"இலங்கையில் ராவணன் தர்மராஜ்யம் நடத்திய காலத்தில் மாதம் மூன்று மழை பெய்தது. அந்தக் காலத்தில் ஒரு வருஷத்துக்குப் பதினேழு மாஸமும், ஒரு மாஸத்துக்கு முப்பத்துமூன்று தினங்களும் ஒரே கணக்காக ஏற்பட்டிருந்தன. ஆகவே பதினேழு நாளுக்கு ஒரு மழை வீதம், வருஷத்தில் முப்பத் தொன்பது மழை பெய்தது. பிராமணர் நான்கு

வேதம், ஆறு சாஸ்திரம், 64 கலைஞானங்கள், ஆயிரத் தெட்டுப் புராணங்கள், பதினாயிரத் தெண்பது கீளைப் புராணங்கள், எல்லாவற்றிலும் ஓரெழுத்துக்கூடத் தவ றுமல், கடைசியிலிருந்து ஆரம்பம்வரை பார்க்காமல் சொல்லக்கூடிய அத்தனை நிறமையுடனிருந்தார்கள். ஒவ்வொரு பிராமணன் வீட்டிலும் நான்கோறும் தவ றுமல் இருபத்து நாலாயிரம் ஆடுகள் வெட்டிப் பலவித மான யாகங்களை நடத்தி வந்தார்கள். ஆட்டுக் கணக்கு மாத்திரம்தான் புராணக்காரர் சொல்லியிருக்கிறார். மற்ற மிருகங்களின் தொகை அவர் சொல்லி யிருக்க லாம். இப்படியே மற்ற வருணத்தாரும் தத்தம் கடமைகளை நேராக நிறைவேற்றிக்கொண்டு வந்தார் கள். எல்லா ஜீவர்களும் புண்யாத்மாக்களாகவும், கர் மிஷ்டராகவும் இருந்து இறைத்தில் இன்பங்களை யெல் லாம் அனுபவித்துப் பரத்தில் ஸாகேதாத் பரமசிவ னுடைய திருவடி நிழலைச் சார்ந்தனர். அப்போது அயோத்தி நகரத்தில் அரசு செலுத்திய தசரதராஜன் பிள்ளையாகிய ராமன், தனக்கு மூத்தவனாகிய பர தனுக்குப் பட்டங் கட்டாமல் தனக்கே பட்டங் கட்டிக் கொள்ள விரும்பித் தனது தந்தையை எதிர்த்துக் கல கம் பண்ணினன். பிதாவுக்குக் கோபமூண்டாய் ராடனையும் அவனுக்குத் துணை செய்தவனாகிய லக்ஷ் மணனையும் ராஜ்யத்தை விட்டு வெளியே தூரத்திவிட் டான். அங்கிருந்து அவர்கள் மிதிலை நகரத்துக்கு ஓடிப்போய், அந் நகரத்தின் அரசனாகிய ஜனகனைச் சரணமடைந்தார்கள். அவன் இவர்களுக்கு அபயம்

மகாடுத்துக் காப்பாற்றி வருகையில் ராமன் மேற்படி ஜனகராஜன் மகளாகிய ஸீதையின் அழகைக் கண்டு மோஹித்து, அவளைத் திருட்டாகக் கவர்ந்துகொண்டு கண்டகாரண்யம் புகுந்தான். அங்கு ராமர் லக்ஷ்மணர் முனிவர்களை யெல்லாம் பலிதங்களிலே ஹிம்சை செய்தார்; யாகங்களைக் கெடுத்தனர். இந்த விஷயம் அங்கே அதிகாரம் செய்துவந்த சூர்ப்பநகைத் தேவி யின் காதில் பட்டது. ராவணன் தங்கையானகையாலும், பிராமண குலமானபடியினாலும், ரிஷிகளுக்கு ராமன் செய்யும் துன்பத்தைப் பொறுக்கமாட்டாதவளாய், அவள் அந்த ராமனையும், அவன் தர்ம லக்ஷ்மணனை யும், பிடித்துக் கட்டிக்கொண்டு வருமாறு தனது படையினிடம் உத்திரவு கொடுத்தாள். அப்படியே ராமலக்ஷ்மணரைப் பிடித்துத் தாம்பினாலே கட்டிச் சூர்ப்பநகையின் சன்னிதியிலே கொண்டு சேர்த்தனர். அவள் அவ்விருவரையும் கட்டவிழ்த்து விடும்படி செய்து, பலவிதமான கடின வார்த்தைகள் சொல்லி பயமுறுத்திய பிறகு ராஜபுத்ரராகவும், இளம் பிள்ளை களாகவும் இருந்தபடியால், இதுவரை செய்த துஷ்ட கார்யங்களை யெல்லாம் க்ஷமிப்பதாகவும், இனிமேல் இவ்விதமான கார்யங்கள் செய்தால் கடுந்தண்டனை கிடைக்கு மென்றும் சொல்லி, நாகரிகமான புத்தி புகட்டிய பின்பு, அவர்களைச் சிறிது காலம் அரண் மனையிலிருந்து விருந்துண்டு போகும்படி செய்தாள். அப்போது ஸீதை சூர்ப்பநகையிடம் தனியாக வார்த்தை சொல்லிக்கொண்டிருக்கையில், ராமன்

கண்ணை வலிமையாலே தூக்கிக்கொண்டு வந்தானென்
றும், தனக்கு மறுபடியும் மிதிலைக்குப் போய்த் தனது
பிதாவுடன் இருக்கப் பிரியம் என்றும் சொன்னாள்.
இதைக் கேட்டு சூர்ப்பநகை மனமிரங்கி, சீதையை
இலங்கைக்கு அனுப்பி, அங்கிருந்து மிதிலையில்
கொண்டு சேர்க்கும்படி ராவணனுக்குச் சொல்லி
யனுப்பினாள். ராவணனுடைய அரண்மனைக்கு வந்து
சேர்ந்தவுடனே அவளை மிதிலைக்கு அனுப்பும்
பொருட்டு நல்ல நாள் பார்த்தார்கள். அந்த வருஷம்
முழுவதும் நல்ல நாள் அகப்படவில்லை. மறு வருஷ
மும் நல்ல நாள் கிடைக்கவில்லை. ஆகையால் சீதையை
இரண்டு வருஷம் தனது அரண்மனையிலேயே தங்கி
விட்டுப் போகும்படி ராவணன் ஆக்கினை செய்தான்.

" தண்டகாரண்யத்தில் இராமன் சூர்ப்பநகை
யிடம் 'சீதை எங்கே?' என்று கேட்டான்.
மிதிலைக்கு அனுப்பிவிட்டதாக சூர்ப்பநகை சொன்னாள்.
'எப்படி நீ இந்தக் காரியம் செய்யலாம்?' என்று
கோபித்து லக்ஷ்மணன் சூர்ப்பநகையை நிந்திக்க
லானான். அப்போது சூர்ப்பநகை தன் இடுப்பில்
பழங்களறுத்துத் தின்னுவதற்காகச் சொருகி வைத்
துக்கொண்டிருந்த கத்தியைக் கொண்டு லக்ஷ்மண
னுடைய இரண்டு காதுகளையும், கால் கட்டை விரல்
களையும் அறுக்கிவிட்டாள். இவளுடைய வீரச் செய்
கையைக் கண்டு ராமன் இவள்மேல் மோகங்
கொண்டு, 'அட! சீதையைத்தான் மிதிலைக்கனுப்பி
விட்டாய், என்னை நீ விவாகஞ் செய்துகொள்ளு' என்

ரூன். இதைக் கேட்டவுடனே சூர்ப்பநகை கண்ணீரும் சிந்தும் போகும்படி வெட்கப்பட்டு 'நீ அழகான பிள்ளைதான், உன்னைக் கலியாணம் பண்ணிக் கொள்ளலாம். ஆனால் அண்ணை கோபித்துக்கொள்ளுவார். இனிமேல் நீ இங்கிருக்கலாகாது. இருந்தால் அபவாதத்துக்கு இடமுண்டாகும்' என்றாள்.

"அப்போது ராமன் :—'சீதையை எப்போது மிதிலைக்கனுப்பினாய்? யாருடன் அனுப்பினாய்? அவள் இப்போது எவ்வளவு தூரம் போயிருப்பாள்?' என்று கேட்டான்.

"அதற்கு சூர்ப்பநகை :—'இனிமேல் சீதையின் நினைப்பை விட்டுவிடு. அவளை இலங்கைக்கு அண்ணன் ராவணனிடத்தில் அனுப்பி யிருக்கிறேன். அவன் அவளை மிதிலைக்கு அனுப்பினாலும் அனுப்பக்கூடும். எது வேண்டுமானாலும் செய்யக்கூடும். மூன்றுலகத்திற்கும் அவன் அரசன். சீதையை மறந்துவிடு' என்றாள்.

"இதைக் கேட்டு ராமன் அங்கிருந்து வெளியேறி எப்படியேனும் சீதையை ராவணனிடமிருந்து மீட்க வேண்டுமென்று நினைத்துக் கிஷ்கிந்தா நகரத்திற்கு வந்து சேர்ந்தான். அந்தக் கிஷ்கிந்தா நகரத்தில் அப்போது சுக்கிரீவன் என்ற ராஜா அரசு செலுத்தினான். இவனுக்குமூன் இவனுடைய தமையனாகிய வாலி ஆண்டான். வாலிக்கும் ராவணனுக்கும் மிகுந்த சிநேகம்; இரண்டு பேரும் ஒரு பள்ளிக்கூடத்திலே கணக்கு வாசித்தார்கள். மூன்றுலகத்திலும் கப்பம் வாங்கின

ராவணன் கிஷ்கிந்கா பட்டணத்துக்கு வாலி யாதொரு கப்பமும் செலுத்த வேண்டியதில்லை யென்று சொல்லி விட்டான். இந்த வாலி தூங்கிக்கொண்டிருக்கையில் தம்பி சுக்ரீவன் இவன் கழுத்தை மண்வெட்டியால் வெட்டி யெறிந்துவிட்டு அவன் மனைவியாகிய தாரையை வலிமையால் மணந்துகொண்டு அனுமான் என்ற மந்திரியின் தந்திரத்தால் ராஜ்யத்தை வசப்படுத்திக் கொண்டான். இதைக் கேட்டு ராவணன் மறுகோபத்துடன் சுக்ரீவனுக்குப் பின்வருமாறு ஓலை யெழுதி யனுப்பினான் :—

"'கிஷ்கிந்தையில் சுக்ரீவனுக்கு இலங்கேசனாகிய ராவணன் எழுதிக்கொண்டது : நமது சிநேகனைக் கொன்றாய் ; உன் அண்ணனைக் கொன்றாய் ; ராஜ்யத்தை திருடினாய். இந்த ஓலை கண்டவுடன் தாரையை இலங்கையிலுள்ள கன்யா ஸ்த்ரீ மடத்துக்கு அனுப்பவேண்டும். ராஜ்யத்தை வாலி மகன் அங்கதனிடம் கொடுக்க வேண்டும். நீ ஸந்யாஸம் பெற்றுக்கொண்டு ராஜ்யத்தை விட்டு வெளியேறிவிட வேண்டும். இந்த உத்திரவுக்குக் கீழ்ப்படாத விஷயத்தில் உன்மீது படையெடுத்து வருவோம்.'

"வை உத்திரவு கண்டவுடன் சுக்ரீவன் பயந்து போய் அனுமானை நோக்கி 'என்ன செய்வோம்?' என்று கேட்டான். அனுமான் சொல்லிய யோஜனை என்னவென்றால் :

"'வாலியிடம் பிடித்துக்கொண்ட தாரையையும் பதினேழு வயதுக்குட்பட்ட வேறு பதினேழுகை

கோடிப் பெண்களையும் ராவணனுக்கு அடிமையாக அனுப்பவேண்டும். ராவணனுக்கு ஆகரித்துப் போற்றப்படும் வைதிக ரிஷிகளின் யாகச் செலவுக்காக நாற்பது கோடியே ஐம்பது லட்சத்து மூப்பத்து நாலாயிரத்து இருநூற்று நாற்பது ஆடுமாடுகளும், தேர்ப் படைகளில் ஒவ்வொரு படை நாலாயிரம் படி கொள்ளக் கூடிய நானூறு கோடிப் படைகள் நிறைய வைரமணிகளும் என்ற சாறும் அனுப்பி அவனை சமாதானம் செய்து கொள்ள வேண்டும். இவ்வாசுப் பட்டம் அங்கதனுக்குச் சூட்டுவதாகவும் வருஷந்தோறும் நாலாயிரம் கோடிப் பொன் கப்பம் கட்டுவதாகவும் தெரிவிக்க வேண்டும். இத்தனையும் செய்தால் பிழைப்போம்' என்று அனுமான் சொன்னான். சுக்ரீவன் அப்படியே அடிமைப் பெண்களும், ஆடுமாடுகளும், சாறும், மூதல் வருஷத்துக் கப்பத் தொகையும் சேகரம் பண்ணி அத்துடன் ஓலை யெழுதித் தூதர் வசம் கொடுத்தனுப்பினான். தூதர்கள் ஆடுமாடுகளையும், சாற்றையும், ராவணன் அரண்மனையிலே சேர்ப்பித்தார்கள். அடிமைப் பெண்களையும் பணத்தையும் முனிவரிடம் கொடுத்தார்கள். ஓலையை ராவணனிடம் கொடுத்தனர். போகிற வழியில் தூதர் அடிக்கடி தோற்றையிலுள்ள சாற்றைக் குடித்துக்கொண்டு போனபடியால், தாறுமாறாக வேலை செய்தார்கள். ராவணன் தனது நண்பருடன் ஆடுமாடுகளை யெல்லாம் அப்போதே கொன்று தின்று அந்தச் சாற்றையுங் குடித்து முடிக்கவுடனே ஓலையைப் பிரித்து வாசித்துப் பார்த்தான். அடிமைப்

பெண்களுடும் பணமும் என் தன் வசம் வந்து சேர வில்லை யென்று விசாரணை செய்தான். மூனிவர்களின் மடங்களில் சேர்த்துவிட்டதாகவும், அவர்கள் அந்தப் பணத்தை யெல்லாம் யாகத்திலே தக்ஷினையாக்கி யெடுத்துக்கொண்டபடியால், இனிமேல் திருப்பிக் கொடுப்பது சாஸ்திர விரோதமென்று சொல்லுவ தாகவும், அடிமைப் பெண்கள் ஆசிரமங்களிலிருந்து பெரும்பாலும் ஓடிப்போய்விட்டதாகவும் செய்தி கிடைத்தது. தூதர்களை யெல்லாம் உடனே கொல்லச் சொல்லிவிட்டு அந்த கூலாமே சுக்ரீவன்மேல் படை யெடுத்துச் செல்லும்படி லெனுபதியிடம் ஆக்கினை செய்தான். அப்படியே நல்லதென்று சொல்லி லெனு பதி போய்ப் படைகளைச் சேகரித்தான். இந்தச் செய்தி யெல்லாம் வேவுகாரர் மூலமாகக் கிஷ்கிந்தைக்குப் போய் எட்டிவிட்டது. உடனே அனுமான் சொற்படி சுக்ரீவன் தனது படைகளைச் சேர்த்தான். ராவணன் படை தயாரான பிறகும், அதை நல்ல லக்னம் பார்த்து அனுப்ப வேண்டுமென்று காத்துக்கொண் டிருந்தான். இதற்குள்ளே அனுமான் தன்னுடைய ஜாதி ஒரு விதமான லேசான குரங்கு ஜாதி யானை யால் விரைவாகக் குரங்குப் படைகளைத் திரட்டிக் கொண்டு லங்கையை நோக்கிப் புறப்பட்டான். இவ னுடைய சேனையிலே ராம லக்ஷ்மணாரும் போய்ச் சேர்ந்தார்கள். இந்தச் சேனையிலே நாற்பத்தொன் பது கோடியே தொள்ளாயிரத்து நாலு லட்சத்து மூப் பத்தேழாயிரத்து முந்நூற்றைம்பத்தாறு காலாளும்,

அகற்கிரட்டிக் குதிரைப் படையும், அதில் நான்கு மடங்கு தேரும், அதில் எழுபது மடங்கு யானைகளும் வந்தன. இவர்கள் இலங்கைக்கு வரு முன்னரே ராவணன் சேனையிலிருந்து ஒரு பகுதி இவர்களை எதிர்த்துக் கொன்று முடித்து விட்டனர். ராம லக்ஷ்மணர் மாத்திரம் சில சேனைப் பகுதிகளை வைத்துக் கொண்டு ரகஸ்யமாக இலங்கைக்குள்ளே வந்து நுழைந்து விட்டார்கள். இந்தச் செய்தி ராவணன் செவியிலே பட்டது. உடனே ராவணன் 'ஹா! ஹா! ஹா! நமது நகரத்திற்குள் மனிதர் சேனை கொண்டு வருவதா! இதென்ன வேடிக்கை! ஹா! ஹா! ஹா!' என்று பேரிரைச்சல் போட்டான். அந்த ஓலியைக் கேட்டு ஆதிசேஷன் செவிடடைந்தான். சூரியமண்டலம் தரைமேலே விழுந்தது. பிறகு ராவணன் ராமனுடைய சேனைகளை அழித்து, அவனையும் தம்பியையும் பிடித்துக்கொண்டு வரும்படி செய்து, இராஜகுமாரர் என்ற இரக்கத்தினால் கொல்லாமல் விட்டு, அவ்விருவரையும் தனது வேலையாட்களிடம் ஒப்புவித்து ஜனகன் வசம் சேர்க்கும்படி அனுப்பினான். பிறகு ஸீதையும் மிதிலைக்குப் போய்ச் சேர்ந்தாள்.

"மறுபடி, ஜனகன் கிருபை கொண்டு அந்த ராஜனுக்கே சீதையை விவாகம் செய்து கொடுத்து விட்டான். அப்பால் ராமலக்ஷ்மணர் அயோத்திக்குப் போய்ப் பரதனுக்குப் பணிந்து நடந்தார்கள். இதுதான் நிஜமான 'ராமாயணக் கதை'" என்று வக்ரமுக சாஸ்திரி வீணை நாயக்கன் சபையிலே கதை சொன்னான்.

அப்போது ரீவணன் :—" சாஸ்திரியாரே, குதிரைக்கு என் கொம்பில்லை என்று கேட்டால் இன்னும் அதற்கு மறுமொழி வரவில்லையே ?"

வக்ரமுக சாஸ்திரி சொல்லுகிறார் :—

ராமன் படை யெடுத்து வந்த செய்தி கேட்டு, ராவணன் "ஹா", "ஹா", "ஹா" என்று கூச்சலிட்ட போது, சக்கம் பொறுக்கமாட்டாமல் சூரிய மண்டலம் கீழே விழுந்தென்று சொன்னேனன்றே ? அப்போது சூரியனுடைய குதிரை யேழுக்கும் கொம்பு முறிந்து போய்விட்டது. சூரியன் வந்து ராவணன் பாதத்தில் விழுந்து, " என் குதிரைகள் சாகா வரமுடையன, இவற்றைப்போல் வேகம் வேறு கிடையாது. இவற்றிற்குக் கொம்பு முறிந்து போய்விட்டது. இனி உலகத்தாரெல்லாம் என்னை நகைப்பார்கள். என்ன செய்வேன் ?" என்று அழுது முறையிட்டான். ராவணன் அந்த சூரியனிடம் கிருபை கொண்டு பிரமதேவனிடம், " இனிமேல் ஒரு குதிரைக்கும் கொம்பில்லாதபடி படைக்க வேண்டும், அவ்வாறு செய்தால் சூரியனுடைய குதிரைகளை யாரும் நகைக்க இடமிராது " என்று சொன்னான். அது முதலாக இன்றுவரை குதிரைக்குக் கொம்பில்லாமல் பிரமதேவன் படைத்துக்கொண்டு வருகிறான்.

இவ்விதமாக வக்ரமுக சாஸ்திரி சொல்லியதைக் கேட்டு, ரீவண நாயக்கன் மகிழ்ச்சிகொண்டு மேற்படி சாஸ்திரிக்கு அக்ரஹாரத்துக்கு லக்ஷம் பொன்னுக அவர் சொல்லிய கதை முழுதிலும் எழுதிக்கண்ணிப் பரிசு கொடுத்தான்.

அர்ஜுன சங்தேகம்.

ஹஸ்தினபுரத்தில் கிருஷ்ணசாரியரின் பள்ளிக் கூடத்தில் பாண்டு மகாராஜாவின் பிள்ளைகளும் துரியோதனாதிகளும் படித்து வருகையில், ஒரு நாள் சாயங் கால வேளையில் காற்று வாங்கிக்கொண்டு வரும்போது, அர்ஜுனன் கர்ணனைப் பார்த்து :—"எ கர்ணா, சண்டை நல்லதா? ஸமாதானம் நல்லதா?" என்று கேட்டான். (இது மஹாபாரதத்திலே ஒரு உப கதை; சாஸ்திர ப்ரமாண மூடையது; வெறும் கற் பனை யன்று).

"ஸமாதானம் நல்லது" என்று கர்ணன் சொன் னன்.

"காரணமென்ன?" என்று கிரீடி கேட்டான்.

கர்ணன் சொல்லுகிறான் :—"அடே, அர்ஜுனா, சண்டை வந்தால் நான் உன்னை அடிப்பேன். அது உனக்குக் கஷ்டம். நானே இரக்கச் சித்த முடைய வன். நீ கஷ்டப்படுவதைப் பார்த்தால் என் மனம் தாங்காது. ஆகவே இரண்டு பேருக்கும் கஷ்டம். ஆகலால் ஸமாதானம் சிறந்தது" என்றான்.

அர்ஜுனன் :—"அடே கர்ணா, நம் இருவரைக் குறித்து நான் கேட்கவில்லை. பொதுப்படையாக உல கத்தில் சண்டை நல்லதா? சமாதானம் நல்லதா? என்று கேட்டேன்" என்றான்.

அதற்குக் கர்ணன் :—"பொது விஷய ஆராய்ச்சி களில் எனக்கு ருசியில்லை" என்றான்.

இந்தப் பயலைக் கொன்று போடவேண்டும் என்று அர்ஜுனன் தன் மனதுக்குள்ளே தீர்மானம் செய்து கொண்டான். பிறகு அர்ஜுனன் துரோணசாரியாரிடம் போய் அதே கேள்வியைக் கேட்டான்.

"சண்டை நல்லது" என்று துரோணசார்யர் சொன்னார்.

"எதனாலே?" என்று பார்த்தன் கேட்டான்.

அப்போது துரோணசார்யர் சொல்லுகிறார் :—"அடே விஜயா, சண்டையில் பணம் கிடைக்கும்; கீர்த்தி கிடைக்கும், இல்லாவிட்டால் மரணம் கிடைக்கும். யுத்தானத்தில் யுகலமும் ஸந்தோகம்—ஸ—ஸ—ஸ—" என்றார்..

பிறகு அர்ஜுனன் பீஷ்மாசார்யரிடம் போனான். "சண்டை நல்லதா, தாத்தா, யுத்தானம் நல்லதா?" என்று கேட்டான். அப்போது கங்கா புத்திரனைய அந்தக் கிழவனார் சொல்லுகிறார் :—"குழந்தாய், அர்ஜுனா, யுத்தானமே நல்லது. சண்டையில் நம்முடைய க்ஷத்திரிய குலத்திற்கு மஹிமையுண்டு. யுத்தானத்தில் லோகத்துக்கே மஹிமை" என்றார்.

"நீர் சொல்லுவது நியாயமில்லை" என்று அர்ஜுனன் சொன்னான்.

"காரணத்தை முதலாவது சொல்ல வேண்டும், அர்ஜுனா, தீர்மானத்தை அதன் பிறகு சொல்லவேண்டும்" என்றார் கிழவர்.

அர்ஜுனன் சொல்லுகிறான்:—"காத்தாஜீ, ஸமாதானத்தில் கர்ணன் மேலாகவும் நான் தாழ்வாகவும் இருக்கிறோம். சண்டை நடந்தால் உண்மை வெளிப்படும்" என்றான்.

அதற்கு பீஷ்மாசார்யர்:—"குழந்தாய், தர்மம் மேன்மை யடையும். சண்டையாலேனும், சமாதானத்தாலேனும், தர்மம் வெல்லத்தான் செய்யும். ஆதலால் உன் மனதில் கோபங்களை நீக்கி ஸமாதானத்தை நாடு. மனுஷ்ய ஜீவரெல்லாம் உடன் பிறந்தாரைப் போலே. மனுஷ்யர் பரஸ்பரம் அன்போடிருக்க வேண்டும். அன்பே தாரகம். மூக்காலும் சொன்னேன். அன்பே தாரகம்" என்று சொல்லிக் கண்ணீர் ஒரு திவலை உதிர்த்தார்.

சில தினங்களுக் கப்பால் அஸ்தினபுரத்துக்கு வேதவியாஸர் வந்தார். அர்ஜுனன் அவரிடம் போய்ச் சண்டை நல்லதா, ஸமாதானம் நல்லதா என்று கேட்டான்.

அப்போது வேதவியாஸர் சொல்லுகிறார்:—"இரண்டும் நல்லன. ஸமயத்துக்குத் தக்கபடி செய்ய வேண்டும்" என்றார்.

பல வருஷங்களுக்கப்பால் காட்டில் இருந்து கொண்டு துர்யோதனாதிகளுக்கு தூது விடுக்கு முன்பு, அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணனை அழைத்து "கிருஷ்ணா, சண்டை நல்லதா, ஸமாதானம் நல்லதா?" என்று கேட்டான்.

அதற்குக் கிருஷ்ணன்:—" இப்போதைக்கு ஸமாதானம் நல்லது. அதனாலே தான் ஸமாதானம் வேண்டி ஹஸ்தினாபுரத்திற்குப் புறப்படப் போகிறேன் " என்றார்.

தேவ விகடம்.

நாரதர் கைலாஸத்துக்கு வந்தார். நந்திகேசுரர் அவரை நோக்கி, " நாரதரே, இப்போது ஸ்வாமி தரிசனத்துக்கு ஸமயமில்லை. அந்தப்புரத்தில் ஸ்வாமியும் தேவியும் ஏதோ பேசிக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஒரு ஜாமம் சென்ற பிறகுதான் பார்க்க முடியும். அதுவரை இங்கு உட்கார்ந்திரும், ஏதேனும் வார்த்தை சொல்லிக்கொண்டிருக்கலாம் " என்றார். அப்படியே நாரதர் வலப்பக்கம் உட்கார்ந்தார். அங்கே பிள்ளையாரும் வந்து சேர்ந்தார். பக்கத்தில் நின்ற பூதமொன்றை நோக்கி நந்திகேசுரர் " மூப்பது வண்டி கொழுக்கட்டையும், மூந்நூறு குடத்தில் பாயஸமும் ஒரு வண்டி நிறைய வெற்றிலை பாக்கும் கொண்டு வா " என்று கட்டளையிட்டார்.

இமைத்த கண் மூடு முன்பாக மேற்படி பூதம் பதார்த்தங்களைக் கொண்டு வைத்தது. பிள்ளையார் கொஞ்சம் சிரமபரிஹாரம் பண்ணிக்கொண்டார். நாரதரோ ஒரு கொழுக்கட்டை யெடுத்துத் தின்று அரைக் கிண்ணம் ஜலத்தைக் குடித்தார். நந்திகேசுரர் பக்கத்தில் வைத்துக்கொண்டிருந்த இரண்டு மூட்டை பருத்திக் கொட்டையையும், இரண்டு கொள்ளு மூட்

டைகளையும், அப்படியே இரண்டு மூட்டை உளுந்தை யும், இரண்டு மூன்று கட்டுப் புல்லையும் ஒரு தினுசு போலே விழுங்கிவிட்டுக் கொஞ்சம் தீர்த்தம் சாப்பிட் டார்.

பிறகு வார்த்தை சொல்லத் தொடங்குகிறார்கள்.

பிள்ளையார் கேட்டார்—நாரதரே, ஸமீபத்தில் எதேனும் கோள் இழுத்துவிட்டீரா? எங்கேனும் கல கம் விளைவித்தீரா?

நாரதர் சொல்லுகிறார்:—கிடையாது ஸ்வாமி. நான் அந்தத் தொழிலையே விட்டுவிடப் போகிறேன். இப்போதெல்லாம் தேவாசுரர்களுக்குள்ளே சண்டை மூட்டும் தொழில் ஏறக்குறைய நிறுத்தியாய்விட்டது. மனுஷ்யர்களுக்குள்ளே தான் நடத்தி வருகிறேன்.

பிள்ளையார்:—சமீபத்தில் நடந்ததைச் சொல்லும்.

நாரதர் சொல்லுகிறார்:—விழுப்புரத்திலே ஒரு செட்டியார், அவன் பெரிய லோபி; தஞ்சாவூரிலே ஒரு சாஸ்திரி, அவன் பெரிய கர்வி. செட்டிக்குச் செலவு மிகுதிப்பட்டுப் பார்ப்பானுக்கு கர்வம் குறையும்படி செய்ய வேண்டுமென்று எனக்குத் தோன்றிற்று. ஆறு மாதத்துக்கு முன்பு இந்த யோசனை யெடுத்தேன். நேற்றுதான் முடிவு பெற்றது. முதலாவது, பார்ப் பான் விழுப்புரத்துக்கு வரும்படி செய்தேன்.

பிள்ளையார்:—எப்படி?

நாரதர்:—செட்டியின் ஸ்வப்பனத்திலே போய்த் தஞ்சாவூரில் இன்ன தெருவில் இன்ன பெயருள்ள

சாஸ்திரி யிருக்கிறார். அவரைக் கூப்பிட்டால், உனக்குப் பலவிதமான தோஷ சாந்திகள் செய்வித்து ஆண் பிள்ளை பிறக்கும்படி செய்வார் என்று சொன் னேன். அப்படியே செட்டியினிடம் போலீஸ் உனக்குப் பணமும் கீர்த்தியும் மிகுதிப்பட வழியுண் டென்று பார்ப்பாலுடைய கனவிலே போய்ச் சொன் னேன். செட்டி காயிதம் போடு முன்பாகவே பார்ப் பான் விழுப்புரத்தில் செட்டி வீட்டுக்கு வந்து சேர்ந் தான். செட்டி குழந்தை பிறக்கும்படி ஹோமம் பண் ணத் தொடங்கினன். பார்ப்பான் காசை அதிகமாகக் கேட்டான். பாதியிலே செட்டி ஹோமத்தை நிறுத்தி விட்டுப் பார்ப்பானை வீட்டுக்குப் போகும்படி சொல்லி விட்டான். பிறகு பக்கத்துத் தெருவில் ஒரு வீட்டில் ஒரு வருஷகாலமிருந்து பகவத்கீதை பிரசங்கம் செய் யும்படி சாஸ்திரியை அந்த வீட்டுப் பிரபு வேண்டிக் கொண்டான். மேற்படி பிரபுவுக்கும் அந்தச் செட் டிக்கும் ஏற்கனவே மனஸ்தாபம். செட்டி தனக்கு மூப்பதினாயிரம் பொன் கொடுக்க வேண்டுமென்று அந்தப் பிரபு நியாயஸ்தலத்தில் வழக்குப் போட்டிருந் தான். செட்டி அந்தப் பணத்தைத் தான் கொடுத்து விட்டதாகவும், நம்பிக்கையினால் கையெழுத்து வாங்கத் தவறினதாகவும், வேறு ஒன்றும் செல்ல வேண்டியதில்லை என்றும், சொன்னான். நியாய ஸ்தலத்தில் செட்டி வாதிற்குத் தக்க ஆதாரமில்லை என்றும், பிரபுவுக்குப் பணம் சிலவுட்பட கொடுக்க வேண்டும் என்றும் தீர்ப்பாயிற்று.

செட்டியினிடமிருந்த (கழனித் தொழில்) அடிமை யொருவன் கள்ளுக்குக் காசு வாங்குவதற்காக இவ னிடம் வந்து, செட்டியாருக்கு யாரோ ஒரு அய்யர் சூனியம் வைக்கிறானென்று மாரியம்மன் ஆவேசம் வந்தபோது தன்னுடைய பெண்டாட்டி சொன்ன தாகச் சொல்லிவிட்டான். செட்டி தன்னுடைய எதிரி வீட்டிலே போய் இருந்து தஞ்சாவூர்ப் பார்ப்பானே சூனியம் வைக்கிறானென்றும், அதனாலேதான் எதி ரிக்கு வழக்கு ஜயமாகித் தனக்குத் தோற்றுப்போய் விட்டதென்றும், உறுதியாக நினைத்துக்கொண்டான். ஒரு மனுஷனை அனுப்பித் தன் எதிரியின் வீட்டிலே எதிரியும் சாஸ்திரியும் என்ன பேசிக்கொள்ளுகிறார்க ளென்பதைத் தெரிந்து கொண்டு வரும்படி ஏற்பாடு செய்தான். அந்த ஆளுக்கு மூன்று பொன் கொடுத் தான். இந்த வேஷக்காரன் போய்க் கேட்கையிலே அந்த சாஸ்திரியும் வீட்டுக்காரப் பிரபுவும் வேதாந்தம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"பிரமந் தான் ஸத்தியம்,
மற்றதெல்லாம் சூன்யம்"

என்று சாஸ்திரி சொன்னான். இதைக் கேட்டு வேலைக்காரன் செட்டியினிடம் வந்து எதிரி பக்கத் துக்குச் சூனியம் வைக்க வேண்டுமென்று பேசிக் கொள்ளுகிறார்கள் என்று கதை சொன்னான். செட்டி "பிரமாணம் பண்ணுவாயா?" என்று கேட்டான். "நிச்சயமாகப் பிரமாணம் பண்ணுவேன். சாஸ்திரி வாயினால் சூனியம் என்று சொன்னதை என்னுடைய

காதினால் கேட்டேன். நான் சொல்வது பொய்யானால் என் பெண்டாட்டி வாங்கியிருக்கும் கடன்களை யெல்லாம் மோட்டுத் தெருப் பிள்ளையார் கொடுக்கக் கடவது" என்று வேலுகாரன் சொன்னான்; இப்படி நாரதர் சொல்லி வருகையிலே, பிள்ளையார் புன்சிரிப்புடன் "அடா! துஷ்டப் பயலே! அவன் பெண்டாட்டியினுடைய கடன்களை யெல்லாம் நாளை தீர்க்கவேண்டும்! இருக்கட்டும். அவனுக்கு வேண்டிய ஏற்பாடு செய்கிறேன்" என்றார்.

அப்பால் நாரதர் சொல்லுகிறார்:—

"செட்டி வேலுகாரன் வார்த்தையைக் கொண்டு செட்டி தன் எதிரியையும் எதிரிக்குத் துணையான தஞ்சாவூர் சாஸ்திரியையும் பெரிய நஷ்டத்துக்கும் அவமானத்துக்கும் இடமாக்கி விடவேண்டு மென்று தணிவு செய்து கொண்டான். ஒரு கள்ளனைக் கூப்பிட்டுத் தன் எதிரி வீட்டில் போய்க் கொள்ளை யிடும் படிக்கும், சாஸ்திரியின் குடுமியை நறுக்கிக்கொண்டு வரும்படிக்கும் சொல்லிக் கைக்கூலியாக நூறு பொன் கொடுத்தான். இது வரை செட்டியின் அழுக்குத் துணியையும், முகவிளைவையும் கண்டு செட்டி ஏழை யென்று நினைத்திருந்த கள்ளன் செட்டி நூறு பொன்னைக் கொடுத்ததிலிருந்து இவனிடத்திலே பொற்குவை யிருக்கிறதென்று தெரிந்து கொண்டான். மறு நாள் இரவிலே நான்கு திருடரை அனுப்பிச் செட்டி வீட்டிலிருந்த பொன்னை யெல்லாம் கொள்ளை கொண்டு போய்விட்டான்.

செட்டியினிடம் கொண்ட பொருளுக்குக் கைம் மாறுக அவனிடம் ஏதேனும் கொடுக்க வேண்டு மென்று நினைத்துச் செட்டியின் கட்டளைப்படியே சாஸ்திரியின் குடுமியை நறுக்கிச் செட்டியிடம் கொண்டு கொடுத்தான். பொன் களவு போன பெட் டியிலே இந்தக் குடுமியை வாங்கிச் செட்டி பூட்டி வைத்துக் கொண்டான். பார்ப்பான் கர்வாடகங்கித் தஞ்சாவூருக்குப் போய்ச் சேர்ந்தான். நேற்று மாலை யிலேதான் தஞ்சாவூரில் தன் வீட்டிலே போய் உட் கார்ந்து, "தெய்வமே, நான் யாருக்குப் ஒரு தீங்கு நினைத்தில்லையே! அப்படி யிருந்தும் எனக்கு இந்த அவமானம் வாலாமா?" என்று நினைத்து அழுது கொண்டிருந்தான். அப்போது நான் ஒரு பிச்சைக் காரன் வேஷத்துடன் வீதியிலே பின்வரும் பாட் டைப் பாடிக்கொண்டு போனேன் :—

"கடலைப் போலே கற்றோ மென்றே
கருவங் கொண்டாயே
கல்லா ரென்றே நல்லார் தம்மைக்
கடுமை செய்தாயே"

இவ்வாறு நாரதர் சொல்லிய போது நந்திகே சுரர் "இந்தக் கதை நடந்ததா? கற்பனையா?" என்று கேட்டார். நாரதர் "கற்பனைதான்; ஸந்தேக மென்ன?" என்றார். பிள்ளையார் கோபத்துடன் "என் காணும்! நிஜம் போல் சொல்லிக் கொண்டிருந்தீரே! உண்மை யென்றல்லவோ நான் இதுவரை செவி கொடுத்துக் கேட்டேன். இதெல்லாம் என்ன, குறும்பா உமக்கு?" என்றார்.

"குறும்பில்லை. வேண்டுமென்றுதான் பொய்க் கதை சொன்னேனென்" என்று நாரதர் சொன்னார்.

"என்?" என்றார் பிள்ளையார்.

அதற்கு நாரதர் :—நந்திகேசுரருக்குப் பொழுது போக்கும் பொருட்டாகக் கதை சொல்லச் சொன்னார்; சொன்னேன். தாங்கள் கேட்டதையும் அதோடு சேர்த்துக் கொண்டேன்" என்றார்.

"'நான் கேட்டதை விளையாட்டாக்கி' நீர் நந்திக்குத் திருப்தி பண்ணினீரா? என்ன நந்தி இது? எஜமான் பிள்ளை நானு, நீயா?" என்று பிள்ளையார் கோபித்தார்.

அப்போது நந்திகேசுரர் முகத்தைச் சுளித்துக் கொண்டு:—"பிள்ளையாரே, உனக்கு எவ்வளவு கொழுக் கட்டை கொடுத்தாலும் ஞாபக மிருப்பதில்லை. வாயில் காக்கும் வேலை எனக்கு; உனக்குப் போது போகாது போனால் வேலை செய்பவரை வந்து தொல்லைப் படுத்து கிறாயா? முருகக் கடவுள் இப்படி யெல்லாம் செய்வது கிடையாது. அவர் மேலே தான் அம்மைக்குப் பக்ஷம். நீர் இங்கிருந்து போம். இல்லாவிட்டால் அம்மை யிடம் போய்ச் சொல்லுவேன்" என்றார்.

அப்போது நாரதர் சிரித்து :—"தேவர்களுக் குள்ளே கலக முண்டாக்கும் தொழிலை நான் முழுதும் நிறுத்திவிடவில்லை" என்றார்.

பிள்ளையாரும், நந்திகேசுரரும் வெட்கமடைந்து நாரதருடைய தலையில் இலேசான வேடிக்கைக் குட்டு இரண்டு குட்டினார்கள்.

அப்போது நாரதர் சிரித்துக்கொண்டு சொல்லுகிறார் :—நேற்றுக் காலையிலே பிருஹஸ்பதியிடம் பேசிக்கொண்டிருக்கும்போது அவர் இன்று என்னுடைய ஜன்ம நக்ஷத்திரத்திற்குள்ளே அவருடைய கிரகம் நுழையப் போகிறதென்றும், அதனால் இன்று என்னுடைய தலையில் நந்திகேசுரரும் பிள்ளையாரும் குட்டுவார்களென்றும் சொன்னதிலே பார்த்துச் சொன்னார். உம்முடைய கிரகசாரங்களெல்லாம் நம்மிடத்திலே நடக்காதென்று சொன்னேன். பந்தயம் போட்டோம். நீங்கள் இருவரும் என்னைக் குட்டினால் நான் அவரிடத்தில் பதினாயிரம் பஞ்சாங்கம் விலைக்கு வாங்குவதாக ஒப்புக்கொண்டேன். நீங்கள் குட்டாவிட்டால் நமக்கு தேவலோகத்தில் ஆறு ஸங்கீதக் கச்சேரி இந்த மாதத்தில் ஏற்படுத்திக் கொடுப்பதாக வாக்குக் கொடுத்தார். அவர் கக்ஷி வென்றது. பதினாயிரம் பஞ்சாங்கம் விலைக்கு வாங்க வேண்டும்.

அப்போது பிள்ளையார் இரக்கத்துடன் "பதினாயிரம் பஞ்சாங்கத்துக்கு விலை யென்ன?"—என்று கேட்டார்.

நாரதர், "இருபதினாயிரம் பொன்னாகும்" என்றார். பிள்ளையார் உடனே ஒரு பூதத்தைக் கொண்டு நாரதரிடம் இருபதினாயிரம் பொன் கொடுத்துவிடச் சொன்னார். பூதம் அப்படியே அரண்மனைப் பணப் பெட்டியிலிருந்து இருபதினாயிரம் பொன் நாரதரிடம் கொடுத்துப் பிள்ளையார் கர்மச் செலவு என்று கணக் கெழுதி விட்டது. பிறகு பிள்ளையார் நாரதரை

நோக்கி "இந்தப் பந்தயக் கதை மெய்யா? அல்லது, இதுவும் பொய்தானே?" என்று கேட்டார்.

"பொய்தான்; சந்தேக மென்ன?" என்று சொல்லிப் பணத்தைக் கீழே போட்டுவிட்டு நாரதர் ஓடியே போய் விட்டார்.

அ ப ய ம்.

காட்டில் ஒரு ரிஷி பதினாறு வருஷம் கந்தமூலங்களை உண்டு தவம் செய்துகொண்டிருந்தார். அவர் பெயர் வாமதேவர். ஒரு நாள் அவருக்குப் பார்வதி பரமேசுரர் பிரத்யக்ஷமாகி "உமக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார்கள். "நான் எக்காலத்திலும் சாகாமல் இருக்க வேண்டும்" என்று வாமதேவ ரிஷி சொன்னார். அந்தப்படியே வரம் கொடுத்து விட்டுப் பார்வதி பரமேசுரர் அந்தர்த்தானமாய் விட்டனர்.

அந்த வரத்தை வாங்கிக்கொண்டு வாமதேவ ரிஷி காசி நகரத்தில் கங்காநதி தீரத்தில் ஒரு குடிசை கட்டிக்கொண்டு அங்கே குடி யிருந்தார். அவரிடத்தில் காசி ராஜன் வந்து தனக்கு ஆத்ம ஞானத்தை உபதேசிக்க வேண்டும் என்று கேட்டான்.

அப்போது வாமதேவர் சொல்லுகிறார்:—
"ராஜனே, எப்போதும் பயப்படாமல் இரு, பயமில்லாத நிலைமையே தெய்வம். பயத்தை விட்டவன் தெய்வத்தைக் காண்பான்" என்றார்.

இது கேட்டுக் காசிராஜன் சொல்லுகிறான்:—"முனிவரே, நான் எற்கெனவே பூமண்டலாதிபதியாக வாழ்கிறேன். எனக்கு எதிலும் பயமில்லை" என்றான்.

வாமதேவர்:—"நீ பூமி முழுவதையும் ஆளவில்லை. உன்னைவிடப் பெரிய மன்னர் பூமியில் ஆயிரம் பேர் இருக்கிறார்கள். அவர்களில் எவனுவது உன் மீது படையெடுத்து வந்தால் நீ நடுங்கிப் போவாய். மேலும் இந்த நிலையில் நீ உனது பத்தினிக்குப் பயப்படுகிறாய். மந்திரிகளுக்குப் பயப்படுகிறாய். வேலைக்காரருக்குப் பயப்படுகிறாய். குடிகளுக் கெல்லாம் பயப்படுகிறாய். விஷ ஜந்துகளுக்குப் பயப்படுகிறாய். மரணத்துக்குப் பயப்படுகிறாய். நீ பயமில்லை என்று சொல்வது எனக்கு நகைப்பை உண்டாக்குகிறது" என்றார்.

இதைக் கேட்டு காசிராஜன்:—"இவ்விதமான பயங்கள் தீர்வதற்கு வழி யுண்டோ?" என்று வினவினான்.

அதற்கு வாமதேவர் சொல்லுகிறார்:—"அடே ராஜா, நீ மூடன்" என்றார்.

காசிராஜா அவரைக் கையினலே ஒரு அடி அடித்தான்.

அப்போது வாமதேவர்:—"அடே ராஜா, நீ எத்தனை அடி அடித்தபோதிலும் மூடன்தான்" என்று சொன்னார். காசிராஜா தன் தலை தெரியாமல் கோபப்பட்டு வாமதேவர் கையிலிருந்த வேத புஸ்தகத்தை வாங்கிக் கிழித்துப் போட்டான்.

அப்போது வாமதேவர்:—"அடே ராஜா, வேதத்தைக் கிழித்தாய். இதற்குத் தெய்வத்தின் தண்டனை உண்டாகலாம்" என்று சொன்னார்.

அதற்குக் காசிராஜா:—"ஏ வேதரிஷீ, தெய்வத்துக்குக் கண் உண்டு. அறியாமல் செய்த குற்றத்துக்கு தண்டனை இல்லை. நான் வேதநூல் என்பதைப் பார்க்கவில்லை. அடித்தும் பயன்படாத உன்னை என்ன செய்வதென்று தெரியாமல் கோபாக்ராந்தனுய் அந்நூரனத்திலே செய்தேன். என்னை தெய்வம் க்ஷமிக்கும். உனக்கும் க்ஷமை யுண்டாகுக" என்றான்.

அப்போது வாமதேவர்—"அடே ராஜா, நீ நம்முடைய சிஷ்யனைத்தகும். கோபம் வருவது க்ஷத்ரிய குணம்; அதே க்ஷத்ரிய தர்மம்; அதைக் கைவிடாதே. இதற்கு மேல் மற்றொரு விஷயம் சொல்லுகிறேன் கேள். நமக்கு இந்த உலகம் கடுகு மாத்திரம். உலகம் சின்னக் கடுகு. அதற்கு வெளிப் புறத்திலே நாம் நின்று அதனை நாம் பார்வையிடுகிறோம். நாம் நிற்பது பிரம்ம ஸாயுஜ்ய பதவியிலே. பிரம்ம ஸாயுஜ்ய பதவியிலே இருப்பவன் ப்ராம்மணன். இந்தக் கொள்கையை நீயும் கூடியவரை அனுஸரித்தால் உனக்கும் நன்மையுண்டாகும். இந்த ஸமயம் உனக்கு நாம் அபயம் கொடுத்தோம். நமக்குப் பார்வதி பரமேஸ்வரர் சாகாத வரம் கொடுத்திருக்கிறார்கள். அதிலே உனக்கும் பாகம் கொடுத்தோம். எனென்றால் அது வற்றாத அமிர்தம். இனிமேல் ப்ராம்மணர்களை அவஸரப்பட்டு அடிக்காதே. ஸௌக்

கியமாக அமிர்க முண்டிரு" என்று சொல்லிவிட்டுப் போனதாக ஒரு பெரியவர் என்னிடம் ஒரு கதை சொன்னர்.

மழை.

ஓம், ஓம், ஓம் என்று கடல் ஒலிக்குது. காற்று சுழித்துச் சுழித்து வீசுது. மணல் பறக்குது, வான் இருளுது. மேகம் சூழுது. கடற்கரையில் காற்று வாங்க வந்த ஜனங்கள் கலைந்து வீட்டுக்குத் திரும்பு கிறார்கள்.

நானும், ராமராயரும் வேணுமுதலியும் வாத்தி யார் பிரமராய அய்யரும் இன்னும் சிலருமாகக் கடற் கரை மணல் மேலே உட்கார்ந்து வார்த்தை சொல்லிக் கொண்டிருந்தோம். மின்னல் வெட்டு அதிகப்படு கிறது. ராத்திரி எழு அல்லது எழுரை மணி இருக்க லாம்.

"நாமும் எழுந்து வீட்டுக்குப் போக வேண்டியது தான்" என்று பிரமராய அய்யர் சொன்னர்.

வேணு முதலி பாடுகிறன் :—

"காற்றடிக்குது கடல் குமுறுது
கன்னை விழிப்பாய் நாயகனே
தூற்றல் கதவு, சாளர மெல்லாம்
தொளைத் தடிக்குது கூடத்திலே—மழை
தொளைத் தடிக்குது கூடத்திலே."

"பாட்டெல்லாம் சரிதான்; ஆனல் மழை பெய்யாது" என்று ராமராயர் மற்றொரு முறை வற்புறுத்திச் சொன்னர்.

"பந்தயம் என்ன போடுகிறீர்?" என்று பிரமராய அய்யர் கேட்டார்.

"மழை பெய்தால் நான் உமக்குப் பத்து ரூபாய் கொடுக்கிறேன்; அதாவது, இன்னும் இரண்டு மணி நேரத்துக்குள் மழை பெய்யாது என்று நான் சொல்லுகிறேன்; பெய்தால் நான் உமக்குப் பத்து ரூபாய் கொடுப்பேன். பெய்யாவிட்டால் நீர் எனக்குப் பத்து ரூபாய் கொடுப்பீரா?" என்று ராமராயர் சொன்னர்.

பிரமய்யர் "சரி" யென்றார். அப்போது என் தோள் மேலே ஒரு தூற்றல் சொட்டென்று விழுந்தது. நான் "தூற்றல் போடுகிறது" என்று சொன்னேன். "இல்லை" யென்று ராமராயர் சொன்னர். "என்மேல் ஒரு தூற்றல் விழுந்தது" என்று சொன்னேன். அதற்கு ராமராயர் "அலையிலிருந்து ஒரு சிலவலை காற்றிலே வந்து பட்டிருக்கும். அது மழைத் தூற்றலன்று" என்றார். "சரி" என்று சும்மா இருந்து விட்டேன்.

"என் மேலே ஒரு தூற்றல் விழுந்தது" என்று பிரமராய அய்யர் கூவினர்.

"இதுவும் அலையிலிருந்து தான் வந்திருக்கும்" என்று ராமராயர் சொன்னர்.

"அதெப்படித் தெரியும்" என்று பிரமராய அய்யர் சொல்வதற்குள்ளாகவே தூற்றல் பத்துப் பன்னிரண்டு எல்லார் தலையிலும் விழுந்தது.

"ராமராயருக்குப் பந்தயம் தோற்றுப் போய் விட்டது" என்று நான் சொன்னேன்.

"இல்லை. இது தூற்றல். நான் சிறு தூற்றல் கூடப் போடாதென்று சொல்லவில்லை. மழை பெய்யா தென்று சொன்னேன். சிறு தூற்றல் மழையாகமாட் டாது. இன்னும் இரண்டு மணி நேரம் இங்கே இருக் கலாம். அது வரை மழை பெய்யாது என்று நிச்ச யமாக இப்போதும் சொல்லுகிறேன்" என்று ராம ராயர் சிரித்தார். வானம் அதிகமாகக் கறுத்து விட்டது. இருள் கக்கிக்கொண்டு மேகத் திரள் யானைத்திரள் போலே தலை மீது போகலாயிற்று. தூற்றல் போடவில்லை. நின்று போய்விட்டது. ஆனால் இருள் மேன்மேலும் அதிகப்படுகிறது.

அப்போது நான் சொன்னேன்:—"மழை பெய் தாலும் சரி; பெய்யாவிட்டாலும் சரி. நாம் இங்கி ருந்து புறப்படவேண்டும்" என்று சொல்லி எழுந் தேன்.

"தாங்கள் முதலாவது போங்கள். நானும் பிர மராய அய்யரும் இங்கே கொஞ்ச நேரம் இருந்துவிட்டு வருகிறோம்" என்று ராமராயர் சொன்னார்.

சரியென்று சொல்லி நானும் வேணு முதலியும் புறப்பட்டோம். மற்றவர்கள் அத்தனை பேரும் பந்தய

விஷயத்திலேயே கவனமாக அங்கே உட்கார்ந்திருந் தார்கள். நாங்கள் புறப்பட்டு நூறடி தூரம் வருமுன் னுகவே மழைத் தூற்றல் வலுக்கத் தொடங்கிற்று. கொஞ்சம் ஓடிக் கடற் பாலத்தருகே சுங்கச் சாவடி யில் போய் ஒதுங்கினேம். மழை வர்ஷமாகச் சொரிந் தது. ராமராயரும், பிரமராய அய்யரும் மற்றோரும் குடல் தெரிக்க ஓடிவந்து சேர்ந்தார்கள். நானும் வேணு முதலியும் கொஞ்சம் நனைந்து போயிருந்தோம். மற்றவர்கள் ஊறுகாய் ஸ்திதியில் இருந்தார்கள்.

மழை முழங்குகிறது. மின்னல் சூறை யடிக் கிறது. சுருள் மின்னல், வெட்டு மின்னல், வட்ட மின்னல், ஆற்று மின்னல்.—

மின்னல் வீச்சிலே கண் கொள்ளை போகிறது. இடி என்றால் இடியா? நம்முடைய ஸ்நேஹிதர் பிரம ராய அய்யருக்குத் தொண்டை இடிபோலே கர்ஜனை செய்வதை யொட்டி, அவர் மாலைதாறும் பேசுகிற திண்ணைக்கு இடிப்பள்ளிக்கூடம் என்று பெயர் சொல் வார்கள் என்கிற விஷயம் முந்தி ஒரு தரம் சொல்லி யிருக்கிறேன். அவரெல்லாம் இந்த நிஜ இடியைக் கண்டு கலங்கிப் போய்விட்டார். ராமராயருக்கு மனத் துக்குள்ளே பயம்; வெளிக்குப் பயத்தைக் காட்டினால் அவமானம் என்பது ராமராயருடைய கொள்கை. ஆகலால் அவர் வேஷ்டியைப் பிழிந்து தரையைத் துவட்டிக்கொண்டு "ஓம் சக்தி" "ஓம் சக்தி" என்று சொல்லத் தலைப்பட்டார்.

வேணு முகலி பாடத் தொடங்கினான் :—

திக்குக்கள் எட்டும் சிதற்—தக
தீம் தரிகிட தீம் தரிகிட தீம் தரிகிட தீம்
பக்க மலைகள் உடைந்து—வெள்ளம்
பாயுது, பாயுது, பாயுது, தாம் தரிகிட
தக்கத் தகிங்கிட தித்தோம்—அண்டம்
சாயுது, சாயுது, சாயுது, பேய் கொண்டு
தக்கை யடிக்குது காற்று—தக்கத்
தாம் தரிகிட, தாம் தரிகிட, தாம் தரிகிட, தாம்
வெட்டி யடிக்குது மின்னல்—கடல் [தரிகிட
வீரத் திரை கொண்டு விண்ணை யடிக்குது
கொட்டி யிடிக்குது மேகம்—கூ
கூ வென்று விண்ணைக் குடையுது காற்று,
சட்டச் சட, சட்டச் சட, டட்டா—என்று
தாளங்கள் கொட்டிக் கணக்குது வானம்
எட்டுத் திசையும் இடிய—மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!—
தக்கத் தக, தக்கத் தக, தித்தோம்!

இவ்வாறு பாடிக்கொண்டு வேணு முகலி குதிக்கத் தொடங்கினான். காற்று ஹூம் ஹூம் ஹூம் என்று கத்துகிறது. வேணு முகலியும் கூடவே கத்துகிறான். இடி நகைக்கிறது. வேணு முதலி அதனுடன் கூட நகைக்கிறான்.

இவன் குதிக்கிற மாதிரியைக் கண்டு பக்கத்தில் இருந்தவர்களுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக பயம் தெளிந்தது.

ராமராயர் "ஓம் சக்தி" மந்த்ரத்தாலே பயத்தை நிவிர்த்தி செய்துகொண்டு "மஹா ப்ரக்ருதி வீரரஸம் காட்டுகிறாள்" என்று சொன்னர். "ரௌத்ர ரஸம்" என்று பிரமராய அய்யர் திருத்திக் கொடுத்தார். "இரண்டும் ஒன்றுதான்" என்று ராமராயர் மனதறிந்து பொய் சொன்னர். எதிரியை வார்த்தை சொல்ல விடக்கூடாதென்பது ராமராயருடைய கொள்கை. இப்படி யிருக்கையிலே மழை கொஞ்சம் கொஞ்சம் குறையலாயிற்று. நெடுநேரம் அங்கே நின்றோம். ராமராயருக்கு ஸாயங்காலமே கொஞ்சம் ஜலதோஷம்; மழையில் உடம்பு விறைக்கத் தொடங்கிற்று. இதை வேணு முதலி கண்டு அவரை இரண்டு கையாலும் மூட்டை போலே தூக்கி நிமிர்ந்து நின்று தலைக்கு மேலே கை யெட்டும் வரை கொண்டு போய்த் தொப்பென்று தரையின் மேலே போட்டான். "ஒட மூடா!" என்று சொல்லி ராமராயர் எழுந்து நின்று கொண்டு, "உடம்பெல்லாம் சுடக்கெடுத்தது போல் நோய்விட்டது. உடம்பில் உஷ்ணம் ஏறிவிட்டது. இப்போது குளிர் தெரியவில்லை." என்று சொன்னர்.

சிறிது நேரத்துக்குப் பின் மழை நின்றது. நாங்கள் வீட்டுக்குத் திரும்பினோம். வரும் வழியே வேணு முதலி பாடுகிறான்:—

"அண்டங் குலுங்குது தம்பி—தலை
ஆயிரந் தூக்கியச் சேடனும் பேய்போல்
மிண்டிக்குதிக் திடுகின்றான்—திசை
வெற்புக் குதிக்குது வானத்துத் தேவர்

செண்டு புடைத்திடு கின்றார்—என்ன
தெய்விகக் காட்சியைக் கண்முன்பு கண்
[டோம்
கண்டோம், கண்டோம், கண்டோம்—இக்கக்
காலத்தின் கூத்தினைக் கண்முன்பு கண்
[டோம்?

தக்கத்தகத் தக்கத்தக தித்தோம்.

மறுநாள் காலையில் ராமராயர் பிராமராய அய்ய ருக்குப் பந்திய ரூபாய் பத்தும் செலுத்திவிட்டார்.

பிங்கள வருஷம்.

வேதபுரத்துக்கு வடக்கே இரண்டு கல் தூரத்தில், சித்தாந்தசாமி கோவில் என்றொரு கோயில் இருக்கிறது. அதற்கருகே ஒரு மடம். அந்த மடத்தில் பல வருஷங்களுக்கு முன்பு சித்தாந்தசாமி என்ற பரதேசி ஒருவர் இருந்தார். அவருடைய ஸமாதியிலே தான் அந்தக் கோயில் கட்டியிருக்கிறது. கோயில் மூலஸ்தானத்துக் கெதிரேயுள்ள மண்டபத்தில், நாளது சித்திரை மாதம் பதினேழாந்தேதி திங்கட்கிழமை காலை ஒன்பது மணி நேரத்துக்கு முன்னுகவே நானும் என்னுடன் நாராயணஸாமி என்றொரு பிராமணப் பிள்ளையும் வந்து உட்கார்ந்தோம். பகல் முழுதும் ஊருக்கு வெளியே தனியிடத்தில் போயிருந்து உல்லாசமாகப் பொழுது கழிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் வந்தோம். எப்போதும் வழக்கம் எப்படியென்றால், மடுவில் ஸ்நானம் செய்துவிட்டு மாங்கோர்

புக்களில் பொழுது போக்குவோம். புயற்காற்றடித்த பிறகு மாந்தோப்புகளில் உட்கார நிழல் கிடையாது. ஆகலால் மேற்படி கோயில் மண்டபத்துக்கு வந்து சேர்ந்தோம். கோயிலைச் சூழ நான்கு புறத்திலும் கண்ணுக்கெட்டினவரை தென்னை மரங்கள் விழுந்து கிடந்தன. பல வளைந்து நின்றன. சில மரங்கள் தலை தூக்கி நேரே நின்றன. புயற் காற்று சென்ற வருஷம் கார்த்திகை மாதத்தில் அடித்தது. ஐந்தாறு மாதங்களாயும், இன்னும் ஒடிந்து கிடக்கும் மரங்களை யெடுத்து யாதேதனும் பயன்படுத்த வழி தெரியாமல் ஜனங்கள் அவற்றை அப்படியே போட்டு வைத்திருக்கிறார்கள். இதைப் பார்த்துவிட்டு என்னோடிருந்த நாராயணஸ்வாமி சொல்லுகிறான் :—

"கேட்டீரா, காளிதாஸரே, இந்த ஹிந்து ஜனங்களைப் போல சோம்பேறிகள் மூன்று லோகத்திலுமில்லை. இந்த மரங்களை வெட்டி யெடுத்துக்கொண்டு போய் எப்படியேனும் உபயோகப்படுத்தக் கூடாதா? விழுந்தால் விழுந்தது; கிடந்தால் கிடந்தது; வேனென்று கேட்பவர் இந்தியாவில் இல்லை. பாமர தேசமையா! பாமர தேசம்!" என்றான். நான் அங்கே தனிமையையும் மவுனத்தையும் வேண்டி வந்தவன் ஆனபடியினால் அவனை நோக்கி :—"நாராயணா; ஹிந்துக்கள் எப்படியேனும் போகட்டும். தனி யிடம்; இங்கு மனுஷ்ய வாசனை கிடையாது; எவ்விதமான தொந்தரவும் இல்லை. மடத்துப் பரதேசிகள்கூடப் பிச்சைக்குக் கிளம்பி யிருக்கிறார்கள். பகல் பன்னிரண்டு மணிக்குத்

தான் திரும்பி வருவார்கள். சிவசிவா என்று படுத்துத் தூங்கு" என்றேன். அவனும் அப்படியே சரியென்று சொல்லி மேல் உத்தியத்தை விரித்துப் படுத்தான். உடனே தூங்கிப் போய்விட்டான். என் கையில் "குருபரம்பரா ப்ரபாவம்" என்ற வைஷ்ணவ நூலொன்று கொண்டு வந்திருந்தேன். சட்டைத் தூணிகளை யெல்லாம் கழற்றித் தலைக்குயரமாக வைத்துக்கொண்டு நானும் படுக்கை போட்டேன். அந்தப் புஸ்தகத்தில் "ப்ரவேசம்" என்ற முகவுரையில் பாதி வாசிக்கும்போதே எனக்கும் நல்ல தூக்கம் வந்தது. ஜில்ஜில்லென்று காற்று சுற்றிச் சுற்றி யடித்தது. கண் சொக்கிச் சொக்கித் தூங்கிற்று, விழித்து விழித்துத் தூங்கி பின்பு கடைசியாக எழுந்தபோது பகல் பதினேரு மணியாய்விட்டது. எழுந்தவுடனே கோயிற் கிணற்றில் ஜல மிறைத்து ஸ்நானம் பண்ணினேன். அந்தக் கிணற்று ஜலம் மிகவும் ருசியுள்ளது. கண்ணுக்கு தெளிந்தது. ஸ்நானத்தினுடைய இன்பம் வர்ணிக்க முடியாது. பிறகு வேகபுரத்திலிருந்து ஒருவன் ஆஹாரம் கொண்டு வந்தான். சாப்பிட்டுத் தாம்பூலம் போட்டுக்கொண்டிருந்தோம். அப்போது கோயிலுக் கெதிரேயுள்ள அக்ரஹாரத்தில் நாலைந்துபேர் வந்து குளித்துக் கொண்டிருந்தார்கள். "நேர்த்தியான கிணற்று ஜல மிருக்கும்போது, அதை இறைத்துக் குளிக்காமல், அழுக்குக் குளத்திலே குளிக்கிற மூடர் களைப் பார்த்தீரா?" என்று நாராயணஸ்வாமி மூணு மூணைத்தான். அந்த நால்வருடைய பெயரெல்லாம் தான் விசாரிக்கவில்லை. அவர்கள் அப்போது பிங்கள

வருஷத்துப் பலாபலன்களைப் பற்றி வார்த்தையாடிக் கொண்டிருந்தனர். அவர்களுடைய ஸம்பாஷணையை இங்கு எழுத வேண்டுமாதலால், அவர்களுக்கு, நெட்டையன், கட்டையன், சொரியன், கரியன் என்ற கற்பனைப் பெயர்கள் கொடுக்கிறேன்.

சொரியன் சொல்லுகிறான் :—புது வருஷத்துப் பஞ்சாங்கம் கேட்டீர்களா? இந்த வருஷ மெப்படி? ஜனங்களுக்கு நல்லதா கெட்டதா?

கரியன் :—நள வருஷத்திலே நாய் படும் கஷ்டம்; பிங்கள வருஷத்தில் பின்னும் கொஞ்சம் கஷ்டம். ஜனங்களுக்கு சுகமேது?

கட்டையன் :—நேற்று பூமியிலே ஒரு நக்ஷத்திரம் வந்து மோதி, பூமி தூள் தூளாகச் சிதறிப் போகுமென்று ஒரு மாஸ காலமாக எங்கே பார்த்தாலும் ஒரே பேச்சாய்க் கிடந்தது. ஒன்றும் நடக்கவில்லை. பொய் யென்கிறேன்.

நெட்டையன் :—அட போடா! தூள் தூளாகப் போகுமென்று நம்ம தமிழ்ச் சோசியன் சொல்லவில்லை. சிமைப் புளுகு!

கட்டையன் :—தமிழ்ச் சோசியனுக்கு இப்படிப் பெரிய பொய் சொல்லத் தெரியாது. அவன் புளுகுகிற விதம் வேறே!

நெட்டையன்:—அடபோடா! தமிழினிலே ஒருத்தன் இரண்டு பேர் நிஜம் சொல்லுகிற சோசியனும் உண்டு. ஆனால் நிஜம் பேசுகிற சோசியனுக்கு ஊரிலே அதிக மதிப்புக் கிடையாது.

கட்டையன் :—சோசிய சாஸ்திரமே பொய் யென்கிறேன். அவர்கள் இவ்வாறு பேசிக்கொண் டிருக்கையில் நாராயணஸ்வாமி ஒருபுறம் கிளம்பிவிட் டான். அவன் சொல்லுகிறான் :—

"என் காளிகாஸரே, அமெரிக்காவில் பெரிய பெரிய ஸயன்ஸ்காரர சாஸ்திரிகள் கண்டுபிடித்துச் சொன்னது கூடப் பொய்யாகி விட்டதே! இது பெரிய ஆச்சர்யம்! பூமி தானாகா விட்டாலும் ஒரு பூகம்பமாவது நடக்கு மென்று நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். நேற்று ராத்திரி கம்ம தெருவில் அநேகர் தூங்கவேயில்லை. குழந்தை குட்டிகளை யெல் லாம் விழிக்க வைத்துக்கொண்டு கவலைப்பட்டுக்கொண் டிருந்தார்கள். ஸயன்ஸ் பண்டிதர்கூடச் சில சமயங் களில் பொய் சொல்லத்தான் செய்கிறார்கள்" என்றான்.

நான் குளத்தில் குளித்தவர்களுடைய சம்பா ஷணையில் கவனம் செலுத்தினேன்.

நெட்டையன் சொல்லுகிறான் :—வேதபுரத்திலே வெங்காயக் கடைக்குப் பக்கத்து வீட்டிலே பெரி யண்ணா வாத்தியார் இருக்கிறாரே, தெரியுமா? அவர் சோசியம் தப்பவே செய்யாது. அவர் எங்கள் தாத்தா செத்துப்போன நாள், மணி எல்லாம் துல்யமாகச் சொன்னார். பூமி வெடிக்காதென்றும், அது சீமைப் புளுகென்றும், அதை நம்பக் கூடாதென்றும் அவர் என்னிடம் பத்து நாளுக்கு முந்தியே சொன்னார். பெரியண்ணா வாத்தியார் நாளது பிங்கள வருஷத்

துக்குச் சொல்லிய பலன்களை யெல்லாம் அப்படியே சொல்லுகிறேன். கவனமாகக் கேளுங்கள்.

பிங்கள வருஷத்தில் நல்ல மழை பெய்யும், நாடு செழிக்கும், நாட்டுக் தானியம் வெளியே போகாது. ஏழைகளுக்குச் சோறு கொஞ்சம் அதிகமாகக் கிடைக்கும். பசு முதலிய நல்ல ஜந்துக்கள் விருத்தியாகும். துஷ்ட ஜந்துக்கள் எல்லாம் செத்துப் போகும். தேள், பாம்பு, நட்டுவாய்க்காலி முதலியவற்றின் பீடை குறையும், பிணி குறையும், துர்மரணமும், அகால மரணமும் குறையும். வெளித் தேசங்களில் சண்டை நடக்கும்; நம்மூடைய தேசத்தில் சண்டை நடக்காமலே பல மாறுதல் ஏற்படும். ஜாதி பேதம் குறையும். ஆணுக்கும் பெண்ணுக்கும் படிப்பு விருத்தியாகும். ஜனங்களுக்குள்ளே தைரியமும், பலமும், வீரியமும், தெய்வ பக்தியும் அதிகப்படும். நம்மூடைய தேசம் மேன்மையடையும் என்று பெரியண்ணா வாத்தியார் சொன்னதாக நெட்டையன் சொன்னான்.

"நாராயணஸ்வாமி, கவனி" என்றேன்.

"பாமர ஜனங்களுடைய வார்த்தை" என்று நாராயணஸ்வாமி சொன்னான்.

"தெய்வ வாக்கு" என்று நான் சொன்னேன்.

பிறகு சிறிது நேரம் அந்தக் கோயிலில் சுகமாகப் பாட்டிலும் பேச்சிலும் பொழுது கழித்து விட்டு வீட்டுக்குத் திரும்பி வந்து விட்டோம்.

காக்காய்ப் பார்லிமெண்ட்.

நேற்று ஸாயங்காலம் என்னைப் பார்க்கும் பொருட்டாக உடுப்பியிலிருந்து ஒரு ஸாமியார் வந்தார். "உம்முடைய பெயரென்ன?" என்று கேட்டேன். "காராயண பரமஹம்ஸர்" என்று சொன்னார். "நீர் எங்கே வந்தீர்?" என்று கேட்டேன். "உமக்கு ஜந்துக்களின் பாஷையைக் கற்பிக்கும் பொருட்டாக வந்தேன். என்னை உடுப்பியிலிருக்கும் உழக்குப் பிள்ளையார் அனுப்பினார்" என்று சொன்னார். "சரி, கற்றுக்கொடும்" என்றேன். அப்படியே கற்றுக் கொடுத்தார்.

காய்க்காய் பாஷை மிகவும் சுலபம். இரண்டு மணி நேரத்திற்குள் படித்து விடலாம்.

'கா' என்றால் 'சோறு வேண்டும்' என்றர்த்தம். 'கக்கா' என்றால் 'என்னுடைய சோற்றில் நீ பங்குக்கு வராதே' என்றர்த்தம். 'காக்கா' என்றால் 'எனக்கு ஒரு முத்தம் தாடி கண்ணே' என்றர்த்தம். இது ஆண் காக்கை பெண் காக்கையை நோக்கிச் சொல்லுகிற வார்த்தை. 'கஹாகா' என்றால் 'சண்டை போடுவோம்' என்றர்த்தம். 'ஹாகா' என்றால் 'உதைப்பேன்' என்றர்த்தம். இந்தப்படி எறக்குறைய மனுஷ்ய அகாராதி முழுதும் காக்கை பாஷையிலே, க, ஹா, க்ஹ, முதலிய எழுத்து அக்ஷரங்களைப் பலவேறு விதமாகக் கலந்து அமைக்கப்பட்டிருக்கிறது. அதை முழுதும் மற்றவர்களுக்குச் சொல்ல இப்போது சாவகாசமில்லை. பிறருக்குச் சொல்லவும் கூடாது. அந்த

நாராயண பரமஹம்ஸருக்குத் தமிழ் தெரியாது. ஆகை யால் அவர் பத்திரிகைகளை வாசிக்கமாட்டார். இல்லா விட்டால் நான் மேற்படி நாலந்து வார்த்தைகள் திருஷ்டாந்தத்துக்காக எழுதினதிலேயே அவருக்கு மிகுந்த கோபமுண்டாய் விடும். ஒரு வார்த்தைகூட மற்றவர்களுக்குச் சொல்லக் கூடாதென்று என்னிடம் வற்புறுத்திச் சொன்னர். "போனால் போகட்டும், ஐயோ, பாவம்" என்று நாலு வார்த்தை காட்டி வைத்தேன்.

இன்று ஸாயங்காலம் அந்த பாஷையைப் பரீக்ஷை செய்து பார்க்கும் பொருட்டாக, மேல் மாடத்து முற்ற வெளியிலே போய் உட்கார்ந்து பார்த் தேன். பக்கத்து வீட்டு மெத்தைச் சுவரின்மேல் நாற்பது காக்கை உட்கார்ந்திருக்கிறது. "நாற்பது காக்கைகள் உட்கார்ந்திருக்கின்றன என்று பன்மை சொல்ல வேண்டாமோ?" என்று எண்ணிச் சில இலக்கணக்காரர்கள் சண்டைக்கு வரக்கூடும், அது பிரயோஜனமில்லை. நான் சொல்வதுதான் சரியான பிரயோகம் என்பதற்கு போகர் இலக்கணத்தில் ஆதாரமிருக்கின்றது. "போகர் இலக்கணம் உமக்கு எங்கே கிடைத்தது?" என்று கேட்கலாம். அதெல் லாம் மற்றொரு சமயம் சொல்லுகிறேன். அதைப் பற்றி இப்போது பேச்சில்லை. இப்போது காக்காய்ப் பார்லிமெண்டைக் குறித்துப் பேச்சு. அந்த நாற்பதில் ஒரு கிழக்காக்கை ராஜா. அந்த ராஜா சொல்லு கிறது:—"மனிதருக்குள் ராஜாக்களுக்கு உயர்ந்த சம்ப

ளங்கள் கொடுக்கிறார்கள். கோடி எழைகளுக்கு அதா வது ஸாதாரணக் குடிகளுக்குள்ள சொத்தை விட ராஜாவுக்கு அதிக சொத்து. போன மாசம் நான் பட்டணத்துக்குப் போயிருந்தேன். அங்கே ருஷியா தேசத்துக் கொக்கு ஒன்று வந்திருந்தது. அங்கே சண்டை நடந்தால் படுகிறதாம். ஜார் சக்கரவர்த்தி கக்ஷி ஒன்று. அவர் யோக்கியர். அவரைத் தள்ளிவிட வேண்டுமென்பது இரண்டாவது கக்ஷி. இரண்டு கக்ஷி யாரும் அயோக்கியர்க ளாதலால் இரண்டையும் தொலைத்துவிட வேண்டு மென்று மூன்றாவது கக்ஷி. மேற்படி மூன்று கக்ஷியாரும் திருடரென்று நாலா வது கக்ஷி. இந்த நாலு கக்ஷியாரையும் பொங்கவிட்டு விட்டுப் பிறகுதான் யேசு கிறிஸ்து நாதரைத் தொழ வேண்டு மென்று ஐந்தாவது கக்ஷி. இப்படியே நூற் றிருபது கக்ஷிகள் அந்த தேசத்தில் இருக்கின்றன வாம்.

"இந்த 120 கக்ஷியார் பரஸ்பரம் செய்யும் ஹிம்ஸை பொறுக்காமல் 'இந்தியாவுக்குப் போவோம். அங்கே தான் சண்டை யில்லாத இடம், ஹிமயமலைப் பொந் தில் வஸிப்போம்' என்று வந்தார். அது சும்மா பட்டணத்துக்கு வந்து அனிபெஸண்ட் அம்மாளுடைய தியஸாபிகல் சங்கத்துத் தோட்டத்தில் சில காலம் வஸிக்க வந்தது. அந்தத் தோட்டக் காற்று ஸமா தானமும், வேதாந்த வாஸனையு மூடையதாதலால், அங்கே போய்ச் சில காலம் வஸித்தால், ருஷியாவில் மனுஷ்யர் பரஸ்பரம் கொலை பண்ணும் பாவத்தைப்

பார்த்த தோஷம் நீங்கி விடுமென்று மேற்படி கொக்கு ஹிமயமலையிலே கேள்விப் பட்டதாம்.

"கேட்டீர்களா, காகங்களே, அந்த ருஷியா தேசத்து ஜார் சக்கரவர்த்தியை இப்போது அடித்துத் துரத்தி விட்டார்களாம். அந்த ஜார் ஒருவனுக்கு மாத்திரம் கோடானுகோடியான சம்பளமாம். இப் போது நம்மூடைய தேசத்திலே கூடத் திருவாங் கூர் மஹாராஜா, மைசூர் ராஜா முதலிய ராஜாக் களுக்குக் கூட எல்லா ஜனங்களும் சேர்ந்து பெரிய பெரிய ஆஸ்தி வைத்திருக்கிறார்கள்.

"நாமே உங்களை வீணாக ஆளுகிறோம். எதாவது சண்டைகள் நேரிட்டால் என்னிடம் மந்திராலோசனை கேட்க வருகிறீர்கள். நான் தொண்டைத் தண்ணீரை வற்றடித்து உங்களுக்குள்ளே மந்திராலோசனை பண்ணு கிறேன். ஏதேனும் ஆபத்து நேரிட்டால், அதை நீக்கு வதற்கு என்னிடம் உபாயம் கேட்க வருகிறீர்கள். நான் மிகவும் கஷ்டப்பட்டு உபாயம் கண்டு பிடித்துச் சொல்லுகிறேன். இதற்கெல்லாம் சம்பளமா? சாடிக் கையா? ஒரு இழவும் கிடையாது. தண்டத்துக்கு உழைக்கிறேன். எல்லாரையும் போலே நானும் வயிற் றுக்காக நான் மூழுவதும் ஓடி உழன்று பாடுபட்டுத் தான் தின்னவேண்டி யிருக்கிறது. அடே காகங்கள், கேளீர்:

"ஒவ்வொரு காக்கைக்கும் நாள்தோறும் கிடைக் கிற ஆஹாரத்தில் ஆற்றிலே ஒரு பங்கு எனக்குக் கொடுத்துவிட வேண்டும். அதை வைத்துக்கொண்டு

நானும் என் பெண்டாட்டியும், என் குழந்தைகளும் என் அண்ணன், தம்பி, மாமன், மச்சான், என் வைப் பாட்டியார், எழு பேர். அவர்களுடைய குடும்பத் தார் இத்தனை பேரும் அரை வயிறு ஆறாரம் கஷ்ட மில்லாமல் நடத்துவோம். இப்போது என் குடும் பத்துக் காக்கைகளுக்கும் மற்றக் காகங்களுக்கும் எவ் விதமான வேற்றுமையும் இல்லை. எழுட்டு நாளுக்கு முந்தி ஒரு வீட்டுக் கொல்லையிலே கிடந்தது. அது சோறில்லை; கறியில்லை; எலும்பில்லை; ஒன்றுமில்லை; அசுத்த வஸ்து கிடந்தது. அதைத் தின்னப் போனேன். அங்கே ஒரு கிழவன் வந்து கல்லை எறிந்தான். என் மேலே இந்த வலச் சிறகிலே காயம். இது சரிப்படாது. இனிமேல் எனக்குப் பிராணிகள் ஆறில் ஒரு பங்கு கொடுத்து விட வேண்டும்" என்று சொல்லிற்று.

இதைக் கேட்டவுடனே ஒரு கிழக் காகம் சொல்லுகிறது :—

"மகாராஜா, காங்கள் இதுவரை யில்லாத புதிய வழக்கம் ஏற்படுத்துவது நியாய மில்லை. இருந்தாலும் அவசரத்தை முன்னிட்டுச் சொல்லுகிறீர்கள்! அதற்கு நாங்கள் எதிர்த்துப் பேசுவது நியாய மில்லை. ஆனால் தங்களுக்குள்ள அவஸரத்தைப் போலவே என் போன்ற மந்திரிமாருக்கும் அவஸர முண்டென்பதைத் தாங்கள் மறந்து விட்டதை நினைக்க எனக்கு மிகுந்த ஆச்சர்ய முண்டாகிறது. தங்களுக்கு ஒவ்வொரு காக் கையும் தன் வரும்படியில் பன்னிரண்டில் ஒரு பகுதி

கட்டவேண்டு மென்றும், அதில் மூன்றில் ஒரு பாகம் தாங்கள் மந்திரிமார் செலவுக்குக் கொடுக்க வேண்டு மென்றும், எற்படுத்துதல் நியாய மென்று என் புத்தி யில் படுகிறது" என்று சொல்லிற்று. அப்பொழுது ஒரு அண்டங்காக்கை எழுந்து:—"கக்கவா, கக்கவா, நீங்கள் இரண்டு கக்ஷியாரும் அயோக்யர்கள். உங்களை உதைப்பேன்" என்றது. வெறொரு காகம் எழுந்து ஸமாதானப் படுத்திற்று. இதற்குள் மற்றொரு காகம் என்னைச் சுட்டிக் காட்டி:—" அதோ, அந்த மனுஷ் யனுக்கு நாம் பேசுகிற விஷயம் அர்த்தமாகிறது. ஆகலால் நாம் இங்கே பேசக்கூடாது. வேறிடத் துக்குப் போவோம்" என்றது. உடனே எல்லாக் காகங்களும் எழுந்து பறந்து போய் விட்டன.

இது நிஜமாக நடந்த விஷயமில்லை. கற்பனைக் கதை.

பிழைத்தோம்.

மாலை நாலு மணி யாயிருக்கும்.

நான் சிறிது ஆயாஸத்தினால் படுத்து இலேசான தூக்கம் தூங்கி விழித்துக் கண்ணைத் துடைத்துக் கொண்டு தாம்பூலம் போட்டுக்கொள்ள யோசனை செய்து கொண்டிருந்தேன். அப்போது வீரபுரம் கிருஷ்ணய்யங்கார் வந்து சேர்ந்தார். இவர் நமக்கு ஆப்த ஸ்நேகிதர். நல்ல யோக்கியர். ஆனால், சூது வாது தெரியாத ஸாதுவான பிராணி.

இவர் வந்தவுடனே "ஓராச்சர்யம்!" என்று கூவினர். "என்ன விஷயம்?" என்று கேட்டேன். "நேற்று ராத்திரி ஒரு கனவு கண்டேன்" என்றார். "என்ன கனவு? சொல்லும்" என்றேன்.

வீரபுரம் கிருஷ்ணய்யங்கார் பின் வருமாறு சொல்லலானார்:—

"டாம், டாம், டாம் என்று வெடிச் சத்தம் கேட்கிறது. எங்கு பார்த்தாலும் புகை. அந்தப் புகைச் சலுக்குள்ளே நான் சுழற் காற்றில் அகப்பட்ட பக்ஷி போலே அகப்பட்டுக் கொண்டேன். திடீரென்று எனக்குக் கீழே ஒரு வெடி கிளம்பும். அது என்னைக் கொண்டு நூறு காதவழி தூரத்தில் ஒரு கூனைத்திலே எறிந்து விடும். அப்படிப்பட்ட வேகத்தை சாமானியமாக விழித்துக்கொண்டிருக்கும் நேரத்தில் நம்மாலே ஸ்மரிக்கக்கூட முடியாது.

"மனோவேகம் என்பதின் பொருளை நேற்று ராத்திரித் தான் கண்டேன். அடே ராமா! ஒரு தள்ளுத் தள்ளினால் நேரே தலையை வானத்திலே கொண்டு மூட்டும். அங்கே போனவுடன் மற்றொரு வெடி, அது பாதாளத்திலே வீழ்த்தும். எட்டுத் திசையும் பதினாறு கோணமும், என்னைக் கொண்டு மோதின படியாக இருந்தது. வெடியின் சத்தமோ ஸாமானியமன்று. அண்ட கோளங்கள் இடிந்து போகும்படியான சத்தம். இப்படி நெடுநேரம் கழிந்தது. எத்தனை மணி நேரம் இந்தக் கனவு நீடித்த தென்பதை என்னால் இப்போது துல்லியமாகச் சொல்ல முடியாது.

ஆனல் ஸ்வப்பநத்திலே அது காலே யரைக்கால் யுகம் போலிருந்தது. மரணவஸ்தை இனிமேல் எனக்கு வேறு வேண்டியதில்லே. மூச்சுத் திணறுகிறது, உயிர் தத்தளிக்கிறது, அந்த அவஸ்தை ஒரு முடிவுக்கு வரு மென்றுவது, என் பிராணன் மிஞ்சு மென்றுவது எனக்கு அப்போது தோன்றவே யில்லே.

"நெடுநேரம் இப்படி என்னைப் புரட்டித் தள்ளிய பிறகு ஒரு சுவர் மேலே கொண்டு மோதிற்று. அந்தச் சுவரில் 'ஓம் சக்தி' என்று ஒளி எழுத்துக்களால் பல விடங்களில் எழுதப்பட்டிருந்தது. அவற்றுள் மிகவும் ஒளி பொருந்திய எழுத்தின் கீழே ஒரு சிறு பொந் திருந்தது. அந்தப் பொந்துக்குள்ளே போய் விழுந் தேன். ஆரம்பத்தில் இவ்வளவு சிறிய பொந்துக்குள் நாம் எப்படி நுழைய முடியுமென்று நினைத்தேன். பிறகு ஸ்வப்பநந்தானே? எவ்விதமாகவோ அந்தப் பொந்துக்குள் என் உடம்பு முழுதும் நுழைந்திருக்கக் கண்டேன். அதற்குள்ளே போனவுடன் புகைச்சலு மில்லே, வெடியும் நின்றுவிட்டது. மூச்சுத் திணறவு மில்லே, ஆறுதலுண்டாயிற்று. பிழைத்தோமப்பா, என்று நினைத்துக் கொண்டேன். இவ்வளவு தான் கனவு. இந்தக் கனவின் பொருளென்ன? இது என்ன விஷயத்தைக் குறிப்பிடுகின்றது?" என்று கிருஷ்ணய்யங்கார் கேட்டார்.

"கனவுக்குப் பொருள் கண்டு பிடித்துச் சொல் லும் சாஸ்திரம் எனக்குத் தெரியாது" என்று சொன் னேன்.

கிருஷ்ணய்யங்காருக்குத் திருப்தி ஏற்படவில்லை. நான் கனவு சாஸ்திரத்திலேயே ஒரு வேளை நம்பிக்கையில்லாமல் இருக்கலாமென்று நினைத்து அவர் கொஞ்சம் முகத்தைச் சிணுக்கினர். பிறகு சொல்லுகிறார்:—

"அப்படி நினையாதேயுமையா, கனவுக்குப் பொருளுண்டு. பல முறை கனவிலே கண்டது நனவிலே நடப்பதை நான் பார்த்திருக்கிறேன்" என்றார்.

'காலைச் சுற்றின பாம்பு கடித்தாலொழியத் தீராது' என்று வசனம் சொல்லுகிறது. ஆகலால், நான் இவருக்கு ஏதேனும் விடை சொல்லித்தான் தீர வேண்டுமென்று கண்டு பிடித்துக் கொண்டேன். எனவே பின்வருமாறு சொன்னேன் :—

"அந்த வெடிப்புத்தான் உலக நிலை; அந்த சக்தி மந்திரமே தாரகம். அந்தப் பொந்து விடுதலை. அதற்குள் நுழைவது கஷ்டம். தெய்வ வெடியினாலே தள்ளினாலொழிய மனிதன் ஜீவன் முக்தி நிலையில் நுழைய முடியாது. உள்ளே நுழைந்து விட்டால் பிறகு அது விஸ்தாரமான அரமனையாகக் காணப்படும். அதற்குள்ளே நுழைந்தவர்களுக்கு அதன் பிறகு எவ்விதமான அபாயமுமில்லை. அதற்குள்ளே போனவர்கள் உண்மையாகவே பிழைத்தார்கள்" என்று சொன்னேன். கிருஷ்ணய்யங்கார் இதைக் கேட்டு மிகவும் சந்தோஷத்துடன் விடை பெற்றுச் சென்றார்.

புதிய கோணங்கி.

(அதாவது குடுதுடுப்பைக்காரன்)

வேதபுரத்தில் ஒரு புது மாதிரிக் குடுகுடுப்பைக் காரன் புறப்பட்டிருக்கிறான். உடுக்கைத் தட்டுவதிலே மூப்பத்தைந்து தாளபேதங்களும், அவற்றிலே பல வித் தியாஸங்களும் காட்டுகிறான். தாள விஷயத்திலே மஹா கெட்டிக்காரன். உடம்பு மேலே துணிமூட்டை சுமந்து கொண்டு போவதில்லை. நல்ல வெள்ளை வேஷ்டி உடுத்தி, வெள்ளைச் சட்டை போட்டுக்கொண்டிருக் கிறான். தலையிலே சிவப்புத் துணியால் வளைத்து வளைத்து பெரிய பாகை கட்டியிருக்கிறான். பாகையைப் பார்த் தால் நெல்லூர் அரிசி மூட்டையிலே பாதி மூட்டை யைப் போலிருக்கிறது. நெற்றியிலே பெரிய குங்குமப் பொட்டு. மீசையும் கிருதாவுமாக மிகவும் விரிந்த பெரிய முகத்துக்கும் அவனுடைய சிவப்பு நிறத்துக்கும் அந்தக் குங்குமப் பொட்டு நன்றாகப் பொருந்தி யிருக் கிறது. ஆள் நெட்டை; தடியன். காலிலே ஹை தரா பாது ஜோடு மாட்டியிருக்கிறான். நேற்றுக் காலையிலே, இவன் நம்முடைய வீதி வழியாக வந்தான். உடுக்கை யிலே தாள விஸ்தாரம் நடக்கிறது. பெரிய மிருதங் கக்காரன் வேலை செய்வது போலே செய்கிறான். நல்ல கெட்டிக்காரன். அவன் சொன்னான்:—

"குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு;
நல்ல காலம் வருகுது; நல்ல காலம் வருகுது;
ஜாதிகள் சேருது; சண்டைகள் தொலையுது;
சொல்லடி, சொல்லடி, சக்தி மாகாளீ,

வேதபுரத்தாருக்கு நல்லகுறி சொல்லு!
தரித்திரம் போகுது, செல்வம் வருகுது;
படிப்பு வளருது; பாவம் தொலையுது;
படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால்
போவான், போவான்; ஐயோவென்று போவான்.
வேதபுரத்திலே வியாபாரம் பெருகுது;
தொழில் பெருகுது; தொழிலாளி வாழ்வான்;
சாத்திரம் வளருது; சூத்திரந் தெரியுது;
யந்திரம் பெருகுது; தந்திரம் வளருது;
மந்திர மெல்லாம் வளருது, வளருது!
குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு,
சொல்லடீ, சொல்லடீ, மாலைபால பகவதீ.
அந்தரி, வீரி, சண்டிகை; சூலி!
குடுகுடு குடுகுடு"

இப்படி அவன் சொல்லிக்கொண்டு போவதைகான் மெத்தையிலிருந்து கேட்டேன். இதென்னடா புதுமையாக இருக்கிறதென்று ஆச்சரியத்துடன் அவனை நிற்கச் சொன்னேன். நின்றான். கீழே இறங்கிப் போய், அவனை ஸ்டீபத்திலே அழைத்து "எந்த ஊர்?" என்று கேட்டேன். "சாமி, குடிகுடுக்காரனுக்கு ஊரேது, காடேது? எங்கேயோ பிறந்தேன், எங்கேயோ வளர்ந்தேன். எங்கெல்லாமோ சுற்றிக் கொண்டு வருகிறேன்" என்றான். அப்போது நான் சொன்னேன்:—

"உன்னைப் பார்த்தால் புதுமையாகத் தெரிகிறது. சாதாரணக் கோணங்கியைப் போலில்லை. உன்னு

டைய பூர்வோத்தரங்களைக் கூடிய வரையில் ஸஷிஸ்காரமாகச் சொல்லு. உனக்கு நேர்த்தியான சரிகை வேஷ்டி கொடுக்கிறேன்" என்றேன். அப்போது, குடுகுடுக்காரன் சொல்லுகிறான்:—"சாமி, நான் பிறந்த இடம் தெரியாது. என்னுடைய காயார் முகம் தெரியாது. என்னுடைய தகப்பனுருக்கு இதுவே தொழில். அவர் தெற்குப் பக்கத்தைச் சேர்ந்தவர். "ஒன்பது கம்பளத்தார்" என்ற ஜாதி. எனக்குப் பத்து வயதாக இருக்கும்போது, தஞ்சாவூருக்கு என் தகப்பனர் என்னை அழைத்துக்கொண்டு போனர். அங்கே வைசூரி கண்டு செத்துப்போய் விட்டார். பிறகு நான் இதே தொழிலில் ஜீவனம் செய்துகொண்டு பல தேசங்கள் சுற்றி ஹைதராபாத்துக்குப் போய்ச் சேர்ந்தேன். அப்போது எனக்கு வயது இருபதிருக்கும். அங்கே ஜான்ஸன் என்ற துரை வந்திருந்தான். நல்ல மனுஷ்யன். அவன் ஒரு "கம்பெனி ஏஜண்டு." இந்தியாவிலிருந்து காசிகள், நட்டுவர், கழைக்கூத்தாடிகள், செப்பிடுவித்தைக்காரர், ஜாலக்காரர் முதலிய பல தொழிலாளிகளைச் சம்பளம் கொடுத்துக் கூட்டிக்கொண்டு போய், வெள்ளைக்காரர் தேசங்களிலே, பல இடங்களில் கூடாரமடித்து வேடிக்கை காண்பிப்பது அந்தக் கம்பெனியாரின் தொழில். விதிவசத்தினால் நான் அந்த ஜான்ஸன் துரை கம்பெனியிலே சேர்ந்தேன். இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய ஐரோப்பிய தேசங்களிலே ஸஞ்சாரம் செய்திருக்கிறேன். அமெரிக்காவுக்குப் போயிருக்கிறேன். இரண்டு வருஷங்களுக்கு முன்பு சண்டை

தொடங்கினபோது, மேற்படி "கம்பெனி" கலைந்து போய் விட்டது. எங்களுக்கெல்லாம் பணம் கொடுத்து இந்தியாவுக்கு அனுப்பி விட்டார்கள். உயிருள்ளவரை போஜனத்துக்குப் போதும்படியான பணம் சேர்த்து வைத்திருக்கிறேன். ஆனாலும், பூர்வீகத் தொழிலைக் கைவிடுவது நியாயமில்லை என்று நினைத்து இங்கு வந்த பின்னும் பலபூர்களில் சுற்றி, இதே தொழில் செய்து வருகிறேன்.

ஐரோப்பா முதலிய தேசங்களில் சுற்றின காலத்தில் மற்றக் கூத்தாடிகளைப் போலே வீண் பொழுது போக்காமல், அவ்விடத்துப் பாஷைகளைக் கொஞ்சம் படித்து வந்தேன். எனக்கு இங்கிலீஷ் நன்றாகத் தெரியும். வேறு சில பாஷைகளும் தெரியும். அனேக புஸ்தகங்கள் வாசித்திருக்கிறேன். இங்கு வந்து பார்க்கையிலே அவ்விடத்து ஜனங்களைக் காட்டிலும் இங்குள்ளவர்கள் பல விஷயங்களிலே குறைவுபட்டிருக்கிறார்கள்.

நம்முடைய பரம்பரைத் தொழிலை வைத்துக் கொண்டே ஊரூராகப் போய் இங்குள்ள ஜனங்களுக்குக் கூடியவரை நியாயங்கள் சொல்லிக்கொண்டு வரலாமென்று புறப்பட்டிருக்கிறேன். இது தான் என்னுடைய விருத்தாந்தம்" என்றான்.

ஒரு ஜாகை வேஷ்டி எடுத்துக் கொடுக்கப் போனேன்; போன தீபாவளிக்கு வாங்கினது; நல்ல வேஷ்டி.

"சாமி, வேண்டியதில்லை" என்று சொல்லிவிட்டு அவன் மறுபடி உடுக்கை யடித்துக்கொண்டு போய் விட்டான். போகும்போதே சொல்லுகிறான் :—

"குடுகுடு, குடுகுடு, குடுகுடு, குடுகுடு,
சாமிமார்க்கெல்லாம் தைரியம் வளருது,
தொப்பை சுருங்குது ; சுறுசுறுப்பு விளையுது,
எட்டு லக்ஷுமியும் ஏறி வளருது,
பயந் தொலையுது, பாவந் தொலையுது,
சாத்திரம் வளருது, சாதி குறையுது,
நேத்திரம் திறக்குது, நியாயந் தெரியுது,
பழைய பயித்தியம் பழுலென்று தெளியுது,
வீரம் வருகுது, மேன்மை கிடைக்குது,
சொல்லே சக்தி, மலையாள பகவதி,
தர்மம் பெருகுது, தர்மம் பெருகுது."

என்று சொல்லிக்கொண்டே போனான். அவன் முதுகுப்புறத்தை நோக்கி, தெய்வத்தை நினைத்து, ஒரு கும்பிடு போட்டேன்.

கடல்.

ஒரு நாள் மாலையில் நான் வேதபுரம் கடற்கரையில் தனி யிடத்தில் மணல் மேலே போய்ப் படுத்துக் கொண்டிருந்தேன். பகலில் நெடுந்தூரம் நடந்த இளைப்பினால் அப்படியே தூங்கிப் போய்விட்டேன். அந்தத் தூக்கத்திலே கண்ட கனவை எழுதுகிறேன்.

நடுக் கடலில் ஒரு தீவு ; அதனிடையே பெரிய ஆலமரம். ஆலமரத்தருகே சிங்காரத் தோட்டம். அதில் ஒரு நீரோடை, அதனருகே புல்லாந் தரை

மேல் பதிணைறு வயதுள்ள ஒரு கன்னிகை உட்கார்ந் திருந்தாள். அவள் என்னைக் கண்ட மாத்திரத்தில் எழுந்து அரமனைக்குள் ஓடிப்போய் விட்டாள். நான் அவ்வழியைப் பின் தொடர்ந்து சென்றேன். போகிற வழியில் ஒரு பெரிய பாம்பு கிடந்தது. என்னைக் கண்டவுடன் படத்தைத் தூக்கி என் மேலே பாய்ந்து கடிக்க வந்தது. நான் ஓடினேன். அது என்னைத் தூரத்திக்கொண்டு வந்தது. ஓடி யோடிக் கடற் கரைக்கு வந்து சேர்ந்தேன். பாம்பு காலுக்கு மிகவும் சமீபமாக வந்தது. கடலுக்குள்ளே குதித்தேன். கட லிலே புயற்காற்று ஓலையைத் தூக்கி மூன்று பனை யளவு தூரம் மேலே எறிகிறது. மற்றோலை மூன்று பனையளவு பள்ளத்தில் வீழ்த்துகிறது. எப்படியோ சாகாமல் அந்த அலைக்குத் தப்பி விட்டேன். நெடு நேரத்துக்கப்பால் அலை அடங்கிற்று. நான் நீச்சை விடவில்லை. எப்படியோ நீந்திக்கொண்டு வருகிறேன். ஆனால் கரை தென்படவில்லை. பிறகு கைகளில் நோவுண்டாயிற்று. என்னால் நீந்த முடியவில்லை. என் னுடைய குல தெய்வத்தின் பெயரை உச்சரித்தேன். அங்கே ஒரு கிழவன் தோணி விட்டுக்கொண்டு வந் தான். "அண்ணே, அண்ணே, என்னை உன்னுடைய தோணியில் ஏற்றிக்கொள்ளு. நான் புயற் காற்றில் அடிபட்டு மிகவும் நொந்து போயிருக்கிறேன்" என்று சொன்னேன். அவன் தனது தோணியில் ஏற்றிக் கொண்டான். தோணியை விட்டுக்கொண்டு கடலிலே போகிறோம்; போகிறோம்; வழி தொலையவே யில்லை.

"அண்ணே, கரை சேர இன்னும் எத்தனை காலம் செல்லும்? எனக்குப் பசி கண் அடைக்கிறதே. நான் என்ன செய்வேன்?" என்று சொன்னேன். அந்தக் கிழவன் தின்பதற்குக் கொஞ்சம் அரிசி மாவும், ஒரு மிடறு தண்ணீரும் கொடுத்தான். இளைப்பாறி அப் படியே கண்ணயர்ந்தேன். (கனவுக்குள்ளே ஒரு தூக்கம்.) கொஞ்சம் ஆயாஸம் தெளிந்தவுடனே கண்ணை விழித்துப் பார்த்தேன்; கரை தெரிந்தது. கிழவன் என்னைக் கறையிலிறக்கி விட்டு, மறுபடி தனது தோணியைக் கடலிலே செலுத்திக்கொண்டு போனான்.

நான் அவனிடம் ஏதெல்லாமோ கேள்வி கேட் டேன். அவன் ஒன்றுக்கும் மறுமொழி சொல்ல வில்லை. கண்ணுக் கெட்டும்வரை அவன் தோணியைப் பார்த்துக்கொண்டிருந்தேன். மறுபடி அந்தத் தீவுக் குள் கொஞ்சதூரம் போனவுடனே பழைய அரமனை தெரிந்தது. அதனருகே சிங்காரத் தோட்டம், அந்த மீரோடை, அந்தப் பெண்ணும் முன்போலவே புல்லாந் தரைமேல் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். என்னைக் கண்டவுடன் மறுபடி யெழுந்து தன் வீட்டை நோக்கி யோடினாள். நான் தொடர்ந்து போகவில்லை. தொடர்ந்து போனால் முன் போலவே வழியில் பாம்பு கிடக்குமென்று நினைத்து மிகவும் பயங் கொண்டவ னாய், அதிவேகமாகக் கடற்கரையை நோக்கி ஓடிச் சென்றேன். ஓடும்போதே பாம்பு துரத்திக்கொண்டு வருகிறதா என்று பல முறை திரும்பிப் பார்த்தேன். பாம்பு வரவில்லை. கரைக்கு வந்து சேர்ந்தவுடனே

இந்தத் தீவிலிருந்து எப்படியேனும் வெளியேறப் போகலாமென்று யோசித்தேன். அந்தப் பெண் யாரென்று தெரிந்து கொண்டு பிறகு தான் அந்தத் தீவிலிருந்து புறப்பட வேண்டுமென்று மற்றொரு யோசனை யுண்டாயிற்று. அப்போது பசியும் களைப்பும் அதிகமாக இருந்தபடியால் அவற்றைத் தீர்க்க ஏதேனும் வழியுண்டா என்று சுற்றிப் பார்த்தேன். கரையோரமாகவே நெடுந்தூரம் நடந்து வந்தபோது அங்கே ஒரு குடிசை தென்பட்டது. அந்தக் குடிசைக்குள்ளே போய் நுழைந்தேன். அதற்குள்ளே ஒரு பிள்ளையார் வைத்திருந்தது. அந்த மூர்த்தியின் முன்னே ஓரிலையில் சோறு, கறி, பாயஸம், பக்ஷணம் முதலியனவும், ஒரு குடத்தில் நீரும், பக்கத்தில் புஷ்பம், சந்தனம் முதலிய பூஜா த்ரவ்யங்களும் வைத்திருக்கக் கண்டேன். எனது பசியின் கொடுமையினால் அந்த ஆஹாரத்தைத் தின்றுவிடலா மென்று யோசித்தேன். பிறகு சிந்தனை பண்ணிப் பார்த்தேன். "போன ஜன்மத்தில் என்ன பாவம் பண்ணியோ இந்த ஜன்மத்தில் இந்தத் தீவில் வரவும், இத்தனை கஷ்டப் படவும் நேர்ந்து வுண்டாயிற்று. இப்போது பசித் துன்பத்தைப் பெரிதாக எண்ணி, எந்த மஹாநுபாவ ஸ்வாமி பூஜைக்காக வைத்திருக்கும் திருவமுதை அபகரித்தால், இன்னும் பாவ மேற்படும். ஆதலால் அந்தக் காரியம் செய்யக்கூடாது என்று தீர்மானம் செய்து கொண்டேன். பசி தாங்கவில்லை; நாமே பூஜை நைவேத்தியம் முடித்து விட்டுப் பிறகு அந்த உணவைக்

கொள்ளலா மென்று நினைத்து ஸ்நானம் செய்ய இடம் கிடைக்குமா என்று பார்க்கும் பொருட்டு வெளியே வந்து சிறிது தூரம் சுற்றிப் பார்த்ததில் அங்கே ஒரு சுனை யிருந்தது. அதில் ஸ்நானம் செய்து ஸந்தி முதலிய கர்மங்களை முடித்து விட்டு மறுபடி குடிசைக் குள்ளே போய்ப் பார்க்கையில் பிள்ளையார் மாத்திரந் தானிருந்தது. சோறு வடை தண்ணீர் பூ சந்தணம் ஒன்றையும் காணவில்லை. எனக்கு வயிற்றெரிச்சல் பொறுக்க முடியவில்லை. "பிள்ளையாரே, பிள்ளையாரே, உனக்கு எங்கள் வேதபுரி சேர்ந்தவுடனே மூப்பத்து மூன்று தேங்காய் உடைத்துப் பூஜை செய்கிறேன். எனக்கிந்த ஆபத்து நேரத்தில் உதவி செய்ய மாட்டாயா?" என்று வேண்டி வருத்தப்பட்டேன்.

இந்த நிலையில் எனது கனவு தடைப்பட்டது. பல குழப்பங்களுண்டாயின. செய்தி நினைப்பில்லை. பிறகு மறுபடியும் நான் கடலலைகளின்மீது மிதந்து செல்வது கண்டேன். யுகப்ரளயம் போலே யிருந்தது. என் கைகள் புடைத்தன. கண் தெரியவில்லை. பிரக்ஞை சரியில்லை. கடலைத் திவலை திவலையாக உடைத்து நாசம் செய்து விடவேண்டு மென்ற நோக்கத்துடன் வாயு புடைப்பது போலிருந்தது. அந்த சமயத்தில் எனதுடம்பைக் கடலலைகள் பந்தாடினது. என்னுயிர் ரைக் கால தூதர் பந்தாடுவது போலே தோன்றிற்று. அப்போது மீண்டும் குலசக்தியின் பெயரை ஸ்மரித்து, விநாயகரை நினைத்துப் "பிள்ளையாரே, என்னை வேத புரத்துக் கரை சேர்த்துவிட்டால் உமக்கு மூவாயி

ரத்து மூன்றாறு தேங்காய் உடைக்கிறேன். காப்பாற்ற வேண்டும், காப்பாற்ற வேண்டும்" என்று என்னை அறியாமல் கூவினேன். சிறிது நேரத்துக்குள் புயற்காற்று நின்றது. அங்கே ஒரு தோணி வந்தது; தோணியின் அழகு சொல்லி முடியாது. மயில் முகப்பும், பொன்னிறமும் கொண்டதாய் அன்னம் நீந்தி வருவது போலே மெதுவாக என்னருகில் வந்த அத் தோணியிடையே ஒரு மறக்குமாரன் ஆளனமிட்டு வீற்றிருந்தான். அவன் முகத்தினொளி தீ யொளி போலே விளங்கிற்று. தோணியைக் கண்டவுடனே நான் கை கூப்பினேன். அப்போது தோணிக்காரனிடம் என்னை யேற்றிக்கொள்ளும்படி அவன் கட்டளை யிட்டான். அவர்கள் என்னை யேற்றிக்கொண்டனர். அந்தத் தோணியில் ஏறினவுடனே என் உடம்பிலும், மனதிலுமிருந்த துன்பங்களெல்லாம் நீங்கிப் போயின. என் உடம்பைப் பார்த்தால் ராஜாவுடை தரித்திருக்கிறது. பதினாறு வயதுப் பிள்ளையாகவே நானு மிருந்தேன். தோணியிடை யிருந்த மன்னன் கரத்திலே வேல் தெரிந்தது. அப்போது கண்ணை விழித்தேன். வேதபுரத்துக் கடற்கரை; மாலை வேளை; மணல்மீது நான் படுத்திருப்பது கண்டேன்.

நம்பிக்கை யுண்டாகவில்லை. கண்ணை நன்றாகத் துடைத்துப் பார்த்தேன். தீவும், புயற்காற்றும், கனவென்று தெரிந்துகொண்டேன். அந்தத் தீவில் என்னைக் கண்டவுடன் ஓடி மறைந்த பெண்ணின் வடிவம் என் கண் முன்னே நிற்பது போலிருந்தது. பிறகு

தோணியிலே கண்ட மன்னன் வடிவம் தெரிந்தது..... வீடு வந்து சேர்ந்தேன்.

வேதபுரத்தில் மௌனச் சாமியார் என்றொருவர் இருக்கிறார். அவரிடம் எனது கனவைச் சொல்லி, அந்தத் தீவிலே கண்ட பெண் யாரென்று கேட்டேன். "உன்னை யார் காப்பாற்றிய தென்பதை நீ அறிய வில்லை. அந்தப் பெண் உன்னிடம் அன்பு கொண் டாள். இரண்டாமுறை தோணியிலே தோன்றிய இளவரசன் கையில் ஒரு வேல் இருந்தது கண்டனையா? அதுவே உனக்குப் பெண்ணைத் தோன்றிற்று. உன் னைக் கவலைக் கடலில் வீழ்த்திய பெண்ணை பிறகு வேலாகத் தோன்றி உன்னைக் காத்தாள்" என்று சொன்னார். சக்தியே வேலென்றும் அதுவே உயி ருக்கு நல்ல துணை யென்றும் தெரிந்து கொண்டேன். சீக்கிரத்தில் நல்ல நாள் பார்த்து வேதபுரத்திலுள்ள ஏழைப் பிள்ளையாருக்கு மூவாயிரத்து மூன்னூறு தேங்காய் உடைக்க வேண்டு மென்று தீர்மானம் செய்திருக்கிறேன்.

கடற்கரை யாண்டி.

ஒரு நாள், நடுப்பகல் நேரத்திலே, நான் வேத புரத்தில் கடற்கரை மணலின் மேல் அலைக்கு எதிரே போய் உட்கார்ந்திருந்தேன். காலை முதலாகவே

வானத்தை மேகங்கள் மூடி மந்தாரமாக இருந்தபடி யால் மணல் சுடவில்லை. உச்சிக்கு மேலே ஸூர்யன். மேகப் படலத்துக்குட்பட்டு சந்தேகத்தால் மறைக்கப் பட்ட ஞானத்தைப் போல் ஒளி குன்றி யிருந்தான். அலைகள் எதிரே மோதின. வடகீழ்த் திசையிலிருந்து சில்லென்று குளிர்ந்த காற்று வீசிற்று. குருட்டு வெயில் கடல்மீது படுவதனால், அலைகளைப் பார்க்கும் போது கொஞ்சம் கண் கூசிற்று. சிறிது தொலையில் ஒரு வெளி நாட்டு வியாபாரக் கப்பல் வந்து நின்றது. நானும் பொழுது போகாமல், ஒரு தோணிப் புறத் திலே யிருந்து கடலையும் அலையையும் பற்றி யோசனை செய்து கொண்டிருந்தேன். 'அடா! ஓயாமல், ஓ-யா-மல், எப்போதும் இப்படி ஓலமிடுகிறதே! எத் தனை யுகங்களாயிற்றோ! விதியன்றோ இந்தக் கடலை இப்படி யாட்டுவது? விதியின் வலிமை பெரிது.'

'விதியினால் அண்டகோடிகள் சுழல்கின்றன. விதிப்படியே அணுக்கள் சலிக்கின்றன. மனுஷ்யர், தேவர், அசுரர் முதலிய பல கோடி ஜீவராசிகளின் மனங்களும், செயல்களும் விதிப்படி நடக்கின்றன. இந்த ஸூர்யன் விதிக்குக் கட்டுப்பட்டிருக்கிறான். மேகங்களெல்லாம் விதிப்படி பிறந்து, விதிப்படி யோடி, விதிப்படி மாய்கின்றன' இவ்வாறு யோசனை செய்து கொண்டிருக்கையிலே, அங்கொரு யோகி வந்தார். இவருக்கு வேதபுரத்தார் "கடற்கரையாண்டி" என்று பெயர் சொல்லுவார்கள். எழுகள் இவரைப் பெரிய சித்தரென்றும், ஞானி யென்றும் கொண்டாடு வார்கள். கண்ட இடத்தில் சோறு வாங்கித் தின்பார்.

வெயில் மழை பார்ப்பது கிடையாது. சில மாதங்கள் ஒளிவிருப்பார். பிறகு வேறெங்கேனும் போய், ஓரிரண்டு வருஷங்களுக்குப் பின் திரும்பி வருவார். இவருடைய தலையெல்லாம் சடை. அரையிலொரு காவித் துணி. வேதபுரத்தில் தங்கும் நாட்களிலே இவர் பெரும்பாலும் கடலோரத்தில் உலாவிக்கொண் டிருப்பார். அல்லது, தோணிகளுக்குள்ளே படுத்துத் தூங்குவார். இந்தக் கடற்கரை யாண்டி நடுப் பகலில் நான் அலைகளைப் பார்த்து யோசனை செய்வது கண்டு புன்சிரிப்புடன் வந்து என்னருகே மணலின் மேல் உட்கார்ந்து கொண்டு, "என்ன யோசனை செய் கிறாய்?" என்று கேட்டார்.

"விதியைப் பற்றி யோசனை செய்கிறேன்" என் றேன். "யாருடைய விதியை?" என்று கேட்டார்.

"என்னுடைய விதியை; உம்முடைய விதியை; இந்தக் கடலின் விதியை; இந்த உலகத்தின் விதியை" என்று சொன்னேன். அப்போது கடற்கரை யாண்டி சொல்லுகிறார்:—

"தம்பி, உனக்கும், கடலுக்கும், உலகத்துக்கும் விதி தலைவன். எனக்கு விதி கிடையாது. ஆதலால் உங்கள் கூட்டத்தில் என்னைச் சேர்த்துப் பேசாதே" என்றார்.

"எதனாலே?" என்று கேட்டேன்.

அப்போது, அந்த யோகி மிகவும் உரத்த குரலில், கடலோசை தணியும்படி பின் வரும் பாட்டை ஆச் சரியமான நாட ராகத்தில் பாடினர்.

"சேல்பட் டழிந்தது
சென்னார் வயற் பொழில்;
தேங்கடம் பின்
மால் பட் டழிந்தது
பூங்கொடி யார் மனம்
மோயிலோன்
வேல் பட் டழிந்தது
வேலையும், சூரனும்
வெற்புமவன்
கால் பட் டழிந்த திங்
கென்றலை மேலபன்
கை யெழுக்தே!"

கந்தாலங்காரத்தில் நான் பலமுறை படித்திருக் கும் மேற்படி பாட்டை அந்த யோகி பாடும்போது, எனக்குப் புதிதாக இருந்தது. மேலெல்லாம் புளகமுண்டாய் விட்டது. முதலிரண்டடி சாதாரணமாக உட்கார்ந்து சொன்னார். மூன்றாவது பதம் சொல்லு கையில் எழுந்து நின்று கொண்டார். கண்ணும், முகமும் ஒளி கொண்டு ஆவேசம் ஏறிப்போய் விட்டது. "வேல் பட்டழிந்தது வேலை (கடல்)" என்று சொல்லும் போது சுட்டு விரலால் கடலைக் குறித்துக் காட்டினார். கடல் நடுங்குவது போல் என் கண்ணுக்குப் புலப்பட்டது.

பிறகு சொன்னார் :—

"தெய்வத்தின் வேலாலே கடல் உடைந்தது, மலை தூளாய் விட்டது. சூரபத்மன் சிதறிப் போனான்.

அந்த முருகனுடைய திருவடி என் முடிமீது தொட்டது. நான் விடுதலை கொண்டேன். 'விடுதலைப் பட்டது பாசவினை விலங்கே.'"

இங்ஙனம் அவர் சொல்லிக் கொண்டிருக்கையில் மழை வந்து விட்டது. நானெழுந்து வீட்டுக்குப் புறப்பட்டேன். அவர் அப்படியே அலையில் இறங்கி ஸ்நானம் செய்யப் போனார். நான் மணலைக் கடந்து சாலையில் ஏறும்போது, கடற்புறத்திலிருந்து சிங்கத்தின் ஒலி போலே 'விடுதலை; விடுதலை; விடுதலை' என்ற ஒலி கேட்டது.

சைவம்.

வேதபுரத்தில் வேதபுரீசர் ஆலயம் என்ற சிவன் கோவில் இருக்கிறது. அந்தக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் சுப்பிரமணியக் கடவுளுக்குப் பல அடியார் ரத்ன மிழைத்த வேல் சாத்தும் கிரியை சென்ற திங்கட் கிழமை மாலையிலே நிகழ்ந்தது. அன்று காலையில் ஸ்வாமிக்குப் பலவிதமான அபிஷேகங்கள் நடந்தன. சந்தனாபிஷேகம் நடக்கும் ஸமயத்தில் நான் ஸந்நிதிக்குப் போய்ச் சேர்ந்தேன். எனக்கு முன்னமே என்னுடைய ஸ்நேஹிதர் பிரமராய அய்யர் அங்கு வந்து தரிசனம் பண்ணிக்கொண்டிருந்தார்.

"சூரபத்மனை அடித்த உஷ்ணம் அமரும் பொருட்டாக எம்பெருமான் சந்தனாபிஷேகம் செய்து கொள்ளுகிறான்" என்று பிரமராய அய்யர் சொன்னார்.

அந்த முருகனுடைய திருவடி என் முடிமீது தொட்டது. நான் விடுதலை கொண்டேன். 'விடுதலைப் பட்டது பாச வினை விலங்கே.' ''

இங்ஙனம் அவர் சொல்லிக் கொண்டிருக்கையில் மழை வந்து விட்டது. நானெழுந்து வீட்டுக்குப் புறப்பட்டேன். அவர் அப்படியே அலையில் இறங்கி ஸ்நானம் செய்யப் போனார். நான் மலைக் கடந்து சாலையில் ஏறும்போது, கடற்புறத்திலிருந்து சிங்கத்தின் ஒலி போலே 'விடுதலை; விடுதலை; விடுதலை' என்ற ஒலி கேட்டது.

செய்கை.

வேதபுரத்தில் வேதபுரீசர் ஆலயம் என்ற சிவன் கோவில் இருக்கிறது. அந்தக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் சுப்பிரமணியக் கடவுளுக்குப் பல அடியார் ரத்ன மிழைத்த வேல் சாத்தும் கிரியை சென்ற திங்கட் கிழமை மாலையிலே நிகழ்ந்தது. அன்று காலையில் ஸ்வாமிக்குப் பலவிதமான அபிஷேகங்கள் நடந்தன. சந்தனாபிஷேகம் நடக்கும் ஸமயத்தில் நான் ஸந்நிதிக்குப் போய்ச் சேர்ந்தேன். எனக்கு முன்னுகவே என்னுடைய ஸ்நேஹிதர் பிரமராய அய்யர் அங்கு வந்து தரிசனம் பண்ணிக்கொண்டிருந்தார்.

"சூரபத்மனை அடித்த உஷ்ணம் அமரும் பொருட்டாக எம்பெருமான் சந்தனாபிஷேகம் செய்து கொள்ளுகிறான்" என்று பிரமராய அய்யர் சொன்னார்..

யாணல் அவனுக்கு நாட்டியம் முதலிய தெய்வ கலை கள் இயற்கையிலே சித்தியாகும்."

இங்ஙனம் பிரமராய அய்யர் பேசிக்கொண்டிருக் கையில் அவ்விடத்துக்கு மேல்படி கோயில் தர்ம கர்த்தாவாகிய வீரப்ப முதலியாரும் வந்து சேர்ந்தார். வீரப்ப முதலியார் நல்ல தீரன்; பல பெரிய காரியங் களை எடுத்து ஸாதிக்கவர். இவருடைய குமாரன் மஹா வீரனென்று போர்க் களத்தில் கீர்த்தி யடைந் திருக்கிறான். இவர் வந்தவுடனே ஸம்பாஷணை கொஞ் சம் மாறுபட்டது. ஏதேதோ விஷயங்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது கோவில் பணி விடைக்காரன் ஒருவன் கையிலே மஞ்சள் காயிதங்கள் கொண்டு வந்து ஆளுக்கொன்று வீதம் கொடுத்தான். அதென்ன காயிதமென்றால், அன்று மாலை கோயிலில் நடக்கப் போகிற பெரிய பாஷயம் மடாதிபதியின் உபந்நியாசத்துக்கு எல்லாரும் வந்து "சிறப்பிக்க வேண்டும்" என்ற அழைப்புக் காயிதம்.

அந்தக் காயிதத்தின் மகுடத்தில் ஒரு விருத்தம் எழுதி யிருந்தது. அவ்விருத்தத்தின் பின்னிரண்டடி கள் பின் வருமாறு:—

"தோகை மேல் உலவும் கந்தன்
சுடர்க் கரத்திருக்கும் வெற்றி
வாகையே சூடக்கும் வேலை
வணங்குவ தெமக்கு வேலை."

(மயிலின் மேலே உலவுகின்ற கந்தனுடைய கையில் வெற்றிமாலை சூடி நிற்கும் வேலாயுதத்தை வணங்குவதே நம்முடைய தொழில்.)

இவ்விரண்டு பாகங்களையும் படிக்கப் பார்க்கவிட்டு பிரமராய அய்யர் "நல்ல பாட்டு" என்றார். வீரப்ப முதலியார் பின் வருமாறு ப்ரஸங்கம் செய்யலானார் :—

"கேளும் காளிதாஸரே, பிரமராய அய்யரே, நீரும் கேளும். தெய்வத்தைப் போற்றுவதே நம்முடைய வேலை என்றும், அதைத் தவிர நமக்கு வேறு எவ்விதமான தொழிலும் கிடையாதென்றும் சொல்லிக் கொண்டிருப்போர் சோம்பரில் முழுகிப் போய்க் கம்முடைய வாணாளையும் வீணாகச் செய்து பிறரையும் கெடுக்கிறார்கள், செய்கை பிரதானம். செய்கையை விடுதல் பாவம். கடவுள் நமக்கு ஐம்புலன்களையும், அறிவையும் கொடுத்து எப்போதும் உழைப்பிலேயே தனக்கும் பிறர்க்கும் நன்மை தேடும்படி ஏற்பாடு செய்திருக்கிறார். அதற்கு மாறாகச் செய்கையற்றுச் சும்மா இருப்பதை இன்பமென்று நினைப்போர் நாசத்தை அடைவார்கள். தெய்வம், கிய்வம், எல்லாம் வீண் பேச்சு. வேலை செய்தவன் பிழைப்பான் ; வேலை செய்யாதவன் செத்துப் போவான்" என்றார். அப்போது பிரமராய அய்யர் :—

சோம்பேரி தெய்வத்தின் பெயரை ஒரு முகாந்தரமாகக் காட்டித் தன்னுடைய சோம்பரை ஆதரிப்பதாகச் சொன்னீர்கள், இருக்கலாம். அதிலேலே தெய்வத்தை நம்பிச் செய்கைப் பொறுப்பில்லாமல் இருப்போரெல்லாம் சோம்பேறிகளென்று நினைப்பது குற்றம். உண்மை அப்படியில்லை. இயற்கையின் வலிமை

யிலே இயற்கையின் கொள்கைப்படி, இயற்கையோ மனிதரின் செயல்களை யெல்லாம் நடத்துகிறான். இது மறுக்க முடியாத ஸத்யம். இதை உணர்ந்தவன் ஞானி; இந்த ஞான முண்டாகித் தான் செய்யும் செய்கைகளுக்குத் தான் பொறுப்பில்லை யென்றும் தெய்வமே பொறுப்பென்றும் தெரிந்து கொண்டு நடக்கும் பெரியோர் சோம்பரிலே மூழுகிக் கிடப்பதில்லை. அவர்கள் அக்நியைப் போலே தொழில் செய்வார்கள். எப்போதும் ஆனந்தத்திலே இருப்பதனால் அவர்களிடம் அற்புதமான சக்திகள் பிறக்கும். அந்த சக்திகளைக் கொண்டு அவர்கள் செய்யும் தொழில் உலகத்தாருக்குக் கணக்கிட முடியாத நன்மைகளைச் செய்யும். பகவான் கீதையிலே என்ன சொல்லுகிறார்? தெய்வமே செய்கிறது. தான் செய்வதாக நினைப்பவன் மூடன். ஆதலாலே முன் பின் யோசனை செய்யாமல் அப்போதப்போது நேரிடும் தர்மத்தை அனல் போலே செய்யவேண்டும். ஆதலால், வேல அர்ஜுனா!

"வில்லினை யெடடா—கையில்
வில்லினை யெடடா—அந்தப்
புல்லியர் கூட்டத்தை பூழ்தி செய்திடடா!
வாடி நில்லாதே—மனம்
வாடி நில்லாதே—வெறும்
பேடியர் ஞானப் பிதற்றல் சொல்லாதே!
ஒன்றுள துண்மை—என்றும்
ஒன்றுள துண்மை—அந்தக்
கொன்றி டொண்ணுது குறைத்தலொண்ணுது!

தன்பழுமில்லை—கொடுந்
தன்பழுமில்லை—அந்தில்
இன்பழுமில்லை பிறப்பிறப் பில்லை!

படைகளுந் தீண்டா—துணைப்
படைகளுந் தீண்டா—அனல்
சுடவு மொண்ணுது புனல் நனையாது!

செய்தலுன் கடனே—அறம்
செய்தலுன் கடனே—அந்தில்
எய்துறும் வினைவினில் எண்ணம் வைக்காதே
வில்லினை யெடடா"

என்று பகவான் சொன்னார்.

ஆகலால் பக்தனுக்குத் தொழிலிலே பொறுப் பில்லை, ஆனால் தொழிலுண்டு. அது தெய்வத்தாலே கொடுக்கப்படும். உண்மையான தெய்வபக்தி யுடையவர்கள் செய்யும் செய்கையினால் கிருதயுகம் வினையும். அவர்கள் எவ்விதமான செய்கையும் தமக்கு வேண்டிய தில்லை யென்று உதறி விட்டவுடனே பகவான் அவர் களைக் கருவியாகக் கொண்டு மற்றத்தான செய்கை களைச் செய்வான்." என்று பிரமராய அய்யர் சொன் னார்.

அப்போது வீரப்ப முதலியார் என்னை நோக்கி "உமது கருத்தென்ன?" என்று கேட்டார். நான் "எனக்கெனச் செயல் யாதொன்று மில்லை" என்ற மூன்றேர் பாடலை எடுத்துச் சொல்லி சக்தி நாமத் தைக் கூறி, "நான் செய்கை யற்று நிற்கின்றேன். பராசக்தி என் மூலமாக எது செய்வித்தாலும்

அவளுடைய இஷ்டமே யன்றி என்னுடைய இஷ்ட மில்லை" என்றேன்.

இந்த சமயத்தில் கண்டபாணிக்குப் பூஜை நடந்து தீபாராதனையாய்க் கொண்டிருப்பதாக ஒருவன் வந்து சொன்னான். எல்லாரும் எழுந்து லேவிக்கப் புறப்பட்டோம். சபை கலைந்தது.

சுருக்கம்.

I

நேற்று ஸாயங்காலம் நான் தனியாக மூன்றுவது மெத்தையில் ஏறி உட்கார்ந்திருந்தேன். நான் இருக்கும் வீட்டில் இரண்டாவது மெத்தையிலிருந்து மூன்றும் மெத்தைக்கு ஏணி கிடையாது. குடக்கூலி வீடு. அந்த வீட்டுச் செட்டியாரிடம் படி (ஏணி) கட்டும்படி எத்தனையோ தரம் சொன்னேன். அவர் இன்றைக்காகட்டும், நாளைக்காகட்டும் என்று நாளைக் கடத்திக் கொண்டு வருகிறார். ஆதலால் மூன்றும் மெத்தைக்கு ஏறிப்போவது மிகவும் சிரமம். சிறிய கைச்சுவர் மேல் ஏறிக்கொண்டு அங்கிருந்து ஒரு ஆள் உயரம் உந்த வேண்டும். மூன்றாங் கட்டின் சுவரோரத்தைக் கையால் பிடித்துக்கொண்டு கைச்சுவர் மேலிருந்து உந்தும்போது கொஞ்சம் கை வழுகிவிட்டால் ஒன்றரை ஆள் உயரம் கீழே விழுந்து மேலே காயம்படும். நான் தனிமையை விரும்புவோன். ஆதலால், சிரமப்பட்டேறி அடிக்கடி மூன்றாங் கட்டிலே போய் உட்கார்ந்திருப்பது வழக்கம். இந்த மார்கழி மாதத்தில்

குளிர் அதிகமானபடியால் வெயில் காய்வதற்கும் அதி
ஹிதமாம். இங்ஙனம் நேற்று மாலை நான் வெயில்
காய்ந்து கொண்டிருக்கையிலே குள்ளச் சாமியாரும்,
வேறு மூவரும் வந்து சேர்ந்தார்கள். அவர்கள்
இரண்டாங்கட்டு வெளி முற்றத்தில் வந்து நின்று
கொண்டு என்னைக் கைதட்டிக் கூப்பிட்டார்கள். நான்
இறங்கிவரும் பொருட்டாக வேஷ்டியை இடுப்பில்
வரிந்து கட்டினேன். அதற்குள் குள்ளச் சாமியார்
என்னை நோக்கி "நீ அங்கேயே இரு, நாங்கள் வருகி
றோம்" என்று சொன்னார்.

இந்தக் குளளச் சாமியாரைப்பற்றி முன்னொரு
முறை எழுதியிருப்பது ஞாபகமிருக்கலாம். இவர்
கலியுக ஜடபரதர், மஹா ஞானி, ஸர்வஜீவ தயாபரன்,
ராஜயோகத்தால் மூச்சைக் கட்டி ஆளுகிற மஹான்,
இவர் பார்ப்பதற்குப் பிச்சைக்காரன் போலே கந்
தையை உடுத்திக் கொண்டு தெருக்களில் உலாவுவார்.
இவருடைய மஹிமை ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்
கும் மாத்திரம் எப்படியோ தெரிந்திருக்கிறது. தெரு
வில் இவர் நடந்து செல்லுகையில் ஸ்திரீகள் பார்த்து
இவரைக் கை யெடுத்துக் கும்பிடுவார்கள். குழந்தைக
ளெல்லாம் இவரைக் கண்டவுடன் தாயை நோக்கி
ஓடுவது போலே ஓடி இவருடைய முழங்காலை
மோர்ந்து பார்க்கும். இவர் பேதைச் சிறுப்புச்
சிரித்துக் குழந்தைகளை உச்சி மோர்ந்து பார்ப்பார்.
ஆனால் ஸாமான்னிய ஜனங்களுக்கு அவருடைய உண்
மையான மஹிமை தெரியமாட்டாது. கண் மூடித்

திறக்கு முன்னுகவே கைச்சுவர் மேல் ஒரு பாய்ச்சல் பாய்ந்து அங்கிருந்து மேல் மெத்தைக்கு இரண்டாம் பாய்ச்சலில் வந்து விட்டார். இவரைப் பார்த்து இவர் போலே தானும் செய்ய வேண்டுமென்ற எண்ணங் கொண்டவனுய் வேணு முதலி ஜாக்கிரதையாக ஏறுமல் தானும் பாய்ந்தான். கைப்பிடிச் சுவர்மேல் சரியாகப் பாய்ந்து விட்டான். அங்கிருந்து மேல் மெத்தைக்குப் பாய்கையில் எப்படியோ இடறித் தொப்பென்று கீழே விழுந்தான். இடுப்பிலேயும் முழங்காலிலேயும் பலமான அடி. ஊமைக் காயம். என் போன்றவர்களுக்கு அப்படி அடி பட்டால் எட்டு நாள் எழுந்திருக்க முடியாது. ஆனல் வேணு முதலி நல்ல தடியன். "கொட்டாப்புளி ஆஸாமி." ஆதலால் சில நிமிஷங்களுக்குள்ளே ஒருவாறு நோவைப் பொறுத்துக்கொண்டு மறுபடி ஏறத் தொடங்கினன்.

குள்ளச் சாமியார் அப்போது என்னை நோக்கி:— நாமும் கீழே இறங்கிப் போகலாம் என்று சொன்னர். சரி யென்று நாங்கள் வேணு முதலியை ஏறவேண்டா மென்று தடுத்து விட்டுக் கீழே இறங்கி வந்தோம். இரண்டாங் கட்டு வெளி முற்றத்திலேயே மூன்று நாற்காலிகள் கொண்டு போட்டு உட்கார்ந்து கொண் டோம்.

அப்போது வேணு முதலி என்னை நோக்கி "அங்கே தனியாக ஹனுமாரைப் போலே போய்த் தொத்திக்கொண்டு என்ன செய்தீர்?" என்று கேட் டான்.

"சும்மா தான் இருந்தேன்" என்றேன்.

வந்துவிட்டதையா வேணு முதலிக்குப் பெரிய கோபம். பெரிய கூச்சல் தொடங்கி விட்டான்:—

"சும்மா, சும்மா, சும்மா, சும்மா இருந்து சும்மா இருந்து தான் ஹிந்து தேசம் பாழாய்க் குட்டி சுவராய்ப் போய்விட்டதே? இன்னம் என்ன சும்மா? எவனைப் பார்த்தாலும் இந்த நாட்டில் சும்மா தான் இருக்கிறான். லக்ஷ லக்ஷ லக்ஷமாகப் பரதேசி, பண்டாரம், ஸந்யாசி, சாமியார் என்று கூட்டம் கூட்டமாகச் சோம்பேறிப் பயல்கள். கஞ்சா அடிக்கிறதும், பிச்சை வாங்கித் தின்கிறதும், சும்மா உலாவுகிறதும் தான் அந்தப் பயல்களுக்கு வேலை. இவ்வுடு வேலை ஆஹாரம் ஒருவனுக்கு இருந்தால், அவன் தொழில் செய்யும் வழக்கம் இந்த தேசத்திலே கிடையாது. ஜமீந்தார், மிட்டாதார், பண்ணையார், மிராசுதார், இனம்தார், ஜாகீர்தார், மடாதிபதிகள், ராஜாக்கள் எல்லாருக்கும் சும்மா இருப்பது தான் வேலை. சோம்பேறிப் பயல்களுடைய தேசம்" என்று பலமாக வேணு முதலி ஜமாய்க்கிற சமயத்தில் குள்ளச்சாமி மேற்கு முகமாக ஸூர்யனை நோக்கித் திரும்பிக் கொண்டு: "சும்மா இருப்பதுவே சுட்டற்ற பூரணம் என்றெம்மால் அறிதற் கெளிதே பராபரமே" என்ற காயுமானவர் கண்ணியைப் பாடினர். வேணு முதலி அவரை நோக்கி:—"சாமியாரே, நீர் எதே ராஜயோகி என்று காளிதாஸர் சொல்லக் கேள்விப்பட்டேன். உம்முடன் நான் பேசவில்லை, காளிதாஸனிடம் நான்

சொல்லுகிறேன். நீர் ஸந்யாஸி யென்று சொல்லி ஜன்மத்தையே மரத்தின் ஜன்மம் போலே யாதொரு பயனுமில்லாமல் வீணுகச் செலவிடும் கூட்டத்தைச் சேர்ந்தவர். மரமாவது பிறருக்குப் பழங்கள் கொடுக்கும், இலை கொடுக்கும், விறகு கொடுக்கும். உங்களை மரத்துக் கொப்பாகச் சொல்லியது பிழை. உங்களாலே பிறருக்கு நஷ்டம்; மரத்தால் பிறருக்கு எத்தனையோ லாபம்" என்றான். இங்ஙனம் வேணு மூதலி சொல்லிக்கொண்டிருக்கும் போதே, குள்ளச் சாமியார் :—

"சும்மா இருக்கச் சுகம் சுகமென்று சுருதியெல்லாம்
அம்மா நிரந்தரம் சொல்லவுங் கேட்டு அறிவின்றியே
பெம்மான் மவுனி மொழியையுந் தப்பி என் பேதமையால்
வெம்மாயக் காட்டில் அலைந்தேன் அந்தோ என் விதி
[வசமே!"

என்று காயுமானவருடைய பாட்டொன்றைச் சொன்னார்.

வேணு மூதலிக்குக் கீழே விழுந்த கோவு பொறுக்க மூடியவில்லை. அந்தக் கோபம் மனதில் பொங்குகிறது. அத்துடன் சாமியார் சிரித்துச் சிரித்துப் பாட்டு சொல்வதைக் கேட்டு அதிகக் கோபம் பொங்கிவிட்டது. வேணு மூதலி சொல்லுகிறான் :—
" ஓய் சாமியாரே, நீர் பழய காலத்து மனுஷ்யன்; உம்முடன் நான் தர்க்கம் செய்ய விரும்பவில்லை. என்னுடைய ஸாமர்த்தியம் உமக்குத் தெரியாது. நான் பன்னிரண்டு பாஷைகளிலே தேர்ச்சியுடையவன்.

உமக்குத் தமிழ் மாத்திரம் தெரியும். நான் இந்த யுத்தம் முடிந்தவுடன் அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் போய் அங்கெல்லாம் இந்து மதத்தை ஸ்தாபனம் செய்யப் போகிறேன். நீர் தெருவிலே பிச்சை வாங்கித் தின்று நிலையே தாங்குகிற பேர்வழி. உமக்கும் எனக்கும் பேச்சில்லை. தேசத்துக்காகப் பாடுபடுவதாக 'ஹம்பக்' பண்ணிக்கொண்டிருக்கிற காளிதாஸர்—இந்த விதமான சோம்பேறிச் சாமியார்களுடன் கூடிப் பொழுது கழிப்பது எனக்கு மிகுந்த ஆச்சர்யத்தை விளைவிக்கிறது. உங்களிடமிருந்து நான் அவர் இந்தச் சும்மா இருக்கும் தொழில் கற்றுக் கொண்டார் போலும்!" என்று வேணு மூதலி இலக்கணப் பிரயோகங்களுடன் பேசத் தொடங்கினன்.

மறுபடி சாமியார் :—

"சும்மா இருக்கச் சுகம் உதய மாகுமே
இம்மாயா யோகம் இனி எனடா—தம்மறிவின்
சுட்டாலே யாகுமோ சொல்ல வேண்டாம் கர்ம
நிஷ்டா சிறு பிள்ளாய் நீ."

என்ற தாயுமானவருடைய வெண்பாவைப் பாடினர்.

அப்போது வேணு மூதலி என்னை நோக்கி "ஏனையா! காளிதாஸரே, இந்தச் சாமியார் உமக்கு எத்தனை நாட் பழக்கம்?" என்று கேட்டான்.

நான் ஜவாப் சொல்லாமல் "சும்மா" இருந்து விட்டேன். அப்பொழுது குள்ளச்சாமியார் சொல்லத் தொடங்கினர் :—

அத்துடன் இந்தக் கதையே வெகு நீளம். அது சுருக்கிச் சொன்னாலும் இரண்டு பாகங்களுக்குள்ளே தான் சொல்ல முடியும். நாலைந்து பாகம் ஆனாலும் ஆகக்கூடும்.

அவ்வளவு நீண்ட கதையை இத்தனை காயிதப் பஞ்சமான காலத்தில் ஏன் சொல்லப் புறப்பட்டீர் என்றாலோ அது போகப்போக ஆச்சர்யமான கதை. அற்புதமான கதை! இதைப் போலே கதை நான் இதுவரை எழுதினது கிடையாது. நான் வேறு புஸ் தகங்களிலே படித்ததும் கிடையாது. நீங்கள் கேட் டால் ஆச்சர்யப்படுவீர்கள். எழுந்து கூ கூ கூ என்று கூவி ஆடிப்பாடிக் குதிக்கத் தொடங்குவீர்கள். நான் கேட்கத் தகாத அற்புதத்தைக் கேட்டேன், காணத் தகாத அற்புதத்தைக் கண்டேன். ஆதலால் உலகத் திலே இதற்கு முன் எழுதப்பட்ட கதைகள் எல்லா வற்றிலும் அற்புதத்திலும் அற்புதமான கதையை உங்களுக்குச் சொல்லப் புறப்பட்டேன். ஆனால் இந்த வ்யாஸம் நீண்டு போய் விட்டதே; அடுத்த பாகத்தில் தானே சொல்ல முடியும். நான் வாக்குத் தவறமாட் டேன். இரண்டாம் பாகம் சீக்கிரம் உங்களுக்குச் சொல்லுகிறேன். கொஞ்சம் பொறுமையுடன் இருங்கள்.

சும்மா முதற் பாகம் முற்றிற்று.

LIBRARY
* TIRUPATI. *

சும்மா

II

அப்போது குள்ளச் சாமியார் சொல்லுகிறார் :—

"கேள் தம்பி, நான் சும்மா இருக்கும் கதையைச் சொல்லுகிறேன். நீ சொல்லியபடி ஸந்யாஸிகள் சும்மா இருந்ததினால் இந்தத் தேசம் கெட்டுப் போகவில்லை. அதர்மம் செய்ததினால் நாடு சீர் கெட்டது. ஸந்யாஸிகள் மாத்திரம் அதர்மம் செய்யவில்லை. இல்லறத்தார் அதர்மம் தொடங்கியது துறவறத்தாரையும் சூழ்ந்தது. உண்மையான யோகிகள் இன்னும் இந்த தேசத்தில் இருக்கிறார்கள். அவர்களாலே தான் இந்த தேசம் ஸர்வ நாசமடைந்து போகாமல் இன்னும் தப்பிப் பிழைத்திருக்கிறது. இப்போது பூமண்டலம் குலுங்கிப் பல ராஜ்யங்களும் சரிந்து கொண்டிருக்கையிலே ஹிந்து தேசம் ஊர்த்வ முகமாக மேன்மை நிலையை நோக்கிச் செல்லுகிறது. தானும் பிழைத்தது. உலகத்தையும் உஜ்ஜீவிக்கும்படி செய்யலாம் என்ற தைரியம் ஹிந்து தேசத்தின் மனதில் உண்டாயிருக்கிறது. இதற்கு முன் இப்படி எத்தனையோ ப்ரளயங்களில் இருந்து தப்பிற்று. சில தினங்களுக்கு முன்பு ஜகதீச சந்திர வஸு கல்கத்தாவில் தம்முடைய நவீன சாஸ்த்ராலயத்தை ப்ரதிஷ்டை செய்யும்போது என்ன சொன்னார்—வாசித்துப் பார்த்தாயா? "பாபிலோனிலும், நீல நதிக் கரையிலும் இருந்த நாகரீகங்கள் செத்து மறு ஜன்ம மடைந்துவிட்டன. ஹிந்துஸ்தானம் அன்று போலவே இன்றும் உயிரோடிருக்கிறது.

எனென்றால் எல்லா தர்மங்களிலும் பெரிய தர்மமாகிய ஆத்ம பரித்யாகம் இந்த தேசத்தில் சாகாதபடி இன்னும் சிலரால் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது" என்று ஜகதீச சந்திர வஸு சொன்னார்.

இங்ஙனம் குள்ளச் சாமியார் சொல்லி வருகையில் வேணு முத்லி "சாமியாரே! உமக்கு இங்கிலீஷ் தெரியுமா? நீர் பத்திரிகை வேறே வாசிக்கிறீரா? ஜகதீச சந்திர வஸு பேசிய விஷயம் உமக்கெப்படித் தெரிந்தது?" என்று கேட்டான். அப்போது குள்ளச் சாமியார் சொல்லுகிறார்:—"அநாவசியக் கேள்விகள் கேட்காதே. நான் சொல்வதைக் கவனி: ஹிந்து தேசத்திலுடைய ஜீவனே யுக யுகாந்தரங்களாக அழியாதபடி பாதுகாத்து வருவோர் அந்த யோகிகளே. கோரமான கலியில் உலகம் தலை கீழாகக் கவிழ்ந்து போகும் ஸமயத்தில் கூட ஹிந்துஸ்தானம் அழியாமல் தானும் பிழைத்து மற்றவர்களையும் காக்கக்கூடிய ஜீவ சக்தி இந்நாட்டிற்கு இருப்பது அந்த யோகிகளின் தபோபலத்தாலன்றி வேறில்லை. ஹா, ஹா, ஹா, ஹா! பலிதமான லேஹ்யங்களைத் தின்று தலைக்கு நூறு, நூற்றைம்பது பெண்டாட்டிகளை வைத்துக் கொண்டு தடுமாறி, நாள் தவறாமல் ஒருவருக்கொருவர் நாய்களைப் போலே அடித்துக்கொண்டு, ஹிமயமலைக்கு வட புறத்திலிருந்து அன்னியர் வந்தவுடனே எல்லாரும் ஈரச் சுவர் போலே இடிந்து விழுந்து ராஜ்யத்தை அன்னியர் வசமாகத் தந்த உங்கள் ராஜாக்களுடைய வலிமையினால் உங்கள் தேசம் பிழைத்திருக்கிறதென்று

நினைக்கிறாயா? போது விடிந்தால் எவன் செத்துப் போவான், ஐயன்மீகளாம், பிராமணர்க்கு போஜனங்கள் பண்ணலாம் என்று சாற்றிக்கொண்டு, வேதமந்திரங்களைப் பொருள் தெரியாமல் திருப்பித் திரும்பச் சொல்லிக்கொண்டிருந்த உங்கள் பிராமணர்களால் இந்த தேசம் சாகாத வரம் பெற்று வாழ்கிறதென்று நினைக்கிறாயா? உங்கள் வைசியருடைய லோபத்தன்மையால் இந்த நாடு அமரத் தன்மை கொண்டதா? சூத்திரருடைய மௌட்டியத்தாலா? பஞ்சமருடைய நிலைமையாலா? எதால் ஹிந்துஸ்தானத்துக்கு அமரத்தன்மை கிடைத்ததென்று நீ நினைக்கிறாய்?

"அடா, வேணு முதலி, கவனி. நீ யுத்தம் முடிந்த பிறகு அமெரிக்காவுக்கும், ஐரோப்பாவுக்கும் போய் ஹிந்து தர்மத்தை நிலை நாட்டப் போவதாகச் சொல்லுகிறாய். நீ ஹிந்துஸ்தானத்து மஹா யோகிகளின் மஹிமை தெரியாமல் ஹிந்து மதத்தை யெப்படி நிலை நிறுத்தப் போகிறாய்,—அதை நினைக்கும்போதே எனக்கு நகைப்புண்டாகிறது.

"அடா, வேணு முதலி, கேள். ஹிந்துஸ்தானத்து மஹா யோகிகளின் மஹிமையால் இந்த தேசம் இன்னும் பிழைத்திருக்கிறது. இனி இந்த மண்ணுலகம் உள்ள வரை பிழைத்திருக்கவும் செய்யும். அடா வேணு முதலி, பார்! பார்! பார்!"

இங்ஙனம் குள்ளச் சாமி சொன்னவுடன் நாணும் வேணு முதலியும் அவரை உற்றுப் பார்த்தோம்.

குள்ளச் சாமி நெடிய சாமி ஆய்விட்டார்.

நாலே முக்கால் அடிபோல் தோன்றிய குள்ளச் சாமி ஏழே முக்கால் அடி உயரம் வளர்ந்து விட்டார்.

ஒரு கண்ணைப் பார்த்தால் சூரியனைப் போல் இருந்தது. மற்றொரு கண்ணைப் பார்த்தால் சந்திரனைப் போல் இருந்தது. முகத்தின் வலப்புறம் பார்த்தால் சிவன்போல் இருந்தது. இடப்புறம் பார்த்தால் பார்வதியைப் போலவே இருந்தது. குனிந்தால் பிள்ளையார் போலிருந்தது. நிமிர்ந்து பார்க்கும்போது விஷ்ணுவின் முகத்தைப் போலே தோன்றிற்று. அப்போது குள்ளச் சாமி சொல்லுகிறார் :—

"அடா, வேணு முதலி, கேள். நான் ஹிந்துஸ்தானத்து யோகிகளுக்கெல்லாம் தலைவன். நான் ரிஷிகளுக்குள்ளே முதலாவது ரிஷி. நான் தேவர்களுக்கெல்லாம் அதிபதி. நானே பிரமா, நானே விஷ்ணு, நானே சிவன், நான் ஹிந்துஸ்தானத்தை அழியாமல் காப்பாற்றுவேன், நான் இந்த பூமண்டலத்தில் தர்மத்தை நிலை நிறுத்துவேன்.

"நான் கிருதயுகத்தை ஸ்தாபனம் செய்வேன். நானே பரம புருஷன். இதற்கு முன் ஆசார்யர்கள் உங்களிடம் என்ன சொன்னார்கள்? எல்லா உயிரும் ஒன்று. ஆதலால் காக்கை, புழு முதலிய ஜந்துக்களிடம் குரூரமில்லாமல் கருணை பாராட்டுங்கள் என்றனர்.

"அடா, வேணு முதலி, கவனி.

"சைவாசார்யர் வைஷ்ணவத்தை விலக்கினர் வைஷ்ணவாசார்யர் சைவத்தை விலக்கினர்.

"நான் ஒன்று செய்வேன்.

"காக்கையைக் கண்டால் இரக்கப்படாதே, கும்பிடு. கைகூப்பி நமஸ்காரம் பல் ஹே! பூச்சியைக் கும்பிடு! மண்ணையும் காற்றையும் விழுந்து கும்பிடு! என்று நான் சொல்லுகிறேன்.

"நான் வேதத்திலே முன் சொன்ன வாக்கை இப்போது அனுபவத்திலே செய்து காட்டப் போகிறேன். புராணங்களை யெல்லாம் விழுங்கி ஒன்றாக காட்டப் போகிறேன். ஹிந்து சாஸ்திரத்தைக் கூட்டப் போகிறேன். அடா, வேறு முகலி கேள், மண்ணும், காற்றும், ஸூர்யனும், சந்திரனும், உண்மையும் என்மையும் சூழ்ந்து நிற்கும் உயிர்களும், நீயும் நானும் தெய்வமென்று வேதம் சொல்லிற்று. இவை தான் தெய்வம். இதைத் தவிர வேறு தெய்வமில்லை. நம்முன்னே காண்பது நாராயணன். இதை நம்முள்ளே நாட்டி இதை வணங்கி இதன் தொழுகைக் கனியில் மூழ்கி, அங்கு மானுடன் தன்னை முழுது மறந்து விடுக.

"அப்போது தன்னிடத்து நாராயணன் நிற்பான். இந்த வழியை நான் தழுவியபடியால் மனுஷ்யத் தன்மை நீங்கி அமரத்தன்மை பெற்றேன். ஆதலால் நான் தேவனுய்விட்டேன். இவைதான் தெய்வம். இதைத் தவிர வேறு தெய்வமில்லை. தேவர்களுக்குள்ளே நான் அதிபதி, என் பெயர் விஷ்ணு; நானே சிவன் மகன் குமாரன், நானே கணபதி, நான் அல்லா, யேஹோவான், நானே பரிசுத்த ஆவி, நானே யேசு கிருஸ்து, நானே கந்தர்வன், நானே அஸுரன், நான் புருஷோத்தமன், நானே ஸமஸ்த ஜீவராசிகளும்.

"நானே பஞ்ச பூதம்! அஹம் ஸத்! நான் கிருத யுகத்தை ஆக்ஞாபிக்கிறேன்! ஆதலால் கிருதயுகம் வருகிறது. எந்த ஜந்துவும், வேறு எந்த ஜந்துவையும் ஹிம்சை பண்ணுமலும் எல்லா ஜந்துக்களும் மற்றெல்லா ஜந்துக்களையும் தேவதா ரூபமாகக் கண்டு வணங்கும்படிக்கும் விதியுண்டாஞல் அதுதான் கிருத யுகம். அதை நான் செய்வேன். அடா வேணு முதலி! நான் உன் முன்னே நிற்கிறேன், என்னை அறி" என்று குள்ளச்சாமி சொன்னர். நான் அத்தனைக்குள்ளே மூர்ச்சை போட்டு விழுந்து விட்டேன்.

சுமார் அரை மணி நேரத்துக்குப் பின்பு எனக்கு மறுபடி பிரக்ஞை ஏற்பட்டது. அப்போது பார்க்கிறேன். வேணு முதலி என் பக்கத்தில் மூர்ச்சை போட்டுக் கிடக்கிறான். பிறகு அவனுக்குச் சிகிச்சை செய்து நான் எழுப்பினேன்.

குள்ளச் சாமியார் எங்கே யென்று வேணு முதலி என் பத்தினியிடம் கேட்டான்.

அவள் சொன்னுள்:—"குள்ளச்சாமி இப்படித்தான் கீழே இறங்கிவந்தார். கொஞ்சம் பாயசமும் ஒரு வாழைப்பழமும் கொடுத்தேன். வாங்கித் தின்றார். குழந்தைகளுக்கும் எனக்கும் விபூதி பூசி வாழ்த்தி விட்டுப் போனர். 'நீங்கள் மெத்தையிலே என்ன பேசிக் கொண்டிருந்தீர்கள்?' என்று கேட்டேன். அதற்கு 'இரட்டை பாஷை யென்றால் அர்த்த மென்ன? என்பதைப்பற்றி அந்த வேணு முதலி மடையன், தர்க்கம் பண்ணுகிறான்' என்று சொல்லிச் சிரித்து விட்டுப் போனர்" என்று சொன்னுள்.

காற்று.

I

தேவ தரிசனம்.

மணல், மணல், மணல். பாலிவனம். பலயோஜனை தூரம் ஒரே மட்டமாக நான்கு திசையிலும் மணல். மாலை நேரம்.

அவ் வனத்தின் வழியே ஒட்டகங்களின் மீதும் ஒரு வியாபாரக் கூட்டத்தார் போகிறார்கள்.

வாயு, சண்டனாகி வந்துவிட்டான்.

பாலி வனத்து மணல்களெல்லாம் இடை வானத்திலே சுழல்கின்றன. ஒரு கூடாரம் யமவாதனை; வியாபாரக் கூட்டம் முழுதும் மணலிலே அழிந்து போகிறது.

வாயு கொடியவன். அவன் ருத்ரன். அவனுடைய ஓசை அச்சந் தருவது.

அவன் செயல்கள் கொடியன. அவனை வாழ்த்துகின்றோம்.

வீமனும் அனுமானும், காற்றின் மக்கள் என்று புராணங்கள் கூறும்.

உயிருடையன வெல்லாம் காற்றின் மக்களே என்பது வேதம்.

உயிர்தான் காற்று.

பூமித் தாய் உயிரோடிருக்கிறாள். அவளுடைய மூச்சுத்தான் பூமிக் காற்று.

காற்றே உயிர். உயிர்களை அழிப்பவனும் அவனே.

காற்றே உயிர். எனவே, உயிர்கள் அழிவதில்லை. சிற்றுயிர் பேருயிரோடு சேர்கிறது.

மரணமில்லை.

அகில வுலகமும் உயிர் நிலையே.

தோன்றுதல், வளர்தல், மாறுதல், மறைதல் எல்லாம் உயிர்ச் செயல்.

உயிரை வாழ்த்துகின்றோம்.

காற்றே, வா.

மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு, மனதை மயக்கும் இனிய வாசனையுடன் வா.

இலைகளின் மீதும் நீர் நிலைகளின் மீதும் உராய்ந்து மிகுந்த ப்ராண-ரஸத்தை எங்களுக்குக் கொண்டு வந்து கொடு.

காற்றே வா.

எமது உயிர் நெருப்பு நீடித்து நின்று நல்ல ஒளி தரும் வண்ணம், நன்றாக வீசு.

சக்தி குறைந்து போய் அதனை அவித்து விடாதே.

பேய் போலே வீசி அதை மடித்து விடாதே.

மெதுவாக, நல்ல லயத்துடன் நெடுங்காலம் நின்று வீசிக்கொண்டிரு.

உனக்குப் பாட்டுக்கள் பாடுகின்றோம்.

உன்னை வாழ்த்துகின்றோம்.

சிற்றெறும்பைப் பார். எத்தனை சிறியது! அதற்குள்ளே கை, கால், வாய், வயிறு எல்லா அவயவங்களும் கணக்காக வைத்திருக்கிறது.

யார் வைக்கனர்? மஹா சக்தி.

அந்த உறுப்புக்க ளெல்லாம் நேராகவே தொழில் செய்கின்றன.

எறும்பு உண்ணுகிறது, உறங்குகிறது, மணம் புரிகின்றது, குழந்தை பெறுகிறது, ஓடுகிறது, தேடுகிறது, போர் செய்கிறது, நாடு காக்கிறது.

இதற் கெல்லாம் காற்றுதான் ஆதாரம்.

மகா சக்தி காற்றைக் கொண்டுதான் உயிர் லீலை யாட்டு லீலையாடுகிறாள்.

காற்றைப் பாடுகிறேம்.

அம்மே அறிவிலே துணிவாக நிற்பது.

உள்ளத்திலே சலனமாவது.

உயிரில் உயிர், உடம்பில் வலிமை.

வெளி யுலகத்தில் அதன் செய்கையை அறியா தார் யார்? அறிவார் யார்? காற்றுத் தேவன் வாழ்க.

மழைக்காலம். மாலை நேரம். குளிர்ந்த காற்று வருகிறது.

நோயாளி உடம்பை மூடிக்கொள்ளுகிறான், பய னில்லை.

காற்றுக்கு அஞ்சி உலகத்திலே இன்பத்துடன் வாழ முடியாது.

உயிர் காற்றின் அதற் கஞ்சி வாழ்வதுண்டோ?

காற்று நம்மீது வீசுக.

அது நம்மை நோயின்றிக் காத்திடுக.

மாலைக் காற்று நல்லது. கடற் காற்று மருந்து. ஊர்க் காற்றை மனிதர் பகைவனுக்கி விடுகின்றனர்.

அவர்கள் காற்றுத் தெய்வத்தை நேரே வழி படுவதில்லை.

அதனால், காற்றுத் தேவன் சினமெய்தி அவர்களை அழிக்கின்றான்.

காற்றுத் தேவனை வணங்குவோம்.

அவன் வரும் வழியிலே சேறு தங்கலாகாது. காற்றம் இருக்கலாகாது. அழுகின பண்டங்கள் போடலாகாது. புழுதி படிந்திருக்கலாகாது.

எவ்விதமான அசுத்தமும் கூடாது.

காற்று வருகின்றான்.

அவன் வரும் வழியை நன்றாகத் துடைத்து நல்ல நீர் தெளித்து வைத்திடுவோம்.

அவன் வரும் வழியிலே சோலைகளும் பூந்தோட்டங்களும் செய்து வைப்போம்.

அவன் வழியிலே கற்பூரம் முதலிய நறும் பொருள்களைக் கொளுத்தி வைப்போம்.

அவன் நல்ல மருந்தாகி வருக.

அவன் நமக்கு உயிராகி வருக.

அமுதமாகி வருக.

காற்றை வழிபடுகின்றோம்.

அவன் சக்தி குமாரன்.

மஹாராணியின் மைந்தன்.

அவனுக்கு நல்வரவு கூறுகின்றோம்.

அவன் வாழ்க.

காற்று.

II

ஒரு வீட்டு மேடையிலே ஒரு பந்தல், ஓலைப் பந்தல், தென்னோலை; குறுக்கும் நெடுக்குமாக எழுட்டு மூங்கில் கழிகளை சாதாரணைக் கயிற்றால் கட்டி, மேலே தென்னோலைகளை விரித்திருக்கிறது.

ஒரு மூங்கிற் கழியிலே கொஞ்சம் பிச்சக் கயிறு தொங்குகிறது. ஒரு சாலம் கயிறு.

இந்தக் கயிறு ஒரு நாள் சுகமாக ஊசலாடிக் கொண்டிருந்தது. பார்த்தால் தூளி கூடக் கவலை இருப்பதாகத் தெரியவில்லை.

சில சமயங்களில் அசையாமல் "உம்" மென்றிருக்கும். கூப்பிட்டால் கூட ஏனென்று கேட்காது.

இன்று அப்படியில்லை. "குழால்" வழியிலிருந்தது. எனக்கும் இந்தக் கயிற்றுக்கும் ஸ்நேஹம். நாங்கள் அடிக்கடி வார்த்தை சொல்லிக் கொள்வதுண்டு.

"கயிற்றினிடத்தில் பேசுவல் அது மறுமொழி சொல்லுமா?"

பேசிப் பார். மறுமொழி கிடைக்கிறதா இல்லையா என்பதை.

ஆனால் அது சந்தோஷமாக இருக்கும் ஸமயம் பார்த்து வார்த்தை சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் முகத்தைத் தூக்கிக்கொண்டு சும்மா இருந்து விடும்; பெண்களைப் போல.

எது எப்படியிருந்தாலும் இந்த வீட்டுக் கயிறு பேசும். அதில் சந்தேகமேயில்லை.

ஒரு கயிறு சொன்னேன்? இரண்டு கயிறுண்டு.

ஒன்று ஒரு சான். மற்றொன்று மூக்கால் சான். ஒன்று ஆண், மற்றொன்று பெண். கணவனும், மனைவியும்.

அவை யிரண்டும் ஒன்றை யொன்று மோஹப் பார்வைகள் பார்த்துக் கொண்டும், புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டும், வேடிக்கைப் பேச்சுப் பேசிக்கொண்டும் ரசப் போக்கிலே இருந்தன.

அக்கருணைத்திலே நான் போய்ச் சேர்ந்தேன். ஆண் கயிற்றுக்குக் கந்தன் எனப் பெயர். பெண் கயிற்றுக்குப் பெயர் "வள்ளியம்மை". (மனிதர்களைப் போலவே தண்டுக் கயிறுகளுக்கும் பெயர் வைக்கலாம்).

கந்தன் வள்ளியம்மைமீது கையைப் போட வருகிறது. வள்ளியம்மை சிரித்து பின் வாங்குகிறது. அந்த சந்தர்ப்பத்திலே நான் போய்ச் சேர்ந்தேன்.

"என்ன, கந்தா, ஸௌக்கியந்தானே? ஒருவேளை நான் ஸந்தர்ப்பம் தவறி வந்துவிட்டேனே என்னவோ? போய் மற்றொரு முறை வரலாமா?" என்று கேட்டேன்.

அதற்குக் கந்தன்:—"அட போடா, வைதிக மனுஷன்! உன் முன்னே கூட லஜ்ஜையா? என்னடி வள்ளி, நமது ஸல்லாபத்தை ஐயர் பார்த்ததிலே உனக்குக் கோபமா?" என்றது.

"சரி, சரி, என்னிடத்தில் ஒன்றும் கேட்கவேண்டாம்" என்றது வள்ளியம்மை.

அதற்குக் கந்தன் கட கடவென்று சிரித்து, கை தட்டிக் குதித்து நான் பக்கத்தி லிருக்கும் போதே வள்ளியம்மையைக் கட்டிக்கொண்டது.

வள்ளியம்மை கீச்சுக் கீச்சென்று கத்தலாயிற்று. ஆனல் மனதுக்குள்ளே வள்ளியம்மைக்கு சந்தோஷம். நாம் சுகப்படுவதைப் பிறர் பார்ப்பதிலே நமக்கு சந்தோஷந் தானே?

இந்த வேடிக்கை பார்ப்பதிலே எனக்கு மிகவும் திருப்திதான். உள்ளதைச் சொல்லி விடுவதிலே என்ன குற்றம்? இளமையின் சல்லாபம் கவனிக்குப் பெரியதோர் இன்பமன்றே?

வள்ளியம்மை அதிகக் கூச்சமிடவே, கந்தன் அதை விட்டு விட்டது.

சில சமயங்களுக்குப் பின் மறுபடி போய்த் தழுவிக் கொண்டது.

மறுபடியும் கூச்சல்; மறுபடியும் விடுதல்; மறுபடியும் தழுவல்; மறுபடியும் கூச்சல்; இப்படியாக நடந்துகொண்டே வந்தது.

"என்ன கந்தா, வந்தவனிடத்தில் ஒரு வார்த்தை கூடச் சொல்ல மாட்டேனென்கிறாயே? வேறொரு சமயம் வருகிறேன். போகட்டுமா?" என்றேன்.

"அட போடா! வைதிகம்! வேடிக்கை தானே பார்த்துக்கொண்டிருக்கிறாய். இன்னும் சிறிது நேரம் நின்றுகொண்டிரு. இவனிடம் சில வியவஹாரங்கள் தீர்க்க வேண்டியிருக்கிறது. தீர்ந்தவுடன் நீயும் நானும் சில விஷயங்கள் பேசலாம் என்றிருக்கிறேன். போய் விடாதே இரு" என்றது.

நின்று மேன்மேலும் பார்த்துக்கொண்டிருந்தேன்.

சிறிது நேரம் கழிந்தவுடன் பெண்ணும் இன்ப மயக்கத்திலே நான் நிற்பதை மறந்து நாணத்தை விட்டு விட்டது.

உடனே பாட்டு. நேர்த்தியான தக்கடாக்கள். ஒரு வரிக்கு ஒரு வர்ணமெட்டு; இரண்டே 'சங்கதி,' பின்பு மற்றொரு பாட்டு.

கந்தன் பாடி முடிந்தவுடன் வள்ளி, இது முடிந்தவுடன் அது; மாறி, மாறிப் பாடி—கோலாஹலம்.

சற்று நேரம் ஒன்றை யொன்று தொடாமல் விலகி நின்று பாடிக்கொண்டே யிருக்கும். அப்போது வள்ளியம்மை தானுகவே போய்க் கந்தனைத் தீண்டும். அது தழுவிக்கொள்ள வரும். இது ஓடும்—கோலாஹலம்!

இங்ஙனம் நெடும் பொழுது சென்றபின் வள்ளியம்மைக்குக் களியேறி விட்டது.

நான் பக்கத்து வீட்டிலே தாகத்துக்கு ஜலம் குடித்து விட்டு வரப் போனேன். நான் போவதை அவ் விரண்டு கயிறுகளும் கவனிக்கவில்லை.

நான் திரும்பி வந்து பார்க்கும் போது வள்ளியம்மை தூங்கிக்கொண்டிருந்தது. கந்தன் என் வரவை எதிர் நோக்கி யிருந்தது. என்னைக் கண்டவுடன் "எங்கடா போயிருந்தாய்? வைதீகம்! சொல்லிக்கொள்ளாமல் போய்விட்டாயே" என்றது.

"அம்மா நல்ல நித்திரை போலிருக்கிறதே?" என்று கேட்டேன்.

ஆஹா! அந்த க்ஷணத்திலே கயிற்றிலிருந்து விடுத்து வெளிப்பட்டு என் முன்னே நின்ற தேவ

னுடைய மஹிமையை என் னென்று சொல்வேன்! காற்றுக் தேவன் தோன்றினான். அவன் உடல் விம்மி விசாலமாக இருக்கு மென்று நினைத்திருந்தேன்.

வயிர ஜோதிபோல ஒளி வடிவமாக இருந்தது.

"நமஸ்தே வாயோ, த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்ம மாஸி."

காற்றே போற்றி, நீயே கண்கண்ட பிரமம்.

அவன் தோன்றிய பொழுதிலே வான முழுதும் ப்ராண சக்தி நிரம்பிக் கனல் வீசிக்கொண்டிருந்தது. ஆயிர முறை அஞ்சலி செய்து வணங்கினேன்.

காற்றுக் தேவன் சொல்வதாயினன்:—"ஏகனே, எதடா கேட்டாய்? அந்தச் சிறிய கயிறு உறங்குகிறதா என்று கேட்கிறாயா? இல்லை, அது செத்துப் போய்விட்டது. நான் ப்ராண சக்தி. என்னுடன் உறவு கொண்ட உடல் இயங்கும். என் உறவில்லாதது சவம். நான் ப்ராணன். என்னிலே தான் அச்சிறு கயிறு உயிர்த்திருந்து சுகம் பெற்றது. சிறு கனைப் பெய்தியவுடனே அதை உறங்க—இறக்க—விட்டு விடுவேன். தூயிலும் சாவுதான். சாவும் தூயிலே. நான் விளங்குமிடத்தே அவ்விரண்டும் இல்லை. காலையில் வந்து ஊதுவேன். அது மறுபடி பிழைத்துவிடும். நான் விழிக்கச் செய்கிறேன். அசையச் செய்கிறேன். நான் சக்தி குமாரன். என்னை வணங்கி வாழ்க." என்றான்.

"நமஸ்தே வாயோ; த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்ம மாஸி; த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்ம வதிஷ்யாமி."

வண்ணன் தொழில்.

வேதபுரத்தில் குள்ளச்சாமி என்றொரு பரதேசி யிருக்கிறார். அவருக்கு வயது ஐம்பதோ, அறுபதோ, எழுபதோ, எண்பதோ யாருக்கும் தெரியாது. அவ ருடைய உயரம் நாலரை அடியிருக்கும், கருநிறம். குண்டு சட்டியைப் போல் முகம். உடம்பெல்லாம் வயிரக்கட்டை போலே நல்ல உறுதியான பெயர்வழி.

அவருக்கு வியாதி யென்பதே கிடையாது. சென்ற பத்து வருஷங்களில் ஒரே தடவை அவர் மேலே கொஞ்சம் சொரிசிரங்கு வந்தது. பத்து நாளிருந்து நீங்கி விட்டது. அந்த மனுஷ்யன் ஜட பரதருடைய நிலைமையிலே யிருப்பதாகச் சொல்லலாம். பேசினால் பயித்தியக்காரன் பேசுவது போலிருக்கும். இழுத்திழுத்து, திக்கித் திக்கி, முன் பின் சம்பந்த மில்லாமல் விழுங்கி விழுங்கிப் பேசுவார். தெருவிலே படுத்துக் கிடப்பார். பசித்தபோது எங்கேனும் போய்ப் பிச்சை வாங்கிச் சாப்பிடுவார். கள் குடிப் பார். கஞ்சாத் தின்பார். மண்ணிலே புரளுவார். நாய்களுடன் சண்டை போடுவார்.

வீதியிலே பெண் பிள்ளைகளுக் கெல்லாம் அவரைக் கண்டால் இரக்கமுண்டாகும். திடீரென்று ஒரு வீட் டுக்குள் நுழைந்து, அந்த வீட்டிலிருக்கும் குழந்தை கள் நெற்றியிலே திருநீற்றைப் பூசிவிட்டு ஓடிப் போவார். யாராவது திட்டினாலும், அடித்தாலும் பொறுத்துக்கொண்டு உடனே அவ்விடத்தை விட்டு ஓடிப்போய் விடுவார்.

ஸாமான்ய ஜனங்கள் அவருக்கு நூறு வயதுக்கு மேலே ஆகிவிட்ட தென்றும், நெடுங்காலமாக, இப் போதிருப்பது போலவே, நாற்பதைப்பது வயது போலே தான் இருக்கிறாரென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் இந்த வார்த்தை எவ்வளவு தூரம் நிச்சய மென் பதை நிர்ணயிக்க இடமில்லை.

அவர் கையால் விபூதி வாங்கிப் பூசிக் கொண் டால் நோய் தீர்ந்து விடுமென்ற நம்பிக்கையும் பலர் கொண்டிருக்கிறார்கள்.

மேற்படி குள்ளச்சாமியார் ஒருநாள் தாம் வீதி யில் நடந்து வரும்போது, முதுகின் மேலே கிழிந்த பழங் கந்தைகளை யெல்லாம் ஒரு பெரிய அழுக்கு மூட்டை கட்டிச் சுமந்து கொண்டு வந்தார். இந்தச் சாமியாரைக் கண்டால் நான் கும்பிடுவது வழக்கம். அப்படியே கும்பிட்டேன். ஈயென்று பல்லைக் காட்டிப் பேதைச் சிரிப்புச் சிரித்தார். கண்ணைப் பார்த்தால் குறும்பு கூத்தாடுகிறது.

"ஏ சாமி, உனக் கென்ன பயித்தியமா? கந்தை களைக் கட்டி என் முதுகிலே சுமக்கிறாய்?" என்று கேட்டேன்.

"நீ நெஞ்சுக்குள்ளே சுமக்கிறாய், நான் முதுகின் மேலே சுமக்கிறேன்" என்று சொல்லி ஓடிப்போய் விட்டார். உடனே நான் பொருள் தெரிந்து கொண் டேன். அஞ்ஞானப் பழங் குப்பைகளையும், பழங் கவலைகளையும், பழந் தன்பங்களையும், பழஞ் சிறுமை களையும் மனதில் வீணைப்ச் சுமந்து திரியும் ஸாமான்ய

மனிதனுடைய அறிவீனத்தை விளக்கும் பொருட்டு வேத சாமியார் இந்த திருஷ்டாந்தத்தைச் சொன்னா ரென்று தெரிந்து கொண்டேன்.

பின்னொரு நாள் அவரிடம் பரிகாசமாக நான் "சாமி, இப்படிப் பிச்சை வாங்கித் தண்டச் சோறு தின்று கொண்டு ஜீவனம் பண்ணுகிறீயே, ஏதேனும் தொழில் செய்து பிழைக்கக் கூடாதா?" என்று கேட் டேன். அந்தப் பரதேசி சொல்லுகிறார்:—

"தம்பி, நானும் தொழில் செய்து தான் பிழைக் கிறேன். எனக்கு வண்ணன் வேலை. ஐம்புலன் களாகிய கழுதைகளை மேய்க்கிறேன். அந்தக்கரண மான துணி மூட்டைகளை வெளுக்கிறேன்" என்றார்.

ஆம், பரிசுத்தப் படுத்துகிறவனே ஆசார்யன். அவனுடைய சொல்லை மற்றவர் ஆசரிக்க வேண்டும். மேலே சாமியாருடைய புற நடைகள் குடும்பம் நடத்தும் கிருஹஸ்தர்களுக்குத் தகுதி யல்ல. ஆனால் அவருடைய உள்ள நடையை உலகத்தார் பின்பற்ற வேண்டும். ஐம்புலன்களாகிய கழுதைகளை மீறிச் செல் லாதபடி கட்டுப் படுத்தி ஆள வேண்டும், உள்ளத்தை மாசில்லாதபடி சுத்தமாகச் செய்து கொள்ளவேண்டும்.

அழுக்குத் தீர்க்கும் தொழில் செய்வோர் நமது தேசத்தில் மாகாணத்துக்கு லக்ஷம் பேர் வேண்டும். ஹிந்துக்கள் தற்காலத்தில் குப்பைக்குள் முழுகிப் போய்க் கிடக்கிறார்கள். வீட்டையும், தெருவையும் சுத்தமாக வைத்துக் கொள்ளவில்லை. ஜலதாரைகளை ஒழுங்குபடுத்தவில்லை. கிணறுகளையும், குளங்களையும்,

சுவீகளையும் சுத்தமாக வைத்துக் கொள்ளவில்லை. கோயிற் குளங்களில் ஜலம் புழுத்து நெளிகிறது. நாற்றம் குடலைப் பிடுங்குகிறது.

மனுஷ்யா பிரிருத்தி யாவது யாது?

புழுதியை நீக்கிக் கரையைச் சுத்த மாக்குதல். அழுக்குப் போகத் துணியையும், நாற்ற மில்லாதபடி குளத்தையும், பொதுவாக எல்லா விஷயங்களையும் சுத்தமாக்கி வைத்துக் கொள்ளுதல்.

நான் மேற்படி சாமியாரிடம், "சாமியாரே, ஞான நெறியிலே செல்ல விரும்புவோன் முக்கியமாக எதை ஆரம்பத் தொழிலாகக் கொள்ள வேண்டும்?" என்று கேட்டேன்.

குள்ளச்சாமி சொல்லுகிறார்:—

"முதலாவது, நாக்கை வெளுக்க வேண்டும். பொய் சொல்லக்கூடாது. புறஞ் சொல்லக் கூடாது. முகஸ்துதி கூடாது. கற்புகழ்ச்சி கூடாது. வருந்தச் சொல்லலாகாது. பயந்து பேசக்கூடாது. இதுதான் வண்ணன் தொழில் ஆரம்பம். பிறகு அந்தக்கரணத்தை வெளுத்தல் சுலபம். சில இடங்களில் பொய் சொல்லித் திரும்படியாக இருந்தால், அப்போது மௌனத்தைக் கொள்ள வேண்டும். மௌனம் ஸர்வார்த்த ஸாதகம். அதை விட்டுப் பேசும்படி நேர்ந்தால் உண்மையே சொல்ல வேண்டும். உண்மை விரதம் தவறக்கூடாது. தவற வேண்டிய அவசியமில்லை; உண்மை கூறினால் தீங்கு நேரிடுமென்று நினைப்போர் தெய்வம் உண்மை யென்பதை அறியமாட்டார்கள்.

தெய்வம் உண்மை. அதன் இஷ்டப்படி உலகம் நடக்கிறது. ஆகலால் பயப்படுகிறவன் மூடசிகாமணி. அந்தக்காணத்தை வெளுத்தலாவது அதிலுள்ள பயத்தை நீக்குதல். அந்தக்காணத்தை சுத்தி செய்து விட்டால் விடுதலை யுண்டாகும்" என்றார்.

பின்னு மொரு ஸமயம் மேற்படி குள்ளச்சாமி என்னிடம் வந்து, "தம்பி, நீ இலக்கணக்கார னுச்சுதே! 'வண்ணன்' என்ற வார்த்தையை உடைத்துப் பொருள் சொல்லுவாயா?" என்று கேட்டார்.

நான் நகைத்து:—"சாமி, உடைக்கிற இலக்கணம் எனக்குத் தெரியாது" என்றேன்.

அப்போது குள்ளச்சாமி சொல்லுகிறார்:—"வண்—ஆன்: வண்ணன். ஆன் என்பது ரிஷபம். வள்ளலாகிய ரிஷபம் நந்திகேசுரர். அவருடைய தொழில் சுத்தனான மூர்த்தியாகிய சிவனைச் சுமந்து கொண்டிருத்தல். தமிழ் நாட்டு ஞானசார்யர்களுக்கு ஆதிமூர்த்தியும் வள்ளலுமாகி நிற்கும் இந்த நந்தி பகவானுடைய தொழிலாகிய ஆசார்யத் தொழிலையே நான் வண்ணன் தொழிலென்று சொல்லுகிறேன். எனக்கு வண்ணன் தொழில்" என்று மேற்படி குள்ளச்சாமி சொன்னார்.

கலியுக கடோற்கசன்.

வேதபுரத்தில் கலியுக கடோற்கசன் என்பதாக ஒருவன் கிளம்பியிருக்கிறான். பழைய துவாபரயுகத்துக் கடோற்கசனுடைய சரித்திரம் எல்லாருக்கும்

திரியும். அரக்கு மாளிகையிலிருந்து பாண்டவர் தப்பி ஓடும்போது இடும்ப வனத்தில் தங்கினார்கள். அங்கிருந்த இடும்பாசுரன் என்ற ராக்ஷஸன் அவர் களைப் பிடித்துத் தின்ன வந்தான். அந்த இடும்பனை வீமன் கொன்றுவிட்டான். பிறகு அவன் தங்கை யாகிய இடும்பி என்ற ராக்ஷஸி வீமன்மேல் காதல் கொண்டு தன்னை மணந்து கொள்ளச் சொல்லி வற் புறுத்தினாள். மற்ற மூவரும் நால்வரும் பிராமசாரி களாக இருக்கையில் தான் முதலாவது ஒரு ராக்ஷஸி யைப் போய்க் கல்யாணம் பண்ணிக்கொள்வதில் வீமனுக்கு சம்மதமில்லை. இடும்பி குந்தியிடம் போய் முறையிட்டழுதாள். குந்தி வீமனை நோக்கி:—"மகனே, ஒரு ஸ்திரீ வந்து காதல் கூறுமிடத்து அவளை மறுப் பது சாஸ்திரிய தர்மமில்லை, ஆண் மக்கள் அங்ஙனம் செய்யலாகாது, ஆதலால், நீ இந்த ராக்ஷஸியைக் கல் யாணம் பண்ணிக் கொள்க" என்று கட்டளையிட்டாள். தாய் சொல்லுக் கிணங்கி வீமன் இடும்பியைக் கல்யா ணம் பண்ணிக்கொண்டான். இவ்விருவருக்கும் பிறந்த பிள்ளையே கதோற்கசன். இவன் வீமனுக்கு ஸமமான பலமும் பராக்ரமமும் உடையவனென்று வேதவ்யாசர் தெரிவிக்கிறார். இது நிற்க. நமது கல்யுக கடோற்கசனைக் கவனிப்போம். இவன் வேதபுரத்தில் ஒரு சாராயக் கடையிலே பணவசூல் குமஸ்தாவாக இருக்கும் ராமசாமி நாயக்கர் என்பவருடைய மகன். இவனுக்கு இப்போது வயது சுமார் இருபது இருக்க லாம். சாராயக் கடையில் ப்ராந்தி, விஸ்கி, ஜின் முதலிய ஐரோப்பியச் சாராயங்கள் விற்கிறார்கள்.

வேகபுரத்தில் குடி மும்மூரம். ஆனபடியால் மேற்படி கடைக்குப் பற்று வரவு ஜாஸ்தி. அங்கு பண வசூல் காரனிய ராமசாமி நாயக்கருக்கு மாதம் எட்டு ரூபாய் சம்பளம். தெலுங்கு பேசும் நாயக்கர். நல்ல சூத்திரிய வம்சம். தெலுங்கு ராஜ்யம் போன பிறகு கெட்டுப் போய்த் தாழ்ந்த நிலைமைக்கு வந்திருக்கும் நாயடு கூட்டத்தைச் சேர்ந்தவர்.

மேற்படி ராமசாமி நாயக்கர் மகனுக்குத் தாய் தந்தையர் வைத்த பெயர் கோவிந்தராஜூலு. அவன் தானெக வைத்துக்கொண்ட பெயர் கலியுக கோடாற் கசன்.

அவன் உயரம் ஐந்தே கால் அடி யிருக்கலாம். குண்டுருளை போலே வயிரமான உடம்பு. இவன் மேலே மோட்டார் வண்டி ஓட்டலாம். மாட்டு வண்டி விடலாம். இவன் தலை ரோமத்தில் மூன்றாறு ராத்தல் கல் தொங்க விடலாம். இவன் தலையிலே நாற்பது பேரடங்கிய பெரிய தொட்டிலை நிறுத்தி வைக்கலாம். இவன் இரண்டு விரல்களைக் கொண்டு மஹா பாரதப் புஸ்தகத்தைக் கிழித்துப் போடுவான். இவன் பல்லினால் கல்லைப் பேர்த்துப் போடுவான். இவன் நகத்தால் கதவைப் பிளப்பான்.

வயது இருபதுக்கு மேல் ஆகவுமில்லை. நேற்றுக் காலையில் இந்தப் பையன் என்னைப் பார்க்கும் பொருட்டாக வந்திருந்தான். மூதலாவது, தன்னுடைய தொழில்களை எல்லாம் என் வீட்டில் செப்து காட்டினான். நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன்.

பிறகு இவனுடைய புத்தி எந்த நிலையில் இருக்கிறதென்பதைப் பரிசோதனை செய்யும் பொருட்டாக அவனுடன் சிறிது நேரம் ஸம்பாஷணை செய்து பார்த்தேன். அவன் கையில் ஒரு குறிப்புப் புஸ்தகம் (பாக்கெட் நோட்புக்) வைத்துக்கொண்டிருந்தான். அதைப் பார்த்தால் சின்ன பைபிலோ அல்லது டைரி (தினசரி)யோ என்று ஐயப்படும்படியாக இருந்தது. "கையில் என்ன; டைரி புஸ்தகமா?" என்று கேட்டேன். அந்தப் பையன் ஹீ என்று பல்லைக் காட்டிக் கொண்டு, "இல்லெங்க; மந்திரவாதப் புஸ்தகங்கள்" என்றான்.

"நான் வாசிக்கலாமா?" என்று கேட்டேன். "வாசிக்கலாம்" என்று சொல்லி அந்தப் புஸ்தகத்தை என் கையில் கொடுத்தான். அது அச்சிட்ட புஸ்தகமன்று. அவன் கையால் எழுதியது. "பல ஊர்களில் ஸஞ்சாரம் பண்ணினேன். பல ஸாதுக்களிடம் கேட்ட மந்திரங்களை யெல்லாம் இதில் எழுதி வைத்திருக்கிறேன். நான் அவர்களுக்கு (அந்த ஸாதுக்களுக்குப்) பத்திரம் தயார் பண்ணிக் கொடுப்பேன்." என்று கலியுக கபோதாற்கசன் சொன்னான். "பத்திரமா? அதென்ன?" என்று கேட்டேன்.

அவன் சொல்லுகிறான்:—"அதைப் பாமர ஜனங்கள் கஷ்ட நஷ்டம் இதை என்றும் சொல்லுவார்கள். ஸாதுக்களுக்கு மனதை ஒரு நிலையில் நிறுத்தி பிரமத்திலே கொண்டு சேர்க்க அது உபயோகங்க. மைசூரில் நான் போன மாஸம் போயிருந்தேனுங்க. அங்கே

பெரிய சாமியாருங்க, அவர் தான் எனக்கு ஆஞ்ஜ னேயர் மந்திரம் கற்றுக் கொடுத்தாருங்க. அவர் ஒரு நாளைக்கு ஒன்றரை ரூபாய்க் கஞ்சா வாங்கிப் புகை குடிப்பாருங்க. அவர் மனைத உள்ளே கொண்டு நிறுத்திணல் பிறகு அதை வெளியே இழுப்பது கஷ் டங்க" என்றான்.

இவன் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கையில் எனக்கு அந்தப் புஸ்தகத்தைப் பார்க்க வேண்டும் என்ற அவா அதிகப்பட்டது. புஸ்தகத்தைக் கையி லெடுத்துத் திறந்தபோது அதிலிருந்து பொல பொல வென்று இருபது, மூப்பது துண்டுக் காயிதங்கள் உதிர்ந்தன. எனக்கு ஆராய்ச்சியிலே பிரியம் அதிக மானபடியால் முதலாவது அந்தத் துண்டுக் காயிதங் களைப் பரிசோதனை செய்து பார்த்துவிட்டுப் பிறகு புஸ்தகத்துக்குள்ளே நுழைவோம் என்று யோசித்து அந்தக் காயிதங்களைப் பார்த்தேன். அவற்றின் விவரம் பின்வருமாறு :—

முதலாவது :—"ஹோம்ரூல் ஸ்டாம்ப்" மூன்று இருந்தது.

அதில் ஒவ்வொரு ஸ்டாம்புக்கு நடுவிலும் அனி பெஸன்ட் அம்மாள் தலை போட்டிருக்கிறது. சுற்றி "தெய்வத்துக்காகவும், தேசத்துக்காகவும், ராஜாவுக் காகவும், சிறைப்பட்டவர்" என்றெழுதி யிருந்தது. அதைச் சூழ நான்கு புறத்திலும் இங்கிலீஷ், தெலுங்கு, உர்து, நாகரி, கன்னட லிபிகளில் "ஹோம் ரூல்" என்றெழுதி யிருந்தது.

இரண்டாவது :—ஒரு சின்ன டிக்கட். அதில் இங்கிலீஷ் பாஷையில் "மிஸ் காரா; இந்தியன் லேடி ஸாண்டோ" என்று ஒரு புறத்திலும், வெளிச் சீட்டு (ஔட் பாஸ்) என்று மற்றொரு புறத்திலும் போட் டிருந்தது.

மூன்றாவது :—ஒரு லேசான காயிதத்தைப் போன்ற செப்புத் தகடு. அதில் ஏதோ சக்காம். செதுக்கும் பொருட்டு வைத்துக் கொண்டிருப்பதாகக் கடோற்கசன் சொன்னான்.

நாலாவது :—ராமமூர்த்தி ஸர்க்கஸ் ஆட்ட ஜாப்தா.

ஐந்தாவது :—ஒரு கிறிஸ்தவப் பையனுடைய நேர்த்தியான புகைப் படம். அவன் யாரென்று கேட்டதற்குத் தன்னுடைய ஸ்னேகித னென்றும், இரும்பாலையில் வேலை பார்க்கிறா னென்றும், தன்னைப் போலவே குஸ்தி வகையறாத் தொழில்களில் பழக்க முடையவ னென்றும், அவனுக்குக் கலியுக கும்பகர் ணன் என்று பெயர் வைக்கலா மென்றும் கடோற் கசன் சொன்னான்.

ஆறாவது :—மறுபடியும் ஒரு டிக்கட். அதில் இங்க்லீஷில் "எடிஸன் கினமாடோக்ராப் கம்பனி. ஒரு ஆளை உள்ளே விடு" என்றெழுதி யிருந்தது.

ஏழாவது :—ஸிகரட் பெட்டியிலிருந் தெடுத்த தர்க்கை படம். அதில் தேவி மஹிஷாஸுரனைக் கொல்லுகிறாள். பக்கத்தில் விநாயகருடைய தலை மாத் திரம் தெரிகிறது. உடம்பெல்லாம் மறைந்திருக்கிறது. சின்ன சுப்பிரமணியன் ஒன்றிருக்கிறது. அம்மனுக்குப்

பதினாறு கைகள் போடுவதற்குப் பதிலாக எட்டுக் கை போட்டிருந்தது.

எட்டாவது:—இரண்டு சிங்கங்களுடன் ஒரு மனி தன் சண்டை போடுவது போல ஒரு படம். பத்தினி கையிலிருந்து கக்கரித்தது.

ஒன்பதாவது:—யேசுகிறிஸ்து, மாட்டுக் கொட்ட கையில் பிறந்து வைக்கோல் மேலே போட்டுக் கிடப்ப தாக குழந்தை யுருவங் காட்டிய படம்.

பத்தாவது:—ஸாதாரண வருஷத்து மார்கழி மாதம் 18-ஆம் தேதி முதல் விரோதிகிருது வருஷத் துச் சித்திரை மாஸம் 16-ஆம் தேதி வரையில் 'ஏகா தசி', 'ஷஷ்டி' பிரதோஷம், கரிநாள், யமகண்டம், ராகுகாலம், குளிகை காலம், வாரசூலை இவற்றின் அட்டவணை.

பதினோராவது:—இனி மேன்மேலும் அடுக்கிக் கொண்டு போனால் படிப்பவர்களுக்குப் பொறுமை யில்லாது போய் விடு மென்ற அச்சத்தால் இங்கு மேற் படி கீழே யுதிர்ந்த துண்டுக் காயிதங்களைப் பற்றிய முழு விவரங்களும் தெரிவிக்காமல் விடுகிறேன். அதில் அநேகம் கடோற்கசனுடைய ஸ்நேஹிதர்களுடைய மேல் விலாஸம், ஒரு சிறு துண்டுக் காயிதத்தில் குங்குமம் சுற்றி யிருந்தது. அது கோயிலில் கொடுத்த தென்றும், அம்மன் ப்ரஸாத மென்றும் கடோற்கசன் விளக்கினான்.

இனி அவன் மந்திரவாதப் புஸ்தகத்துள் எழுதி யிருந்த விநோதங்களில் சிலவற்றை இங்கு காட்டு கிறேன்.

கணபதி மந்திரம்.

ஓம் கணபதி ; ஐயும் கணபதி ; கிளியும் கணபதி ; ஸவ்வும் கணபதி ; வா ; வா ; ஸகல ஜனங்களும் ; போகங்களும் ; ஸகல லோக சித்தியும், உமக்கு வசியமானது போல் எனக்கு வசியமாகவும். சுவாஹா.

பஞ்சாட்சரம்.

ஹரி ஓம் சிவய நம.

அனுமார் மந்திரம்.

ஓம் அனுமந்தா, ஆஞ்சனேயா, நமோ நாராயணைய, சிரஞ்சீவியாகக் காத்து ரக்ஷித்து வா. கிளியும், ஸவ்வும், என் எதிரிகளை வென்று என்னைக்கா, கா, கா, ஸ்வாஹா!

புருஷ வசியத்துக்கு மந்திரம்.

நிலத்திலே முளைத்தவளே, நீலப்பூ பூத்தவளே, மனத்துக் கவலை தீர்த்தவளே, மன்னன் சிறை மீட்டவளே, குடத்துத் தண்ணீர் பாலாக வேண்டும். கோவிந்தராஜு என்னைக் கண்டா கும்பிட வேண்டும். நான் ஒரு புலியாக வேணும், அவன் ஒரு பசுவாக வேணும். புலியைக் கண்ட பசு நடுங்கினாற் போல் நடுங்கி ஒடுங்கி வணங்கி நிற்க ஸ்வாகா! இந்த மந்திரத்தை ஆயிரம் உரு ஏற்றவேண்டும். வேளைச் செடியின் வடக்கே போகிற வேரில் ஞாயற்றுக் கிழமை சூரியன் கிளம்புகிற ஸமயத்தில் மஞ்சள் துண்டைக் கட்டிப் பதினெறு விசை மந்திரத்தை ஜபித்து பிறகு வேர் அறுமல் பிடுங்கி வெள்ளித் தாயித்தில் மஞ்சளை கீக்கி வேரைச் செலுத்திக் கட்டிக்கொள்ள வேண்டும்.

ஸகல வியாதிகளுக்கும் மந்திரம்.

ஓம், ரீங், அங், இந்தப்படிக்கு விபூதியில் எழுதி ஆயிரத்தெட்டு உரு ஜபித்து சூடன் கட்டியை அதின் மேலே வைத்துக் கொடுக்க வியாதி தீரும். இது கை கண்டது.

சிறங்கு கண்டவுடன் செய்கிற மந்திரம்.

மசிமா மசி ; கசி மா கசி !

சிறங்கு ணைய மந்திரம்.

கசி ; கசி !

பழுத்தபின் உடைக்கும் மந்திரம்.

நஞ்சு, பிஞ்சு, காசமதாகிப் பிஞ்சு நஞ்சு போக ஸ்வாஹா !

இராஜாவை வசியம் பண்ண மந்திரம்.

வசீகரா, வசீகரா, ராஜ வசீகரா, அச்சிட்ட பங் காளா, தக்ஷிணைமூர்த்தி, தூர்க்கா தேவதாயை நம. இதற்கு ஆயிரத்தெட்டு செய்யவும்.

மற்று மொரு இராஜ வசிய மந்திரம்.

அய்யும், கிலியும், ஸவ்வும், ஸவ்வும் கிளியும், ஐயும், நவகோடி சித்தர் சாயம் நசி, நசி ; ஸர்வ மூலிகையும் இன்ன ராஜாவும் வசி, வசி.

இந்த மந்திரங்களைத் தவிர, மேற்படி கலியுக கடோற் கசனுடைய நோட் புக்கில் இன்னும் இது போலவே மூப்பது நாற்பது மந்திரங்களும், பலவிதமான சக்க ரங்களும் இருந்தன. அந்த மந்திரங்களையும் சக்கரங் களையும் இப்போது புஸ்தகத்தில் முழுதும் விஸ்தார மாகச் சொல்லப் போனல் நெடுந்தூரம் இந்த வியாசம்

அளவுக்கு மிஞ்சி நீண்டு விடும். எனினும் நமது ஹிந்து தர்மத்தையும், மந்திர மஹிமையையும், இடைக் காலத்து மூட ராஜாக்களுர், அயோக்யப் பூஜாரி, பண்டார, மந்திர வாதிகளும் எவ்வளவு கேலிக்கிட மாகச் செய்துவிட்டார்க ளென்பதை விளக்க, மேற் கூறிய திருவிடாந்தங்களே போதுமென்று நினைக்கி றேன். இன்னும் அவனுடைய குறிப்புப் புஸ்தகத்தில் போகப் போகப் பெருங் கேலியாக இருந்தது. எனக்கு அவற்றை யெல்லாம் பார்க்கும்போது சிரிப் பொரு பக்கம் வந்தது. கலி யொரு பக்கம் கிறுக்கிற்று.

ஹிந்துக்களுடைய மூல பலமாகிய மந்திர சாஸ்த் திரத்தை இடைக்காலத்து மூடர் இவ்வளவு சீர் கெடுத்து வைத்திருப்பதையும், அதைத் தற்காலத்து மூடர்களிலே பலர் நம்புவதையும் நினைக்கும்போது எனக்கு மிகவும் வருத்த முண்டாயிற்று.

அதை நான் பார்வையிட்டுக் கொண்டிருக்கையில் குள்ளச்சாமி என்ற வேதபுரத்து ஞானி வந்தார். அவரிடம் அதைக் கொடுத்தேன். அவர் அந்தப் புஸ்த கத்தை வெளி முற்றத்துக்குக் கொண்டு போனர். அங்கிருந்து நெடுநேரமாகத் திரும்பி வரவில்லை. என்ன செய்கிறார், பார்ப்போ மென்று சொல்லி நான் எழுந்து வெளி முற்றத்துக்கு வந்தேன். என்னுடன் கவியுக கோடாற்கசனும் வந்தான். அங்கு போய்ப் பார்த் தால், குள்ளச்சாமி அந்தப் புஸ்தகத்தில் மண் ணெ யை விட்டுத் தீயைக் கொளுத்தி எரிய விட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். குழந்தைகள்

பக்கத்தில் நின்று வேடிக்கை பார்த்தனர். எனக்குச் சிரிப்பு வந்தது. கடோற்கசன் கோவென்று அழுதான். குள்ளச்சாமி பெரிய ஞானி யென்றும், பரம புருஷனென்றும், அவர் செய்தது பற்றி வருத்தப்படக்கூடாதென்றும் சொல்லி நான் கடோற்கசனைத் தேறுதல் சொல்லி அனுப்பினேன். போகும்போது அவன் பைக்குள் குள்ளச்சாமியார் ஒரு பொற்காசு போட்டார். நான் ஒரு துண்டுக் காயிதத்தில் "ஓம் சக்தி" என்ற மந்திரத்தை எழுதி அவன் பைக்குள் போட்டேன்.

பொற் காசைக் கண்டவுடன் கடோற்கசன் கொஞ்சம் ஸந்தோஷ மடைந்து புன்சிரிப்பு கொண்டான். அப்போது குள்ளச்சாமி சொல்லுகிறார் :—

"எல்லாம் தெய்வம்"—"கர்மமே மஹா மந்திரம்" "உண்மைக்கு ஜயமுண்டு" "எல்லாரையும் வசப்படுத்த வேண்டுமானால், எல்லாரையும் தெய்வமாக நினைத்து மனத்தால் வணங்க வேண்டும்." இந்த விஷயங்களை யெல்லாம் இந்த தேசத்தில் பரவும்படி செய் என்றார்.

கத்திச் சண்டை.

மார்கழி மாஸத்து காலம் வாரம். அதாவது, குளிர் ஜாஸ்தி. அதிலும், வேதபுரம் கடற்கரைப் பட்டணம். குளிர் மிகவும் ஜாஸ்தி. ஒரு நாள் ராத்திரி நான் குளிருக்குப் பயந்து சுகாதார சாஸ்த்ரத்தைக் கூடப் பொருட்டாக்காமல், என் அறைக்குள் காலு ஜன்னல்களையும் சாத்தி முத்திரை வைத்துவிட்டுப் படுத்துக் கொண்டிருந்தேன்.

விடிய இரண்டு ஜாமம் இருக்கும்போது விழித்துக் கொண்டேன். அதற்கும் குளிர்தான் காரணம். வாடை குளு குளு வென்று வீசுகிறது. வடபுறத்து ஜன்னலின் கதவுகள் காற்றில் தாமாகவே திறந்து கொண்டன. எழுந்து போய் ஜன்னலை சேராக்குவோ மென்று யோசித்தால் அதற்கும் சோம்பராக இருந்தது. போர்வையை நீக்கிவிட்டு இந்தக் குளிரில் எவன் எழுந்து போய் ஜன்னலைச் சாத்துவான்? என்ன செய்வோம் என்று ஸங்கடப்பட்டுக்கொண்டே படுத்திருந்தேன். மழை இதற்குள்ளே பெரிதாக வந்து விட்டது. மழை கள கள வென்று கொட்டுகிறது. வாடைக் காற்று வந்து பல்லைக் கட்டுகிறது.

உயிரை வெறுத்து தைரியத்துடன் எழுந்து போய் ஜன்னலைச் சாத்துவோம் என்று சொல்லியெழுந்தேன்.

அப்போது ஒரு பண்டாரம் சங்கூதிச் சேகண்டியடித்துப் பாடிக்கொண்டு வந்தான். மார்கழி மாசத்தில் வருஷந்தோறும் ஒரு வள்ளுவன் வந்து பாதிராத்திரி நேரத்திலேயே வேதபுரத்து வீதிகளில் எல்லாம் திருவாசகம் பாடிக்கொண்டு சங்கூதிக்கொண்டு சேகண்டி யடித்துக்கொண்டு சுற்றுவது வழக்கம். அவன்தான் இந்த வருஷமும் வந்துகொண்டிருப்பானென்றெண்ணி நான் ஆரம்பத்தில் ஒரு நிமிஷம் கவனியாமல் இருந்தேன். பிறகு கணீர் என்று பாட்டுச் சத்தம் காதில் வந்து மதுரமாக விழுந்தது. அடா இது பழைய வள்ளுவனுடைய குரலில்லை. இது எதோ

புதிய குரலாக இருக்கிறதென் றெண்ணி நான் குளி
ரையும் கவனியாமல் ஜன்னல் ஓரத்திலே கொஞ்சம்
நின்றேன். மழை கொட்டுகிறது. அறைக்குள்ளே
எனக்கு கைகால் விரைய லெடுக்கிறது.

அந்தப் பண்டாரம் வஸந்த காலத்தில், மாலை
நேரத்தில், பூஞ் சோலையில் ராஜகுமாரன் ஒருவன்
காற்று வாங்கிக்கொண்டு ஓய்யாரமாக நடப்பது
போலே (அந்தப் பண்டாரம்) அந்த மழையில் நடந்து
செல்லுகிறான். பிரமானந்தமாகத் திருவாசகம் பாடு
கிறான் :—

" பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறை போலும் காணேடி!"

இந்தப் பாட்டை அவன் பாடின ராகம் என்
மனதை விட்டு இப்போதுகூட நீங்கவில்லை. மநுஷ்ய
கானம்போலில்லை. தேவகானம் போலே யிருந்தது.
"ஹே! யாரப்பா பண்டாரம், நில்லு!" என்று
சொல்லிக் கூவினேன். அவன் நின்றான். "நீ போன
வருஷம் திருப்பள்ளி யெழுச்சி பாடி வந்தவனைத்
தானன்ற வில்லையே? நீ யார்?" என்று கேட்டேன்.
"நான் போன வருஷம் பாடினவனுடைய மகன்.
நான் பாடினது திருச்சாழல்" என்றான். இவன்
அதிக ப்ரஸங்கி என்று தெரிந்து கொண்டு, "உன்
பெயரென்ன?" என்று கேட்டேன். "என் பெயர்
சிட்டை மாடன்" என்று சொன்னான். "சரி போ"
என்று சொன்னேன். அவன் இரண்டடி முன்னே

போய் மறுபடி திரும்பி வந்து:—"ஐயரே, உம்முடைய பெயர் என்ன?" என்று கேட்டான்.

"என் பெயர் காளிதாசன்" என்று சொன்னேன்.

"ஓஹோ! பத்திரிகைக்குக் கதைகள் எழுதுகிறீரே, அந்தக் காளிதாஸன் நீர்தானே?" என்றான்.

"ஓஹோ! இவன் பத்திரிகை படிக்கிறான்" என்றெண்ணி வியப்புற்று, நான் அவனிடம் "கட்டி, நெட்டை மாடா; உனக்கு சங்கீதம் யார் கற்றுக் கொடுத்தார்கள்? நீ இதுவரை எந்த ஊரிலே வளர்ந்தாய்?" என்று கேட்டேன். அப்போது நெட்டை மாடன் சொல்லுகிறான்:—

"ஏ, ஐயரே, நான் மழையில் நிற்கிறேன். நீ அறைக்குள் நின்று கொண்டு என்னிடம் கீண்ட கதை பேசுகிறாயே. மேல் தளத்திலிருந்து கீழே இறங்கிவா; வாசல் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு பேசலாம். நானும் உன்னிடத்தில் பல கேள்விகள் கேட்கவேண்டுமென்று நெடுநாளாக யோசனை பண்ணிக் கொண்டிருந்தேன். இறங்கி வருவீரா?" என்று கேட்டான்.

"இவன் என்னடா! வெகு விசேஷத்தனைத் தெரிகிறதே!" என்று நான் ஆச்சர்யப்பட்டுக் கீழே இறங்கி வருவதாக ஒப்புக் கொண்டேன். அவன் வாசல்படி யேறித் திண்ணையில் உட்கார்ந்தான். நான் கீழே போகையில் ஒரு மழை லாந்தர் கொளுத்திக் கொண்டு போனேன். அவன் கையிலும் ஒரு மழை லாந்தர் கொண்டு வந்திருந்தான். திண்ணையில் போய் உட்கார்ந்த உடனே நாங்கள் இருவரும் ஒருவரை

யொருவர் ஏற இறங்கப் பார்த்துக் கொண்டோம். அவன் தலை சுத்த மொட்டை; உடம்பு ஒற்றை நாடி; சதைப்பற்றுக் கிடையாது. ஆனல் உறுதியான உடம்பு; மேலே துணி கிடையாது. இடுப்பில் மாத்திரம் ஒரு துணி கட்டிக்கொண்டிருந்தான். மேலெல்லாம் மழைத் தண்ணீர் ஓடுவதை அவன் துடைக்கவில்லை. குளிரினல் அவன் முகம் விகாரப்படவில்லை. அவனைப் பார்த்தவுடனே எதனலேயோ ஹம்ஸ பகூஷியின் ஞாபகம் வந்தது. ஹாம்! ஆமாம்! அவன் முன்பு நடந்து செல்லக் கண்டபோது நான் என் மனதில், 'இவன் என்னடா, அன்ன நடை நடக்கிறான்!' என்று நினைத்துக் கொண்டேன். மேலும் இவன் ஆஸாமியைப் பார்த்தால் கோயில் அன்ன வாஹனம் எத்தனை பொறுமையும், இனிமையுமாகத் தோன்றுமோ அத்தனை பொறுமையும் இனிமையுமான முக வசீகர முடையவனக இருந்தான்.

நான் அப்போது அவனை நோக்கி:—"என்னிடம் ஏதேனும் கேள்விகள் கேட்க வேண்டுமென்று நெடுங் காலம் யோசனை செய்து கொண்டிருந்ததாகச் சொன்னையே, கேள்" என்றேன்.

அப்போது நெட்டை மாடன் சொல்லுகிறான்:—

"உன்னிடம் கேள்விகள் கேட்க வேண்டுமென்ற விருப்பமிருந்ததாக நான் தெரிவிக்கவில்லை. உன்னிடம் ஸம்பாஷணை செய்ய வேண்டுமென்ற விருப்பமிருந்ததாகச் சொன்னேன். நீ ஏதாவது கேள்வி கேள். நான் ஜவாப் சொல்லுகிறேன். அதுதான்

எனக்குகந்த ஸம்பாஷணை" என்றான். "இதென்ன ஸங்கடம்" என்று யோசித்து, நான் இவனிடம் முன் கேட்ட கேள்விகளைத் திரும்பவும் கேட்டேன். "நீ சங்கீதம் எங்கே படித்தாய்? இத்தனை காலம் எந்த ஊரில் இருந்தாய்?" என்று வினவினேன்.

நெட்டை மாடன் சொல்லுகிறான்:—"அறிஞர் வீணை ரகுநாத பட்டர் மகன் அஞ்ஜனேய பட்டரிடம் நான் சங்கீதம் வாசித்தேன். இதுவரை அந்த ஊரிலே தான் வாஸம் செய்தேன்" என்றான்.

அப்போது நான் கேட்டேன்:—"தம்பி, நெட்டை மாடா, நீ ஜாதியில் வள்ளுவனையிற்றே! ரகுநாதபட்டர், அஞ்ஜனேய பட்டர் என்ற பெயர்களைப் பார்த்தால் அவர்கள் பிராமணராகத் தோன்றுகிறதே! உங்கள் ஜாதியார் பிராமணருக்கு ஸமீபத்தில் வந்தால் கூட தீண்டல் தோஷம் என்று சொல்லுவது வழக்க மாயிற்றே. அப்படி யிருக்க நீ அவர்களிடம் ஸங்கீதம் எப்படிப் படித்தாய்?" என்றேன்.

அதற்கு நெட்டை மாடன் சொல்லுகிறான்:— "நீ கேட்ட கேள்விக்கு ஜவாப் சொல்ல வேண்டு மானால் என்னுடைய கதையை ஆரம்பத்திலிருந்தே தொடங்கிச் சொல்ல வேண்டும். அவ்வளவு தூரம் பொறுமையுடன் கேட்பாயா?" என்றான்.

"கேட்கிறேன்" என்று சொல்லி உடம்பாடு தெரிவித்தேன். அப்போது நெட்டை மாடன் சொல்லுகிறான்:—

"நான் வேதபுரத்தில் இருபத்தாறு வருஷங் களுக்கு முன் பிறந்தேன். என் தகப்பனார் சோற்றுக் கில்லாமல் நான் நாலு வயதுப் பையனாக இருக்கும் போது ஒரு ஸர்க்கஸ் கம்பெனியாருக்கு என்னை விற்று விட்டார். அந்தக் கம்பெனியில் சூராதி சூரத்தனமான வேலைகள் செய்து மிகுந்த கீர்த்தி ஸம்பாதித்தேன். பன்னிரண்டு வயதாக இருக்கும்போது அறிவூருக்குப் போனேன். அந்தக் கம்பெனித் தலைவரான மஹா ராஷ்ட்ரப் பிராமணருக்கு என்னிடம் மிகுந்த அபி மானம். அறிவூர் என்பது மலை நாட்டில் ஒரு பெரிய ஜமீந்தாருடைய ராஜதானி நகரம். அந்த ஊரில் ஸர்க்கஸ் இரண்டு மாஸம் ஆடிற்று. அப்போது என் னுடைய எஜமானரான ராயருக்கு வயதாய் விட்ட படி யால் சீக்கிரத்தில் கம்பெனியை கலைத்து விட்டுப் பண்டரிபுரத்துக்குப் போய் அங்கு வீடு வாங்கித் தனது முதுமைப் பருவத்தை ஹரி பக்தியில் செலவிட வேண்டு மென்ற யோசனை பண்ணிக் கொண்டிருந்தார். அவருக்கும் ஜமீந்தாருக்கும் மிகுந்த நட்புண்டாயிற்று. ஜமீந்தார் கத்திச் சண்டையில் கெட்டிக்காரரானதும் வயதில் குறைந்தவரானதும் தனக்கொரு பக்கச் சேவ கன் வேண்டு மென்று விரும்பினர். என்னுடைய எஜமானரான ராயர் என்னை சிபார்சு பண்ணினார். இதற் கிடையே எனது தகப்பனாருக்கும் எஜமான் ராய ருக்கும் அடிக்கடி கடிதப் போக்கு வரவு நடந்து கொண்டு வந்தது. எனது தகப்பனாரும் என்னை அடிக்கடி பல ஊர்களில் வந்து பார்த்துக்கொண்டிருந் தார். அறிவூர் ஜமீந்தார் எனக்கு அரண்மனையிலே

சோறு போட்டு மகன் போலே வளர்த்தார். ஸங்கீதம் அந்த ஸமஸ்தானத்து பாகவதராகிய அஞ்சனேய பட்டரிடம் படித்தேன். யோகாப்யாசம் பண்ணி யிருக்கிறேன். கத்திச் சண்டையிலே பேர் வாங்கி யிருக்கிறேன். ஆறு பாஷை பேசுவேன். பாடுவேன். நாட்டிய மாடுவேன். மிருதங்க மடிப்பேன். ஆனை யேற்றம், குதிரை யேற்றம், கழைக் கூத்து, மல் வித் தைகள்—எனக்குப் பல தொழிலும் தெரியும்" என்று சொன்னான்.

இதற்குள் பொழுது விடிந்து விட்டது. நல்ல ஸூர்யோதயத்தில் அவன் முகத்தைப் பார்க்கும் போது நல்ல சுந்தர ரூபமுடையவனாக இருந்தான்.

அப்போது நான் அவனை நோக்கி:—"நீ இன்று நம்முடைய வீட்டிலேயே காலை நேரம் போஜனம் செய்துகொள். உன்னுடைய கத்தி சுற்றும் திற மையை எனக்குக் கொஞ்சம் காண்பி" என்றேன். சரி யென்று ஸம்மதப் பட்டான். பின்பு சொல்லு கிறான்:—"எனக்கு சரியாகக் கத்தி சுழற்றக் கூடிய வர்கள் இந்த ஊரில் ஒரே மனுஷ்யன் தான் இருக் கிறார். நான் போய் என் வீட்டிலிருந்து கத்திகளை யெடுத்துக்கொண்டு அவரையும் அழைத்துக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டு போய், மறுபடி ஐந்து.....மணி யிருக்கும்போது வந் தான். இவன் பட்டாக் கத்தி, உண்மையான,..... சண்டைக் கத்திகள் கொண்டு வருவானென்று நான் நினைத்திருந்தேன். இரண்டு மொண்ணை வாள்—வெண்

ணையை வெட்டும் ஸர்க்கஸ் கத்திகள் கொண்டு வந்தான். தனக்கு எதிர் நின்று சண்டை போடக்கூடிய வீராதி வீரனை என்னிடம் அழைத்து வருவதாக அவன் வாக்குக் கொடுத்தபடி அந்த மனிதனைத் தேடிப் பார்த்ததாகவும், அகப்படவில்லை என்றும், மற்றொரு நாள் கூட்டி வருவதாகவும் இன்று தான் மாத்திரம் தனியே கத்தி வீசிக் காண்பிப்பதாகவும் சொன்னான். சரி யென்று சொல்லி நான் அவனுக்கு முதலாவது காபியும், இட்டலியும் கொண்டு வந்து வைத்து சாப்பிடச் சொன்னேன். பாதி சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அப்போது குள்ளச் சாமியார் என்ற யோகீசர் அங்கே வந்தார். அவரைக் கண்டவுடன் நெட்டை மாடன் எழுந்து ஸலாம் பண்ணி,—'ஜராம், ராம் மஹராஜ்!' என்றான். அவரும் இவனைக் கண்டவுடன், 'ராம், ராம்' என்றார். பிறகு நெடுநேரம் இருவரும் மலையாள பாஷையில் பேசிக் கொண்டார்கள். எனக்கு மலையாளம் அர்த்தமாகாத படியால் நான் அவர்களுடைய ஸம்பாஷணையை கவனிக்கவில்லை. குள்ளச் சாமியாரை நான் குருவென்று நம்பியிருக்கிற படியால் அவருக்கும் கடையிலிருந்து வாழைப்பழம் வாங்கிக்கொண்டு வந்து பாலும் பழமும் கொடுத்தேன். இரண்டு பேரும் சாப்பிட்டு முடித்தார்கள். கீழ்த் தளத்தில் சாப்பிட்டார்கள். பிறகு நான் வெற்றிலைத் தட்டைக் கையில் எடுத்துக் கொண்டு மேல் மாடியில் பூஜா மண்டபத்துக்குப் போகலாம் என்று கூறி அழைத்து வந்தேன். இருவரும் மேல் மாடிக்கு வந்தார்கள். நான் ஊஞ்சலின்மீது அவர்கள் இருவரையும்

வீற்றிருக்கும்படி செய்து தாம்பூலம் கொடுத்தேன். இருவரும் தாம்பூலம் போட்டுக் கொண்டார்கள். பிறகு ஒரு கூண்டுக்குள்ளே நெட்டை மாடன் வெளி முற்றத்திலிருந்து ஒரு நாற்காலி யெடுத்துக் கொண்டு வந்தான். அதன் மேலே ஏறிக்கொண்டு ஊஞ்சல் சங்கிலிகளைக் கழற்றினேன். அடுத்த கூண்டுக்குள் ஊஞ்சலையும் கழற்றினேன். அடுத்த கூண்டுக்குள் ஊஞ்சலையும் சங்கிலிகளையும் கொண்டு சுவரோரத்தில் போட்டு விட்டான். பிறகு நெட்டை மாடன் என்னை நோக்கி "எனக்கு ஸமானமாகக் கத்தி வீசத் தெரிந்தவர் இந்த ஊரில் ஒருவர்காலுண்டு என்று சொன்னேனே, அவர் யாரெனில் இந்தச் சாமியார்தான்" என்று குள்ளச் சாமியாரைக் காட்டினேன். நான் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்தனைய் விட்டேன்.

ஒரு கூண்டுக்குள் அந்த இருவரும் தலைக்கொரு கத்தியாக எடுத்துக்கொண்டு வீசத் தொடங்கி விட்டார்கள். நெடுநேரம் அவர்களுக்குள்ளே கத்திச் சண்டை நடந்தது. அதைப் பார்த்து நான் பிரமித்துப் போய் விட்டேன். அத்தனை ஆச்சர்யமாக அவ்விருவரும் கத்தி சுழற்றினார்கள். ஒருவருக்கும் காயமில்லை. ஆனால் நடுவே நடுவே இவன் தலை போய் விடுமோ அவன் தலை போய்விடுமோ என்று எனது நெஞ்சு படக்குப் படக்கென்று புடைத்துக் கொண்டிருந்தது.

பிறகு இருவரும் கத்தியைக் கீழே வைத்து விட்டுக் கொஞ்சமேனும் ஆயாசமில்லாமல் மறுபடியும் மலையாளத்தில் ஸம்பாஷணை செய்யத் தொடங்கி விட்

டார்கள். கொஞ்சம் பொழுது கழிந்த பின்பு நெட்டை மாடன் போய்விட்டான். குள்ளச் சாமியார் என்னை நோக்கிச் சொல்லுகிறார். "தம்பி, காளிதாஸா, இந்த நெட்டை மாடன் ராஜயோகத்தினால் சித்தத்தைக் கட்டினவன். இவனுக்கு ஈசன் யோகசித்திக்கு வாட்போரை வழியாகக் காண்பித்தான். இவனுக்கு நிகராக வாள் சுழற்றுவோர் இந்தப் பூமண்டலத்தில் யாரும் கிடையாது. ஆனால் இவன் தன்னைக் கொல்ல வந்த பாம்பையும் கொல்லக் கூடாதென்ற அஹிம்ஸா விரதத்தைக் கைக்கொண்ட மஹா யோகியாதலால், கொலைத் தொழிலுக்குரியதான கூர்வாளை இவன் கையினால் தீண்டுவது கிடையாது. உடம்பு நன்றாக வசமாக்கும்படி செய்கிற ஹடயோக வித்தைகளில் ஒன்றாக அதை நினைத்து உன் போன்ற அபிமானிகளுக்கு மாத்திரம் தனது திறமையை ஸர்க்கஸ் கத்தி வைத்துக் கொண்டு காண்பிப்பான். வள்ளுவர் குலத்தில் நம் ஊரிலேயே இப்படி ஒரு மஹான் இருப்பது உனக்கு ஆச்சர்யமாகத் தோன்றலாம். இனிமேல் இதற்கெல்லாம் ஆச்சர்யப்படாதே. ஹிந்துஸ்தானத்துப் பரதேசி பண்டாரங்களை யெல்லாம் மிகுந்த மதிப்புடன் போற்று. பரதேசி வேஷத்தைக் கண்டால் கும்பிடு போடு. எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ? உனக்கு மேன்மேலும் மஹான்கள் தரிசனம் தருவார்கள்" என்றார்.

நான் ஹிந்துஸ்தானத்தின் மஹிமையை நினைத்து வந்தே மாதரம் என்று வாழ்த்திக் குள்ளச் சாமியாரைக்

கையெடுத்துக் கும்பிட்டேன். அவர் "ஜீவ" என்று வாழ்த்தி விட்டு, விடை பெற்றுக்கொண்டு சென்றார்.

"வளர் பிறை" குழந்தைக் கதை

ரவீந்திரநாத டாகூருடைய வங்காளிப் பாட்டை இங்கிலீஷ் படுத்திய நூல்களில் "வளர் பிறை" என்ப தொன்று. குழந்தைகளைப் பற்றிய பாட்டு. மிகவும் சாமர்த்யமாக எழுதியிருக்கிறார்.

சில மொழி பெயர்ப்புக்கள் காட்டுகிறேன் :—

"நான் எங்கிருந்து வந்தேன்? நீ என்னை எங்கே பொறுக்கி யெடுத்தாய்?" என்று குழந்தை தாயினிடம் கேட்டது. அதற்குத் தாய் சொல்லுகிறாள்—

"என் செல்வமே,

"எனது நெஞ்சிடை விருப்பமாய் மறைந்து நீ நின்றாய், நான் விளையாட்டுப் பெண்ணாக விளையாடிய பொம்மைகளிலே நீ இருந்தாய்.

"கனி மண்ணாலே நான் ஸ்வாமி பண்ணிப் பண்ணி யழித்த போது உன்னைத்தான் பண்ணினேன்.

"வீட்டுக் குலதெய்வத்துடன் நீ கோயில் கொண் டிருந்தாய். அதனை வணங்குகையில், நின்னையே வணங் கினேன்."

"விளையாட்டுப் பண்டங்கள்" என்று மற்றொரு பாட்டு. அதில் தந்தை சொல்லுகிறான்:—

"குழந்தாய், குச்சிகளையும், மண் பண்டங்களையும், வைத்துக் கொண்டு அவற்றுடனே கலக்கும் வித்

தையை நான் மறந்து விட்டேன். எனது விளையாட்டுக்கு விலையேறிய பண்டங்கள் வேண்டிப் பொன்னும் வெள்ளியும் நிரளாகக் குவிக்கிறேன். நீ கண்ணிலகப்பட்ட பொருளை யெல்லாம் வைத்துக் கொண்டு ரஸமான விளையாட்டுக்கள் படைக்கிறாய், என்றும் பெறக் கூடாதனவற்றை வேண்டி நான் வலிமையையும் நேரத்தையும் செலவிடுகிறேன்!"

"மேகங்களும் அலைகளும்" என்பதொரு பாட்டு. அதிலே குழந்தை சொல்லுகிறது :—

"அம்மா! அலைக்குள்ளே வாழ்வோர் என்னைக் கூப்பிடுகிறார்கள்.

"'காலை முதல் இரவு வரை பாடுகிறோம். திக்குத் திசை யில்லாமல் எங்கும் சுற்றி வருகிறோம்' என்று சொல்லி என்னை யழைக்கிறார்கள்.

"'எப்படி உம்முடன் சேரலாம்?' என்றால்,

"'கரை யோரத்துக்கு வந்து கண்ணை மூடிக் கொள்ளு, அலைகள் வந்து உன்னைக் கொண்டு போகும்' என்கிறார்கள்.

"அதற்கு நான் :—'வீட்டில் அம்மா என்னை மாலையில் தேடுவாள். அவளை எப்படிப் பிரிந்து வருவேன்?' என்று கேட்டால் அவர்கள் சிரித்துக் கொண்டு ஓடிப்போகிறார்கள்.

"அம்மா, அதைக் காட்டிலும் நல்லதொரு விளையாட்டு எனக்குத் தெரியும், நான்தான் அலையாம், நீ ஏதோ ஒரு தேசத்துக் கடற்கரையாம்; நான்

உருண்டுருண்டு வந்து சிரிப்புடன் உன் மடிமேல் மோதுவேன்."

"சென்பகப்பூ" என்பதொரு பாட்டு.

அதில் ஒரு குழந்தை தான் தாய்க்குத் தெரியாதபடி சென்பகப் பூவாக மாறி உச்சிக் கொம்பின் மேல் ஏறியிருப்பதாகக் கற்பனை பண்ணி அதைத் தாயினிடம் ரஸமான கதையாகச் சொல்லுகிறது.

"வீரன்" என்ற பாட்டு மிகவும் நயமானது.

அதில் குழந்தை தனது தாயை நோக்கிப் பின் வரும் கற்பனையாய் சொல்லுகிறது. காட்டு வழியில் தாய் பல்லக்கில் ஏறிவர, அருகே தான் குதிரையேறி வருவதாகவும், அப்போது கள்ளர் வருவதாகவும், போரில், தான் அத்தனை கள்ளரையும் வெட்டிக் கொன்று துரத்தி யொழித்து விடுவதாகவும், அப் போது தாய், 'இந்தப் பிள்ளையைக் கூட்டி வந்ததனாலே பிழைத்தோம்,' என்றெண்ணுவதாகவும், ஊரார் உவப் பதாகவும், தமயன் கேட்டு இந்த வலிமையற்ற பிள்ளை இத்தனை செய்தானே என்று வியப்பதாகவும், கற்பனை மிகவும் நன்றாக அமைந்திருக்கிறது.

தெய்வமே தாயென்று நம்பி எவன் குழந்தை போல் நடக்கிறானே அவனே ஞானி யென்பது மேற்படி நூலின் கருத்து.

குழந்தைக் கதை

ராமபுரம் என்ற ஊரில் வடகோடித் தெருவில் ஒரு பெண் குழந்தை தன் வீட்டு மேடையில் ஒரு

நாற்காலியின் மேல் உட்கார்ந்து பச்சை நூலில் ஊசி கோர்த்துத் தையல் வேலை செய்து கொண்டிருந்தது. அப்போது நேர்த்தியான காலை வெயிலடித்தது. அவ் வீட்டைச் சுற்றி நாற்றிசைகளிலும் நெருங்கி வளர்ந் திருந்த தென்னை, முருங்கை, ஆத்தி, வாழை முதலிய பசுமரங்களின் இலைகள் இள வெயில் இன்பத்திலே களி கொண்டு நின்றன. காக்கை, புறா, கிளி, சிட்டுக் குருவி, நாகணவாய், ஓரிரண்டு மரங் குத்திக் குருவி கள் முதலிய பக்ஷிகள் ஓடிப் பறந்து விளையாடிக் கொண்டிருந்தன. மேலே பருந்துகளும் கருட பக்ஷிக ளும் வட்டமிட்டு வெயிலைத் தின்று கொண்டுலாவின.

இந்த ஸமயத்தில் தெருவில் ஒருவன் "வெல்லம் வாங்க வில்லையா, வெல்லம்" என்று கூவிக்கொண்டு வந்தான். அக்குழந்தை யிருந்த வீட்டுக் கெதிர் வீட்டு வாயிலில் சுமார் நாற்பது வயதுடையவராகத் தோன் றிய க்ருகஸ்த ரொருவர் நின்று கொண்டிருந்தார். அவர் பார்வைக்கு வேளாளரைப் போலிருந்தார். அந்த முதலியார் வெல்ல வியாபாரியை நோக்கி:—"ஏ, யாரப்பா வெல்லம், இங்கே கொண்டு வா" என்றார். வெல்ல வியாபாரி நாட்டுப்புறத்தான். அவனுக்குச் சுமார் முப்பது வயதிருக்கும், முழங்காலுக்கு மேல் இடுப்புவரை ஓரழுக்குத் துணியை வளையக் கட்டிக் கொண்டிருந்தான். அவன் ஒரு பெரிய பிரப்பங் கூடையில் வெல்லத்தை வைத்துத் துணியால் மூடி அதைத் தலைச் சும்மாட்டின் மேலே சுமந்து கொண்டு வந்தான். முதலியார் வீட்டு வெளித் தாழ்வாரத்தில்

கூடையை இறக்கினான். அப்போது அங்கு பக்கத்து வீட்டிலிருந்து ஒரு செட்டிச்சியம்மா வந்து சேர்ந்தாள். இவளுக்கு நாற்பத்தைந்து வயதிருக்கும்; விதவை, சிவப்புத் துணி கட்டியிருந்தாள்.

ரவீந்திர நாத டாகூர் சொல்வது போல் இவளுடைய தலை மயிர் முக்காற் பங்கு பழமாகவும், காற் பங்கு காயாகவு மிருந்தது. அதாவது, முக்காற்பங்கு நரை; பாக்கி நரையில்லை.

செட்டிச்சி வந்து குனிந்து கூடை மீதுள்ள துணியை விலக்கினாள். "தொடாதேயம்மா, தொடாதேயம்மா" என்று வெல்ல வியாபாரி கத்தினான். அதற்குள் வேறு சில செட்டிச்சிகளும் அங்கு வந்து கூடி விட்டனர்.

சத்தம் அதிகப்பட்டது. பலவிதமாக வசை பேசலாயினர். "பணத்துக்கு எத்தனை கட்டி? இன்னும் இரண்டு போடு.....அட, போ, மூன்று காசுக்குப் பால் மாறுதே.....அடே, நீ வாடே, நாம் கடைத் தெருவில் போய் வாங்கிக் கொள்ளலாம்" என்று நானாவிதமான ஸம்பாஷணைகள் நிகழ்ந்தன. வியாபாரம் நடக்கவில்லை. ஸ்திரீகளின் கூட்டம் அதிகப்பட்டவுடனே, முதலியார் அங்கிருந்து சற்றே விலகிக் கொண்டார். அப்போது அந்த முதலியாருடைய நண்பராகிய ஒரு கிழவர் அங்கு வந்து சேர்ந்தார். அவ்விருவரும் ஸம்பாஷணை செய்யலாயினர்.

நான் அந்த வீதியில் ஒரு வேலையாகப் போயிருந்தேன். ஒரு மனிதருக்காகக் காத்திருக்கும்படி

நேரிட்டது. அக் குழந்தை தையல் வேலை செய்து கொண்டிருந்த வீட்டுக்குக் கீழே ரஸ்தாவில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன்.

அப்போது அந்த முதலியார் சொன்னார். "வெல்லம் விலை விஷம் போலேறி விட்டது. அட, வெல்லம் மாத்திரமா; பெருங்காயம் முதல் பலாப்பழம் வரை, உப்பைத் தொட்டுக் கற்பூரம் வரை எல்லாச் சாமான்களுக்குந் தான் விலை ஒரேயடியாக பின்னுக் கேறி விட்டது. தெருவிலே கீரை கொத்தமல்லி கொண்டு வருங் கிழவி கூடப் போன வருஷத்துக்கு இவ்வருஷம் மூன்று மடங்கு ஸாமான் குறைவாகப் போடுகிறாள். இந்தக் குட்டிச் சுவராக, மண்ணைகப் பாழாகிப் போகிற ஜெர்மனிக்காரன் எப்போது தான் சண்டையை நிறுத்துவானே?" என்று முதலியார் பெருமூச்சு விட்டார்.

உடனே அந்தக் கிழவர் சொல்லுகிறார்:—"ஜெர்மனியானுக்கு பலமான அடி! நம்முடைய வீட்டுக்குப் பக்கத்தில் ஒருவர் இஸ்திரிக்கடை வைத்திருக்கிறார். அவருக்குத் தினந்தோறும் 'சுதேசமித்திரன்' பத்திரிகை வருகிறது. அவர் அதைப் படித்து ஸாயங்காலம், ஸாயங்காலம் நமக்கு விஷயங்களெல்லாம் சொல்லுவார். ஜெர்மனி ராஜா சிங்காதனத்தை விட்டு நீங்கி விட்டானும். நேசக் கக்ஷியார் சீக்கிரம் பெர்லின் நகரத்தைப் பிடித்துக் கொள்வார்களாம். ஜெர்மனியான் ஸமாதானம் கேட்டானும். அது நேரே நம்முடைய இங்கிலீஷ்காரரிடம் கேட்காமல் அமெரிக்காவிலே

போய்க் கேட்டானும். அமெரிக்காவில் ராஜாவே கிடையாதாமே! ஒரு பள்ளிக்கூடத்து வாத்தியாரை அங்கே நாலைந்து வருஷத்துக்கு 'ஆக்டிங்' காக ராஜா மாதிரி வைத்திருக்கிறார்களாம். அவர் ஜெர்மன் ராஜாவுக்குப் பதில் வார்த்தையாக உன்னைத் தூள் தூளாகச் செய்த பிறகு தான் சமாதானமே யொழிய அதுவரை ஸமாதானத்தைப் பற்றி உச்சரிக்கக் கூடாதென்று சொல்லி விட்டாராம். நல்ல வாத்தியார் அவர்" என்று கிழவர் சொன்னார்.

அப்போது முதலியார்:—"அப்படியானால் சண்டை ஸமீபத்தில் முடியப் போகிறதில்லை. நேசக் கக்ஷியால் தம்முடைய பூமி யெல்லாம் மீட்டுக் கொண்டு அப்பால் ஜர்மனியின் எல்லைமேல் படை யெடுத்துப் போய் பர்லின் நகரத்தைப் பிடுங்க வேண்டுமானால் அதற்கு இன்னும் குறைந்த பக்ஷம் இரண்டு மூன்று வருஷமாவது செல்லாதா?" என்றார்.

அது கேட்டுக் கிழவர்:—"ஹ-ம்ம், ஹ-ம்ம், ஹ-ம்ம், ஜனரல் (f) போஷ் என்ற நேசக்கக்ஷி ஸைந்திபதி மஹா, மஹா, மஹா வீராராம். அமெரிக்காவிலிருந்து எண்ணத் தொலையாத புதுத் துருப்புகள் வந்திருக்கின்றனவாட்ட. இன்னும் நாலைந்து மாதத்தில் ஜர்மனி துவையலாய்ப் போய்விடும், பார்த்துக் கொண்டே யிரும்" என்று சொன்னார்.

இங்ஙனம் இவர்கள் பேசிக் கொண்டிருக்கையிலே, வெல்ல வியாபாரியைச் சூழ ஸ்த்ரீகளின் கூட்டம் பெருங் கூட்டமாய் விட்டது.

மேடையின் மீது தையல் வேலை செய்துகொண்டு தெருவை நோக்கி யிருந்த குழந்தை எதோ பராக்காக இருக்கையிலே, ஒரு காக்கை அந்தக் குழந்தையின் கையைத் தீண்டிக்கொண்டு பாய்ந்து செல்ல அதனல் அக்குழந்தை பயந்து கையிலிருந்த நூல் நழுவி விட்டது. அந்த நூல் என் தலைமேல் வந்து விழுந்தது. அதை நான் அப்படியே தரையில் விழாதபடி கையால் பிடித்துக் கொண்டேன். இதைக் கண்டு குழந்தை மகிழ்ச்சி யடைந்து அந் நூலை என்னிடமிருந்து வாங்கிக் கொள்ளும் பொருட்டாகக் கீழே யிறங்கி ரஸ்தாவுக்கு வந்தது.

அந்த பெண் குழந்தைக்கு சுமார் எட்டு அல்லது ஒன்பது வயதிருக்கும். மிகவும் அழகான ரூபம். செவப்பு நிறம். ஒரே விதமாக வெள்ளையுமில்லை. சுத்த மஞ்சள் நிறமில்லை. அரை மஞ்சள்; காலை வெயிலின் நிறத்தை அந்தக் குழந்தையின் நிறத்துக்கு ஒப்பிட லாம். அதன் முகத்தில் அற்புதமான தொரு நிலா வொளி வீசிற்று. மானே போல விழிகள். ஆஹா! அந்தக் குழந்தையின் விழிகளிலே தோன்றிய ஸௌந் தர்யத்தை நான் எங்ஙனம் வர்ணிப்பேன்! அதன் கண்களைப் பார்த்தால் ஒருவனுடைய பாவங்கள், பிணி கள், பயங்களெல்லாம் பறந்தோடிப்போய் விடும்.

அதன் கண்களை நோக்கி நான் வியந்து கொண் டிருக்கையிலே, அப் பெண், "நூலைக் கொடு" என்று கேட்டது.

"உன் பெயரென்ன?" என்று வினவினேன்.

"நூலைத் தா வென்றால் பெயரென்னவா! என் பெயர் பேரில்லாப் பூச்சி, நூலைத்தா" என்றது.

அப்போது நான் அக் குழந்தையை நோக்கி:—

"ஏ, பேரில்லாப் பூச்சி, உன் தந்தை பெயரென்ன?" என்றேன்.

அது மறுபடி "நூலைப் போடு, நூலைப் போடு" என்று கூவிற்று.

"உன்னுடைய உண்மையான பெயரைச் சொன்னாலன்றி, நான் இந்த நூலைத் தரமாட்டேன்" என்றேன்.

"என் பெயர் இப்போது சொல்ல மாட்டேன், நீ முதலாவது நூலைக் கொடு. பிறகு சொல்லுகிறேன்" என்றது குழந்தை.

இதற்குள் வெல்ல வியாபாரி போய் விட்டான். செட்டிச்சிகளின் கூட்டமும் கலைந்து விட்டது. முத லியாரும் கிழவரும் எழுந்து வீட்டுக்குள்ளே போய் விட்டனர்.

தெருவில் சத்தத்தையே காணவில்லை. சாக்கடை யோரத்தில் ஓழுகான சேவல் நின்று கொண்டு அகண்ட லோகத்துக்கும் தானே ராஜா வென்ற பாவனையுடன் "கொக் கொக் கோழி" என்று கூவிற்று.

வானத்திலே மரக் கிளைகளினின்றும் குருவி களின் ஸங்கீதமும், காக்கைகளின் சுயக்குரலும் செவிப்பட்டன.

அக்குழந்தை என்னை நோக்கி மறுபடி:—"நூலைக் கொடுப்பாயா? மாட்டாயா? ஒரே வார்த்தை சொல்" என்றது.

"மாட்டேன்" என்றேன்.

அப்போது அக்குழந்தை என்னை மிகவுங் கோபத்துடன் நோக்கித் தரைமேல் எச்சிலுமிழ்ந்து விட்டுத் தன் வீட்டுக்குள்ளே சென்றது. சிறிது நேரத்துக்கெல்லாம் உள்ளேயிருந்து ஒரு மனிதனை அழைத்துக் கொண்டு வந்தது. அந்த மனிதனைப் பார்த்தால் ஒரு மகமதிய சுல்தானைப் போலிருந்தது. இடுப்பில் நிஜார். உடம்பின் மீது தழையத் தழைய ஒரு மஸ்லின் உடுப்பு. நெஞ்சு வரை தாடி தொங்குகிறது. ஜர்மனி தேசத்து கெய்ஸர் மாதிரி மீசை வைத்துக் கொண்டிருந்தான். பச்சைப் பட்டுத் துணியொன்றைத் தலையில் சுற்றிக் கொண்டிருந்தான்.

'குழந்தையைப் பார்த்தால் பிராமணக் குழந்தை போலிருக்கிறது. இவனைப் பார்த்தால் பச்சைப் பட்டாணித் துருக்கனைப் போலிருக்கிறது. இதென்னடா, ஆச்சர்யம்' என்று நான் சற்றே திகைப்பெய்தி நின்றேன். அப்போது அக் குழந்தை அவனிடம் என்னைச் சுட்டிக் காட்டி "இவர்தானப்பா, நூலை யெடுத்துக் கொண்டு தாமாட்டே னென்கிறார்" என்று சொல்லி அட்டஹாஸம் பண்ணிற்று. அதினின்றும் அக்குழந்தையின் பிதா, வந்த மனிதன் என்று தெரிந்து கொண்டேன்.

நூலைக் குழந்தையின் கையிலே கொடுத்து விட்டேன். அது நூலை வாங்கிக் கொண்டு மறுபடி மெத்தைக்கு ஏறிப் போய், வீதி யெதிரே நாற்காலியின் மீதிருந்து கொண்டு மீளவும் தையல் வேலை தொடங்கி விட்டது.

அந்த மனிதனுக்கு நான் என்னை அறிமுகமே, மகமதிய ரீதியில் ஸலாம் பண்ணினேன். அவனும் சுத்தமான அரபி பாஷையில் "ஆலெகும் ஸ்லாம்" என்றான். எனக்குக் கால்கள் ஸ்தம்பித்துப் போயின. கடைசி வரை இந்த ஆள் தூருக்கன் தானே என்ன இழவோ? அப்படியானால், தெளிந்த பாண்டித்தமிழ் பேசும் மேற்படி பிராமணக் குழந்தை இவனை 'அப்பா' என்று கூப்பிட நியாயமில்லையே, இதென்ன விபரீதம்! என்று யோசிக்கலானேன். இதனிடையே அந்த மனிதன் என்னை ஸம்பாஷணைக் கிழுத்தான்.

சிரித்துக் கொண்டே பேசுகிறான்:—"வாருங்கள்; வெற, வெற, வெற, வெற அந்தக் குழந்தையுடன் நாலுக் காகச் சண்டையா போட்டீர்கள்? இப்படி வாருங்கள். இந்தத் திண்ணையில் உட்காருங்கள். என்ன விசேஷம்? இங்கெதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்றான்.

அப்போது நான்:—"சரிதான். இந்த மனிதனுக்குப் போது போகவில்லை. நம்மை பேச்சுக் கிழுக்கிறான். நாம் எதிர்பார்க்கிற ஆளும் வரக்காணும். நமக்குப் போது போகவேண்டுமே? இவனையா? இவனுடனே கொஞ்சம் பேசுவோம். இவனுடைய விஷயத்தையும் தெரிந்து கொள்ளலாம்" என்றெண்ணி அந்த வீட்டுத் திண்ணை மேற் போய் உட்கார்ந்தேன். எதிர்த்த திண்ணையின் மேல் அவன் உட்கார்ந்து கொண்டான். எங்களுக்குள்ளே பேச்சாரம்பித்தது. "தங்களைப் பார்த்தால் இஸ்லாமானவர் மாதிரி இருக்கிறதே, என்ன விசேஷம்?" என்று கேட்டேன்.

அதற்கவன் நகைப்புடன் :—" இல்லை ; இல்லை ; நமக்கு மஹமதியருடைய ஸ்நஹம் அதிகம். அதனல் வேஷம் இப்படி யிருக்கிறது. நான் சரியான சுதேசிப் பிராமணன் " என்றான்.

இப்படி யிருக்கையில் அந்த வீட்டுக் குள்ளே இருந்து ஒரு ஸ்திரீ அங்கு வந்தாள். அவளைப் பார்த் தாலும் பெரும்பாலும் துருக்கச்சி போலே தானிருந் தது. தலையை மாத்திரம் மூடிக்கொள்ளவில்லை. நெற்றி யிலே ஒரு பச்சிலைப் பொட்டுக் குத்தி யிருந்தது. அவளைப் போல அழகு நான் பார்த்தறே கிடையாது. அவளை இத்தனை அற்புதமான ஸௌந்தர்யத்துடன் படைத்த பிரம தேவன் அவளுக்கு மூக்கு மாத்திரம் நிறைய வைக்க மறந்து போய் விட்டான். எனவே அவள் சினத்தி போலவும், துருக்கச்சி போலவும், நானு விதமாகப் புலப்பட்டாள். அவளைக் கண்டவுடன் அந்தப் பிராமண ஸஹா:—" மெத்தையில் நாற்காலிக ளெல்லாம் நேரே போட்டுவை ; இவரும் இங்கேதான் காபி சாப்பிடுவார். காபி யெல்லாம் தயாராய் விட்டதா ? " என்று கேட்டான்.

" தயாராய் விட்டது " என்றாள்.

" சரி மெத்தைக்கு வருகிறீர்களா ? " என்று அவன் என்னை அழைத்தான். நான் ஸம்மதப்பட்டேன். மூன்று பேரும் மெத்தைக்குப் போய்ச் சேர்ந்தோம். மெத்தையிலே நீண்ட மாடம், அங்கு நீண்டதொரு மேஜையின் மேல் பழங்கள், ரொட்டி, பிஸ்கோத்து, ஒரு பெரிய காப்பிச் செம்பு, நாலைந்து வெண்கலக் கிண்

ணங்கள்—இவை யெல்லாம் அடுக்கி வைத்திருந்தன. நான்கு நாற்காலிகள் போட்டிருந்தன. குழந்தையையுஞ் சேர்த்து நாங்கள் நால்வருமாக இருந்து பழங்கள் முதலியவற்றைத் தின்று காபி குடித்தோம்.

அப்போது நான் அந்த பிராமணனை நோக்கி:—இவ்வளவு நேரமாயும் நான் உங்கள் பெயரை விசாரிக்கவில்லை. தங்களுடைய நாமதேய மென்ன?" என்று கேட்டேன்.

அதற்கவன் என்னை நோக்கி:—"உங்கள் பெயரென்ன?" என்றான்.

"என் பெயர் குமாரதேவ முதலியார்" என்றேன்.

"தொழில் என்ன?" என்று கேட்டான்.

"பத்திரிகைகளுக்கு வியாளங்க ளெழுதுவது என்னுடைய தொழில்" என்றேன். "சரிதான்" என்று சொல்வி ஒரு சுருட்டை எடுத்து முனையைக் கிள்ளி வாயிலே வைத்துக் கொண்டான். என்னிடம் ஒரு சுருட்டை நீட்டினான். "நான் சுருட்டுப் பிடிக்கும் வழக்கமில்லை" என்று சொல்லி விட்டேன். அப்பால் தன் மனைவியை நோக்கி, அவன் "தீப் பெட்டி கொண்டுவா" என்றான். அவள் கீழே யிறங்கிப் போய் ஒரு தீப் பெட்டியும், இரண்டு சோடாப்பூச் சென்டும், ஒரு கட்டில் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, லவங்கம், ஏலக்காய், ஜாதிக்காய், ஜாதிப் பத்திரிகளும் கொண்டு வந்து மேஜையின் மீது வைத்தாள்.

அந்த பிராமண ஸாஹப் சுருட்டுப் பிடிக்கலானான். நான் தாம்பூலம் தரித்துக் கொண்டேன்.

பிறகு நான் மறுபடி அந்தப் பிராமணனை நோக்கி :—"உங்களுடைய நாமதேயத்தை இன்னும் தெரிவிக்கவில்லையே" என்றேன்.

அப்போதவன் :—"என் பெயர் கங்காதர சாஸ்திரி" என்றான்.

"இந்தக் குழந்தையின் பெயரென்ன?" என்று கேட்டேன்.

"நித்ய கல்யாணி" என்றான்.

பிறகு காலையில், அந்தக் குழந்தையிடம் நான் பெயர் சொல்லும்படி கேட்ட போது அது சொல்லாமாட்டே னென்று ஸாஹஸம் பண்ணியதை கங்காதர சாஸ்திரியிடம் எடுத்துரைத்தேன்.

அப்போது கங்காதர சாஸ்திரி அந்தக் குழந்தையின் கீர்த்தி பிரதாபங்களை யெல்லாம் என்னிடம் விஸ்தரித்துச் சொல்லத் தொடங்கினான். "காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பது பழமொழி. அப்படியிருக்க இந்தனை அழகும் முகத்தில் ஞானவொளியு முடைய அதன் பிரதாபுகழ்ச்சி புரிவது ஸகஜமே யாதலால், அவன் சொல்வதை யெல்லாம் நான் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தேன்.

கடைசியாக அவன் :—"மேலும் நம்முடைய நித்ய கல்யாணிக்கு ஸங்கீதத்தில் ஆச்சர்யமான ஞானம். கணக்கிலும் அப்படியே. இலக்கியத்திலும் அப்படியே. லௌகிக விஷயங்களிலும் இக்குழந்தைக்கு நல்ல ஞானமுண்டு. "சுதேசமித்திரன்" பத்திரிகையில் சண்டைத் தந்திகளை ஒன்று விடாமல் வாசித்துக்

கொண்டு வருகிறாள். பூ மண்டல விஷயங்களெல்லாம் நித்ய கல்யாணிக்குள்பஷ்டமாகத் தெரியும்" என்றான்.

இப்படி யிருக்கையில் வானத்தில் நான்கு புறங் களிலு மிருந்து மேகங்கள் வந்து சூழ்ந்து மழை பல மாகப் பெய்யத் தொடங்கிற்று.

அப்போது நான் காலையில், சிறிது நேரத்திற்கு முன்பு எதிர் முகவியாரும் கிழவரும் சண்டை விஷய மாகப் பேசியதை ஞாபகத்தில் கொண்டு அவர்க ளுடைய லௌகிக ஞானத்துக்கும் இக்குழந்தையின் ஞானத்துக்கு முள்ள தாரதம்யத்தைப் பரிசோதனை செய்வோம். மழையோ பலமாகப் பெய்கிறது. நாம் எதிர்பார்த்த மனிதன் இன்று வரமாட்டான். அந்தக் காரியத்தை நாளைக் கவனித்துக் கொள்ளலா மென்று யோசனை பண்ணி, அக்குழந்தையை நோக்கி, "பேபில் லாப் பூச்சி, இந்த யுத்தம் என்ன நோக்கங்களுடன் நடக்கிறது? சொல், பார்ப்போம்" என்றேன்.

"பூமிபாரங் குறைவதற்காக நடக்கிறது" என்றது.

"ஹ¨ம். அதைக் கேட்கவில்லை யம்மா. ஜெர் மனியக் கக்ஷியார் என்ன நோக்கங்களுடன் போர் செய்கிறார்கள்? நம்முடைய நேசக் கக்ஷியார் என்ன கருத்துக்களுடன் யுத்தம் நடத்துகிறார்கள்?" என்று கேட்டேன்.

"நேசக் கக்ஷியாரை ஜயிக்க வேண்டு மென்ற கருத்துடன் ஜெர்மனி யுத்தம் நடத்துகிறது. ஜெர் மனியை ஜயிக்க வேண்டு மென்கிற எண்ணத்துடன் நேசக் கக்ஷியார் யுத்தம் பண்ணுகிறார்கள்" என்று குழந்தை சொல்லிற்று.

"இது பொதுப்படையான வார்த்தை யன்றோ குழந்தாய்? இரு திறத்தாரின் யுத்த லக்ஷ்யங்கள் எவை?" என்று கேட்டேன்.

"பரஸ்பரம் வெற்றிபெற வேண்டு மென்பதே லக்ஷ்யம்" என்று அக் குழந்தை மீட்டும் சொல்லிற்று.

"அமெரிக்காவின் ஜனாதிபதியாகிய வில்ஸன் பண்டித நேசக் கக்ஷியாரின் யுத்த லக்ஷ்யங்களைப்பற்றி என்ன சொல்லுகிறார்?" என்று கேட்டேன்.

"லார்ட் கர்ஸன் என்ன சொல்லுகிறார்?" என்று அக்குழந்தை என்னிடம் கேட்டது. அப்போது அக் குழந்தையின் தாய் புல்லாங்குழலைப் போன்ற குரலில் "பச்சைக் குழந்தையிடம் தொளைத்துத் தொளைத்துக் கேள்விகள் கேட்டால் அதற்கென்ன தெரியும்? அதன் பிதா அதை மிதமிஞ்சிப் புகழ்ந்து பேசினார். அதை நம்பாதேயுங்கள். நித்ய கல்யாணி, நீ போய் பாடம் வாசி" என்றாள். குழந்தை புன்னகையுடன் குதித் தெழுந்து பாடம் படிக்கப் போய்விட்டது. இதற்குள் மழையும் நின்று விட்டது. நான் பின்னுமொரு முறை வெற்றிலை போட்டுக் கொண்டேன். அப்பால் மேற்படி கங்காதர சாஸ்திரியிடமும், அவர் மனைவியிடமும் விடை பெற்றுக்கொண்டு, வீடு வந்து சேர்ந்தேன். மேற்படி குழந்தையின் விஷயமாக அதன் தாய் சொல்லிய வார்த்தை மெய்யில்லை யென்றும், நான் சொல்லியதே சரி யென்றும், என் மனம் உறுதியாய்க் கருதலாயிற்று. எனினும் ஜனாதிபதி வில்ஸனைக் காட்டிலும் லார்ட் கர்ஸன் விஷயத்தில் அக்குழந்தைக்கு

அதிக மதிப் பேற்பட்டிருப்பதை எண்ணி மிடத்தே எனக்கு வியப்புண்டாகிறது.

உஜ்ஜயிநீ.

"கண்ணே, நாம் சக்தி கர்மத்தைக் கைக்கொண் டோம். நமக்கு நீ சக்தி. நீ இறந்தால் நான் உடன் கட்டை ஏறுவேன்" என்று விக்கிரமாதித்த ராஜன் தன்னுடைய ப்ரியதனமாகிய ஸ்ரீமுகியினிடம் சொன் னன். அப்போது அவள் "உஜ்ஜயிநீ புரத்து மாகாளி அருளாலே உனக்கு ஆயிரம் வயதுண்டு. அப்படி ஆயி ரத்தில் ஒன்று குறைய நானும் இருப்பேன்" என்றாள்.

"எனக்கு வயது கொளாயிரத்துத் தொண் ணூற்றொன்பது தான் போலும்!" என்று விக் ரமாதித்தன் பெருமூச்சு விட்டான். அப்பொழுது ஸ்ரீமுகி சொல்லுகிறாள் :—

"காந்தா, நீ எனது குமாரன். என் சொற்படி கேள். கர்மம் பெண்ணால் ஏற்படுத்தப் பட்டது. விர தம், தவம், பூஜை, ஆஹாரம், வீடு, பள்ளிக்கூடம் அனைத்தும் ஏற்படுத்திக் கொடுத்தது பெண். கர்மம் பெண்ணால் உண்டானது. பெண் தாய். பெண்ணைத் தன்னில் பாதி யென்று கருதாமல், தனக்கு அது பகுதிப்பட்டிருக்கவும் வேண்டும், ஆதலால் தான் அதைத் தன் பகுதியாகத் தாரை, நேசிக்கவும் மாட்டேன் என்று ஆண் நெடுங்காலமாகச் சொல்லி வருகிறது. அதற்காகப் பெண் பழி வாங்குகிறது. ஆணைப் பழி வாங்கி அந்தத் துயரத்தில் தானும் மடிகிறது.

"சிவன் பாதி, சக்தி பாதி போலச் சரி பாதியாக எப்போது ஆண் பெண்ணை ஒப்புக்கொள்ளுகிறதோ, அப்போது ஆணுக்குப் பெரிய வலிமை சித்திக் கிறது. கலியுக முடிவில் இது முற்றிலும் பரிபூரண மாக நிகழும்" என்றாள்.

"அப்போது நமது மஹாகாளி தேவிக்கு நாம மென்ன?" என்று விக்ரமாதித்தன் கேட்டான்.

அப்போது பூரீமுகி சொல்லுகிறாள்:—

"அப்போது மஹாகாளி தேவிக்கு நித்ய கல் யாணீ உஜ்ஜயிநீ என்று பெயர்."

"இதற்கு யாரெல்லாம் ஸாக்ஷி?" என்று விக்ர மாதித்தன் கேட்டான்.

"இதற்குத் தேவர் ஸாக்ஷி; பஞ்ச பூதங்கள் ஸாக்ஷி; மனுஷ்ய, ம்ருக, பக்ஷி, கீடாதி ஜந்து கணங்கள் ஸாக்ஷி; இதற்கு அந்த மஹாகாளியே ஸாக்ஷி" என்று பூரீமுகி சொன்னாள். "சரி" என்று சொல்லி விக்ரமாதித்தன் இருந்து விட்டான். மறுநாள் காலை யில் இருவரும் ஆலயத்துக்குச் சென்றனர். அங்கே தேவியின் முடிமீது நித்ய கல்யாணீ உஜ்ஜயிநீ என்று வயிர எழுத்துக்களால் எழுதியிருந்தது. அதனைக் கண்டு இருவரும் தொழுது மகிழ்ச்சி யுற்றனர். மற்றை நாள் விக்ரமாதித்தன் தனது அரண்மனையில் ஒரு பொற் றாண் நாட்டி அதில்:—"பெண்ணைப் பேணுவோர் கண் ணைப் பேணுவார். பெண்ணுக்குக் கண் உண்டு. பெண் தாய். வந்தே மாதரம்" என்று எழுதி வைத்தான். மேற்படி கதை சாக்த சாத்திரத்திலே கூறப்பட்டது. அதை லோகோபகாரமாக வெளிப்படுத்துகிறேன்.

மிளகாயப் பழச் சாமியார்.

வேதபுரத்துக்கு வடக்கே முக்குப்பேட்டையில் பெரும்பாலும் தெலுங்க நெசவுத் தொழிலாளரும், தமிழக் கைக்கோளரும் வாஸம் செய்கிறார்கள். அந்த ஊரில் நெசவுத்தொழிலே பிரதானம். "லங்கிகள்" என்றும் "கைலிகள்" என்றும் சொல்லப்படும் மகமதியருக்கு அவசியமான கெட்டி சாயத்துணிகள் இங்கு மிகுதியாக நெய்யப்பட்டு, சிங்கப்பூர், பினங்கு முதலிய வெளித் தீவாந்தரங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந்த நெசவுத்தொழிலாளர் அத்தனை பேரும் அங்காளியம்மனுடைய அவதாரமென்பதாக ஒரு ஸ்திரீயை வணங்குகிறார்கள். அந்த ஸ்திரீ சுமார் நாற்பத்தைந்து வயதுடையவள். சரீரத்தில் நல்ல பலமும், வீரதீர பராக்ரமங்களும் உடையவள். இவளுடைய புருஷன் இறந்து போய் இருபத்தைந்து வருஷங்களாயின.

இவள் காவி வஸ்திரமும் சடை முடியும் தரிக்கிறாள். இவளுடைய முகம் முதிர்ந்த, பெரிய, வலிய, உறுதியான ஆண் முகம்போல இருக்கிறது. அத்துடன் பெண்மையும் கலந்திருக்கிறது. இவளுடைய கண்கள் பெரிய மான் விழிகளைப் போல இருக்கின்றன.

இவள் ஒரு சுப்பிரமணிய சுவாமி கோயில் கட்டிக் கொண்டிருக்கிறாள். கோயில் கட்டிடம் பெரும் பாலும் முடிந்து போய் விட்டது. இன்னும் சிகரம் மாத்திரம்தான் வைக்கவில்லை.

இவள் தன் வீட்டுக்குள் ஒரு வேல் வைத்துப் பூஜை பண்ணுகிறாள். அதன் பக்கத்தில் இரவும் பகலும் அணியாத வாடா விளக்கு எரிகிறது.

கோயிலும் இவள் வீட்டுக்கு ஸமீபத்திலே தான் கட்டியாகிறது. இவளுடைய வீடு வேதபுரத்துக்கும் முத்துப்பேட்டைக்கும் இடையே ரஸ்தாவின் நடுமத்தியில் சுமை தாங்கிக்கு ஸமீபத்தில் இருக்கிறது.

திருக்கார்த்திகை யன்று, பிரதி வருஷமும் அடியார்கள் சேர்ந்து இவளுக்கு மிளகாய்ப் பழத்தை அரைத்து உடம்பெல்லாம் தேய்த்து ஸ்நானம் செய்விக்கிறார்கள். அதனாலே தான் இவளுக்கு "மிளகாய்ப் பழச் சாமியார்" என்ற நாமம் ஏற்பட்டது.

நான் இந்த மிளகாய்ப்பழச் சாமியாருடைய கோயிலுக்குப் பல முறை போய் வேலைக் கும்பிட்டிருக்கிறேன். இன்று காலை இந்த ஸ்திரீ என்னைப் பார்க்கும் பொருட்டு வந்தாள். வந்து கும்பிட்டாள்.

"எதன் பொருட்டுக் கும்பிடுகிறீர்?" என்று கேட்டேன்.

"எனக்குத் தங்களால் ஒரு உதவியாக வேண்டும்" என்றாள்.

"என்ன உதவி?" என்று கேட்டேன்.

"பெரிய விடுதலை முயற்சியில் எனக்குத் தங்களால் இயன்ற ஸகாயம் செய்ய வேண்டும்" என்றாள்.

"செய்கிறேன்" என்று வாக்குக் கொடுத்தேன்.

அப்போது அந்த மிளகாய்ப்பழச் சாமியார் பின் வருமாறு உபந்யாஸம் புரிந்தாள்:—

" ஹா, ஹா, பொறுத்துப் பொறுத்துப் பொறுத்துப் போதுமடா, போதுமடா, போதும்!

உலகத்திலே நியாயக் காலம் திரும்புவதாம்.

ரூஷியாவிலே கொடுங்கோல் சிதறிப் போய் விட்டதாம்.

ஐரோப்பாவிலே ஏழைகளுக்கும் பெல்களுக்கும் நியாயம் வேண்டுமென்று கத்துகிறார்களார்.

உலக முழுமைக்கும் நான் சொல்லுகிறேன்.

ஆண் பெண்ணுக்கு நடத்தும் அநியாயம் சொல்லுக் கடங்காது. அதை எட்டில் எழுதியவர் இல்லை. அதை மன்றிலே பேசியவர் யாரு மில்லை.

பறையனுக்குப் பார்ப்பானும், கறுப்பு மனுஷனுக்கு வெள்ளை மனுஷனும் நியாயம் செய்யவேண்டும் என்று சொல்லுகிறீர்கள்.

பெண்ணுக்கு ஆண் நியாயம் செய்வது அதை யெல்லாம் விட முக்கியமென்று நான் சொல்லுகிறேன்.

எவனும் தனது சொந்த ஸ்திரீயை அலக்ஷியம் பண்ணுகிறான். தெருவிலே வண்டி கள்ளி நாலணை கொண்டு வருவது மேல் தொழில் என்றும், அந்த நாலணையைக் கொண்டு நாலு வயிற்றை நிரப்பி வீடு காப்பது காழ்ந்த தொழிலென்றும் நினைக்கிறான். பெண் கள் உண்மையாக உழைத்து ஜீவிக்கிறார்கள். ஆண் மக்கள் பிழைப்புக்காகச் செய்யும் தொழில்களில் பெரும்பாலும் பொய், சூது, களவு, ஏமாற்று, வெளி மயக்கு, வீண் சத்தம், படாடோபம், துரோகம், கொலை, யுத்தம்!

இந்தத் தொழில்கள் உயர்வென்றும், சோறுக்குத் துணி தேய்த்துக் கோயில் செய்து கும்பிட்டு வீடு பெருக்கிக் குழந்தைகளைக் காப்பாற்றும் தொழில் தாழ்வென்றும் ஆண் மக்கள் நினைக்கிறார்கள்.

வியபிசாரிக்குத் தண்டனை இறைலோக நரகம்.

ஆண் மக்கள் வியபிசாரம் பண்ணுவதற்கு சரியான தண்டனையைக் காணோம்.

பாஸ்திரீகளை இச்சிக்கும் புருஷர்களின் தொகைக்கு எல்லை யில்லையென்று நான் சற்றே மறைவிடமாகச் சொல்லுகிறேன். ஆனால் அவர்கள் பத்தினிகளை நேரே அவர்கள் நோக்க யோக்யதை யில்லாமல் இருக்கிறார்கள்.

பூமண்டலத்தின் தக்கம் ஆரம்பமாகிறது. ஆணும் பெண்ணும் ஸமானம். பெண் சக்தி. ஆண் பெண்ணுக்கு ஆண் தலை குனிய வேண்டும். பெண்ணை ஆண் அடித்து நசுக்கக்கூடாது. இந்த நியாயத்தை உலகத்தில் நிறுத்துவதற்கு நீங்கள் உதவி செய்யவேண்டும். உங்களுக்குப் பராசக்தி நீண்ட ஆயுளும் இஷ்ட காம்ய சித்திகளும் தருவாள்" என்று அந்த பிளகாய்ப் பழச் சாமியார் சொன்னாள். சரி என்று சொல்லி நான் அந்த தேவிக்கு வந்தனம் செய்தேன். அவள் விடை பெற்றுக்கொண்டு சென்றாள்.

பேய்க் கூட்டம்

I

மூன்று நாள் இரவு பன்னிரண்டு மணிக்கு, நான் எந்தக் காரணத்தாலோ தூக்கம் வராமல் பாயிலே

படுத்துக்கொண்டிருந்தேன். தூக்கம் வராது போலுள் ளுருவினை நினைத்துக்கொண்டு அது சல சலவென்று விழும் ஓசையிலே மானஸிகமாகச் செவியைச் செலுத்தித் கொண்டிருந்தால் சிறிது நேரத்திற்குள் தூக்கம் வந்துவிடுமென்று நான் குழந்தையா யிருந்தபோது ஒரு புஸ்தகத்தில் படித்திருந்தேன். அந்தப்படி ஒரு வியை நினைத்தால் பாதி இரவில் அந்த ஞாபகத்திலிருந்து குளிர் அதிகப்படுகிறதே யொழியத் தூக்கம் வருகிற பாட்டைக் காணோம்.

என்ன காரணம்? குளிர்தான் காரணமென் றெண்ணி, நான்கு சாளரங்களையும் சாத்தினேன். பிறகு காற்றேறுட்டமில்லாத அறையில் படுத்திருக்கக் கூடாதென்று வெள்ளைக்கார சுகாதார சாஸ்திரமும்— சற்றேறறக் குறைய—அனுபவமும் சொல்லுவதால், ஒரு ஜன்னலைத் திறந்தேன்.

வாசற்பக்கத்தில், என் அறைக்கு நேரே, "காந்த விளக்கு" (எலெக்ட்ரிக் விளக்கு). அதை மின்னல் விளக்கென்று சொல்வது நியாயம். ஆனால் ஜனங்கள் அதைக் காந்த விளக்கென்று சொல்லுகிறார்கள். ஊரோ டொக்க ஓடு என்று தர்ம புத்திரர் சொல்லியது போலே நானும் ஜன வழக்கத்தைப் பரிகாசக்கொண்டு அதைக் காந்த விளக்கு என்றே சொல்லுகிறேன். மேலும் காந்தம் என்ற சொல் அழகாக விருக்கிறது. காந்தி, காந்தன், காந்தை என்ற ப்ரயோகங்கள் அதிலே நினைவுக்கு வருகின்றன. வாசலில் காந்த விளக்குப் போட்டிருக்கிறது. அதைச் சுற்றி வினை

யாடும் பூச்சிக்கூட்டங்கள் என் அறைக்குள்ளே பிர வேசித்து விடுகின்றன. அறைக்குள் விளக்கை அவித் துப் போடுவோமா என்று யோசித்தாலோ, தூக்கமும் வராமல் இருளில் கிடப்பது மிகவும் சிரமம். என் மனம் பல பல விஷயங்களை யோசித்துக் கொண்டிருந் தது. கண்ணை மூடினால் எனக்கு ருஷியாவின் நிலைமை ஞாபகம் வந்து கொண்டிருந்தது. அதற்குக் காரண மென்ன தெரியுமா?

ஒரு மனுஷ்யன் காலையில் கண்ணை விழிக்கும் போது :—விழித்தவுடனே, அவன் வேறெந்த வஸ்து வையும் பார்க்கு முன்னே, அவன் முன் ஒரு குரங்கைக்கொண்டு நிறுத்தினால், அன்று முழுவதும் அவன் அந்தக் குரங்கை மறப்பது மிகவும் சிரமம். அது போலவே மூன்றும் நாள் காலையில் நான் கண்ணை விழிக்குமுன்பாகவே என் பத்தினி "சுதேச மித்திரன்" பத்திரிகையைத் தலையணைக் கருகே கொண்டு போட்டிருந்தாள். திறந்து பார்த்தேன்— முதலாவது என் கண்ணில் "ருஷியாவில் உள் நாட்டுக் கலகம்; சச்சரவு அதிகரிக்கின்றது—" என்ற பகுதி தென்பட்டது. இதென்னடா விசேஷம் என்று வாசித் துப் பார்த்தேன். இரவில் தூக்கமில்லாது படுத்துக் கொண்டிருக்கும் போது காலையில் படித்த விஷயங்க ளெல்லாம் மற்றொரு முறை மனவீதியிலே உலாவி வர லாயின. மாஸ்கோ நகரத்தில் கலகம்—ஸ்திரீகளும் குழந்தைகளும் உட்பட்ட இருநூறு பேர் கொலை யுண் டனர்.....துப்பாக்கிப் பிரயோகங்கள் அமிதவாதி

களும், மிதவாதிகளும் பரஸ்பரம் செய்துகொண்டனர். ஒடெஸ்ஸா நகரத்தில் செல்வரிடமிருந்து பொருளையெல்லாம் பிடுங்கி ஏழை ஜனங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொடுக்க ஒரு கமிட்டி! முதலிய பல செய்திகள். ருஷியா விஷயம் எக்கேடு கெட்டால் எனக்கென்ன என்று தூங்க முயற்சி செய்தால் மனம் இணங்கவில்லை தூக்கம் வரப்போகிற—அல்லது வராமல் இருக்கிற—பாதி யிரவு நேரத்தில் மனம் புத்தி சொன்னபடி கேட்கவே கேட்காது. எப்போதும் மனதைக் கட்டியாள்வது சிரமம். படுக்கையிலே படுத்துக்கொண்டு மனதைக் கட்ட விசுவாமித்திராலே கூட முடியாது. பிறகு எனக்கு ருஷியாக் குடியரசின் தலைவனாகிய லெனின் என்பவனுடைய ஞாபகம் வந்தது. உதட்டுக்கு ஒரு பக்கம் இடி, மத்தளத்துக்கு இரண்டு பக்கம் இடி. லெனினுக்கு லக்ஷம் பக்கத்திலே!

கள்ளடா! லெனினு மாயிற்று; வெங்காயமும் மாயிற்று. தூங்குவோம் என்று நினைத்தால் கொசு வந்து காதில் "நொய்" என்று ரீங்காரம் பண்ணுகிறது.

சரி. தூக்கம் வருமென்று நினைக்க வேறதுவில்லை; எழுந்து உட்கார்ந்து ஏதேனும் புஸ்தகம் வாசிப்போமென்று மேஜை மீது வைத்திருந்த விளக்கைப் பொருத்தி எதிரே நாற்காலியில் உட்கார்ந்து மேஜையின் மீது முதலாவது கண்ணுக்குப் புலப்பட்ட புஸ்தகத்தைக் கையிலே எடுத்தேன். அது ஸ்காந்த புராணம். அதிலே நல்ல கட்டம் கண்ணுக்குப் புலப்பட்டது. தினைப் புனத்தில் வள்ளி யம்மையை சுப்பிரமணிய

ஸ்வாமி பல விதங்களில் கெஞ்சியும் பயமுறுத்தியும் பெண்டாகச் செய்து கொண்டார்.

பிறகு புராணம் சொல்லுகிறது :—கேளீர் முனிவர்களே ; அந்த வள்ளியம்மை யானவள் திரும்பித் தனது பரணுக்கு வந்து சேர்ந்தாள். தினைப்புனத்தை அங்கே. காத்துக்கொண்டிருந்த ஸகியானவள் வள்ளியை நோக்கி, " ஏனம்மா, வள்ளி, இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தாய் ? " என்று கேட்டாள்.

" குளத்துக்குப் போய் நீராடி வந்தேன் " என்று வள்ளியம்மை சொன்னாள்.

" நெடுநேரம் குளத்திலே இருந்தாயா ? ஸ்நானத்துக்குச் சென்றால் இத்தனை காலம் ஆகிய தும்காரணமென்ன ?" என்று தோழி தொளைத்துத் தொளைத்துக் கேட்கலானாள். அப்போது வள்ளியம்மை சின்னங் கொண்டு:—" ஏதடி பாங்கி ? நீ என்மேல் பழி சுமத்தப் பார்க்கிறாயா ?" என்றாள்.

அப்போது பாங்கி கண்ணைப் பரக்க விழித்து, " நான் ஒன்றும் சொல்லவில்லையே, தெய்வமே, நீ தானே பழி யென்ற சொல்லை எடுத்தாய் !" என்று கூறிக் கலகலவென்று நகைத்தாள்.

வள்ளியம்மை கண்ணிலே நீர்த்துளிகள் பிறந்தன. முருகக் கடவுள் அந்தச் சமயத்தில் வில்லையும், அம்பு களையும் சுமந்து கொண்டு மறுபடி வேட வேஷந் தரித்துக்கொண்டு அவ்விரு பெண்களின் முன்னே வந்து நின்று :—" ஏ பெண்களா ! என்னம்புகளால் உடம் பெல்லாம் அடிபட்டோடிய மிக உன்னதமான பெரிய

ஸ்வாமி பல விதங்களில் கெஞ்சியும் பயமுறுத்தியும் பெண்டாகச் செய்து கொண்டார்.

பிறகு புராணம் சொல்லுகிறது :—கேளீர் முனிவர்களே ; அந்த வள்ளியம்மை யானவள் திரும்பித் தனது பரணுக்கு வந்து சேர்ந்தாள். தினைப்புனத்தை அங்கே. காத்துக்கொண்டிருந்த ஸகியானவள் வள்ளியை நோக்கி, " எனம்மா, வள்ளி, இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தாய் ? " என்று கேட்டாள்.

" குளத்துக்குப் போய் நீராடி வந்தேன் " என்று வள்ளியம்மை சொன்னாள்.

" நெடுநேரம் குளத்திலே இருந்தாயா ? ஸ்நானத்துக்குச் சென்றால் இத்தனை காலம் ஆகிய தும்தான் மென்ன ?" என்று தோழி தொளைத்துத் தொளைத்துக் கேட்கலானாள். அப்போது வள்ளியம்மை சின்னங் கொண்டு:—" எதடி பாங்கி ? நீ என்மேல் பழி சுமத்தப் பார்க்கிறாயா ?" என்றாள்.

அப்போது பாங்கி கண்ணைப் பரக்க விழித்து, " நான் ஒன்றும் சொல்லவில்லையே, தெய்வமே, நீ தானே பழி யென்ற சொல்லை எடுத்தாய் !" என்று கூறிக் கலகலவென்று நகைத்தாள்.

வள்ளியம்மை கண்ணிலே நீர்த்துளிகள் பிறந்தன. முருகக் கடவுள் அந்தச் சமயத்தில் வில்லையும், அம்பு களையும் சுமந்து கொண்டு மறுபடி வேட வேஷந் தரித்துக்கொண்டு அவ்விரு பெண்களின் முன்னே வந்து நின்று :—" ஏ பெண்களா ! என்னம்புகளால் உடம் பெல்லாம் அடிபட்டோடிய மிக உன்னதமான பெரிய

"வேணு மூதலியா! இந்த நேரத்தில்—பேய்களெல்லாம் ஸந்த்யா வந்தனம் பண்ணப் புறப்படுகிற சமயத்தில்—வந்து கதவைத் தட்டுகிறாயே! உனக்குப் பயித்தியமா?" என்று கேட்டேன். அப்போது வேணு மூதலி சொல்லுகிறான்:—"நான் மாத்திரமில்லை. ஐயரே, நானும் என்னுடன் நான்கு பேரும் இருக்கிறோம். எங்கள் அத்தனை பேருக்கும் பயித்தியம்—நீர் மாத்திரம் புத்திசாலியா? கதவை கீழே வந்து திறவும். ஏதோ முக்கியமான காரியம் இருக்கக் கண்டு தான் வந்து கதவைத் தட்டுகிறோம். இல்லா விட்டால் வருவோமா?" என்றான்.

"காரியத்தைச் சொல்" என்றேன். அப்போது வேணு மூதலி:—"இங்கிருந்து சொல்ல முடியாது. நீர் தயவு செய்து இறங்கி வாரும்" என்றான். சரி, காலைச் சுற்றின பாம்பு கடித்தால் ஒழியத் தீராது. விதியைத் தள்ளினாலும் தள்ளலாம், வேணு மூதலியை விலக்க நம்மால் முடியாது. தவிரவும் நமக்கும் தூக்கம் வரவில்லை. இவன் ஏதோ செய்தி கொணர்ந்திருப்பான். அதைக் கேட்கும்போது, போது போக்க இடமுண்டாகும்" என்று யோசனைப் பண்ணிக் கீழே இறங்கிப் போய்க் கதவைத் திறந்தேன். பளிச்சென்று என் கண்களில் எவனோ துணியை வரிந்து கட்டினான். ஒருவன் என் வாய்க் குள்ளே துணியைச் செலுத்தினான். ஒருவன் கையைக் கட்டினான், மற்றொருவன் காலைக் கட்டினான். கண் மூடித் திறக்கு முன்னே என்னைக் குண்டு கட்டாகக் கட்டி ஒரு குதிரை வண்டிக்குள் தன் வசமின்றிப் போட்டார்கள். குதிரை வண்டி

வாயு வேகமாகப் பறக்கிறது. வண்டி ஓடும் போதே என் மனதில் யோசிக்க லானேன்.

"ஐயோ! என்ன செய்வோம்! வேறு முகவியின் குரலைப் போல் தானே யிருந்தது. அவன் நமக்குத் தீங்கு செய்ய மாட்டானே! இப்போ தெரன்றும் தெரியவில்லையே! கண்களை அடைத்து விட்டார்களே! வாய் பேச வழியில்லையே! நான் அனையவொட்டாமல் நெஞ்சில் அழுத்திக்கொண்டிருக்கிற பாதகன் யாரென் பதும் தெரியவில்லையே! என்ன செய்வோம்! நம்மை எங்கே கொண்டு போகிறார்கள்!—தெய்வமே, நம்மை இவர்கள் கொன்று போடுவார்களோ? என்னவோ தெரியவில்லையே! போனால் போகிறது போ—செத்தால் செத்துப் போவோமே! நாம் செத்தால் காடெல் லாம் எலும்பாய் விடுமே? போனால் போகிறது. மனமே, சும்மா இரு. அடடா! நாம் செத்தால் இந்தக் குழந்தைகளும் பெண்டாட்டியும் எப்படி ஜீவிக்கும்? அடபோ! அதெல்லாம் வீண் கதை! எல்லா உயிர் களையும் தெய்வந்தானே காப்பாற்றுகிறது. நாம் செத்தாலே இந்தக் குழந்தைகளுக்கு யாதொரு பிரமாதமும் நேரிட்டு விடாது. ஒரு மாஸம் அழும். அப்பால் அப்பா இருந்தார், மொத்தத்திலே நல்லவர் என்று கதை சொல்லிக் கொண்டு சௌக்கியமாகவே இருக்கும். நம்முடைய பிதா செத்துப் போனாரே, நாம் உடன் கட்டை ஏறினோமா? மேலும் இவர்கள் நம்மைக் கொல்லுவார்க ளென்பது தான் நிச்சயமா? எங்கேனும் கொண்டுபோய் அனடத்து வைத்திருப்பார்

கேளா, என்னவோ? ஐயோ! அடைத்து வைத்தால் என்ன செய்வோம்? விடு போடா! செய்வ தென்ன? சும்மா விருப்போம். நல்லது தானே! சோறு அவன் போடுவான். நமது பாடு மஜா. பாட்டுப் பாடிக் கொண்டு யாதொரு வேலையுஞ் செய்யாமல் வீணாக இருக்கலாம். சித்திரவதை பண்ணுவார்களோ, என்னவோ! எனடா, நம்மை அப்படிச் செய்கிறான்? நம்மை யாரும் ஒன்றுமே செய்ய மாட்டார்கள். நாம் எவனுக்காவது தீங்கு நினைத்தாலன்றோ, நமக்கொரு வன் தீங்கு நினைப்பான். நாம் சும்மா இருக்கும்போது நமக்கேன் பிறர் தீங்கு செய்கின்றார்கள்? அது கடக் காது. நம்மை அநியாயமாக ஹிம்ஸிக்க மாட்டார் கள்.....பின் எதற்காகத்தான் கொண்டு போகி றார்கள்? அதிலும் இப்படி அப்ராக்ருதமான அவஸ் தைக் குட்படுத்தி நம்மைக் கொண்டு போவார் ஹிம் ஸைக் கில்லாமல் பூரீமந்த கலியாணத்துக்கா இப்படி அழைத்துக் கொண்டு போவார்கள்?" என்று பலவித மாக எண்ணினேன். அப்போது திடீரென்று வண்டி நின்றது.

பேய்க் கூட்டம்

II

[பூர்வ கதை:—பாதி யிரவில் என் வீட்டுக் கதவை யாரோ இடி இடியென் றிடிக்க நான் யாரென்று கேட்க, வேணு முதலியும் சில நண்பர்களும் என்று எதிருக்காரம்வர, நான் கீழே போய்க் கதவைத் திறக்க, அப்போது அங்கு வந்திருந்தோரை நான் பார்க்கு

முன்னுகவே, அவர்கள் பனிச்சென்று என் கண்ணைக் கட்டிக் குதிரை வண்டியில் போட்டுக்கொண்டு செல்ல, நெடுந்தூரம் போன பின்பு குதிரை வண்டி சடே ரென்று நின்றது.]

மேலே கதை சொல்லுகிறேன். ஆச்சர்யமான கதை. ஜாக்ரதையுடன் கேளுங்கள்.

என்னை ஒருவன் வந்து பந்தைத் தூக்குவதுபோலே கையில் தூக்கிக்கொண்டான். தெய்வகிருபையால் அவர்கள் என் செவியைக் கட்டவில்லை. சத்தங்கள் செவிப்பட்டன. குதிரையை வண்டியிலிருந்து அவிழ்த்து ஸமீபத்தில் கொண்டு கட்டினார்கள் என்று சில ஒலிக் குறிப்புகளாலே தெரிந்து கொண்டேன். என்னைத் தூக்கிக் கொண்டு போய்க் கண்ணை அவிழ்க்கபோது பார்க்கிறேன், சுமார், நூறு தீவட்டிகள் கைக்கொண்டு சுமார் நூறு கன்னிப் பெண்கள் வரிசையாக நிற்கிறார்கள். எதிரே ஒரு பொன்னுஸனம் போட்டிருந்தது. அதன்மேலே கந்தை யுடுத்துக் கருந்துணி போர்த்துக் கலை மொட்டையாய், முகம் நரைத்தும், புகையிலைச் சுருட்டுப் பிடித்துக்கொண்டு ஒரு பரதேசி உட்கார்ந்திருந்தார். அவரைச் சுற்றி அநேகம் சாமியார்கள் நிற்கிறார்கள். கையை உயரத் தூக்கி அப்படியே பல வருஷம் வைத்துக் கொண்டிருந்த படியால், கை மரம் போல் அசைக்க முடியாமல் போன ஸந்நியாசிகளும் காவி யுடுத்தவர்களும், கந்தை தரித்தவரும், சடை நீட்டினவரும், மொட்டை யடித்தவரும், நிர்வாண ரூபமாக நிற்போரும் இங்ஙனம் பல பல வகைகளில் சுமார்

மூப்பது சந்நியாஸிகள் இருந்தார்கள். வேஷ முதலி யைக் காணவில்லை. என்னை இவர்களிலே சிலர் தான் தூக்கிக் கொண்டு வந்திருக்க வேண்டு மென ஊஹித் துக் கொண்டேன். அங்ஙனம் கொண்டு வந்தோரில் ஒருவன் வேஷ முதலி போலே பொய்க்குரல் காட்டி என்னை வஞ்சனை செய்து விட்டா னென்பதையும் உணர்ந்து கொண்டேன்.

ஆதலால், மிகுந்த கோபத்துடன் நான் பொன்ன னைத்தில் வீற்றிருந்த பண்டாரத்தை நோக்கி :— "யாரடா நீ! என்னை என் இந்த நின் வேஷகர் மூல மாக இங்கு கொணர்வித்தாய்?" என்று கேட்டேன். அப்போது அந்த ஸந்யாஸி "பாரடா!" என்று சொல்லித் திரும்பி வடதிசையைக் காட்டினான். அவன் கிழக்கைப் பார்க்க உட்கார்ந்திருந்தான். அந்த ராத் திரியில் உனக்குத் திசை எப்படித் தெரிந்த தென்று கேட்பீர்களே? அந்தப் பண்டாரந் சொன்னான் :— "வட திசையைப் பார், அங்கே எரிகின்ற நக்ஷத்ரங்களைக் கண்டாயா?" என்றான். அங்கு பார்த்தேன். மூப் பது நாற்பது பிணங்கள் வரிசையாக அடுக்கி எரிந் துகொண்டிருந்தன. பாதி ராத்திரியில் அந்தப் படாரங் களின் கூட்டத்தைப் பார்க்கும் போதே எனக்குப் பயமாக இருந்தது. அந்த இரவிலே இந்த மூப்பது நாற்பது பிணங்கள் எரிவதையும் சேர்த்துக் காட்டின போது நான் பயந்து நடுங்கிப் போனேன். அந்தப் பண்டாரம் கொல் லென்று சிரித்தான்.

உடனே அந்த நூறு தீவட்டிகள் கொண்டிருந்த

நூறு கன்னிப் பெண்களும் பாடத் தொடங்கினர்கள். தேவகானம் அமிர்த வருஷம். இன்னிசைக் கடல். இன்பக் காட்டுத் தீ—அந்த மாதிரிப் பாட்டு நான் கேட்டதே கிடையாது. அவர்கள் பாடிய பாட்டு திருவாசகம்.

நெறியல்லா நெறிதன்னை
நெறியாக நினை வேனைச்
சிறு நெறிகள் சேராமே
திருவருளே சேரும் வண்ணம்,
குறி யொன்று மில்லாத
கூத்தன் தன் கூத்தை யெனக்
கறியும் வண்ண மருளிய வா
ரூர் பெறுவாச்சோ வே!

* * * *

ஆர் பெறுவார் அச்சோவே!
அறியும் வண்ணம் அருளிய ஆறு
ஆர் பெறுவார்? அச்சோ! ஏ!
அறியும் வண்ணம் அருளிய ஆறு
ஆர் பெறுவார் அச்சோ! ஏ!

இந்த வரிகளைப் பல்லவியாகப் பாடிக் கொண்டு அந்த நூறு பெண்களும் குதிக்கத் தொடங்கினர்கள். பாட்டைத் தேவகான மென்றேன். இந்தக் கூத்தை யெங்ஙனம் வர்ணிப்பேன்! சக்தி நாடகம். விஷ்ணுவின் சித்த லோகம். கண்ணன் கண்ட கனவு.

சிறிது நேரத்துக் கெல்லாம் கூத்து முடிந்தது. பெண்கள் மறைந்து விட்டனர்.

தீவட்டி யொளி குறைந்தது. நாலு தீவட்டிகள் மிஞ்சின. அவற்றை நான்கு வலக்கை தூக்கிப் பரதேசிகள் இடக்கையிலே தூக்கி நின்றனர்.

பண்டாரம் சொல்லுகிறான்! எந்தப் பண்டாரம் சொல்லுகிறான்? எந்தப் பண்டாரம்? பொன்னனைத்தின் மீது வீற்றிருந்த தலைப் பண்டாரம் சொல்லுகிறான் :—

"வாப்பா! காளிதாஸா, பயப்படாதே. தரையின் மேல் உட்கார்ந்து கொள். மனதைக் கட்டு. மூச்சை நேராக்கு. ஒன்றும் குடிமுழுகிப் போய் விடவில்லை. நீ செய்த நூல்கள் சில நாம் பார்த்திருக்கிறோம். கடலெதிர்த்து வந்தால் கலங்க மாட்டோம். 'தலைமேல் இடி விழுந்தால் தளர மாட்டோம்; எங்கும் அஞ்சோம்; யார்க்கு மஞ்சோம்; எதற்கு மஞ்சோம்; எப்போதும் அஞ்சோம்' என்று நீ பாடினதை நான் நேற்று ஒரு புஸ்தகத்தில் பார்த்தேன். நீ உண்மையான அனுபவத்தைச் சொன்னையா, அல்லது வெறுங் கற்பனை தானா என்பதை அறியும் பொருட்டாக நான் உன்னை இங்கே கொணர்வித்தேன். நீ பயப்படுகிற அளவு ஆற்காட் நவாப் கூட பயந்தது கிடையாது. ஆற்காட் நவாப் ஸங்கதி தெரியுமா? க்ளைவ் ஒரு வாயில் வழியே கோட்டைக்குள் புகுந்து பார்த்த போது, நவாப் மற்றொரு வாயில் வழியே வெளியேறி விட்டாராம். உள்ளே போனால் க்ளைவ் யாருடன் சண்டை போடுவார்? அவர் பாட்டிலே போய் ஷோக்காகக் கோட்டைக்குள் பிரங்கி ஸஹிதமாக இருந்து கொண்டு

தீவட்டி யொளி குறைந்தது. நாலு தீவட்டிகள் மிஞ்சின. அவற்றை நான்கு வலக்கை தூக்கிப் பரதேசிகள் இடக்கையிலே தூக்கி நின்றனர்.

பண்டாரம் சொல்லுகிறான்! எந்தப் பண்டாரம் சொல்லுகிறான்? எந்தப் பண்டாரம்? பொன்னனைத்தின் மீது வீற்றிருந்த தலைப் பண்டாரம் சொல்லுகிறான் :—

"வாப்பா! காளிதாஸா, பயப்படாதே. தரையின் மேல் உட்கார்ந்து கொள். மனதைக் கட்டு. மூச்சை நேராக்கு. ஒன்றும் குடிமுழுகிப் போய் விடவில்லை. நீ செய்த நூல்கள் சில நாம் பார்த்திருக்கிறோம். கடலெதிர்த்து வந்தால் கலங்க மாட்டோம். தலைமேல் இடி விழுந்தால் தளர மாட்டோம்; எங்கும் அஞ்சோம்; யார்க்கு மஞ்சோம்; எதற்கு மஞ்சோம்; 'எப்போதும் அஞ்சோம்' என்று நீ பாடினதை நான் நேற்று ஒரு புஸ்தகத்தில் பார்த்தேன். நீ உண்மையான அனுபவத்தைச் சொன்னையா, அல்லது வெறுங் கற்பனை தானே என்பதை அறியும் பொருட்டாக நான் உன்னை இங்கே கொணர்வித்தேன். நீ பயப்படுகிற அளவு ஆற்காட் நவாப் கூட பயந்தது கிடையாது. ஆற்காட் நவாப் ஸங்கதி தெரியுமா? க்ளைவ் ஒரு வாயில் வழியே கோட்டைக்குள் புகுந்து பார்த்த போது, நவாப் மற்றொரு வாயில் வழியே வெளியேறி விட்டாராம். உள்ளே போனால் க்ளைவ் யாருடன் சண்டை போடுவார்? அவர் பாட்டிலே போய் ஷோக்காகக் கோட்டைக்குள் பீரங்கி ஸஹிதமாக இருந்து கொண்டு

கோட்டை கொத்தளங்களைச் சோதிக்கிறான் அதை வைத்துக் கொண்டா என்று கேள்வியுற்ற துண்டு நீ அந்த ஆற்காடு நவாபினிட மிருந்த பிராணனைச் சோதிடரின் வம்சத்தில் பிறந்தாயோ? ஆற்காட்டு பயம் பயப் படுகிறாயே! மூடா, ஆறுதலடை."

அந்தப் பரதேசி பின்னும் சொல்லுகிறான் :—

"மனுஷ்ய வாழ்க்கை சுகமில்லை. பிறப்பை உடனே ஒழி. மண்ணில் பிறக்காதே. வானத்தில் ஏறு. சுந்தர கலைகளில் உண்டாகும் அமிர்தத்தைப் பானஞ் செய்யும் யோகி ஒருவன் தான் உன் பாட்டில் கண்டபடி பயப் படாமலிருக்க முடியும். அதை விட்டு நமக்குத் தான் அகல வெழுதத் தெரியுமென்று நீ கிறுக்கித் தள்ளி விட்டாய். குண்டனினி அக்கினியைத் தலைக்குக் கொண்டுபோ. அப்போது அமிர்த கலச மொழுகும். அந்த அக்கினியும் அமிர்தமும் ஒன்றாய் இன்ப வெள்ளத்திலே நீந்தலாம். இன்ப மிருந்தால் பயமில்லை. இன்பமில்லாத போது பயம் இயற்கையிலே வரும். இருவினைக் கட்டை அறு. நன்மை தீமையென்ற குப்பையைத் தெருவிலே தள்ளு. எல்லாம் சிவம் என்றறி. உன்னை வெட்ட வரும் வாளும் சிவன். அதைக் கும்பிடு. உன்னை அது வெட்டாது. சரணகதி தான் வழி. பொய் பேசாதே. தீங்கு கருதாதே. பேய்க்குந் தீங்கு செய்யாதே. பகைவனுக்குந் தீமை நினைக்காதே. பகைவனையும் சிவனென்று கும்பிடு. பாம்பின் வாய்க்குள்ளே போய் விரலை விட்டு ஓம் சிவாய நம என்று சொல். அது உன்னைக் கடிக்காது."

கலைமைப் பண்டாரம் பொன்னுலனத்தினின்றும் எழுந்து நின்றுன். அப்போது அங்கே ஒரு சங் கொலிப் பண்டாரம் 'பம்' 'பம்' 'பம்' என்று சங் கெடுத்து ஊதிஞன். மற்றுரு சடைப் பண்டாரம் கண, கண, கணவென்று மணி யடிக்கான். பிறகு பண்டாரங்கள் அத்தனை பேரும் சேர்ந்து பின் வரும் பாட்டைப் பாடினுர்கள்.

" வையகத்தே சடவஸ்து வில்லை,
மண்ணுங் கல்லும் சடமில்லை.
மெய்யுரைப்பேன் பேய் மனமே
மேலுங் கீழும் பயமில்லை !— (1)

பையப் பையத் தேராடா !
படையும் விஷமுங் கடவுளடா !
பொய்யு மெய்யுஞ் சிவனடா !
பூமண்டலத்தே பயமில்லை !— (2)

சாவு நோவுஞ் சிவனடா !
சண்டையும் வாளுஞ் சிவனடா !
பாவியு மேழையும் பாம்பும் பசுவும்
பண்ணுங் தானமுந் தெய்வமடா ! (3)

எங்குஞ் சிவனைக் காணடா !
ஈனப் பயத்தைத் துரத்தடா !
கங்கைச் சடையா, காலன் கூற்றே
காமன் பகையே வாழ்க நீ !— (4)

பாழுந் தெய்வம் பதியுந் தெய்வம்
பாலை வனமுங் கடலுந் தெய்வம்
ஏழு புவியும் தெய்வம் தெய்வம்
எங்குந் தெய்வம் எதுவுந் தெய்வம். (5)

னவையத்தே சடமில்லை,
மண்ணுலங் கல்லுந் தெய்வம்
மெய்யுரைப்பேன் பாழ் மனமே
மோலுங் கீழும் பயமில்லை !— (6)

இந்தக் கல்லறைகள் அந்தப் பல்லாயிரங்கள் பாதியிரவில் பாடுவதை அந்த ச்மசானத்தில் பாடக் கேட்ட போது எனக்கு மயிர்ச் சிலிர்ப்பு புண்டாயிற்று. அப்போது தலைமைப் பரதேசி என்னை நோக்கிச் சொல்லுகிறான் :—"காளிதாஸா அடே ! அந்தப் பெண்கள் தீவட்டி வைத்துக்கொண்டு பாட்டுப் பாடி ஆட்டமாடிப் போயினரே, அவர்கள் யார், நீ அறிவாயா ?" என்றான்.

"அறியேன், அவர்கள் யார் சொல்லு" என்றேன். "அவர்கள் அத்தனை பேரும் பேய்கள். இங்கு மாறுவேஷம் பூண்டு உனக்கு வேடிக்கை காட்டும் பொருட்டுத் தருவித்தேன்" என்றான்.

"நீ யார் ?" என்று கேட்டேன்.

"நான் இந்தச் சுடுகாட்டிலுள்ள பேய்களுக்கெல்லாம் தலைவன்" என்றான்.

தராசு.

இவ்வுலகமே ஈசனுடைய 'விளையாட்டு'. உலகத்தை அறிய வேண்டுமானால் விளையாட்டுப் பழக்கமும் வேண்டும்.....எழுதும் விஷயங்களுக்கு என்னை மகுடம் எற்படுத்தலா மென்ற போசனை யுண்டா யிற்று. பலவிதமான செய்திகளையும் கலந்து பேச நேரிடுமாதலால் "பலசரக்குக் கடை" என்று மகுட மெழுத உத்தேசித்தேன். அது அதிக விளையாட்டாக முடியுமாதலால் விட்டுவிட்டேன். எனக்கும் ஒரு செட்டியாருக்கும் சினேகம்; அவரைப்போல் நான் ஒரு பலசரக்குக் கடை வைத்தால் அவருக்குக் கோபம் எற்படுமென்று கருதி அந்த மகுடத்தை விலக்கினேன். ....."தராசு" என்று பொதுப்படையாகப் பெயர் வைத்திருக்கிறேன். எல்லா வஸ்துக்களையும் நிறுத்துப் பார்க்கும். எல்லாச் செட்டியார்க்கும் இதனால் உதவி யுண்டு. எந்தச் செட்டியாரும் நம்மிடம் மனஸ்தாபங் கொள்ள இடமிராது.

1

ஐரோப்பிய வைத்தியம் சிறந்ததா? நாட்டு வைத்தியம் சிறந்ததா?

ஐரோப்பிய வைத்தியத்தின் சார்பாக இருப்போர் சொல்லுகிறார்கள்:—"எங்கள் வைத்தியம் ஸயன்ஸ்படி நடத்தப்படுகிறது. (ஸயன்ஸ் என்பது தற்காலத்து ஐரோப்பிய இயற்கை சாஸ்திரம்). 'உட

லுக்குள் என்னென்ன கருவிகள் உண்டு? அவை எப்படி வேலை செய்கின்றன?' என்ற விஷயம் நாட்டு வைத்தியருக்குத் தெரியாது. தொற்று வியாதிகளுக்கு ஆதாரமான, கண்ணுக்குத் தெரியாத துளிப்பூச்சிகளின் செய்தி யெல்லாம் நாட்டு வைத்தியர் படித்ததில்லை. மருந்துகளின் தொழில் மர்மங்களெல்லாம் நன்றாகத் தெரியவேண்டுமானால் ரஸாயன சாஸ்திரம் கற்றிருக்க வேண்டும். நாட்டு வைத்தியருக்கு அந்த சாஸ்திரம் தெரியாது. நாட்டு வைத்தியக்கால் ஜனங்கள் பிழைப்பது ஒரு ஆச்சரியமே யன்றி வேறில்லை."

நாட்டு வைத்தியத்தின் கட்சியார் சொல்லுகிறார்கள் :—" அந்த ஐரோப்பிய சாஸ்திரங்களை யெல்லாம் ராஜாங்கத்தார் எளிய தமிழில் மொழி பெயர்த்து வெளியிடுவார்களானால் நாங்கள் படித்துக் கொள்ளுவதில் ஆக்ஷேபமில்லை. ஆனால் வைத்தியனுக்கு முக்கியமாக வேண்டியது நோய் தீர்த்துவிடுதலே. இதில், இந்த தேசம் ஸம்பந்தப் பட்டவரை,—ஐரோப்பிய வைத்தியரைக் காட்டிலும் எங்களுக்கு அதிகத் திறமை யுண்டு. எங்களுடைய பூர்வீக மருந்துகளே இந்த தேசத்து சரீர நிலைக்கு அனுகுணமாகும்; இதை வேண்டுமானால் சோதனை செய்து பார்க்கலாம்."

எனது நண்பர் ஒரு யோகீச்வரர் இருக்கிறார். அவரிடம் இந்த இரண்டு கட்சிகளையும் சொன்னேன். அவர் சொல்லுகிறார் :—" ஒருவனுக்கு வியாதிகள் வராதபடி தடுத்துக் கொள்வது நலம். தன்னை மீறி வந்தால்—நல்ல காற்று, நல்ல நீர், நல்ல வெளிச்சம்,

சுத்தமான உணவு, இயன்றவரை சரீர உழைப்பு, மனோரம்யம், ஸந்தோஷம்—இவற்றால் பெரும்பான்மையான நோய்கள் இயற்கையிலேயே சொஸ்தமாய் விடும். வைத்தியர் அவசியமென்ற ஸ்திதிக்கு வந்து விட்டால் பிறகு தெய்வ பலமுள்ளவர்கள் நிச்சயமாகப் பிழைப்பார்கள். சாகத்தான் வேண்டுமென்று தீர்த்தால், அயல்நாட்டு மருந்தினால் சாவதைக் காட்டிலும், நாட்டு முறைப்படி சாவது நல்லது.

"நாட்டு வைத்தியம்" என்ற பேச்செடுத்ததினிருந்து எனக்கு வேறொரு செய்தி யோசனைக்கு வருகிறது.

நமது ஜனங்களுடைய உடம்பைப்பற்றிய வியாதிகளுக்கு மருந்து கொடுப்பதைப் பற்றிப் பேசினோமா? அதிலிருந்து, நம்மவர்களின் ஆத்மாவைப் பற்றிய வியாதிகளுக்கு மருந்து கொடுக்கும் பெரிய வைத்தியத்தின் விஷயம் ஞாபகத்துக்கு வந்து விட்டது.

"இந்த உலகத்து மனுஷர்களெல்லாம் அநித்யம். ஆகையால் நமக்கு வேண்டியதில்லை. செல்வத்தையும், கீர்த்தியையும் தேடி முயற்சி செய்பவன் அஞ்ஞானத்தில் அழுந்திக் கிடக்கிறான். நாம் ஆத்ம லாபத்தை விரும்பி இவ்வுலகத்தை வெறுத்துத் தள்ளி விட வேண்டும்" என்பது ஒரு முறை.

மடங்களிலேயும், காலக்ஷேபங்களிலும், பஜனைக் கூட்டங்களிலும், புராண படனங்களிலும், மதப் பிரஸங்கங்களிலும், பிக்ஷைக்காரர் கூட்டத்திலும், வடதுருதிர்ந்தேகார் சம்பாஷணைகளிலும்—எங்கே திரும்பி

ணலும், நமது நாட்டில் இந்த "வாய் வேதாந்தம்" மலிந்து கிடக்கிறது.

"உலகம் பொய்; அது மாயை; அது பந்தம்; அது துன்பம்; அது விபத்து; அதை விட்டுத் தீர வேண்டும்." இந்த வார்த்தை தான் எங்கே பார்த்தாலும் அடிபடுகிறது. ஒரு தேசத்திலே படித்தவர்கள், அறிவுடையோர், சாஸ்திரக்காரர் எல்லோரும் ஒரே மொத்தமாக இப்படிக் கூச்சலிட்டால், அங்கே லௌகிக காரியங்கள் வளர்ந்தேறுமா? மனம்போல வாழ்க்கை யன்றே?

பூர்வமதாசார்யர் 'பாரமார்த்திக'மாகச் சொல்லிப்போன வார்த்தைகளை நாம் ஓயாமல் லௌகிகத்திலே சொல்லிக் கொண்டிருப்பது சரியா? வெகு ஜனவாக்கு நமது தேசத்தில் பலித்துப் போய் விடாதோ? இகலோகம் துன்பமென்று நம்பினால், அது துன்பமாகத் தான் முடியும். இந்த உலகம் இன்பம். இதிலுள்ள தொழில், வியாபாரம், படிப்பு, கேள்வி, வீடு, மனைவி மக்கள், எல்லாவற்றிலும் ஈசன் அளவிறந்த இன்பத்தைக் கொட்டி வைத்திருக்கிறான். விதிப்படி நடப்போர் இந்த லோகங்களை நன்றாக அனுபவிக்கிறார்கள். ஈசனுடைய விதி தவறும் கூட்டத்தார் துன்பமடைகிறார்கள்.

*　　*　　*

"வேதாந்தம்" மற்றொரு ஸமயத்திலே பார்த்துக் கொள்வோம். "சட்டசபை" சங்கதி யொன்று பேசலாம். சேலத்து ஸ்ரீ. நரஸிம்மையர், சிறு பிள்ளை

கள் சுருட்டுக் குடிப்பதைக் குறைக்க வேண்டுமென்று சென்னைப்பட்டணம் சட்டசபையில் பேசப் போவதாகத் தெரிகிறது. இந்த விஷயத்தைத் தீர்மானம் வழக்க மூடைய ஒரு சிறு பிள்ளையிடம் நான் சொன்னேன். "என்ன சட்டந்தான் கொண்டு வாட்டும். நான் சுருட்டுப் பிடிப்பதை அவர்களாலே நிறுத்த முடியாது" என்று அந்தப் பிள்ளை சொல்லுகிறான். புகையிலை ஆகாரத்தைக் குறைத்து விடுமென்று வைத்திய சாஸ்திரம் சொல்லுகிறது. அப்படியிருந்தும், அதை வழக்கமாகக் கொண்டவர்கள் விட மனமில்லாமலிருக்கிறார்கள். ஆனாலும், புகையை நம்பி உயிரை வெறுக்கும் மனிதர்களை இந்த ஒரு விஷயத்தில் தானே பார்க்கிறோம்?

2

சென்ற வாரம் சென்னைப்பட்டணம் கந்தசாமி கோயில் வளாகத்தில், சாது மஹா ஸங்கத்தாரின் ஏற்பாட்டிலே ஒரு கூட்டம் நடந்தது. அதிலே, ஸ்வாமி அத்புதானந்தர் என்பவர் ஒரு சொற்பொழிவு உபந்யாஸம் செய்ததாகத் தெரிகிறது.

ஸ்வாமி சொல்லியதன் சுருக்கம்:—"மத விஷயங்களில் நமது முன்னோர் மிகவும் உயர்ந்த ஆராய்ச்சிகள் செய்து வைத்திருக்கிறார்கள். இவற்றை நாம் நன்றாகத் தெரிந்து கொண்டு உலகத்தாருக்கெல்லாம் உபதேசம் செய்ய வேண்டும். இவ்விஷயத்தில் அமெரிக்கா ஐரோப்பா முதலிய வெளி தேசத்தார் நமது உதவியை எதிர்பார்த்து நிற்கின்றனர்."

இனி, "மகவிஷயங்கள்" என்பவை பாரமார்த்திக உண்மைகளாம்; அதாவது ஐம்புலன்களுக்கெட்டாத, சுத்த அறிவினால் காணுதற்குரிய, தெய்விக உண்மைகள்; இவை ஞானம், பக்தி, யோகம் என்னும் வழிகளிலே கிடைப்பனவாகும். இவற்றை நமது முன்னோர் பெரியபாடு பட்டுத் தேடித் தம்முடைய நூல்களிலே திரட்டி வைத்திருக்கிறார்கள். இந்தச் செல்வத்தை நாம் திறமையுடன் கையாண்டு உலகத்தாருக்கெல்லாம் வாரிக் கொடுத்து இவ்வுலகத்தின் துன்பங்களையும், சிறுமைகளையும், அறியாமைகளையும் மாற்றி இதனை மேன்மைப் படுத்த வேண்டும்.

"தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்."

என்று திருவள்ளுவர் சொல்லியபடி, இஃதே சுவாமி அத்புதானந்தருடைய கருத்தாகும். இதை நான் பரிபூர்ணமாக அங்கீகாரம் செய்து கொள்ளுகிறேன். ஆனால், நமது ஆசையை இவ்வளவுடன் நிறுத்தி விடலாகாது. லௌகிக விஷயங்களிலும் நமது உதவியை உலகம் வேண்டித் தான் நிற்கிறது. இதை நாம் மறந்து விடலாகாது. நமது முன்னோர் பாரமார்த்திகச் செய்திகளில் மாத்திரமே நிகரற்ற மேன்மை யடைந்திருந்ததாக நினைத்துவிடலாகாது. இஹலோக அறிவிலும் ஆச்சரியமான உயர்வு பெற்றிருந்தார்கள். பல தேசங்களையும் அவற்றின் பலவித சாஸ்திரங்களையும், நன்றாக அறிந்த எனது நண்பரொருவர் ஐரோப்பாவில் மஹாகீர்த்தி பெற்றிருக்கும்

டவனைத்துச் (கிரேக்க தேசத்துச்) சிற்பத்தைக காட்டி லும் நமது புராதனச் சிற்பம் மேம்பட்ட தென்று கருதுகிறார். இதை வெளியுலகத்தாருக்கு விளங்கச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன், ஸ்ரீ ஆனந்த குமாரஸ்வாமி முதலிய வித்வான்கள் மிகவும் உழைத்து வருகிறார்கள். ஆனால் இதை இங்கு நமது தமிழ் நாட் டிலே வாழும் ஜனங்களுக்கு விளங்கக் காட்டுவார் யாரையும் காணவில்லை. பல தேசத்து ஸங்கீதங்களை யும் நான் ஒருவாறு ஒப்பிட்டுப் பார்த்திருக்கிறேன். நமது புராதன ஸங்கீதத்துக்கு நிகரானது இவ்வுலகத் தில் வேறெங்குமில்லை என்பது என்னுடைய முடிபு. கவிதை விஷயத்திலும் இப்படியே.

இனி கணிதம், ரஸாயனம் முதலிய வேறு பல சாஸ்திரங்களும் நமது தேசத்திலே தான் முதலில் வளர்ச்சி பெற்றவையாகும்.

நாம் இஹலோகத்து அறிவிலும் மேம்பாடு பெற வேண்டும். தெரியாத சாஸ்த்ரங்களின் ஆரம்பங்களைப் பிறரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். பிறகு அவற்றை நமது ஊக்கத்தாலும் உயர்மதியாலும் மேன்மேலும் வளர்த்து மீளவும் உலகத்தாருக்கு ஊட்டவேண்டும். இஹலோக வளர்ச்சியிலே நாம் தலைமை வகிக்க வேண்டும். அதற்கு நாமே தகுதி யுடையோர்.

*　　*　　*

பம்பாயில் நடக்கப் போகிற காங்கிரஸ் ஸபைக்குப் பல ஊர்களிலிருந்தும் பிரதிநிதிகள் வருவதிலே சில

மாதர்களும் பிரதிநிதிகளாக வரக்கூடுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. ஆனல் பிரதிநிதிகளுக்கு வேண்டிய உதவிகள் செய்யும் பொருட்டு தர்ம ஸேவகர்களாக (வாலண்டியர்களாக) ஆண் பிள்ளைகள் முற்பட்டு வந் திருப்பது போலவே, பெண் பிரதிநிதிகளுக்கு வேண் டிய உபகாரங்கள் செய்வதற்காக தர்மஸேவகப் பெண் கள் சிலர் முற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தப் புதுமை நமது தேசத்துக்குப் பெரியதோர் நன்மைக் குறி யென்பது என்னுடைய கொள்கை.

*　　*　　*

அடடா! விளையாட்டுப் பேச்சை மறந்தல்லவோ போய்விட்டோம். யுவான்-ஷி-காய்—சீன தேசத்துக் குடியரசுத் தலைவர்—காயாக இருந்தவர் பழுத்துக் கொண்டு வருகிறார். பூர்வ ராஜ வம்சத்தை ஒழிப்ப தற்கு பகீரத ப்ரயத்தனங்கள் செய்து சீன தேசத்தார் குடியரசு நாட்டினர்கள். யுவான்-ஷி-காயின் பக்கம் ஸைன்யபலம் இருந்தபடியால் அந்தக் குடியரசுக்கு இவர் தலைமை பெறுதல் சுலபமாயிற்று. நாட்பட நாட் பட, வெகு சீக்கிரத்தில், யுவான் மனதில் குடியரசை விட ராஜாதிகாரமே சீனத்துக்குப் பொருந்திய ஏற்பா டாகுமென்று உதயமாயிற்று. உலகத்தார் யெல்லாம் இவர் தாமே ராஜாவாகிவிட நினைப்பதாக நிச்சயித் தனர். இப்போது பழைய குமார ராஜாவுக்கு இவ ருடைய பெண்ணை மணஞ் செய்து கொடுப்பதாக வதந்தி யேற்படுகிறது. எனவே சீன தேசத்துக் குடி யரசு இன்னும் எவ்வளவு காலம் ஜீவித்திருக்கு மென்

பதை நமது தேசத்து ஜோதிடர்கள் கண்டு பிடித்துச் சொல்லும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். அதன் ஜாதக விவரங்கள் சில வேண்டுமாலும் சொல்லுகிறேன்.

மேற்படி முடியரசுச் சட்ட உச்சஸ்தானத்திலே ராகு இருக்கிறான். இரண்டாமிடத்திலே சனி. சனி சப்தமாணி யென்ற விஷயம் ஸகலருக்கும் தெரியும். மற்ற கிரகங்களெல்லாம் வக்கிரத்தான். இதற்கு நான தீர்மானம் சொல்லிவிடக்கூடும். ஆனால், எனக்கு ஜோதிடத்திலே அரிச்சுவடி கூடத் தெரியாது.

* * *

செய்யூரிலிருந்து ஸ்ரீ மாதவய்யா ஒரு கிழவருடைய விவாகத்தின் சம்பந்தமாக எழுதியிருந்த கடிதம் சில தினங்களின் முன்னே "சுதேசமித்திரனி"ல் பிரசுரஞ் செய்யப்பட்டிருந்தது.

கிழவருக்கு வயது 70; அவருடைய தாயார் இன்னும் உயிரோடிருக்கிறாள். அந்தப் பாட்டிக்கு வயது 98. இந்தத் தாயாருக்கும் தமக்கும் உபசாரங்கள் செய்யும் பொருட்டுக் கிழவர் ஒரு பதினறு வயதுக் குமரியை மணஞ் செய்துகொள்ளப் போகிறாராம். இதே கிழவரிடம் இதைத் தவிர இன்னும் 21 குமரிகளின் ஜாதகம் வந்திருப்பதாகத் தெரிகிறது. கடைசியாக ஒருவாறு தீர்மானஞ் செய்திருக்கிற பெண்ணுடைய தகப்பனார் பணத்தையும் விதியையும் ஜோதிடத்தையும் நம்பி வேலை செய்கிறார். தெய்வத்தை நம்புவதாகத் தெரியவில்லை. ஓட்டகத்துக்கு ஓரிடத்திலா கோணல்? தமிழ் நாட்டிற்கு ஒரு வழியிலா தூண்பம்?

இன்று காலை நம்முடைய கடைக்கு ஒரு கவிராயர் வந்து சேர்ந்தார். வந்து, "வங்க தேசத்தின் மஹா கவியென்று புகழ் பெற்றிருக்கும் ரவீந்திரநாத் டாகூர் செய்த "கீதாஞ்சலி" என்ற நூலில் சிறிய பாட்டொன்றைத் தமிழில் வசனமாக மொழிபெயர்த்திருக்கிறேன். சரிதானு என்று பார்க்கவேண்டும்" என்றார்.

"வாசித்துக் காட்டும்" என்றேன்.

"எங்கே மனதில் அச்சமில்லை; தலை நிமிர்ந்து நிற்கிறது; எங்கே அறிவுக்குக் கட்டில்லை;

எங்கே மனிதவுலகம் சிறிய வீட்டுச் சுவர்களால் துண்டு துண்டாகப் பிரிவுபடா திருக்கின்றது;

எங்கே உண்மையின் ஆழத்திலிருந்து சொற்கள் நேரே புறப்படுகின்றன;

எங்கே ஓய்வில்லாத முயற்சி பரிபூரணத் தன்மையை நோக்கிக் கைநீட்டுகிறது;

எங்கே மதியாகிய தெளிந்த வாய்க்கால் செத்த வழக்கம் என்ற கொடிய பாலையின் மணலிலே மடியாது நீங்குகிறது;

எங்கே மேன்மேலும் விரிகின்ற கருத்திலும் செய்கையிலும் அறிவு மூண்டு செல்லும்படி நீ நடத்துகிறாய்;

அமரஸ்தானமாகிய அந்த ஸ்வதந்த்ர நிலையில், வேறு பிதா, எனது தேசம் கண்விழித்திடுக."

(குறிப்பு :—அமரஸ்தானம்—தேவலோகம்; ஸ்வதந்த்ரம்—விடுதலை; பிதா—கடவுள்.)

"மொழி பெயர்ப்பிலே பிழையில்லை. ஆனாலும், இன்னும் சிறிது சுலபமான நடையில் இருக்கலாம்" என்று தாசு சொல்லிற்று.

* * *

"பூசனிக்காய் சங்கதி சொல்லட்டுமா?" என்று நண்பர் செட்டியார் கேட்டார்.

"அதென்னையா?" என்று எல்லாரும் வியப்புடன் செட்டியாரைக் கேட்டார்கள்.

செட்டியார் சொல்லுகிறார்:—"சில தினங்களின் முன்பு சென்னப்பட்டணத்தில் பொருட்காட்சி பார்க்க பத்திரிகையின் மனுஷரொருவர் போயிருந்தார். அங்கே ஸாமான்யமாகக் கிடைக்கக்கூடிய மிகவும் பெரிய பூசனிக்காயைக் காட்டிலும் அதிகப் பெரிதாகிய ஒரு பூசனிக்காய் இருந்தது. 'சாஸ்திர-எருப்' போட்டதனால் இந்தப் பயன் உண்டாயிற்றென்று தெரிகிறது. 'ஒரு புல் முளைக்கிற இடத்தில் இரண்டு புல் முளைக்கும்படி செய்பவன் தேசத்துக்குப் பெரிய உபகாரி' என்று இங்கிலீஷ்காரர் சொல்வதுண்டு. 'தொகைக் குள்ளது அளவுக்கும் உண்டு' என்று அந்தப் பத்திரிகைக்காரர் சொல்லுகிறார். அதாவது, சிறிய இலை தரும் வாழையைப் பெரிய இலையைத் தரும்படி செய்பவனும் தேசத்துக்குப் பெரிய உபகாரியாவான். 'பெரிய பூசனிக்காயை மற்றப் பூசனிக்காய்கள் பார்த்துக் கொஞ்சம் வெட்கப்பட்டது போல விழித்தன. ஆனால் நமது பூர்வீகர்களிருந்த அளவு நமக்கும் போதும் என்று ஒருவித வைதீகத் தோற்ற

மும் அந்தப் பூசனிக்காய்களின் முகத்திலே தென் பட்டது' என்று அந்தப் பத்திரிகைக்காரர் எழுதி யிருக்கிறார்."

இவ்வாறு செட்டியார் சொல்லிக் கொண்டு போகையில், நான் அவரை நோக்கி :—"ஆமாங்கா ணும். அதற்கென்ன இப்போது? ஆலோசனைக்கு என்ன விஷயம் கொண்டு வந்திருக்கிறீர்?" என்று கேட்டேன்.

செட்டியார்:—"ஆலோசனை ஒன்றுமில்லை. ஐயரே, சும்மா ஒரு கதை சொன்னேன்."

காசு:—"சரி, மேலே வியாபாரம் நடக்கட்டும்" என்றது.

*　　*　　*

"உங்க ஹிந்துக்களுடைய நாலு வேதத்துக்கும் பெயரென்ன?" என்று ஜிந்தாமியான் ஸைட் கேட்டார்.

"ரிக், யஜுர்ஸ், ஸாமம், அதர்வணம்" என் றேன். "எதுக்குக் கேட்கிறீர்?" என்று செட்டியார் கேட்டார். அதற்கு ஜிந்தாமியான் ஸைட் சொல்வ தானார்:—"கேள்விப்பட்டேன். நேற்று பட்டணத்தி லிருந்து ஒரு சாமியார் நம்ம கடைக்கு வந்திருந்தார். அவர் சொன்னார்:—'ஹிந்துக்களுடைய வேதம் மிக வும் பழமையானது. அதிலும் நம்ம குரானைப் போலவே அல்லாவைத் தான் புகழ்ந்து பேசுகிறது. ஆனால் அல்லா என்கிறதுக்கு அவர்களுடைய பாஷை யிலே ப்ரஹ்மம என்கிறார்கள். அதிலே ரிஷிகள் என்று பாடினவர்கள் அல்லாவினுடைய உண்மையை அறிந்த

வர்கள்.' இன்னும் அந்த சாமியார் எதேதல்லாமோ சொன்னார். அதிலிருந்து நூபகம் உண்டாயிற்று."

"வேதம் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார் களோ?" என்று மற்றொருவர் கேட்டார்.

"இல்லை" என்றேன்.

"என்ன காரணம்?" என்றார் கவிராயர்.

"அதற்குத் தகுந்த திறமையுடைய பண்டிதர் கள் இல்லை. ஒரு வேளை இருந்தாலும், அவர்கள் தொழில் செய்யவில்லை."

"ஆமாம், வேதத்துக்குப் பலவிதமாக அர்த்தஞ் சொல்லுகிறார்களாமே? என்ன காரணம்?" என்று செட்டியார் கேட்டார்.

"மற்றொரு முறை அந்த விஷயம் பேசுவோம். வேறேதேனும் வியாபார முண்டோ?" என்றேன்.

*　　*　　*

ஸயன்ஸ் என்பதென்ன?

ஐரோப்பிய இயற்கை நூலுக்கு இங்கிலீஷ் பாஷையில் ஸயன்ஸ் என்று பெயர்.

"ஐரோப்பிய இயற்கை நூல்" என்று தனியாக ஒரு சாஸ்த்ர முண்டா?

அப்படியில்லை. அந்த சாஸ்திரத்திலே நம்மைக் காட்டிலும் அவர்கள் அதிகத் தேர்ச்சி யடைந்திருக் கிறார்கள்.

அதிலே என்ன பயன் உண்டாகிறது?

புதிய விழி உண்டாகிறது.

புதிய விழி என்பதென்ன ?

பூமண்டலத்தையும் ஸர்வத்தையும் பற்றிய புதிய அறிவு.

நமது பூர்வீகர்களுக்கு இல்லாத அறிவு இப்போது சாத்தியப்படுமா ?

அதைப்பற்றிய பேச்சில்லை.

நமக்கு இதுவரை இல்லாத அறிவு இப்போது சாத்தியப்படுமோ ?

"முற்படுக ; எழுக ;" என்றது காசு.

* * *

சென்னை சட்ட சபையிலே ஜனங்களுக்குச் சார்பான கார்யஸ்தர்கள் சில நல்ல தீர்மானங்கள் செய்து வைக்க விரும்பினர்கள். அவற்றுள்ளே, "கட்டாயப் படிப்பு," "ஸர்க்கார் உத்தியோக மில்லாதவரை ஜில்லா போர்டுகளுக்குத் தலைவராக நியமித்தல்" முதலிய முக்கியமான அமிசங்களை யெல்லாம் ஸர்க்கார் பக்கத்து ஸ்தானிகர்கள் எதிர்த்துப் பேசிப் பயனில்லாதபடி செய்துவிட்டார்கள்.

இந்த விஷயங்களை யெல்லாம் என்னுடைய காசிலே போட்டுப் பார்த்தேன். காசுப் படிகள் கொள்ளவில்லை. இதை யெல்லாம் ரயில்வே மூட்டைகள் நிறுக்கும் யந்திரத்தைப் போன்ற பெரிய நிறை யந்திரங்களில் போட்டுப் பார்க்க வேண்டும். இப்போது என்னுடைய வியாபாரம் அவ்விதமான பெரிய காசு வாங்கக்கூடிய நிலைமையில் இல்லை.

* * *

"புதுக்கோட்டை ராஜா ஆஸ்ட்ரேலிய மாகை விவாகம் செய்து கொண்டது சரிதானே?" என்று ஒரு நண்பர் என்னிடம் கேட்டார்.

"பெரிய மூட்டை; சீமை வியாபாரம்; நாட்டு வியாபாரத்துக்குத் தான் நம்மூடைய காசு உதவும். வேறு கடைக்குக் கொண்டு போம்" என்று ஜவாப் சொல்லி விட்டேன்.

"அது போலுல் போகட்டும். அந்த ராஜா சபீ பத்தில் ஒரு பிரசங்கம் செய்திருக்கிறார். அதில் நமது நாட்டு ஸ்திரீகளைக் கொஞ்சம் குறைவாகச் சொல்லி யிருப்பது போல என் புத்திக்குப் புலப்படுகிறது. 'ஹிந்து' பத்திரிகையில் இதைப்பற்றி ஒரு தந்தி யிருக்கிறது. வாசித்துக் காட்டுகிறேன்" என்று அந்த நண்பர் சட்டைப் பையிலிருந்து ஒரு காயிதத்தை எடுத்தார்.

"ஓய், சுருக்கமாக இருந்தால் படியும். இல்லா விட்டால், வாயிலுல் அதன் ஸாராம்சத்தைச் சொல்லி விடும். வீண் கதை கேட்க நமக்கு நேரமில்லை" என்றேன்.

அவர் பின்வருமாறு படித்துக் காட்டினர்:—

புதுக்கோட்டை ராஜா தமது பிரஜைகளுக்குச் செய்த பிரசங்கத்திலே சொல்லுகிறார்:—"என் குடிகளே, எனது பத்தினிக்கு நீங்கள் செய்த ராஜோபசாரத்தால் என்ன விளங்குகிறது? என்னையும், எனது ராஜ்யத்தையும் பற்றிய ஸகல விஷயங்களிலேயும் நீங்கள் எனது தீர்மானத்தை பக்தி விசுவாசத்துடன் ஏற்றுக்

கொள்ளத் தயாராக இருக்கிறீர்க ளென்பது தெளிவா
கிறது. என்னையும் எனது ராணியையும் வரவேற்பதில்
நீங்கள் செய்த ஆனந்த கோஷங்களினுல் என்ன தெரி
கிறது? வைதிக ஆசாரங்களுக்கு விரோதமாகத்
தோன்றக்கூடிய செய்கைகளிலே கூட நீங்கள் சிறி
தேனும் திகைப்பில்லாமல் என்னிடம் ராஜ பக்தி
செலுத்துவீர்க ளென்று தெரிகிறது. சில வருஷங்க
ளாக எனது விவாகத்தைப் பற்றி ஆழ்ந்த சிந்தனை
செய்துகொண்டு வந்தேன். இன்னவிதமான பத்தினி
இருந்தால் தான் நமக்குக் குடும்ப ஸந்தோஷமும்,
ராஜ்யபாரத்திலே உதவியும் உண்டாகு மென்பதைப்
பற்றி என்னுடைய புயிற்சியினிருந்தும், யாத்திரைகளி
லிருந்தும் எனக்குச் சில விசேஷ அபிப்பிராயங்கள்
ஏற்பட்டிருந்தன. நமது ஜன ஸமூஹம் இப்போ
திருக்கும் நிலைமையில் நான் விரும்பியகுணங்களுடைய
ஸ்திரீ நமக்குள் அகப்படுவது சாத்தியமில்லை யென்று
கண்டேன். இதற்காக சுதேசிய அபிமானத்தின்
வெளித்தோற்றத்தைக் கொஞ்சம் இழந்து விடுதல்
அவசியமென்றும் நிச்சயித்தேன். 'சுதேசிய அபி
மானத்தின் வெளித்தோற்றம்' என்று சொல்லுகி
றேன். ஏனென்றால் எத்தனையோ அன்ய தேசங்
களிலே பிறந்தாலும் தாம் ஸ்வீகாரம் செய்துகொண்ட
தேசத்தாருடன் பரிபூர்ணமாக ஒற்றுமைப்பட்டுப்
போவதை நாம் அறிவோம். இத்தனை காலம் கழித்துக்
கடைசியாக எனது அபீஷ்டங்களுக்கு இணங்கிய பத்
தினியை எனக்கு ஈசன் அருள்செய்திருக்கிறார். எங்க
ளிருவருடைய ஆட்சியிலே இந்த ராஜ்யம் முன்னைக்

காட்டிலும் அதிக சேஷமத்துடனும் ஸந்தோஷத்துட னும் இருக்குமென்று நம்புகிறேன்" என்பதாக அந்த நண்பர் ஒரு மட்டில் வாசித்து முடித்தார்.

"சரி, அனுபவக் குறைவினால் சொல்லி விட்டார். அறல்யா பாயி முதலிய ஹிந்து ராணிகளைப் பற்றி அவர் தக்க ஆராய்ச்சி செய்ததில்லை" என்று ஜவாப் தெரிவித்தேன்.

"அடா, இப்போது கூட பதோடா மஹாராணி இல்லையா?" என்று மற்றொருவர் குறுக்கிட்டார்.

"வேறு விஷயம் பேசுவோம்" என்று சொல்லி விட்டேன்.

தீர்ப்பு எப்படி யிருக்கு மென்பதை நீங்களே ஊஹித்துக் கொள்ளலாம்.

4

நேற்று மாலை தராசுக் கடைக்கு சதுரங்க பட்டணத்திலிருந்து ஒரு மாத்வ (ராவ்ஜீ) வாலிபன் வந்தான். "தராசுக் கடை இதுதானே?" என்று கேட்டான். "ஆம்" என்றேன். என் பக்கத்திலிருந்த தராசை ஒரு கோணற் பார்வையாகப் பார்த்தான். கொஞ்சம் மீசையைத் திருத்தி விட்டுக் கொண்டான். மூக்குக் கண்ணாடியை நேராக்கிக் கொண்டான். மனதுக்குள் ஏதோ இங்கிலீஷ் வார்த்தைகள் சொல்லிக் கொண்டான். என்னை ஒரு பார்வை பார்த்தான்.

"நான் கேட்கிற கேள்விக்கு விடை நீர் சொல்லுவீரா? இந்தத் தராசு சொல்லுமா?" என்று கேட்டான்.

"காசு தான் சொல்லும்" என்றேன்.

நம்பிக்கை கொள்ளாதவன் போலே விழித்தான். "அப்படித்தான் சென்னப்பட்டணத்தில் கேள்விப் பட்டேன். ஆச்சரியமான காசு! உமக்கெங்கே கிடைத்தது? தமிழ் தான் பேசுமோ? இங்கிலீஷ் தெரியாதாமே? 'வொன்-டர்-புல், வெரி, வெரி வொன்-டர்-புல்" என்று இங்கிலீஷில் கொன்று ஸமாப்தி பண்ணினான்.

"நீ கேட்க வந்த விஷயங்களைச் சொல். வீணாக நேரம் கழிப்பதில் பயனில்லை" என்று நினைப்பூட்டினேன்.

அந்தப் பிள்ளையின் பெயர் வாஸுதேவராவ். வாஸுதேவராவ் சொல்லுகிறான் :—"வாலன்டர் பட்டாளம் சேர்க்கிறார்களே, அந்த விஷயம் உம்முடைய காசுக்குத் தெரிந்திருக்கு மென்றே நினைக்கிறேன். எல்லாம் தெரிந்து எந்தக் கேள்வி கேட்டாலும் விடை சொல்லக்கூடிய மாயக் காசுக்கு இது தெரியாமலிருக்குமா? 'அப்கோர்ஸ்', தெரிந்துதான் இருக்கும். அதிலே சேரலாமா? சேர்ந்தால் பயனுண்டா? இதுவரை நம்மவர்களுக்கு தகாத்த பதவி கொடுப்பதில்லை யென்று வைத்திருந்த வழக்கத்தை மாற்றி இப்போது புதிய விதிப்படி நமக்கு ராணுவ உத்யோகங்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறார்களென்று தெரிகிறது. இது நம்பத்தக்க செய்திதானே? நான் எப்படியேனும் நம்முடைய பாரத மாதாவுக்கு உழைக்க வேண்டுமென்ற கருத்துடனிருக்கிறேன். இந்தப் பட்

டாளத்தில் நாம் சேர்வதனால் நமது தேசத்துக்கு ஏதே னும் நன்மை யேற்படுமா என்ற விஷயம் என் புத்திக்கு நிச்சயப்படவில்லை. அதை உம்முடைய கீர்த்தி பெற்ற தாசினிடம் ஆராய்ச்சி செய்ய வந்தேன்" என்றான்.

"ஆராய்ச்சியா?" என்று தாசு கேட்டது.

அதற்கு வாஸுதேவன் சொல்லுகிறான்:—"ஆம்! ஆராய்ச்சி; அதாவது பரியாலோசனை; இதை இங்கி லீஷில் 'கன்ஸல்டேஷன்' என்று சொல்லுவார்கள். இங்கிலீஷ் பாஷையில் சொல்லக்கூடிய 'ஐடியாஸ்' நம் முடைய தாய்ப் பாஷைகளில் சொல்ல முடியவில்லை. 'நெவர்மைண்ட்.' அதுவே விஷயம். 'கிப்ளிங்' என்ற இங்கிலீஷ் கவிராயர் சொல்வது போலே, 'அது மற் றொரு கதை'; நான் கேட்க வந்த விஷயத்துக்கு விடை சொல்லவேண்டும்" என்றான்.

அப்போது நான் வாஸுதேவனை நோக்கி, "நீ ஏன் கேட்கிறாய்? நீ பட்டாளத்தில் சேரப் போகி றாயா?" என்றேன்.

அதற்கு வாஸுதேவன்:—"ஆஹா! நான் சேர்வ தென்றால் ஏதோ ஸாமான்யமாக நினைத்துவிட வேண் டாம், எனக்குச் சென்னப்பட்டணம் முதல் டின்னெ வெல்லி வரைக்கும் ஒவ்வொரு முக்யமான ஊரிலும் ஸ்நேஹிதர் இருக்கிறார்கள். நான் சேர்ந்தால் அவர்க ளத்தனை பேரும் சேர்வார்கள்; நான் சேராவிட்டால் அவர்கள் சேரமாட்டார்கள்" என்றான்.

தாசு கட கட கட வென்று சிரித்தது.

வாஸுதேவனுடைய கண்ணங்கள் சிவந்து போயின. மூக்குக் கண்ணாடியை நேரே வைத்துக் கொண்டான். மீசையைத் திருகினான். "'வாட் இஸ் திஸ்!' இந்தத் தராசு என்னை நோக்கி ஏன் சிரிக்கிறது?" என்று மஹா கோபத்துடன் என்னை நோக்கிக் கேட்டான்.

அப்போது தராசு சொல்லுகிறது :—"மூன்று ஒரு கடவை ஒரு வக்கீல் என்னிடம் வந்து எனக்குச் சில ஞாபேதசங்கள் செய்து விட்டுப் போனார். அதாவது, ராஜ்ய விஷயங்களைப்பற்றி நான் எவ்விதமான அபிப்பிராயங்களும் சொல்லக்கூடாதென்றும், சண்டை சமயத்தில் ராஜ்ய விஷயங்களைப் பற்றி யாரும் ஒரு வார்த்தைகூடப் பேசாமலிருப்பதே நாம் இந்த ராஜாங்கத்தாருக்குச் செலுத்த வேண்டிய கடமையென்றும் பல முறை வற்புறுத்திச் சொன்னார். நானும் அவர் சொல்வது முழுதும் நியாயமென்பதை அங்கீகரித்து, நம்மால் கூடியவரை இந்த ராஜாங்கத்தாருக்குத் திருப்தியாகவே நடந்து விட்டுப் போகலாமென்ற எண்ணத்தால், அவருடைய சொற்படி நடப்பதாக வாக்குக் கொடுத்துவிட்டேன். நீயோ, ராஜ்ய விஷயமான கேள்வி கேட்கிறாய். என்ன செய்வதென்று யோசனை பண்ணுகிறேன்" என்று தராசு சொல்லிற்று.

அப்போது வாஸுதேவன் :—"'நோ, நோ, நோ'; இல்லை, இல்லை; நீ என்னை கேலிபண்ணிச் சிரிக்கிறாய். நான் மதிப்புடன் கேட்க வந்தேன். உன்னுடைய குணம் எனக்குத் தெரியாமல் போய்விட்டது.

போனால் போகட்டும்; நீ சிரித்ததைப்பற்றி எனக்குப் பெரிய காரியமில்லை. உன்னைப் பொறுத்து விடுகிறேன். நான் கேட்க வந்த விஷயத்துக்கு விடை சொல்லு" என்றான்.

அதற்குக் காசு :—"தம்பி, நான் உனக்கு பயந்து ஒன்றையும் மறைத்துப் பேசவில்லை. நீ கேட்க வந்த விஷயத்துக்கு மறுமொழி எற்கெனவே சொல்லி யாய்விட்டது. சிரித்தது உன்னைக் குறித்தே தான். அதில் சந்தேகமில்லை" என்றது.

"காரணமென்ன?" என்று வாஸுதேவன் சினத்தோடு விசாரித்தான்.

"தேசத்துக்குச் சண்டை போடக்கூடிய வீரனை உன்னைப் பார்க்கும்போது தோன்றவில்லை. சண்டையிலே சேர்கிறவன் இத்தனை ஆராய்ச்சியும், பரியாலோசனையும், கன்ஸல்டேஷனும் நடத்தமாட்டான். படலென்று போய்ச் சேர்ந்துவிடுவான்" என்று காசு சொல்லிற்று.

"என்னை நீ போலீஸ்காரனென்று நினைக்கிறாயா?" என்று வாஸுதேவன் கேட்டான்.

"நான் அப்படிச் சொல்லவில்லை" என்றது காசு.

"நான் போய் வரலாமா?" என்று வாஸுதேவன் கேட்டான்.

"போய் வா" என்றது காசு.

அவன் போன பிறகு காசு என்னிடம் சொல்லுகிறது :—"இவன் உளவு பார்க்க வந்தவன். சந்தேக

மில்லை. பட்டாளத்தில் சேர்ந்து தேசத்தைக் காப்பாற்றக்கூடிய யோக்யதை யுடையவன் இத்தனை வீண் பேச்சுப் பேசமாட்டான். அவனுக்கு இத்தனை கர்வமிராது.”

5

நேற்றுக் காலையிலே பொழுது விடிந்து இரண்டு நாழிகைக்கு முன்னே நமது தராசுக் கடைக்குச் சென்னப்பட்டணத்திலிருந்து ஒரு வக்கீல் வந்தார். இவருக்கு 40 வயதிருக்கும். ஜாதியிலே பிராமணர். சிவப்பு நிறம். உருளைக் கிழங்கைப் போலே நல்ல வட்டமான சதைபற்றிய முகம். நெற்றியிலே கோபீ சந்தனம். இலேசான தொப்பை. அதை மறைத்து ‘அல்பாகா’ என்ற பட்டுத்துணி யுடுப்பு. காலிலே இங்கிலீஷ் செருப்பு. தலையிலே மஸ்லின் பாகை. தங்க வினிம்புடைய மூக்குக் கண்ணாடி. உடுப்புப் பையிலே தங்கக் கடியாரம், சங்கிலி முதலியன.

இவருக்குக் கண்ணிலே ஒரு குறை. ஸமீபத்திலிருக்கிற பொருள் நேரே தெரியாது; தூரத்திலேயிருப்பது தெரியும். எனவே, கண் முன்னே பெரிய தராசு தொங்க விட்டிருப்பதை இவர் காணாமல் கொஞ்சம் விலகியிருந்த நமது நண்பர் எலிக்குஞ்சுச் செட்டியாரை நோக்கித் திரும்பிக்கொண்டு :—“தராசே, தராசே, உன்னுடைய கீர்த்தி சென்னப்பட்டணமெல்லாம் பரவி யிருக்கிறது. உன்னிடம் சில கேள்விகள் கேட்கும்பொருட்டு வந்தேன். கேட்கலாமா?” என்றார்.

அதற்குச் செட்டியார் :—“நான் தராசில்லை,

சாமி; நான் எலிக்குஞ்சு செட்டியார். அதோ கிழக்கே தெரிகிறதே, அதுதான் ராசு. பக்கத்தி லிருக்கிறாரே, அவர்தான் ராசுக் கடை அய்யர்" என்றார்.

வக்கீல் கொஞ்சம் வெட்கமடைந்தார். நான் விஷயத்தை அறிந்துகொண்டு வேண்டிய உபசார வார்த்தைகள் சொல்லி முடித்த பிறகு, ராசினிடம் வக்கீல் கேள்விகள் போடத் தொடங்கினார்:—

வக்கீல்:—"நமது தேசத்துக் காருண்ய கவர்ன் மெண்டார் நமக்கு எப்போது ஸ்வராஜ்யம் கொடுப் பார்கள்?"

ராசு:—"ஒவ்வொரு கிராமத்திலும் ஜனத் தலை வர் பள்ளிக்கூடங்கள் வைத்து, தேச பாஷைகளிலே புதிய படிப்புச் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்தால், உடனே கொடுத்துவிடுவார்கள்."

வக்கீல்:—"அது எப்போது முடியும்?"

ராசு:—நீர் போய் நான்கு கிராமங்களில் நான் சொல்லியபடி பள்ளிக்கூடங்கள் ஏற்பாடு செய்து விட்டுப் பிறகு வந்து கேளும், சொல்லுகிறேன்."

வக்கீல்:—"அது சரி, மற்றொரு கேள்வி கேட் கிறேன். செத்துப்போன பிறகு மறு ஜென்ம முண்டா?"

ராசு:—"உண்டு. மனுஷ்ய மில்லாத பேடி கள் புழுக்களாகப் பிறப்பார்கள். பிறர் துன்பங்களை அறியாமல் சுயநினைப்பை விரும்பினோர் பன்றிகளாகப்

பிறப்பார்கள். சொந்த பாஷை கற்றுக்கொள்ளாதவர் குரங்குகளாகப் பிறப்பார்கள். சோம்பேறிகள் எருமைகளாகப் பிறப்பார்கள். அநீதி செய்வோர் தேளாகப் பிறப்பார்கள். பிறரை அடிமைப் படுத்துவோர் வண்ணான் கழுதைகளாகப் பிறப்பார்கள். ஸ்திரீகளை இம்சை செய்வோர் நபும்ஸகராகப் பிறப்பார்கள். ஸமத்துவத்தை மறுப்போர் நொண்டிகளாகப் பிறப்பார்கள். கருணையில்லாதவர் குருடராகவும், தமது கல்வியைப் பிறருக்குக் கற்றுக் கொடாதவர் ஊமைகளாகவும், அச்சமூடையோர் ஆந்தைகளாகவும் பிறப்பார்கள். மறு ஜன்மம் வரையிலே கூடப் போகவேண்டாம். இந்த ஜன்மத்திலேயே பாவி, கோழை மூதலியவர்கள் தாழ்ந்த ஜந்துக்களாக இருப்பதை அவர்களுடைய அந்தக்கரணத்திலே பார்க்கலாம்."

வக்கீல்:—"என் தாதே, பயப்பட்டால் அது கூட ஒரு பாவமா?"

தாசு:—"ஆம். அதுதான் எல்லாப் பாவங்களுக்கும் மேல். அதர்மத்தைக் கண்டு நகைக்காமல் எவன் அதற்கு பயப்படுகிறானே அந்த நீசன் எல்லாப் பாவங்களும் செய்வான். அவன் விஷப் பூச்சி; அவன் தேள்; அவனை மனித ஜாதியார் விலக்கி வைக்கவேண்டும்."

வக்கீல்:—"அப்படியானால் மனைதரியம் ஒரு புண்ணியமா?"

தாசு:—"ஆம். அது தெய்வபக்திக்கு ஸமமான புண்ணியம். உண்மையான தெய்வபக்தி யிருந்தால் மனைதரிய முண்டாகும்; மனைதரியம் இருந்தால்

உண்மையான தெய்வபக்தி உண்டாகும். மனோதைரி யத்தினால் ஒருவன் இந்த ஜன்மத்திலேயே தேவநிலை பெறுவான். ஆண்மை, வெற்றி முதலிய தெய்வ சக்தி கள் அவனைச் சேரும். அந்தாத மனோதைரியத்தைக் காட்டிலும் சிறந்த புண்ணியம் இவ்வுலகத்தில் இல்லை; வானத்திலுமில்லை, அதனால் மனிதன் எல்லா இன்பங் களையும் பெறுவான்.''

வக்கீல் :—"சரி, வேறொரு கேள்வி கேட்கிறேன்; ஒருவனுக்கு வக்கீல் வேலையில் நல்ல வரும்படி வரா விட்டால் அதற்கென்ன செய்யலாம்?"

தாசு :—"அந்த வேலையை விட்டு வியாபாரம் அல்லது கைத்தொழில் தொடங்கலாம். பள்ளிக் கூடங்கள் நடத்தலாம். சாஸ்திர ஆராய்ச்சிகள் செய் யலாம்."

வக்கீல் :—"சாஸ்த்ர ஆராய்ச்சி செய்தால் பணம் வருமா? லக்ஷ்மிக்கும் சரஸ்வதிக்கும் விரோத மென்று சொல்லுகிறார்களே?"

தாசு :—"அதெல்லாம் பழங்கதை. எல்லாவித மான செல்வங்களுக்கும் அறிவு தான் வேர். அறி விருந்தால் எதையும் வெல்லலாம். சாஸ்திர வலிமையே வலிமை. உலகத்தில் இப்போது அதிகச் செல்வத் துடன் இருக்கும் ஜாதியாரெல்லாம் சாஸ்திர வலிமை யாலே செல்வம் பெற்றார்கள்."

வக்கீல்:—"இன்னுமொரு கேள்வி. இழந்துபோன யௌவனத்தை மீளவும் பெறவேண்டுமானால் அதற்கு வழி யென்ன?"

காசு :—" ஒரு வருஷம் மனதிலும் சரீரத்திலும் பிரமசரிய விரதத்தை அனுசரிக்கவேண்டும். காலையில் ஸ்நானம் செய்யவேண்டும். கை கால்களை உழைக்க வேண்டும். யௌவனமுடைய பிள்ளைகளுடன் ஸஹவாஸம் செய்ய வேண்டும். பயத்தை விடவேண்டும். மனைதரியம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தெய்வ பக்தி உண்டாக்கிக் கொள்ளவேண்டும். பிறரைத் தாழ்வாக நினைக்கலாகாது. புதிய புதிய கல்விகள் கற்கவேண்டும்."

வக்கீல் :—" கண் நோய் குணப்பட வழியுண்டா ?"

காசு :—"உண்டு. மூக்குக் கண்ணாடியைக் கழற்றியெறிந்து விடும். தெரிந்த வரை படித்தால் போதும். மனதிலே தோன்றிய உண்மைகளையும் நியாயங்களையும் வழக்கத்திலே கொண்டுவர முயற்சி செய்யும். எதிலும், எப்போதும், யாருக்குப் பயந்தும், மனம் வேறு செய்கை வேறுக நடிக்கலாகாது. தாழ்ந்த ஜாதியாருக்குப் பள்ளிக்கூடம் போட்டுப் பாடஞ் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்யும். கண் நோராகி விடும்."

வக்கீல் :—" நீ சொல்லும் மருந்தெல்லாம் ஒரு மாதிரி விநோதமாக இருக்கிறதே !"

காசு :—" வேறு கேள்வியுண்டா ?"

வக்கீல் :—" இல்லை. காசே, நமஸ்காரம், நான் போய் வருகிறேன்."

திரும்பிப் போகும்போது வக்கீல் முகமலர்ச்சி

யுடன் போனர். காசு அவரைக் காட்டி, "இன்னும் ஒரு வருஷத்தில் இவர் மனைவியை விடுவார்" என்று சொல்லிற்று.

6

காசுக் கடையின் வெளிப்புறத்திலே சில தினங்களின் முன்பு பின்வரும் விளம்பரம் எழுதி ஒட்டப்பட்டது :—

"இங்கு நீடித்த விலைமதிப்புள்ள ஸாமான் மாத்திரமே நிறுக்கப்படும். விரைவிலே அழிந்து போகக்கூடிய, விலை குறைந்த ஸாமான்கள் நிறுக்கப்பட மாட்டா."

இந்த விளம்பரத்தைப் படித்துவிட்டு, ஜிந்காமியான் ஸெட் என்னிடத்தில் வந்து, "உமது வியாபாரத்திலே கொள்கைகளும், சிந்தனைகளும், மனைதர்மங்களுந் தானே சரக்கு? இதில், நீண்ட மதிப்புடைய தென்றும், விரைவில் அழிந்து போகக்கூடிய வஸ்து வென்றும் பிரித்த தெப்படி? மனைதைப் பற்றிய விஷயமெல்லாம் நீடித்ததுதானே?" என்று கேட்டார்.

"அறிவுத்துணிவுகள், தர்மக் கொள்கைகள் இவற்றிலும் பொன்னைப்போலே நீடித்து நிற்பனவும், வெற்றிலையைப் போலே விரைவில் அழிவனவும், ஓட்டாஞ்சல்லி போலே பயனற்றனவும் உண்டு" என்றேன்.

"பயனற்றதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லும்" என்றார்.

"சிறையூர் ஜமீந்தார் தர்ம ப்ரஸங்கம்" என்றேன்.

"அதென்ன கதை?" என்று ஸெட் கேட்டார்.

"தென்னாட்டிலே சிறையூர் என்றொரு கிராமம் இருக்கிறது. அங்கே பழைய காலத்தில் க்ஷத்ரியராக இருந்து இப்போது மாட்சிமை குறைந்து போயிருக்கும் மறக்குலத்திலே பழம்புலித் தேவர் என்ற ஒரு ஜமீந்தார் இருக்கிறார். அவர் சிறிது காலமாக தர்மோபதேசம் செய்யத் தொடங்கி, 'மூச்சு விடத் தகுதியுள்ளவர் யார், தகுதியில்லாதவர் யார்? பல்லக்கம் தரிக்கத் தக்கோர் யார், தகாதோர் யார்?' என்ற விஷயங்களைப்பற்றி உபந்யாஸங்கள் செய்து வருகிறார். இது போன்ற வீண் சங்கதிகளை நமது தராசு கவனிக்க மாட்டாது" என்றேன்.

7

நேற்றுக் காலை, தராசுக்கடைக்கு வெளி ஜனங்கள் யாரும் வரவில்லை. ஜிந்தாமியான் ஸேட் வந்து உட்கார்ந்தார். வழக்கம் போல வேடிக்கை பார்க்க வந்தாரென்று நினைத்தேன்.

"ஸேட் ஸாஹேப், என்ன விசேஷம்?" என்று கேட்டேன்.

"தராசினிடம் சில கேள்விகள் கேட்க வந்தேன்" என்றார்.

"சரி கேளும்" என்றேன்.

"தர்ம ப்ரஸங்கம் செய்யத் தகுதியுடையோர் யார்?" என்று கேட்டார்.

தராசு சொல்லிற்று:—"கலங்காத நெஞ்சுடையோனே தீரர்."

"அப்படியில்லாதோர் கர்ம ப்ரஸங்கம் செய்யக்கூலைப்பட்டோலோ?" என்று லைட் கேட்டார்.

காசு "மற்றோர் அதை கவனிக்கக் கூடாது" என்றது.

பிறகு ஜிங்காமியான் :—"ஆண்களுக்கு விதவையைப் பற்றிப் பேசலாமோ?"

காசு :—"பேசலாம்."

லைட் :—"முயற்சி கைகூடுமோ?"

காசு :—"தொடங்குமுன்னே எந்த முயற்சியும் கைகூடுமா கூடாதா என்று ஜோதிஷம் பார்ப்பதிலே பயனில்லை; தொடங்கி நடத்தினால் பிறகு தெரியும்."

சிறிது நேரம் சும்மா யிருந்துவிட்டு, ஜிங்காமியான் மறுபடி பின்வரும் கேள்வி கேட்டார் :—

"வருகிறேனென்று சொல்லி வாராதவர்களையும் தருகிறேனென்று சொல்லித் தாராதவர்களையும் என்ன செய்யலாம்?"

காசு, "சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி" என்றது.

"விளக்கிச் சொல்லு" என்று லைட் வற்புறுத்தினர்.

காசு சொல்வதாயிற்று :—தருகிறேனென்று சொல்லும்போதே பின்னிட்டுத் தம்மால் கொடுக்க முடியாதென்பதை அறிந்துகொண்டு சொல்வோர் புழுக்கள். அவர்களைப் படுக்கவைத்துக் கை கால்களைக் கட்டி மேலே ஒரு மூட்டை கட்டெறும்பைக் கொட்டிக் கடிக்கவிடவேண்டும். தருகிறேனென்று

சொல்லும்போது உண்மையாகவே கொடுக்க வேண்டு மென்ற எண்ணத்துடன் சொல்லிவிட்டுப் பின்பு சௌகர்யமில்லாமையால் கொடுக்காதிருப்போர் மூன் யோசனையற்றவர்கள். இவர்களை நல்ல சவுக்கினால் இரண்டடி அடித்துவிட்டுப் பின் முகதரிசனமில்லாமல் இருக்கவேண்டும். வருகிறேனென்று சொல்லி வராத வர்களையும், இதைப்போலவே இரண்டு பகுதிகளாக்கிக் குற்றத்திற்குத் தக்கபடி சிக்ஷை விதிக்கவேண்டும்.'' இதைக் கேட்டு ஜிந்காமியான் சில நிமிஷங்கள் வரை ஒன்றும் பேசாமல் யோசனை செய்துகொண்டிருந் தார். பிறகு நான் அவரை நோக்கி, ''இன்னும் ஏதே னும் கேள்வியுண்டா?'' என்றேன். ''ஒன்றுமில்லை'' என்று சொல்லிவிட்டார்.

* * *

தராசைக் கட்டி உள்ளே வைத்து விட்டுக் கடையை மூடிய பிறகு நானும் ஜிந்காமியான் ஸேட் டும் வீட்டுக்குத் திரும்பினோம். வரும் வழியிலே நான் ஸேட்டைப் பார்த்து ''ஸேட் ஸாஹேப், 'வருகிறே னென்று வாராதவர், தருகிறேனென்று தாராதவர்' என்பதாக ஏதோ நீண்ட கேள்வி கேட்டீரே; மனதில் எதை வைத்துக்கொண்டு கேட்டீர்?'' என்றேன்.

ஸேட் மறுமொழி சொல்லாமல் புன்சிரிப்புச் சிரித்தார்.

''வியாபார விஷயமோ?'' என்றேன்.

''இல்லை'' என்று தலையை அசைத்தார்.

''குடும்ப விவகாரமோ?'' என்றேன்.

மறுபடியும் "இல்லை" என்றார்.

"அப்படியானால் விஷயந்தான னென்ன? சொல்லுமே" என்றேன்.

லேட் பின்வரும் கதை சொல்லலானார்:—

"ஒரு வாரத்துக்கு முன்பு எங்கள் வீட்டுக்கு ஒரு தமிழ்ப் பாதேசி வந்தான். எனக்கு இந்தப் பாதேசிகளிடம் நம்பிக்கை கிடையாது. எங்கள் மாமா ஒரு கிழவர் இருக்கிறாரே, அவருக்கு பயித்தியம் அதிகம். அவருடன் நெடுநேரம் வார்த்தை சொல்லிக் கொண்டிருந்தான். நானும் பொழுது போக்குக்காக ஸமீபத்திலிருந்து கேட்டுக்கொண்டிருந்தேன். இரண்டு மணி நேரத்துக்குள், மாமா மனதில் இந்தப் பாதேசி பெரிய யோகி யென்ற எண்ணம் உண்டாய்விட்டது. கதையை வளர்த்துப் பிரயோஜனமில்லை. நம்பக் கூடாத, சாத்தியமில்லாத, அசம்பாவிதமான இரண்டு மூன்று ஸாமான்கள் மூன்று தினங்களுக்குள் கொண்டுவருவதாகச் சொல்லி, அவரிடமிருந்து ஐம்பது ரூபாய் வாங்கிக்கொண்டு போய்விட்டான். குறிப்பிட்ட நாளில் வரவில்லை. அதை நினைத்துக்கொண்டு கேட்டேன்."

எனக்குக் கோபம் வந்துவிட்டது.

"உஸ், லேட்ஸாதேஹப், யாரிடத்திலே காணும் இந்த மூட்டை அளக்கிறீர்? ஐம்பது ரூபாய், பாதேசி, —பாட்டி கதை. ஸம்மதமுண்டானால் மனதிலுள்ளதைச் சொல்லும். இல்லாவிட்டால், ஸைகார்யப் படாதென்று சொல்லிவிடும்" என்றேன்.

ஸைட் சிறிது நேரம் யோசனை செய்துவிட்டு, உம்முடைய காரசுக்குப் புத்தியில்லை. என் மனதி லிருந்தை சரியாகக் கண்டுபிடித்து மறுமொழி சொல்லவில்லை. நானும் அதை உம்மிடத்திலே சொல்ல முடியாது. வேண்டுமானால் காரசையே கேட்டுத் தெரிந்து கொள்ளும்" என்றார்.

நான் சிறிது நேயுடன், "காரசு பிறர் மனதி லிருப்பதைக் கண்டு சொல்லாது. நேரே கேட்டால் நேரே மறுமொழி சொல்லும்" என்றேன்.

"அப்படியானால் அடுத்த வியாழக்கிழமை வந்து சரியானபடி கேட்கிறேன்" என்று சொல்லிப் பிரிந்து விட்டார். விஷயம் போகப் போகத் தெரியும்.

மைசூரிலிருந்து நம்முடைய கடைக்கு ஒரு ஐயங்கார் வந்தார்; "என்ன தொழில்?" என்று கேட்டேன்.

"சமாசாரப் பத்திரிகைகளுக்கு விஷய தானம் செய்து ஜீவிக்கிறேன்" என்று இங்கிலீஷிலே மறு மொழி சொன்னார்; "இங்கிலீஷ் பத்திரிகைகளுக்கு" என்றார். "நல்ல லாபமுண்டா?" என்று கேட்டேன்.

"ஒரு பத்திக்கு 6 ரூபாய் கிடைக்கிறது. மாதத் திலே ஏழெட்டு வியாஸந்தான் எழுத முடிகிறது. ஒரு வியாஸம் அனேகமாக ஒரு பத்திக்கு மேலே போகாது. என்னுடைய வியாஸங்களுக்கு நல்ல மதிப்பிருக்கிறது. சில சமயங்களில் எனது வியாஸமே தலையங்கமாகப்

பிரசுரம் செய்யப்படுகிறது. ஆனாலும், அதிக லாப மில்லை. சிரமத்துடனே தான் ஜீவனம் நடக்கிறது. அன்றன்று வியாஸமெழுதி அன்றன்று பசி தீர்கிறது. எனக்கு இரண்டு குழந்தைகள். அந்தக் குழந்தைகளை யும் பத்தினியையும் ஸம்ரக்ஷணை பண்ணா இதனை பாடு படுகிறேன்" என்று இங்க்லீஷிலே சொன்னர்.

"இவருக்குத் தமிழ் தெரியாதோ?" என்று தாசு கேட்டது.

ஐயங்கார் சொன்னர், இங்கிலீஷில் :—"தமிழ் தெரியும். நெடுங்காலம் கன்னட தேசத்தில் பழகினை படியால் தமிழ் கொச்சையாக வரும். அதனல் இங்கி லீஷில் பேசுகிறேன்."

தாசு சொல்லுகிறது :—"கொச்சையாக இருந் தால் பெரிய காரியமில்லை. சும்மா தமிழிலேயே சொல்லும்."

ஐயங்காருடைய முகத்தைப் பார்த்தபோது அவர் ஸங்கடப்படுவதாகத் தோன்றிற்று. அதன் பேரில், ஐயங்கார் இங்கிலீஷிலேயே வார்த்தை சொல்லும் படிக்கும், நான் அதைத் தாசினிடத்திலே மொழி பெயர்த்துச் சொல்லும்படிக்கும் தாசினிடம் அனு மதி பெற்றுக்கொண்டேன்.

தாசு கேட்கிறது :—"ஐயங்காரே, கையிலே என்ன மூட்டை ?"

ஐயங்கார் "பத்திரிகை வியாஸங்களைக் கத்த ரித்து இந்தப் புஸ்தகத்திலே ஒட்டி வைத்திருக்கிறேன்.

ஸ்மம்கழுண்டானல் பார்வையிடலாம்" என்று அந்த மூட்டையைக் காசின் முன்னே வைக்கார். காசு அந்தப் புஸ்தகத்தைப் பரிசோதனை செய்து பார்த்து, "நன்றுகத்தான் இருக்கிறது" என்றது.

இதைக் கேட்டவுடனே ஐயங்கார்:—"யூ ஸீ மிஸ்டர் பாலன்ஸ்" என்று தொடங்கி.....(அடடா! இங்கிலீஷில் அப்படியே எழுதுகிறேன்; வேறெங் கேயோ ஞாபகம்).

ஐயங்கார் சொல்லுகிறார்:—"கேளாய், காசே, நானும் எத்தனையோ வியாஸங்கள் எழுதுகிறேன். பிறர் எழுதுவதையும் பார்த்திருக்கிறேன். ஆனலும், அந்த இங்கிலீஷ்காரருக்கு இங்கிலீஷ் பாஷை எப்படி வசப்பட்டு நிற்கிறதோ, அந்த மாதிரி நம்மவருக்கில்லை. நான் இப்போது இரண்டு மூன்று நாளாக ஒரு இங்கிலீஷ் புஸ்தகம் வாசித்துக்கொண்டு வருகிறேன். ஆஹாஹா! வசனந்தான் என்ன அழகு; நடை எத்தனை நேர்த்தி! பதங்களின் சேர்க்கை எவ்வளவு நயம்!" என்று ஒரே ஸங்கதியைப் பதினேழு விதங்களிலே சொல்லிப் புகழ்ச்சி செய்யத் தொடங்கினர்.

அதற்குக் காசு:—"ஸ்வாமீ, இந்த ஜன்மம் இப்படித் தமிழப் பிராமண ஜன்மமாக எடுத்துத் தீர்ந்து போய்விட்டது. இனிமேல் இதைக் குறித்து விசாரப் பட்டுப் பயனில்லை. மேலே நடக்கவேண்டிய செய்தியைப் பாரும்" என்றது.

இப்படி யிருக்கும் போது, வெளிப் புறத்தில் யாரோ சீமைச் செருப்புப் போட்டு நடந்து வரும்

சத்தம் கேட்டது. சில கணங்களுக்குள்ளே, ஒரு ஆங்கிலேயர் நமது காரகுக் கடைக்குள் புகுந்தார். வந்தவர் தமிழிலே பேசினர் :—"காலை வந்தனம்."

"காளஸுக்கடை இதுவாக இருக்கிறதா?" என்று கேட்டார்.

"ஆம்" என்றேன்.

"காளஸு எல்லாக் கேள்விக்கு படில் சொல்லுமா?"

"சொல்லும். ஆனல், நீர் இங்கிலீஷ் பேசலாம்; தமிழ்ப் பேசித் தொல்லைப் படவேண்டாம்" என்றேன்.

அப்போது காரசு:—"இந்த ஆங்கிலேயர் இப்போது எந்த ஊரிலே வாசம் செய்து வருகிறூர்? இவர் யார்? என்ன வேலை?" என்று கேட்டது.

எனது கேள்விக்கும் காரசின் கேள்விக்கும் சேர்த்து, மேற்படி ஆங்கிலேயர் பின்வருமாறு மறுமொழி சொன்னர் :—

"எனக்குத் தமிழ் பேசுவதிலே பிரியமதிகம்." (ஆங்கிலேயர் பேசிய கொச்சைத் தமிழை எழுதாமல் மாற்றி எழுதுகிறேன்).

ஆங்கிலேயர் சொல்லியது :—"எனக்குத் தமிழ் பேசுவதிலே பிரியமதிகம். அது நல்ல பாஷை. தமிழ் ஜனங்களும் நல்ல ஜனங்கள். நான் அவர்களுக்கு 'சுய-ஆட்சி' கொடுக்கலாமென்ற கக்ஷியைச் சேர்ந்தவன். இன்னும் கொஞ்ச கொஞ்ச காலத்துக்குள் சில சுதந்திரங்கள் வருமென்று நிச்சயமாக நம்புகி

றேன். என் உத்தியோகம், நான் இப்போது வசித்து வரும் ஊர்—எல்லாவற்றையும் தங்களிடம் சொல்லிவிடு கிறேன். ஆனால் அதைத் தாங்கள் எந்தப் பத்திரிகை யிலும் போடக்கூடாது" என்றார்.

'சரி' என்ற பிறகு தமது பூர்வமெல்லாம் சொன் னார். அவரிடம் வாக்குக் கொடுத்தபடி இங்கே அந்த வார்த்தைகள் எழுதப்படவில்லை.

அப்போது தாசு சொல்லுகிறது :—" ஆங்கி லேயரே, உம்மைப் பார்த்தால் நல்ல மனிதனைத் தெரிகிறது. பொறுத்துக்கொண்டிரும். இந்த ஐயங் கார் கேள்விகள் போட்டு முடித்த பிறகு உம்மிடம் வருவோம்." "ஐயங்காரே, தம்முடைய கேள்விகள் முடக்கலாம்."

ஐயங்கார் சொல்லுகிறார், (இங்கிலீஷில்):— "இந்த ஆங்கிலேயரின் கேள்விகளை முதலாவது கவனி யுங்கள், என் விஷயம் பிறகு நேரமிருந்தால் பார்த்துக் கொள்ளலாம்."

அப்போது ஆங்கிலேயர் சொல்லுகிறார் :—" அவ சியமில்லை, இருவரும் கேட்கலாம். மாற்றி மாற்றி இரு வருக்கும் தாசு மறுமொழி சொன்னால் போதும்."

" சரி, இஷ்டமானவர் கேட்கலாம்" என்று தாசு சொல்லிற்று.

ஐயங்கார் பேசவில்லை. சும்மா இருந்தார். சில நிமிஷங்கள் பொறுத்திருந்து, ஆங்கிலேயர் கேட்டார்:— "ஐரோப்பாவிலே சண்டை எப்போது முடியும் ?"

காசு :—"தெரியாது."

ஆங்கிலேயர் :—"இந்த யுத்தம் முடிந்த பிறகு ஐரோப்பாவிலே என்ன மாறுதல்கள் தோன்றும்?"

காசு:—"தொழிலாளிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அதிக அதிகார மேற்படும். வியாபாரிகளுக்குக் கொஞ்சம் சிரம மேற்படலாம். கிழக்குத் தேசத்து மதக் கொள்கைகள் ஐரோப்பாவிலே கொஞ்சம் பரவலாம்."

ஆங்கிலேயர் :—"இவ்வளவுதானே?"

காசு :—"இவ்வளவுதான் இப்போது நிச்சயமாகச் சொல்லமுடியும்."

ஆங்கிலேயர் :—"தேச விரோதங்கள் தீர்ந்து போய்விட மாட்டாதா?"

காசு :—நிச்சயமில்லை. ஒரு வேளை சிறிது குறையலாம். அதிகப்பட்டாலும் படக்கூடும்."

ஆங்கிலேயர்:—"'ஸர்வ-தேச-விதி'க்கு வலிமை அதிகமாய், 'இனிமேல் இரண்டு தேசத்தாருக்குள் மனஸ்தாபங்கள் உண்டானால் அவற்றைப் பொது மத்தியஸ்தர் வைத்துத் தீர்த்துக் கொள்வதேயன்றி, யுத்தங்கள் செய்வதில்லை' என்ற கொள்கை ஊர்ஜிதப் படாதோ?"

காசு :—"நிச்சயமில்லை. அந்தக் கொள்கையைத் தழுவி ஆரம்பத்திலே சில நியதிகள் செய்யக் கூடும். பிறகு அவற்றை மீறி நடக்கவுங் கூடும்."

ஆங்கிலேயர் :—"இரண்டு தேசத்தார் எப்போ

தும் நட்புடன் இருக்கும்படி செய்வதற்கு வழி யென்ன ?''

காசு:—''ஒருவரை யொருவர் நன்கு மதித்தல்; ஸமத்வ தர்மம். ஹிந்து வேதப் பழக்கம்.''

ஆங்கிலேயர் ''ஸாயங்கால வந்தனம்'' என்று சொல்வதற்கு 'ஸாயங்கால் வண்டனம்' என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டு எழுந்து போய் விட்டார்.

பிறகு ஐயங்கார் (தமிழில்):—''நானும் போய் வருகிறேன். இந்த ஆங்கிலேயர் கேட்ட கேள்விகளைத் தான் நானும் கேட்க நினைத்தேன். அவருக்குச் சொல்லிய மறுமொழி எனக்கும் போதும். நான் போய் வருகிறேன், நமஸ்காரம்'' என்றார்.

காசு:—''போய் வாரும், உமக்கு லக்ஷ்மிகடாக்ஷமும், தமிழிலே சிறிது பாண்டித்தியமும் உண்டாகுக'' என்று ஆசீர்வாதம் பண்ணிற்று. ஐயங்கார் சிரித்துக் கொண்டே போனார்.

9

இன்று நமது கடைக்கு ஒரு தமிழ்க் கவிராயர் வந்தார்; கைக்கோள ஜாதி; ஓட்டக்கூத்தப் புலவர்கூட அந்தக் குலந்தானென்று நினைக்கிறேன்.

இவருக்கு இங்கிலீஷ் தெரியாது. தம்முடைய பெயரை வெளிப்படுத்தக் கூடாதென்று சொன்னார். ஆதலால் வெளிப்படுத்தவில்லை.

காசு முகமலர்ச்சியுடன் சிரித்தது. ''இப்படி ஒரு கவிராயன் வந்தால் எனக்கு ஸந்தோஷம். எப்

போதும் வீண் வம்பு பேசுவோரே வந்தால் என்ன செய்வேன்?" என்றது. "கவிராயரே, என்ன விஷயம் கேட்க வந்தீர்?" என்று காசு கேட்டது.

"எனக்குக் கவிராயர் என்பது பரம்பரையாக வந்த பட்டம். என்னுடைய குருதியால் எற்பட வில்லை. அக்குறை பெற முயற்சி செய்து வருகிறேன். அந்த விஷயமாகச் சில வார்த்தைகள் கேட்க வந்தேன்" என்று கவிராயர் சொன்னார். "இதுவரை பாடின பாட்டுண்டானால் சொல்லும்" என்று காசு கேட்டது.

"இதுவரை நாற்பது அல்லது ஐம்பது அடிகளுக்கு மேல் பாடியது கிடையாது. இப்போதுதான் ஆரம்பம். அது அத்தனை ரஸமில்லை" என்று சொல்லிக் கவிராயர் விழித்தார்.

"மாதிரி சொல்லும்" என்றது காசு.

புலவர் பாடத் தொடங்கினர். தொண்டை நல்ல தொண்டை.

"காளை யொருவன் கவிச்சுவையைக்—கரை
காண நினைத்த முழு நினைப்பில்—அம்மை
தோளணைத் தங்கு நடம் புரிவாள்—இவன்
தொல்லறி வாளர் திறம் பெறுவான்.
ஆ! எங்கெங்கு காணிலும் சக்தியடா!—தம்பி
ஏழு கடலவள் மேனியடா!
தங்கும் வெளியினிற் கோடியண்டம்—எங்கள்
தாயின் கைப் பந்தென வோடுமடா!
சங்குவில் ஏழு முகிலினமும்—வந்து

கர்ச்சனை செய்தது கேட்டதுண்டோ?
மங்கை நகைத்த ஒலியதுவாம்—அவள்
வாயிற் குறுநகை மின்னலடா!"

காசு கேட்டது :—"புலவரே, தமிழ் யாரிடம் படித்தீர்?"

கவிராயர் :—"இன்னும் படிக்கவில்லை; இப்போதுதான் ஆரம்பம் செய்கிறேன்."

காசு :—"சரிதான், ஆரம்பம் குற்ற மில்லை. விடாமுயற்சியும் தெய்வபக்தியும் அறிவிலே விடுதலையும் ஏற்றால், கவிதையிலே வலிமை யேறும்."

இங்ஙனம் வார்த்தை சொல்லிக்கொண்டிருக்கையில் சீட்டிக் கடை லேட் வந்தார்.

"சாமியாரே, தீபாவளி சமீபத்திலிருக்கிறது. ஏதேனும் சீட்டித் துணி செலவுண்டா?" என்று லேட் கேட்டார்.

"இல்லை" என்று சொன்னேன்.

அப்போது லேட் சொல்லுகிறார் :—"நான் அதற்கு மாத்திரம் வரவில்லை. வேறு ஸங்கதி கேட்கவும் வந்தேன். காசு நடக்கப் போவதை அறிந்து சொல்லுமோ?"

"சொல்லாது" என்று காசே சொல்லிற்று.

"சொல்ல சம்மதமிருந்தால் சொல்லும். இல்லாவிட்டால் சொல்லாது. எதற்கும், நீர் கேட்க வந்த விஷயமென்ன? அதை வெளியிடும்" என்று நான் சொல்லப் போனேன்.

காசு என்னிடம், "காளிகாஸா, அ—" என்றது. இந்த "அ" காரத்துக்கு "அடக்கு" என்றர்த்தம். அதாவது "என்னுடைய கருத்துக்கு விரோதமாக வார்த்தை சொல்லாதே" என்றர்த்தம்.

காசு "அ—" என்றவுடனே நான் வருத்தத்துடனே தலை குனிந்துகொண்டேன்.

ஸேட் :—"தீபாவளி ஸமயத்தில் எங்கள் கடைக்குப் பத்து நூறுகவும், நூறு ஆயிரமாகவும், லாபம் வரும்படி காசு தன் வாயினல் வாழ்த்தவேண்டும். அப்படி வாழ்த்துவதற்கு ஏதேனும் கூலி வேண்டுமானலும் கொடுத்து விடுகிறேன்" என்றார்.

காசு :—"கூலி வேண்டாம், ஸேட்ஜீ; இனமாகவே ஆசீர்வாதம் பண்ணி விடுகிறேன். உமக்கு மேன்மேலும் லாபம் பெருகும், நாட்டுத் துணி வாங்கி விற்றல்" என்றது. ஸேட் விடை பெற்றுக்கொண்டு போனர்.

கவிராயர் காசைச் நோக்கி, "நம்முடைய ஸம்பாஷணைக்கு நடுவிலே கொஞ்சம் இடையூறுண்டாயிற்று" என்றார்.

காசு சொல்லுகிறது :—"உமக்கும் அதுதான் காரணம் வார்த்தை. நெசவிலே நாட்டு நெசவு மேல். விலைக்கு நெய்வதைக் காட்டிலும் புகழுக்கு நெய்வதே மேல். பணம் நல்லது; ஆனல் பணத்தைக் காட்டிலும் தொழிலருமை மேல். காசிப்பட்டுப் போலே பாட்டு நெய்யவேண்டும். அல்லது உறுதியான, உழவனுக்கு வேண்டிய, கச்சை வேஷ்டி போலே நெய்யவேண்டும்.

"மல்" நெசவு கூடாது. "மஸ்லின்" நிடித்து நிற்காது. பாட்டிலே வலிமை, தெளிவு, மேன்மை, ஆழம், நேர்மை இத்தனையு மிருக்க வேண்டும். இதற்கு மேலே நல்ல வர்ணஞ் சேர்த்தால் குற்றமில்லை. சோமவிருந் தால் விசேஷம்."

அப்போது புலவர் தாசரை நோக்கி:—"நீயே எனது குரு" என்று சொல்லி நமஸ்காரம் பண்ணினார்.

தாசு:—"எழுக! நீ புலவன்!" என்றது.

10

பதினேறு வயதிருக்கும்; பிராமணப் பிள்ளை; வைஷ்ணவன், இவன் போன தீபாவளிக்கு மறுநாள் தாசுக் கடைக்கு வந்தான். வழக்கம் போலே முக வுரைகள் பேசி முடிந்த பிறகு தாசினிடம் பின்வரும் கேள்வி கேட்டான்.

பிராமணப் பிள்ளை:—"எனக்கு பள்ளிக்கூடத்துச் சம்பளம் மூன்று மாதத்துக்கு ஒன்பது ரூபாய் வேண் டும். நாளைக் காலை சம்பளம் கொடுக்காவிட்டால் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறிவிட வேண்டு மென்று பெரிய வாத்தியார் கண்டிப்பாகச் சொல்லி விட்டார். எனக்குத் தெரிந்த பணக்காரர், என் பிதா வுக்கு அறிமுகமான பணக்காரர், எங்கள் குடும்பத் திலே நல்லெண்ண முடைய சில நண்பர்களுக்குப் பழக்கமான பணக்காரர்—எல்லா விதமான பணக் காரர்களிடத்திலும் பலவிதங்களிலே கேட்டுப் பார்த் தாய்விட்டது. பயன்படவில்லை. சம்பளமோ அவசி

யம் கொடுத்துத் தீரவேண்டும். எனக்கு இந்த ஒன்பது ரூபாய் எங்கே கிடைக்கும்? எப்படிக் கிடைக்கும்? யார் கொடுப்பார்கள்!" என்றான்.

"விதி கொடுக்கும்" என்று காசு சொல்லிற்று.

பிராமணப் பிள்ளை சிரித்தான்; சொல்லுகிறான்:—

"காசே, விதியை நம்புவது பிழை. ஐரோப்பியர் விதியை நம்புவதில்லை. ஆசியாவிலுள்ள மகமதிய ஜாதியாரும் ஹிந்துக்களுந் தான் விதியை மூம்மூர்மாக நம்புகிறார்கள். இதனால் இந்த ஜாதியாரெல்லாம் வீழ்ச்சியடைந்தார்கள். ஐரோப்பியர் நாகரிகத்திலும் செல்வத்திலும் ஓங்கி வருகிறார்கள். முயற்சி செய்பவன் நல்ல ஸ்திதிக்கு வருவான். விதியை நம்பினவன் சோற்றுக்கில்லாமல் பட்டினி கிடப்பான்."

இங்ஙனம் பிராமணப் பிள்ளை சொல்லியதைக் கேட்டுக் காசு சிரித்தது.

"தம்பி, அய்யங்காரே, உன் பெயரென்ன?" என்று காசு கேட்டது.

"லக்ஷ்மீ வராஹாசார்யர்; வடகலை; ஸ்வயமாசார்ய புருஷர் வகுப்பு" என்றான்.

இங்ஙனம் பேசிக்கொண்டிருக்கையிலே, ஒரு பாட்டி வந்தாள். இந்தப் பாட்டிக்கு வயது அறுபத்தைந்து அல்லது எழுபதிருக்கும். தெலுங்குப் பிராமணர்களிலே நியோகி என்ற பிரிவைச் சேர்ந்தவள். கையிலே, ஒரு ஆண் குழந்தை கொண்டு வந்தாள். மூன்று வயதுக் குழந்தை. காசினிடம் கேள்விகள் கேட்க விருப்ப மிருப்பதாக இந்த அம்மையார் சொல்

லியதற்குக் காசு சம்மதித்தது. "ஐயங்கார்ப் பிள்ளை யைக் கொஞ்சம் நிறுத்தி வைத்துவிட்டு மூதலாவது இந்தப் பாட்டி விஷயத்தை முடிவு செய்தனுப்பு வோம்" என்று காசு தீர்மானித்தது.

பாட்டி சொல்லுகிறாள்:—"ருக்மிணி கர்ப்பமா யிருக்கிறாள்."

"ருக்மிணி யார்!" என்று காசு கேட்டது.

"என்னுடைய இரண்டாவது பேரத்தி" என்று பாட்டி சொன்னாள். "அவளுக்கு எழெட்டு மாஸமாய் விட்டது. மூத்தவளுக்கு நாலைந்து மாஸம். இரண்டு பேருக்கும் புருஷக் குழந்தை பிறக்கவேணும். மூத்தவள் புருஷனுக்கு ஸர்க்காரில் 150 ரூபாய் கொடுக்கிறார்கள். செலவுக்குத் தட்டத்தான் செய்கிறது. அவன் சம்பளம் உயரவேணும். வீட்டிலே காளி படம் வைத்துப் பூஜை பண்ணுகிறான். அந்தப் படம் வீட்டிலிருந்தால் நல்லதில்லை யென்று சொல்லுகிறார்கள். அவனிடம் சொல்லிப் பார்த்தேன்; கேட்கவில்லை. இந்தக் குழந்தைக்கு அடிக்கடி மாந்தம் வருகிறது. பேய் பிசாசுகளின் சேஷ்டை ஏதேனும் இருக்கலாமோ என்னவோ தெரியவில்லை. மாரியம்மனுக்குப் பூஜை செய்விக்க வேண்டு மென்று பூஜாரி சொல்லுகிறான். எனக்கு அந்த எலிக்கடி விஷம் இன்னும் உடம்பை விட்டுப் போகவில்லை. அடிக்கடி ஜ்வரம் வந்துகொண்டிருக்கிறது. எல்லா தோஷங்களும் நீங்குவதற்கு ஏதேனும் பரிஹாரம் செய்ய வேண்டும். காசைக் கேட்டால் எல்லா ஸங்கடங்களுக்கும் தீர்ப்

புச் சொல்லுமென்று காலேஜ் வாத்தியார் கண்ணுடி காராயணசாமி ஐயர் சொன்னர். ஏதேனும் ஒரு பரிஹாரம் சொல்ல வேண்டும்" என்று பாட்டி ப்ரஸங்கத்தை முடிவு செய்தாள்.

"விதிப்படி நடக்கும்" என்று காசு சொல்லிவிட்டுச் சும்மா இருந்தது.

நாலும் காசினுடைய மன நோக்கத்தைத் தெரிந்து கொண்டு, "பாட்டியம்மா, வருகிற வெள்ளிக் கிழமை காலையிலே நாலு பிள்ளைகளுக்கு சாப்பாடு போட்டுவிட வேண்டும். போத்திகள் இருவரையும், தினந்தோறும் கோயிலுக்குப் போய் ஸ்வாமி தரிசனம் பண்ணிவிட்டு வரும்படி செய்ய வேண்டும். உங்களுடைய கஷ்டங்களெல்லாம் நிவர்த்தியாகும்" என்று சொல்லிப் பாட்டியைப் போகச் சொல்லி விட்டேன்.

பிறகு, லக்ஷ்மீவராஹன் என்ற வைஷ்ணவப் பிள்ளையை நோக்கித் காசு பின்வருமாறு சொல்லுகிறது:—

"கேளாய், மகனே, விதிப்படிதான் இந்த உலகமெல்லாம் நடக்கிறது. மனித வாழ்க்கை இவ்வுலகத்தின் வாழ்க்கையிலே ஒரு சிறு பகுதி. விதி தவறி ஒன்றும் நடக்காது. பூர்வகாலத்து மகமதியர்களும் ஹிந்துக்களும் விதியை முற்றிலும் நம்பியிருந்தார்கள். அரபியாவிலே உண்டான மகமதிய மதம் மத்திய ஆசியா முழுதிலும் பரவிற்று; அத்துடன் அற்புதமான சாஸ்திரங்களும் பரவின; ஐரோப்பாவில் தென் பகுதியை வியாபித்தது; ஸ்பெயின் தேசத்திலே போய் அரசாண்டது. ஐரோப்பா முழுதிலிருந்து பண்டிதர்

கள் ஸ்பெயின் தேசத்துக்கு வந்து சாஸ்திரங் கற்றுக் கொண்டு போனார்கள். இப்போது ஐரோப்பாவிலே ஓங்கி நிற்கும் நவீன சாஸ்திரங்களிலே பலவற்றின் வேர் அங்கே மகமதியரால் நாட்டப்பட்டது. மகமதியர் பாரத நாட்டை ராஜபுத்ரரிடமிருந்து வென்றனர், சிங்கத்தினிடமிருந்து காட்டை வெல்லுவது போலே. இங்ஙனமே ஜாவா முதலிய தென் கடல் தீவுகளைப் பற்றிக் கொண்டனர். வட ஆபிரிகா, தென் ஆபிரிகா, மத்திய ஆபிரிகா, சீனம், ருஷியா—மனிதலுக்குத் தெரிந்த நாகரிக தேசங்களெல்லாவற்றிலும், அல்லாவின் குமாரர் வெற்றியும் புகழுமெய்தி விளங்கினர். அக்காலத்தில், இவர்களுக்கு விதி நம்பிக்கை இப்போதைக்காட்டிலும் குறைவில்லை. பூர்வ ஹிந்து ராஜாக்களின் புகழ் திசை யெட்டுக்குள் அடங்கவில்லை. அவர்களெல்லாம் விதியைப் பரிபூரணமாக நம்பியிருந்தார்கள். முதலாவது மொகலாயச் சக்ரவர்த்தியாகிய பாபர்ஷா விதியை நம்பி ஹிந்துஸ்தானத்தின் மேலே படை யெடுத்தான். அவன் யோசித்தான் :—'அரே! அல்லா உலகத்துக்கு நாயகன். அவனுடைய விதி, அவன் உண்டாக்கிய ஒழுங்கு, அதற்குக் கிஸ்மத் (விதி) என்று பெயர். கிஸ்மத்படி எல்லாம் நடக்கிறது. ஒருவனுக்குச் சாக விதியில்லை யென்றால், அவன் போர்க்களத்திலே அம்புகளின் கூறைக்கு நடுவிலே போய் நின்றாலும் சாகமாட்டான். அவன் மேலே அம்பு தைக்காது. விதி கொல்ல வேண்டுமானால் வீட்டிலே கொல்லும். இடி விழாமல் நம்மால் தடுக்க முடியுமா? சாகாத வைத்தியனுண்டா? விதிப்படி

நடக்கும். ஹிந்துஸ்தானத்தின் மேலே படையெடுத்துப் போவோம். விதியின் அனுகூலமிருந்தால் வெற்றி கிடைத்தால், உலகத்து மண்டலாதிபதிகளிலே முதன்மை யடையலாம். அங்கே இறந்தாமாலும் நம்முடைய சரீரத்தைக் காக்காய்கள் தின்னும். நம்மாலே சில ஜீவன்களுக்கு வயிற்றுப் பசி தீர்ந்து ஸந்தோஷம் சிறிது நேரமுண்டாகும். எல்லாம் ஒன்றுதான். விதியே துணை. ஹிந்துஸ்தானத்தின் மேலே படையெடுப்போம்' என்றான். ஆள் பலமில்லை; பணமில்லை. ராஜபுத்ர ஸ்தானத்து க்ஷத்திரியர்களை வெல்லுவதென்றால் ஸாதாரணமான காரியமன்று; ஒவ்வொரு ராஜபுத்ரனும் ஒவ்வொரு மஹா சூரன். எப்படியோ! பாபர்ஷா வென்று விட்டான், விதியை நம்பி; விதி வெற்றிக்குந் துணையாகும். விதியை நம்பி விதை போடாமலிருந்தால், பயிர் விளையாது. விதியை நம்பி உழைத்தால் அதிகமாக விளையும்" என்று தாராசு சொல்லிற்று.

என் கையிலிருந்த ஒரு தர்ம நிதிப்பணம், அதில் ஒன்பது ரூபாய் எடுத்து அந்தப் பையனிடம் கொடுத்தேன். "விதி உண்மைதான்" என்று சொல்லி லக்ஷ்மீவராஹன் ஒப்புக்கொண்டு போனான்.

11

ஒரு கிராமத்திலே ஒரு ஏழைக் குடியானவன் சுரைக்காய்த் தோட்டம் போட்டிருந்தான். ஒரு நாள் பொழுது விடியுமுன்பு இருட்டிலே, ஒரு திருடன் அந்தத் தோட்டத்துக்குள்ளே புகுந்து சுரைக்காய்

திருடிக்கொண்டிருக்கையில்ல, குடியானவன் வந்து விட்டான். திருடனுக்கு பயமேற்பட்டது. ஆனாலும் குடியானவன் புத்தி நாட்பமில்லாதவனாக இருக்கலா மென்று நினைத்து அவனை எளிதாக ஏமாற்றிவிடக் கருதி திருடன் ஒரு யுக்தி யெடுத்தான்.

இதற்குள்ளே குடியானவன்:—"யாரடா அங்கே?" என்று கூவினான். திருடன், கம்பீரமான குரலிலே— "ஆஹா! பக்தா, இது பூலோகமா? மானிடர் நீங்கள் தானே?" என்றான்.

தோட்டக்காரனும்:—"ஓஹோ, இவர் யாரோ, பெரியவர்; தேவலோகத்திலிருந்து இப்போதுதான் நமது சுரைத் தோட்டத்தில் இறங்கி யிருக்கிறார் போலும்" என்று நினைத்து, "ஆம், ஸ்வாமி; இது தான் பூலோகம், நாங்கள் மானிட ஜாதி" என்று சொல்லித் திருடனுக்குப் பல நமஸ்காரங்கள் செய்து ஏழெட்டுச் சுரைக்காய்களையும் நைவேத்தியமாகக் கொடுத்தனுப்பினான். திருடன் அவற்றை வாங்கிக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்தான்.

மேற் கூறிய கதை எனக்கு ஒரு நண்பர் நேற்று தான் சொல்லிக் காட்டினார். அது இன்று காலையில் மிகவும் பிரயோஜனப்பட்டது. போன முறை ஒரு தொப்பைச் சாமியார் நம்முடைய கடை கட்டப் போகிற ஸமயத்தில் ஒரு விஷயம் கேட்க வந்ததாகச் சொல்லி யிருந்தேன். ஞாபக மிருக்கிறதா? அவர் மறுபடி இன்று காலையில் வந்தார்.

"பெற்றோர், உற்றோர், மனைவி மக்கள், பொன், வீடு, காணி முதலிய தீய விஷயாதிகளிலே கட்டுண்டு, பிறவிப் பிணிக்கு மருந்து தேடாமல் உழலும் பாமரருக்குச் சார்பாக நீரும்....." என்று ஏதோ கீளமாகச் சொல்லத் தொடங்கினர். நான் மேற்படி சுரைத் தோட்டத்துக் கதையைச் சொல்லிக் காட்டினேன். சாமியார் புன்சிரிப்புடன் எழுந்து போய் விட்டார்.

* * *

நானிருக்கும் தெருவுக்குப் பக்கத்துத் தெருவிலே ஒரு சாஸ்திரியார் இருக்கிறார். நல்ல வைதிகர்; அக்நியனத்திலே புனி; சாதக்தம் பண்ணி வைப்பதிலே ஸாகஹாரத் வியாழக்கிழமைக்கு (பிருஹஸ்பதி பகவானுக்கு) நிகரானவர். அவர் வீட்டிலே அவரொரு கக்ஷி, இளையாள் ஒரு கக்ஷி, மூத்தாள் பிள்ளை முத்துசாமியும், அவன் மனைவியும் ஒரு கக்ஷி—ஆக மூன்று கக்ஷிகளாக இருந்து பல வருஷங்களாக இடைவிடாமல் சண்டை நடந்து வருகிறது. அவர் இன்று காலை என்னிடம் வந்து, "என்ன வாசித்துக்கொண்டிருக்கிறீர்?" என்று கேட்டார்.

"சுதேசமித்திரன் பத்திரிகை" என்றேன்.

"இந்தச் சண்டை எப்போது முடியும்?" என்று கேட்டார். நான் ஏதோ ஞாபகத்தவறாக, "நீங்கள் வேறு குடும்பம், உங்கள் பிள்ளை முத்துசாமி வேறு குடும்பமாகக் குடியிருக்கவேண்டும். உங்கள் பத்தினி

யும், அவன் மனஸ்யும சந்தகக இடம்ல்லாகபடி ஏற்
பாடு செய்யவேண்டும். அப்போது ஒரு வேளை முடிய
லாம்" என்றேன். "சரி! நான் போய்வருகிறேன்"
என்று கோபத்துடன் எழுந்து போய்விட்டார். 'அவர்
கேட்டது ஐரோப்பா யுத்தத்தைப் பற்றியது' என்ற
விஷயம் அவர் எழுந்து போன பிறகு எனக்குத்
தோன்றியது. நாளை அவரைக் கூப்பிட்டு கதை
கேட்க வேண்டும்.

எதனாலேயோ, இன்று எனக்குக் கதைகள்
சொல்வதிலே பிரியமுண்டாய் விட்டது. இன்னு
மொரு சிறிய கதை சொல்லுகிறேன். திருவாங்கூரிலே
வைத்தியநாதய்யர் என்றொரு நியாயாதிபதி யிருந்
தார். அவருக்கு ஜனங்கள் "தர்மஸங்கடம் வைத்திய
நாதய்யர்" என்று பெயர் வைத்தார்கள். எந்த
வழக்கு வந்த போதிலும் அவர் இரண்டு பக்கத்து
வக்கீல்களும் ஸாக்ஷிகளும் சொல்வதை யெல்லாம்
மிகுந்த பொறுமையுடன் கேட்டுப் பல தினங்கள்
ஆலோசனை செய்த பிறகு தான் தீர்ப்புச் சொல்லு
வார். கக்ஷிக்காரருக்கு அவஸ்யம் அதிகம். நியாயமோ,
அநியாயமோ விரைவாகத் தீர்ப்புச் சொன்னால் போது
மென்ற ஸ்திதிக்கு வந்துவிட்டது.

ஒரு நாள் இரவு பத்து மணிக்கு இந்த வைத்திய
நாதய்யர் திருவநந்தபுரம் பத்மநாப ஸ்வாமி கோயிலில்
ஒரு தனியிடத்திலே, ஸமீபத்தில் யாருமில்லை யென்ற
நோபகத்துடன், தமக்குத்தாமே இரைந்து வர்த்தை
சொல்லிக் கொண்டிருந்தார்.

அவர் சொல்லிய தென்னவென்றால் :—"ஸ்வாமீ! பத்மநாபா! ஜகந்நாதா! நீ தான் என்னைக் காப்பாற்ற வேண்டும். நான் என்ன செய்வேன்? வாதி பக்கத்து வக்கீல்களும் ஸாக்ஷிகளும் சொல்வதைக் கேட்டால் வாதி பக்கத்திலே நியாயமிருப்பதாகத் தோன்றுகிறது. பிரதிவாதி பக்கத்தார் சொல்வதைக் கேட்டால் அந்தக் கக்ஷியிலே தான் நியாயமிருப்பது போலத் தோன்றுகிறது. நான் எப்படி தீர்ப்புச் செய்வேன்?"

இவர் சொல்லிய வார்த்தைகளைத் தூண் மறைவிலிருந்த ஒரு சிறுவன் கேட்டு, ஊர் முழுவதும் பறையடித்து விட்டான். அதன் பிறகு தான் இவருக்குத் "தர்மஸங்கடம் வைத்தியநாதய்யர்" என்ற பட்டம் ஏற்பட்டது.

இந்த விளையாட்டுக் கதையிலுள்ள நியாயாதிபதியைப் பற்றி யார் எப்படி நினைத்தபோதிலும் எனக்கு இவர் விஷயத்தில் ஒருவிதமான மதிப்புண்டு. இவரைப் போன்ற யோக்கியர்கள் உலகத்திலே கிடைப்பது மிகவும் அருமை யென்பது என்னுடைய அபிப்பிராயம். பக்ஷபாதமாகத் தீர்ப்புச் செய்து விடுதல் யாருக்கு மெளிது. இரண்டு கக்ஷியின் நியாயங்களையும் தீரத் தெரிந்துகொண்டு முடிவு சொல்லுதல் கஷ்டம். நமது தேசாபிமானிகளுள் ஒருவரை என் நண்பன், "ஏனய்யா, நான் இந்த ஸ்வராஜ்ய சங்கத்திலே (அதாவது, மிஸஸ் அனிபெஸண்ட் ஏற்பாடு செய்யும் "ஹோம்-ரூல்" சங்கத்திலே) சேலாமா?" என்று கேட்டால், அவர் சொல்லும் மறுமொழியி

விருந்து எந்த விஷயத்திலும் முடிவான தீர்மானஞ் செய்தல் எவ்வளவு கஷ்ட மென்பது தெரியும்.

இன்று காலை காராசுக் கடைக்கு இரண்டு பிள்ளைகள் வந்தார்கள். ஒருவனுக்கு வயது பதினெட்டிருக்கும்; மற்றவனுக்கு இருபது வயதிருக்கலாம்.

"நீங்கள் யார்?" என்று கேட்டேன்.

மூத்தவன் சொல்லுகிறான் :—"நாங்கள் இருவரும் புதுச்சேரிக் கலாசாலையில் வாசிக்கிறோம். காராசுக் கடையின் விஷயங்களைக் கேள்விப்பட்டு, இங்கே சில ஆராய்ச்சிகள் செய்துவிட்டுப் போகலாமென்று வந்தோம்."

காராசினிடம் விஷயத்தைத் தெரிவித்தேன். காராசு சொல்லிற்று :—"மத விஷயமான கேள்விகள் கேட்பதானால் சுருக்கமாகக் கேட்க வேண்டும்."

இதைக் கேட்டவுடன் இரண்டு பிள்ளைகளும் திகைத்து விட்டார்கள். சிறிது நேரத்துக்குப் பிறகு மூத்தவன் ஒருவாறு மனதைத் திடஞ் செய்து கொண்டு சொல்லுகிறான் :—

"நான் சில தினங்களாக ராமாயணம் வாசித்துக் கொண்டு வருகிறேன். அதிலே, விசுவாமித்திரர் என்ற ரிஷி ஆயிர வருஷம் தவம் செய்ததாகவும், அந்த தவத்தில் ஏதோ குற்றம் நேர்ந்து விட்டபடியால் மறுபடி ஆயிர வருஷம் தவம் புரிந்ததாகவும் எழுதப்பட்டிருக்கிறது. இக்காலத்தில் மஹா யோகிகளென்றும் ஞானிகளென்றும் சிலரை நமது ஜனங்கள் வழிபடு

கிறார்கள். இவர்களெல்லாம் மற்ற ஸாமான்ய ஜனங்களைப் போலவே நூறு நூற்றிருபது வருஷங்களுக்குள் மடிந்து போகிறார்கள். விசுவாமித்திரர் கதையை நான் ஒரு திருஷ்டாந்தமாகக் காட்டினேன். 'பழைய புராணங்களிலும், இதிஹாஸங்களிலும் பொய்க் கதைகள் மலிந்து கிடக்கின்றன' என்பது என்னுடைய கருத்து. அப்படி யிருக்க, 'நம்மவர் அவற்றைப் பக்தி சிரத்தையுடன் போற்றத் தகுந்த உண்மை நூல்களென்று பாராட்டுதல் பொருந்துமா?' என்பது என்னுடைய கேள்வி."

தாராசு சொல்லுகிறது :—"புராணங்கள் முழுதும் சரித்திரமல்ல ; ஞான நூல்கள் ; யோக சாஸ்திரத்தின் தத்துவங்களைக் கவிதை வழியிலே கற்பனைத் திருஷ்டாந்தங்களுடன் எடுத்துக் கூறுவன. இவை யன்றி நீதி சாஸ்திரத்தை விளக்கும்படியான கதைகளும் அந்நூல்களில் மிகுதியாகச் சேர்ந்திருக்கின்றன. சரித்திரப் பகுதிகளும் பல உண்டு. இவ்வாறு பல அமிசங்கள் சேர்ந்து ஆத்ம ஞானத்துக்கு வழி காட்டி, தர்ம நீதிகளை மிகவும் நன்முகத் தெரிவிப்பதால் அந்த நூல்களை நாம் மதிப்புடன் போற்றி வருதல் தகும்."

பிறகு இளைய பிள்ளை கேட்டான் :—"உடைமை என்பது நம்முடைய ஜன்மாந்தரத்தில் செய்த பாவ புண்ணியத்தின் பயனல்லவா?"

தாராசு சொல்லுகிறது :—"இல்லை. ஒருவன் தன் காலத்திலே செய்யும் செய்கைகளும் அவன் முன்னோர் செய்துவிட்டுப்போன செய்கைகளுமே உடைமைக்குக்

காரணமாகும். ஏழ்மைக்கும், செல்வத்துக்கும் காரணம் தெரிய வேண்டுமானால் அர்த்த சாஸ்திரம் (பொருள் நூல்) பார்க்கவேண்டும். ஜன்மாந்தர விஷயங்களைக் கொண்டு வருதல் வீண் பேச்சு. அதிலே பயனில்லை."

இளையவன் கேட்கிறான் :—" மூன் பிறப்பும் வரு பிறப்பும் மனிதனுக்குண்டென்பது மெய்தானே ?"

தாசு சொல்லுகிறது:—"அந்த விஷயம் எனக்குத் தெரியாது."

இளையவன் :—" ஆத்மா உண்டா ; இல்லையா ?"

தாசு :—" உண்டு."

இளையவன் :—" அதற்குப் பல ஜன்மங்கள் உண்டா, இல்லையா ?"

தாசு :—"உலகத்திலுடைய ஆத்மாதான் உனக்கும் ஆத்மா, உனக்கென்று தனியாத்மா இல்லை. எல்லாப் பொருள்களும் அதனுடைய வடிவங்கள். எல்லாச் செய்கைகளும் அதனுடைய செய்கைகள். அவனன்றி ஓரணுவும் அசையாது."

இளைய பிள்ளை :—" சரி, அது போகட்டும். இப்போது ஒருவன் செல்வம் சேர்க்க விரும்பினால் முடியுமா ?"

தாசு :—"முடியும். இஹலோக சாஸ்திரங்களைக் கற்று, வியாபார விதிகளைத் தெரிந்துகொண்டு, தெளிவுடனும், விடாமுயற்சியுடனும் பாடுபட்டால் முடியும். 'முயற்சி திருவினை ஆக்கும்.'"

பிள்ளைகள் "இன்னும் பல விஷயங்கள் கேட்க வேண்டும். மற்றொரு முறை வருகிறோம்" என்று சொல்லி விட்டுப் போனார்கள்.

12

இன்று நமது காசுக் கடைக்குச் சென்னப் பட்டணத்திலிருந்து ஒரு காலேஜ் மாணாக்கர் வந்து சேர்ந்தார்.

"ஓய். எம். ஸி. ஏ. யில் மிஸ்டர் காந்தி செய்த உபந்யாஸத்தைப் பற்றி உம்முடைய 'ஒப்பினியன்' எப்படி?" என்று அந்த மாணாக்கர் கேட்டார்.

"இதென்னடா, கஷ்டகாலம்! காலை வேளையில் இந்த மனுஷன் ஹிந்துஸ்தானி பேச வந்தான்!" என்று சொல்லித் காசு நகைக்கலாயிற்று. காசுக்கு இங்கிலீஷ் தெரியாது. ஹிந்துஸ்தானி யதார்த்தத்திலே தெரியும். தெரியாததுபோல சில சமயங்களில் பாவனை செய்வதுண்டு.

"ஓய். எம். ஸி. ஏ. என்பது வாலிபர் கிறிஸ்தவ சங்கம் என்று பெயர் கொண்ட ஒரு சபையைக் குறிப்பிடுவது. அந்த சபையாரின் பிரசங்க மண்டபத்தில் ஸ்ரீமான் காந்தி சில தினங்களின் முன்பு உபந்யாஸம் செய்தாராம். அந்த உபந்யாஸத்தைப் பற்றி, எ காசே, உன்னுடைய அபிப்பிராயத்தை அறிந்து கொள்ள வேண்டுகிறார்" என்று காசை நோக்கிச் சொன்னேன்.

"அப்படியாயமானன?" என்று கேட்டது காசு.

"ராஜீய விஷயத்தைக் கலக்காமல் பேசும்" என்று நான் விண்ணப்பம் செய்துகொண்டேன்.

காலேஜ் மாணாக்கர் சொல்லுவதானர் :—

ஸ்ரீமான் காந்தி வாசம் செய்யும் ஆசிரமம் ஸத்யாக்கிரஹ ஆசிரமம் என்பதற்கு யிருக்கிறார். அந்த ஆசிரமத்தில் யெளவனப் பிள்ளைகள் பலரை வைத்துக் கொண்டு அவர்களை தேச சேவைக்குத் தயார்படுத்து கிறார். அவருடைய ஆசிரமத்திலே பயிற்சி பெறு வோருக்குச் சில விரதங்கள் அவசியமென்று ஏற் படுத்தி யிருக்கிறார். உண்மையிலே லோகோபகாரம் செய்ய விரும்புவோர் எல்லோருமே மேற்படி விரதங் களை அனுஷ்டிக்க வேண்டுமென்பது அவருடைய கொள்கை. கிறிஸ்தவ சங்கத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் அவர் அந்த விரதங்களைக் குறித்துத் தான் பேசினார். விசேஷமாக அவர் வற்புறுத்திச் சொல்லிய விஷயங்கள் பதினென்று. அவை பின் வருமாறு :—

1. ஸத்ய விரதம் :—எப்போதும், யாரிடத்தி லும், என்ன துன்பம் நேரிட்டாலும், பிரஹ்லாதனைப் போல ஒருவன் உண்மையே பேசவேண்டும்.

2. அஹிம்ஸா விரதம் :—எவ்வுயிருக்கும் துன் பஞ் செய்யலாகாது; யாரையும் பகைவராக நினைக்க லாகாது; ஒருவன் உன்னை அடித்தால் நீ திரும்பி அடிக்கக்கூடாது.

3. பிரமசரியம் :—விவாகம் பண்ணிக்கொள்ளக் கூடாது; ஏற்கெனவே மனைவி யிருந்தால் அவளை ஸ்நேஹாதரம் போல நடத்தவேண்டும்.

4. நாக்கைக் கட்டுதல் :—உணவிலே மஸாலா சேரக்கூடாது; ருசியை விரும்பி உண்பது பிழை; அதனல் உஷ்ணம் அதிகரித்து, போக இச்சை யுண்டாகிறது.

5. உடைமை மறுத்தல் :—ஒருவன் ஒரு பொருளையும் தனது சொத்தாகக் கொள்ளலாகாது.

6. சுதேசியம் :—நமது தேசம், நமது ஜில்லா, நமது கிராமத் தொழிலை முதலாவது ஆதரிக்க வேண்டும்; நமது தேசம், நமது ஜில்லா, நமது கிராமத்து அம்பட்டன் நேரே சுஹவரம் செய்யாமல் போனலும், அவனுக்குப் பயிற்சி உண்டாகும்படி செய்து நாம் அவனிடமே சுஹவரம் செய்து கொள்ள வேண்டும். வெளியூர் அம்பட்டனை விரும்பக்கூடாது.

7. பயமின்மை :—எதற்கும் நடுங்காத நெஞ்சம் வேண்டும். அஃதுடையவனே பிராமணன்.

8. தீண்டல் :—தீண்டாத ஜாதி என்று ஒரு வரை யொருவர் அழுக்கி வைப்பது பாவம். அது பெருங்கேடு. எந்த ஜாதியையுந் தீண்டலாம்.

9. தேச பாஷை:—தேச பாஷையிலேயே கல்வி பயிலவேண்டும்.

10. தொழிற் பெருமை :—எல்லாத் தொழில் களுக்கும் ஸமான மதிப்புண்டு. ஒரு தொழில் இழி

வாகவும் மற்றொரு தொழில் உயர்வாகவும் கருத லாகாது.

11. தெய்வ பக்தி :—பொதுக் காரியங்களிலும் ராஜீய விஷயங்களிலும் பாடுபடுவோருக்கு தெய்வ பக்தி வேண்டும்.

இதுதான் ஸ்ரீ காந்தி செய்த பிரசங்கத்தின் ஸாராம்சம்.

தாகூர் சொல்லலாயிற்று :—

"ஸ்ரீமான் காந்தி நல்ல மனுஷர்.

"அவர் சொல்லுகிற ஸத்ய விரதம், அஹிம்ஸை, உடைமை மறுத்தல், பயமின்மை—இந்த நான்கும் உத்தம தர்மங்கள்—இவற்றை எல்லோரும் இயன்ற வரை பழகவேண்டும். ஆனால் ஒருவன் என்னை அடிக்கும்போது நான் அவனைத் திரும்பி அடிக்கக்கூடாதென்று சொல்லுதல் பிழை.

"சுதேசியம், ஜாதி ஸமத்வம், தேசபாஷைப் பயிற்சி, தெய்வ பக்தி இந்த நான்கையும் இன்றைக்கே பழகி சாதனை செய்துகொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நமது தேசம் அழிந்து போய்விடும்.

"நாக்கைக் கட்டுதல், பிரமசரியம், இவை யிரண்டையும் செல்வர்கள், இடையிடையே அனுஷ்டித்தால் அவர்களுக்கு நன்மை யுண்டாகும். ஏழைகளுக்கு இந்த உபதேசம் அவசியமில்லை. அவர்களுக்கு நாக்கை ஏற்கனவே கட்டிக்தான் வைத்திருக்கிறது. பிரமசரியத்தை ஜாதி முழுமைக்கும் ஸ்ரீ காந்தி தர்மமென்று

உபதேசம் செய்யவில்லை. அந்த வேலை செய்தால் தேசத்தில் சீக்கிரம் ஜனதாரில்லாமல் போய்விடும்.

"காந்தி பதினேழு விரதம் சொன்னார். நான் பன்னிரண்டாவது விரதமொன்று சொல்லுகிறேன். அது யாதெனில் :—'எப்பாடுபட்டும் பொருள் தேடு; இவ்வுலகத்திலே உயர்ந்த நிலைபெறு.' இப்பன்னிரண்டாவது விரதத்தை தேசமுழுதும் அனுஷ்டிக்கவேண்டும்."

13

சில தினங்களாக நமது தராசுக் கடையில் வியாபாரம் சரியாக நடக்கவில்லை. சந்தேக நிவர்த்தியே நமது வியாபாரத்தின் நோக்கம். சந்தேகங்களை யெல்லாம் தீர்த்துவிடுவதென்றால் இது ஸாமான்யக் காரியமன்று. கீதையிலே பகவான் "ஸம்சயாத்மா விநச்யதி" [சந்தேகக்காரன் அழிந்து போகிறான்] என்று சொல்லுகிறார்.

எந்த முயற்சி செய்யப்போனாலும், ஆரம்பத்திலே பல வழிகள் தோன்றும். இந்த வழிகள் ஒன்றுக்கொன்று பொருந்தாமலிருக்கும். எந்த வழியை அனுசரிப்போமென்ற சந்தேக மேற்படும். நானிருக்கும் வேதபுரத்திலே ஒரு செட்டிப் பிள்ளை கையிலே சொற்ப மூதல் வைத்துக்கொண்டு எந்த வியாபாரத் துறையில் இறங்கலாமென்று சென்ற ஐந்து வருஷங்களாக யோசனை செய்துகொண்டு வருகிறான். இன்னும் அவனுக்குத் தெளிவேற்படவில்லை. மணிலாக் கொட்டை வியாபாரம் தொடங்கலா மென்று நினைத்

கான். ஆனால் அந்த வியாபாரம் இங்கு பெரிய பெரிய முதலாளிகளை யெல்லாம் தூக்கி யடித்து விட்டது. நாளுக்குநாள் விலை மாறுகிறது. இன்று ஒரு விலை பேசி முப்பது நாளில் ஆயிரம் மூட்டை அனுப்புகிறேன் னென்று சீமை வியாபாரியுடன் சந்தி மூலமாக ஒப் பந்தம் செய்து கொண்டோமானால், இடையிலே எதிர் பாராதபடி விலை யேறிப்போகிறது. ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாமல், சீமை வியாபாரிக்குத் தண் டம் கொடுக்க நேரிடுகிறது. நாம் இதிலே புகுந்து கையிலிருக்கும் சொற்ப முதலையும் இழக்கும்படி வந்தால் என்ன செய்வோமென்று செட்டிப் பிள்ளை பயப்படலானான். கடைசியாகச் சென்ற வருஷத்தில், ஒரு சமயம், "என்ன வந்தாலும் சரி. ஒரு கை பார்ப் போம். மணிலாக் கொட்டையே தொடங்குவோம்" என்று யோசித்தான். சண்டையினால் கப்பல்களின் போக்கு வரவு சுருக்கமாய்விட்டது. சில கப்பல்கள் போய் வருகின்றன. இவற்றில் இடக்கூலி தலைக்கு மேலே போகிறது. பெரிய முதலாளிகளே இந்த வியாபாரத்தைச் சுருக்கப்படுத்திக்கொண்டு வருகிறார் கள். ஆகலால் செட்டிப் பிள்ளை இந்த யோசனையை அடியோடு நிறுத்தி விட்டான். இப்படியே, தூணிமணி, பீங்கான், கண்ணாடி, வெங்காயம் முதலிய எந்த வியா பாரத்தை எடுத்தாலும் அவனுக்கு ஏதேனுமொரு தடை, ஏதேனு மொரு ஆசேஷபம் வந்துகொண்டே யிருக்கிறது. வருஷம் ஐந்தாகிவிட்டது!

லாபாலாபங்களை யோசித்த பிறகுதான் ஒரு

துறையில் இறங்க வேண்டும். ஆனால் வாழ்நாள் முழு தும் வெறுமே யோசனை செய்து கொண்டிருந்து காரியம் தொடங்காமலே காலத்தைக் கழிப்போர் எவ் வித இன்பத்தையு மறியாமல் மாய்ந்து போகிறார்கள். வியாபாரத்தில் மாத்திரமன்று. ஒருவன் யோக சாத னம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறான். ஹட யோகம் நல்லதா, ராஜயோகம் நல்லதா, பக்தி யோகம் நல்லதா? என்ற சந்தேக முண்டாகிறது. யோகசித்தி எற்பட வேண்டுமானால் குடும்பத்தாருடன் வீட்டி லிருந்து முயற்சி செய்யலாமா? அல்லது குடும்பத்தி லிருந்தே விலகிப்போய் எங்கேனும் தனியிடத்தி லிருந்து பாடுபட வேண்டுமா, இப்படி எத்தனையோ கேள்விகள் பிறக்கின்றன. இங்ஙனமாக மணிலாக் கொட்டை வியாபார முதல் ஆத்ம ஞானம் வரை எந்தக் காரியத்திலும் ஆரம்பத்திலே திகைப்புக்களுண் டாகும். இப்படி நான்கு வழிகளைக் காட்டி எது நல்ல வழி யென்று கேட்டால் நமது தராசு சரியான வழி யைக் காட்டிக்கொடுக்கும். மேலும் பொதுப்படை யாக எந்த ஆராய்ச்சியிலும், கொள்கைப் பிரிவுகள் தோன்றிப் பல சகஷிகள் ஏற்படுவது இவ்வுலகத் தியற்கை. நமது தராசு எந்தக் சகஷி நியாயமென் பதைத் திட்டமாகக் கண்டுபிடித்துச் சொல்லும். இவ் வளவு நல்ல தராசாக இருந்தும் என்ன காரணத் தாலோ வியாபாரம் ரஸமாக நடக்கவில்லை.

ஆதலால் நேற்றுத் தராசினிடம் நானே கேள்வி கள் போடத் தொடங்கினேன்.

"தாசே, நம்முடைய சொந்த வியாபாரம் நன்றாக நடப்பதற்கு வழியென்ன?" என்று கேட்டேன்.

தாசு கலகலவென்று நகைத்துப் பின்வருமாறு சொல்லலாயிற்று :—

"ஆஹா, காளிதாஸா, நல்ல கேள்வி கேட்டாய். நீ இதை எப்போது கேட்கப்போகிறாயென்று நான் பல தினங்களாக ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன். உன் வசத்திலே குறுங்குறு மஹாரிஷி என்னை ஒப்புவிக்கும்போது என்ன வார்த்தை சொன்னார். ஞாபகமிருக்கிறதா?"

காளிதாஸன் :—"ஆம், தாசே, நன்றாக ஞாபகமிருக்கிறது. 'கேளாய் காளிதாஸா, தெய்வ ஆராய்ச்சி ஒன்றையே உனது வாழ்க்கையின் முதற்காரியமாக வைத்துக்கொள்ள வேண்டும். லௌகிகத் தொழிலொன்று சேர்ந்தால் தான் யோக சித்தி விரைவாகக் கைகூடுமாதலால், உனக்கு லௌகிகத் தொழிலாக இந்தத் தாசு வியாபாரத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறேன். இதன் மூலமாக உன்னுடைய இஹலோக தர்மங்கள் நேரே நிறைவேறும். உனக்கு சக்தி துணை; உன்னைச் சார்ந்த உலகத்திற்கு இந்தத் தாசு நல்ல உதவி; இவை இரண்டையுந் தவிர, மூன்றுவது காரியத்தில் புத்தி செலுத்தக்கூடாது. உனக்கு நன்மையுண்டாகும்' என்று சொன்னார்."

தாசு :—"நீ அந்தப்படி செய்து வருகிறாயா?"

காளிதாஸன் :—"ஏதோ, என்னால் இயன்றவரை செய்து வருகிறேன்."

காசு:—"ஞாபகமில்லாமல் பேசுகிறாய், இரண்டு மாதத்திற்கு முன் ஒரு முறை பட்டு வியாபாரம் தொடங்கலாமென்று யோசனை செய்தாய். அதற்கு முன்னே ஒரு நாள், ரத்ன வியாபாரத்திலே புத்தி செலுத்தினாய். மனிதன் செல்வந் தேடுவதற்குப் பல உபாயங்கள் செய்வது நியாயந்தான். ஆனால் அவனவன் தகுதிக்குரிய வழிகளிலே செல்லவேண்டும். ஒரு முயற்சியைக் கைகொண்டாய் பிறகு வெற்றி யுண்டாகும் வரை எப்போதும் அதிலேயே கண்ணும் கருத்துமாகப் பாடுபடவேண்டும். பல மாங்கண்ட தச்சன் ஒரு மாமும் வெட்ட மாட்டான்."

காளிதாஸன்:—"நீ சொல்வது சரிதான். ஏதாமாறதியினால் வேறு விஷயங்களில் கவனம் செலுத்தும் படி நேரிட்டது. மறுபடி காசு வியாபாரத்தையே ஒரே உறுதியுடன் நடத்தவேண்டு மென்று மனே நிச்சயம் செய்துவிட்டேன். அதை ஓங்கச் செய்வ தற்கு வழி சொல்லு."

காசு:—"இந்த வியாபாரத்தின் மஹிமையை நீயே சில சமயங்களில் மறந்துவிடுகிறாய். 'எட்டும் இரண்டும் என்ன?' 'நீலப் போர்வை வாங்கலாமா, பச்சைப் போர்வை வாங்கலாமா?' என்பவை போன்ற அற்பக் கேள்விகள் கேட்போரை சில ஸமயங்களில் அழைத்துக்கொண்டு வருகிறாய். இப்படி அற்ப விசாரணைக்கெல்லாம் இடங்கொடுத்தால், நமது கடையின் பெயர் கெட்டுப் போகாதா? மேலும் அறிவுத் தராசு போட்டு, உலக வாழ்க்கையின் விதிகளையும், தரமங்

களையும், நிறுத்துப் பார்ப்பதே உனது தொழிலென் பதை மறந்து, வேறு முயற்சிகளிலே சிந்தை செலுத்து கிறாய். புலி பசித்தால் புல்லைத் தின்னுமா? வயிர வியாபாரி ஒரு மாதம் நல்ல வியாபாரமில்லாவிட்டால் மொச்சைக்கொட்டைச் சுண்டல் விற்கப்போவானே? காளிதாஸா, கவனத்துடன் கேள். நம்முடைய வியா பாரம் அருமையானது. இதிலே ஜயம் பெற வேண்டு மானால் ஸாமான்ய உபாயமெதுவும் போதாது. செய் கைக்குத் தகுந்தபடி உபாயம்; இதை மறந்துவிட லாகாது. உனக்கு வேண்டியதெல்லாம் இரண்டே நெறி: தெய்வ பக்தி, பொறுமை. குறுங்குறு மஹரிஷி வாக்யத்தைத் தவற விடாதே. லௌகிகச் செய்கை நேரும்போது அதை முழுத்திறமையுடன் செய். மற்ற நேரங்களில் பராசக்தியை தியானம் செய்துகொண்டிரு. நமது வியாபாரம் மேலான நிலைமைக்கு வரும்."

காளிதாஸன் :—" எப்போது?"

தாசு :—" பொறு. விரைவிலே நன்மை காண்பாய்."

தாசுக்கடையை நெடுநாளாக மூடி வைத்து விட் டேன். விஷயம் பிறருக்கு ஞாபகத்திலிருக்குமோ, மறந்து போயிருக்குமோ என்ற ஸந்தேஹத்தால் எழுத முடியவில்லை. தாசுக்கடை என்பதென்ன? பத்திரிகை படிப்போர் சிலருக்கு ஞாபக மிருக்கலாம். ஞாபகம் இல்லாவிட்டாலும் பெரிதில்லை. அந்தக்

கடையை மாற்றிவிட்டேன்; காசு என்ற மகுடமிட்டு இனிமேல் எழுதப்படும் விளம்பரங்களில் கதைக் கட்டு சுருங்கும்; சொல் சேர்மைப்படும்.

காசு என்பது தர்க்க சித்தாந்தம். ஒரு சுவை சொல்லி அதற்கு ப்ரதி சுவை சொல்லி அங்கு தீர்ப்புக் காணுவதே காசின் நோக்கம்.

என்னுடைய ஸ்நேஹிதர் வேணு மூதலியார் என் றொருவர் உண்டு. அவர் வைஷ்ணவர். அவர் வாயினால் பேசுவதே கிடையாது. ஆஹார வ்யவஹாரங்கள் எல்லாம் குறிகளால் நடத்திவருகிறார். அவர் தமிழில் ஒரு வ்யாஸம் "ஊமைப் பேச்சு" என்ற மகுடத்துடன் எழுதி வெளியிட்டிருக்கிறார். ஐந்தாறு வருஷங்களுக்கு முன்பு அந்த நூல் அச்சிடப்பட்டது. ஸமீபத்தில் நான் அவரிடம் விசாரணை செய்தபோது ஒரு ப்ரதி கூட மிச்சம் இல்லை என்று சொன்னார்.

அந்தப் புஸ்தகத்தின் கருத்து எப்படி என்றால்:—

"ஒரு மனிதன் தனது மனக்கருத்தை வெளிப்படச் சொல்லவேண்டும் என்றால், அதற்கு பாஷை அவசியம் இல்லை. பாஷை அவசியம் என்று ஸாதாரண ஜனங்கள் நினைக்கிறார்கள். அது பிழை.

"பாஷையானது மனதின் இன்றியமையாத கருவி அன்று. வண்டி ஓடும்போது சக்கரம் கிச் சென்று கத்துவது போல், மனம் சலிக்கும் போது நாக்கு தன் வசம் இன்றிப் படைத்துக் கொள்கிறது.

"பல வேறு நாடுகளில் பல வேறு பாஷையாக

ற்பட்ட காரணம் என்னவென்றால், அது கால தேச வர்த்தமானங்களுக்கும் ஜனங்களுக்கும் உள்ள தொடர்களின் வேற்றுமையாலே ஏற்படுகிறது.

" பக்ஷிகளின் மனக்கிளர்ச்சிக்குத் தக்கபடி இயற்கையில் அவற்றின் வாய்க்கருவி கூவுகின்றது; மிருகங்களிலும் அங்ஙனமே காண்கிறோம். அவை யெல்லாம் ஒரு பாஷை பேச வேண்டும் என்று க்ற் பிதம் பண்ணிக்கொண்டு இலக்கணம் போட்டுப் பேச வில்லை. பசி வந்தால் குரங்கு இன்ன வகை கத்தும் என்ற நியதி இருக்கிறது. அதைத் தாய் அறிந்து கொள்ளுகிறது. நாக்கே இல்லாவிட்டாலும் மனிதர் பரஸ்பரம் சம்பாஷணை அதாவது வ்யாபார ஸம்பந்தங் கள் நடத்திக் கொள்ளலாம். பேசத் தெரியாத ஜந் துக்கள் எத்தனையோ கூட்டம் போட்டுக் குடித்தனம் பண்ணி வருகின்றன. மனிதருக்குள்ளே ஊமையின் கருத்தை அவன் எப்படியேனும் பிறருக்குத் தெரியும் படி செய்துவிடுகிறான்."

இங்ஙனம் பலவித நியாயங்கள் காட்டி வேணு மூதலியார் தமது நூலில் மனிதனுக்கு பாஷையே மிகை என்று ஸ்தாபனம் செய்திருக்கிறார். ஆனால் மேற்படி விதியை அவர் தமது நடையில் பழக இல்லை. அவர் எப்போதும் சளசள என்று வாயினால் பேசா விட்டாலும் எழுதிக் குவிக்கிறார். "எழுத்து பாஷை யின் குறிதானே, வேணு மூதலியாரே? நீர் பாஷையே மிகை என்று சொல்லிவிட்டு ஓயாமல் எழுதி எழுதிக் கொட்டுகிறீரே?" என்று அவரிடத்தில் கேட்டால்

அவர் "பேச்சே தன்பம்; எழுத்து சுகம்" என்று எழுதிக் காட்டுகிறார். இன்னும் ஒரு வேடிக்கை; 'வாயினல் பேசக்கூடாது' என்று விரதம் வைத்துக் கொண்டு வேணு முதலியார் பாட்டுப் பாடுவதில் சலிப்பது கிடையாது. இவரும் நமது வேதாந்த சிரோமணி ராமராயர் என்ற மித்திரரும் சில தினங்களின் முன்பு (சந்திர கிரஹணம் பிடித்த தினத்தின் மாலையில்) என்னைக் கடற்கரையில் பார்த்தார்கள்.

"தராசுக்கடை கட்டியாய்விட்டது போல் இருக்கிறதே?" என்று ராமராயர் சொன்னர். "இங்கே செய்வீர், இன்னே செய்வீர்" என்று வேணு முதலியார் காம்போதி ராகத்தில் பாடினர். "'தராசுக் கடையை இங்கே இப்போது திறக்கவேண்டும்' என்ற கருத்துடன் வேணு முதலி பாடுகிறார்" என்று ராமராயர் வ்யாக்யானம் பண்ணினர்.

"திறந்தோம்" என்றேன்.

ராமராயர் சொல்லுகிறார்:—"நான் ஒரு கதை சொல்லுவேன். எதிர்க் கதையை வேணு முதலியார் பாட்டிலே பாடிக் காட்டவேண்டும். காளிதாஸர் தீர்ப்புச் சொல்லவேண்டும். இதுதான் தராசுக்கடை" என்றார்.

"ஸம்மதம்" என்றேன். வேணு முதலியாரும் தலையை அசைத்தார்.

ராமராயர் சொல்லுகிறார்:—"அனி பெஸண்ட் அம்மை 'தியாஸபி' மதத்தினதெல்லாம் ஸ்வராஜ்ய வேலைக்கு அடிப்படை யென்று [illegible]"

வேணு முதலியார் பாடுகிறார் :—

"நந்தவனத்திலோ ராண்டி ; அவன்
நாலாறு மாதமாய்க் குயவனே வேண்டிக்
கொண்டு வந்தாளொரு தேராண்டி ; அதைத்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி."

ராமராயர் :—" அன்ய ஜாதியிலே பிறந்த போதிலும் நான் அனிபெஸன்டை ஹிந்துவாகவே பாவிக்கிறேன்."

வேணு முதலியார் :—

"தன்னைத்தான் ஆளவேண்டும்
தன்னைத்தான் அறியவேண்டும்
தன்னைத்தான் காக்கவேண்டும்
தன்னைத்தான் உயர்த்தவேண்டும்."

ராமராயர் :—" ஸ்வராஜ்யம் என்பது விபரீதம் அன்று. அதை ஆங்கிலர் கொண்டாடுவது ஆச்சர்யமில்லை. ஆங்கில ஸ்திரீகளும் புருஷர்களும் நம்மிடம் தேசம் காட்டும்போது நாம் ஸந்தோஷப்படுவது நியாயமில்லை. ஆங்கிலேயர்களில் நல்லவர்களே இருக்கக் கூடாதா ? எல்லாரும் மனுஷ்ய ஜாதிதானே ? ஹிந்துக்களுக்கு ஸ்வராஜ்யம் உடன்பிறந்த உரிமை என்பதை ஒப்புக்கொள்ளும் பிறரை நாம் மித்திரராகவே கொள்ளவேண்டும். இங்கிலாந்திலுள்ள ராஜ வம்சத்தாருக்கு நாம் ஸ்வராஜ்யம் பெறுவதனாலே எவ்விதமான நஷ்டமும் கிடையாது. பொது ஜனங்களுக்கும் அப்படியே. பார்லிமெண்டாருக்கும் அப்படியே. நம்

முடைய உபத்ரவம் இல்லாமலிருந்தால் அவர்கள் உள் நாட்டு விஷயங்களை அதிக சிரத்தையுடன் கவனிக்க இடம் உண்டாகும். சிற்சில வியாபாரிகளுக்கும் சில உத்தியோகஸ்தர்களுக்கும் நாம் ஸ்வராஜ்யம் செலுத்து வதனாலே வரும்படி குறையும். ஆகலால் இந்த வியா பாரிகளின் கூட்டத்தையும் உத்யோகக் கூட்டத்தை யும் சேராத ஆங்கிலேயர்களுக்கு நம்மிடம் அபிமானம் ஏற்படுதல் அஸாத்ய மன்று. அது நம்பத் தக்க தாகும்" என்றார்.

வேணு மூதலியார் பாடுகிறார் :—

"நல்ல விளக்கிருந்தாலும் கண் வேண்டும்,
[பெண்ணே ;
நாலு துணை யிருந்தாலும் சுய புத்தி வேண்டும் ;
வல்லவர்க்கு மித்திரர்கள் பலருண்டு, பெண்ணே ;
வலிமையிலார் தமக்குலகில் துணையேது,
[பெண்ணே ?"

ராமராயர் சொல்லுகிறார் :—"அதிகாரிகள் அனி பெஸண்ட் சொல்வதைத் தடுக்க முடியாது. லோகத் தின் அபவாதத்துக்கு பயப்படுவார்கள். அனி பெஸண்ட் சீக்கிரம் விடுதலை பெறுவாள். அவளைப் பிடித்து வைத்ததனாலே இப்போது உலகமெங்கும் இந்தியாவின் நிலைமை தெரியக் காரணம் ஏற்படும். ஆங்கில ராஜாங்கத்துக்கு விரோதமான ராஜத்ரோகம் செய்கிறாள் என்ற வார்த்தையை அனி பெஸண்ட் விஷ யத்தில் எவனும் சொல்லத் துணியமாட்டான். 'ஸ்வ

ராஜ்யம் கேட்பது ராஜத்துரோகம் இல்லே' என்பதை இங்கிலாந்து ஜனங்களும் ராஜாவும் தெரிந்து கொள்ளுவதற்கு அனி பெஸன்ட் செய்த காரியம் உதவியாயிற்று."

வேணு முதலியார் பாடுகிறார் :—

"சொல்லால் முழுக்கிலோ
சுகமில்லே மவுனியாய்ச்
சும்மா இருக்க அருள்வாய்,
சுத்த நிர்க்குணமான பர தெய்வமே
பரஞ்சோதியே சுக வாரியே."

அப்போது ராமராயர் என்னை நோக்கி, "காளி தாஸரே, உம்முடைய தீர்ப்பென்ன? தாராசின் தீர்ப்பைச் சொல்லும்" என்று கேட்டார்.

அதற்கு நான்

"நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்ல
தன்றே மறப்பது நன்று."

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்
மெய்ப்பொருள் காண்ப தறிவு." [பொருள்

"தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று."

"வேண்டிய வேண்டியாங் கெய்தலான், செய்தவம்
ஈண்டு முயலப் படும்."

என்ற நாலு குறளையும் சொன்னேன்.

"தாராசின் கருத்தை நீர் நேரே சொல்லாதபடி, வேணு முதலியைப் போலே பாட்டில் புகுந்த காரணம் என்ன?" என்று ராமராயர் கேட்டார்.

"காசு ராஜாங்க விஷயத்தை கவனியாது. சண்டை முடிகிற வரையிலும் ராஜாங்க விஷயமான வார்த்தை சொல்லுவதிலே காசுக்கு அதிக ருசி ஏற்படாது. சண்டை பெரிது; நம்முடைய கடை ஸாதாரணம்; ராஜாங்க விசாரணைகளோ மிகவும் கடினம். ஆகலால் அனி பெஸண்டின் ராஜாங்கக் கொள்கையை நாம் நிர்ணயிக்க இடமில்லாவிடினும், அவள் சரியான ஹிந்து ஆகலால் நம்முடைய ஸஹோதரி என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம். ஹிந்து மதத்தை அவள் போற்றுகிறாள். அதனால் அவளுடைய ஜன்மம் கடைத்தேறும். வேதம் என்று சொன்னால் பாவம் போகும். பகவத் கீதையை நம்புகிறவர்கள் யாராயினும் அவர்கள் நமக்கு ஸஹோதரரே. 'தியாஸபி,' 'ஹோம் ரூல்' —இரண்டுக்கும் சம்பந்தமில்லை; அது வேறு, இது வேறு. ஹிந்துக்கள் அனி பெஸண்டுக்கு நன்றி கூற வேண்டும். நமக்குத் தாமே உதவி செய்து கொள்ள வேண்டும்."

சித்தக் கடல்

யோகம்.

ஜூலை 1. 1915.

காலை கண் விழிக்கும் பொழுதே "பணம்" என்ற ஞாபகம். எழுந்து Bourgoine வீட்டுக்குப் போதல். போகையில் மனக்கிளர்ச்சி. இடைவழியில் தூருக்கன் அவனுக்கு வழி விட்டதைப் பற்றி மன நோதல். மரண பயம். அதன் மடமை யுணர்ச்சி. கடற் கரையில் தனியே யிருத்தல். அங்கு சாரர். மன வெறுப்பு. உதாஸீனம்.

செ. "மாலை" என்ற வார்த்தை—ஒரு பொய்.

* * *

இந்த மனமாகிய கடலை வென்று விடுவேன். பல நாளாக இதை வெல்ல முயன்று வருகிறேன். இந்த மனத்தை வெல்ல நான் படும்பாடு தேவர்களுக்குத் தெரியும். இதிலே ப்ராண பயம், வியாதி பயம், தெய்வபக்திக் குறைவு, கர்வம், மமதை, சோர்வு முதலிய ஸம்ஸ்காரங்கள் மிகுதிப்பட் டிருக்கின்றன. இவற்றை ஒழித்துவிட வேண்டும்.

சலோ! தெய்வ முண்டு. அது அறிவுமயம், அந்த அறிவுக் கடலில் நான் என்பது ஒரு திவலை. அதற்கும்

எனக்கும் ஒரு குழாய் வைத்திருக்கிறது. அந்தக் குழாயை அஹங்காரம் என்ற மாசு மூடியிருக்கிறது. இந்த அஹங்காரத்தை நீக்கிவிட்டால் தெய்வ சக்தியும் தெய்வ ஞானமும் எனக்கு உண்டாகும்.

* * *

புகையிலைச் சாற்றினால் கலை கிறுக்குகிறது. 20 லக்ஷம் தரம் புகையிலையை நிறுத்தி விடுவதாக ப்ர திக்ஞை செய்திருக்கிறேன். இதுவரை கை கூட வில்லை. ஸம்ஸ்காரம் எத்தனை பெரிய விலங்கு பார்த் தாயா? மகனே, ஸம்ஸ்காரங்களை சக்தியினால் வென்று விடு.

* * *

உடல் படுத்துக் கொண்டது. உடலை வைரம் போல உறுதி உடையதாகவும், பக்ஷிகளைப் போல லாகவ முடையதாகவும், சிங்கத்தைப் போல வலி யுடையதாகவும் செய்யவேணும். உடல் வசப்படா விட்டால் இந்த உலகத்தில் வாழ்க்கை பெருந் துன்பந் தான். உடம்பே, எழுந் துட்காரு. உடம்பு எழுந்து விட்டது. மூத்ரு கூறுகிறது. அந்த வழக்கத்தைத் தொலைத்து விடவேண்டும்.

* * *

வயிறு வேதனை செய்கிறது, உஷ்ண மிகுதியால். நோயற்றிருப்பதற்கு சக்தியை ஓயாமல் வேண்டிக் கொள். நோயில்லை யென்று மனதை உறுதி செய். மனம் போல உடல்.

மகனே, உடல் வெற்றி கொள். அது எப் பொழுதும் நீ சொன்னபடி கேட்க வேண்டும். அது சொன்னபடி நீ கேட்க லாகாது. அது மிருகம். நீ தேவன். அது யந்திரம். நீ யந்திரி.

ஜூலை 2.

வியாதி பயம். சோம்பர். இன்று காலைப் பொழுதையும் இவை வந்து வீணாக்கி விட்டன. செ - வழக்கம் போல் வந்தான். பரமேஸ்வரி, மகாசக்தி— உன்னிடத்தில் அமரத் தன்மை கேட்கிறேன். என்னை மனக் கவலையிலிருந்து விடுவிக்க வேண்டும். உன்னை எப்போதும் சிந்தனை செய்து கொண்டும், உனது மஹா அற்புதமான உலகத்தை எப்போதும் கண்டு தீரா மகிழ்ச்சி யடைந்து கொண்டும், தர்மங்களை இடை விடாமல் நடத்திக் கொண்டும் வரும் திறமை எனக்கு அருள் செய்ய வேண்டும்.

மனமாகிய குரங்கு செய்வதையெல்லாம் எழுதிக் கொண்டு போனால் காலக் கிரமத்தில் அதை வசப் படுத்திவிடலா மென்பது என்னுடைய கருத்து. ஒன்றை அடக்கு முன்பாக அதன் இயல்புகளை யெல் லாம் நாம் அறிந்துகொள்ள வேண்டும். நம்மால் நன் றாக அறியப் படாததை நாம் வசப்படுத்த முடியாது. சித்தத்தை வசப்படுத்து முன் சித்தத்தை அறிய வேண் டும். அதன் சலனங்களை ஓயாமல் கவனித்து எழுதிக் கொண்டு வந்தால், அதன் தன்மை முழுதையும் அறிய லாகாது வுண்டாகு மென்பது என்னுடைய தீர்மானம்.

பரா சக்தீ. ஒவ்வொரு கணமும் எனது சித்தம் சலிக்கும் முறைகளை அப்போ தப்போது பொய்மை யில்லாமலும், வஞ்சக மில்லாமலும் எழுதுவதற்கு எனக்கு தைரியம் கொடுக்க வேணும்.

நாம் எழுதுவதைப் பிறர் பார்க்க நேரிடு மென்று கருதி நமது தர்ப் பலங்களை எழுத லஜ்ஜை யுண்டா கிறது. பராசக்தீ, என் மனதில் அந்த லஜ்ஜையை நீக்கி விடவேண்டும்.

பாரதியினுடைய மன நடைகளை நான் எழுதப் போகிறேன். நான் வேறு. அவன் வேறு. நான் தூய அறிவு. அவன் ஆணவத்திலே கட்டுண்ட சிறு ஜந்து. அவனை எனக்கு வசப்படுத்தி நோக்கப் போகிறேன். அவனுடைய குறைகளை எழுத அவன் லஜ்ஜைப் படு கிறான். அந்த லஜ்ஜையை நான் பொருட் டாக்காத படி அருள் செய்ய வேண்டும்.

எழுது. பரா சக்தியின் புகழ்ச்சிகளை எழுது. அடா! பாரதீ, அகைக் காட்டிலும் உயர்ந்த தொழில் இவ்வுலகத்தில் வேறொன்று மில்லை. பராசக்தி வாழ்க. அவள் இந்த அகில வுலகத்துக்கு ஆதாரம். அகிலம் தமக்கு மூன்று வகையாகத் தெரிகிறது.—ஜடம், உயிர், அறிவு—என. இவை தம்முட் கலந்தன. அறி வுலகத் திலே பல படிகள் இருப்பதாக யோகிகள் நிச்சயித் திருக்கிறார்கள்.

இவற்றுள் ஜடத்துக்கு உயிரும், உயிருக்கு அறி வும் காரணமா மென்று யோகிகள் சொல்லுகிறார்கள்.

இவை யனைத்திற்கும் மூலப் பொருளாய், இவை யனைத்தையும் தனது உறுப்புக்களாகக் கொண்டு, இவை யனைத்தும் தானாய், இவை யனைத்தின் உயிர் நிலையாக ஒரு பொருள் உண்டு. அதனை மஹாசக்தி என்கிறோம். அதை இடைவிடாமல் த்யானம் செய்வ தால் உனது குறைகளெல்லாம் நீங்கும். பெரிய பொருளை இடைவிடாது பாவனை செய்யும் அறிவுதான் பெருமை யடைகிறது.

சித்தம் ஒரு கண்ணாடி. ஓயாமல் பராசக்தியை த்யானம் செய்யுமானால் அவளுடைய சாயை இதிலே படும். அதிலே சுகமுண்டு.

*　　*　　*

பத்திரிகைகளுக்கு வியாஸங்கள் எழுதவேண்டும். கடிதங்கள் எழுதவேண்டும். சோம்பர் உதவாது. வெற் றிலை போடுவதைக் குறைக்க வேணும். பண மில்லாதது பற்றிக் கவலைப் படலாமா? மூடா, மூடா, மூடா, நாம் சுத்த அறிவல்லவா? உலக வ்யவஹாரங்களை நாம் வேடிக்கையாகப் பார்த்துக்கொண் டிருக்கவேணும், ஆணவக் கட்டிலே அகப்பட்ட சித்தத்தின் விருப்பப் படி இந்த உலகில் எதாவது நடக்கிறதா? சாகாத ஜந்து உண்டா? எல்லா ஜந்துக்களும் ஓயாமல் உயி ரைக் காக்கின்றன. அதில் பயனுண்டா? உயிரே ஜீவ னுடைய வச மில்லாதபோது வேறெதைப் பற்றிக் கவலைப்படுவதிலேயும் என்ன பயன்? பராசக்தியின் கட்டளைப்படி உலகம் நடக்கிறது. உனக்கு வேண்டிய

இன்பங்களை அவளிடம் வேண்டிக்கொள். அவள் கொடுப்பதைப் பெற்றுக்கொண்டு சுகமாக இரு.

எப்போதும் பாடுபடு. எப்போதும் உழைத்துக் கொண்டிரு. உழைப்பிலே சுகமிருக்கிறது. வறுமை, நோவு முதலிய குட்டிப் பேய்களெல்லாம் உழைப்பைக் கண்டவுடன் ஓடிப் போய்விடும்.

"உத்யோகினம் புருஷலிம்ஹ மூபைதி லக்ஷ்மீ:"

பராசக்தியை த்யானம் செய்துகொண்டேயிருக்கால் எல்லாத் துன்பங்களும் நீங்கிவிடும், உடலும் உயிரும் ஒளிபெற்று வாழும். நூறு வயதுக்குக் குறைவில்லை. இது ஸத்யம். நூறு வயது நிச்சயமாக வாழ்வாய். மனிதனுக்கு நூறாண்டு இயற்கையிலே ஏற்பட்டது. இயற்கை தவறுமல், மூடக் கவலைகளில்லாமலிருந்தால் நூறு வயது அவசியம் வாழலாம். மகனே, அச்சத்தைப் போக்கு.

மண்ணையும், காற்றையும் கடலையும் எத்தனை யுகங்கள் ஒரே வடிவத்தில் வைத்துக் காப்பாற்றுகிறாய்! பராசக்தி, எனது கருவி கரணங்களிலே நீ பரிபூர்ணமாக ஸந்நிதி கொண்டு என்னையும் அங்ஙனமே காக்க வேண்டும்.

இன்பமில்லையா?

பராசக்தி. இந்த உலகத்தின் ஆத்மா நீ.

உனக்கு அறிவில்லையா? உனக்குக் காது கேட்காதா? நாள்தோறும் உன்மீது பாட்டுப் பாடுகிறேன்.

நான் கேட்கும் வரங்களை யெல்லாம் கொடுத்துவிடக் கூடாதா?

முதலாவது, எனக்கு என்மீது வெற்றி வரவேண்டும். குழந்தைக்கு ஜ்வரம் வந்தது. நினது திரு வருளால் குணமாய் விட்டது. இரண்டு மாதக் காலம் இரவும் பகலுமாக நானும் செல்லம்மாளும் புழுத் துடிப்பது போலத் துடித்தோம். ஊண் நேரே செல்ல வில்லை இருவருக்கும். உறக்கம் நேரே வரவில்லை— இருவருக்கும். எப்போதும் சஞ்சலம். பயம், பயம், பயம்! சக்தி, உன்னை நம்பித்தானிருந்தோம். நீ கடைசி யாகக் காப்பாற்றினாய். உன்னை வாழ்த்துகிறேன்.

கடன்காரர் தொல்லையும் அத்துடன் வந்து கலந் தது. வைத்தியனுக்குக் கொடுக்கப் பணமில்லை. குழப் பம், குழப்பம்—தீராத குழப்பம்! எத்தனை நாட்கள்! எத்தனை மாதங்கள்! எத்தனை வருஷங்கள்!

பராசக்தி, ஓயாமல் கவிதை எழுதிக்கொண்டிருக் கும்படி திருவருள் செய்ய மாட்டாயா? கடன்களெல் லாம் தீர்ந்து, தொல்லை யில்லாதபடி என் குடும்பத் தாரும் என்னைச் சார்ந்த பிறரும் வாழ்ந்திருக்க, நான் எப்போதும் உன் புகழை ஆயிர விதமான புதிய புதிய பாட்டுக்களில் அமைக்க விரும்புகிறேன். உலகத்தில் இதுவரை எங்கு மில்லாதபடி அற்புதமான ஒளிச் சிறப் பும், பொருட் பெருமையும் உடைய பாட்டொன்று என் வாயிலே தோன்றும்படி செய்யவேண்டும்.

தாயே—என்னைக் கடன்காரர் ஓயாமல் வேதனைப் படுத்திக்கொண்டிருந்தால், நான் அதிசிக்கும், உப்புக்

கும் யோசனை செய்துகொண்டிருந்தால்—உன்னை எப்படிப் பாடுவேன்?

மனைவியைப் பிரிந்து செல்லும்படி சொல்வதில் பயனில்லை. அவளும் உனது சரணையே நம்பி, என்னுடன் எப்போதும் வாழ்ந்துகொண்டு, உனது தொழும்பிலே கிடைக்கும் புகழில் பங்கு பெற்று மேன்மையுற விரும்புகிறாள். இயன்ற வரை உண்மையோடு தானிருக்கிறாள். அவளையும் நீ ஸம்ரக்ஷணை செய்ய வேண்டும்.

அவளுக்கு நோயின்மை, கல்வி, கவலையின்மை, பக்தி, ஞானம் முதலிய சோபனங்களெல்லாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

குழந்தையை உனது குழந்தையாகக் கருதி, இவ்வுலகத்தில் நீடித்துப் புகழுடன் வாழும்படி திருவருள் செய்ய வேண்டும். காசியிலிருக்கும் குழந்தையையும் நீ தான் காப்பாற்ற வேண்டும்.

எனது குடும்ப பாரமெல்லாம் உன்னைச் சேர்ந்தது. உன்னைப் புகழ்ச்சி புரியும் தொழில் என்னைச் சேர்ந்தது. தாயே, ஸம்மதந் தானே?

மஹா சக்தீ—என் னுள்ளத்தில் எப்போதும் வற்றாத கவிதை யூற்று ஏற்படுத்திக் கொடு.

ஓயாமல் வியாதி பயம் கொண்டு உளைகின்ற நெஞ்சமே! தூ! தூ! தூ! கோழை!

புகையிலை வழக்கம் தொலைந்து விட்டது. பராசக்தியின் அருளால். இனிக் 'கஸரத்' வழக்கம் ஏற்

படவேணும். பராசக்தியின் அருளால். தோள் விம்மி வயிரம் போலாக வேணும். நெஞ்சு விரிந்து, திரண்டு, வலிமையுடைய தாகவேணும். இரத்தம் மாசு தீர்ந்து, நோயின்றி, நன்றாக ஓடி உடலை நன்கு காத்துக்கொண் டிருக்கவேணும்—பராசக்தியின் அருளால்.

செட்டி பணத்துக்கு எத்தனை நாள் பொய் சொல்லுகிறது? பொய் வாயிதா, பொய் வாயிதா. பொய் வாயிதா—தினம் இந்தக் கொடுமைதானே? சீச்சீ!

பராசக்தி—உன்னை நான் நம்புவதை முற்றிலும் விட்டு, நிச்சயமாக நாஸ்திகனைப் விடுவேன், நீ என்னை அற்பத் தொல்லைகளுக்கு உட்படுத்திக் கொண்டே யிருந்தால்.

மஹாசக்தி—நீ யிருப்பதை எவன் கண்டான்? உனக்கு அறிவுண்டென்பதை எவன் கண்டான்? இந்த உலகம்—சரி, சரி, இப்போது உன்னை வைய மாட்டேன். என்னைக் காப்பாற்று. உன்னைப் போற்றுகிறேன்.

பிறருக்கு நான் தீங்கு நினையாதபடி நீ அருள் புரிந்தால் நல்லது. துஷ்டர்களைக்கூட நீ தண்டனை செய்துகொள். எனக்கு அதிலே ஸந்தோஷ மில்லை. எனக்குப் பிறர் செய்யும் தீங்குகளை நீ தவிர்க்க வேண் டும். நான் உன்னையே சரணடைந்திருக்கிறேன்.

சொல்லு! மனமே, சொல்லு,
பராசக்தி வெல்க! பராசக்தி வெல்க.

—

STRAY THOUGHTS.

The wise play for victory, but feel no pain at defeat.

"L'art pour l'art"—A play for its own sake.

சில சங்கற்பங்கள்.

இயன்றவரை தமிழே பேசுவேன், தமிழே எழுதுவேன். சிந்தனை செய்வது தமிழிலே செய்வேன். எப்போதும் பராசக்தி—முழு உலகின் முதற்பொருள்—அதனையே தியானஞ் செய்துகொண்டிருக்க முயல்வேன். அதனைக் குறித்தே ஓயாமல் எழுதிக்கொண்டிருக்க முயல்வேன்.

* * *

பொழுது வீணே கழிய இடங் கொடேன், லௌகிக காரியங்களை ஊக்கத்துடனும், மகிழ்ச்சியுடனும், அவை தேகான்றும் பொழுதே பிழையறச் செய்து முடிக்கப் பழகுவேன்.

உடலை நல்ல காற்றிலும், இயன்ற வரை சலிப்பதாலும் தூய்மை யுறச் செய்வேன்.

மறைத்தும் கற்புகழ்ச்சிபாராட்டுதல் விரும்பேன்.

மூடரின் உள்ளத்தில் என்னைப் பற்றிய பொய் மதிப்புண்டாக இடங் கொடேன்.

ஸர்வ சக்தியுடைய பரம்பொருளைத் தியானத்தால் என்னுள்ளே புகச்செய்து எனது தொழில் களெல்லாம் தேவர்களின் தொழில்போல் இயலுமாறு சூழ்வேன்.

பொய்மை, இரட்டுற மொழிதல், நயவஞ்சனை, நடிப்பு, இவற்றால் பொருளீட்டிப் பிழைத்தல் நாய்ப் பிழைப் பென்று கொள்வேன்.

இடையறாத தொழில் புரிந்து இவ்வுலகப் பெருமைகள் பெற முயல்வேன். இயலாவிடின் விதிவசமென்று மகிழ்ச்சியோ டிருப்பேன்.

எப்போதும் மலர்ந்த முகம், இனிய சொல், தெளிந்த சித்தம், இவற்றோ டிருப்பேன். ஓம்.

* * *

ஓர் நல்ல கதை.

பக்தா—இதுதான் பூலோகமா?

* * *

சங்கரச் செட்டியாரிடம் கேட்டவை :—

எலி பழைய எலியின் பாதையிலேயே வந்து பொறியில் விழும்.

நெடுந் தொலையினின்றும், ஈ காற்றுச் சுழற்சியின் வழியே வளைந்து வளைந்து வந்து உணவுப் பொருளில் விழும்.

சிலந்திப் பூச்சி மூதலிலே நூல் செய்து, அதைக் காற்றில் விட்டுவிடும். அந்த நூல் காற்றின் செய்கை

யால் எதிர்ப் புறத்திலே போய் ஒட்டிக் கொள்ளும். பூச்சி அதை அசைத்துப் பார்த்துப் பற்றியிருப்பது தெரிந்துகொண்டு, அதன் பிறகுதான் நூல்மீது நடந்து செல்லும். அப்பால் வலை பின்னும்.

* * *

பழைய பத்திரிகைகளிலிருந்து தக்க விஷயங்களெடுத்துக் கோத்தால் நல்ல வசன நூல் கட்டலாம்.

* * *

The Brahmin who cooked in a fisherman's house :—This despicable orthodoxy is willing to suffer a social inferiority but wants a theological and ritual superiority, I suppose !

* * *

Not do what all I can, but do what all I ought.

முகத்தின் ஒளி :—What it means—I must write a long essay on this.

* * *

The young man's tune—Bhairava—Hindusthani தோடி. Majority of love songs in N. India are in that tune.

The meaning of that raga :—Love and Despair. Despair reaches its depth in the பிரதிமத்யமம்.

I must compose a song in Bhairava—in praise of that Raga.

* * *

பழைய கற்பனைகளைத் திரும்பிச் சொல்லுதல். தமிழ்நாடு சீர் கெட்டதின் காரணம். உவமைகள்.

சித்திர சாஸ்திரம், அவனீந்திரநாத டாகுர் தமிழ்க் கவிதை உவமைகளின் கருத்தை மறந்த விதிலை தம்.

* * *

தெலுங்கும், தமிழும் (ழ, ட)

க. ெக.

நிழல்—நீட

எழு—எது

நாள்—நாது

கோழி—கோடி

I must write a poem on " Darkness. "

தீய கர்மங்களின் பயன் விடாது. இப்பிறப்பிலே பலிபோலத் தொடரும். ஆதலால் இன்பத்தை விரும்பு வோன் தீச்செயல்கள் செய்யா தொழிக. தீய சிந்தனை களும் தீச் செயல்களே யாம்.

* * *

भावेन सत्यं, क्षमया नरेन्द्रं, धनेन कान्तां, कपटेन शत्रुम् ।
सत्येन मित्रं, कृपया च पुत्रं, ज्ञानेन मोक्षं वशमानयन्ति ॥

(To be revised)

* * *

The countryman's comment on seeing the train running—பார்த்தால் மலைப்பு—எறினால் அலுப்பு.

* * *

ராஜாவுக்கு லக்ஷ்மி மனைவி

செட்டிக்கு லக்ஷ்மி தாய்

The novelist can never give a true and complete reproduction of a real sentimental conversation.

Four women and an idle young fellow—subject.

An old domestic grievance.

Can we utlise a sound machine?

For an essay :—

Formalisation,

in Art, in Grammar, in Sruthis, in literature. Is it possible in music?

The revolt of Europe against formalisation—The Renaissance.

The highest talent required for formalising—Shankaracharya.

Result, decay. Make provision for the future. The forces of decay.

Adaptation to environments. சித்திர சாஸ்திரம் —அளவு கணக்கு. The danger of a copyist's mistake.

ஒளியிலும் ஒலியிலும் ஸ்தாயிகள்.

ஸ்வர ஸம்பந்தங்கள். புலங்களின் வரம்பு நிலை.

ப்ரதிபா, வரம்பற்றது.

ப்ரதிபா, ஆத்மாவின் விழி.

சுக்கிராசார்யன், போர் முதல் சிற்பம் வரை அனைத்தையும் வகுத்தது.

* * *

Avocat, pessons an Delage !—Racin.

* * *

ஐயங்கார் "ஆஹ்னிகம், பௌஅ வியீ" பெரிய புஸ்தகம்.

* * *

The absoulte need of physical exercise !